திருவாசகம்-விளக்கவுரை
(சிவக்குடில் விளக்கம்)



உரையாசிரியர்
சி.சு.கண்ணுயிரம்.

இரண்டாம் பகுதி

1-4

ஸ்ரீ சித்தர் ஞான பாடசாலை வெளியீடு

திருவாசகம் - விளக்கவுரை

(சிவக்குடில் விளக்கம்)

இரண்டாம் பகுதி

உரையாசிரியர்
சி.சு. கண்ணுயிரம்

ஸ்ரீ சித்தர் ஞான பாடசாலை வெளியீடு எண் - 15
முதற்பதிப்பு : 2002

உரையாசிரியர் :
சி.சு. கண்ணுயிரம்

விலை : ரூ 100 /-

கிடைக்குமிடம் :
சிவக்குடில்
நேத்தாஜி நகர், கோவைப்புதூர்
கோயம்புத்தூர் – 641 042

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

1-9



எங்கள் குருதேவர்
கபிலை மாமுனிவர்
சர்வோத்தம சச்சிதானந்த நாதேசுவர சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

"பெருந்துறையில் சிவபெருமா னருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ
ரடிகளடி யிணைகள் போற்றி."

(சிவஞானசுவாமிகள், காஞ்சிப்புராணம்)

சைவத் திருமுறைகள் பன்னிரண்டினும் எட்டாம் திருமுறையின் முதற்பகுதியாகிய திருவாசகம் தனிச் சிறப்புடையது. ஓதுவாரின் ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமளித்துச் சிவபோகக் கொழுந்தேறல் மாந்தித் திளைக்கச் செய்வது திருவாசகம். முத்தியாகிய மெய்ப்பயன் தருவது திருவாசகம்.

திருவாசகத்தைச் சிவமாகவே போற்றி, ஆன்மவழிபாட்டு மூர்த்தமாகக் கொள்ளும் மரபுண்டு. திருவாசகம் வாசகம், அதற்கு வாச்சியம் சிவமே என்பர் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளார்.

" பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளியிடத் தவனே"

என்பது அவர் வாக்கு.

சிவம் எங்ஙனம் ஆன்மாக்களின் பக்குவத்திற் கேற்ப அனுபவப் பொருளாகின்றதோ அங்ஙனமே திருவாசகமும் ஓதுவாரின் உணர்வுக் கேற்பப் பொருளனுபவத்தைத் தருகின்றது: திருவாசகத்தின் பொருள் தொகுப்பின் எஞ்சும், விரிப்பின் பெருகும் என எல்லை யில்லாப் பரம்பொருளினை நிகர்த்ததாக அமைந்துள்ளது.

திருவாசகத்திற்குப் பலர் உரை வரைந்துள்ளனர். சிலர் நூல் முழுவதற்கும் சிலர் பகுதிக்குமாக உரை கண்டுள்ளனர். இலக்கியம், சாத்திரம் ஆகிய நோக்கில் மட்டுமன்றிச் சிலர் சிந்தனையுரையாகிய அனுபவப் பொருளும் கண்டுள்ளனர். பேரா.கா.சு.பிள்ளை, எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, மறைமலையடிகள், பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார், சீகாழித் தாண்டவாரய சுவாமிகள், மகாவித்துவான் தண்டபாணிதேசிகர், மகா வித்துவான் அருணை வடிவேல் முதலியார் ஆகிய பெரியோர்கள் கண்டுள்ள உரைகள் அவ்வகையில் குறிப்பிடத் தக்கவை.

மேனாட்டறிஞர் டாக்டர் ஜி.யூ.போப் அவர்கள் ஆங்கிலத்தில் திருவாசகத்தை மொழிபெயர்த்து, திருவாதவூரரின் அனுபவத்தை மேலை நாட்டு ஞானியரின் இறையனுபவத்தோடு ஒப்பிட்டு விளக்கியபோது "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற மறைத் தொடரின் உண்மைப் பொருள் விளக்கம் பெற்றது. மேலைநாட்டு ஞானியரின் இறையனுபவ மொழிகள் திருவாசகப் பொருளனுபவத்திற்கு மேலும் ஊட்டம் அளித்தன.

"சித்தாந்தபானு" - "சிவஞான சரசுவதி" சிவத்திரு. சி.சு. கண்ணுயிரம் அவர்களின் *"சிவக்குடில் விளக்கம்"* என்னும் இப்புத்துரை மேலே சுட்டிக் காட்டப்பட்ட அனைத்துரைகளையும் உள்வாங்கி, மேலும் புது விளக்கங்களை அளிக்கின்றது. "சிவஞான சரசுவதி" அவர்கள் திருமுறைகளைப் பல்காலும்

பயின்ளுேதிய அனுபவ மிக்கார்; சிவபூசைச் செல்வர். பேரறிஞர்களிடம் இலக்கிய இலக்கண சித்தாந்த சாத்திரங்களேப் பாடம் கேட்டவர்; அன்பர்களுக்குச் சித்தாந்த நூல்களேப் பலகாலும் பாடம் சொன்ன பெருங் கொடையாளர்; பாடஞ் சொல்லும் போதும் சொற்பொழிவின் போதும் சித்தாந்த மரபை விட்டுச் சற்றும் விலக ஒண்ணுதவர். இம்மாண்புகள் எல்லாம் இச் "*சிவக்குடில் விளக்க*" - த்தில் பட்டொளி வீசித்திகழ்கின்றன. இச்சீரிய உரை தோன்றிய வரலாற்றை உரையாசிரியர், "*சிவக்குடில் விளக்கம்*" முதற் பகுதியில் தந்துள்ளார். ஆண்டுக் காண்க.

சித்தாந்த மரபுக்கு உட்பட்ட நூல்களின் மேற்கோள்கள் உரையிலும்; பிற அடிக்குறிப்பிலும் காட்டப்பட்டுள்ளன.

"*சிவக்குடில் விளக்கம்*" முதற்பகுதி 7.5.2000 -ல் வெளிவந்தது. அதில், "சிவபுராணம்" "கீர்த்தித்திருவகவல்" "திருவண்டப்பகுதி" "போற்றித்திருவகவல்" ஆகியவற்றின் விளக்கம் இடம் பெற்றன. சிவக்குடில் விளக்கம் இரண்டாம் பகுதி திருச்சதகம் உரை விளக்கமாக வெளி வருகின்றது. ஏனைய பகுதி உரைகளும் விரைவில் வெளிவர உள்ளன.

இவ்வெளியீட்டுப் பணியில் மிகவும் ஈடுபட்டு உழைத்தவர் சிவக்குடில் அன்பர் "சத்தியநாதன்" எனப் பெயரிய சிவத்திரு. எம்.ஜி.எம். இராமச்சந்திரன் அவர்கள். நூலில் அச்சுப் பிழைகளே இருக்கக் கூடாது என்பதில் மிக்க அக்கறை கொண்டு அச்சகத்திற்கும் உரையாசிரியர் இல்லத்திற்குமாகப் பல்காலும் உழன்ருர். அவருக்கு எம் நன்றி.

திருப்பெருந்துறைக் கோவிலின் படம் இப்பதிப்பிற்கு அணி செய்யும் என நினேந்தோம். படம் எடுத்துதவும் கடமையை விருப்பத்துடன் மேற்கொண்டவர் திருவாரூர் திரு.வி.க. அரசு - கலேக்கல்லூரி முன்ளுள் முதல்வரும்

உரையாசிரியரின் சிறந்த நண்பருமான கும்பகோணம் பேரா. சிவத்திரு அ. கண்ணப்பன் M.Sc., அவர்கள். ஒருமுறைக்கு இருமுறை அவர் திருப்பெருந்துறை சென்று திருக்கோவிலைப் படம் எடுத்து உதவினர். அவருக்கும் எம் நன்றி உரியது.


இப் பெருமக்கள் இருவருக்கும் ஞானமூர்த்தியின் திருவருள் சிறந்து விளங்குவதாகுக!

எங்கள் குருநாதர் சைவமே மன்பதையின் முதற் சமயம் என வலியுறுத்துவார். யானையின் அடியிற் பிற விலங்குகளின் அடிகள் அடங்குமதுபோல அனைத்துச் சமயங்களும் வழிபாடுகளும் இதனுள் அடக்கம் என வலியுறுத்திச் சிவநெறியைப் பெருநெறி; மகாமரபு; பெருமரபு எனும் பெயர்களால் பேசுவார். உலகத்து ஞானியரின் இறையனுபவங்களெல்லாம் திருவாதவூரடிகளின் சிவானுபவத்தில் அடக்கம். எனவே, ஸ்ரீ சித்தர் ஞான பீடம். திருவாசக உரை "சிவக்குடில் விளக்கத்தின் இவ்விரண்டாம் பகுதியை" மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றது. சைவ உலகும் ஆன்மீக நெறி நிற்போரும் இவ் வெளியீட்டைப் பயன்படுத்திக் கொள்ளுவாராக!

"வந்தே பரசிவ குடிலம், சித்தேஸ்வரம் சாஸ்வதம்"

ஸ்ரீ சித்தர் பணியில்
சிவக்குடில் அன்பர்கள்
ஸ்ரீ சித்தர் ஞானபாடசாலை

கோவைப்புதூர்
25 8 2002



திருப்பெருந்துறைக் கோயில் முன்கோபுரம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

5. திருச்சதகம்

திருப்பெருந்துறையில் அருளியது
(பத்தி வைராக்கிய விசித்திரம்)

க. மெய்யுணர்தல்

திருச்சதகம் - வீடுபேறாகிய செல்வம் தரும் நூறுபாடல்களைக் கொண்ட ஒரு பகுதி என்னும் பொருள் தருவதாகும்.

திரு-செல்வம். அஃது இறைவனின் சென்றடையாத திருவாகிய வீடுபேறு. அழகு என்று பொருள் கொண்டு ஆன்மாக்களின் அழகைக் கெடுக்கும் ஆணவ மலம் செயலற்ற இடமாகிய வீடுபேறு; அங்கு ஆன்மாக்கள் அழகுடன் பொலிவன, ஆதலின் வீடுபேறு "திரு" எனலாயிற்று எனலுமாம். இந்தச் சொல்லுக்குக் கண்டாரால் விரும்பப்படும் தன்மை ❋ நோக்கம்- என்று உரை வகுத்தார் பேராசிரியர். திருக்கோவையார் முதற் பாடலின் உரை காண்க.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

சிவனெனு மோசை யல்ல தறையோவுலகிற்
றிருநின்ற செம்மை யுளதே
அவனுமோ ரையமுண்ணி யதளாடை யாவ
ததன் மேலொராட லரவம்

❋ நோக்கம்-அழகு.

கவணளவுள்ள வுண்டு கரிகாடு கோயில்
கலனுவதோடு கருதில்
அவனது பெற்றி கண்டு மவனீர்மை கண்டு
மகநேர்வர் தேவ ரவரே

(திருமுறை 4 - 8 -1)

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும் புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறும் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணு
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே

(திருமுறை 7 - 59 - 1)

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 11 - 20 -1)

எனவரும் திருமுறைப் பகுதிகளில் "திரு" என்ற சொல் இப்பொருளில் வருதல் காண்க.

சதகம் - சதம் - இது "நூறு" என்று பொருள்தரும் ஒரு வடசொல். சதகம் என்ற சொல்லில் "க" என்னும் ஓர் இடைச்சொல் புகுந்து நூறு திருப்பாடல்களைக் கொண்ட ஒரு நூல் என்னும் பொருள் பயந்து நிற்கின்றது. தமிழில், சிற்றிலக்கிய வகை 96-ல் ஒன்று. நூறு பாடல்களைக்

கொண்ட நூல் சதகம் என்னும் பெயரால் வழங்கி வருகின்றது. சதகங்களில் சில தொகைநிலைச் செய்யுட்களைக் கொண்டு அமைவன என்றும். சில தொடர்நிலைச் செய்யுட்களைக் கொண்டு அமைவன என்றும் இருவகை உள்ளன. ஒரு பொருளைப் பற்றியே நூறு செய்யுட்களில் அமைவது தொகைநிலைச் சதகம். "*அறப்பளீசர் சதகம்*" அவ்வாறு அமைந்த ஒன்ருகும். நூறு செய்யுட்களையும் அந்தாதியாகத் தொடர்ந்து அமைத்து. ஈற்றுச் செய்யுளின் ஈற்றுச் சொல் சீர் முதலியவற்றில் ஒன்றை முதற் செய்யுளின் முதற்சொல் சீர் முதலியவற்றில் ஒன்றுடன் ஒன்றும்படி மண்டலித்து முடிப்பது தொடர்நிலைச் சதகமாகும். தொடர்நிலைச் சதகங்களில் சொற்ருெடர் நிலைச் சதகம் என்றும் பொருட்டொடர் நிலைச்சதகம் என்றும் இருவகையின. இத்திருச்சதகம் சொற்ருெடர் நிலைச்சதகமாகும்.

அந்தாதியாக அமையும் நூறுபாடல்களைக் கொண்ட நூல்கள் செய்யுட்கள் அனைத்தும் வெண்பாக்களாகவோ, கட்டளைக்கலித்துறைகளாவோ விளங்குவன. காரைக்காலம்மையாரின் *அற்புதத்திருவந்தாதி*, வெண்பா அந்தாதியாகும். சேரமான் பெருமாள்நாயனரின் *பொன்வண்ணத்தந்தாதி* கலித்துறையந்தாதியாகும். இவ்விருவகையுமன்றி ஒவ்வொரு பத்துப்பாடலையும் தனித்தனி யாப்புக்களில் அந்தாதியாக அமைத்து நூறு பாடல்களால் இயற்றுவது *பதிற்றுப்பத்தந்தாதியாகும்*. இந்தத் திருச்சதகம் அவ்வாறு அமைந்த ஒன்ருகும். தமிழில் இவ்வாறு நாம் காணும் சதகம், அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, மாலை என்பவற்றுள் இந்தத் திருச்சதகமே முதல் முதல் எழுந்த தென்று ஆராய்ச்சியாளர் முடிவு கட்டுகின்றனர். நூறு பாடல்களைக் கொண்ட மாலை அந்தாதித் தொடையின்றியும் அமையலாம்.

பத்தி வைராக்கிய விசித்திரம் - இஃது, இந்தத் திருச்சதகம் முழுவதும் நுதலிய பொருளின் திரண்ட கருத்து. இவ்வாறு இந்தச் சதகத்தின் ஒவ்வொரு பதிகத்தின் திரண்ட கருத்துக்களை அவ்வப் பதிகங்களின் தலைப்பில் தந்துள்ளமை காணலாம். இவை நம் அடிகள் காலத்துக்குப் பின் நம் முன்னேர்கள் அமைத்தவையாம்.

பத்தி - சிவபெருமான் மாட்டு அடியார்கள் உள்ளத்தில் முகிழ்த்துப் பெருவெள்ளமாகப் பெருக்கெடுக்கும் பேரன்பு.

வைராக்கியம் - மெய்ப் பொருளாகிய பதியை அறிந்து அதன் மாட்டு நுகரும் இன்பத்தின் சுவை தெரிந்து விட்டால் பின்னர் நிலையற்ற பொருள்களாகிய உலகம், உலகிற் கிட்டியுள்ள பொருள்களாகிய செல்வங்கள், அவற்றில் நுகரும் இன்பங்கள், நுகரும் உடல், அதில் அமைந்துள்ள கரணங்கள், சுற்றம், நட்பு, அதிகாரம் ஆகியவற்றின் பற்று நீங்கும். உவர்ப்பு ஏற்பட்டு அவற்றை மீண்டும் பற்றுத உறுதி ஏற்படும். இதையே ***வைராக்கியம்*** என்ருர். வைராக்கியம் - ஆசையுடைமை வி + ராகம் = விராகம், வைராகம், வி + மலன் = விமலன் என்பதிலுள்ள வி போல எதிர்மறை குறித்து நின்றது.

" பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப்படும் " (திருக்குறள் 349)

" பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு " (திருக்குறள் 350)

என்பன பெருநாவலர் வாய் மொழிகளல்லவோ ?

விசித்திரம் - வியக்கத்தக்க பல்வேறு இயல்புகள். "சத்திய ஞானந்தரு தேசிகர் மோகம் சதகமாம்" என்பது திருப்பெருந்துறைப் புராணம். அஃதாவது உண்மை ஞானமாகிய மெய்யுணர்வை நல்கியருளிய ஞானசிரியன் வடிவில் வந்த இறைவன்பால் கொண்ட வரம்பற்ற காதல் என்பதாம்.

இந்தத் திருச்சதகம் திருப்பெருந்துறையில் இறைவனும் ஏனைய அடியார்களும் மறைந்த பின் தனிமையில் விடப்பட்ட நம் அடிகள் பிரிவாற்ருமையால் வருந்திய நிலையில் அருளிச் செய்யப்பட்டதாகும்.

மெய்யுணர்தல் - இது திருச்சதகத்தில் முதற்பதிகத்தில் நுவலப் பட்டுள்ளவற்றின் திரண்ட கருத்தாகக் கொண்டு நம் முன்னோர்களால் அந்தப்பதிகத்துக்கு அமைக்கப்பட்ட தலைப்பு. இது பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் இயல்புகளைத் தெளிவாக அறிந்து பசுவாகிய ஆன்மா நிலையற்ற பொய்ப் பொருளாகிய பாசத்தினீங்கி நிலையானதும்

உண்மையானதுமான *பதியை* அனுபவ வாயிலாக உணர்தல் என்னும் பொருளதாகும். திருக்குறளில் "*மெய்யுணர்தல்*" என்ற அதிகாரத் தலைப்பை உரையாசிரியர் பரிமேலழகர்; அஃதாவது, பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மை யானுணர்தல். இதனை வடநூலார் " தத்துவ ஞானமென்பர் " என்று விளக்குவதை ஈண்டு நினைக.

கட்டளைக்கலித்துறை

திருச்சிற்றம்பலம்

5. மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற் கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே க

இதன் பொருள் - " உடையாய் ! என் உடம்புதானே மயிர்ப்புளகம் கொண்டு மிகநடுங்க, என் கைகள்தாமே உன்மணம் நிறைந்த திருவடிகளை நோக்கி என் சென்னிமிசைக் குவிய, என் கண்கள்தாமே நிரம்பி வழியும் கண்ணீரைச் சொரிய, என் உள்ளம் தானே வெப்பமுற்று நிலையற்ற பொருள்களின் மீதிருந்த பற்றை விட்டு விலக, " என் நாதனே ! உனக்கு வெற்றி; வெற்றி '' என்று கூறும் நான் இந்த ஒழுக்கம் தானுகவே நழுவும் வண்ணம் சிறிதும் சோர்வுறேன்; என்னையுமறியாமல் அந்தச் சோர்வு வரா வண்ணம் காத்தருள்க; காத்தருள்க; என் தலைவனே ! எனக்குத் திருவருள் பாலித்து ஏற்றுக் கொள்வாயாக !

(வி - ரை)

உடையாய் ! - இதை முதலில் வைத்துப் பொருள் கொள்க. விளி.

ஆன்மாக்கள் அனைத்தையும் தன் அடிமைகளாகவும், உலகங்கள் அனைத்தையும் தன் உடைமைகளாகவும் உடையவன். **உடையாய்** : ஸ்வம் - உடைமை. சுவாமி - உடையவன்.

தான் - இச்சொற்கள் நான்குடனும் செய்யுள் ஈற்றில் உள்ள ஏகாரத்தைப்புணர்த்து மெய்தானே அரும்பி, விதிர் விதிர்த்து கைகள் தாமே தலை வைத்து, பொய்தானே தவிர்ந்து கைதானே நெகிழ என்று கூட்டிப் பொருள் கொள்க. பழக்க விசேடத்தால் மனம் ஏவாமல் அவை தாமே தொழிற்பட்டன என்க. முன்னம் " கரங்குவிவார் " *(சிவபுராணம் = 9)* என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

தான் - என்ற சொற்கள் நான்கும் ஒவ்வோருறுப்பின் செயலைக் குறித்துக் கூறுவதால் தெரிநிலைப் பொருளில் வந்தனவாம்.

இதனை ;

திருச்சிற்றம்பலம்

" கையுந் தலைமிசை புனையஞ் சலியன
கண்ணும் பொழிமழை யொழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுட
னுருகும் பரிவின; பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரு
மின்ளுழ் சடை யொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்க்கும் பிடுமவ
ரார்வம் பெருகுத லளவின்றால்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம், திருநாவுக்கரசு நாயனார் புராணம் -167)

என்று சேக்கிழார் பெருமான் செஞ்சொல்லோவியம் தீட்டுவதிற் காண்க.

தான் - நான்கும் அசைகள் என்றொதுக்கினர் முன்னுரையாசிரியர்கள். ***தான்*** = இந்தச் சொல் செய்யுட் சுவை குறித்து நின்றது என்று கொண்டு

ஆக்கந் தானே காரண முதற்றே (தொல் - சொல். கிளவியாக்கம் 21) என்றவிடத்துச் சேனுவரையர் அவ்வாறே கொண்டார் என்பாருமுளர்.

மெய்யரும்புதல், உடல் விதிர்விதிர்த்தல், கண்ணீர்ததும்புதல் - இவை அடியார்களின் அகத்திலக்கணங்கள் பத்தில் உள்ளவை. அவை பற்றி முன்னம் "உடல் கம்பித்து" (போற்றித்திருவகவல் 61) என்பதன் கீழுரைத்தவை காண்க.

விரையார் கழல் - இயல்பாகவே நறுமணம் பொருந்திய திருவடிகள். இதுபற்றி முன்னம் "நாற்றத்தின் நேரியாய்" (சிவபுராணம் -44) என்றதன் கீழுரைத்தவை காண்க. வழிபடும் அடியார்கள் இட்ட மலர்களின் நறுமணம் எனலுமாம்.

இதனை ;

திருச்சிற்றம்பலம்

"நின்போ லமரர்க ணீண்முடி சாய்த்து நிமிர்த்துகுத்த
பைம்போ துழக்கிப் பவளந் தழைப்பன பாங்கறியா
என்போ லிகள்பறித் திட்ட இலையு முகையுமெல்லாம்
அம்போ தெனக் கொள்ளு மையனை யாற ணடித்தலமே "

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 91 -10)

எனும் அரசுகள் அமுதவாக்காலறிக.

கண்ணீர் ததும்பி - கண்ணாகிய பாத்திரத்தில் நிறைய நீர் இருப்பதால் மேலும் பொங்கிவரும் கண்ணீர் அங்கு இருக்க இடமின்றிச் சிறிது சிறிதாகத் ததும்பி வழிந்தது என்க.

வெதும்பி - ஆசையால் உடல் வெப்பமுறும். அன்னையைப் பிரிந்த குழந்தை காய்ச்சலுற்று வருந்துவதும், அகத்துறை நூல்களில் தலைவனைப் பிரிந்த தலைவியின் உடல் வெப்பமுறுவதும் நினைக.

பொய்தான் தவிர்ந்து - பொய் = நிலையற்ற மாயேயப் பொருள்கள். உடம்பு, உலகம், உலகிலுள்ள பொருள்கள் சுற்றம், நட்பு, செல்வம், பதவி முதலியவை முன்பு இல்லாமல் இடையில் சிலகாலம் நிலைபெற்றுப் பின்னர் இல்லாது போதலின் அவற்றைப் "**பொய்**" என்றார். என்றும் உள்பொருளாகிய பதியைப் பற்றிய ஞானம் எய்தியதும் ஏனைய நிலையற்ற பொருள்களின் மீதுள்ள பற்று நம் முயற்சியின்றி உறங்குவோன் கையிலுள்ள பொருள் போலத் தானே விலகுவதால் "***தவிர்த்து***" என்று பிறவினையாற் கூறாது "***தவிர்ந்து***" என்று தன் வினையாற் கூறினார். விளக்கு வந்ததும் இருள் தானே நீங்குவது போல இது நிகழ்வதாகும்.

கைதான் நெகிழவிடேன் - ***கை*** = ஒழுக்கம், "***கை***" என்ற சொல் இந்தப் பொருளில் வருவதைக் "கையொன் றறிகல்லாய்" *(கலித்தொகை = 95)* என்பதாலறிக. இந்த ஒழுக்கமாவது "மெய்யரும்புதல்", "கண்ணீர் ததும்புதல்", "கைகள் சென்னியின் மீது குவிதல்", "உடல் நடுங்குதல்", "உள்ளம் வெதும்புதல்" உலகப் பொருள்களின் மேலுள்ள பற்று நீங்குதல்" ஆகியவற்றுக்குக் காரணமாகிய பக்தி.

கை - உடலுறுப்பு, கரங்கள் என்றே கொண்டு, "நான் உன்னை இறுகப் பற்றிக் கொண்டுள்ளேன். அந்தப்பற்றை" நீ அருளினாலும், அருளா விட்டாலும் நெகிழ விடேன் ; நான் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும், வீழ்ந்தாலும் நெகிழவிடேன் என உரைத்தலுமாம்.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு

திருச்சிற்றம்பலம்

(அற்புதத் திருவந்தாதி 2)

என்ற அம்மையாரின் அமுதவாக்கு நினைந்து சுவைக்க.

போற்றி ! போற்றி ! என்னும் - "நா" என்ற எழுவாய் வருவித்து என் முயற்சியின்றியே என் நாக்கு, "காத்தருள்க! காத்தருள்க! " என்று உன்னிடம் விண்ணப்பம் செய்யும். "காத்தருள்க! " என்றது மேற்கண்ட ஒழுக்கத்தினின்றும் நான் நெகிழ்ந்து விடாமல் பாதுகாக்க என்றவாறு. அவ்வாறு காத்தருளா விட்டால் உன் உடமைப் பொருளேயும் அடிமையையும் பாதுகாத்துக் கொள்ளத் தவறியவன் என்ற பழிச் சொல் உன் மீது நிற்கும்; ஆதலின் நீயும் என்னேக் கை விடாதே என்பதும் குறிப்பு.

போற்றி - வணக்கம்; வழிபடுகின்றேன் எனலுமாம். முன்னம் "தாயே யாகி வளர்த்தனே போற்றி" (போற்றித் திருவகவல் 58) என்றதன் கீழுரைத்தவை காண்க.

சயசய - ஆன்மாக்களின் பொருட்டு ஆணவ மலத்துடன நிகழ்த்தும் போரில் உனக்கு வெற்றி எய்துக என்றவாறு. முன்னம் "வெல்க" "கழல்" (சிவபுராணம் 6.10) என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க. மேலே முதலடியில் "***கழல்***" என்றதும் நினேக.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

" கையாற் றொழுதுன் கழற்சே வடிகள்
கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் தலேமேல் வைத்தெம்
பெருமான் பெருமானென்
றையா என்றன் வாயா லரற்றி
அழற்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே "

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் - ஆசைப்பத்து - 8)

என்று நம் அடிகளே பின்னரும் அருளியுள்ளதை இந்தத் திருப்பாடலுடன் ஒப்பிட்டுவக்க.

இத் திருப்பாட்டில் "பொய் தான் தவிர்ந்து" என்றதனுல் மனத்தினேயும் " மெய்தான் அரும்பி" " விதிர் விதிர்த்து " " கண்ணீர் ததும்பி" "வெதும்பி" " கைதான் தலே வைத்து " என்றவற்ருல் காயத்தினேயும், "சய சய " என்றதால் வாக்கினேயும் கூறியதால் மூன்று கரணங்களாலும் வழிபட்டமை கூறியருளினுர்.

என்னே என்+ஐ: என்தலேவனே! என்று விளித்தவாறு. இவ்வாறன்றி முக்கரணங்களாலும் வழிபட்டு என்வசமிழந்து நிற்கும் "அடியேனேக் கண்டு கொள்" எனலுமாம்.

கொள் - உன் திருவடி நிழலின்கீழ் ஏற்றுக் கொள். இது வீடு பேறு குறித்து நின்றது. ***கொள்ளே*** : ஏகாரம் அசைநிலே. ***கொள்*** : கொள்வாய் " செய்யாய் " என்னும் முன்னிலே வினேச்சொல். "நடவாய்" என்பது "நட" என நின்றது போலக் கொள்க. செய்யா யென்று முன்னிலே வினேச் சொற் செய்யென் கிளவியாகிட னுடைத்தே என்பது இலக்கணம் (தொல். சொல். எச்சவியல். சூ 450)

மலபரிபாக மெய்திச் சத்தினிபாதமுற்ற உயிர் உடனே வீடு பேறெய்தத் தகுதியுடையதாகின்றது. அவ்வுயிர் உடலோடு கூடியுள்ள சீவன் முத்த நிலேயில் இருப்பினும் இவ்வுலகிலேயே வீட்டின்பம் நுகர்கின்றது. உடல் வீழ்ந்ததும் சாயுச்சிய நிலே எய்தும். கண்ணப்பநாயனுர் அங்கணர் கருணே கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்திய உடனே வீடு பேறெய்தத் தகுதியுள்ளவராஞர். பின்னர் அவர் உடலோடு கூடி இவ்வுலகில் சீவன்முத்தராகச் சஞ்சரித்த ஆறு நாட்களும் அவர் பெருமையைச் சிவகோசரியாரும் அவர்மூலம் உலகமும் அறிந்துய்ய வேண்டி இறைவன் அருளிய கால எல்லேயாம். அந்த நிலேயில் அவர் வீட்டின்பம் நுகர்ந்ததும் பின்னர் வீடுபேறெய்தியதும் நினேக.

இத் திருப்பாடலில் பொய்யாகிய உலகப் பொருள்கள் தவிர்ந் தொழியத் தவ ஒழுக்கத்தை உயிர் நெகிழவிடாமல் நின்ற நிலேயால் சதகக் கருத்தாகிய பத்தி ***"வைராக்கிய விசித்திரம்"*** கூறியவாறும், இறைவனேப்

பற்றிக் கொண்டு "சயசய" என்ற நிலையால் பதிகக் கருத்தாகிய "**மெய்யுணர்தல்**" கூறியவாறும் காண்க.

6. கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
யிருக்கப் பெறினி றைவா !
உள்ளேன் பிறதெய்வ முன்னையல்
லாதெங்கள் உத்தமனே. உ

(இ - ள்)

"எங்கள் இறைவனுகிய உத்தமனே ! என் குடும்பமே வழிவழியாக வறுமையில் துன்புற்று அழியினும் இந்திரன் திருமால் நான்முகன் என்னும் இவர்கள் வாழ்வை ஏற்றுக் கொள்ளேன்; உன் அடியவர்கள் அல்லாதவர்களோடு நட்புக் கொள்ளேன்; உன் திருவருளால் நரகத்தின் வழியே நான் சென்ருலும் அல்லது அந்த நரகத்திலேயே கிடந்து துன்புற்ருலும் அந்த நிலையை இகழ்ந்து பேசேன்; உன்னையன்றி வேறு தெய்வங்களை மனத்தாலும் நினையேன்.

(வி - ரை)

இறைவா! எங்கள் உத்தமனே- என்ற தொடரை முதலில் வைத்துப் பொருள் கொள்க.

இறைவன்- எங்கும் நிறைந்திருப்பவன்; முழுமுதற்கடவுள்.

உத்தமன் - ஆணவ மலமாகிய இருள் இல்லாதவன். தலைமைத் தன்மையுள்ளவன்.

புரந்தரன் மால் அயன் வாழ்வு கொள்ளேன் - புரந்தரன் = இந்திரன் அவன் வாழ்வு, திருமால், நான்முகன் பதங்களை விடவும் போக நுகர்ச்சி மிக்கதாகலின் முதலிற் கூறினர்.

கொள்ளேன் - அவர்கள் பதங்களை நீ எனக்குக் கொடுத்தாலும் விரும்பேன். அவர்களே வலிந்து எனக்கு அப்பதங்களை நல்கினும் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்றவாறு. அப்பதங்களை போக நுகர்ச்சிக்கு ஏதுவாவன. அதனுல் மீண்டும் மீண்டும் வினைகளை ஈட்டி, அவற்றின் பயன்களை நுகர சுவர்க்க நிரயங்களிலும் பூவுலகிலும் பிறந்திறந்து உழல வேண்டி வரும். ஆன்ம முன்னேற்றம் தடைப்படும். ஆதலின் அடியார் அவற்றை வேண்டார்.

ஈண்டு;

" கோல நீடிய நிதிபதி
வாழ்க்கையும் குறியேன்;
மேலை இந்திரன் அரசினைக்
கனவிலும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும்
பொருளென மதியேன்
சால நின்பதத் தன் பையே
வேண்டுவன் தமியேன்"

(கந்தபுராணம் - யுத்தகாண்டம் -பானு கோபன் வதைப்படலம் -154)
என்றது நினைக.

இந்திரன் மால் அயன் ஆகியோர் மண்ணுலகில் பிறந்து சிவ வழிபாடு செய்துய்ய விரும்புவதும் நினைக. இதுபற்றி முன்னம் "ஏனோர்க் கெளிய இறைவன்" (போற்றித் திருவகவல் 117) என்றதன் கீழுரைத்தவை காண்க.

குடிகெடினும் - இதைக்"குடி கெடினும் புரந்தரன் மாலயன் வாழ்வு கொள்ளேன்; குடிகெடினும் நின்அடியாரொடல்லால் நள்ளேன், குடி கெடினும் எள்ளேன், குழ கெடினும் பிறதெய்வம் உள்ளேன்." என ஒவ்வொன்றனுடனும் புணர்ந்துரைக்க.

குடிகெடினும் - குடிப்பிறப்புக்குறிய பெருமை கெடினும் என்று விளக்கினுர் மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள். சுருக்கம் கருதி இனி இவர்கள் விளக்கங்கள் இவர்கள் உரையாகிய ***கதிர் மணி விளக்கம்*** என்ற பெயரால் குறிப்பிடப்படும்.

நள்ளேன் - நட்புக்கொள்ளேன். நள்ளுதல்-நெருங்குதல். அடியார் கூட்டத்துடன் நட்புக்கொள்ளல் குடிப்பெருமையை உயர்த்தும்; வறுமையை ஒழித்துச் செல்வச் செழிப்பை உண்டாக்கும். மாருக அடியாரல்லாதாரோடு நட்புக் கொள்ளுதல் குடிப்பெருமையைக் குலேத்து வறுமையுள் புகுத்தும். ஈண்டுக்குடிகெடினும் நின்அடியாரல்லாதாரோடு நள்ளேன் என்றதால் உடன்பாடு எதிர்மறை இரண்டானும் அடியார் நட்பும் அடியாரல்லாதார் கூட்டத்துடன் விலகியிருக்கும் நிலேயும் வற்புறுத்தப்பட்டன.

நரகம்புகினும் - இருக்கப் பெறின் - இருக்கப்பெறினும் என உம்மை விரித்துக் கொள்க. உம்மை எதிர்மறை குறித்து நின்றது.

நரகம் புகுதலும் நரகத்தில் இருத்தலும் - மிகுதியாக நல்வினேகளேச் செய்து ஏதோ ஒருதீவினேயைச் செய்தோர் மரணத்தின் பின் நல்வினேப்பயன்களே நுகரச் சுவர்க்கம் செல்லும் வழியில் நரகில் புகுந்து அதன் வழியே செல்வர். அங்குள்ள பாவிகள் நரகத்துன்பம் நுகர்வதைக்கண்டு மனம் துன்புறுவர். அந்தத் துன்பமே அவர்கள் செய்த ஒரு தீவினேயின் பயனே நுகர்ந்ததாகும். மகாபாரதத்தில் அறமே வடிவமாக வாழ்ந்த யுதிட்டிரன் பாரதப்போரில் அஸ்வத்தாமன் என்னும் யானே பீமனுல் கொல்லப்பட்டது என்று கூவினுன். யானே என்ற சொல் துரோணுசாரியர் காதில் விழாவண்ணம் கண்ணன் சங்கொலியால் வெற்றி முழக்கம் செய்தான். துரோணுசாரியார் தம்மைந்தன் அஸ்வத்தாமன் இறந்ததாக எண்ணி நிலே குலேந்தார். யுதிட்டிரன் அவருக்கு உண்மையை விரித்து விளக்கவில்லே. அந்தநிலேயில் திருட்டத்துய்மன் துரோணுசாரியரைக் கொன்றுவிட்டான். எனவே யுதிட்டிரன் உண்மை மறைக்கப்பட்ட பொய்க்கு உடந்தையானதால் அந்தத் தீவினேப் பயனே நுகரச் சுவர்க்கம் செல்லும் வழியில் நரகின் வழியே சென்றுன் என்ற கதையை இங்கு நினேக.

தீவினையாளர்கள் நரகில் கிடந்து துன்புறுவார்கள் அதை நரகில் **"இருக்கப் பெறின்"** என்றார்.

திருவருளாலே புகினும் இருக்கப்பெறினும் எள்ளேன் - உயிர்கள் நரகத்தில் புகுந்து செல்வதும்; நரகத்தில் இருந்து துன்புறுவதும் தீவினைப்பயன்களை நுகர்ந்து கழித்து மலபரி பாகம் எய்தி ஆன்மயாத்திரையில் முன்னேறுவதற்காக இறைவன் காட்டும் மறக்கருணையாம். மறக்கருணையும் திருவருளே யாகலின் அதை **"எள்ளேன்"** என்றார்.

இதனை ;

தந்தை தாய் பெற்ற தத்தம்
புதல்வர்கட ஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி
வளாரினு லடித்துத் தீய
பந்தமு மிடுவ ரெல்லாம்
பார்த்திடிற் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனார் முனிவு மென்றும்"

(சிவஞான சித்தியார் சுபக்கம் சூ-2 அதி-2 செய்-16)

என்று ஞான சாத்திரம் நவில்வது காண்க.

அவ்வருயின் புரந்தரன் மாலயன் வாழ்வும் இறைவனே அல்லது அவன் உள்நின்று உந்த நான்முகன் முதலியோரோ கொடுப்பதும் திருவருளினால் தானே வருவது. அதை ஏன் **"கொள்ளேன்"** என்றார் எனின்; அப்பதங்களில் நின்று இன்பம் நுகருங்கால் ஆகாமியம் ஏறிப் பிறப்பிறப்பில் செலுத்தலால் அப்பதங்களை விரும்பேன் என்றார். நரகில் அவ்வாறு ஆகாமியம் ஏற வழியில்லை என்பது காண்க.

நரகங்கள் பற்றி முன்னம் "மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை ஆழாமே காக்கும் அரசு" (போற்றித் திருவகவல் 118 - 119) என்றபகுதியில் **"நரகங்கள்"** என்றதன் கீழுரைத்தவை காண்க.

நரகம் புகினும் - ஈண்டு உம்மை எதிர்மறை குறித்து நின்றது

ஈண்டு ;

முந்தை யுணர்வு முடிந்தாலென் ஞருயிர்போய்
அந்த நிரயத் தழுந்தி அயர்ந்தாலென்
வெந்துயரம் மூழ்கி வினைப்பிறவி புக்காலென்
எந்தை அருளுண்டேல் எமக்கென் குறையென்ருர்

(கந்தபுராணம் - யுத்தகாண்டம் - சிங்கமுகன் வதைப்படலம் - 375) என்றது நினைக.

பிற தெய்வம் உள்ளேன் - உள்ளேன் - மனத்தினுலும் நினைக்க மாட்டேன். எனவே அவற்றை வாயினுல் துதித்து உடம்பினுல் வழிபட்டு அவற்றுக்கு ஆளாதல் இல்லை என்பது பெற்ரும்.

முன்னரும் "மற்ருேர் தெய்வம் கனவிலும் நினையாது" (போற்றித்திருவகவல் 74) என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

பிறதெய்வம் - ஏனைய தெய்வங்கள் நினையக் கூடத்தகுதியற்றவை. ஆதலின் அவற்றின் பெயர் குறியாது "***பிறதெய்வம்***" என்ற மட்டில் அமைந்தார். முன்னரும் "விண்ணேர் பகுதி கீடம் புரையும் கிழவோன் " (திருவண்டப் பகுதி 18 - 19) என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

ஈண்டு;

"சிவ ஏகோ த்யேய : சிவம் கர :
ஸர்வமந்யத் பரித்யஜ்ய "

(அதர்வசிகோபநிடதம்)

இதன் பொருள், சிவன் ஒருவனே தியானிக்கத் தக்கவன். அவன் மங்கலத்தைச் செய்பவன். ஏனைய தெய்வங்களை வழி படா தொழிக.

திருச்சிற்றம்பலம்

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோம்
இருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்று நாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 98 - 5)

அதருவ மிருதி வேத
அதருவ சிகைதா னந்த
யதருவ முடிவா யோங்கு
மழிவிலா வின்பஞ் சீவர்க்
குதவிடு சிவனே தேய
ஞேதுக்குக பிறரை யென்ற
திதமுற விளம்ப லாலே
யேந்துவ தெவனை வேதம்.

" அதர்வ மறையின் முடிவாய் விளங்கும் அதர்வசிகோபநிடதம் முடிவில், "உயிர்களுக்கு அழிவற்றோங்கும் இன்பம் கொடுக்கின்றவன் சிவபெருமானே! அன்னியமான மற்ற தேவர்களை விட்டுச் சிவபெருமான் ஒருவனையே தியானிக்க!" என்று நமக்கு ஆணையிட் டுரைப்பதால் மறைகள் சென்னிமேற் கொள்வது சிவனையன்றி வேறு எவனை?"

(சிவபரத்துவ நிச்சயம் -சித்தாந்த பண்டித பூஷணம் சிவத்திரு. ஆ. ஈசுவரமூர்த்தி பிள்ளை அவர்கள்)

திருச்சிற்றம்பலம்

" புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 514)

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 11 - 17 - வெண்பா 5)

" மணிகொண்ட..............
செம்பொருட் செல்வநின் சீரடித் தொழும்புக்
கொண்பொருள் கிடையா தொழியினு மொழிக
பிறிதொரு கடவுட்குப் பெரும்பயன் றரூஉம்
இறைமையுண் டாயினு மாக முறுகிநின்
சிற்றடி யவர்க்கே குற்றேவ றலைக் கொண்
டம்மா கிடந்தவா வென்று
செம்மாப் புறூஉந் திறம்பெறற் பொருட்டே"

(மதுரைக்கலம்பகம் - 2)

என்பன நினைக.

அனந்த தேவர் முதல் சிறுதெய்வங்கள் வரை அனைவரும் சிவபெருமான் அருள்வழியே இயங்குகின்றனர்.

சிவபெருமான் ஒருவனே அவ்வத் தெய்வங்களை வழிபடுவோருக்கு அருள்பாலிக்கின்றான். அவ்வழிபாடுகள் அனைத்தும் சிவபெருமான் திருவடிகளையே சேர்கின்றன. நம் ஞான சாத்திரமும் "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்...." என்று நவில்கின்றது. எனவே ஈண்டுச் சிறு தெய்வவழிபாடு கடியப்படுவது என்னையோ வெனிற் கூறுதும்.

சிவபெருமான் சிறு தெய்வங்களை அதிட்டித்து நின்று அருள்புரிகின்றான் என்பது உண்மையே! ஆனால் அவ்வாறு அதிட்டிக்கும் பொழுது அவ்வத் தெய்வங்களின் ஆற்றலுக்குத் தகவே அவற்றுள் தன் திருவருள் ஆற்றல் நிற்கும் வண்ணம் அதிட்டித்து நிற்கின்றான். அல்லாக் கால் அவன் ஆற்றல் முழுவதையும் அவன் அதிட்டித்து நிற்கும் சிறுதெய்வத்தால் தாங்கவொண்ணாது. இதை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவாம்.

நெருப்பு எல்லாப் பொருள்களிலும் தங்கி நிற்கின்றது. பனிக்கட்டியிலும் தங்கியுள்ளது. வெப்பமானி கொண்டு பனிக்கட்டியின் சூட்டைக் கண்டால் 37% வெப்பம் காட்டும். வெப்பம் நெருப்பின் குணம். எனவே பனிக்கட்டியில் நெருப்பு உள்ளது என்பது பெற்றும் பனிக்கட்டி தாங்கும் அளவாகிய 37 % ஆற்றலுடன் மட்டுமே நெருப்பு அதனுள் உள்ளது. அந்த அளவு சூடுள்ள நெருப்பைக்கொண்டு சமையல் செய்ய இயலாது. சமையலுக்குத் தேவையான அளவு வெப்பத்துடன் நெருப்பு அந்தப்பனிக்கட்டிக்குள் புகுமாயின் அதைத் தாங்காது பனிக்கட்டியே அழிந்து விடும்.

அவ்வாறே சிறு தெய்வங்களில் அதிட்டித்துள்ள இறைவனின் அருளால் சிறு சிறு உலகியல் நலன்களை மட்டும் பெறலாம். வீடுபேறு எய்தும் அளவு ஆற்றலுடன் இறைவன் அவற்றை அதிட்டித்து நில்லான். அவ்வாற்றலை அத்தெய்வங்கள் தாங்கா என்பதே காரணம். எனவே

பிறவியின் நோக்கமாகிய வீடுபேறு எய்துதற்குச் சிவவழிபாடாகிய ஏகநாயக வழிபாட்டையே நம் பெருமக்கள் வலியுறுத்தினர்.

ஈண்டு மற்றொன்றும் கருதுதல் வேண்டும். சிவபெருமான் மட்டுமே பிற தெய்வங்களை அதிட்டித்து நின்று அருள் புரிவன். அத்தெய்வங்கள் சிவபெருமானை அதிட்டித்து நில்லா. பனிக்கட்டியை நெருப்பு அதிட்டித்து நிற்கும்; நெருப்பைப் பனிக்கட்டி அதிட்டித்து நிற்க இயலாது. ஆதலின் சிவவழிபாட்டினால் திருமால் முதலியோரை வழிபடும் பலன்களாகிய உலகியலின்பம் முதலியவை பெறலாம். திருமால் வழிபாட்டால் வீடுபேறு கிட்டாது.

இதனை ;

திருச்சிற்றம்பலம்

" நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்
நினைப்பார்கண் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாயா றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானா யென்னானா யென்னி னல்லா
லேழையே னென்சொல்லி யேத்து கேனே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 95 - 7)

என்று நம் அரசுகள் தெளிவிப்பது காண்க

இத்திருப்பாடலில் நின் அடியாரோடல்லால் நள்ளேன் என்றதால் பத்தியும், புரந்தரன் மாலயன் வாழ்வு கொள்ளேன். பிறதெய்வம் உள்ளேன் என்றதால், வைராக்கியமும் பெறப்படுதலின் சதகம் நுதலிய கருத்தாகிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெறப்பட்டது. "உன்னை யல்லாற் பிறதெய்வம் உள்ளேன் என்றதால் பதிகம் நுதலிய கருத்தாகிய "**மெய்யுணர்தல்**" பெறப்பட்டது.

7. "உத்தம னத்த னுடையா
னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ
னென்ன மனநினைவில்
ஒத்தன வொத்தன சொல்லிட
வூரூர் திரிந்தெவரும்
தத்த மனத்தன பேசவெஞ்
ஞான்றுகொல் சாவதுவே!" ௩

(இ - ள்)

என்தலைவனும், தந்தையும், உலகங்களனைத்தையும் தன் உடைமைகளாகவும் ஆன்மாக்களனைத்தையும் தன் அடிமைகளாகவும் கொண்ட இறைவன் திருவடிகளையே நினைந்துருகி, "இவன் மனநிலைதிரிந்தவன்." எனப்பிறர் கருதும்படி மிகக் களிப்பேறிய உள்ளத்துடனே பல ஊர்களிலும் சஞ்சாரம் செய்து, என் உள்ளக்கருத்துக்குப் பொருந்திய சொற்களை நான் பேச, அந்த நிலையைக் கண்ட எல்லாரும் தங்கள் தங்கள் உள்ளங்களில் தோன்றியவற்றை வெளிப்படுத்திச் சொல்ல என் சீவபோதம் செயலற்று நான் சீவன் முத்த நிலையெய்துவது எப்பொழுது.

(வி - ரை)

இத்திருப்பாடலை; உத்தமன், அத்தன், உடையான் அடியே நினைந்து உருகி இவன் மால் என்ன மத்த மனத் தொடு; ஊர் ஊர் திரிந்து, மனநிலையில் ஒத்தன ஒத்தன சொல்லிட எவரும் தத்தமனத் தன பேச, சாவது எஞ்ஞான்று கொல்; என்று அன்னுவயம் செய்து கொள்க.

உத்தமன் *- 6 ம் திருப்பாடலில் "உத்தமன்" என்றதன் கீழுரைத்தவை காண்க.*

அத்தன் *- தந்தை, எஜமானன், அரசன், குரு. இறைவன் இந்நால்வருமாயுள்ளான். முன்னம் "எந்தை" (சிவபுராணம் 11) என்றதன் கீழுரைத்தவை காண்க.*

மத்தம் - களிப்பு இதனை "மத்தக் கரியுரியோன்" (திருக்கோவையார் 388) என்றதற்கு "களிப்பையுடைத்தாகிய யானையின் தோலையுடையவனது" எனவரும் பேராசிரியர் உரையாலறிக.

ஒத்தன ஒத்தன சொல்லிட - இஃது, அடிகளின் செயல் சீவன்முத்த நிலையில் உள்ளோர் பரமே பார்த்திருக்கும் பொழுது மிகமேலானவற்றைக் கூறுவர். இடையிடையே நினைவு வரும் பொழுது உலகம் பற்றிய செய்திகளைச் சொல்வர்; ஆதலின் "மன நினைவில் ஒத்தன ஒத்தன" என்றார். அவற்றை முரண்படும் மொழிகளாக்கொண்டு உலக மக்கள் இவன் மனநிலை திரிந்தவன் என்று கூறினர். முன்னரும் "சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப" (போற்றித்திருவகவல் 68) என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

ஊர் ஊர் திரிந்து - ஒரூரில் நிலையாக வசிப்பின் அவ்வூரின்கண் பற்றுண்டாகி உலகியலில் சிக்கி உழல வேண்டிவரும். ஆதலின் பல ஊர்களில் திரிய வேண்டியதாயிற்று. முன்னம் "அருவரைதொறும்" (திருவண்டப்பகுதி 136) என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

இவ்வுண்மையறியாத உலக மக்கள் இவ்வாறு திரிவது உன்மத்தர் செயல் என்று கொண்டனர். திருப்பெருந்துறையை நீங்கிய நம் அடிகள் தலயாத்திரையாகத்தில்லை வந்த சரிதத்தின் அகச்சான்று. அவ்வாறு ஊர் ஊர் திரியும் பொழுது நம் அடிகளின் நோக்கும் அவர் திருமேனியிற்படிந்த காற்றும் உலக மக்கள் மீதும் படியும், அவர் வாக்கு அவர்கள் செவிகளிலும் செல்லும்; அதனால் அவர்கள் உய்வார்கள் என்று இறைவன் நிகழ்த்திய அருளிப்பாடாகும்.

சாவது - இது பசுபோதம் கெட்டுச் சீவன்முத்த நிலையை அடைவதாகும். அந்தநிலையில் உடலின் இயல்பு நினைவில் நில்லாது.

இவர்கள் நிலையை ;

"ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினோ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்"
(32)

தேசமிடங் காலந்திக் காசனங்க ளின்றிச்
செய்வதொன்று போற்செய்யாச் செயலதனைச் செய்தங்
கூசல்படு மனமின்றி யுலாவ னிற்ற
லுறக்கமுணர் வுண்டிபட் டினியிருத்தல் கிடத்தன்
மாசதனிற் றூய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்திற் றிருத்தத்தின் மைதுனத்திற் சினத்தி
னுசையினின் வெறுப்பினிவை யல்லாது மெல்லா
மடைந்தாலு ஞானிகடா மரனடியை யகலார் (33)

(சிவஞான சித்தியார் - சுபக்கம் சூ. 8 - அதி - 2 செய் 32 - 33)

என்று நம் ஞான சாத்திரம் நவில்வதும்;

திருச்சிற்றம்பலம்

" ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்; விண்ணோரைத் தான்பணியாள்

பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்! (109)

(திருவாசகம் - 109)

" மைத்தழை யாநின்ற மாமிடற்
றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற வன்பினர்
போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா
வினுய்க் கையில் வில்லின்றியே
பித்தழை யாநிற்ப ராலென்ன
பாவம் பெரியவரே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 102)

என்று நம் அடிகளே அருளுவதும் ;

"சொன்ன கிரௌஞ்ச கிரியூ
டுருவத் துளைத்தவவேல்
மன்ன! கடம்பின் மலர்மாலை
மார்ப! மௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா
மொருக்கிய நிர்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந்
தேவிட்ட திவ்வுடம்பே"

(கந்தரலங்காரம் - 19)

என்று அருணகிரிநாதர் அருளிச் செய்ததும் காண்க.

சாவது - என்பதற்கு இவ்வாறன்றி மரணமடைவது என்று கூறினர் முன்னுரையாளர்கள்.

உன்மத்தன் என்றும், அதனுல் முன்பின் முரணுகப் பேசுகின்ருன் என்றும், ஓரிடத்தில் நிலேயில்லாது திரிகின்ருன் என்றும் உலகர் பேசுவதைப் பொருட்படுத்தாமையாற் சதகம் நுதலிய கருத்தாகிய "**பக்தி வைராக்கிய விசித்திரம்**" கூறப்பட்டது. உத்தமனுகி அத்தனேயே நினேந்துருகியதால் பதிகம் நுதலிய "**மெய்யுணர்தல்**" கூறப்பட்டது.

8. சாவமுன் ஞட்டக்கன் வேள்வித்
தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா
விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானெடு
மெண்ணிவிண் ணுண்டுமண்மேல்
தேவரென் றேயிறு மாந்தென்ன
பாவந் திரிதவரே. ௮

(இ - ள்)

நம்மவர்களே! முன்னெரு காலத்தில் தக்கன் செய்த வேள்வியின் அவியாகிய ஆட்டிறைச்சியைத் தின்று அதனுல் தக்கனெடு தாங்களும் சாகவும்; ஆலகால நஞ்சு எழுந்த பொழுது சாவதை அஞ்சிச் சிவபெருமானே நோக்கி "எங்கள் தந்தையே! ஆ! ஆ! என் செய்வோம்" என்று ஓலமிட்டுப் புகலடைந்ததுமான இழிவுகளே நினேயாத தேவர்களே எம்பெருமானுகிய சிவபரம்பொருளுடன் தாங்களும் சேர்ந்து "நாங்கள் மூவராவோம்" என்று நினேந்து, விண்ணுலகத்தின் ஒவ்வொருபகுதிகளே ஆட்சி புரிந்து, இந்தப்பூவுலகில் "நாங்களே முழுமுதற் கடவுள்" என்று செருக்குற்றுத்திரிவர். இவர்கள் தீவினேப் பயன் இருந்தவாறு என்னே!.

(வி - ரை)

நம்மவர் - இதை முன்னர் வைத்து உரை செய்க. விளிவேற்றுமை விரித்து ***நம்மவரே!*** என்க. இஃது அடிகள் சிவனடியார்கள் கூட்டத்தை நோக்கிக் கூறும் விளி.

சாவ - சாவவும் என உம்மை விரித்துக்கொள்க. தக்கன் சாகும்படி வேள்வியில் கலந்து கொண்டு அவியுண்ட தேவர்கள் தாங்களும் சாகும்படியும் எனலுமாம். வேள்வியின் அவியை உண்பதால் வேள்வி வேட்டோனின் ஆயுள் வளரும் என்பது விதி. இங்குச் சிவ நிந்தனையாகிய வேள்வியில் அவியுண்டதால் வேட்டோனாகிய தக்கனின் ஆயுள் குறைந்ததுமன்றி அன்றே முடிந்தது. தகர்கொன்று தேவர்களை ஊட்டிய தக்கனும் பின்பு தகர் முகம் எய்தினான்.

தகர் - ஆடு. ஈண்டு வேள்வியில் அவியாக இடப்பட்ட ஆட்டுக் கிடாயின் புலால் குறித்து நின்றது.

தின்று - சிவ நிந்தையாகிய வேள்வியாதலின் அவியை உண்டு என்னாது "***தகர் தின்று***" என்றார்.

நஞ்சம் அஞ்சி - நஞ்சு ஆலகால நஞ்சு. நஞ்சினால் சாவு ஏற்படும் என்று அச்சம் கொண்டு. நஞ்சு எழுந்தஞான்று அதனால் வரும் சாவுக்கு அஞ்சி என்றவாறு. ***சாவ*** என்பதைத்தக்கன் வேள்வியில் சாவ; நஞ்சினால் சாவ என ஈரிடத்தும் புணர்த்துரைக்க.

ஆவ - ஆ! ஆ! என்பது ***ஆவ*** என நின்றது. இஃது அச்சம் குறித்த இடைச்சொல்.

அவிதா - "அவிதா! சிவதா! என்பன உயிர்போதல் போன்ற பேரச்சம் நிகழுங்கால் காப்பாற்ற வேண்டிக் கதறிக் கூவும் சொற்கள்.

இதனை ;

*" களியா னையினீ ருரியாய் **சிவதா;***
*எளியார் வலியா மிறைவா **சிவதா;***
*அளியா ரடியா ரறிவே **சிவதா;***
*தெளிவா ரமுதே **சிவதா! சிவதா!"*** 16

" ஆறு மதியு மணியுஞ் சடைமே
வேறு மலரைக் கரிசிந் துவதே?
வேறுண் ணினைவார் புரம்வெந் தவியச்
*சீறுஞ் சிலையாய்! **சிவதா! சிவதா!"*** 17

தஞ்சே சரணம் புகுதுந் தமியோர்
நெஞ்சேய் துயரங் கெடநேர் தொடரும்
மஞ்சே யெனவீழ் மறலிக் கிறைநீள்
செஞ்சே வடியாய்! சிவதா! சிவதா!" 18

(பெரியபுராணம் - எறிபத்தநாயஞர் புராணம்)

எனவரும் சேக்கிழார் பெருமான் செஞ்சொல் ஓவியங்களில் காண்க.

மூவர் - மும்மூர்த்திகள். அவர்கள் நான்முகன், திருமால், உருத்திரன் ஆகியோர். இங்குக் கூறிய உருத்திரன் சிவபெருமான் அல்லன். குணதத்துவத்தில் இருந்து கொண்டு பிரகிருதி மாயா காரியங்களாகிய புவனங்களை ஊழிக்காலத்தில் ஒடுக்குபவன். புவனுதிபதிகளாகிய நான் முகனும் திருமாலும் அந்த ஊழியில் அழியும் சகலர்கள். எனவே அவ்விருவரும் குணிருத்திரனுடன் கூடச்சமமாக எண்ணத்தக்கவரல்லர். சிவபெருமான் மகாசங்கார காலத்தில் சுத்த மாயாபுவனங்களனைத்தும் ஒடுக்கும் மகாருத்திரர். அந்த முழு முதற்கடவுளுடன் நான்முகனும் திருமாலும் தங்களைச் சமமாக வைத்து எண்ணி இருமாப்புற்றனர் என்றவாறு.

எண்ணி - பிறரால் எண்ணப்பட்டு எனப்பிறவினையாக்கி உரைத்து, அதனுல் இருமாப்புற்றனர் எனலுமாம்.

விண் ஆண்டு - விண்ணுலகத்தில் ஒரு சிறுபகுதியைத் தங்கள் பசுபுண்ணியப்பயன் தீரும்வரையில் ஆண்டு.

மண்மேல் திரிதவர் - மண்ணுலகத்திலும், அதற்கு மேல் வைகுண்டம் வரையிலும் உள்ள பல்வேறு உலகங்களிலும் எண்ணற்றமுறை பிறந்து இறந்து பயனின்றி உழல்வர்.

திரிதவர் - திரிதருவர் என்பது தொகுத்தலாயிற்று. அவ்வாறு அவர்கள் திரிவதற்குக் காரணம் அவர்கள் இருவினைப் பயன்கள் என்க.

தேவரென்றே! - சகலர்களாகிய தங்களை மகாதேவராகிய சிவபெருமான் என்றே நினைத்துக் கொண்டு.

ஈண்டு ;

தேவரி ெனருவ னென்பர்
திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார்
முதலுருப் பாதி மாத
ராவதும் உணரா ராதி
அரியயற் கறிய வொண்ணு
மேவுரு நிலையு மோரார்
அவனுரு விளைவு மோரார்

(சிவஞான சித்தியார் - சுபக்கம் சூ - *1* - சூ2 - *49*)

என்ற ஞானசாத்திரம் நினைக.

என்ன பாவம் - பாவம் என்ன - என்று மாற்றுக. தக்கன் வேள்வியில் வீரபத்திரரால் கொல்லப்பட்டது; ஆலகால நஞ்சினுல் அல்லற்பட்டது ஆகியவை இவர்கள் நுகர்ந்த தீவினைப்பயன்கள். ஆதலின் இவர்கள் பாவம் செய்தவர்கள் என்பதும், அதிலும் பல பாவங்கள் செய்தவர் என்பதும் பெற்ரும். இன்று இவர்கள் தங்களை எம்பிரானுக்குச் சமமாக எண்ணி இறுமாந்து திரிவது இவர்கள் முன் செய்த பாவங்களில் எந்தப் பாவம்? என்று வினவியவாறு.

என்ன பாவம் - பாவம் - இரக்கம் குறிப்பதோர் இடைச்சொல் எனலுமாம். இது திருமால் நான்முகன் முதலிய தேவர்களை நினைந்து கூறியது. **மண்மேல் தேவ ரென்றே என்னபாவம் திரிதவரே** - என்று கூட்டித் திருமால், நான்முகன் முதலியோரை மகாதேவனுக்குச் சமமானவர் என்று கூறி உலகமக்களில் சிலர் திரிகின்ருர்களே! அந்தோ பாவம்! அவர்கள் நிலை இரங்கத்தக்கது எனலுமாம்.

தின்று, அஞ்சி, ஆவ எந்தாயென்று, அவிதா இடும் அவர் நம்மவரே என்று கூட்டி அவர்கள் நம்போன்ற சகலர்களே; என்க.

"அவரே மூவர் என்று எம்பிராஞெடும் எண்ணி மண் மேல் தேவரென்றே இறுமாந்து திரிதவரே என்ன பாவம்" என்று கூட்டி அவர்களைச்

சிவபெருமானுடன் சமமாக எண்ணித் தங்களைப் பூசுரர்கள் என்று கூறிக்கொண்டு இறுமாந்து சிலர் திரிகின்றனரே அவர்கள் நிலை இரங்கத்தக்கது என்றுரைத்தலுமொக்கும்.

மண்மேல் தேவர்- பூசுரர், அந்தணர்கள் இவர்கள் பூர்வ மீமாஞ்சகரும் உத்தரமீமாஞ்சகருமாவர்.

பூர்வமீமாஞ்சகர் - வேதம், தெய்வம் உண்டு என்று கூறுகின்றது. அது புனைந்துரையன்றி உண்மையன்று. ஆயினும் அக்கூற்று நல்வழிநிற்றற்கு உதவுவதால் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்ற கொள்கையர்.

உத்தர மீமாஞ்சகர் - பல்வகைப்பட்ட தேவர்கள் மற்றைய உயிர்கள், பலவகைப்பட்ட உலகங்கள் ஆகிய யாவும் உண்மையில் "கயிற்றில் அரவு" போலப் பொய்யே. ஆயினும் அவ்வுண்மையை உணரும் பக்குவம் எய்தும்வரை அவற்றை உண்மையென்றே கொண்டு ஒழுகவேண்டும் என்ற கொள்கையினர்.

இவ்விரு பிரிவினரும் சிவபெருமான் ஒருவனே பதி ஏனையோர் ஆன்ம வருக்கத்தினர் என்று உண்மை உணர்ந்தொழுகும் புண்ணியமில்லாதவர்கள்.

தக்கன் வேள்வி செய்த வரலாறு - நான்முகனின் மானச புதல்வர்களில் ஒருவன் **தக்கன்.** இவன் மாபெரும் தவங்களைச் செய்து எல்லையில்லாத தவ வலிமை பெற்றிருந்தான். இவன் தான் பெற்ற ஆண்மக்கள் அனைவரையும் அவ்வாறே தவஞ்செய்து பெருத்தவ வலிமைபெறும்படி அனுப்பினான். அவர்கள் நாரதமுனிவர் அறிவுரைப்படி வீடுபேறு வேட்டுத்தவஞ் செய்து மேற்கதி எய்தினர். மனம் வெறுப்புற்ற தக்கன் பெண் மக்களை வேட்டுத்தவஞ் செய்து மகளிர் பலரைப் பெற்றான். அவர்களில் அசுவணி முதல் ரேவதி வரையுள்ள இருபத்தேழு நட்சத்திரங்களையும் பேரழகுள்ள சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அப்பொழுது சந்திரனிடம் அவர்களனைவர்மாட்டும் சமமான அன்புகாட்டும்படி சொல்லியிருந்தான். அதற்கிசைந்த சந்திரன் பின்னாளில்

அவர்களுள் பேரழகியாகத் திகழ்ந்த உரோகிணியிடம் மட்டும் கழிபெருங்காதல் கொண்டு வாழ்ந்தான். ஏனைய மகளிர் மனம் வருந்தித் தங்கள் தந்தையான தக்கனிடம் முறையிட்டனர். சினங்கொண்ட தக்கன் சந்திரன் தன் கலைகளை ஒவ்வொன்றாக இழந்து முடிவில் அழியும்படி சாபமிட்டான்.

சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்த தக்கன், உமையம்மை தன் மகளாக வந்து வளர வேண்டும்; உரிய காலத்தில் சிவபெருமானே வந்து அவளை மணந்து கொண்டு தன் மருமகனாக வேண்டும் என்று வரம் பெற்றான். அவ்வாறே உமையம்மை தக்கன் மகளாகித் தாட்சாயணி என்னும் நாமம்பூண்டு வளர்ந்து திருமணப்பருவம் எய்தினாள். இறைவனைத் தன் கணவனாக எய்த வேண்டித் தவச்சாலையில் அமர்ந்து கடுந்தவம் புரிந்தாள். தவத்துக்கு மகிழ்ந்த கயிலாயபதி தவவேடம் கொண்ட அந்தணப் பிரமசாரியின் கோலம் தாங்கி அம்பிகையை நண்ணினான். சிறிது நேரம் திருவிளையாடல் புரிந்த பின் தாதியர் அறியாமல் தாட்சாயணிக்கு மட்டும் தன் உண்மை வடிவம் காட்டினான். மகிழ்ந்த உமையம்மை அவன்பால் மனம் பறிகொடுத்தாள். தாதியர் நிகழ்ச்சிகளைத் தக்கனுக்கு அறிவித்தனர். தக்கன், வந்தவன் சிவபெருமானே என்று தெளிந்து தவச்சாலையை யடைந்து இறைவனிடம் தன் மகளை மணந்து கொள்ளும்படி வேண்டினான். இறைவனும் இசைந்தான். திருமண ஏற்பாடுகள் நடந்தன. தேவர்கள் முனிவர்கள் அனைவரும் திருமணங்காண வந்து கூடினர்.

திருமண நிகழ்ச்சிகள் தொடங்கின. தக்கன் மனைவி நீர் வார்க்கத் தக்கன் இறைவன் திருவடிகளை விளக்கிப் பூசனை செய்தான். நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும் பொழுது பிரமசாரிக் கோலத்தில் இருந்த இறைவன் திருவுருக்கரந்தான். இறைவன், தன்னை அவமதித்ததாக தக்கன் ஏனையோரிடம் கூறிச்சினங் கொண்டான். தன் அன்னையின் அறிவுரைப்படி தாட்சாயணி மீண்டும் இறைவனை நோக்கிக் கடுந்தவம் புரியலானாள். பின்னொரு நாள் இறைவன் விடையிவர்ந்த கோலத்துடன் அங்கு வந்து அம்பிகையை ஆனேற்றில் தன் இடப்பக்கம் இருத்தியவனாய்க் கயிலைக்கு எழுந்தருளினான். தாதியர், தக்கனுக்குச் செய்தியை அறிவித்தனர். அவன் தான் மேலும் அவமதிக்கப்பட்டதாகச் சினங் கொண்டான். பின்னர் இறைவனை நேரில் காணத் திருக்கயிலை சென்றான். ஆங்கு அவன் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. வளரும் பகைமையுடன் தக்கன் திரும்பினான்.

சந்திரன், சிவபெருமானை நோக்கித் தவம் செய்து இறைவன் முடியில் இருக்கை பெற்று மீண்டும் கலைகள் வளர வரம் பெற்றான். தக்கனின் பகைமை மேலும் முதிர்ந்தது.

மிகப் பெரிய வேள்வி ஒன்று தொடங்கி அதற்குச் சிவபெருமானை அழைக்காமல் ஒதுக்கி விட்டு, அவியை முதலில் திருமாலுக்கும் பின் ஏனைய தேவர்களுக்கும் கொடுக்கத்திட்டமிட்டான்; வேள்வி தொடங்கிற்று.

சிவபெருமான் விருப்பத்துக்கு மாறாகத் தாட்சாயணி அழைப்பின்றியே தன் தந்தையின் வேள்விக்கு வந்தாள். தட்சனும் அவன் குடும்பத்தினரும் அம்பிகையை அவமதித்தனர். நிலைமையைத் திருவுள்ளம் பற்றிய கண்ணுதற் பெருமான் ***வீரபத்திர தேவரைத்*** தோற்றுவித்தார். அவருடன் காளியையும் சிவ கணங்களையும் காளியின் கணங்களையும் சேர்த்துத் தக்கன் வேள்வியை அழித்து வர ஏவினார். அவர்கள் தக்கன் வேள்வியை முற்றிலும் நாசம் செய்தனர். காத்தற் கடவுளாகிய திருமாலே முன்நின்று போராடியும் வேள்வியில் பங்கேற்ற தேவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். தக்கனின் தலை துண்டிக்கப்பட்டது.

பின்னர், அம்பிகை வேண்டிக் கொண்ட வண்ணம் இறைவன் அனைவரையும் உயிர்பெற்று எழும்படி அருள் பாலித்தான். தலையிழந்த தக்கன் ஆட்டுத் தலை பொருத்தப்பெற்று உயிருடன் எழுந்தான். பின்னர்ச் சிவபூசை செய்து தன் தீவினைகள் கழுவப்பெற்றுய்ந்தான். தேவர்கள் உயிர்பெற்றெழுந்தனர். தாங்கள் செய்த சிவாபராதத்தின் மீதியிருந்த தீவினைகளுக்காகப் பின்னாளில் சூரபதுமனால் பல்லாண்டு துன்புற்று வருந்தினர். இந்த வரலாற்றைக் கந்தபுராணம் தட்சகாண்டத்திற் காண்க.

நஞ்சமஞ்சிய வரலாறு : தேவர்கள் தங்கள் பிறவிப் பகைவராகிய அசுரர்களுடன் அடிக்கடி போர் செய்தனர். போரில் அவ்வப்பொழுது இருதரப்பிலும் பலர் மாண்டனர்.

திருப்பாற்கடலில் உள்ள அமுதத்தை எடுத்து உண்டால் இவ்வாறு இறவாமல் மிக நீண்ட காலம் இளமையுடன் வாழலாம் என்று நினைத்தனர். அவ்வாறு பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுப்பது தங்களில் ஒரு

கூட்டத்தாரால் மட்டும் இயலுவதன்று என்றறிந்தனர். இருதரப்பினரும் சேர்ந்து பாற்கடலைக்கடைந்து அமுதை எடுத்த பின் அதை இரு தரப்பினரும் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று ஒரு முடிவுக்கு வந்தனர்.

இவர்கள் சிவபெருமானிடம் சென்று அமுதம் கேட்டு விண்ணப்பம் செய்திருந்தால் அவன் மிக எளிதில் அதை வருவித்து அவர்களுக்கு நல்கியிருப்பான். ஆனால் தன் முனைப்பால் அவ்வாறு செய்யாது தாங்களே கடலைக் கடைய முற்பட்டனர்.

மந்தரமலையை மத்தாகக் கடலில் நாட்டி வாசுகி என்னும் பாம்பரசனைத் தாம்புக்கயிறாக அந்தமலையில் சுற்றி அமைத்தனர். தேவர்கள் பாம்பின் வால் பகுதியையும் அசுரர்கள் அதன் தலைப்பகுதியையும் பற்றிக் கடையலுற்றனர். வாசுகியின் உடல் மலையில் தேய்வுற்றுப் புண்ணாயிற்று. அதன் துன்பம் தாங்காத வாசுகி தன் ஆயிரம் வாய்களாலும் தன்னிடமிருந்த நஞ்சைக் கக்கினான். அது கடலுள் வீழ்ந்தது. கடல் கடையப் பட்டதால் அதன் அடிப்பகுதியில் முன்பே இருந்த நஞ்சும் கலக்குண்டு மேலே எழுந்தது. இரண்டு நஞ்சுகளும் ஒன்றாகக் கலந்து "**ஆல காலம்**" என்ற பெயருடன் ஒரு கொடிய நஞ்சாகி எல்லா உலகங்களிலும் பரவி உயிர்களை அழிக்கத் தொடங்கிற்று. அனைவரும் அஞ்சி ஓடினர். காத்தற் கடவுளாகிய திருமாலும் அவர்களை நஞ்சினின்றும் காக்க முடியவில்லை. அவனது இயல்பான பால்போன்ற வெண்ணிறம் நஞ்சினால் கரிந்து உடல் முழுவதும் நீலநிறமாயிற்று. அனைவரும் திருக்கயிலையை நோக்கி ஓடினர். சிவபெருமானைப் புகலடைந்து ஓலமிட்டுத் தங்களைக் காக்கும்படி முறையிட்டனர். நஞ்சு கயிலையை நண்ணாது சூழ்ந்து வலம் செய்து சென்றது. சிவபெருமான் தன் கணங்களில் ஒருவரான "***சுந்தரர்***" என்பவரை ஏவி அந்த நஞ்சை பற்றிவரச் செய்தான். சுந்தரர் அந்த நஞ்சை ஒரு நாவல் கனி அளவு சுருக்கிப் பற்றி வந்து இறைவன் திருமுன் வைத்தார். சிவபெருமான் அதை எடுத்து விழுங்கினான். அவன் திருமேனியினுள்ளும் பல அண்டங்கள் உள்ளமையால் அவற்றில் வாழும் உயிர்களுக்கு ஊறு நேராமல் நஞ்சை வயிற்றினுள் செல்லும்படி உண்ணாமலும் வெளியே உமிழாமலும் தன் கழுத்தில் நிறுத்தினான். கண்டம், நஞ்சின் நிறம் பெற்றது. அவன் நீலகண்டனானான். அந்த நீலகண்டம் அவனது பரத்துவத்தை நிலைநாட்டி வழிபடும் உயிர்களை உய்விப்பதாயிற்று.

பின்னர் இறைவன் அருளியபடி தேவர்களும் அசுரர்களும் மீண்டும் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற்றனர். திருமாலின் உதவியால் அசுரர்களை வஞ்சித்துத் தேவர்கள் அமுதம் முழுவதையும் தாங்களே உண்டனர்.

சிவபெருமான் நஞ்சுண்ட இந்த வரலாறு ஒன்று மட்டுமே அவன் பரத்துவத்தை நிலைநாட்டித் திருமால் முதலிய ஏனையோர் ஆன்ம கோடிகளே என்றுரைக்கப் போதுமான சான்றாகும்.

இதனை ;

ஞாலமுண் டவனு லுண்டார் நல்லமு தமர ரென்றாய்!
வேலைநஞ் செழமா லாதி விண்ணவர் வெந்து சென்ற
காலமின் றெமக்குக் காவாய் கடவுளே யென்ன நாத
னுல முண் டிலனேற் றேவ ரமுதமுண் டிடுவ தெங்கே?

(சிவஞான சித்தியார். -பரபக்கம் -பாஞ்சராத்திரி மத மறுதலை-2)

என்று சித்தியார் சித்திரிப்பதைக் காண்க.

தேவர்கள் நஞ்ச மஞ்சிய வரலாற்றைக் கடம்பவன புராணத்தில் காண்க.

இந்தத் திருப்பாடலில் திருமால், அயன், தேவர்கள் ஆகியோரை முழு முதற் கடவுளர் அல்லர் என்று விலக்கி அவர்களால் வரும் உலக நன்மைகளை வெறுத்தது பெறப்படுதலின் சதகம் நுதலிய "**பக்திவைராக்கிய விசித்திரம்**" பெற்றும். சிவபெருமான் ஒருவனே பதிப்பொருள் என்ற உண்மையை உணர்த்தலால் பதிகம் நுதலிய "**மெய்யுணர்தல்**" பெற்றும்.

9. தவமே புரிந்திலன் தண்மல
ரிட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை
யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி
லேனின் றிருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி
யேற்கெம் பரம்பரனே (ரு)

(இ - ள்)

மேலான பதங்களில் உள்ளவர்களுக்கெல்லாம் மேலாக உள்ள எங்கள் சிவபெருமானே! நின்னிடம் மெய்யன்பு மிக்க அடியவர்களின் நெஞ்சங்களில் உண்டாவதும், வீட்டின்பத்துக்கு ஏதுவாவதுமாகிய மங்கலத்தை அடையப்பெற்றிலேன்; நின்னை எய்துதற்கான தவத்தைச் சிறிது கூடச் செய்திலேன்; உன் வழிபாட்டுக்காக விதிக்கப்பட்ட குளிர்ந்த நாண்மலர்களைக் குறைவின்றித் தூவி வணங்கிலேன்; எனவே பயனின்றிப் பிறந்து கடத்தற் கரிய தீவினையை உடையவன் ஆனேன்; ஆதலின் இனியேனும் உன் திருவடிக்கு அடிமையாகும் வாய்ப்பை அடியேனுக்கு அருள்செய்து காப்பாயாக.

(வி - ரை)

"எம்பரம்பரனே" - இதை முதலில் வைத்து அதன்பின் "உனக்கு அன்பருள் ஆம் சிவமே பெறும்திரு எய்திற்றிலேன்" என்ற தொடரைப் புணர்த்து உரை காண்க.

திரு. - பதிஞானமாகிய செல்வம்

சிவமே - சிவம் ; மங்கலங்களுக்கெல்லாம் மகா மங்கலமாகிய வீட்டின்பம். ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. அந்த இன்பம் சீவன் முத்தர்களாகிய சிவனடியார்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதால் கிட்டுவதாகும். அடியார்கள் கூட்டத்தின் சிறப்புப் பற்றி,

"அன்ப ரொடு மரீஇ"

(சிவஞான போதம் சூத் -12)

" மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை - யறப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரு
மெய்த்தவரை மேவா வினை"

(சிவஞான போதம் சூ - 12 - அதி - 2. உதாரணச் செய்யுள் -1)

" உரையின் ....

நின்தமர்ப்பெயர் எழுதிய வரி நெடும் புத்தகத்

தென்னேயு எழுத வேண்டுவன்"

(கோயில் நான் மணிமாலை - 4)

" பூ மேவு ....

ஆயும் பழைய அடியா ருடன் கூட்டித்

தோயும் பரபோகந் துய்ப்பித்துச் சேய

கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்

டடியேற்கு முன்னின் றருள்"

(கந்தர் கலிவெண்பா 121 - 122)

என அருளாளர்கள் கூறுவது காண்க.

தவம் - சிவபெருமான் திருவடிகளை அடைவதற்காக அன்பினால் உயிர்கள் புரியும் பக்திச் செயல்கள்.

இவற்றைச் சரியை, கிரியை, யோகம் என்பர். இவை ஒவ்வொன்றும் ஒன்றினின்றும் மற்றொன்றுக்கு ஏறிச்செல்லும் படி முறைகளாக அமைந்து சாதகனை குரு உப தேசத்தின் வழியாய் ஞானத்திற் சேர்க்கும்.

இதனை;

" விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்

அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே"

(பராபரக் கண்ணி - 157)

என்று விளக்கினார் தாயுமானசுவாமிகள்.

சரியை முதலிய இவை நான்கும் உபாயச் சரியை உபாயக்கிரியை உபாயயோகம் உபாயஞானம் என நான்காகவும், உண்மைச்சரியை, உண்மைக் கிரியை, உண்மையோகம், உண்மைஞானம் என நான்காகவும் ஆக எட்டாகப் பிரியும்.

உலகியற் பயன்களைக் கருதிச் செய்யும் வழிபாட்டில் கைக்கொள்ளப்படுவன உபாயச் சரியை முதலிய நான்காம். வீடுபேறு வேண்டியோ, அன்றி அதையும் வேண்டாது பக்தியினுல் மட்டுமோ புரியப்படுவன உண்மைச் சரியை முதலிய நான்காம்.

நம் அடிகள் திருவாசகம் முழுவதிலும் வேறு உலகியல் நலன்களை வேண்டாது, வீடுபேறே வேண்டி விண்ணப்பம் செய்வதால், ஈண்டுத் "**தவம்**" என்றது உண்மைச்சரியை குறித்து நின்றது. உண்மைச் சரியையைத் **தாதமார்க்கம்** என்றும் ஞானநூல்கள் விளம்பும்.

சமயதீட்சை பெற்றுச் சரியையிற் செய்யும் தொண்டுகள் திருக்கோயிலைக்கூட்டி மெழுகுதல், மலர்கள் கொய்தல், மாலைகள் தொடுத்தல், துதிப்பாடல்களை ஓதி வழிபடல், விளக்கிடுதல், நந்தவனங்கள் அமைத்துக் காத்தல், சிவனடியார்களுக்கு ஏவல் செய்தல் என்பனவாம். சமயதீட்சை பெற்றுச் சரியை நெறியில் நிற்போர் சுத்த வித்தியா புவனங்களில் வாழ்வதாகிய சாலோக பத முத்தி பெறுவர்.

இதனை ;

" *தாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரன்தன் கோயிற்*
றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதிற்றிரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வதி
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியு
மியற்றுவதிச் சரியை செய்வோ ரீசனுல கிருப்பர்

(சிவஞான சித்தியார் - சுபக்க - சூ - 8 அதி - 2 செய் - 19)

என்று ஞான சாத்திரம் நவில்வது காண்க.

தண் மலரிட்டு முட்டாது இறைஞ்சேன் - குளிர்ந்த நாண்மலர்களைச் சொரிந்து திரவிய லோபம் மந்திர லோபம்

முதலியன இல்லாது வழிபடேன். இது சிவபூசை செய்தலைக்குறிப்பது. ஆன்மார்த்த சிவபூசை அந்தரியாகபூசை என்னும் அக வழிபாடும் ; பகிர்முக பூசை என்னும் புறவழிபாடும் கொண்டுள்ளது. இவ்விருவழிபாடுகளிலும் பலகிரியைகள், முத்திரைகள் செய்யப்படுதலின் இந்த நெறி கிரியை, யோகம் என்ற இருநெறிகளையும் குறிக்கும். விசேட தீட்சை பெற்று நாள்தோறும் ஆன்மார்த்த சிவபூசை செய்பவர்கள் இந்நெறிகளுக்கு உரியவராவர். கிரியை நெறியைப் புத்திரமார்க்கம் எனவும், யோக நெறியைச் சகமார்க்கம் என்றும் கூறுவர்.

ஆன்மார்த்த சிவபூசை ஏற்ருேர் இக்கிரியா யோக நெறிகளுக்கு உரியவர். சிவபெருமானை நினைவில் நிறுத்தி மானசீகமாகவே திருமுழுக்கு ஆட்டுதல், அணிகலன்கள் அணிவித்தல், மலர்மாலை சூட்டுதல், திருவமுது படைத்தல், துதி முதலியன செய்தல் அந்தரியாக பூசையாம்.

உண்மைக் கிரியை நெறியைப் புத்திரமார்க்கம் என்றும் கூறுவர். இந்த நெறியாளர்கள் ஈசுரதத்துவத்தில் உள்ள புவனங்களின் தலைவரான மகேசுவரரின் அண்மையில் இடம்பெறும் சாமீபபதம் பெறுவர்.

இதனை ;

"புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனமமுது முதற்கொண் டைந்து
சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்தி மானுஞ்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினு லருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினேடு மெரியில்வரு காரியமும் பண்ணல்
நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்க
ணின்மலன்ற னருகிருப்பர் நினையுங் காலே"

(சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ 8 - அதி 2 - செய் - 20)

என்று சாத்திரம் சாற்றுவது காண்க.

உண்மையோக நெறியைச் சகமார்க்கம் என்றும் கூறுவர். இந்த நெறி நிற்போர் சதாசிவதத்துவத்தில் உள்ள புவனங்களில் இடம்பெற்றுச் சதாசிவ மூர்த்தியின் வடிவம் தாங்கும் சாரூபபதம் பெறுவர்.

இதனை ;

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்க
ளகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்து போய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைக
ளுகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழத்தலுழந் தவர் சிவன்ற னுருவத்தைப் பெறுவர்.

(சிவஞான சித்தியார் சுபக்கம் சூத் 8 - அதி 2 - செய் - 21)

என்று சித்தியார் செப்புவதிற் காண்க.

உண்மை ஞான நெறியைச் சன்மார்க்கம் என்றும் சாற்றுவர். இவர்கள் தங்கள் ஞானாசிரியன் உபதேசம் செய்த அருள்மொழியைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து பின் நிட்டை கூடுவர். அந்த நிட்டையும் சவிகற்ப நிட்டை, நிருவிகற்ப நிட்டை என இரு வகைப்படும். சவிகற்ப நிட்டை நின்றோர் சத்திதத்துவம் சிவ தத்துவங்களாகிய இலய தத்துவங்களில் வாழ்வர். நிருவிகற்ப நிட்டை கைவரப்பெற்றோர் பரமுத்தியாகிய பரசாயுச்சியத்தை அடைந்து இன்புறுவர்.

இதனை ;

" சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொரு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே.

(சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ 8 - அதி 2 - செய் 22)

என வரும் ஞான சாத்திரத்ாலறிக.

இனி, இந்த நான்கு நெறிகள் ஒவ்வொன்றும் சரியையிற் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்றும் ;

கிரியையிற் சரியை, கிரியையிற்கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் என்றும் ;

யோகத்திற்சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் என்றும் ;

ஞானத்திற் சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்றும் பிரியும். அவை ஒவ்வொன்றின் நெறி நிற்போர் எய்தும் இடங்களையும் இன்பங்களையும் சிவஞான மாபாடியம், ❊ சிவஞான போதத் திருநெறியுரை போன்ற பெருநூல்களில் காணலாம். அவற்றுள் சிவஞான மாபாடியம் செப்புவது ;

ஞானத்திற் சரியை முதலியன - இனிக் கேட்டல் முதலிய நான்கனுள், கேட்டல் ஞானத்திற் சரியை ; சிந்தித்தல் ஞானத்தில் கிரியை, தெளிதல் ஞானத்தில் யோகம், நிட்டைகூடல், ஞானத்தில் ஞானமென்றுணர்ந்து கொள்க.

இவற்றுள், உபாயச் சரியையிற் சரியை உபாய ஞானத்தில் ஞானமீறாகிய பதினாறு வகையினின்றும் பல வேறு வகைப்பட்டு விரியுஞ் சிவ புண்ணியங்களுக்கெல்லாம் பயன். அவ்வவற்றிற்கேற்பக் காலாக்கினியுருத்திரன் முதல் குணதத்துவ மத்தகத்திற் சீகண்ட புவனத்தின் கீழுள்ள உருத்திரரீறான அவ்வப்புவனபதிகளுலகத்திற் சாலோக முதலியவற்றைப் பெறுதலாம். உண்மைச் சரியையிற் சரியை முதல் உண்மையோகத்தின் ஞானமீறாகிய பன்னிரு வகையினின்றும் பலவேறு வகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக் கெல்லாம் பயன், அவ்வவற்றிற்கேற்பச் சீகண்டபுவன முதற் சுத்த வித்தைக்குக் கீழுள்ள அவ்வப் புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோக முதலிய பதமுத்திகளைப் பெறுதலாம். உண்மை ஞானத்திற் சரியை முதலிய மூவகையினின்றும் பலவேறு வகைப்பட்டு விரியுஞ் சிவ புண்ணியங்கட் கெல்லாம் பயன், அவ்வவற்றிற் கேற்பச் சுத்தவித்தை முதலிய அதிகார

❊ பேரூராதினம் சத்வித்யா சன்மார்க்க சங்க வெளியீடு - பக்கம் 14 -20

தத்துவம் போகதத்துவங்களில் வைகும் மந்திரர், மந்திர மகேசர் முலியோர் புவனத்துச் சாலோக முதலிய அபர முத்தியைப் பெறுதலாம். இனிப் பல்வேறு வகைப்பட்டு விரியும் ஞானத்தின் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்திற்குப் பரமுத்தியே பயன். ஏனையவற்றிற்கு இலய தத்துவத்திற் பலவேறு வகைப்பட்ட அபரமுத்தி பயனெனக் கொள்க.

உண்மைச் சரியை முதலியவற்றிற்குச் சுத்தவித்தை முதலிய தத்துவத்துச் சாலோக முதலியவற்றிற் சேறல் பயனென்றுரைப்பாருமுளர். சிவதத்துவ புவனங்கள் ஆணவமல நீங்கி வாசனை மாத்திரமுடையவரான் எய்தப்படும் அபர முத்தித்தானமன்றி ஏனையோரெய்தும் பதமுத்தித்தான மன்றென்பது சிவாகமங்களுக்கெல்லா மொப்ப முடிந்த தாகலின், ஞானத்திற் றலைப்பட்டன்றி மல நீங்குதல் கூடாமையானும் ❊ "ஈசனியோ கக்கிரியா சரியையினி னின்றோ -ரூனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா மொடுங்கும்போ தரன்முனிலா தொழியினுற் பவித்து ஞானநெறி யடைந்தவர் சிவனே" எனப் பத முத்திகளைப் பெற்றோர்க்கு மீட்சி கூறுதலிற் சுத்த வித்தை முதலியதத்துவ புவனங்களின் எய்தியோர்க்கு ஆண்டு நின்றவாறே பரமுத்தியைத் தலைப்படுதலின்றி ஒருவாற்றானும் மீட்சியில்லை யென்பது சிவாகம நூற்றுணிபாகலானுஞ் சிவாகமங்களோடு முரணி அவ்வாறு கூறுதல் பொருந்தாமை யறிக. சரியை முதலியவற்றில் நின்றோர்க்குப் பயன் சுத்ததத்துவ புவனத்துச் சுத்தசாலோக முதலாயின வெனச் சில விடங்களிற் கூறியது ஞானத்திற்சரியை முதலியவற்றில் நின்றோர்க் கென்னுங் கருத்தே யாமென் றொழிக.

(சிவஞான மாபாடியம் சூத் - 8 - அதி - 1)

ஈண்டு, நம் அடிகள் **தவம்** என்றதாற் சரியை நெறியையும், தண்மலரிட்டுமுட்டா திறைஞ்சேன் என்றதால் கிரியையுடன்யோக நெறியுமடங்கிய ஆன்மார்த்த சிவபூசையையும் குறிப்பிட்டார். சிவமே பெறும் திரு என்றதால் ஞான நெறியைக் கூறி முடித்தார்.

தண் மலரிட்டு முட்டா திறைஞ்சேன் - தண் - குளிர்ந்த

❊ "சிவஞான சித்தியார் - சூத் - 8 - செய் 25"

மலர் - ஆன்மார்த்த சிவபூசைக்காக ஆகமங்களிலும் புட்ப விதி போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்ட பூக்கள். ***தண்மலர்*** என்று கூட்டி அன்றலர்ந்த புதிய குளிர்ந்த மலர் என்க. குளிர்ச்சி, காலைப்பொழுதில் அலர்ந்த புதிய நாண்மலரைக் குறித்து நின்றது. நிலப்பூ, நீர்ப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ எனும் நால்வகை மலர்களும் என்க.

நாண்மலரும் குளிர்ந்த நீரும் சிவபூசைக்கு இன்றியமையாதவையும் யாண்டும் எப்பொழுதும் எளிதிற் கிடைப்பனவுமாம். இவை இரண்டும் கூறியதால் இனம்பற்றி ஏனைய பூசைத்திரவியங்களாகிய சந்தனம், திருநீறு, பச்சிலை, நெய், பால், தயிர், தூபம், தீபம், கற்பூரம், திருவமுது, தேங்காய், பழம், தாம்பூலம் என்பனவும் கொள்க. "அவை கிடைக்காத நிலையிலும் பூவும் நீரும் கொண்டு கிட்டாதவற்றை அன்பினுல் நிரப்பிக் கொண்டு வழிபடுக" என்னும் சிவபூசையின் எளிமை கருதுக.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

" புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே"

(திருமந்திரம் - 1828)

" போதும் பெறுவிடிற் பச்சிலை
உண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறுவிடின் நெஞ்சுண்டன்
றேஇணை யாகச் செப்பும்
சூதும் பெறுமுலை பங்கர்தென்
றேணி புரேசர்வண்டின்
தாதும் பெறுத அடித்தா
மரைசென்று சார்வதற்கே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கழுமல மும்மணிக் கோவை - 12)

என்ற அருள்வாக்குக்கள் நினைக.

முட்டாது - குறைவு படாது. இதனைத் தண்ணீர் மலர் இறைஞ்சுதல் ஆகிய ஒவ்வொன்றுடனும் புணர்த்து, முட்டாது தண்ணீரிட்டு, முட்டாது மலரிட்டு, முட்டாது இறைஞ்சேன் என்றுரைக்க. ***முட்டாது தண்ணீரிட்டு*** - திருமுழுக்காட்டும் பொழுது நிறையத்தண்ணீரிட்டு வழிபடவேண்டும் என்றவாறு. ***முட்டாது இறைஞ்சேன்*** - வழிபாட்டில் எந்தக்குறைவும் இல்லாது வழிபடுதல். தண்ணீர் முதலிய வழிபாட்டுத் திரவியங்களில் அளவு குறைவானது ***திரவிய லோபம்;*** வழிபாட்டில் செய்யும் கிரியைகள் குறைவது ***கிரியா லோபம்;*** மந்திரங்கள் துதிப்பாடல்கள் ஆகியவை குறைவது. ***மந்திரலோபம்*** - இவ்வகைக்குறைபாடுகள் இல்லாது வழிபட வேண்டும் என்பது பூசைவிதி. அவற்றையே இங்குக் கூறினர்.

அவம் ; வீண்; பயனின்மை. சரியை முதலிய நெறிகளில் நின்று பிறவியை ஒழித்து வீடு பெறுதற்காகவே இந்த மானிடப் பிறப்பு இறைவனுல் அருளப்பட்டுள்ளது. அதில் ஈடுபடாத பிறவி வீண் என்றவாறு. அத்தகையோரைப் ***பாவிகள்*** என்று மேற்குறித்த திருமந்திரம் சாடுவது காண்க. முன்னம் போற்றித்திருவகவல் (12 -ல்) ***சித்தம்*** என்றதன் கீழுரைத்த சிவஞானசித்தியார் பாடல்கள் பார்க்க.

பவம் - சம்பவம் என்றதன் தலைக்குறை விகாரம். நிகழ்ச்சி என்ற பொருள்தரும் இச்சொல் ஈண்டு "வாய்ப்பு" என்ற பொருளில் நின்றது. அஃதாவது சரியை முதலிய நெறிகளில் நின்று சிவவழிபாடு செய்யாது பிறவியை வீணுக்கிக் கொண்டுள்ள என்னைச் சரியை முதலிய நெறிகளில் நின்று சிவ வழிபாடுபுரிந்து சீவன் முத்தநிலை யெய்தி உன் அடியவர்களாகிய ஏனைய சீவன் முத்தர் குழுவில் சேர்த்து இம்மையிலேயே வீட்டின்பம் நுகரவும், முடிவில் சாயுச்சியம் எய்தவும் அருள்பாலிப்பாயாக என்றவாறு ;

அருளு! - வியங்கோள் வினைமுற்று உகரச்சரியை பெற்று வந்தது! ***கண்டாய்!*** - முன்னிலை அசை.

தவம் - முதலிய செய்யா "அருவினையேன்" என்றதனுற் சதகம் நுதலிய "***பத்திவைராக்கிய விசித்திரம்***" பெற்ரும்." நின்திருவடிக்காம் பவமே அருள்" என்றதனுல் பதிகம் நுதலிய "***மெய்யுணர்தல்***" பெற்ரும்.

10. பரந்துபல் லாய்மல ரிட்டுமுட்
டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெற
லாமென்னு மன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை
யேத்த முழுவதுமே. சூ

(இ - ள்)

"மலர்வனங்கள் தோறும் படர்ந்து சென்று சிவ வழிபாட்டுக்குரியனவற்றுள் ஆராய்ந்து கொய்யப்பட்ட மலர் முதலியனவற்றைக் குறைவின்றிச் சொரிந்து நின் திருவடிகளிலே விண்ணப்பம் செய்து கொண்ட அனைத்தையும் தங்களுக்கே பெற இயலும் என்று கருதுகின்ற அடியவர்களின் நெஞ்சங்களில் வெளிப்படையாக நிற்கும் கள்வனே! நின் நெடிய திருவடிகளின் கண் உண்டாகின்ற உண்மையான பக்தி முழுவதையும் நின்னையே வழிபடுவதில் இடையறுது செலுத்தும் பேற்றை எனக்கும் அருள்புரிய வேண்டுகின்றேன்"

இத் திருப்பாடலை ஆற்றெழுக்காகப் பொருள் செய்க.

(வி - ரை)

பரந்து - பலதலங்களிற் சென்று - எனலுமமையும், நம் அடிகள் திருப்பெருந்துறையினின்றும் தில்லை வரையும் தலயாத்திரையாகப் பலதலங்களில் வழிபட்ட சரிதக்குறிப்பு.

பரந்து - வலம் வந்து என்றுரைப்பது திரு.முதலியாரவர்கள் உரை.

பரந்து - பரவித்துதித்து என்றும், வணங்குதற்குரிய முறையில் யாதொன்றும் சுருங்குதல் இன்றிப் பரக்குமாறு என்றும் ; பரபரப்பாக என்றும். பலவாறு உரை செய்தனர் முன்னுரையாளர்கள்.

பல் ஆய்மலர் - பல்மலர், ஆய்மலர் என்று பிரித்துக்கூட்டுக.

பன்மலர்களாவன - கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என்ற நால்வகைகளில் ஒவ்வொன்றிலும் பல விதமான மலர்கள்.

ஆய்மலர் - சிவ வழிபாட்டுக்காக ஆகமங்களிலும், புட்பவிதியிலும் விதிக்கப்பட்ட மலர்களில் பழையமலர் வண்டு கடித்தவை, சிதைந்தவை, எச்சில், மயிர், தூய்மையற்ற இடம் முதலியவற்றில் தொடக்குண்டவை என்பவற்றை நீக்கி ஆராய்தெடுத்த மலர்கள்.

மலர்களைக் கூறியதால் உபலக்கணத்தால் பச்சிலை, அறுகு,**வில்வம்,** திருத்துழாய் போன்றவையும் கொள்க. **திருத்துழாய்** சிவபெருமானுக்குரியதென்பதை;

திருச்சிற்றம்பலம்

கொய்ம் மலர்க் கொன்றை துழாய்வன்னி மத்தமுங் கூவிளமும்
மெய்ம்மலர் வேய்ந்த விரிசடைக் கற்றைவிண்
ணோர் பெருமான்
மைம்மலர் நீல நிறங்கருங் கண்ணியோர் பான் மகிழ்ந்தான்
நின்மல ளுட னிலயநெய்த் தானத் திருந்தவனே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை **4 - 89 - 5**)

என வரும் நம் அரசுகள் தேவாரத்தாலறிக.

முட்டாது - குறைவின்றி, முட்டாது மலரிட்டு; முட்டாது **இறைஞ்சி;** முட்டாது இரந்தஎல்லாம்; முட்டாது அன்பு என்று ஒவ்வொன்றனுடனும் கூட்டியுரைத்துக் கொள்க. முன்னர் "முட்டாது இறைஞ்சேன்" **(9) என்றதன்** கீழுரைத்தவை காண்க.

அடியே - வேறு கடவுளரை இறைஞ்சாது. உன்அடிகளையே இறைஞ்சி. ஏகாரம் - பிரிநிலை

எமக்கே - சிற்றடியார்களாகிய எங்களுக்கே இரந்த **எல்லாம் பெற** இயலுமாயின் பேரடியார்கள் பெறுவதில் வியப்பில்லை என்று **சிறப்புரை** காண்பர் கவியரசு அவர்கள்.

எல்லாம் - இம்மைக்கும், அம்மைக்கும் ஆகவேண்டிய **எல்லாம்** என்பர் திரு. பாரதியாரவர்கள்.

கள்வன் - கள்வனின் இயல்பு கரந்து நிற்றல். ஆனால் இந்தக் **கள்வன்** கரந்து நில்லாது பரந்து நிற்கின்றான்; ஆயினும் காணப்படாமையால் **கள்வன்** என்றார். வேண்டியவற்றை எல்லாம் கரவாது அளித்து **நிற்பதனால்** "கரந்து நில்லாக் கள்வன்" என்றார் எனலுமாம்.

"உயிரறிவில் ஒற்றித்து நின்றும் அவ்வறிவால் அறிதற்கு **அரிய** நிலையில் மறைந்திருத்தலின் இறைவனை கள்வன் என்றார்" என்பது **கதிர்மணி** விளக்கம்.

முன்னம், "சோரன்" (திருவண்டப் பகுதி 14) என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"விள்ளத்தா னென்றுமாட்டேன் விருப்பெனும்
வேட்கை யாலே
வள்ளத்தேன் போல நுன்னை வாய்மடுத் துண்டி டாமே
உள்ளத்தே நிற்றி யேனு முயிர்ப்புளே வருதி யேனும்
கள்ளத்தே நிற்றி யம்மா எங்ஙனங் காணு மாறே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4-76-7)

என வரும் அரசுகளின் அமுதவாக்கு நினைக.

அன்பருள்ளம் கரந்து நில்லாக் கள்வனே- என்றதற்கு "நேர் சென்று அன்பருள்ளத்தைக் கவர்ந்து கொள்ளும் கள்வன் என்றும், அன்பிலார் மாட்டுக் கரந்து சென்று, அவர் விழை பதங்களாய், அணியும் பொன்னும் மணியுமாய்க் காதற்குரிய தலைமக்களாய், அவர்நுகரும் நுகர்ச்சியாய், அன்ன பிறவுமாய் அவர் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளும் கள்வன்" என்று நயம்பட உரை வகுப்பர் திரு. பாரதியாரவர்கள்.

வார்கழல் - நீண்ட திருவடிகள். திருமால் தேடுந்தோறும் முடிவில்லாது நீண்டு கொண்டே சென்ற கழலாதலின் "***வார்கழல்***" என்றார். இஃது இங்குத் தானியாகுபெயராக நின்று காலையுணர்த்திற்று. கால் நீண்டு செல்லும்பொழுது அதிலுள்ள பாதமும் நீண்டு செல்லும். இவ்வுண்மையை;

திருச்சிற்றம்பலம்

பாதந் தனிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற ஏக பாதர்

ஓதத் தொலிமடங்கி யூருண் டேறி
யொத்துலக மெல்லா மொடுங்கியபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 -35 -2)

என்றது காண்க. "பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாத மலர்" **(164) என்று** பின்னர் நம் அடிகளே போற்றுவதும் காண்க.

நிரந்தரமாய் - தொடர்ந்து ; எப்பொழுதும் அருளாய்; ***முழுவதும்*** - இப்பொழுது சிறிதளவு தந்தாய்; தந்தருள்க என்றவாறு அன்பு முழுவதும்; காலம் முழுவதும்; வாழுநாள் முழுவதும் என்றுரைத்தார்களும் உளர். ஈண்டு ;

" யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி யாதின்பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி யன்பருக்கே பேரா னந்தக்
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்னைக்
கொடுத்துக் காட்டுந்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச் சிந்தை
செய்வாம்."

(பொருள் வணக்கம் -2)

எனும் தாயுமான சுவாமிகள் வாக்கை நினைக.

"அடியே இறைஞ்சி " - என்று பிரிநிலை ஏகாரம் புணர்த்ததால் உலகியலின்பங்களை நல்கும் பிற தெய்வ வழிபாட்டை விலக்கினார். **இதனால்** சதகம் நுதலிய பொருளாகிய **"பத்தி வைராக்கிய விசித்திரம்" பெற்றும் ;** "நின்னை ஏத்த முழுவதுமே" என்றதால் பதிகம் நுதலிய பொருளாகிய **"மெய்யுணர்தல்"** பெற்றும்.

11. முழுவதுங் கண்டவ னைப்படைத்
தான்முடி சாய்த்துமுன்னாள்
செழுமலர் கொண்டெங்குந் தேடவப்
பாலன்னிப் பாலெம்பிரான்

கழுதொடு காட்டிடை நாடக
மாடிக் கதியிலியாய்
உழுவையின் தோலுடுத் துன்மத்த
மேல்கொண் டுழிதருமே. எ

(இ - ள்)

"முன்னொரு காலத்தில் பிருதுவி தத்துவத்திலுள்ள அண்டங்கள் அனைத்தையும் படைத்த நான்முகனைத் தன் உந்திக் கமலத்தினின்றும் தோற்றுவித்த திருமால், இறைவனின் செழித்த தாமரை மலர்கள் போன்ற திருவடிகளைக் காணவேண்டும் என்ற உறுதியைத் தன் மனத்திற்கொண்டு, தலையைக் குனிந்து கீழுலகங்கள் எல்லாவற்றிலும் தேடியும் காணப்பெருதவாறு அப்பாற்பட்டவனாகிய எங்கள் சிவபெருமான், இவ்விடத்தில் பேய்க்கணங்களுடன் கூடிச் சுடுகாட்டில் கூத்தாடிப் புகலிடமற்றவனாய்ப் புலித்தோலை ஆடையாக உடுத்து மிகுந்த களிப்பை மேற்கொண்டு திரிவன்.

(விரை)

முன்னாள் - என்பதை முதலில் வைத்துப் பொருள் கொள்க. ***கண்டவன்***-படைத்தவன் ; நான்முகன். ***காண்டல்*** இலக்கணைச் சொல்லாக நின்று ஆக்குதலைக் குறித்தது.

முடிசாய்த்து - வெண்பன்றி வடிவில் இறைவன் திருவடிகளைக் காணப் பூமியை அகழ வேண்டி வந்ததால் திருமால் முடியைச்சாய்த்து அகழ்ந்தான் என்றார். திருமாலாலே காணமுடியாமையால் அயன் விண்பறந்தும் காணமுடியாமை கூறாது உய்த்துணர வைத்தார். அவன்மேல் நோக்கிப் பறப்பதால் முடி நிமிர்த்துப் பறந்தான் என்க.

ஒருவன் முடி குனிந்தது கீழான உலக போகங்களை வேட்டான் என்பதையும், மற்றொருவன் முடி நிமிர்ந்தது செருக்கையும் குறித்தன. இருவருக்கும் நேர்நோக்கமின்மையால் வெற்றி கிட்டவில்லை என்பது நயம்.

செழுமலர் - இஃது உவமையாகுபெயராகச் சிவபெருமானின் திருவடிகளைக் குறித்தது. பின்னரும் "சொற்கழிவு பாத மலர் (164) என்பது காண்க.

இதற்கு இவ்வாறன்றி "மிக்க மன எழுச்சி கொண்டு" என்றுரைத்தார். திரு. பாரதியாரவர்கள்.

தேட அப்பாலன் - தேடிச் சென்ற அவ்விருவருக்கும் அவன் அப்பாலனுனன். ஆனுல் அவன் என்னைத் தேடிக்கொண்டு மானிட வடிவில் திருப்பெருந்துறைக்கு வந்தான் என்றவாறு. அடிகளின் சரித வரலாற்றுக்கு அகச்சான்று.

இப்பால் - இந்த நிலவுலகத்தில் திருப்பெருந்துறையில் எனலுமாம்.

கழுதொடு - பேய்க்கணங்களுடன். முன்னம் "பேயாய்" (சிவபுராணம் 28) என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

காட்டிடை - ***காடு***-சுடு காடு, எல்லாம் அழிந்த இடம். ஊழிக்காலம் குறித்து நின்றது.

நாடகம் ஆடி - ஊழிக் கூத்தியற்றி. இது குணருத்திரர் தம் கீழுள்ள புவனங்களை ஒடுக்கும் ஊழிகுறித்து நின்றது. பேரூழிக்காலத்தில் பேய்க்கணங்களும் கேவல நிலையில் ஒடுங்கிவிடும் என்பது நினைக.

நாடகம் ஆடி - நடித்து எனலுமாம். விகாரமற்றவனுகிய தான் விகாரப்பட்டவன் போல நடித்து என்றவாறு.

கதியிலியாய் - பிறப்பில்லாதவனுக. ***கதி***-அடையும் இடம் என்று கொண்டு எல்லா உயிர்களும் வந்து அடையும் இடம் தானுவது அன்றித் தான் சென்று அடையுமிடம் ஒன்று இல்லாதவனுக எனலுமாம். இறைவன் யாண்டும் நிறைந்திருப்பவனுதலால் அவன் சென்று புதிதாக அடையும் இடம் ஒன்று இன்று என்றவாறு.

"சென்றிவன்ரு னென்றிற் சிவபூ ரணஞ்சிதையு
மன்றவன்ரு னென்றுமெனி லந்நியமாம்".

(உண்மை விளக்கம் - 49)

என்ற சாத்திரம் நினைக.

கதியிலியாய் - பேச்சிலனுகி என்ருர் திரு. பாரதியாரவர்கள்.

கதியிலி - போக்கற்றவன் என்ற பொருளும் காண்க.

உழுவையின் தோலுடுத்து. உழுவை- வேங்கைப்புலி. தாருகவன முனிவர்கள் ஏவிய புலியின் தோலே உடுத்த வரலாறு, இஃது இறைவனின் மறக்கருணையைக் குறித்தது. பட்டாடைகள் நிற்க அவற்றை விடுத்துப் புலித்தோலே அணிந்தான் என்ற பொருளும் காண்க.

உழுவை - புலி இனத்தில் வேங்கைப்புலி, சிறுத்தைப்புலி, வேட்டைச்சிவிங்கி, கழுதைப்புலி என்பவற்றுள் "புலி" என்று வாளா கூறின் அது வரிப்புலியாகிய வேங்கையையே குறிக்கும். ஈண்டு இறைவன் உரித்துடுத்தது வரிப்புலியின் தோலே. சிறுத்தைப்புலியின் தோல் போன்று நெய்த பரிவட்டத்தை அம்பலவாணருக்கு அணிவித்தல் இவ்வேறுபாடு உணராத பிழையான வழக்கு.

உன்மத்தம் மேற்கொண்டு- பெருங்களிப்பைத் தாங்கி. இஃது இறைவனின் எண்குணங்களில் ஒன்ருன "வரம்பில் இன்பமுடைமை" யைக்குறித்து நின்றது.

உன்மத்தம் - பைத்தியம்; பித்து; என மற்ருெரு பொருள் தோன்றுதலும் பெரியபுராணத்தில் தடுத்தாட் கொண்ட வரலாறும் காண்க. "ஊமத்தம் பூவைத் தலையில் சூட்டிக்கொண்டு" என்ற பொருளும் காண்க.

உழிதரும் - சுழலும், திரியும், இஃது இறைவன் யாண்டும் நிறைந்துள்ள வியாபகத்தன்மையைக் குறித்து நின்றது.

இந்தத்திருப்பாட்டின் பின்னிரண்டு அடிகள் இரட்டுற மொழிதலால் இறைவனை நிந்திப்பது போலப்புகழ்வதாக அமைந்துள்ளன. இவ்வித உத்தியை வடமொழியில் "***நிந்தாஸ்துதி***" என்பர்.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமுங்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 3 - 54 - 2)

என்ற ஆளுடைய பிள்ளையார் அமுதவாக்கும் அதனை விளக்க வந்த;

திருச்சிற்றம்பலம்

"அரிய காட்சியர் ரென்பதவ் வாதியைத்
தெரிய லாநிலே யாற்றெரி யாரென
உரிய வன்பினிற் காண்பவர்க் குண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள் பேசினுர்"

" ஆயி னும்பெரி யாரவர்" என்பது
மேய விவ்வியல் பேயன்றி விண்முதற்
பாய பூதங்கள் பல்லுயி ரண்டங்கள்
ஏயும் யாவும் இவர்வடி வென்றதாம்"

" பின்பு மாரறி வாரவர் பெற்றியே
என்ப தியாருணர் வானுஞ்சென் றெட்டொணு
மன்பெ ருந்தன்மை யாரென வாழ்த்திஞர்
அன்பு சூழ்சண்பை யாண்டகை யாரவர்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருஞானசம்பந்த நாயனுர் புராணம் 825 - 828)

என்ற சேக்கிழார் பெருமான் திருப்பாடல்களும் அவற்றுக்குச் சிவக் கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் விளக்கமும் சிந்திக்கத்தக்கன.

திருமால் தேட அப்பாலன் - இந்த வரலாறு முன்னம் கீர்த்தித்திருவகவல் 35- ல் "அளவறி வொண்ணுன்" என்றதன் கீழுரைத்தாம்; ஆண்டுக்காண்க.

உழுவையின் தோலுடுத்த வரலாறு - இந்த வரலாறு முன்னம் திருவண்டப் பகுதி 32 -ல் "கானப் புலியுரி அரையோன்" என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக்காண்க.

இத் திருப்பாடலில் திருமால் தேடியுங் காணுமையால் அயன்மால் முதலியோரை வழிபடுதலே விலக்கும் ***"பக்தி வைராக்கிய விசித்திரம்"*** ஆகிய சதகம் நுதலிய பொருள்பெற்றும். சிவபரத்துவம் நிலேநாட்டப் பெறுவதால் பதிகம் நுதலிய பொருளாகிய ***"மெய்யுணர்தல்"*** பெற்றும்.

12 உழிதரு காலும் கனலும்
புனலொடு மண்ணும்விண்ணும்
இழிதரு காலம்மெக் காலம்
வருவது வந்ததற்பின்
உழிதரு காலத்த வுன்னடி
யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை
காத்தெமைக் காப்பவனே அ

(இ - ள்)

அலைகின்ற காற்றும், சுடுகின்ற நெருப்பும் குளிர்கின்ற நீரும், அனைத்தையும் தாங்கி நிற்கும் திண்மையுள்ள மண்ணும், இவை நான்கிற்கும் இடம் கொடுக்கின்ற விசும்பும் முறையே ஒன்றனுள் மற்றொன்று ஒடுங்குகின்ற பேரூழிக் காலத்தின் பின்பும் திருக்கூத்தியற்றும் தந்தையே! உன் அடிமையாகிய யான் செய்த வல்வினைகளைக் கழிக்கின்ற காலம் எப்பொழுது வருவது? கால தத்துவத்தின் தலைவனுமாகி என் வல்வினைகளைக் கழித்தபின் சீவன் முத்த நிலையை அடைந்த என்னையும் என்போன்ற அடியார்களையும் புதிய வினைகள் பற்றாமல் காப்பாற்றுகின்றவனே.

இரண்டாம் அடியில் "வருவது எக்காலம் என்பதை" எக்காலம் வருவது என மாற்றிப் பாடலிற் ஈற்றில் அமைத்து பொருள் காண்க.

(வி - ரை)

ஐம்பூதங்களின் இயல்புகள் பற்றி முன்னம் திருவண்டப்பகுதி 22 - 26 -ல் விளக்கியவற்றையும் ஆண்டு எடுத்துக் காட்டிய உண்மை விளக்கப் பாடலையும் காண்க.

உழிதரு கால் - கால் = காற்று. காற்றுக்கு அதன் இயல்பாகிய திரிகின்ற குணத்தைக் கூறியதால் ஏனைய நான்கு பூதங்களுக்கும் அவ்வவற்றின் குணங்களைப் புணர்த்துரைத்தாம்.

புனலொடு. புனல் - நீர். மக்கள் உயிர் வாழ இன்றியமையாத உணவுப்பொருள்களை விளைவிப்பதற்கும் விளைந்த பொருள்களைச் சமைப்பதற்கும் ; சமைத்த உணவை உண்ணும்பொழுது உதவியாகப்

பருகுதற்கும் ; உண்ட உணவு செறிப்பதற்காகப் பின்னர்ப் பருகுதற்கும்; உடலேயும், உடைகளேயும், உறைவிடத்தையும் தூய்மை செய்து நோயற்று வாழ்வதற்கும் உதவுவது நீராகும். இவை, தனி மனித வாழ்வில் நீர் நல்கும் உதவிகள். இனி நாட்டின் தொழில்வளர்ச்சிக்கு மின்ஆற்றல் உற்பத்தி செய்யவும், தொழிற்சாலேகளில் வேதியற் பொருள்களே மாசு கழுவுவதற்கும் புகை வண்டி கப்பல் முதலியவற்கும் போக்குவரத்து நிகழவும் பாதுகாப்புப் படைகளுக்கும் தண்ணீர் இன்றியமையாதது. ஏனைய நான்குபூதங்களினும் நீர் சிறந்ததாதலின் இத்துடன் ஒடு உருபு புணர்த்துச் சிறப்பாகப் பிரித்துக் காட்டினர். முன்னம் கீர்த்தித்திருவகவல் (35)-ல் "அரியொடு" என்றதன் கீழுரைத்த இலக்கணக் குறிப்புக் காண்க. கங்கை எமுனே போன்ற நதிகள் பெண் தெய்வங்கள் பெயர் தாங்குவதும் அவை இறைவன் திருவருளாகவும் உமையம்மையின் உருவகமாகவும் போற்றப்படுதலும் நினேக. உமையம்மையே மழையாகப் பொழிவதை;

திருச்சிற்றம்பலம்

"தானே இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே வடவரைத் தண்கடற் கண்ணே"

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 1148)

என்ற திருமூல நாயனர் திருவாக்கும் அதற்குத் திரு. முதலியார் அவர்கள் உரையும் காண்க.

புனலின் இத்துணேச் சிறப்புக்களேயும் உளத்திற் கொண்டதாலன்றே பொது மறையும் கடவுள் வாழ்த்தின் பின்பு "வான் சிறப்பு" என்ற அதிகாரத்தை வைத்துப் போற்றிற்று.

காலும் கனலும் புனலும் - பேரூழிகள் புயல், நெருப்பு, வெள்ளம், நிகழ்வதால் ஒடுக்கமுறைப் பற்றி மண், புனல், கனல், கால், வான் என்று கூறுது, இவ்விதம் வரிசைப்படுத்து மொழிந்தார்.

ஒடுக்க முறையில் பஞ்ச பூதங்கள், அவை தோன்றிய தன்மாத்திரைகளில் தனித்தனி அடங்கும்; தன்மாத்திரைகள் தனித்தனியே

பூதாதி அகங்காரங்களில் ஒடுங்கும்; பூதாதி யகங்காரம் புத்தி தத்துவத்தில் ஒடுங்கும்; புத்தி தத்துவம் குணதத்துவத்தில் ஒடுங்கும் ; குணதத்துவம் பிரகிருதி மாயையில் ஒடுங்கும்; பிரகிருதிமாயை கலை என்ற தத்துவத்தில் ஒடுங்கும்; கலை, காரிய மாயையில் ஒடுங்கும்; காரிய மாயை அசுத்த மாயையில் ஒடுங்கும்.

வந்ததற்பின் - பேரூழிக்காலம் வந்த பின்பும் - என உம்மை விரித்துக் கொள்க. சிவபெருமானின் நித்தியத்துவத்தையும் திருவைந் தொழிலின் இடையறு நிகழ்ச்சியையும் உணர்த்தியவாறு, உலகங்களைப் படைப்பதற்காக இறைவன் கூத்தியற்றுகின்றான்; அது படைப்புக்கூத்து. படைக்கப்பட்ட உலகங்கள் உரியகாலம் வரை நிலைபெறக் கூத்தியியற்றுகின்றான்; அது திதிக்கூத்து. உரிய கால எல்லையில் உலகங்களை ஒடுக்குவதற்காக கூத்தியற்றுகின்றான்; அது பேரூழிக்கூத்து. இவை மூன்றும் உலகங்களுக்காக இயற்றப்படுவன. உயிர்களுக்கு மலபரிபாகம் வர இயற்றுவது திரோதானக்கூத்து, அவற்றுக்கு வீட்டின்பம் நல்க இயற்றுவது திருவருட்கூத்து இவை இரண்டும் உயிர்களை நோக்கி இயற்றப்படுவன.

ஈண்டுப் பின்பும் என்று விரித்துக் கொண்டது முந்தைய மூன்று கூத்துக்களை இயற்றிய பின்பும் மகா சங்காரத்தின் பின்புள்ள கேவலத்தில் கிடக்கும் ஆன்மாக்கள் புனருற்பவத்துக்குத் தகுதியாகும் வண்ணம் கேவலத்தில் இயற்றுகின்ற சூட்சும ஐந்தொழிற் கூத்துக் குறித்தவாறு.

உழிதருகால் அத்த! - நடனத்தில் இயங்கும் திருவடியைக் கொண்ட தந்தையே! முன்னம் சிவபுராணம் (89) -ல் "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே " என்று கூறியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க.

வல்வினையைக் கழிதரு காலம் - உயிர்கள் செய்யும் வினைகள் ஆகாமியம் எனப் பெயர் பெறும். அவை வினைகளின் முன் இருப்பாகிய சஞ்சிதத்தில் சேர்ந்து நுகர்ச்சிக்குப் பக்குவப்படுத்தப்பட்டுப் பிராரத்தமாக வரும். ஆகாமியம் செய்த உயிர்களுக்கு உரிய உடல்கள் அழிந்தால் மீண்டும் பிறப்பெடுக்கும் பொழுது சஞ்சித வினையில் நுகர்ச்சிக்குப் பக்குவமான வினைகள் பிராரத்தம் என்ற பெயரால் தனியே முகந்தெடுக்கப்பட்டு உயிர்கள் அப்பொழுது எடுக்கும் பிறவியில் நுகர்வதற்காக அளிக்கப்படும். பிராரத்த வினையின் பயன்களை உயிர் நுகர்வதற்கான காலம் அந்தப் பிறவியில் அந்த உயிருக்கு அந்த உடலுடன் கூடி வாழும் ஆயுளாக வரையறுக்கப்படும்.

பிராரத்த வினையின் பயனை நுகர்ந்து கழிக்கும் செயல்களின் வடிவிலேயே புதிய ஆகாமிய வினைகள் தோன்றிச் சஞ்சிதத்தில் கூடிக் கொள்ளும். ஓருயிர் அப்போது தாங்கிய உடல் அழிவதாகிய மரணமடைந்தபின் அதன் வினைகள் முற்றிலும் அவ்வுயிரின் புரியட்டக உடம்பிலுள்ள புத்திதத்துவத்தில் தங்கி வரும் பிறவிகளில் நுகர்ச்சிக்கு வரும். பேரூழிக்காலத்தில் புத்திதத்துவமும் அது தங்கிநிற்கும் புரியட்டக உடலும் அவ்வுடலைத் தோற்றுவிக்கும் குண தேகமும், பரம்பரையாக மாயையில் ஒடுங்கும். அப்பொழுது புத்தி தத்துவத்திலிருக்கும் வினைகள் காரணகன்மத்தில் ஒடுங்கும். காரணகன்மம் மாயையில் விரவும். மாயை சிவபெருமான் திருவடிகளில் அவன் வைப்புச் சக்தியாக நிற்கும். மீண்டும் புனருற்பவத்தில் குறிப்பிட்ட உயிருக்குப் புதிய காரண கஞ்சுக குண புரியட்டக சரீரங்கள் பரம்பரையாக மாயையினின்றும் தோன்றும். அவ்வாறு தோன்றிய அந்தக்கரணங்களில் ஒன்றுன புத்தியில் முன்வினை தங்கி நுகர்ச்சிக்கு வரும். இவ்வாறு முடிவில்லாமல் உயிரைத் தொடரும் வினை, உயிரின் தவம் முதலிய முயற்சிகளால் மட்டும் கழிவதன்று. ஆதலின் அதனை வல்வினை என்ருர்.

இதனை ;

திருச்சிற்றம்பலம்

"மலம்செய்த வல்வினை நோக்கி உலகை வலம்வருமப்
புலம்செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேற்
சலம்செய்த நாரைப் பதிஅரன் றன்னைக் கனிதரவே
வலம்செய்து கொண்ட மதக்களி றேஉன்னை
வாழ்த்துவனே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 11-31-8)

என்று நம் திருநாரையூர் நம்பிகளும் நவிலுதல் காண்க.

உயிரின் பக்குவம் நோக்கி இறைவன் குருவாக நின்று தீட்சை தந்து சஞ்சிதத்தை அழிப்பன். அதன்பின் உயிர் சீவன்முத்த நிலையை எய்திச் சிவ நினைவிலேயே சஞ்சரிப்பதால் பிராரத்தம் உடலூழாய்க் கழியும். ஆகாமியம் ஏருது; அந்த நிலையையே ஈண்டுக் கழிதருகாலம் என்ருர். வினைகளை நீ வந்து கழிக்கும் காலம் என்று பிறவினையாக்கிப் பொருள் கொள்க.

இழிதருகாலம், உழிதருகாலம், கழிதருகாலம் என்பன முறையே படைத்தல், காத்தல், அழித்தல்களைச் செய்யும் காலத்தைக் குறித்தன என்றார் திரு. G.V. பிள்ளை அவர்கள்.

உன் அடியேன் - நான் உன் அடிமையாதலின் என் ஆண்டானாகிய நீ வினையின் தொடர்ச்சியினால் பல ஊழிகள் வருந்தும்படியோ அல்லது இந்த ஊழியின் முடிவுவரை வருந்தும்படியோ விட்டு விடுதல் உன் தலைமைக்கு ஏற்புடைத்தன்று. இப்பொழுதே வீடுபேறு நல்கியருளுக; என்பது குறிப்பு. தீவிரதர பக்குவம் குறித்தது.

காலமுமாய் - காலதத்துவம் ஒரு சடப்பொருள். இறைவனுக்கு அஃதோர் துணைக்காரணமாக நின்று அவனால் இயக்கப்படுவது. அஃது இறப்பு, நிகழ்வு, எதிர் என மூன்று பகுதிகளாக நிற்பது. இறைவன் அவற்றை இயக்குவதால் அவனையே காலம் என்பது உபசாரம். சொரூப நிலையில் ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலான். காலமுமாய் இழிவு சிறப்பும்மை.

சிவபெருமான் மூன்று காலமுமாய் நிற்பதை ;

திருச்சிற்றம்பலம்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
****நெருநலையாய் இன்றாகி நாளை யாகி***
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 94 - 1)

எனவரும் அரசுகளின் அமுத வாக்காலறிக.

அவைகாத்து - வினைகள் அழிக்கப்பட்ட சீவன்முத்த நிலையில் மூன்றுமலங்களும் முற்றிலும் வலிகுன்றி வாசனாமலம் என்ற பெயருடன் பெருங்காயம் வைத்த குப்பியில் பெருங்காயம் முற்றிலும் செலவானபின்பும் பெருங்காய வாசனை இருப்பது போல உயிர்மாட்டு

* நெருநல் - நேற்று

நிற்கும். அவை மேலும் பிறவிக்கு வித்தாகாமல் சீவன் முத்தரின் அந்தப் பிறவியுடன் கழியும். எனினும் சீவன் முத்தர்கள் ஒரொருகால் உலக நினைவுக்கு வருவரல்லரோ? அந்நிலையில் அவர்கள் சிவவேடத்தையும் திருக்கோயிலையும் சிவபெருமானாகவே வழிபட்டுக்கொண்டு சீவன் முத்தர்கள் கூட்டத்துடன் கலந்தே இருக்க வேண்டும். அல்லாக்கால் வாசனா மலத்தால் மீண்டும் பிறவியெடுக்க நேரும். அவ்வாறு புதிய வினைகளை வாரமல் காத்து என்றவாறு.

எம்மைக் காப்பவனே - என்னையும் என்போன்று சீவன் முத்த நிலையை எய்திவிட்ட பிற அடியார்களையும் காப்பவனே என்றவாறு.

இத் திருப்பாட்டில் அடியேன் செய்த வல்வினையைக் கழிதருகாலம் எக்காலம் வருவது என்று வினவி ஏங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். உழிதருகால் அத்த! என்று சிவபெருமானின் நித்தியத்துவம் வழுத்தப்படுவதால் பதிகம் நுதலிய "***மெய்யுணர்தல்***" பெற்றும்.

13 " பவனெம் பிரான்பனி மாமதிக்
கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரானென்னை யாண்டுகொண்
டானென் சிறுமை கண்டும்
அவனெம் பிரானென்ன நானடி
யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்தெரி யும்பரி
சாவ தியம்புகவே" கூ

(இ - ள்)

உலகங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவனும், மிகுந்த தட்பமுள்ள பிறையை முடிமாலையாக அணிந்தவனும், தேவர்களுக்கு முதல்வனும், இன்ப வடிவினனுமாகிய எங்கள் தலைவனாகிய சிவபெருமான், என் சிறுமையை அறிந்திருந்தும் என்னைத் தன் அடிமையாக ஏற்றுக்கொண்டான். அத்தகைய பெருமான் எனக்கு ஆண்டானாகவும் சிறிய நான் அவனுக்கு அடிமையாகவும் உள்ள இந்த ஆண்டான் அடிமைத் தொடர்பின் இயல்பே, எங்கள் சிவபெருமான் பெருமையை அறிந்து கொள்ளும் இயல்பாக இவ்வுலகம் பாராட்டியுய்வதாக.

(வி - ரை)

பவன் - "பவாய தேவாய நம" என்பது முதலாகவுள்ள சிவநாமங்கள் எட்டனுள் முதலாக வைத்து வழுத்தப்படுவது.

இத் திருநாமத்தை ;

திருச்சிற்றம்பலம்

சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் *திரிந்துபன் னாளழைத்தால்*
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 11 - 2 - 9)

எனவரும் நம் அரசுகள் தேவாரத்தும் காண்க.

உமையம்மை ***பவானி*** என்று பெயர் பெறுதலு நினைக.

பவன் - திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் இந்தச் சொல்லுக்கு Lord of the air என்று குறிப்புரை தந்தார். "***பவனன்***" என்பது வாயு தேவனைக் குறிக்கும். "***பவன்***" என்ற சொல்லுக்கும் "***பவனன்***" என்ற சொல்லுக்கும் உள்ள பொருள் வேறுபாட்டை அவர் அறியாததால் வந்த பிழை அந்தக் குறிப்புரை.

எம்பிரான் எல்லா உயிர்களுக்கும் தலைவன். ***பனிமாமதிக்கண்ணி*** - என்று மாற்றி கொள்க. ***மா***-மாண்பு எனலுமாம். மிகுந்த இழி செயல் செய்த தண்கதிரோன் மிக உயர்ந்த இடமாகிய இறைவனின் சடைமுடியில் இடம் பெற்ற மாண்பு இறைவன் தன்னிடம் புகலடைந்த உயிர்களைக் காத்து உயர்வளிக்கும் தண்ணருள் குறித்து நின்றது. நம் அடிகள் தம்சிறுமை கண்டும் மிகப்பெரியோனாகிய இறைவன் தம்மை அடிமையாக ஏற்றுக் கொண்டதை இங்ஙனம் உடம்பொடு புணர்த்தோதினார்.

தக்கன் சாபத்துக்கெதிராக இறைவன் மதிசூடி வெண்கதிர்ச் செல்வனைக் காத்தது சிவபெருமானின் முதன்மையின் சின்னமாகவும் அவனது பேரருளுடைமையைக் காட்டுவதாகவும் உள்ளது.

பனிமாமதிக் கண்ணி யணிந்த வரலாறு - முன்னம் (8-ல்) "தக்கன் வேள்வி செய்த வரலாறு" என்ற தலைப்பின்கீழ் விளக்கினும். ஆண்டுக்காண்க.

விண்ணோர் பெருமான் - சிவபெருமானே அமரர்கள் அனைவருக்கும் கடவுள் என்பதை மேற்குறித்த தக்கன் வேள்வி செய்த வரலாற்றில் காண்க.

சிவன் எம்பிரான். சிவன் - முன்னம் சிவபுராணம் (12-ல்) "சிவன்" என்றதன் கீழுரைத்தவை காண்க. அவன் அடியார்களுக்கு மட்டுமன்றித் தன்னை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் தலைவனுவன்.

என்சிறுமை கண்டும் - உலகில் உயர்ந்தமக்கள் தம்மை அண்மியவரிடம் சிறுமைக் குணங்கள் இருப்பின் அவர்களை விலக்குவர். ஆயினும் இறைவன் உயிர்களிடம் சிறுமைக் குணங்கள் உள்ளன என்று அறிந்தும் அவ்வுயிர்களை ஏற்று உய்வித்தல் அவனது பேரருட் டிறத்தாலாவது.

அவன் - குருவடிவில் வந்து திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்ட அவன் என்று பண்டறி சுட்டாகச் சிவபெருமானின் பெருமையை விளக்கி நின்றது. நம் அடிகளின் சரித நிகழ்ச்சி பற்றி அகச்சான்றுமாம்.

இப்பரிசு - யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடைய அவன் யாவர்க்கும் கீழாம் சிறுமையுடையவன் என்று என்னை அறிந்திருந்தும் ஆண்டுகொண்ட இந்தத் தன்மை எனலுமாம். இகரச்சுட்டு அவன் ஏற்றமும் ஆன்மாவின் தாழ்வும் குறித்து நின்றது.

புவன் - உலகம் என்னும் பொருள்தரும் **புவனம்** என்ற சொல் அம்முச் சாரிகை கெட்டு **புவன்** என்று நின்றது. இஃது உலகிலுள்ள மக்களைக் குறிக்கும்.

பெருமை மிக்க சிவபெருமான் சிறுமை நிறைந்த என் தாழ்வை அறிந்திருந்தும் என்னை அவன் ஆட்கொண்ட இந்த அருளிப்பாடு ஒன்றே அவன் பெருமையை விளக்கும். ஆதலின் உலக மக்கள் இந்த நிகழ்ச்சி ஒன்று கொண்டே அவன் பெருமையை அறிந்து அவனை வழிபட்டுய்வார்களாக என்றவாறு.

தெரியும் பரிசு - இதற்கு இவ்வாறின்றி "உன்னை நான் எம்பிரான் என்றும், என்னை உன் அடிமை என்றும் உலகமக்கள் விளக்கமாக

அறிந்துகொள்ள யான் என்னசெய்து எப்படி வாழ வேண்டும் என்பதைச் சொல்வாயாக" என்று விளக்குவர் கவியரசு அவர்கள்.

புவன். பு - தோன்றியவன். தானே தோன்றியவன், சுயம்பு, ஒளிமயமானவன், பெரு வெளியானவன் என்றெல்லாம் பொருள் கொண்டனர் முன்னுரையாளர்கள்.

"***புவன்*** - என்பது வேள்வித் தீயை உணர்த்தும் என்று எசுர் வேதம் கூறும். ஆதலின் அங்கி வடிவாக நின்று வேள்வியுணவை ஏற்று அருள்புரிபவன்" என்று பொருள் கோடலுமாம் என்பது கதிர்மணி விளக்கம்.

எம்பிரான் - பிரான் - "பெருமான்" என்பதன் மருவு. பெருமையை ஆள்பவன் என்றவாறு.

பிரான் - வள்ளல்; உபகாரி; என்பன கழக வெளியீட்டில் காணும் விளக்கங்கள்.

இத் திருப்பாடலில் சிவபெருமானின் அருளிப்பாட்டை உலகமக்கள் வழுத்தியுய்ய வழிகூறுவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும்; மிக உயர்ந்த இறைவன் மிகத் தாழ்ந்த தம்மை அடிமை கொண்டது கூறியதால் பதிகம் நுதலிய "***மெய்யுணர்தல்***" பெற்றும்.

14 புகவே தகேனுனக் கன்பருள்
யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட
தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப்
பணித்தியண் ணாவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை
நீசெய்த நாடகமே. ***க0***

(இ - ள்)

துலையிடப்படாத என் மாணிக்க மணியே! நான் உன் அடியார்கள் திருக்கூட்டத்துடன் கள்ளத்தனமாக நுழைவதற்குங் கூடத் தகுதியற்றவன்; அங்ஙனமிருந்தும் நீ என்னை உன் அடிமையாகக் கொண்டது உன் பேரருளுடைமைக்குத் தகுந்த செயல்தான்; எத்தகைய அன்பர்களையும் நீ மிக உயரச் செய்கின்றாய்; மிக உயர்ந்த தேவர்களையும் மிகத்தாழச் செய்கின்றாய்; அணுக இயலாத அமுதம் போன்ற எங்கள் தலைவனே! நீ, இங்ஙனம்

இயல்புக்கு மாருகச் செய்த கூத்தின் தன்மைதான் எத்துணை வியக்கத்தக்கது! இது சிரிப்பதற்கே தக்கதாகும்.

(வி - ரை)

என் பொல்லாமணியே! யான் உனக்கு அன்பருள் புகவே தகேன்; என்னை ஆட்கொண்ட தன்மை உனக்குத் தகவே; எப்புன்மையரை மிக உயர்த்தி; விண்ணோரைப் பணித்தி; அண்ணா அமுதே! எம்பிரான்; நீ செய்த நாடகம் என்னே? நகவேதகும்" என்று அன்னுவயப் படுத்திப் பொருள் கொள்க.

பொல்லாமணி - பொள்ளாமணி என்பதன் போலி. பொள்ளுதல் வெட்டி எடுத்துப் பட்டை தீட்டித் துளையிடுதல். மணியை வெட்டி எடுத்துச் சாணையில் பட்டை தீட்டுவதால் அதன் ஒளி மிகுந்து, விலைமதிப்பு மிக உயரும். இறைவன் இயல்பாகவே பாசங்களினீங்கியவன்; ஆதலின் மணிக்குப் பட்டை தீட்டி ஒளியைச் செயற்கையாய் கூட்டுதல் போல் இவனுக்கு செயற்கையாகப் பெருமை கூட்டுதல் வேண்டாம். அவன் பதிப்பொருளாகிய ஒருவன்; ஆதலின் பிறிதொன்றினின்றும் வெட்டி எடுக்கப்படாதவன் என்றவாறு. மணிகளை மாலைகளாகக் கோக்கத் துளையிடுவர். அதனுல் அம்மணிகளின் விலை மதிப்புச் சிறிது குறையும். இறைவன் தனக்கு ஒப்பாகத் தன்னுடன் கோக்கப்படுவார் இல்லாதவன்; ஆதலின் அவன் துளையிடப்பட்டு அதனுல் மதிப்புக் குறைக்கப் படாதவன் என்றவாறு.

மணி - என்றது ஈண்டு நவமணிகளுள் செந்நிறமுள்ள மாணிக்கமணியைக் குறித்தது. இறைவனுக்கு நிறம் பற்றி வந்த பண்புவமம்.

உனக்கு அன்பர் - உன்னிடத்து அன்புள்ளவர்கள். நான்காம் வேற்றுமை நட்புத் தொடர்ப் பொருளில் வந்தது.

புகவே - நுழைவதற்குங்கூட என்று இழிவு சிறப்பும்மை விரித்துக் கொள்க. **புகுதல்** - உரியவர் அழைக்காமலும் விரும்பாமலும் உள்ள இடத்தில் கள்ளத்தனமாக நுழைதல். அடுக்களையில் புகை கிளம்புகின்றது. அது நம் மற்றைய அறைகளிலும் பரவினுல் அங்குள்ள நமக்கு இடையூறுவிளைக்கும் என்றுகருதி அதுவராவண்ணம் கதவுகளையும் சாளரங்களையும் நாம் நன்கு மூடிய பின்பும் சன்னல் கதவிலுள்ள ஏதேனும்

ஒருசிறு துளேயின்வழி புகை வந்துவிடுதை நாம் புகை புகுந்து விட்டது என்கின்றோம்.

அவ்வாறே அழைக்கப்படாமலும் மீறி வருவதைத் தடை செய்தும் உள்ள இடத்தில் கள்ளத்தனமாக நுழைதல் புகுதலாம். வீட்டினுள் நாய் புகுந்து விட்டது. திருடன் புகுந்து விட்டான் என வழங்குவது காண்க.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

மெய்யெலா நீறு பூசி வேணிகண் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் மெய்ப்பொருளுயனுர் புராணம் -7)

எனவரும் சேக்கிழார் பெருமான் செம்மொழி நினைக.

ஈண்டு நம் அடிகள் இறைவனை நோக்கி "உன் அடியார்கள் கூட்டத்துள் நான் திருட்டுத் தனமாக நுழைவதற்குக் கூடத் தகுதியற்றவன்" என்கின்ருர்.

தகவே - உன் அன்பர் குழுவில் புகுவதற்குக் கூடக் தகுதியற்ற என்னை நீ உன் அடிமையாக ஏற்றுக் கொண்டாய் ; அது பேரருளுடைய உன் பெருமைக்குத் தக்கது தான் என்றவாறு. ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. மிகப் பெருமையுடையாரைச் சார்ந்த சிறுமையுடையாரும் பெருமையடைவர் ; அதனுல் ஆட்கொண்டவரின் பெருமை சற்றும் குறைவதில்லை என்பதறிக. இந்த உண்மையை;

பெயர்வினை சேரி னிடையுரி யாங்கும் பிறங்கெழில்வாய்ந்
தயர்வினை யெய்தா தினிதிய லாநிற்கு மாரணங்கே
மயர்வினை தீர்த்தருள் வீராட்ட கர்சத்தெம் மானருளால்
உயர்வினை யேநுங் குலமென்று மெம்மா லுறுவதுவே

(தணிகைப்புராணம் -களவுப்படலம்-228)

என்று நம் கச்சியப்பமுனிவர் உயிரோவியம் தீட்டுவதில் காண்க.

தகவே - எதிர்மறை குறித்த வினுவாகக் கொண்டு உன் அன்பர் குழுவுள் புகுதற்கும் தகுதியற்ற என்னை நீ உன் அடிமையாக

ஏற்றுக்கொண்டது உன் பெருமைக்குத்தகுமா? தகாது. என்றுரைக்கவும் நின்றது.

எப்புன்மையரை-எப்புன்மை-புன்மைகள் எல்லாவற்றிலும் மிகத் தாழ்ந்தபுன்மை. எப்புன்மை எல்லாம்புன்மை, எல்லாவகையாலும் புன்மை. எல்லாம் + பொருளும் = எப்பொருளும் என்றுற் போலக் கொள்க.

மிகவே உயர்த்தி - மிகவே என்பதைப் புன்மையரை மிகவே உயர்த்தி; விண்ணோரை மிகவே தாழ்த்தி என ஈரிடத்தும் புணர்த்துரைக்க. புன்மைச் செயலினர் மேலைத்தவத்தால் மலபரிபாகம் எய்தின் அவர்களை இறைவன் ஏற்றருளுதலும்; இந்திரன் முதலியோர் பெரும்பதங்களில் இருப்பினும் செருக்குற்று இயங்கின் அவர்களை இறைவன் தாழ்த்து ஒறுத்தலும் முறையே திருவிளையாடற்புராணத்தில் நாரைக்கு முத்தி கொடுத்த படலத்திலும், இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலத்திலும் காண்க.

அண்ணு - அணுக முடியாத; இதை விளியாகக் கொண்டு; தந்தை மூத்தவன் எனலுமாம்.

அமுது - இனிமை பயப்பது; சாவாமருந்து. சிவபெருமான் இவை இரண்டுமாதல் நினைக.

நாடகம் - நகைச்சுவை தரும் விளையாட்டு. பண்ணை என்பர் தொல்காப்பியர். "இஃது என்ன கூத்து" என்று கூறி நகையாடும் உலக வழக்குக் காண்க. இதை விநோதக் கூத்து என்றுர் திரு. முதலியார் அவர்கள்.

மண்ணில் வாழும் மக்களை விண்ணில் காட்டுதலும்; விண்ணில் வாழும் தேவர்களை மண்ணிற் காட்டுதலும் நாடகத்தில் நிகழ்வன. அவ்வாறே இழிந்த என்னை உன் அடிமையாக ஏற்று உயர்த்தியது நீ என்பொருட்டுச் செய்த நாடகம் எனலுமமையும் என்று உரைப்பது கதிர்மணி விளக்கம்.

நகவே தகும் - பார்த்தவரும் கேட்டவரும் நகையாடு தற்கே உரியது.

இத்திருப்பாடலில் உனக்கன்பருள் யான் புகவே தகேன் என்றதால் சதகம் நுதலிய பொருளாம் "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும்; பக்குவான்மாக்கள் கீழ்நிலையில் இருப்பினும் இறைவன் அவர்களை மிக உயர்த்துவதும்; தன்முனைபுள்ளோர் விண்ணோர்களாயினும் அவர்களை

மிகவும் தாழச் செய்வதும் கூறியதால் பதிகம் நுதலிய பொருளாகிய "**மெய்யுணர்தல்**" பெற்ரும்.

உ. அறிவுறுத்தல் :

மாயேயங்களாகிய பாசங்களினின்றும் நீங்கி என்றும் உள்பொருளாகிய மெய்ப்பொருளே உணர்ந்த நம் அடிகள் அப்பொருளே அடையத் தமக்குத் துணேபுரியவேண்டிய மனம் அவ்வாறு துணே புரியாமல் அதற்கு எதிர்மறையான உலகியற் செயல்களில் ஈடுபடுவதைக் கண்டார். இல்வாழ்வான் ஒருவன் தான் மனேயறத்தில் ஒழுகத் துணே நிற்கக் கடமைப்பட்ட தன் துணேவி அவ்வாறு துணே நில்லாதது மட்டுமன்றி மாருகவும் நடப்பின் அவளேத் திருத்த வேண்டிச் சான்ருேராகிய உறவினர் ஒருவரிடம் அவளுடன் சென்று அவள் குறைகளே அவளிடமே நேரில் சுட்டிக்காட்டாமல், குறிப்பால் அறிவுறுத்துவான் வேண்டி அவ்வுறவினரை முன்னிலேப் படுத்தித் தன் மனேவியின் குறைகளே அவர் மேலேற்றி முன்னிலேப் புறமொழியாக விரித்து விளக்குவன். அதன்பின்பும் அவள் திருந்தாவிடில் அவளிடமே நேர்முகமாக இடித்துக் கூறுவன். அவ்வாறு இடித்துரைத்தல் சுருக்கமாக அமையும். நம் அடிகளும் இவ்வாறே தம் மனத்தின் குறைபாடுகளே ஆண்டவனிடம் முன்னிலேப் புறமொழியாக விரித்து எட்டுப்பாடல்களில் கூறுகின்ருர். பின்னும் தம் மனம் திருந்தாமையால் மனத்தையே முன்னிலேப்படுத்திக் கடுஞ்சொற்களால் இரண்டு பாடல்களில் சுருக்கமாக இடித்துரைக்கின்ருர். இம்முறையில் இந்தப்பகுதி அமைந்திருக்கின்றது. இது மனத்துக்குக் கூறும் அறிவுரை ஆதலின் இதற்கு ***அறிவுறுத்தல்*** என்று தலேப்பிட்டனர் நம் முன்ஞேர்.

தரவு கொச்சகக்கலிப்பா :

15. நாடகத்தால் உன்னடியார் போனநடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்
விரைகின்றேன்
ஆடகச் சீர் மணிக்குன்றே யிடையரு அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெ முடையானே. கக

(இ - ள்)

ஆடகம் என்ற பொன்னுல் செய்யப்பட்டுச் சிறப்புப் பொருந்திய கனகசபையில் திகழும் மாணிக்க மலையே! எங்களை அடிமையாக உடையவனே! நெஞ்சில் தேடுகின்ற உன் அடியவர் போல நான் போலியாக ஒழுகி, வீட்டுலகின் மையப்பகுதியில் கள்ளத்தனமாக நுழைவதற்கு மிகவும் பெரிதாகத் துரிதப்படுகின்றேன். உன்னிடத்தில் இடையீடு இல்லாமல் பெருகும் உண்மை அன்பு என் உள்ளத்தின் நடுவில் நிலைபெற்று அவ்வுள்ளம் உருகும் வண்ணம் அருள்புரிவாயாக!

(வி - ரை)

"ஆடகச்சீர் மணிக்குன்றே! எம் உடையானே" என்பவற்றை முதலில் வைத்துப் பொருள் கொள்க.

ஆடகம் - உயர்ந்த பொன் வகைகளுள் ஒன்று. ஹாடகம் என்ற வடசொல்லின் திரிபு. முன்னம் போற்றித் திருவகவல் (90)-ல் "ஆடக மதுரை அரசே" என்றதன் கீழ் உரைத்தவை பார்க்க.

சீர் - சிறப்பு. இஃது அம்பலவாணர் எழுந்தருளியிருப்பதால் கிட்டியது.

மணிக்குன்று - ***மணி*** - செம்மணியாகிய மாணிக்கம் - இது சிவபெருமானின் நிறம்பற்றி வந்த உவமை.

குன்று - மலை. நிலையில் திரியாமை; அளக்கலாகா மாண்பு, குறிஞ்சிச் செல்வங்களாகிய நிதிக்கு இருப்பிடம், தண்ணளி போன்ற பல நதிகள் தோன்றி உலகுயிர்களை ஊட்டிக்காக்கும் செயல் ஆகியவற்ருல் மலை, சிவபெருமானுக்கு உவமையாயிற்று.

இனி, ஆடகமாகிய பொன்னைச் சிவபெருமானின் வண்ணத்துக்குக் கொண்டு; மணிக்குன்று என்பதை நீல மணிபோன்ற மலை என்று உமையம்மை வண்ணத்துக்கும் கொண்டு மாதொரு பாகமூர்த்தமாக உரைப்பது கதிர்மணி விளக்கம்.

மணிக்குன்று என்பதை மாணிக்கமலை என்றே கொண்டு, இறைவன் அணு வடிவில் நிற்பினும் கற்றவர்கள் அவனைப்பற்றி நுகர்ந்தின்புறுவர், மற்றவர்களுக்கும் தான் புலனுகும்படி அவன் மலையாகவும் நிற்கின்ருன்;

அஃதும் இருளிலும் கூடத் தெரியும் வண்ணம் ஒளிகாலும் மாணிக்கமலையாக நிற்கின்றான். பார்ப்பதற்காகத் திருமால் வளமுள்ள செந்தாமரை போன்ற கண்களைப் பெற்றுக் "**கண்ணன்**" என்ற பெயரும் பெற்றுள்ளான் எனினும் அண்ணாமலையானைக் காணாதொழிந்தான் என்பது நயம்.

உடையானே - இரண்டாம் வேற்றுமையுருபு விரித்து உடையானை நெஞ்சிலே தேடுகின்ற அடியவர் என்றுரைப்பினுமமையும்.

நாடகத்தால் - அகத்தால் நாடும் எனமாற்றிக் கொள்க. அது திரிபுடியின்றித் தியானத்தில் நிற்றலாம். "திரிபுடி" என்பது தியானத்தில் காண்பான், காட்சி, காணப்படும் பொருள்; என்ற மூன்றுமின்றிக் காட்சி ஒன்று மட்டும். நிகழும் இன்பத்தைத் தியானம் செய்பவர் நுகர்தல்.

நாடகம் - ஒருவர் சொல்லும் போல வேறொருவர் நடிக்கும் கதை தழுவிய கூத்து என்பர். **நடித்து** - என்று பின்னர் வருவதால் இது கூறியது கூறல் எனும் குற்றமாம் என்று ஒதுக்குக.

நடுவே - நடித்து முடிக்கு முன்பு; நடிப்பின் இடையிலேயே.

வீடகத்தே - வீட்டுலகில் ஓர் ஒதுக்குப்புறமாக வன்றி மையப்பகுதியிலேயே.

புகுந்திடுவான் - முன்னம் 14- ம் திருப்பாட்டில் "புகுதல்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

மிகப்பெரிதும் விரைகின்றேன் - கூத்தில்; இந்திரன் வேடம் தாங்கி நடிப்பவன், நாடக அரங்கில் குழுமியுள்ளோர் கண்டு மகிழவே தான் நடிப்பதையும் உண்மையில் தான் இந்திரனல்லன் என்பதையும் நன்கு அறிந்துள்ளான்; எனவே கூத்தின் இறுதியில் அவன் வேடம் களைந்து வீடு திரும்புகின்றான். இந்திரனுக்குரிய விண்ணுலக ஆட்சி, ஐராவதம், ஐந்தருக்கள், சிந்தாமணி ஆகியவற்றை அடைய வேண்டும் என்று விரும்பி முயலான்; ஆனால் நானோ அடியார்போல நடித்து அவர்களுக்குரிய வீட்டுலகை எய்த விழைகின்றேன். உண்மையில் உழைப்போன் ஒருவன் அதற்கான கூலி நிச்சயம் கிடைக்கும் என்ற உறுதியினால் அதைப் பெற விரையான்; இங்கு நான் போலியாக நடிப்பதனால் அவ்வுண்மை வெளியாவதன் முன், பயனாகிய வீட்டுலகை எய்தி விடுவதற்கு விரைவு காட்டுகின்றேன். இஃது உலகியல்புமாம். அவ்விரைவும் மிகப்பெரிய

விரைவு என்பார். பெரிதும் விழைகின்றேன் என்பதுடன் அமையாது "மிகப்பெரிதும் விரைகின்றேன்" என்ருர்.

ஆனுல் இத்தகைய போலியினுல் ஒருவேளை உலகரை ஏமாற்றலாம். இறைவனை ஏமாற்ற இயலாது.

இதனை ;

திருச்சிற்றம்பலம்

"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக்
கழித்துப்போக்கித்
தெள்ளியே ளுகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்;
உள்குவா ருள்கிற் றெல்லாம் உடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட் டேனே"

(திருமுறை - *4 - 75 - 3)*

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் ருரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை - *5 - 21 - 8)*

எனவரும் அரசுகளின் அமுத வாக்குக்களாலறிக.

இதனை நன்குணர்ந்தே நம் அடிகளும் தம் போலி நிலை ஒழிந்து உண்மை அன்பு பெற வேண்டுகின்ருர்.

அன்பு - இதை மூன்று வகையாகப் பிரித்துச் சிறந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவர் கவியரசு அவர்கள்.

அவை ;

1. தலையாய அன்பு - இது முளைக்கும் காலத்தில் சிறிது தண்ணீர் விட்டுப் பின் எக்காலத்தும் நீர் பாய்ச்சா விடினும் மிக நெடுங்காலம் நின்று பலன்தரும் பனை மரம் போன்ருர் அன்பு.

2. இடையாய அன்பு - இது சிலகாலம் தண்ணீர் பாய்ச்சியும் சிலகாலம் நீர் பாய்ச்சாது விட்டும் மீண்டும் சில்காலம் நீர் பாய்ச்சினும் தொடர்ந்து பலன் தரும் தென்னை மரம் போன்ருர் அன்பு.

3. கடையாய அன்பு - இடையருது தொடர்ந்து நீர் பாய்ச்சி வந்தும் இடையில் சிலகாலம் நீர்பாய்ச்சுவது தவறின் பட்டுப் போகும் கமுக மரம் போலத் தொடர்ந்து உதவி செய்து வருவார் மாட்டு மட்டுமே அன்பு காட்டுவார் அன்பு.

மெய்யடியார்கள் இம்மூவகை அன்புக்கும் மேற்பட்டு இறைவன் தமக்கு அருளினும் அருளாவிடினும் தொடர்ந்து அவன்மீது அன்பு கொண்டிருப்பர்.

இதனை ;

திருச்சிற்றம்பலம்

"இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடறனில் அமுதொடு க லந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே"
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 3-4-1)

என்றதும், முன்னம் 6-ம் பாடலில் "கை" என்றதன் கீழ் எழுத்தாண்ட அற்புதத் திருவந்தாதி 2-ம் பாடலும் பார்க்க. இத்தகைய அன்பையே நம் அடிகள் வேண்டுகிருர்.

ஊடகத்தே நின்று - அகத்து ஊடே நின்று என மாற்றுக. நீ இப்பொழுது என் நெஞ்சின் உள்ளத்தில் நிற்பதால் அத்தகைய அன்பு இப்பொழுது கிட்டுகின்றது. அஃது இடையருது கிட்டவேண்டுமாயின் நீ என் உள்ளத்தில் நிலையாக நிற்கவேண்டும். அவ்வாறு நிற்பாயாக; என வேண்டியவாறு.

உருக - நீ அவ்வாறு நிலையாக நின்றால் என் உள்ளம் உருகும். அவ்வாறு தொடர்ந்து உள்ளம் உருகுவதே அன்பாலாகும்.

தந்து அருள் - அவ்விதம் உள்ளம் தொடர்ந்து உருகும் நிலையை எனக்கு நல்குவதாகிய அருளிப்பாட்டைச் செய்க; என வேண்டியவாறு.

இத்தகைய நிலையான அன்பை :

திருச்சிற்றம்பலம்

" *ஏழையென் புன்மை கருதா திடையரு அன்பெனக்கு*
வாழிநின் பாத மலர்க்கே மருவ அருளுகண்டாய
மாழைமென் னோக்கிதன் பங்க வளர்தில்லை யம்பலத்துப்
போழிளந் திங்கட் சடைமுடி மேல்வைத்த புண்ணியனே"

திருச்சிற்றம்பலம்

(11 - ம் திருமுறை - கோயில் திருப்பண்ணியார் விருத்தம் - 37)

- என்று திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகளும் வேண்டுவது காண்க.

இத்தகைய அன்பை வரும் பிறவிகளிலும் வனிதைபாகன் பால் வேண்டுவது பேரடியார்களின் இயல்பு. இதை;

திருச்சிற்றம்பலம்

" *துறக்கப் படாத வுடலைத் துறந்துவெந் தூதுவரோ*
டிறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொ லோவென்றென் னுள்ளங் கிடந்து மருகிடுமே."

(திருமுறை 4 - 113 - 7)

" *புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே*
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 94 - 8)

எனவரும் அரசுகளின் அமுதவாக்குக்களாலறிக.

இத்திருப்பாட்டில் "இடையறு அன்புனக்கென் னுடகத்தே தந்தருள்" என்றதனுல் சதகம் நுதலிய "**பத்திவைராக்கிய விசித்திரம்**" பெற்றும். இறைவன் அடியார் போல் நடிக்கும் மனத்தைப் போலி ஒழுக்கத்தை நீத்து அன்பு கொள்ள அறிவுரை கூறுவதால் பதிகம் நுதலிய "**அறிவுறுத்தல்**" பெற்றும்.

16. யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணுள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயு னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே

கஉ

(இ - ள்)

யான் எவ்வகையான பிறப்புக்கும் சிறிதும் அஞ்சுபவன் அல்லன்; மரணத்தை ஒருபொருட்டாகக் கருதுபவனும் அல்லன்; விண்ணுலகமே எளிதிற்கிடைப்பது எனினும் அதை விரும்பேன்; இந்தப் பிறப்பிலேயே இந்த மண்ணுலகம் முழுவதும் ஆளும் பேறுகிட்டினும் அதை ஒரு பொருளாக மதிக்க மாட்டேன்; தேன்பொருந்திய கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபெருமானே! எங்கள் தலைவனே! எங்கள் தந்தையே! உன் திருவருளைப் பெறும் நாள் எப்பொழுது வரும் என்று நினைந்து வருந்துகின்றேன்.

(வி - ரை)

ஏதும் - ஒரு சிறிதும் எனவுமாம்.

இறப்பதனுக்கு என் கடவேன் - மரணத்தைவிட அதிகத் துன்பம் தரும் பிறப்புக்கே அஞ்சாதநான், மரண துன்பத்தை ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்றவாறு. பிறவித்துன்பம் பற்றி முன்னம் போற்றித் திருவகவல் (24 - 25-ல்) "தாயொடு தான் படுந்துக்க சாகரம்" என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க. மரணம் நிச்சயமாக வருவது ஒன்றுகலின் அது பற்றி நான் செய்யக்கடவது யாதுளது?

பிறப்பினே டிறப்பும் - அஞ்சேன் - (518)

என்று நம் அடிகள் பின்னரும் அருளிச் செய்தல் காண்க.

அஃது பொருளன்று என்றவாறு. இஃது இப்பொருளில் வருவதை

திருச்சிற்றம்பலம்

"வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனனம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில் லாரிப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கென்கட வார்பொன் னலர்ந்தகொன்றைத்
தளையா ரிடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே"

திருச்சிற்றம்பலம்

(11-ம் திருமுறை - திருவிடை மருதூர் மும்மணிக்கோவை- 21)

எனவரும் பட்டினத்தடிகள் திருவாக்காலு மறிக.

வானேயும் பெறில் வேண்டேன் வானேபெறினும் வேண்டேன் என மாற்றிக் கொள்க. ஏகாரம் வானின் உயர்வுபற்றிய சிறப்பையும் உம்மை பெறுதற் கருமையையும் உணர்த்தின.

வானேயும் - இதிலுள்ள **"ஏயும்"** என்பதற்கு "ஆயினும்" என்று பொருள் கொண்டு "**பெறில்**" வானே ஆயினும் வேண்டேன் எனக் கொள்ள வைப்பது கதிர்மணி விளக்கம்.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது"

திருக்குறள் - 29

என்னும் பொதுமறையில் "கணமேயும்" என்பதற்குப் பரிமேலழகர் இவ்வாறு பொருள் கொள்வது காண்க. நம் அடிகள் விண்ணுலகப் பதங்களையும் விரும்பாதவர் என்பதைக் "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு" (6) என்று அவர்களே முன்னம் அருளிச் செய்துள்ளதாலறிக.

"இனி, முதல் இரண்டடிகளிலும் உள்ள வினைமுற்றுக்கள் நான்கில் முதலிரண்டனையும் பின்னிரண்டனோடு நிரல் நிறையாக இயைத்துப் "பிறப்பஞ்சேன்" என்றதனால் பிறந்து உலகாளும் அரசுரிமை பெற்றுப் போகந்துய்க்கலாம் என்னும் வேட்கைக் குறிக்கோளுண்மை

பெறப்படும் ஆதலின் அதனை விலக்குவதற்கு "மண்ணுள் வான் மதித்து மிரேன்" எனவும்; இறப்பதற்கு அஞ்சேன் என்றதனால் இறந்து, விண்ணுலகு எய்தி இன்புறலாம் என்னும் வேட்கைக் குறிக்கோள் குறிப்பாற் பெறப்படுமாதலின்; அதனை விலக்குவதற்கு" வானேயும் பெறில் வேண்டேன் " எனவும் அருளிச் செய்யப்பட்டன" என்று நுட்பமும் நயமும் பொருந்த விளக்குவது கதிர்மணி விளக்கம்.

தேனேயும் மலர்க் கொன்றை - தேனேயும் கொன்றை மலர் என மாற்றிக் கொள்க. அரசர்கள் அழகுக்காக அணியும் மாலை ; அடையாள மாலை என வேறு வேறு மாலைகள் உள்ளன. ஈண்டுச் சிவபெருமானுக்கு இரண்டுக்கும் கொன்றை மலர் மாலை ஒன்றே சாலும். கொன்றை மலர் பிரணவ வடிவமாக மலர்வது. அது சமட்டிப் பஞ்சாட்சரம் குறிப்பதாகும். திருவைந்தெழுத்துப்பற்றி முன்னம் சிவபுராணத் தொடக்கத்தில் "***நமச்சிவாய***" என்றதன் கீழ் விரித்துரைத்தாம்; ஆண்டுக்காண்க. கொன்றைமலர் வடிவத்தால் மட்டுமன்றி வண்ணத்தாலும் சிவபரஞ்சுடரை ஒத்துப் பொன்னிறத்தாற் பொலிவது காண்க. கொன்றைமலர் மட்டுமின்றி அம்மலர் மிகுதியாகப் பூத்து நிற்கும் கொன்றை மரத்தின் காட்சியும் பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவபெருமானின் காட்சியை நினைவூட்டுவதாகும்.

இதனை ;

திருச்சிற்றம்பலம்

சென்றணைந்த வானுயர் செய்தவிரைத் தமமென
மன்றல்மலர்த் துணர்தூக்கி மருங்குதாழ் சடையார்போல்
நின்றநறுங் கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றியசிந் தையி லன்பை யுடையவர்பால்ன்மடைதிறந்தார்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் -ஆனாய நாயனார் புராணம் 21)

என வரும் சேக்கிழார் பெருமான் வாக்காலு மறிக.

தேன் - இனிமை. அது வீட்டின்பம் குறித்து நின்றது. அதுபற்றி முன்னம் நூற்சிறப்பில் "திருவாசகம் என்னும்தேன் " என்றதன்கீழ் விளக்கியவை காண்க.

சிவனே எம்பெருமான் எம்மான் - சிவன் மங்கலங்களுக் கெல்லாம் மகாமங்கலமாகி என்றும் அழிவில்லாது நிற்கும் இன்பவடிவினன். முன்னம் சிவபுராணம் (12-ல்) "சிவன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. ***எம்பெருமான்*** - எங்கள் சிறந்த தலைவன். ***எம்மான்*** - எங்கள் தந்தை. எனக்கு என்றும் அழியாத இன்பமாகிய மங்கலம் தரும் எங்கள் தலைவன்; மங்கல வடிவமாகி என்றும் அழியாத பேரின்பம் நல்கும் வீட்டுலகின் அதிபதி. அவன் என் தந்தையாக இருப்பதனால் அந்த வீட்டின்பம் பெற எனக்குத் தகுதியும் உரிமையும் உள்ளன. என்னிடம் குறைபாடுகளிருப்பினும் அவன் என் தந்தையாக இருப்பதனால் அவற்றைப் பாராட்டாது அருள்புரிவான்.

அருள் பெறுநாள் என்று? என்று வருந்துவன் - ஆனால் "அந்த அருளைப் பெறும் நாள் எப்பொழுது வரும்? நான் இப்பொழுது தாங்கியுள்ள இவ்வுடலுடன் கூடிய இப்பிறவியின் ஆயுட்காலம் ஒருவரையறைக் குட்பட்டதாயிற்றே; அதற்குள் அந்த நாள் வருமா" என்று வருந்துவேன் என்றவாறு. முன்னரும் "வல்வினையைக் கழிதரு காலம்" (12) என்றதும் அதன்கீழுரைத்தவையும் பார்க்க.

விண்ணிலும் மண்ணிலும் பெறும் இன்ப நுகர்ச்சிகளை மதியாது இறைவன் திருவருளையே விரும்பும் இப்பாடலின் கருத்தை ;

" பாயிரும்......................................
.... யாஅம் இரப்பதை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பா
லருளும் மன்பு மறனு மூன்று
முருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே"

(பரிபாடல் 5 - 78 - 81)

எனவரும் பொய்யடிமை யில்லாத புலவருள் ஒருவர் மொழியுடன் ஒப்பிட்டு மகிழ்க.

இத்திருப்பாடல் மண் விண் பதங்களின் இன்பங்களை மதியாது திருவருளையே வேண்டுவதால் சதகம் நுதலிய "***பக்திவைராக்கிய விசித்திரமும்***" பதிகம் நுதலிய "***அறிவுறுத்தலும்***" பெற்றும்.

17. வருந்துவனின் மலர்ப்பாதம் அவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றென்னேநான் ஆமாறே கரு

(இ - ள்)

உடல் வண்ணத்துக்குப் பொருத்தமான பொன்னிறமுள்ள மேருமலையை வில்லாக வளைத்தவனே! நாய் போன்ற இழிந்த அடியேன், தாமரை மலர்கள் போன்ற உன் திருவடிகளைக் கண்டு அடையும் பொருட்டுத் தவம் செய்யாமைக்கு வருந்துகின்றேன். கைகள் நா முதலிய உடலுறுப்புக்கள் எனக்குச் செவ்வகையாக அமைந்திருந்தும் நல்ல மலர்களை மாலைகளாகத் தொடுத்து உனக்குச் சூட்டேன் ; நாவில் தழும்புண்டாகும் வண்ணம் நின்புகழைஓதித் துதிக்க மாட்டேன் ; எனினும் அவ்வாறு செய்ய நின்திருவருளாகிய அமுதத்தை அடியேனுக்கு வழங்காயாயின் மிகவும் கதியற்றவனாகிய யான் மேலும் வருத்த முறுவேன்; பின்னர் உய்யுமாறு எங்ஙனம்?

(வி - ரை)

இத்திருப்பாடலை -"பொருந்திய பொற்சிலை குனித்தாய்! நாயடியேன், நின்மலர்ப்பாத மவை காண்பான் வருந்துவன்; இருந்தும் நலமலர்புனையேன், நாத்தழும்பு ஏற ஏத்தேன். அருளமுதம் புரியாயேல் நல்தமியேன் வருந்துவன் நான் ஆமாறு என்னே;" என்று அன்னுவயப்படுத்திக் கொண்டு பொருள் செய்க.

பொருந்திய - அகலம் நீளம், உயரம், விலை மதிப்பு ஆகியவை அளவிட முடியாமையாலும், சலியாமை, அளவற்ற நிதிகளுக்கு இருப்பிடம் ஆகியவற்றாலும் உன்னுடன் ஒப்புடைமை பொருந்திய எனலுமாம்.

பொற்சிலை - மேருமலை, பொன்னாலாகிய வில் எனலுமாம்.

குனித்தாய்! - வளைத்தவனே! விளி. பிறரால் செய்ய முடியாத செயல். சிவபெருமானின் இறைமைக் குணங்கள் எட்டனுள் ஒன்றான முடிவிலாற்றலுடைமை கூறி வழுத்தியவாறு.

பொற்சிலை குனித்த வரலாறு - முன்னம் திருவண்டப்பகுதி (158-ல்) "ஏற்றூர் மூன்றூர் எழில்நகை எரியில் வீழ்வித்த வரலாறு" என்ற பகுதியில் காண்க.

நாயடியேன் - நாய் - முன்னம் சிவபுராணம் (60 -ல்) "நாயிற் கடையாய்க்கிடந்த அடியேன்" என்றதன் கீழுரைத்தவை காண்க.'

மலர்ப்பாதம் - வடிவத்தால் தாமரை மலர் போன்ற திருவடிகள். உவமைத்தொகை.

அவை காண்பான் - அவற்றைக் காணும் பொருட்டு; பானீற்று வினையெச்சம். ***அவை***-இறைவன் ஆன்மாக்களின் அகக் கண்களாலும் காண இயலாத சேய்மைக்கண் உள்ளமை குறிக்கச் சேய்மைச்சுட்டால் கூறினர். இறைவன் திருவடிகளைக் காணவும் இயலாமை வருந்துவதற்குக் குறிப்பேதுவாகவும் அகரச்சுட்டு நிற்றல் காண்க.

இருந்தும் - உன் வழிபாட்டுக்காக உன்னல் எனக்கு அருளப்பட்ட கைகளும் நாவும் முடமன்றி மூகையன்றிச் செவ்வையாக இருந்தும் அவை பெற்ற பயனை நான் அடையவில்லை; ஆதலின் அவை முடமான கைகளும் ஊமையான வாயிலுள்ள நாவுமேயாம்; என்றவாறு. ஏனைய உடலுறுப்புக்களுக்கும் அவ்வாறே கொள்க. என்னை ;

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

(திருக்குறள் 9)

என்பது பொதுமறையாகலின்.

மனம், மொழி, மெய் என்ற மூன்றூனும் சிவவழிபாடு செய்தல் வேண்டும். அவற்றுள் எளிதிற் செய்யக் கூடியவை மொழியாலும் மெய்யாலும் செய்யும் வழிபாடுகளேயாம். அவையே செய்யாதபோது மனம்பற்றிக் கூறவேண்டுவதில்லை என்று கருதி மனம் செய்யாதொழிந்த வழிபாடுபற்றி நம் அடிகள் யாதும் கூறுது விட்டார் என்று நுட்பமாக விளக்குவது கதிர்மணி விளக்கம். ஈண்டு எதிர்மறையிற் கூறி இரங்கும் நம் அடிகளே பின்னர்ச்

" *சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்*
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி...........

என்று பின்னர் (30) உடன் பாட்டிலும் கூறிப்பெருமிதம் கொள்வது நினைக.

இதனையே ;

திருச்சிற்றம்பலம்

" ***வாழ்த்த வாயும்*** *நினைக்க மடநெஞ்சும்*
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5 - 90 - 7)

என்னும் அரசுகளின் அருந்தமிழமிழ்தும் அதைச் சுவைத்து எதிரொலிக்கும் சேரமன்னரின்;

திருச்சிற்றம்பலம்

" *சிந்தனை செய்ய மனமமைத் தேன்செப்ப நாவமைத்தேன்*
வந்தனை செய்யத் தலையமை தேன்கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத் தேன்மெய் யரும்ப வைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற் கிவையான் விதித்தனவே"

திருச்சிற்றம்பலம்

(பொன் வண்ணத்தந்தாதி - 92)

செந்தமிழும் கூறுவன காண்க.

நலமலர்புனையேன் - நன்மைதரும் மலர்களைத் தேர்ந்து மாலைகளாகத் தொடுத்துச் சிவபெருமானுக்குச் சாத்தேன். முன்னம் "தண் மலரிட்டு முட்டாதிறைஞ்சேன்" (9) என்றருளியதும் ஆண்டுரைத்தனவும் காண்க. அங்குக் கூறியது. உதிரி மலர்களைத் தூவிப்புரியும் ஆன்மார்த்த சிவபூசை. இங்குக் கூறுவது மலர்களை பலவகை மாலைகளாகத் தொடுத்துத் திருக்கோயிலில் இறைவனுக்குச் சாத்தும்படி கொடுக்கும் சரியைத்

தொண்டில் நிகழும் பரார்த்த வழிபாடு. சைவப்பெருமக்கள் இவை இரண்டையும் கொண்டுய்ய வேண்டும்.

நலமலர் - சிவபுண்ணியமாகிய நன்மையைத் தரும் மலர்கள். அவை சிவபெருமானுக்காக ஆகமங்களிலும் புட்ப விதியிலும் விதிக்கப்பட்டவை. அம்மலர்களை வண்டுகள் மொய்ப்பதன் முன் வைகறையில் எழுந்து நீராடி விதிப்படி திருநீறணிந்து துணியால் வாய்கட்டி நந்தவனங்களில் கொய்தல் வேண்டும். முந்தைய நாள் மலர்ந்தவை, புழுக்கடித்தவை, சிதைந்தவை, நிலத்தில் விழுந்தவை, தலைமயிர் பறவைகளின் இறகு ஆகியவற்றின் தொடக்குண்டவை ஆகியவற்றை விலக்கிக் கொய்து பூக்கூடையில் இட்டு கொக்கியுள்ள கோலில் உத்தம உறுப்பாகிய தலைக்குமேல் தூக்கி வந்து மலர்மண்டபத்தில் தூய இடத்தில் அமர்ந்து பலவகை மாலைகளாகத் தொடுத்து அளித்தல் வேண்டும். இவற்றின் விதிகளைப் பெரியபுராணத்தில் எறிபத்த நாயனுர்புராணம், முருகநாயனுர் புராணம், செருத்துணை நாயனுர்புராணம் ஆகியவற்றிலும் அவற்றுக்குச் சிவகவிமணியவர்களின் பேருரையிலும் காண்க.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

" நீநாளு நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழுநாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளு நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே."

(திருமுறை - 2 - 41 -.3)

" மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான்மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்"

(திருமுறை - 4 - 3 - 1)

"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே"

(திருமுறை - 5 - 90 - 5)

" நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
மாரூரா வென்றென்றே யலறா நில்லே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 31 - 3)

எனவரும் தமிழ்மறைகள் நினைக.

சரியைத் தொண்டுபற்றி முன்னம் "தண் மலரிட்டு முட்டாது இறைஞ்சேன்" *(9)* என்றதன் கீழ் விரிவாக உரைத்தாம். ஆண்டுக்காண்க.

அருளமுதம் புரியாயேல் - எனக்கு முக்கரணங்களும் செவ்விதின் அமைந்திருந்தும் நான் உன்னை வழிபடவில்லை. அதற்குக் காரணம் உன் அருள் இன்மையே. அந்த அருளை நல்குவாயாக; இல்லையேல் வருந்துவேன்; என்றவாறு. சிவபெருமானை வழிபடுவதற்கும் அவனருள் வேண்டும் என்பது முன்னம் சிவபுராணம் *(18-ல்)* "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றருளிய துள்ளும் ஆண்டுரைத்தவற்றுள்ளும் பார்க்க. மேருமலையையும் வளைத்த உனக்கு என் கன்மனத்தையும் உருக்கி இந்த அருளிப்பாடு தருவது எளிதே என்றது குறிப்பு.

வருந்துவன் - இத்திருப்பாட்டில் முதலடியில் கூறிய வருத்தம் சாதனமாகிய சிவவழிபாடு செய்யாமையால் வந்தது. நான்காமடியில் கூறிய வருத்தம் அந்தச் சிவவழிபாட்டின் அந்தச் சாதனம் கிட்டுவதற்கான அருளிப்பாடு பெருமையால் வந்தது.

நல்தமியேன் - நத்தமியேன் என நின்றது. மிக்க தனிமையை யுடையவன் என்பது பொருள். **அத்தமியேன்** - என்பதும் பாடம். இவ்வாறு பாடங்கொள்ளின் மலர்புனேதல் ஏத்துதல் முதலிய அத்தொண்டுகளேச் செய்யாமையால் வெறுவியனய் நிற்கும் தமியன் என்று அகரச்சுட்டுக்குப் பொருள் விரித்துக் கொள்க.

"நத்தமியேன்" என்றுபாடங் கொண்டு மிகவும் தமியேன் என்று பொருளுரைத்து "ந" என்றும் இடைச் சொல் சிறப்புணர்த்தியும் வருமாதலின் அது பின் வரும் தனிமையின் மிகுதியைக் குறித்தது என்று விளக்குவார்கள் திரு. முதலியாரவர்கள்.

ஆமாறு என் - நீ அருளாவிட்டால் நான் உளன் ஆவது எவ்வாறு என்றவாறு.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

" உளமாம் வகைநம்மை யுய்யவந் தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடமமிர் தாக்கிய தில்லைத்தொல் லோன்கயிலே
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து நின்றேர்வஞ் சிம்மருங்குல்
இளமான் விழித்ததென் றேவின்றெ எண்ண லிரங்கியதே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 22)

என்று நம் அடிகளே அருளிச் செய்வது காண்க.

இத்திருப்பாடலில் இறைவன் அருள் கிட்டாவிடில் நான் ஆமாறு என்னே என்று வருந்துவதால் சதகம் நுதலிய "***பத்திவைராக்கிய விசித்திரம்***" பெற்றும். இறைவனே முன்னிலேப் படுத்து மனம், மலர் புனேதல், துதித்தல் முதலியன செய்யாமல் நிற்பதை முன்னிலேப் புற மொழியால் கூறி அவற்றைச் செய்யுமாறு மனத்திற்குக் குறிப்பாயுணர்த்துவதால் பதிகம் நுதலிய "**அறிவுறுத்தல்**" பெற்றும்.

18. ஆமாறுன் திருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் தூகேன்மெழுகேன்
கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. கச

(இ - ள்)

தெய்வங்களின் கடவுளே ! ஞானிகளாலே எய்தக் கூடியவனே! நான் உருப்படியாவதற்காக, உன்திருவடிகளுக்கே உள்ளம் கனியேன்; அன்பினுல் உருகவும் மாட்டேன்; மலர்மாலைகளைத் தொடுத்து அணிவித்துத் துதிக்கவுமாட்டேன்; உன்புகழ்களைப் பாராட்டிப் பேசேன்; நின்திருக்கோயிலை அலகிடேன் ; மெழுகவுமாட்டேன் ; பக்தி மிகுதியினுல் ஆடவுமாட்டேன்; பயனின்றி மரணம் எய்துவதற்கான செயல்களையே விரைந்து செய்கின்றேன்.

(வி - ரை)

"புத்தேளிர் கோமான்" என்பதை முதலிலும் "சதுராலே சார்வானே!" என்பதை அதை அடுத்தும் வைத்துப் பாடலுக்குப் பொருள் காண்க.

புத்தேளிர் - ஆன்ம இனங்களாகிய தேவர்கள். அவர்கள் திருமால் முதலாயுள்ளோர்.

சதுராலே சார்வானே - *சதுர்* - வல்லமை இங்குப் பண்பாகு பெயராகத் தவவலிமையுள்ள ஞானிகளைக் குறித்து நின்றது. ஞானம் ஒன்றே இறைவனை அடைவிக்கவல்லது. ஏனைய சரியை முதலிய மூன்றும் ஞானத்தை அடையப் படிமுறைகளாகவே உள்ளன என்பதை;

"மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடாவாகலான்"

(சிவஞானபோதம் சூ - 8 - அதி - 1 ஏது).

என்று சாத்திரம் சாற்றுவதாலறிக. முன்னம் போற்றித் திருவகவல் (42-ல்). "தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி" என்றதன் கீழ் எடுத்துக் காட்டிய சிவஞானசித்தியார் (சூ - 8 - அதி - 2- செய்-11) பாடல் பார்க்க

ஆன்மாக்களின் அச்சதுர்களுக்கேற்ப இறைவன் விஞ்ஞான கலர்களுக்கு உயிருக்குயிராய் உள்நின்று தன்மையில் சார்தலும், பிரளயாகலர்களுக்கு மான்மழு நாற்றோள்களுடன் முன்னிலையில் சார்தலும், சகலர்க்கு மானிடச் சட்டைதாங்கிக் குருவடிவில் படர்க்கையில் சார்தலுமாகிய **சதுர்** எனலுமாம்.

இவ்வாறின்றிச் "சதுராலாலே சாமாறே விரைகின்றேன்" என்று கொண்டு விரைந்து சாவதற்கான தொழில்களை என் சதுரப்பாட்டாலே செய்கின்றேன் எனலுமொக்கும்

தவம் முதலியவற்றால் ஞானமெய்தி உன்னை அடையும் வழியை விட்டுத் தன் முனைப்புடன் என்சதுரப் பாட்டால் உன்னை அடைய முயலுகின்றேன் என்றுரைத்தலுமொன்று. முன்னம் திருவண்டப் பகுதி (126-ல்) "திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

ஆமாறு - நான் உய்யும் வண்ணம். நான் ஆக்கமுடையவன் ஆகுமாறு எனலுமாம். "உன் திருவடிக்கே ஆமாறு" என்று கூட்டியுரைத்துப் பொருள் காண்பது கதிர்மணி விளக்கம்.

திருவடிக்கே - திரு - "செல்வம்" என்று கொண்டு அடைந்தார்க்கு ஞானச் செல்வத்தை அளிக்கும் அடி" என்று விளக்குவது கதிர்மணி விளக்கம். ***ஏகாரம்*** - பிரிநிலை. பிற தெய்வங்களை நீத்துச் சிவபெருமான் ஒருவனையே வழிபடும் ஏகநாயக வழிபாட்டை வற்புறுத்தியது. முன்பு "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாதெங்கள் உத்தமனே" (6) என்றும் பின்பு "மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற் கற்றிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" (514) என்றும் அருளுவன காண்க.

அகம் குழையேன் அன்பு உருகேன் - "உன்பாலுள்ள பக்தியினால் உள்ளம் களிந்து உருகமாட்டேன்" என்றவாறு. தங்கத்தைக்நெருப்பிலிட்டுக் காய்ச்சினால் அதுமுதலில் இளகும்; பிறகு உருகி ஓடும். அவ்வாறு கல்லையொத்த என் மனத்தைத் தவமாகிய நெருப்பிலிட்டு வாட்டினால் குழைந்து அன்புப்பெருக்காக உருகி ஓடும்; அவ்வாறு செய்யேன் என்றவாறு.

பூமாலை புனைந்துஏத்தேன் - வழிபாட்டில் முதலில் செய்வது மலர்மாலைகள் சூட்டுதல்; பின்னர்ச் செய்வது துதிகள் கூறி ஏத்துதல்; ஆதலின் அந்த வரிசையில் கூறினார். இவை பற்றி முன்னம் (17-ல்) "நலமலர் புனையேன் ஏத்தேன் நாத்தழும்பேற" என்றபகுதியின் கீழுரைத்தவை பார்க்க.

புகழ்ந்துரையேன்- புகழ்தல்- இறைவனின் பொருள் சேர் புகழ்களை விரித்து உரைநடையில் கூறுதல். முன்னம் சிவபுராணம் (17-ல்) "உரைப்பன்" என்றதன் கீழ் எடுத்துக் காட்டிய உத்தரவேதம் 5-ம் அதற்குப் பரிமேலழகர் உரையும் பார்க்க.

இறைவனை அகம் குழைந்து அன்புருகி ஏத்திப் புகழ வேண்டும் என்பதை;

திருச்சிற்றம்பலம்

" உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ள முள்ளவ ருக்கருள் வானலன்
வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே"

(திருமுறை 5 - 82 - 1)

" உரமென்னும் பொருளானை உருகிலுள் ளுறைவானைச்
சிரமென்னுங் கலனானைச் செங்கண்மால் விடையானை
வரமுன்னம் அருள்செய்வான் வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பரமனெங் கள்பிரானைப் பரவாதார் பரவென்னே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7 - 86 - 5)

என நம் **பரம ஆசாரிய** மூர்த்திகளாகிய அரசுகளும் நம்பிகளும் அறிவுறுத்தல்காண்க.

"உள்ள முருகி லுடனுவ ரல்லது
தெள்ள வரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற"

(திருவுந்தியார் - 7)

என்று சாத்திரம் சாற்றுவது மறிக.

அகங்குழைதல் அன்புருகல் பூமாலை புனைந்து சாத்துதல் ஏத்துதல் புகழ்ந்துரைத்தல் ஆகிய அனைத்தும் சிவபரஞ்சுடர்மாட்டுச் செய்ய வேண்டுவன. அவற்றைச் செய்யேன் என்றதனால் மகளிர்மாட்டு அகங்குழைந்து அன்புருகி அவர்களுக்குப் பூமாலை புனைந்து சூட்டிப் புகழ்ந்துரைப்பேன் என்றது குறிப்பாற் பெற்றும்.

தூகேன் - "தூ" என்பது முதனிலை. விளக்குதல் என்பது இதன் பொருள். திருக்கோயிலை அலகிட்டுத் தூய்மை செய்யேன் என்றவாறு.

மெழுகேன் - அலகிட்டுக் குப்பைகளை அகற்றியபின் ஆன் சாணத்தால் மெழுகேன் என்றவாறு.

இவை சரியைத் தொண்டுகள். "நலமலர்" *(17)* என்றதன் கீழுரைத்தவை காண்க. சரியைத்தொண்டு பற்றி முன்னம் "தவம்" *(9)* என்றதன்கீழ் விரித்துரைத்தவை பார்க்க.

திருச்சிற்றம்பலம்

" விளக்கினார் பெற்ற வின்ப மெழுக்கினுற் பதிற்றி யாகும்
துளக்கினன் மலர்தொ டுத்தாற் றூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ஞ்ஞெறி ஞான மாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளு மாறே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 77 - 3)

என்ற திராவிட வேதமும் காண்க.

கூத்தாடேன் - அகம் குழைந்து உருகுதல் உள்ளத்தாலும்; பூமாலை புனைதல் மெய்யாலும்; ஏத்திப்புகழ்ந்து உரைத்தல் வாக்காலுமென்ன மூன்று கரணங்களாலும் சிவபெருமானை வழிபட்டு அதன் பயனாக வந்த இன்பத்தில் திளைத்துப் பரவசமாகிக் கூத்தாடேன்; எனவே, எவ்வாறு கதியடைவேன் என இசையெச்சம் வருவித்துப் பொருளுரைக்க.

இத்திருப்பாட்டில் இறைவன் மாட்டுச் செய்ய வேண்டுவன அகம் குழைந்து உருகுதல் முதலியன என்பதை அவற்றைச் செய்யாமையாகிய எதிர்மறையால் விளக்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். அவற்றைச் செய்யவேண்டும் என்ற குறிப்பினால் பதிகம் நுதலிய "***அறிவுறுத்தல்***" பெற்றும்.

19. வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. கரு

(இ - ள்)

விண் மண் காற்று நெருப்பு என்னும் இப்பூதங்களாகியும் உடலும் உயிருமாகியும் ஆய்வாருக்கு உரைக்கப்படும் உள்பொருளாகியும் அல்லாருக்கு உணரப்படாத பொருளாகியும் எல்லாப்பொருள்களையும் ஆளும் தலைவனாகியும் "யான் என்றும் எனது என்றும் சொல்லும் மக்களை, அவர்கள் சுதந்தரமின்றித் தான் ஆட்டுகின்றபடி ஆடுகின்ற நகைச்சுவைக் கூத்தை நடத்துகின்றவனாகி நிற்கின்ற நின்னைக் குறித்து யாது கூறி வாழ்த்துவேன்.

(வி - ரை)

ஆகி - ஐம்பெரும் பூதங்களுடன் கலந்து ஆனால் அவையே அல்லாமல் இருக்கின்றான்.

திறம்பெற ....
ஆனா யென்ப தனைத்து மவ்வகை
தானா காமையைச் சாற்றிடு மென்க.

(சங்கற்ப நிராகரணம் 12 - 80 - 81)

என்பது நம் ஞான சாத்திரம்

அவற்றின் கூட்டத்தாலான உடலாகவும் அவ்வுடல்களுள் நிற்கும் உயிராகவும் அவை சேர்ந்த உலகாகவும் உள்ளான். உயிர் கலவாத உடல் அழிவது போல சிவன் கலவாவிடில் அப்பூதங்கள் அழியும்.

வான் - ஐந்து பூதங்களில் ***வான்*** ஒன்றுமட்டுமே ஏனைய நான்கு பூதங்களும் தோன்றி விரிவதற்கு இடங்கொடுத்தலின் சிறப்புடையதாயிற்று. உலகப் படைப்பில் முதலில் தோன்றுவது வான் ஆகலின் அதனை முதலிற் கூறினார். வான் மேகமாகிய நீரையும் குறித்தலின் பாடலில் ஐம்பூதங்களுடன் நீரைத் தனியாகக் கூறாது விட்டார். செய்யுளாகலின் ஏனைய பூதங்களாகிய மண், வளி, ஒளி என்பவற்றைத் தோற்றமுறையில் கூறாது முன்பின்பாக

மாற்றிக் கூறினர். ஐம்பூதங்களுக்குக் கூறியவற்றை அவற்றின் காரியங்களுக்கும் கொள்க.

ஒளி - நெருப்பு. இது ஞாயிறு திங்கள்களையும் குறித்து நின்றது.

ஊனாகி - மேற்கூறிய பஞ்சபூதங்களின் கலப்பாலாகிய உடம்பைக் குறித்து நின்றது. ஈண்டுக் குறிப்பது உயிருடன் கூடிய உடம்புகள். இவற்றைக் கூறியதால் இவ்வுடம்புகள் கூடி வாழும் உலகமாகவும் உயிர்கள் நுகர அவ்வுலகங்களில் உள்ள போகங்களாகவும் இறைவனுள்ளான் என்பது பெற்றாம்.

உயிராகி - அவ்வுடல்களில் தங்கியுள்ள இயமானனாகவும் இறைவன் நிற்கின்றான் என்றவாறு.

இவ்வாறு ஐம்பூதங்களும் நிலாவும் செங்கதிரவனும் உயிர்களும் கூறியதால் சிவபெருமானின் அட்ட மூர்த்தங்களும் கூறியது பெற்றாம்.

ஊனாகி உயிராகி - இலக்கணத்தில் உயிர்முன்பாகவும் உடல் பின்பாகவும் கூறப்பட்டுள்ளன. அந்தமுறையை க்

"கால முலக முயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே...

(தொல் -சொல்- கிளவியாக்கம் -சூத். 57)

என்றார். ஆனல் பக்தி இலக்கியங்களில் உடம்பு முன்பும் உயிர் பின்புமாகக் கூறப்படுகின்றன. உடம்பை எடுத்த உயிரே உறுதியாகிய வீட்டின்பம் பெறுகின்றது என்பது இதற்குக் காரணம்.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர் பொற் றாள்தொழ

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் -வாழ்த்து 2)

என்று பெரியபுராணம் விளக்குவது நினைக.

முன்னம் 12-ம் திருப்பாட்டில் "காலமுமாய்" என்றதன் கீழ் எடுத்தாண்ட திருத்தாண்டகம் பார்க்க.

உண்மையுமாய் இன்மையுமாய் - ஆய்வாருக்கு உணரப்படும் பொருளாயும் ஆய்வில்லாருக்கு உணரப்படாத பொருளாயும் உள்ளான் என்றவாறு. இவ்வுண்மையை நம் அடிகளே பின்னர் "மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினுர்க்கு"(214) என்றருளிச் செய்தல் காண்க.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்
குள்ளத்து முள்ளன் புறத்துள்ளன் னெம்மிறை
உள்ளத்து மில்லை புறத்தில்லை யென்பவர்க்
குள்ளத்து மில்லை புறத்தில்லை தானே

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் -1532)

என்று திருமூலதேவநாயனுர் அருளுவது நினைக.

பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் அறியப்படாமல் பதிஞானத்தாலே அறியப்படும் இறைவனுக்குள்ள சிறப்பிலக்கணம். அவ்வுண்மை தோன்ற "உண்மையுமாய் இன்மையுமாய்" என்ருர் என விளக்குவது கதிர்மணி விளக்கம்.

கோனுகி- கோன்- கோ-ஒரெழுத்தொருமொழி. தலைவனைக் குறிக்கும். னகரச் சாரியை பெற்றுக் **கோன்** என வந்தது. **ஆ+ன்-ஆன், மா+ன்-மான்** என்பன போலக் கொள்க. வான் முதலிய பூதங்கள் சடப்பொருள்கள்; உயிர் சித்துப்பொருள். இவை அனைத்திலும் இறைவன் கலந்துள்ளான். இவற்றின் தொகுப்பே உலகம். எனவே, இவ்வுலகத்தை இயக்குவதற்குப் பேராற்றல் வாய்ந்த வேறு ஒரு தனிமுதல் உண்டு கொல்லோ என எழும் ஐயத்தை ஒழிக்க இவ்வுலகத்துக்கும் இதிலுள்ள பொருள்களுக்கும் சிவபெருமானே தலைவனுக உள்ளான் என்றவாறு.

யான் எனது - யான் என்பது அகப்பற்று. இதை அகங்காரம் என்பர். ***எனது*** என்பது புறப்பற்று. இதை மமகாரம் என்பர். இவ்விரு பற்றுக்களும் அற்றநிலையே வீட்டின்பம் தருவதாகும். ஆனுல் உயிர்கள் இவ்விருபற்றுக்களிலும் ஈடுபட்டு உழல்கின்றன.

அவரவரை - ஒவ்வொருவரையும். இரண்டாவது வரும் ***அவர்*** என்பதைப் பகுதிப் பொருள் விகுதியாகக் கொண்டு இந்தத்தொடருக்கு அவரை என்று பொருள் கூறினுமமையும். உலக உயிர்கள் எல்லாம் இவ்விருபற்றுக்களில் பட்டு உழல்கின்றனவாயினும் இவை மக்கள்மாட்டே விளக்கமாகக் காணப்படுதலின் உயர்திணையில் கூறினர்.

கூத்தாட்டுவான் - மறைத்தல், இறைவனின் திருவைந் தொழில்களில் ஒன்று. அது, மலபரிபாகம் வருவதற்காக உயிர்களுக்கு உண்மையை மறைத்துத் தொழில்புரிவித்து இயக்குவதால் வினைப்பயன்களை நுகர்விப்பது. உயிர்கள் அனைத்தும் இறைவனின் அடிமைகளே. உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் இறைவனின் உடைமைகளே. இவ்வுண்மையை உயிர்களுக்கு மறைத்து அவை தாம் சுதந்தரமுள்ளவை என்றும், தம்மிடமுள்ள பொருள்கள் தம் உடைமைகள் என்றும் கருதி இயங்கச் செய்கின்றான். அவ்வியக்கம் உயிர்களுக்குச் சுதந்தரமன்று; இறைவனால் இயக்கப்பட்டு அவை அவ்வாறு இயங்குகின்றன. ஆதலின் அவன் கூத்தாட்டுவானானான். முன்னம் சிவபுராணம் (18-ல்) "நின்ற அதனால் அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்றதன் கீழ் எடுத்துக்காட்டிய திருமுறை 6 - 95 - 3-ம் சிவஞான போதம் 11-ம் சூத்திரமும் காண்க.

நின்றாயை - நின்ற நின்னை. முன்னிலை வினையாலணையும் பெயர். இச்சொல்லை "வானாகி" முதலிய அட்டமூர்த்தங்களுக்கும், உண்மையுமாய் இன்மையுமாய் என்பவற்றுக்கும் கோனாகி, கூத்தாட்டுவானாகி என்பவற்றுக்கும் தனித்தனிக் கூட்டியுரைத்துக் கொள்க.

சித்தாந்த சைவத்தின் உயிர்நாடியாகிய பொருளை விளக்கும் இத்திருப்பாட்டுடன், சிவபுராணம் (71-ல்) "யாவையுமாய் அல்லையுமாய்" என்றதன் கீழுரைத்தவையும் பாடல் (6)-ல் "பிறதெய்வம்" என்றதன் கீழ் எடுத்துக்காட்டிய திருத்தாண்டகம் (6 - 95 - 7) பாடலையும் ஒப்பிடுக.

மேலும்

திருச்சிற்றம்பலம்

குற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென்மு கம்மனே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 3 - 52 - 3)

உலகினை யிறந்து நின்ற தரனுரு வென்ப தோரா
ருலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரா
ருலுகினுக் குயிரு மாகி யுலகுமாய் நின்ற தோரா
ருலகினி லொருவ னென்ப ருருவினை யுணரா ரெல்லாம்.

(சிவஞான சித்தியார் சுபக்கம் சூத் - 1 அதி - 2 -செய் - 48)

என்று நம் ஆசாரியப் பெருமக்கள் அருளியுள்ளவை காண்க.

இத்திருப்பாட்டில் சிவபெருமானின் அருவம், உருவம் உருவாரூபம் என்ற மூன்றும் விளக்கப்பட்டன. "வானாகி" என்பது முதல் "உயிராகி" என்பது வரை இறைவன் உடனுயிருப்பதும்; "கோனாகி" என்றதால் வேறாக இருப்பதும்; கூத்தாட்டுவானாகி என்றதால் உடனாய் இருப்பதும் கூறப்பட்டமை காண்க.

எல்லையற்று விரிந்து கிடக்கும் சிறப்புள்ள நின் பெருமைகளுள் எவற்றைச் சொல்லி எவற்றைச்சொல்லாது விடுவேன் என்று வியந்து விண்ணப்பம் செய்வது இத்திருப்பாட்டின் தெளிவு.

இத்திருப்பாடலில் "எல்லாமாய் நிற்கும் இறைவனை என் சொல்லி வாழ்த்துவேன்" என்று விம்மிதமுற்று விண்ணப்பம் செய்வதால் சதகம் நுதலிய "***பத்திவைராக்கிய விசித்திரம்***" பெற்றும். "ஒல்லும் வகையால் வாழ்த்துவதே கடன்" என்பது குறிப்பிற் பெறப்படுவதால் பதிகம் நுதலிய "***அறிவுறுத்தல் பெற்றும்***".

20."வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதுந் தாமு யர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானு முன்னைப் பரவுவனே *(கஉ)*

(இ - ள்)

"வண்டுகள் சூழ்ந்து ஒலிக்கின்ற கொன்றைமாலையை அணிந்தவனே! நின்னை அமரர்கள் வாழ்த்துவது தாம் நெடுங்காலம் இன்பமாக வாழ்வதற்கேயாம்; நெஞ்சம் நின்னிடம் பணியச் செய்தல் தாம் சிறப்புடன் உயர்ந்து தம்மை எல்லா உயிர்களும் தொழுவதற்கேயாம்; நாய் போன்ற இழிந்த அடிமையாகிய யானும் வீணான என் பிறப்பு இறப்புக்களை அறவே ஒழித்தற்காக நின்னை வழிபடுகின்றேன்.

(வி - ரை)

"சூழ்த்து மதுகரம் முரலும் தாரோயை"; என்பதை முதலில் வைத்துப்பொருள் செய்க.

மதுகரம் சூழ்த்து முரலும்தார் - ***மதுகரம்*** - வண்டு - ***மது*** -தேன் ***கரம்***- செய்வது; ஈட்டுவது. ஈண்டுப் பக்குவான்மாக்களைக் குறித்து நின்றது.

சூழ்த்து - சூழ்ந்து என்பது எதுகை நோக்கி வலித்தல் விகாரம் பெற்றது.

முரலுதல் - ஒலித்தல். பூவிலுள்ள தேனை நுகர்வதற்காக ஒலித்தன என்க. தேன், ஈண்டு வீட்டின்பம் குறித்தது. தேன்பற்றி முன்னம் நூற்சிறப்பில் "திருவாசகம் என்னும் தேன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. "வீட்டின்பம் விரும்பும் பக்குவான்மாக்கள் எப்பொழுதும் சூழ்ந்து துதித்துக் கொண்டிருக்கும் தாரோன்" என்றவாறு. இதுபற்றி முன்னம் கீர்த்தித்திருவகவல் *(73 - ல்)* "அமர்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

தார் - புரண்டு அணிசெய்யும் வண்ணம் கழுத்திலணியும் மாலை. "உலகம்... உருள்பூந்தண்டார் மார்பினன்" *(திருமுறை 11 - 17 - 11)* என்பது காண்க. ஈண்டு; இறைவனின் திருவடையாள மாலையாகிய

கொன்றைமாலையைக் குறித்து நின்றது. முன்னம் "தேனேயும் மலர்க்கொன்றை (17-ல்) என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

தாரோய் - விளி. "*தாரோயை*" - மாலையை அணிந்த நின்னை. தார் + ஓய் - தாரோய்; தார் + ஆய் - தாராய் என்பது தாரோய் என வந்தது. ஆயென் கிளவியுமவற்றொடு கொள்ளும் (தொல் சொல் - வினையியல் சூ - 212) என்பது இலக்கணம்.

வானவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ்வான் - தேவர்கள் நின்னைத்துதிப்பது தங்கள் மேலைத் தவத்தால் இப்பொழுது தாங்கள் பெற்று நுகர்ந்து கொண்டிருக்கும் விண்ணுலக இன்பங்களை இன்னும் நெடுங்காலம் தொடர்ந்து நுகர்ந்து கொண்டிருக்க வேண்டியேயாம் ; அது நின்பாலுள்ள பக்தியினாலோ அல்லது வீட்டின்பம் வேட்டோ அன்று.

வானவர்கள் - முற்பிறப்பில் செய்த பசுதருமங்களாலும் காமிய தவத்தாலும் விண்ணுலக வாழ்வு பெற்றவர்கள். இந்த உண்மையை;

திருச்சிற்றம்பலம்

" வாழும் பான்மைய ராகிய வான்செல்வம்
தாழும் பான்மைய ராகித்தம் வாயினால்
தாழம் பூமணம் நாறிய தாழ்பொழில்
கோழம் பாவெனக் கூடிய செல்வமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5 - 64 - 3)

எனவரும் அரசுகளின் அமுத வாக்காலறிக.

மனம் நின்பால் தாழ்த்துவதும் - எப்பொழுதும் விண்ணுலக இன்பங்களையே விரும்பும் நெஞ்சத்தை உன் திருவடிகளில் தாழச்செய்வது. ***மனம்*** - தேவர்கள் மனம் எப்பொழுதும் விண்ணுலக இன்பங்களை நுகர்வதையும் அவற்றையும் நெடுங்காலம் நுகர்வதையும் அசுரர் முதலியோரை வென்று தாங்களே உயர்ந் திருப்பதையும் விரும்புவது. அத்தகைய நெஞ்சத்தை நின்திருவடிகளில் பணியச் செய்வது என்றவாறு. தாழ்வதும் என்று தன் வினையால் கூறுமல் "*தாழ்த்துவதும்*" என்று பிறவினையாற் கூறியது; அந்நெஞ்சங்களின்

பணிவு நின்பாற் கொண்ட பக்தியாலன்று; தன்முனைப்பால் நிமிர்ந்து நிற்கும் தங்கள் நெஞ்சைத் தேவர்களை வலிந்து பணியச் செய்கின்றனர்; அந்தப் பணிவு பயன்கருதியேயாகும் என்றவாறு.

தாம் உயர்ந்து தம்மை எல்லாம் தொழவேண்டி - அவ்வாறு உன்முன் தங்கள் நெஞ்சத்தைப் பணிவித்தல் தாம் இப்பொழுதுள்ள விண்ணுலகப் பதங்களினும் மேலான பதங்களை எய்தவும், அதனுல் எல்லா உயிர்களும் தங்களைத் தொழவும், வேண்டி என்றவாறு ;

திருச்சிற்றம்பலம்

முழுத்தழன் மேனித் தவளப் பொடியன் கனகக்குன்றத்
தெழிற்பெருஞ் சோதியை யெங்கள் பிரானை இகழ்திர்கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு வானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம் மால்தொழு விக்குந்தன்
தொண்டரையே★

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *4 - 112 - 5*)

பிணத்தினை யொத்து வாழ்வோர் பின்னடைப் பிணங்கள் போல
உணக்கியே யுழல்வீ ருங்க ளுடலுயி ருணர்வு மெல்லாங்
கணத்திடைத் தோன்றி மாயுங் காயமென் றறிந்தொ ருக்கால்
வணக்குறீ ரரனை யென்றும் வானவர் வணங்க வைப்பான்

(சிவஞான சித்தியார் -சுபக்கம் சூத் - 2 அதி - 4 செ - 95)

எனவரும் நம் தோத்திர சாத்திரங்கள் நினைக.

நாயடியேன் - நாய் போன்ற இழிந்த இயல்புகளுள்ள உன் அடிமையாகிய யான். நாய்பற்றி முன்னம் சிவபுராணம் (60-ல்) "நாயிற்கடையாய் கிடந்த அடியேன்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

★ By virture of his worship of Ista Devada a Sadhaga himself receives worship in the world (Niruthara Thantharam - Translation by Sir John Woodroff)

பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் - பாழ்த்த - பிறவியின் நோக்கமாகிய வீடுபேறு எய்துதற்கான தவம் செய்து உய்யாமல் வீணுகிக் கழிந்த பிறப்பு. இஃது இறப்பையும் இனிவரும் பிறப்பிறப்புக்களேயும் குறிக்கும். அவற்றை அறுத்து வீடுபேறு நல்கும் வண்ணம்.

யானும் - உம்மை, இறந்தது தழுவிய எச்சம்.

உன்னைப் பரவுவனே - ஈற்றேகாரத்தைப் பிரித்து உன்னை என்பதனுடன் கூட்டி உன்னையே பரவுவன் என்றுரைக்க. சிவபெருமான் ஒருவனையே தொழும் ஏக நாயக வழிபாடு குறித்து நின்றது. என்னை? வீடுபேறு தருபவன் அவன் ஒருவனேயாகலின்.

சிவபெருமான் வேண்டுவார்க்கு வேண்டுவதையே ஈவான். அவனை என் சொல்லித் துதிக்கின்ருேமோ அஃதாகவே நாம் ஆவோம் என்றவாறு. திருமால் இறைவனை "வரதா" என்று வாழ்த்தி, வரதராசனுனுன். வேடவடிவத்தில் வந்த சிவபரம்பொருளை அருச்சுனன் "வேடா" என்று விளித்து, வேடர்குலத்தில் கண்ணப்ப நாயனுராகப் பிறந்தான் என்ற புராண வரலாறுகள் காண்க.

தேவர்கள் தாங்கள் நுகரும் விண்ணுலக இன்பங்களை மிக நீண்ட காலம் தொடர்ந்து துய்க்கவும், தாங்கள் இன்னும் உயர்ந்த பதங்களை எய்தித் தங்களை ஏனைய உயிர்கள் அனைத்தும் தொழவும் விரும்பி வேண்டினர். அஃது அவர்களுக்குப் பந்தமாயிற்று. நம் அடிகள் தம் பிறப்பிறப்புக்களை அறுக்க வேண்டி வழுத்தினுர். அஃது அவருக்கு வீடாயிற்று. இவை இரண்டையும் இறைவனே கொடுக்கவல்லவன் என்பதை ;

திருச்சிற்றம்பலம்

" பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை யாரவு முன்னுமென் சிந்தையை
வந்து மால்செய்து மானென வேவிழித்
தெந்தை யாரரு ளெந்நெறிச் சென்றதே"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் தடுத்தாட் கொண்டபுராணம் - 154)

எனவரும் சேக்கிழார் பெருமானின் திருவாக்கிலும் காண்க.

இத் திருப்பாடலில் பிறப்பிறப்பறுத்து வீட்டின்பம் வேட்டு வழிபடுவதைக் கூறியதால் சதகம் நுதலிய "**பத்திவைராக்கிய விசித்திரம்**" பெற்றும். "விண்ணவர்களைப் போலக் காமிய வழிபாடுசெய்து மேலும் பந்தங்களில் பட்டு வருந்தற்க" என்று குறிப்பால் நெஞ்சுக்கு உணர்த்தியதால் பதிகம் நுதலிய "**அறிவுறுத்தல்**" பெற்றும்.

21. பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதம்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கள் மேன்மேலும்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ அரியானே கஎ

(இ - ள்)

சீவன் முத்தர்களுக்கும் இடையறுது காண்பதற்கு அரியவனே! தேவர்கள் நின்னை முன்னிலைப் படுத்துத் துதிப்பார்கள் ; நான்கு மறைகளும் உன் புகழை இசைப்பன; குராமலரையணிந்த நீண்ட கூந்தலுள்ள இளம்பெண்ணுன உமையம்மை நின் திருமேனியின் ஒருபகுதியைத் தனக்குக் கூருக உடையள்; உண்மை அன்புள்ள அடியவர்கள் நின்ஞெடு கலந்து இன்புறுவர். ஆயினும் அவர்கள் ஒலிக்கின்ற கழலணிந்த நின்நீண்ட திருவடித் துணையைத் தொடர்ந்து காண்பார்களோ? காணுர்.

(வி - ரை)

அரியானே - எனவரும் செய்யுளின் ஈற்றுச் சீரை முதலில் அமைத்துப் பொருள் செய்க.

அரியான் - சீவன் முத்தர்கள் சிவபரஞ்சுடரைத் தரிசனம் செய்து இன்புற்றுக் கொண்டிருப்பர். ஆயினும் அவ்வப்பொழுது உலக நினைவுக்கு வருவர். அந்நிலையில் அவர்களுக்கு இறைவன் காட்சி கிட்டாது. எனவே தொடர்ந்து அவர்களாலும் தரிசிக்க இயலாது. ஆதலின் "**அரியானே**" என்ருர்.

இதுபற்றி முன்னம் போற்றித் திருவகவல் (195 - 196 - ல்) "துரியமும் இறந்த சுடரே போற்றி! தெரிவரிதாகிய தெளிவே போற்றி" என்றதன் கீழுரைத்தவையும் பார்க்க.

மேலும் திருக்கோவையார் செய்யுள் 9-ல் "உணர்ந்தார்க்குணர் வரியோன்" என்ற பகுதிக்கு "ஒருகால் தன்னே உணர்ந்தவர்கட்குப் பின் உணர்வதற்குக் கருவியாகிய சித்த விருத்தியும் ஒடுங்குதலான் மீட்டு உணர்வரியோன்" என்று வரும் பேராசிரியர் உரையும் நினைக.

பரவுவார் இமையோர்கள் - இமையோர்கள் பரவுவார் என்று மாற்றிக் கொள்க. ***இமையோர்கள்*** - இமையார் என்பதில் எதிர்மறை ஆகாரம் இடையே புணர்ந்து கெட்டது. கண்கள் இமையாதவர்கள்; விபுதர்கள்; மேலான அறிவுள்ளவர்கள் என்றும் உரைப்பர். ***பரவுவார்*** - பயன்கருதி வேண்டிக்கொள்ளுதல். தேவர்கள் புரியும் வழிபாடு பயன்கருதிச் செய்வது என்பதை முன்னம் 20-ம் திருப்பாட்டில் விளக்கினும். ***பரவுதல்*** - குணங்களைப் பரக்கச் சொல்லுதல் என்பாரும் உளர். முன்னிலையில் துதித்தல் இதனே ;

"வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும் ....
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே"

(தொல்-பொருள்-புறத்திணையியல் - சூ. 807)

என்றதில் ***பரவலும்*** என்றதற்கு" வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇ பரவலும் புகழ்ச்சியும் -கருதிய பாங்கினும் -மேற்சொல்லப் பட்டன வழக்கு இயலும் பக்கத்து வகைபெற நிறுத்திப் பரவலும் புகழ்ச்சியும் கருதிய பக்கத்திலும் ; முன்னோர் கூறிய குறிப்பினும் = முதலாசிரியர் கூறிய காமக் குறிப்பினும் ; செந்துறை வண்ணப் பகுதி உணர்வு இன்று ஆங்கு = செந்துறைப் பாட்டின்கண் வரும் வண்ணப் பகுதி வரைதல் இல்லை அவ்விடத்து" எனவரும். இளம்பூரணர் உரையாலறிக. இவை தேவர்கள் உரைநடையில் துதிக்கும் வழிபாடு.

பாடுவன நால் வேதம் - நால் வேதம்பாடுவன என்று மாற்றுக. ***நால்வேதம்*** - இருக்கு, எசுர், சாமம் அதர்வணம் என்னும் நான்குமறைகள். ***பாடுவன*** - இவை இறைவன் புகழ்களை இசையால் படர்க்கையில் பாடுவன. ***பாடுவன*** என்று அஃறிணைப் பலவின்பாலிற் கூறியதால் ***பிறர்*** அத்தியயனம் செய்யாமல் தாமே பாடுவன என்றவாறு.

குரவுவார் குழல்மடவார் - குரவு - குராமலர். இந்த மலரையணிந்த நீண்ட கூந்தலுள்ள இளம் பெண்ணுன உமையம்மை என்றவாறு. ***குராமலர்*** - இது சிவவழிபாட்டுக்குரிய மலர்களுள் ஒன்று. இறைவன் சடாமுடியில் இம்மலரைச்சூடியுள்ளதை ;

திருச்சிற்றம்பலம்

குராமலரோ டராமதியஞ் சடைமேற் கொண்டார்
குடமுழநந் தீசனைவா சகனுக் கொண்டார்
சிராமலைதஞ் சேர்விடமாத் திருந்தக் கொண்டார்
தென்றல்நெடுந் தேரோனைப் பொன்றக் கொண்டார்
பராபரனென் பதுதமது பேராக் கொண்டார்
பருப்பதங் கைக்கொண்டார் பயங்கள் பண்ணி
இராவணனென் றவனைப்பே ரியம்பக் கொண்டார்
இடருறு நோய் தீர்த்தென்னை யாட்கொண் டாரே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *6 - 96 - 11)*

என வரும் வாக்கின் மன்னவர் வாய் மொழியாலறிக

வார்குழல் - நீண்ட கூந்தல். இஃது உத்தமசாதிப் பெண்களின் இலக்கணங்களில் ஒன்று. அவர்கள் கூந்தல் இயற்கையாகவே நறுமணமுள்ளது. அவர்கள் உடலுறுப்புக்கள் ஒவ்வொன்றும் பேரழகுள்ளன. எனவே அவர்கள் மணம் வேண்டியோஅழகு வேண்டியோ மலர்களை அணிய வேண்டுவதில்லை. ஆனல் மங்கலச் சின்னமாக அணிவர். ஈண்டு உமையம்மை மங்கலங்களுக்குகெல்லாம் மகாமங்கலமாகத் திகழ்தலின் அது குறித்தும் அவள் மலரணிய வேண்டுவதில்லை. ஆதலின் அவள், தன் வார்குழலில் குராமலர்தரித்தது, அம்மலர் நறுமணமும் அழகும் மங்கலமும் பெற்று உலகுயிர்களுக்கு அவற்றை நல்க வேண்டி என்க.

உமையம்மை இறைவனின் தாதான்மிய சத்தியாகி மலருக்கு மணம் தருவதை முன்னம் சிவபுராணம் *(44 -ல்)* "நாற்றத்தின் நேரியாய்" என்றதன்கீழ் விரிவாக விளக்கினும் ஆண்டுக் காண்க.

கூறுடையாள் ஒருபாகம் - ஒருபாகம் கூறுடையாள் என்று மாற்றுக. உன் திருமேனியின் ஒருபாகமாகிய இடப்புறத்தைத்தன் கூருக உடையவள்.

அம்பிகை இறைவனின் எண்குணங்களுள் ஒன்றான பேரருளுடைமையின் உருவகம் என்பது முன்னம் கண்டாம். அஃதாவது இறைவன் குணி, அவன் பேரருளுடைமையாகிய குணத்தைக் கொண்டுள்ளான் என்றவாறு. ஈண்டுக்**குரவுவார் குழன் மடவாள் ஒருபாகம் கூறுடையாள்** என்றமையான் பேரருளுடைமை வினைமுதலாகவும் இறைவன் அதனால் கொள்ளப்பட்ட பொருளாகவும் உள்ளான் என்றவாறு காண்க. எனவே பேரருளுடைமை என் மேற் கொண்ட அருளால் உன்திருவடிகளை எனக்குக் காட்டும்படி உனக்கு ஆணையிடும் என்க.

அம்பிகை இறைவனின் ஒருகூறு உடைமை பற்றி முன்னம் திருவண்டப்பகுதி *(164-ல்)* "குவளைக் கண்ணி கூறன்" போற்றித்திருவகவல் *(52-ல்)* "பாகம் பெண்ணுரு ஆனாய்" என்பவற்றின் கீழுரைத்தவை காண்க.

விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் - மெய்யன்பின் அடியார்கள் விரவுவார் என்று மாற்றுக. ***மெய்யன்பு*** - உண்மையான அன்பு. அந்த அன்பினாலே சிவத்தொண்டு நிலைபெறும் என்று காரணம் காட்டியவாறு.

விரவுதல் - வேறின்றிக் கலந்து நிற்றல். இந்த நிலையை;

கண்டவிவை யல்லேனா னென்றகன்று காணக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்றா னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலு மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களுமதுநா னானே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே

(சிவஞான சித்தியார் -சுபக்கம் -சூ - 9 அ - 3 -செ - 1)

என ஞான சாத்திரம் நவில்வதாலறிக.

மேன்மேல் - இதை "இமையோர்கள் மேன்மேலும் பரவுவார்" "நால்வேதம் மேன்மேலும் பாடுவன;" "மெய்யன்பின் அடியார்கள் மேன்மேலும் விரவுவார்" என ஒவ்வொன்றனுடனும் கூட்டியுரைக்க.

மேலும்;

திருச்சிற்றம்பலம்

அரியானை யந்தணர்தம் சிந்தை யானை
அருமறையி னகத்தானை யணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம பிறவா நாளே

(திருமுறை 6 - 1 - 1)

பாம்பணைத் துயின்றோன் அயன்முதற் தேவர்
பன்னெடுங் காலநிற் காண்பான்
ஏம்பலித் திருக்க வென்னுளம் புகுந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்
பூம்பணைச் சோலை ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே

(திருவிசைப்பா - கருவூர்த்தேவர் 7 - 2)

சார்வருந் தவங்கள் செய்து முனிவரு மமரர் தாமும்
கார்வரை யடவி சேர்ந்தும் காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா வன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார் நீளிருள் நீங்க நின்றார்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - கண்ணப்பநாயனார் - புராணம் - 128)

என நம் திருமுறைகள் தெரிவித்தல் காண்க.

அம்பரவா - அம்பரம் - ஆகாயம்; வெளி. அதில் வாழ்பவன். இது ஞானவெளியைக் குறிக்கும். இதனைச் சிதம்பரம், சிதாகாசம், தகராகாசம், தகராலயம் சூக்கும வெளி எனப்பல பெயர்களாற் கூறுவர். சிவயோகிகள்

தங்கள் தூய உள்ளத்தாமரையை மலரச்செய்து அதன் மையத்திலுள்ள இந்த நுண்ணிய வெளியில் இறைவனைக் கண்டு வழிபட்டு இன்புறுவர். இதை வேதத்தின் முடிவில் காணப்படும் "*தகரவித்தை*" என்று ஆன்றோர் கூறுவர். இந்த ஞானப் பெருவெளியையே நம் சேக்கிழார் பெருமான் "சிற்பரவியோமம்" என்றருளிச் செய்தார்.

அதனை ;

திருச்சிற்றம்பலம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - தில்லை வாழந்தணர் புராணம் - 2)

எனவரும் கவிதைவியத்திற் காண்க.

அம்பலத்தெம் பெரியானே - அம்பலத்தில் நிற்கும் தன்னைச்சிவயோகியரன்றி ஏனைய எளிய தொண்டர்கள் கண்டு வழிப்பட்டின்புற இயலாதாகையில் ஏனையோரும் வழிபட்டுய்யும் வண்ணம் பொதுவில் நின்று இன்னியங்கள் முழங்க நடனமாடும் நிலைகுறித்தது. அம்பலம் பொது இடமாதலும் சுற்றுச் சுவர்கள் தூண்கள் முதலியவற்றால் மறைக்கப்படாமல் தொலைவிலுள்ளோரும் காணும் வண்ணம் அமைந்துள்ள இடமாதலும் நினைக. இது பொன்னம்பலத்தை மட்டுமன்றி அதனையுள்ளிட்ட ஐம்பெரும் சபைகளுடன் திருக்கோயில்கள் தோறும் கூத்தாடுதேவர் எழுந்தருளியுள்ள அம்பலங்களையும் குறிக்கும். ***பெரியோன்*** - தகராகாசம் அம்பலம் ஆகிய ஈரிடங்களிலும் முறையே சூக்குமமாகவும் தூலமாகவும் எழுந்தருளி நடனமிடும் சதுரப்பாடாகிய பெருமையுடைவன். மிகச்சிறிய என்னையும் ஆட்கொண்ட அருட்பெருமையுடையவன் எனலுமாம்.

சிறியேனை - பெருமைக்கு எல்லையாகிய இறைவன், சிறுமைக்கு எல்லையாகிய என்னை ஆட்கொண்டான் என்று அவன் அருட்பெருக்கை வியந்தவாறு. "யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடையான் யாவர்க்கும்

கீழாம் அடியேனை;" (622) என்று நம் அடிகளே பின்னரும் அருளிச் செய்தல் காண்க.

ஆட்கொண்ட பெய்கழல் - என்னை அடிமையாக ஏற்றுக்கொண்டதும் நவமணிகள் பரல்களாகப் பெய்து அமைக்கப்பட்ட கழலணிந்ததுமான திருவடி.

ஈண்டு, நம் அடிகளை ஆட்கொண்டது இறைவனின் அருளேயாகும். அம்பிகை திருவருளின் உருவகமே என்பதை முன்னர்க்கண்டாம்; இறைவனின் இடதுபாகம் முற்றிலும் அம்பிகைக்குரியது என்பதையும் முன்னர்ப்பார்த்தாம்; எனவே ஈண்டு ஆட்கொண்ட திருவடி என்பது அம்பலவாணனின் இடது பாதமாகிய தூக்கியதிருவடி என்று விளக்குவர் கவியரசு அவர்கள். அந்தத் திருவடியே வீடுபேறு நல்கும் என்றும், அது திருவைந்தெழுத்தில் "சி" கரமா உள்ளது என்றும், சிகரத்தை முதலாகக் கொண்டே திருவைந்தெழுத்தைக் கணித்தல் வேண்டும் என்றும்; அவ்வாறு கணிக்கும்பொழுது அந்தத் தூக்கிய திருவடியைத் தியானத்தில் நிறுத்தி வழிபட வேண்டும் என்றும் நம்மை ஞானநூல்கள் ஆற்றுப்படுத்துவதை;

"தோற்றம் துடியதனிற் றோயும் திதியமைப்பில்
சாற்றியிடு மங்கியிலே சங்கார - மூற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு 36

சிவனரு ளாவி திரோதமல மைந்து
மவனெழுத் தஞ்சி னடைவா - மிவனின்று
நம்முதலா வோதிலரு ளுடாது நாடுமருள்
சிம்முதலா வோதுநீ சென்று 42

(உண்மைவிளக்கம்)

என்பவற்றாலறிக.

இவையனைத்தும் படிமுறையில் ஆன்ம முன்னேற்றம் பெறத் தவ முயலும் சாதாரண மக்களுக்கேயாம். நம் அடிகள் தீவிரதர பக்குவம் எய்திய நிலையில் அவரை இறைவன் மானிடச் சட்டை தாங்கிக் குருவடிவில் வந்து ஆட்கொண்டான்; அம்பலவாண மூர்த்தமாக அன்று. எனவே, அவரை ஆட்கொண்டவை

இறைவன் திருவடிகள் இரண்டுமேயாம். இவ்வுண்மையை நம் அடிகளே பின்னர் "இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்" *(275)* என்று அருளுவது காண்க.

விரையார்ந்த மலர்தூவேன் - ***விரையார்ந்த*** - நறுமணம் நிறைந்த. ஆன்மார்த்த சிவபூசையில் நறுமணமிக்க மிகச்சிறந்த புதிய மலர்களைத் தாமே தேடிக்கொண்டுவந்து அருச்சித்து வழிபட வேண்டும் என்பதும்; அவ்வாறு கொண்டு வந்த மலர்களை இனம், வண்ணம் வாரியாகப் பிரித்து ஏந்தி அருச்சிக்க வேண்டும் என்பதும் பூசா விதிகள்.

இதனை ;

மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழுஞ் செயலற மானுல் யார்க்கு
முனமொரு தெய்வ மெங்குஞ் செயற்குமுன் னிலையா மன்றே

(சிவஞான சித்தியார் சுபக் - சூ - 2 அ - 2 செய் - 24)

என்று ஞான சாத்திரம் நவில்வதாலறியலாம். ஈண்டு "இச்சித்த தெய்வம்" என்றது சிவமூர்த்தங்களில் ஒன்றையாகும்.

5-ம் திருப்பாடல் உரையில் எடுத்தாண்ட திருக்கழுமல மும்மணிக் கோவை 12-ம் பாடலிற் கூறியவை - பூசைத் திரவியங்கள் முற்றிலும் முழுமையாகக் கிட்டாத சூழ்நிலையிலும் தேடாதனவற்றை அன்பினில் நிரப்பிச் சிவபூசையை விடாது செய்யும் மன உறுதியையும் வழிபாட்டின் எளிமைப் பாட்டையும் உணர்த்திய விதிவிலக்குக்களாம். அவற்றைப் பூசா விதிகளுடன் கொண்டு மயங்கல் கூடாது. ஆன்மார்த்த பூசையின் இன்றியமையாமை பற்றி முன்னம் "தவமேபுரிந்திலன்" (9) என்ற பாடலின் கீழ் விரித்துரைத்தாம். ஆண்டுக் காண்க.

வியந்து - வியப்புற்று. இஃது உலக வழக்கினுள் நின்றவாறன்றி வேறுபட்டுவரும் ஒரு நிகழ்ச்சியைக் காணும்பொழுது உண்டாகும் மனநிலை. இந் நிகழ்ச்சியைப் "**புதுமை**" என்பர் தொல்காப்பியர்;

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொமாடு
மதிமை சாவா மருட்கை நான்கே

(தொல் - பொருள் - மெய்ப்பாட்டியல் சூ - 251)

ஈண்டுப்புதுமையாவது தகுதியுள்ளவர்களையே இறைவன் ஆட்கொள்ளுவது தொன்றுதொட்டு நிகழ்ந்து வருவதாகும். இன்று ஒரு தகுதியும் இல்லாத என்னை இறைவன் ஆட்கொண்டது புதுமையாகும் என்றவாறு. ***அலறேன்*** - வியப்பினால் வாய்விட்டு அலறமாட்டேன் - இது வாக்கின் செயல். ***நயந்து உருகேன்*** - நெஞ்சம் அன்பினால் கரைந்து மனம் உருக மாட்டேன். இது மனத்தின் செயல். ***மலர் தூவேன்*** - என்று முன்னம் கூறியது உடம்பின் செயல். எனவே சிவவழிபாடு மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் செய்தல் வேண்டும். அவற்றில் ஒன்று கூட நான் செய்யவில்லை என்று ஆட்கொள்ளப்பெறும் தகுதியின்மை குறித்தவாறு.

தரியேன் - அடிமையாவதற்கான இலக்கணங்களில் ஒன்றைக்கூட நான் தாங்கி நிற்கவில்லை என்றவாறு. இந்த உடலைத்தாங்கி இருக்கமாட்டேன் எனலுமாம். "தரிக்கிலேன் காய வாழ்க்கை" (65) என்று பின்னரும் அருளிச் செய்தல் காண்க.

ஆமாறு என் - தகுதிகள் ஒன்றுகூட இன்றி இத்துணை இழிந்த நான் இனி உளனாவது எப்படி எனலுமாம். ***சாவேன் நான் சாவேனே - சாவேன்*** - பிறவிப் பயனை எய்தாத நான் உயிருடன் இருந்தும் உயிரற்றவனையே ஒத்தேன் என்றவாறு.

சாவேன் - இனி உயிர்வாழ்க்கை பயனற்றது என்று தெரிந்தவுடனேயே நான் செத்தொழிந்திருக்க வேண்டும்; ஆனால் நான் சாகவில்லை எனலுமாம். இதற்கு இவ்வாறின்றி அடுக்கு துணிவு பற்றியதாகக் கொண்டு "இறந்தே போவேன்" என்று உரைத்தார்கள் திரு. முதலியாரவர்கள்.

இந்தப் பிறவியின் பயன் கிட்டாமையால் நான் இப்பொழுது இறப்பேன். இறந்தபின் வீடுபேறு கிட்டாமையால் வினைப்பயன்களை நுகர மீண்டும் வந்து பிறப்பேன். அப்பிறவியும் வீணாகில் மீண்டும் இறப்பேன். இவ்வாறு பிறவிப்பயனாக நின்னைத் திரிகரணங்களும் ஒன்ற வழிபடும்

பிறவிகிடைக்கும் வரை ஒவ்வொரு பிறவியிலும் இறந்து கொண்டே இருப்பேன் என்னும் பொருள்பட உரைப்பது கதிர்மணிவிளக்கம்.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 95 - 6)

என்ற நம் வாக்கின் பெருமன்னர் வண்தமிழ் நினைக.

இத் திருப்பாடலில் நம் அடிகள் திரிகரணங்களாலும் சிவபெருமானை வழிபடாத உடலைத் தாங்கி வீணே வாழ்தலினும் சாதலே நன்று என்று கூறுவதால் சதகம் நுதலிய "**பத்திவைராக்கிய விசித்திரம்**" பெற்றும். இத்தகைய பயனற்ற வாழ்வை மேற்கொள்ளாது சிவவழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்று குறிப்பாக நெஞ்சுக்கு அறிவுறுத்துகின்றமையால் பதிகம் நுதலிய '"***அறிவுறுத்தல்***" பெற்றும்.

23. "வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச் செவ்
வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே கக

(இ - ள்)

காமன் எய்யும் மலரம்புகளுக்கும், வெண்ணிறமான பற்களேயும் சிவந்தவாயையும் கருங்குவளேமலர் போன்ற கண்களேயும் கொண்ட மகளிர் பொருட்டும் பதைப்புற்றுக் கதறும் வீணுன மனமே! உடலுறுப்புக்கள் அனைத்தும் உருகும் வண்ணம் நம்முட் புகுந்து அங்கு நிலைபெற்று நம்மை அடிமையாகக் கொண்ட சிவபெருமான், இப்பொழுது நம்மை நீங்கிச் சென்று சிவலோகத்தில் இருக்கின்றான். நீ அதனை அறிந்தாயா? இன்னும் கெட்டொழியாமல் வாழ்கின்றாயே.

(வி - ரை)

இதுவரையும் சிவபெருமானை முன்னிலைப்படுத்து மனத்தின் குறைபாடுகளை அதற்கு முன்னிலைப்புறமொழியாக மென்மையான முறையில் குறிப்பில் உணர்த்திய நம் அடிகள், மனம் அவற்றை ஏற்றுத்திருந்தாமையின் இப்பாடலிலும் அடுத்தபாடலிலும் மனத்தை நேரே விளித்துக் கடிந்துரைக்கின்றார். இப்பதிகத்தின் தோற்றுவாயில் உரைத்தவை காண்க.

வேனில்வேள் - காமன் .***வேள்*** - விருப்பத்தைச் செய்பவன். இது காமன் முருகன் இருவரையும் குறிக்கும். காமன் - ***கருவேள்;*** முருகன் - ***செவ்வேள்.*** முருகனினின்றும் பிரித்துணர்தற்காக ***வேனில்வேள்*** என்றார். பிறிதினியைபு நீக்கிய விசேடணம். ***வேனில்*** - இளவேனிற்காலம். அது காமன் தொழிற்படுவதற்கான பருவம்.

வேனில்வேள் - இவனை ***மன்மதன்*** என்றும் வழங்குவர். இவன் திருமாலின் மானத புத்திரன். கருநிறமுள்ளவன். அழகே வடிவமாக அமைந்த இவனை உயிர்களின் சிற்றின்ப நுகர்ச்சிக்கான தெய்வம் என்பர். இவன் மனைவி அழகே வடிவமான இரதி என்பவள். இவனுக்குக் கரும்பு - வில், மலர் - அம்புகள், அவை ஐந்து; மகரமீன் - கொடி; மாலை - நேரம்; சோலை - படை வீடுகள்; மங்கையர் - சேனை; தென்னம்பாளை - கவரி; மல்லிகை - காளாஞ்சி; தாழைமடல் - வாள்; கிளி - குதிரை; தென்றல் - தேர்; இருள் - யானை; கடல் - முரசம்; குயில் - எக்காளம்; சந்திரன் - குடை. இவன் இந்திரனின் ஆட்சிக்குட்பட்ட தேவர்களில் ஒருவன்.

உயிர்கள் மீது இவன் மலரம்புகளை எய்வன். அதனால் அவை பாலுணர்வு தூண்டப்பட்டுக் கூடச் சந்ததிகள் பெருகும். பிறப்பில்வந்த உயிர்கள் வினைகளைச் செய்து அவற்றின்பயனை நுகர்ந்து ஆன்ம முன்னேற்ற முற்று முடிவில் வீடுபேறெய்தும். அம்பிகையைப் பிரிந்து இறைவன் யோகிருந்தசமயம் தேவர்கள் ஏவலால் பெருமான்மீது மலரம்புகளை எய்து அவர் நெற்றி விழியால் நெருப்புக்கிரையானான். பின்னர் இரதியின் பிரார்த்தனையால் இறைவன் இவனை உயிர்ப்பித்து அவளுக்குமட்டும் தெரியும் வடிவமீந்தான். ஆதலின் இவன் **அனங்கன்** என்றும் பெயர்பெற்றான்.

மலர்க்கணை - காமனின் ஐந்து மலரம்புகள். அவை தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன. இவற்றை முறையே ; உன்மத்தம், மதனம், சம்போகம், சந்தாபம், வசீகரணம் என்றும் வழங்குவர். இவற்றால் எய்யப் பட்டாருக்கு இவை முறையே.

தாமரை	:	சுப்பிரயோகம் (சொல்லும் நினைவும் தாம் காமுற்றார் பற்றியே இருத்தல்);
மா	:	விப்ரயோகம் (வெய்துயிர்த் திரங்கல்);
அசோகு	:	சோகமும் வெதுப்பும் துய்ப்பன தெவிட்டலும்;
முல்லை	:	மோகத்தில் அழுங்கலும் மொழிபல பிதற்றலும்;
நீலம்	:	அயர்ப்பும் மரணமும்;

ஆகிய துன்பங்களைச் செய்வன

(அபிதான சிந்தாமணி பக்கம் 1280)

வெண்ணகை - வெண்ணிறமான பற்கள் சிறிது தெரியும் வண்ணம் செய்யும் புன்னகை. மகளிரின் இளம்பருவம் குறித்து நின்றது. இதுபற்றி முன்னம் போற்றித் திருவகவல் *(30-ல்)* "வெண்ணகை" என்றதன் கீழுரைத்தவை காண்க. ***செவ்வாய்*** - இளமைப் பருவத்தால் இயல்பாகவே சிவந்திருக்கும் உதடுகள் கொண்ட வாய். அகவை முதிரமுதிர இவற்றின் செந்நிறம் மங்கிப் பழுப்பு நிறமாகவும் கருநிறமாகவும் மாறிவிடும். ***கரியபானலார் கண்ணியர்*** - கருங்குவளை மலர் போன்ற கண்களுள்ள இளமகளிர் - ***கரிய*** என்றதனைப் பானல்; கண் இரண்டுக்கும் கூட்டுக. **பானல்** - குமுதம்; குவளைமலர். இஃது இரவில் மலர்வது. குவளைமலரில் வெண்குவளை செங்குவளை, கருங்குவளை என்ற பிரிவுகள் உண்மையால்

24. வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே (உ0)

(இ - ள்)

பேரின்ப வாழ்வில் ஈடுபடாத நெஞ்சமே! மானிடப்பிறவி எடுத்ததன் பயனாகிய வீடுபேற்றை எய்தமுயலாமல் நீயுந்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்; வலிய இருவினைகளின் வயப்பட்டு அவற்றுள்ளே பல முறையும் மூழ்கிக் கொண்டிருக்கின்றாய்; அங்ஙனம் மூழ்காமற் பலமுறையும் காப்பாற்றும் பெருமானைப் பலமுறையும் புகழ்ந்து துதிக்காமல் உனக்கு நீயே பலமுறையும் கேடு தேடிக்கொள்ளக் கருதுகின்றாய்; உனக்குப் பலமுறையும் இடித்து அறிவுரை கூறிவருகின்றேன்; அங்ஙனம் கூறி வந்தும் நீ துன்பமாகிய கடற்பெருக்கில் பலமுறையும் வீழ்ந்து மூழ்குகின்றாய்.

(வி - ரை)

"வாழாத நெஞ்சமே" என்பதை முதலில் வைத்துப் பொருள் கொள்க.

உயிர் என்றும் அழியாத வீட்டின்பம் நுகர்வதற்கும் தொடர்ந்து துன்பம் தரும் இருவினைப் பயன்களை அனுபவித்தற்கும் நெஞ்சமே கருவியாகும். அத்தகைய நெஞ்சம் தான் விரும்பும் வீட்டின்பம் பெறக் கருவியாக அமையாமையின் அஃது இருந்தும் பயனற்றதாகின்றது. ஆதலின் அதனை "*வாழாத நெஞ்சமே!*" என்றார்.

வல்வினைப்பட்டு - வலிய இரு வினைகளாகிய விலங்கில் பந்திக்கப்பட்டு என்று ஏகதேச உருவகமாகக் கொள்க. இருவினைகளில் தீவினை இரும்பு விலங்காயின் **பசுபுண்ணியமாகிய** நல்வினை பொன் விலங்காகும். இவற்றுள் நல்வினையின் பயனாகிய இன்பத்தை நுகரும்பொழுது ஏறும் ஆகாமியம் முழுவதும் நல்வினையாகவே இருக்கும் என்பது உறுதியில்லை. அதில் தீவினையும் ஏறும்; அதன் பயன் துன்ப நுகர்வாம். எனவே இவ்விருவினைகளும் உயிருக்குப் பந்தமாம். இவற்றினின்று உயிர் தானாக விடுபடுவதின்மையின் *வல்வினைப்பட்டு* என்றார்.

ஆழ்கின்றாய் - ஆழ்ந்து கொண்டே இருக்கின்றாய், இன்னும் அடித்தளம் சேரவில்லை என்றவாறு. இதனால் ஆழத்தின் மிகுதியும், இப்பொழுது முயன்றாலும் மீண்டுய்வதற்கு வாய்ப்புள்ளது என்பதும், காலம் தாழ்க்கின் மீளும் முயற்சி மேலும் கடினமும் அருமையுமாகும் என்பதும் உணர்த்தியவாறு.

பல்காலும் - பலமுறையும் இதனை "*ஆழ்கின்றாய்*" "*ஆழாமல் காப்பானை*" "*ஏத்தாதே*" "*சூழ்கின்றாய்*" "*சொல்கின்றேன்*" "*வீழ்கின்றாய்*" என்ற ஒவ்வொன்றன்முன்னும் வைத்துப்பொருள் செய்க.

பல்காலும் ஆழ்கின்றாய் - இப்பிறவியில் நீ வேனில்வேள் மலர்க்கணைக்கும் "பானலார் கண்ணியர்க்கும்" பலமுறை பதைத்துருகினாய்; முற்பிறவிகளிலும் அவ்வாறே பதைத்துருகினாய்; அவ்வாறு பதைத்துருகிய ஒவ்வொரு முறையும் நீ வல்வினைக்கடலில் ஆழ்கின்றாய் என்றவாறு. இங்ஙனம் உயிர்கள் ஒவ்வொருமுறையும் இருவினைப்பயன்களை மூவுலகங்களிலும் சென்று நுகர்ந்து அலமருதலை.;

"பூதனா சரீரம் போனால் புரியட்ட ரூபந் தானே
யாதனா சரீர மாகி யின்பத்துன் பங்க ளெல்லா
நாதனா ராணை யுய்க்க நரகொடு சுவர்க்கந் துய்த்துத்
தீதிலா வணுவா யோனி சேர்ந்திடுஞ் சீவ னெல்லாம்"

(சிவஞான சித்தியார் - சூ 2 - 2 - 36)

"மலமாயை கன்ம மாயே யந்திரோ தாயி மன்னிச்
சலமாரும் பிறப்பி றப்பிற் றங்கியித் தரைகீழ் மேலு
நிலையாத கொள்ளி வட்டங் கறங்கென நிமிடத் தின்க
ணலமாரு மிறைவ னாணை யாலுயிர் நடக்கு மன்றே"

(சிவஞான சித்தியார் -சுபக்கம் -சூ. 2 - 4 - 88)

என்று சாத்திரம் சாற்றுவது காண்க.

பலகாலும் ஆழாமற் காப்பானைப் பலகாலும் ஏத்தாதே - பல பிறவிகளிற் செய்த தீவினைகள் உயிரைப்பற்றித் தம்முள் ஆழ்த்தும் வலிமை பெற்றவை. அவற்றினின்றும் தப்பி உய்வதற்கான ஒரேவழி சிவபெருமானைத் துதித்தலேயாம்.

இதனை ;

திருச்சிற்றம்பலம்

இருவினைப் பாசமும் மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகல்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 129)

எனச் சேக்கிழார் பெருமான் தீட்டும் செஞ்சொல்லோவியத்திற் கண்டு மகிழ்க.

முன்னம் சிவபுராணம் (20-ல்) "உரைப்பன்" என்றதன்கீழ் எடுத்தாண்ட முதற்பாவலர் மொழியும் அதற்குப் பரிமேலழகர் உரையும் பார்க்க.

பலகாலும் ஏத்தாதே - "ஏத்தேன் நாத்தழும்பேற" (17) என்று முன்னரும் அருளிச் செய்தது நினைக.

சூழ்கின்றாய் கேடு உனக்குப் பல்காலும் - பல்காலும் கேடு உனக்குச் சூழ்கின்றாய் என்று மாற்றி அமைத்துக் கொள்க. **சூழ்தல்** - ஆராய்ந்து சதுரப் பாட்டுடன் செய்தல். **பல்காலும்** - பலமுறையும்; பல வழிகளிலுமாம். **கேடு** - கெட்டு ஒழிவதாகிய தீமைகள். நீ கெட்டழிவதற்கான தீமைகளைப் பல வழிகளில் பலமுறை நீயே மிகவும் ஆராய்ந்து திறமையுடன் தேடிக் கொள்கின்றாய் என்றவாறு. கேடுவரின் அதனின்றும் தப்பி உய்வதற்கான பலவழிகளையும் பலமுறை ஆராய்ந்து திறமையுடன் செயல்பட்டு வெற்றிபெறுவது அறிவுடைமை. ஆனால் நீயோ கேடு வருவதற்கான பல வழிகளைப் பன்முறையும் திறமையுடன் ஆராய்ந்து செயல்பட்டுக் கேட்டைத் தழுவிக் கொள்கின்றாய் என்றவாறு.

ஈண்டு ;

" அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது" (திருக்குறள் - 843)

என்ற வாயுறை வாழ்த்தும் அதற்குப் பரிமேலழகர் உரையும் காண்க.

உனக்கு - இதை இடைநிலைத் தீபமாக வைத்து, உனக்குக் கேடு சூழ்கின்றாய்; உனக்குச் சொல்கின்றேன் என ஈரிடத்தும் புணர்த்துப் பொருள் கொள்க.

பல்காலும் சொல்கின்றேன் - உனக்கு நீயே கேடு பயப்பனவாகியவற்றைச் செய்யற்க என்று ஒருமுறை இருமுறை கூறியும் திருந்தாவிடில் இடித்துக் கூறுதல் உலக இயல்பு. ஈண்டு, நெஞ்சமாகிய உனக்குத் தீமைபயக்கும் செயல்களை விட்டொழிக்கும்படி இறைவனை முன்னிலைப்படுத்து முன்னிலைப் புறமொழியாக முதலில் (பாடல் 15 முதல் 22 வரையும்) குறிப்பாக அறிவுறுத்தினேன்; நீ திருந்தவில்லை; மேற்பாட்டில் இடித்துரைத்தேன் பின்னும் நீ திருந்தவில்லை; இப்பாட்டிலும் இடித்துறைக்கின்றேன் என்றவாறு, பலமுறை இடித்துரைத்தும் ஒருவர் திருந்த வில்லையாயின் அவரைவிட்டொழிதல் உலகியல்பு. ஆனால் நான் உன்னை அவ்விதம் விடாது இன்னும் சொல்லிக் கொண்டிருக்கின்றேன் என்பார். "**சொன்னேன்**" என்னாது **சொல்கின்றேன்** என்று நிகழ்காலத்தில் கூறும் நுட்பம் காண்க.

வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே - நீ அவலக்கடலாய வெள்ளத்தே பல்காலும் வீழ்கின்றாய் என்று கொண்டு கூட்டியுரைத்துக்கொள்க.

வீழ்கின்றாய் - கடற்கரைப்பகுதியில் குடியிருக்கும் பரதவர் முதலியோர் கடல்பொங்கி வெள்ளம் குடியிருப்புக்களிலும் மீதுருமாயின் அங்குநின்றும் விலகி மேட்டுப்பகுதிகளை அடைந்து உய்வர். ஆனால் நீயோ கடலுக்குள்சென்று வீழ்ந்துகொண்டிருக்கின்றாய். ஒருமுறை ஆழியுள் வீழ்ந்தாரை பரதவர் கடற்படையினர் முதலியோர் மீட்டு எடுத்துக் காத்தலுண்டு. ஆனால் நீயோ இறைவன் பலமுறை உன்னைக் காத்துமீட்டும், மீண்டும் மீண்டும் கடலுள் வீழ்ந்துகொண்டிருக்கின்றாய் என்றவாறு. இறைவனும் சான்றோர்களும் பலமுறை உன்னை நன்னெறியில் உய்த்தும் நீ மீண்டும் மீண்டும் அவலக்கடலில் வீழ்ந்து கொண்டுள்ளாய் என்பார் "வீழ்ந்தாய்" என இறந்தகாலத்தில் கூறாது "வீழ்கின்றாய்" என நிகழ்காலத்திற் கூறினார்.

அவலக்கடல் - கடல்முழுவதும் உவர்நீருக்குப் பதிலாக அவலமே நிறைந்துள்ள கடல் என்றவாறு. கண்ணுக்குத் தெரியும் எல்லைதாண்டிப் பரந்து விரிந்திருப்பதும், அலைகள் தொடர்ந்து வருவதும், அகப்பட்டோரை அலைத்துக் கொல்வதும் கடலின் இயல்பு. அவ்வாறே வினைப்பயனாகிய அவலமும் அளக்கொண்ணாததும் வினைநுகர்ச்சியை எல்லையின்றித் தொடர்ந்து தருவதும் அகப்பட்ட உயிரை அலைத்து வருத்துதுமாகிய இயல்பினது அவலம்.

உவர்கடலில் வீழ்ந்தவன் சிறிது நேரம் அலைப்புண்டு உவர்நீரைப் பருகுவன். அந்தநீர் அவன் நுரையீரலிலும் வயிற்றிலும் நிரம்பியபின் இறந்து விடுவன்; அத்துடன் அவன் துன்பம் முடிந்துவிடும்; ஆனால், அவலக்கடலில் விழுந்தநீ, உன்னால் ஈட்டப்பட்ட அவலமாகிய அந்தக் கடல் நீர் முழுவதையும் பருகியே ஆகவேண்டும் என்றவாறு.

வெள்ளம் - மிகுந்த நீர்ப்பரப்பு. ஈண்டு மிகுந்த துன்பப்பரப்புக் குறித்து நின்றது.

ஈண்டு ;

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்த
ரிறைவ னடிசேரா தார்

(திருக்குறள் - 10)

என்று தெய்வநூல் நவில்வதும் அதற்குப் பரிமேலழகர் உரையும் பார்க்க.

இத்திருப்பாடலில் வல்வினையில் ஆழாமற் காப்பானை ஏத்தவேண்டும் என்று இடித்துரைப்பதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். இறைவனை ஏத்தும்படிப்பல் காலும் சொல்கின்றமையால் பதிகம் நுதலிய "***அறிவுறுத்தல்***" பெற்றும்.

ரு. சுட்டறுத்தல்

இந்தத் திருச்சதகத்தின் முதற்பகுதிகளில் நிலேயற்ற உலகப் பொருள்களே நீத்து நித்தியப்பொருளாகிய இறைவன் உணர்வில் தலேப்படுதலே விளக்கினர். இரண்டாம் பதிகத்தில் அவ்வாறு தலேப்பட வேண்டிய இறை உணர்வில் தமக்குத்துணே நிற்க வேண்டிய மனம் அந்நெறிக்கு மாருகிய வழியில் படர்தல் கண்டு அதற்கு இடித்துரைத்து அறிவுரை அருளினர். அவ்வாறு அறிவுரை பெற்ற நெஞ்சம் இறைவனேத் தியானத்தில் நிறுத்தியும்; பொறிகளின் வாயிலாகப் புறத்தே இறைவன் திருமேனியைக் கண்டும் வழிபட முயன்றது. இவை, இறைவனே ஒரு வடிவமாகக் கண்டு சுட்டி அறியும் முயற்சிகளாகும். இம்முயற்சிகள் இறைவனே எய்துதற்கு ஓரளவு சாதனமாகவே அமைவன; கருதிய பயனேப் பயவா. சுட்டி அறியப்படுவன எல்லாம் கால எல்லேயுள்ளும் இடவெல்லேயுள்ளும் அமைந்து நிலேயற்றனவாக ஒழியும். இவ்வுண்மையை;

"ஈண்டு, அறிவினல் அறியப்பட்ட சுட்டு அசத்து என்றது" என்று சிவஞானபோதம் 6-ம் சூத்திரம் முதலதிகரணம் மேற்கோள் காட்டுவதிலும் அதற்குச் "சுட்டறிவினல் அறியப்பட்ட சுட்டுப் பொருள் எல்லாம் அசத்து" என்று சிவஞானமாபாடியம் விளக்கம் தருவதிலும் காண்க. இந்த அறிவை ஆன்ம போதத்தால் அறிய இயலாது; பொறி முதலிய கருவிகளுடன் புணராத மெய்யுணர்வினல் மட்டுமே அறிய இயலும். இந்த மெய்யுணர்வை பரஞானம், பதிஞானம், சிவஞானம் என்ற பெயர்களாற் கூறுவர். ஆன்ம போதத்தைத் திருக்குறள் பொருட்பாலில் அரசியல் பகுதியில் "அறிவுடைமை" என்ற அதிகாரமாயும்; பதிஞானத்தை அறத்துப் பாலில் "மெய்யுணர்தல்" என்ற அதிகாரமாயும் நாயஞர் அமைத்துள்ளார்.

சுட்டுணர் வில் பதித்த நெஞ்சம் தவம் முதிர முதிர நினேயும் மனமும் கெட்டொழியத் திரிபுடி யின்றித் தியானத்தில் திளேக்கும். ★

★ " யத்ர நான்யத்பச்சயதி நான்யச்சருஞேதி
நான்யத் விஞ்நஜாஞதி ஸ பூமா!"

இதன் பொருள் :" எதன்கண் வேறு எதையும் ஒருவன் காண்கின்ற தில்லேயோ; வேறு எதையும் கேட்கின்ற தில்லேயோ, வேறு எதையும் அறிகின்ற தில்லேயோ, அஃது அகண்ட வஸ்து. (சாந்தோக்கிலே உபநிதம் 7- 24-1)

இறைவனின் நிறைவுநிலை மெய்யுணர்வுக்கு விளக்கமாகும். எனவே இரண்டாம் பதிகத்தில் நெஞ்சை இறைவன் திருவுருவில் பதியும்படி அறிவுறுத்த நம் அடிகள், அடுத்த கட்டமாக அந்தச் சுட்டறிவையும் அறுக்கும்படி இந்தப் பதிகத்தில் ஆற்றுப் படுத்துகின்றார். ஆதலின், இந்தப் பதிகத்துக்குச் "சுட்டறுத்தல்" என்று தலைப்பிட்டனர் நம் முன்னோர்.

ஈண்டு முன்னம் 21-ம் திருப்பாடல் விளக்க உரையில் "அரியானே" என்றதன் கீழ் எடுத்தாண்ட திருச்சிற்றம்பலக் கோவையார் 9-ம் செய்யுளும் அதற்குப் பேராசிரியர் உரையும் நினைக.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

25. வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே. உக

(இ - ள்)

கங்கையின் நீர்ப்பெருக்கு, தாழ்வடைந்து தங்கும் வண்ணம் விரிந்த சடையினையுடையவனே! ஆனேறாகிய ஊர்தியையுடையவனே! தேவர்கள் தலைவனே! என்று அடியவர்கள் விளித்துத் துதித்தலைக் கேட்ட அளவிலே; வேட்கை மிகுந்த நெஞ்சுடையவனாகிப் பள்ளத்தில் விழுகின்ற நீர்ப்பெருக்குப்போன்று கீழ் மேலாகும்படி துடிதுடித்து உருகும் உண்மை அடியவர்களாகிய அவர்கள் ஒருபுடை நிற்க; சிறியேனாகிய என்னை

My God, could I weep blood, gladly I would, if Thou wilt give me that art, Which through the eyes pours out the heart, I will exhaust it all the make Myself all tears, a weeping lake.

- Hendry Vughan

அடிமையாகக் கொண்ட நின் பொருட்டு உள்ளங்கால்களிலிருந்து உச்சந்தலை வரையும் உள்ள உடலுறுப்புக்கள் மனமாகவே மாறி நின்று உருகாமையாலும்; உடல்முழுவதும் கண்களாக மாறிக் கண்ணீர்ப் பெருக்கெடுக்காமையாலும்; என் தந்தையே! தீவினையாளனாகிய எனக்கு நெஞ்சம் கல்லாலானது; கண்களிரண்டும் மரத்திலுள்ள கணுக்களாம்.

(வி - ரை)

முன்னம் 24-ம் திருப்பாடலில் தம் நெஞ்சம் தகாத வழியில் ஒழுகுவது பற்றி இடித்துரைத்த நம் அடிகள் தம் தகுதியற்ற நிலைகண்டும் இறைவன் தம்மை ஆட்கொண்ட பேரருளை நினைந்து, அந்நெஞ்சம் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பற்றி ஈண்டு அறிவுறுத்துகின்றார்.

வெள்ளம் - பூவுலகம் தாங்க வொண்ணாத அளவுவந்த கங்கை நதியின் பெருநீர்ப்பரப்பு.

தாழ் - அத்துணைப் பெருவெள்ளம் தன் அளவும் ஆற்றலும் தாழ்வடையும்படி.

விரிசடை - விரிந்து உயர்ந்து தடுத்த சடை. *விரி* - இறந்தகாலம் குறித்த வினைத்தொகை.

சடை - இறைவன் திருமுடியிலுள்ள ஒன்பது சடைகளில் ஒன்று மட்டுமே.

சிவபெருமான் விண்ணின்றும் இழிந்த கங்கையைத் தன் சடையில் தாங்கிச் சிறைப்படுத்த இச்செய்தியை ;

திருச்சிற்றம்பலம்

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்று
மாசிலாப் புன்சடைமேல் மதியந் தோன்றும்
இயல்பாக விடுபிச்சை யேற்ற றோன்று
மிருங்கடனஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றும்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
யாயிரமா முகத்தினொடு வானிற் றோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

(திருமுறை - 6 - 18 - 5)

அறுத்தானை யயன்தலைக ளஞ்சி லொன்றை
அஞ்சாதே வரையெடுத்த அரக்கன் தோள்கள்

இறுத்தானை யெழுநரம்பி னிசைகேட் டானை
இந்துவினைத் தேய்த்தானை இரவி தன்பற்
பறித்தானைப் பகீரதற்கா வானோர் வேண்டப்
பரந்திழியும் புனற்கங்கை பனிபோ லாங்குச்
செறித்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 50 - 10)

என வரும் அரசுகள் தேவாரங்களிற் காண்க.

சடை - ஈண்டுப் பதிஞானம் குறித்து நின்றது. கங்கை, வேகமும் கலக்கமும் கொண்டு வந்தாள்; சடையில் தங்கி அமைதியும் தெளிவும் பெற்றாள். உலகியலில் உழலும் ஆன்ம அறிவு வேகமும் கலக்கமும் கொண்டது. அஃது எங்கும் வியாபகமாகவுள்ள சிவஞானத்துள் வியாப்பியமாக அடங்கும் பொழுது. அமைதியும் தெளிவும் கொள்ளும் என்றவாறு. முன்னம் சிவபுராணம் (6-ல்) "வேகங் கெடுத்தாண்ட வேந்தன்" என்றருளியதும் ஆண்டு "வேகம்" என்றதன் கீழுரைத்தவையும் காண்க. ★

கங்கையைச் சடையில் தாங்கிய வரலாறு முன்னம் போற்றித் திருவகவல் 109 - ல் "செஞ்சடை" என்றதன் கீழுரைத்தாம்.

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்து
மெழுத்தறிவார் காணி னிலையா -மெழுத்தறிவா
ராயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.

(நன்னெறி - 21)

(எழுத்து இலக்கணம்) என்றதும் நினைக.

விடை - அறக்கடவுளாகிய ஆனேறு. இறைவன் அறத்தைத்தன் இருப்பிடமாகக் கொண்டு அதைப் பாதுகாத்து வழிநடத்துபவன். இது வ்ருஷ; என்ற வடசொல்லின் திரிபு. இதற்கு "ரிஷபம்" என்றும் "தருமம்" என்றும் இரு பொருள்கள் உண்டு. பல ஆக்களுக்கு ஓர் ஆனேறே வித்தாக அமைவது போல எல்லா இன்பங்களுக்கும் அறமே விதையாகின்றது. அறமின்றேல் இன்பமுமில்லை என்பதுணர்க.

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(திருக்குறள் - 31)

என்ற வாயுறை வாழ்த்து நினைக.

தில்லையையும் சிவபெருமானையும் "திரு" என்ற அடையின்றி வழங்குவது போல ஈண்டு இறைவன் ஊர்தியையும் அடையின்றி ஓதியது அதன் ஒப்புயர்வற்ற மாண்பினையுணர்த்தற்கு என்று விளக்குவார் திரு. தேசிகரவர்கள்.

விண்ணோர் பெருமான் - நிலவுலகுக்கு மேலுள்ள எல்லா உலகங்களிலுமுள்ள திருமால் முதலாக உள்ள விண்ணுலக வாசிகளின் தலைவன். "விண்ணோர் முழுமுதல்" (253) என்று நம் அடிகளே பின்னரும் அருளிச் செய்தல் காண்க.

எனக்கேட்டு - என்று தமக்கு அண்மையிலுள்ள மெய்யன்பர்கள் இறைவனை விளித்தல்கேட்டு, அவர்கள் விளிப்பது கேட்கும் அளவு அண்மையில் இருந்தனர் என்றதால் எப்பொழுதும் அடியார் கூட்டத்துடன் இருத்தல் வேண்டு மென்பது பெற்றும்.

வேட்ட - விரும்பிய. **வேட்கை** - விரும்பிய. பொருளை அடைந்தாலன்றித் தீராத ஆர்வம். நீர் வேட்கை நீருண்டாலன்றிப் பிறவற்றைப் பருகுவதால் தீராதது போலவே சிவபெருமான் மீது உண்டான அன்பும் அவனை அடைந்தாலன்றிப் பிற தெய்வங்களைச் சாரினும் தீராததால். முன்னரும் (6) "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு" என்றருளியது நினைக.

சிவபெருமானின் நாமத்தைக் கேட்ட அளவிலேயே ஈண்டு வேட்கை மிக்கதாயிற்று என்பது மனங்கொள்க. இதனைக் கற்பு மிக்க காதலி ஒருத்தி தன் தலைவன் பெயர் கேட்ட அளவில் தன் வயம் அழிதல் தலையன்பும், கண்ட அளவில் வயம் அழிதல் இடையன்பும், ஊற்றின்பத்தில் வயம் அழிதல் கடையன்பும் ஆம் என்று விளக்குவது கதிர்மணி விளக்கம்.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

"முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்தும வனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 25 - 7)

என நம் அரசுகள் தீட்டும் அழகோவியம் காண்க.

பள்ளம் தாழ் உறுபுனல் - மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி வரும் மிகுந்த நீர் வெள்ளம்; நீர் வீழ்ச்சி. புவிஈர்ப்பு ஆற்றல் காரணமாக நீர் பள்ளத்தில் விழும். நீரின் அளவு மிகுதியாக இருக்குமாயின் அது வேகமாக விழும். ஈண்டு **உறுபுனல்** என்றது மிகுதியான நீர்ப்பெருக்கு என்பதாம். இதைப் "பள்ளமடை" என்று வழங்குவர். இந்த உவமை ***"யதாபக பிரவதாயந்தி"*** என்று வேதத்திலும் எடுத்தாளப்படுகின்றது.

உறுபுனல் - உறு . வினைத்தொகை.

கீழ்மேலாக - நீர்மிகுதியாக இருக்குமாயின் நீர்வீழ்ச்சியில் முதலில் விழுந்த நீரின் பகுதி மேலெழுதலும் பின்னர் விழுந்த பகுதி கீழ் விழுதலும் பிறகு அதுமேலெழும்ப அதற்கு மேலுள்ள நீரின்பகுதி கீழே செல்வதுமாகச் சுழல்வது இயற்கை. இஃது ஈண்டு மெய்யடியவரின் உள்ளம் சுழல்வதற்கு உவமை.

இதற்கு இவ்வாறின்றித் "திருவடிகாண வேண்டும் என்ற அவாவினாலே தாழ்ந்த ஜலத்திலாழ்ந்தித் தலைகீழாக நின்று யோக சமாதி செய்தும் "என்றுரைத்தார்" சீகாழித்தாண்டவராயர்.

பதைத்து - துடி துடித்து; பெறுவதற்கு விரைந்து.

உருகும் அவர் - மெய்யடியார்களின் உள்ளம் சிவநாமங்களைப் பிறர் சொல்லக் கேட்ட அளவிலேயே உருகும். இதனை நம் அடிகளே பின்னர் *(155 - ல்)*

ஆதியும் ... மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய
வாழ்த்தொலிபோய் வீதிவாய்க் கேட்டலுமே விம்மி
விம்மி மெய்ம்மறந்து போதா ரமளியின் மேனின்றும்
புரண்டிங் ஙன்ஏதேனு மாகாள் கிடந்தாள்

என்று அருளுவது காண்க.

திருச்சிற்றம்பலம்

தேரொலிக்க மாவொலிக்கத் திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
ஊரொலிக்கும் பெருவண்ணா ரெனவொண்ணா வுண்மையினார்
நீரொலிக்க அராவிரைக்க நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க வுருகுமவர்க் கொலிப்பவர்பெரு
விருப்பினொடும்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருக்குறிப்புத் தொண்டநாயனார் - புராணம் 113)

எனவரும் சேக்கிழார் பெருமானின் திருவாக்கும் நினைக.

அவர் நிற்க என்னை ஆண்டாய்க்கு - அத்துணைச் சிறந்த தலையாய அன்புள்ள தொண்டர்கள் இருக்கவும் அவர்களுக்கு அருள் செய்யாது, காமன் அம்புகளுக்கும் இளம் மகளிர்க்கும் பதைத்துருகும் இழிந்த என்னை ஆட்கொண்டருளிய பேரருளாளனாகிய நின்னைக் குறித்து. இவ்வுருபு பொருட்டுப் பொருளது. ஆட்கொண்டருளிய நின் காரணமாக.

ஒழுங்காக வாழும் மைந்தர்கள் உண்ணவேண்டி இல்லத்தில் காத்திருக்கவும், எப்போதாவது வீட்டுக்கு வரும் நெறியற்ற மைந்தன்

உண்ணுது போய்விடக் கூடாதே என்று அவனை முதலில் உண்பிக்கும் அன்னை போல இறைவனும் மெய்யன்பர்கள் காத்திருக்கத் தகுதியற்ற தம்மை ஆட்கொண்டான் என்றவாறு. தகுதியுள்ள பேரடியார்கள் எத்துணைக்காலமாயினும் காத்திருந்து அருள் பெற்றுய்வர். தகுதியற்ருேர் மீண்டும் வழுவில் சென்று தீநெறியில் வீழ்ந்தலமருவர். அவ்வாறு அவர்கள் கெட்டொழியா வண்ணம் இறைவன் உடனே அருள்புரிந்தான் என்பது குறிப்பு.

ஈண்டு ;

மங்கைகே ளறிவு பொறையற நீதி
வாய்மைநே ரச்சமன் புடையோ
ரங்கவர்க் காப்ப ததிசய மல்ல
வாங்கவை யவர்தமைக் காக்குந்
தங்கிய விவற்றுட் பிறங்கிட வொன்றுஞ்
சார்விலா தின்னுயிர் தளர்வோ
ரிங்கவர் தம்மைக் காத்தல்கா ணுலகி
லதிசய மியம்பிடி லன்றே

(திருவால வாயுடையார் திருவிளையாடற்புராணம்
மாபாதகந் தீர்த்த திருவிளையாடல் 17)

திருச்சிற்றம்பலம்

பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம்பல ரேம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே

திருச்சிற்றம்பலம்

(கருவூர்த் தேவர் திருவிசைப்பா - தஞ்சை இராசராசேச்ரம் - 8)

என்பனவும் முன்னம் - 22 -ம் திருப்பாடலில் "அரியானே" என்றதன் கீழுரைத்தவையும் காண்க.

அண்ணு! - தந்தையே! அணுகமுடியாதவனே எனலுமாம். "அண்ணுமலையெம் அண்ணு போற்றி" என்ருர் முன்னரும் (போற்றித் திருவகவல் - 149)

உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகாதால் - உருகுவது நெஞ்சம்; அஃது உடம்பினுள் ஒரு சிறுபகுதியாகும். உன்பேரருளை நினைந்து உருகுவதற்கு அதுபோதியதன்று; உடல் முழுவதும் நெஞ்சம் என்ற உறுப்பாக இருத்தல் வேண்டும் என்றவாறு. முன்னரும் "உருகுவ துள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக் கள்ளூ ருக்கை யமைத்தனன்" (திருவண்டப்பகுதி 175 - 177) என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

" உள்ள முருகி லுடலுவ ரல்லது
தெள்ள வரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீற

(திருவுந்தியார் - 7)

மேட்டுநிலத்தினின்றும் பள்ளத்தில் நீர் விழும்பொழுது கீழ்மேலாகச் சுழலும் என்பதை முன்னம் பார்த்தோம். அதற்கேற்ப "உச்சியினின்றும் உள்ளந்தாள் அளவும்" என்னுது "உள்ளந்தாள் நின்று உச்சி அளவும்" என்ருர்.

உடம்பெல்லாம் கண்ணுய் - உடம்பின் அகத்தேயுள்ள நெஞ்சம் உருகுங்கால் புறத்தேயுள்ள கண்களினின்றும் கண்ணீர் பெருகுதல் இயல்பு.

இதனை;

" அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

(திருக்குறள் - 71)

எனவரும் வள்ளுவர் வாய்மொழியா லறிக.

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
னல்லாயுளவாமா னீர்நிழல்போ - லில்லா
வருவாகி நின்றானை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று

(சிவஞானபோதம் சூ - 8 அதி - 2 வெண்பா 3)

என்ற ஞானசாத்திரம் நினைக.

உடம்பு எல்லாம். எல்லாம் - முழுவதும் அங்ஙனம் நெஞ்சம் உருகிக் கண்ணீர் வெள்ளம் பெருக்குதற்கு முகத்திலுள்ள இருகண்கள் போதா; உடல் முழுவதும் கண்களாதல் வேண்டும் என்றவாறு.

ஆல் - இரண்டிடங்களிலும் காரணப்பொருட்டு வந்த வினையெச்சங்கள். **ஆம்** என்ற வினையைத் தழுவி முடிந்தன.

வெள்ளம்தான் பாயாதால் - உடம்பே நெஞ்சமாகி உடம்பு முழுவதும் கண்களாகி உருக்கத்தின் மிகுதியால் பெருகுவதாகலின் அந்தக் கண்ணீரின் மிகுதி குறிக்க "***வெள்ளம்***" என்றார்.

அண்ண வெள்ளம் - என்றுகூட்டி அணைகோலித் தடுக்கமுடியாத வெள்ளம் எனலுமமையும்.

நெஞ்சம் கல்லாம் - உடல் முழுதும் நெஞ்சாகமாறி உருகாவிடினும் உடலினுள் உள்ள ஒருசிறுப்பகுதியாகிய நெஞ்சமும் உருகாமையால் அந்த நெஞ்சம் கல்லாலானதே என்றார். இரும்பாலான நெஞ்சாயினும் மிகுந்த சூட்டினால் உருகும்; ஆயின் இது கல்லாகலின் எவ்வாற்றானும் நெகிழாதது என்றவாறு.

" திணியான மனோசிலை மேலுன்
அணியா ரரவிந்த மலருமதோ"
" நெஞ்சக் கனகல்லும்"

- என்றனர் அருணகிரி நாதரும்

" கல்லேனுமைய வொருகாலத் துருகுமென்
கன் னெஞ்ச முருக விலையே"

- என்பது தாயுமானசுவாமிகள் வாக்கு

(சுகவாசி - 3)

கண்ணிணையும் மரமாம் - உடல் முழுவதும் கண்களாக நிறைந்து கண்ணீர் பெருக்காவிடினும் உள்ள இருகண்களேனும் கண்ணீர் சிந்தியிருக்க வேண்டும். அங்ஙனம் சிந்தாமையால் அவ்விருகண்களும் மரத்திலுள்ள கணுக்களேயாம் என்றவாறு.

மரம் - என்றது ஈண்டு மரத்திலுள்ள கணுக்களைக் குறித்து நின்றது. அவற்றைக் கண்கள் என்பது வழக்கு. அவற்றுக்குக் கண்ணீர் சொரியும் இயல்பு இல்லை; ஆயினும் அவற்றைக் கண்கள் என்பது உலக வழக்கு. என் கண் இணையும் அக்கணுகளே என்றவாறு. ★

தீவினையினேற்கே - நான் உனக்கு உருகாமைக்குக் காரணம் என் தீவினைக்கு நான் அடிமைப்பட்டுள்ளதே. தீவினை உன் பகையாதலின் நீ எதிர்வரின் அஃது அழிந்துபோம்.

தலையாய அன்பர் பலர்நிற்க என்னை ஆட்கொண்ட உனக்கு நான் உருகாவிடினும் உன் எதிரியாகிய தீவினையுடன் சேர்ந்து உனக்குத் துரோகம் செய்கின்றேன் என்ற குறிப்பும் காண்க.

இதன்கண் நெஞ்சம் உருகாமையும் கண்கள் கண்ணீர் பெருக்காமையும் கூறியதால் பத்தியும் அந்த நெஞ்சம் கல்லாம் என்றும் அக்கண்கள் மரம் என்றும் கூறியதால் வைராக்கியமும் குறிப்பதால் சதகம் நுதலிய "*பத்திவைராக்கிய விசித்திரம்*" பெற்றும்; ஏகதேசமாகச் சுட்டியுணர முயலும் நெஞ்சத்தைக் கடிந்து உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாக உருகுதல் வேண்டும். அஃதே இறைவன் காட்சி நல்கும் என்றதால் பதிகம் நுதலிய "*சுட்டறுத்தல்*" பெற்றும்.

★ வரக்கண்டு நாணுதே வல்லையா னெஞ்சே
மரக்கண்ணோ மண்ணுள்வார் கண்ணென் றிரக்கண்டாய்
வாளுழுவை வெல்கொடியான் வண்புனல்நீர்
நாடெற்கென்
தோளழுவம் தோன்றத் தொழுது

(முத்தொள்ளாயிரம் 39)

26. வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
"போதுநான் வினைக்கேடன்" என்பாய் போல
இனையனு னென்றுன்னை யறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானுனுய்க் கிரும்பின் பாவை
அனையநான் பாடேனின் ருடே னந்தோ
அலறிடே னுலறிடேன் னுவி சோரேன்
முனைவனே! முறையோநா னுன வாறு
முடிவறியேன் முதலந்த மாயி னுனே உஉ

(இ - ள்)

அனைத்தின் தோற்றத்துக்கும் இறுதிக்கும் நிமித்த காரணமாக உள்ள முதல்வனே! வினையின் தொடக்கில் அகப்பட்டுச் செயலற்றுக்கிடந்த என்பால் வலிய நுழைந்து நிலைபெற்று, "நான் வினைகளைக் கெடுப்பவன்; நீ என்பால் வருக" என்று கூறுவோன்போல, நீ பதிப்பொருள் நான் ஆன்மா என்பதை அடியவன் உணரும் வண்ணம் செய்தருளி, என்னை உன் அடிமையாக ஏற்றுக் கொண்டு, எனக்குப் பிரிய ஒண்ணுதவனுன உன்பொருட்டு, இரும்பினுல் செய்யப்பட்ட பதுமை போன்ற நான் பாடமாட்டேன்; நின்று கூத்தாடமாட்டேன்; கதறமாட்டேன் உடல் வற்றமாட்டேன் உயிர் சோரேன். இது நீதிதானே? ஐயோ! இதனுல் வினையும் பயன் யாதாய் முடியுமோ அறியேன்.

(வி - ரை)

"முதல் அந்தம் ஆயினுனே" என்பதை முதலில் வைத்து அதன்பின் "முனைவனே" என்பதைப் புணர்த்தும் "அந்தோ" என்பதை "முடிவறியேன்" என்பதன்முன் புணர்த்தும் உரைகாண்க.

முதல் அந்தம் ஆயினுனே! -மாயையினின்றும் தோன்றும் தனுகரணபுவன போகங்கள் அனைத்தையும் தோற்றுவிக்கும் நிமித்த காரணனுகவும் பேரூழியில் அவற்றை மீண்டும் முதற்காரணமான மாயையுள் ஒடுக்கும் சங்கார காரணனுகவும் உள்ள பரம்பொருளே!

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
ரோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்

என வரும் சிவஞான போத முதற் சூத்திரமும்;

"என்பது சூத்திரம்; என்னுதலிற்றோ வெனின் சங்கார காரணனாயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துத னுதலிற்று" எனவரும் அதன் கருத்துரையும் காண்க.

முனைவனே - இறைவனை முனைவன் என்பதை;

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

(தொல்காப்பியம் -பொருள். மரபியல் -சூ. 640)

என்று இலக்கணம் இயம்புதலும் காண்க. முதற்கண் நிற்பவன், அறவன், முனிவன், துறவி எனலுமாம்.

வினையிலே கிடந்தேனை . வினை - இஃது ஆன்மா தன் மனம் வாக்கு காயம் ஆகியவற்றால் ஈட்டுவது. அநாதி கேவலத்திற் கிடக்கும் ஆன்மா, படைப்பிற்கு வரும்பொழுது முதலில் காரண உடம்பு பெறும். இது மாயையினின்றும் இறைவனால் படைக்கப்படும் மாயேயம். மாயையுள் எங்கும் காரணவடிவில் கலந்து நிற்கும் கன்மமலம். இந்த காரண உடம்பினுள்ளும் இருக்கும். அஃது அப்பொழுது காரிய வினையாவதில்லை. களிமண்ணால் குடம் செய்தால் காரணப் பொருளாக இருந்த களிமண்ணின் ஒரு பகுதி காரியமாகிக் குட வடிவமெடுக்கின்றது. களிமண்ணுக்குள்ளும் ஆகாயமுள்ளது. களிமண்குடமாக வடிவம் எடுத்தபின்பும் அதனுள் ஆகாயம் உள்ளது போல என்று கொள்க. ஆன்மா, பின்னர் கஞ்சுக உடலும், அதன்பின் குண உடலும் பெற்றுப் பின்னர் புரியட்டக உடம்பு பெறும். அவ்வுடம்பில் அந்தக்கரணங்கள் நான்கும் அமைந்திருப்பதால் ஆன்மா சிந்திக்கத்தொடங்குகின்றது. ஆன்மாக்களை அநாதியே பந்தித்துள்ளது ஆணவமலம். ஆன்மாக்கள் எண்ணற்றவை. ஓர் ஆன்மா பக்குவத்தால் மற்ற ஆன்மாக்களினின்றும் வேறாக உள்ளது. இந்த வேறுபாடு அநாதி. இந்த வேறுபாடு காரணமாக ஒவ்வோரான்மாவையும் பந்தித்தித்துள்ள ஆணவ மலபந்திப்பின் அழுத்தம் மாறுபடுகின்றது. புரியட்ட உடலில் உள்ள அந்தக்கரணங்களின் இயல்புகளும் மாறுபடுகின்றன.

புரியட்டக உடம்பு பெற்ற ஆன்மா முதன் முதலாகச் சிந்திக்கத் தொடங்கும். அச் சிந்தனையும் ஆன்மாக்கள் தோறும் வேறுபடும். அப்பொழுது புரியட்டக உடலில் காரணவடிவில் உள்ள கன்மமலம் ஆன்மாவின் சிந்தனைக்கேற்பக் காரிய வடிவம் பெற்று ஆன்மாவின் வினையாகின்றது. ஆன்மாக்களின் இந்த வினைக்களுக்கேற்ப வேறு வேறு பருஉடல்கள்பெற்றுச் சொற்களாலும் செயல்களாலும் வினைகளைச் செய்கின்றன. இவையனைத்தும் நுகர்ச்சிக்கு வரும் வரையில் காலதத்துவத்திற் கிடந்து பக்குவமாகும். இந்தத் தொகுப்பைச் ***சஞ்சிதம்*** என்பர். அதில் நுகர்ச்சிக்குப் பக்குவமானபகுதி ஆன்மாவினுல் அடுத்து வரும் பிறப்பில் நுகர்ந்து கழிக்கப்படும். அவ்வாறு நுகர்ச்சிக்காக முகந்து கொள்ளப்பட்ட பகுதியைப் ***பிராரத்தம்*** என்பர். இவ்வாறு சஞ்சிதத்தின் இருப்பு பிறவிகள் தோறும் குறைந்துவரின் வினை முற்றிலும் தீர்ந்து ஆன்மா உய்தியெய்தும். ஆனுல் அவ்வாறு நிகழ்வதில்லை. பிராரத்த வினையை நுகருந்தோறும் ஆன்மா புதிய வினைகளைச் செய்து கொள்ளும். அவற்றின் தொகுப்பை ***ஆகாமியம்*** என்பர். அது சஞ்சிதத்தில் சேர்ந்து வரும் பிறவிகளில் பிராரத்தமாக நுகர்ச்சிக்கு வரும். எனவே சஞ்சிதத்தின் இருப்பு குறைவதில்லை. அதனுல் பிராரத்த நுகர்ச்சியும் ஆகாமிய ஈட்டலும் தொடர்கின்றன. ஆன்மா இந்த வினைத்தொடக்கினின்றும் தன் முயற்சியால் விடுபடுவதும் இயலாது. எனவே ***வினையிலே கிடந்தேனை*** என்ருர்.

கிடத்தல் - செயலின்றிக் கல்லைப்போல கிடத்தல். நோயினின்றும் விடுபட முடியாது வருந்துவோனைப் "பாயில்கிடக்கின்ருன்" என்பது காண்க. ***கிடந்தேனை*** - கிடந்த என்பால். இரண்டாம் வேற்றுமையுருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்த உருபுமயக்கம். ***புகுந்து நின்று. புகுதல்*** - நான் அழைக்காதிருந்தும் வலிந்து நுழைந்து நின்று. முன்னம் 15-ம் திருப்பாட்டில் "புகுந்திடுவான்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.
புகுந்து - எதிர்வந்து என்பர் திரு. முதலியாரவர்கள்.

நின்று - அவன் புகுந்ததன் பயனை நான் அடையும் வரையும் புகுந்த இடத்திலேயே நிலைபெற்றிருந்து.

புலாலாலான இழிந்த இந்த உடம்பு இறைவன் எழுந்தருளுவற்குத் தகுதியற்றது. எனவே அவன் புகுந்தது ஓர்

அருளிப்பாடு. புகுந்த பின்னும் தகுதியற்ற அந்த இடத்தை விட்டு நீங்கி விடாமல் நான் பயன் பெறும்வரை அங்கேயே நின்றது மற்றோர் அருளிப்பாடு என்றவாறு.

போது நான் வினைக்கேடன் என்பாய் போல - போது - வா . என்னுடன் வருவாயாக. முன்னிலை ஏவல் வினைமுற்று.

வினைக்கேடன் - வினைகளைக் கெடுப்பவன். நான் உன் சஞ்சித வினைகளைச் சட்சு தீட்சையால் சுட்டு எரித்தும், பிராரத்தத்தை உன் உடலூழாய்க் கழிக்கச் செய்தும், ஆகாமியத்தை ஏறாமல் நானே ஏன்று கொண்டும் உன் வினைகளை முற்றிலும் அழிப்பவன். ஆதலின் வினையிலே கிடக்கும் நீ என்னுடன் வந்து வினைகள் அழியப் பெற்றுய்க என்றவாறு.

வினைக்கேடன் - வேலையற்றவன். ஆன்மாக்களின் வினைகளை ஒழிப்பது தவிர வேறு வேலை இல்லாதவன் என்றொரு பொருளும் காண்க.

என்பாய் போல - என்று கூறுவாய் போல. இறைவன் அவ்வாறு வாய்திறந்து கூறிற்றிலன். ஆயினும் அதைச் செயலிற்காட்டி என்னை ஆட்கொண்டான் என்றவாறு.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

கோணா ரணா னங்கந் தோள்மேற் கொண்டு
கொழுமலரான் றன்சிரத்தைக் கையி லேந்திக்
காணார் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கங்காள வேடரா யெங்குஞ் செல்வீர்
நாணா ருமக்கோர் வினைக்கே டனேன்
நல்வினையுந் தீவினையு மெல்லா முன்னே
ஆனா யடியேனை யஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையு மமர ரேறே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 47 - 6)

எனவரும் அரசுகளின் அமுதத் தமிழ் சுவைக்க.

இனையன் நான் என்று உன்னை அறிவித்து - நீ பதி, நான் ஆன்மா என்பதை நான் அறியும் வண்ணம் செய்து.

என்று - என்று சொல்லி என எச்சச்சொல் வருவித்து முடிக்க.

என்னை ஆட் கொண்டு எம்பிரான் ஆனுய்க்கு - வினையிலே செயலற்றுக் கிடந்த என்னை, என் வினைகளை அழித்து உன் அடிமையாகவும் கொண்டாய் ஆதலின் நீ எம்பிரான் ஆனுய். ***பிரான்*** - பிரிய ஒண்ணுதவன். உபகாரி எனலுமாம்.

எம்பிரான் - ஒருமை குறித்து வந்த பன்மை வழக்கு.

ஆனுய்க்கு - என்னுல் பிரிய இயலாதவனும் எனக்கு உபகாரியுமான உன் பொருட்டு.

இரும்பின் பாவை அனைய நான் - இரும்பினுல் செய்யப்பட்ட ஒருபாவை உள்ளம் உருகாமை மட்டுமன்றி உடலுருப்புக்களிலும் உள்ளத்துணர்வின் வெளிப்பாடுகளான கண்ணீர் சிந்துதல், குரல் தழுதழுத்தல், மயிர்க்கூச்செறிதல் நடுங்குதல் முதலியனவும் இல்லாமல் இருக்கும். நான் அவ்வாறுள்ளேன்.

பாவை - மனிதன் ஒருவனின் உருவத்தைச் சிற்பி ஒருவன் வடிக்குங்கால் அந்தச் சமயத்தில் அந்த மனிதனின் உள்ளக் குறியை முகத்தில் அமைத்துச் சிலை வார்ப்பான். பின்னர் அந்த மனிதனின் உள்ள நிகழ்ச்சிகள் மாறுந்தோறும் அவன் முகக்குறிகளும் மாறும். ஆனுல் அந்தச் சிலையில் முதலில் வடிக்கப்பட்ட முகபாவமே நிலைத்து நிற்கும்.

இனி ஈண்டு, தோற்பாவை, மரப்பாவை ஆகியவற்றைப் பிறர் இயக்கிக் கூத்தாட்டலாம். இரும்பின் பாவையை எடுத்துக் கூத்தாட்டுவாரிலர் என்றும்; இரும்பின்பாவை காந்தத்தின் முன்னுல் இயங்கும். கற்பாவை போன்றவை அவ்வாறியங்கா. எனவே நீ அருள்புரியின் நான் இயங்குவேன் என்றவாறு- என்றும் உரை விரித்தனர் முன்னுரையாளர்கள். தோற்பாவையும் மரப்பாவையும் பிறரால் இயக்கப்படுதலின் அவ்வியக்கத்தால் வரும் பலன்கள் அப்பாவைகளை உய்விப்பன அல்ல. இரும்புப்பாவையின் இயக்கம் காந்தத்தாலாவது. அந்த

இயக்கத்தின் பயன் பாவையையோ அன்றிக் காந்தத்தையோ சேர்வதில்லை. காந்தத்தை இரும்பின் முன் கொணர்வோன் அந்தப் பயனை அடைவன். ஈண்டு நம் அடிகள் தம் உள்ளம் உருகாமையால் தாம் உய்தி யடையவில்லை என்று வருந்துவதைக் கூறுகின்றார். அவ்வாறு உருகாமையால் வரும் இழப்பு பிறருக்கோ இறைவனுக்குகோ இல்லை. ஆதலின் அவ்வுரைகளின் பொருத்தமின்மை கண்டு ஒதுக்குக.

பாடேன் - உன் பொருள்சேர் புகழ்களை இசையில் அமைத்துப் பாடிப் பரவமாட்டேன்.

நின்று ஆடேன் - உன் சந்நிதியில் நின்று பரவசமாகி ஆனந்தக் கூத்தாடமாட்டேன்.

அலறிடேன் - பக்திப்பெருக்கால் கதறி அழ மாட்டேன்.

உலறிடேன் - உடல் வற்றமாட்டேன்.

ஆவி சோரேன் - உயிர்சோர்வுற்று மூர்ச்சையடைய மாட்டேன். இவையனைத்தும் அன்பின் வெளிப்பாடுகள். இவை இன்மையின் அன்பற்றவனானேன்.

நான் ஆனவாறு முறையோ? - நான் இவ்வாறு உன் மாட்டு அன்பின்றி வாழ்தல் நீதியாகுமா?

அந்தோ! - ஐயோ. இவ்வாறு அன்பற்றவனாகி விட்டதை நினைந்து இரங்கியவாறு.

முடிவு அறியேன் - இவ்வாறு நான் நன்றி மறந்து அன்பற்றவனானதன் விளைவு யாதாகி முடியுமோ அறியேன்.

இத்திருப்பாடலில் "பாடேன் நின்றாடேன்" என்பன முதலியவற்றால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றாம். "முனைவனே முதலந்தமாயினானே" என்று இறைவனின் சொரூப இலக்கணம் கூறுவதாலும், முதலிரண்டடிகளில் ஆன்மாவின் சீவ போதத்தை ஒடுக்கிச் சிவ போதம் மேலிட்டு விளங்கும் உண்மை பெறப்படுவதாலும் பதிகம் நுதலிய "***சுட்டறுத்தல்***" பெற்றாம்.

27. ஆயநான் மறைவனும் நீயே யாதல்
அறிந்தியா னியாவரினுங் கடைய னுய
நாயினே னுதலையு நோக்கிக் கண்டும்
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பேன்
ஆயினே னுதலா லாண்டு கொண்டாய்
அடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
எம்பெருமா னென்சொல்லிப் பேசு கேனே

உரு

(இ - ள்)

இறைவனே! நுட்பமான நான்கு மறைகளையும் அருளிச் செய்தவன் நீயே ஆதலை நான் என் அறிவு கருவியாக அறிந்திருந்தும் நான் யாவரினும் கடையனுகி நாய்போல் இழிந்தவனுயுள்ளதைக் கண்கூடாகக் கண்டிருந்தும் நான் உன் அடியவர்களில் ஒருவன் என்று சொல்லுவேனுயினேன். அதையே காரணமாகக் கொண்டு என்னை உன் அடிமையாகக் கொண்டாய்; பேயின் இயல்புள்ள என்னைத் தவிர, நீ ஆட்கொள்வதற்கு அடியார் வேறு ஒருவர் கூட இல்லையோ? இந்தச் செயல் உன் பெருந்தன்மையைக் குறிப்பதன்றோ? எங்கள் தலைவனுகிய உன்னை எவ்வாறு புகழ்ந்து பரவக்கடவேன்.

(வி - ரை)

"நாதன்" என்பதை முதலில் அமைத்துப் பொருள் கொள்க.

"நாதன்" என்னும் சொல் வடமொழியில் ஐஸ்வரியம் என்னும் பொருளதாகும். ஈண்டுச் செல்வமும் அதிகாரமும் கொண்ட ஈசுவரத்தன்மையுடைவன் என்று சிவபெருமானை உணர்த்தி நின்றது.

ஆய - நுண்ணிய. ஆய்தல் -உள்ளதன் நுணுக்கம்

" ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"

(தொல்காப்பியம் -சொல்லதிகாரம்)
உரியியல் - சூத். 325)

வைசுரி வாக்கிலுள்ள மறைகள் ஊழிக்காலத்தில் சூக்குமை வாக்கிலும் பின்னர் அது மாயையிலும் ஒடுங்குதல் நினைக. **ஆய** - பெருகிய எனலுமாம். அது புனருற்பவத்தில் ஒடுங்கிய முறையே பெருகிவந்து வைகரிவாக்கில் வழங்குவதும் நினைக. மறைகள் பிறரால் ஆக்கப்படாமல் சுயம்புவாகிய சிவபெருமானால் ஆக்கப்பட்டவை என்பதும் நினைக.

நீயே - ஏகாரம் தோற்றம் ; பிரிநிலையுமாம்.

மறையவன் - மறைகளின் பொருளாக உள்ளவன் எனலுமாம். ***மறையவனும்*** என்பதிலுள்ள உம்மையைப் பிரித்து "அறிந்து" என்பதனுடன் புணர்க்க. "நான் உனக்கு அன்பன் என்பதற்குத் தகுதியற்றவன். நான் மறைகளை அருளிச் செய்த ஒரு செயலே நீ ஒப்புயர்வற்ற மேலோன் என்பதையும், யான் யாவரினும் கடையனான இழிந்தவன் என்பதையும் நோக்கி அறிந்திருந்தும் கூட நான் உனக்கு அன்பன் என்பேன்" என்றவாறு.

நோக்கிக்கண்டும் - நான் ஆராய்ந்து அறிந்திருந்தும்; நீயே பார்த்துத் தெரிந்திருந்தும். இறைவனது பெருமையையும் தன்சிறுமையும் புடைபட வைத்து ஆராய்ந்து அறிந்தும் எனலுமாம். இறைவன் தலைவனாதலை அறிவு கருவியாக அறிய வேண்டுதலின் "***அறிந்தும்***" எனவும்; தாம் கடையனாதல் கண்கூடாகக் காணலாமென்பது தோன்றக் "***கண்டும்***" எனவும் கூறினர் என்பது கதிர் மணி விளக்கம்.

யாவரினும் கடையனாய நாயினேன் - தலைசிறந்த பெரியோர்களை முதலில் வைப்பது போலவே கடைசியில் வைக்கும் மரபும் உண்டு. ஆரியம் போன்ற மொழிகளில் இல்லாது தமிழ் மொழிக்கே சிறப்பாக உள்ளன. "ற" "ன" என்ற எழுத்துக்கள் இரண்டும் தமிழ் எழுத்து வரிசையில் ஈற்றயலில் "ற" இறுதியில், "ன" வும் வைக்கப் பட்டுள்ளமை காண்க. ஈண்டு அவ்வாறு ஈற்றயலினுமின்றி ஈற்றில் வைக்கத்தக்க இழிவுள்ளவன் என்பது குறிக்க ***நாயினேன்*** என்றருளிச் செய்தார்.

நாயினேன் - இழிந்தவன். முன்னர்ச் சிவபுராணம் (60-ல்) ***நாய்***- என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

நானுனக்கோர் அன்பன் என்பேன் ஆயினேன் - நான் - நானும் என்பதிலுள்ள இழிவு சிறப்பும்மை தொக்கது. நாய்போன்று இழிந்த நானும் என்றவாறு.

அன்பன் என்பேன் ஆயினேன் - அன்பன் என்று சொல்லிக் கொள்பவன் ஆனேன்.

ஆதலால் ஆண்டு கொண்டாய் - நான் அவ்வாறு கூறியதே காரணமாக என்னை உன் அடிமையாக ஏற்றுக் கொண்டாய். நான் கூறியது என் சொல்லளவில் நின்றொழிந்தது; நீ அதை ஏற்றுச் செயலளவில் காட்டினுய் என்றவாறு.

ஆண்டு கொண்டாய் - விளியாகக் கொண்டு ஆண்டு கொண்டவனே! எனலுமாம்.

பேயனேன் அன்றி மற்ருேர் அடியார் தாம் இல்லையே? - பேய் போன்ற இழிந்த என்னை நீ ஆட்கொண்டதற்கு காரணம் நீ ஆட்கொள்வதற்கு என்னைத்தவிர வேறு அடியார்கள் ஒருவர் கூட இல்லை போலும் என்றவாறு. இல்லையே ஏகாரம் வினுப்பொருளில் வந்தது. பலரும் இருக்கின்ருர்கள் என்றவாறு.

பேயனேன் - பாவப்பயனுக இழிபிறப்புற்ற பேயைப் பணியாளாகக் கொண்டால் அது துன்பம் தருமேயன்றி வேறுபயனுள்ள உதவி செய்யாது. பேய் போன்ற என்னை நீ ஆட்கொண்டதும் நன்மைபயவாது என்றவாறு. ***பேயனேன்*** - பயனின்றி உழல்பவன் எனலுமாம்.

பேய் அன்னேன் - பேய் போன்றவன் எனலுமாம். பேய் பருவுடல் தாங்கி நின்று கட்புலன்படாது. நான் பருவுடல் தாங்கியுள்ளேன். இஃதொன்றே பேய்க்கும் எனக்கும் உள்ள வேறுபாடு. ஏனைய இயல்புகளில் வேற்றுமை இல்லை. ஆதலின் **பேய்** என்ஞது பேயனேன் என்ருர் எனலுமாம்.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

அத்தாவு னடியேனை யன்பா லார்த்தாய்
அருள் நோக்கிற் றீர்த்த நீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையு மரியைநீ யெளியை யானுய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்

பிழைத்தனக ளத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையு மெம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 95 - 8)

என்று நம் அரசுகளும் தம்மைப் "**பேயன்**" என்பது காண்க.

இது தான் நின் பெருமை யன்றே - தகுதியற்றுரையும் தகுதியுற்றாராகச் செய்து ஆட் கொள்ளுவது சிவபெருமானின் பெருமைக் குணத்தாலாவது.

ஏகாரம் உடன்பாடு குறித்த வினப் பொருளில் வந்தது.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

வஞ்சகப் புலைய னேனை வழியறத் தொண்டிற் பூட்டி
அஞ்சலென் றுண்டு கொண்டாய் யதுவு நின் பெருமை யன்றே
நெஞ்சகங் கனிய மாட்டே னின்னையுள் வைக்க மாட்டேன்
நஞ்சிடங் கொண்ட கண்டா வென்னென நன்மை தானே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 76 - 5)

என வரும் அரசுகளின் அமுத ஓவியம் சுவைக்க..

எம் பெருமான் என் சொல்லிப் பேசுகேனே - எம் பெருமானாகிய நின்னையும் நின்பெருமைக் குண மாண்புகளையும் எவ்வாறு புகழ்ந்து துதிப்பேன்.

இத்திருப்பாடலில் இறைவன் குணமாண்புகளை "என் சொல்லிப் பேசுகேன்" என்றதால் சதகம் நுதலிய "**பத்திவைராக்கிய விசித்திரம்**" பெற்றும். "மறையவனும் நீயே யாதல்" என்றதனுல் அவ்வாறு ஆவதன் முன் சொரூப நிலையில் இருந்தாய் என்பது பெறப்பட்டுப் பதிகம் நுதலிய "**சுட்டறுத்தல்**" பெற்றும்.

28. பேசிற்ரு மீசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்ருன் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்ரு
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே யவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
என்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே உச

(இ - ள்)

குற்றமற்ற மாணிக்க மலையே! என்தந்தையே! தாம் பேசப்புகின் "செல்வமும் அதிகாராமும் உடையவனே! எங்கள் தந்தையே! எங்கள் தந்தைக்கும் தலைவனே!" என்றே பலகாலும் கூறியும், பூசப்புகின் திருநீற்றையே மிகுதியாகப் பூசியும், பிறழாத மெய்யன்பினுலே பிறப்பையும் சாவையும் ஒழித்த உண்மை அடியார்களை ஆண்டு கொண்டருளியவனே! ஐயோ! மிகுந்த ஆசைப் பெருக்குடைய கள்வனுன என்னையும் நீ ஆட் கொண்டருளிய காரணம் யாதோ?

(வி - ரை)

"மாசற்ற மணிக்குன்றே ; எந்தாய்" - என்பதை முதலில் அமைத்து இத்திருப்பாடலுக்கு உரை காண்க.

மாசற்ற மணிக்குன்றே. மணி - ஈண்டு, நவமணிகளுள் ஒன்ருன செம்மணியைக் குறித்து நின்றது. இறைவன் வண்ணம் அஃதாகலின் என்க.

மாசு அற்ற - குற்றமற்ற மாணிக்கம். அதற்குள்ள குற்றங்களாவன கீறல், சப்பட்டை, காகபதம், ஒளி ஒதுக்கம். ஒளியின்மை என்பன.

மாசு - என்பதை ஆணவமலமாகிய அழுக்கு எனக் கொண்டு இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் எனலுமாம். ஆன்மாவாகிய என் மல மாசை அறுத்தவனே எனலுமமையும்.

குன்று - மலே. செம்மணியாலாகிய குன்று. முன்னம் (15-ல்) ஆடகச் சீர் மணிக் குன்றே" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

பேசில் தாம் - தாம் பேசில் என்று மாற்றிக் கொள்க. ***தாம்*** - பிறப் பிறப்பைக் கடந்தார் - என்று மூன்றும் அடியிற் குறிக்கப்பெறும் மெய்யடியார்களேக் குறித்து நின்றது. அவர்கள் பேசாது மௌனமாகவே சிவ நினைவில் திளேப்பர். பேசத் தொடங்கினுல் "***ஈசனே***" என்றது முதலான சிவநாமங்களேயும் அவன் புகழ்களேயுமே பேசுவர் என்றவாறு.
இதனே;

திருச்சிற்றம்பலம்

செற்றவர் தம்மர ணம்மவற்றைச்
செவ்வழல் வாயெரி யூட்டிநின்றுங்
கற்றவர் தாந்தொழு தேத்த நின்ருன்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
உற்றவர் தாமுணர் வெய்திநல்ல
வும்பருள் ளார்தொழு தேத்தநின்ற
பெற்றம ரும்பெரு மானேயல்லாற்
பேசுவது மற்ருெர் பேச்சிலோமே

(திருமுறை 1 - 5 - 9)

"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

திருச்சிற்றம்பலம்

(அற்புதத் திருவந்தாதி - 1)

என்பவற்ருலறிக.

ஈசனே - முன்னரும் சிவபுராணம் (11 - ல்) "ஈசன்" என்றது காண்க.

எந்தாய் - எம் தந்தையே. தந்தையின் சொத்தில் மகனுக்கு உரிமையுண்டு. உன் பேரானந்தப் பெருஞ் செல்வத்தில் உன் மைந்தனுகிய எனக்கு உரிமை உண்டு என்ற குறிப்பு.

எந்தாய் - என் தாயே எனலுமாம்.

எந்தை பெருமானே - எம் தந்தையே! தலைவனே! எம் தந்தையின் தலைவனே, எங்கள் குல தெய்வமே எனலுமாம். நம் அடிகளே பின்னரும் "மூதாதை" *(34)* என்றருளுவது காண்க. எந்தைக்கும் பெருமானே என நான்கன் உருவும் எச்ச உம்மையும் விரித்துக்கொள்க.

சிவபெருமானை அடியவர்கள் தங்கள் குல தெய்வமாகக் கொள்வதை;

திருச்சிற்றம்பலம்

எம்பிரா னெந்தை தந்தை தந்தையெங் கூட்ட மெல்லாம்
தம்பிரா னீரே யென்று வழிவழி சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை யென்னை நின் றீருஞ் சூலை
வம்பென வாண்டு கொண்டா னொருவனே தீர்ப்பான் வந்து

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 392)

எனவரும் சேக்கிழார் பெருமான் திருவாக்காலும் அறிக.

பூசிற்றான் திருநீறே நிறையப்பூசி - பூசுவதானால் திருநீற்றையே நிறையப்பூசி. ஏனைய சந்தனம், களபம் முதலிய நறுமணக்கலவைகளாகிய சிவ நின்மாலியங்களைக் குறைவாகப் பூசி என்றவாறு. ***நீறே*** - ஏகாரம் தேற்றம். பிரிநிலையுமாம். ***திருநீற்றை நிறையவே பூசி*** - என ஏகாரம் ***நிறைய*** என்ற சொல்லைத் தழுவியதாகவும் கொள்க. திருநீற்றைக் கூறியதனால் இனம்பற்றி உருத்திராக்க மாலைகளை அணிவதையும் கொள்க. ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

வையம் முறைசெய் குவனாகில் வயங்கு நீறே
செய்யும் அபிடேக முமாகச் செழுங்க லன்கள்
ஐயன் அடையா ளமுமாக அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியேமுடி யாவ தென்றார்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - மூர்த்தி நாயனார் புராணம் - 41)

எனவரும் சேக்கிழார் பெருமான் செம்மொழி நினைக.

ஈண்டு, **நீறே** - என்பதிலுள்ள ஏகாரத்துக்கும் பிரிநிலைப் பொருள் கொள்ளுங்கால் அது **நீறு** என்பதைத் தழுவியதாகக் கொண்டு அடியார்கள் திருநீற்றையே பூசிக்கொள்வார்கள்; ஏனைய சந்தனம், களபம் முதலிய நறுமணப்பொருள்களை விரும்பார்கள் - என்று பொருள் கொண்டனர் முன்னுரையாளர்களில் சிலர். ஏனைய நறுமணக்கலவைகளும் சிவபெருமானுக்குத் திருமுழுக்காட்டி சிவ நிர்மாலியமாகப் பெறப்படுதலின் அவற்றையும் அடியார்கள் விரும்பிப் பூசிக் கொண்டனர். ஆனால் திருநீற்றைப் போல நிறைப்பூசிக் கொள்ளாது குறைவாகப்பூசிக் கொண்டனர் என்பதை ;

திருச்சிற்றம்பலம்

" முத்தின்றாழ் வடமுஞ் சந்தனக் குழம்பு
நீறுந்தன் மார்பினின் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமாதேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர்மர கதமடுத் தாற்போல்
அத்தனு ருமையோ டின்புறு கின்ற
வாலவா யாவது மிதுவே"

(திருமுறை 3 - 120 - 7)

சேர ருடனே திருவமுது செய்த பின்பு கைகோட்டி
ஆர நறுமென் கலவைமான் மதச்சாந் தாடை யணிமணிப் பூண்
ஈர விரைமென் மலர்பணிக ளினைய முதலா யினவருக்கம்
சார வெடுத்து வன்றொண்டர்ச் சாத்தி மிக்க தமக் காக்கி

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 153)

என்பவற்றால் பெறலாம். ஆதலின் ஏகாரம் "நிறைய" என்ற சொல்லைத் தழுவியதாகக் கொண்டுரைத்தாம்.

இனிப் **"பூசிற்றான்"** என்றதனால் பூசாமலும் இருப்பார்கள் என்பதுபெறப்படுவதால் "நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தவர்கள்."

சிவச்சின்னங்களில் தலையாயதும் உமையம்மையின் வண்ணமாயதும் சிவபெருமானுகவே உள்ளதுமான திருநீற்றை அணியாதிருக்கலாமோ? "செஞ்சவே யாண்டு கொண்டான் திருமுண்டந் தீண்ட மாட்டா தஞ்சுவாரவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே" (522) என்று நம் அடிகளே பின்னர் அருளியுள்ளாரே? எனிற் கூறுதும் ;

அச்சப்பத்திற் கூறியது உலக மக்களாகிய நம்போன்ருேரை நோக்கி; ஈண்டுக் கூறியது பிறப்பிறப்பைக் கடந்த சீவன்முத்தர்களைப் பற்றி என்க. சீவன்முத்தர்கள் நிட்டைகூடி எப்பொழுதும் சிவபெருமானைத் தியானத்தில் கண்டு திரிபுடியின்றிச் சிவ இன்பத்தில் திளைத்திருப்பார்கள். அந்த நிட்டை கூடியகாலம் நாட்கள் திங்கள்கள் ஆண்டுகளாக உருண்டோடும். அவர்கள் நிட்டையில் அமர்ந்த ஞான்று திருநீறு அணிந்தே அமர்வர். வியர்வை, மழை, காற்று முதலியவற்ருல் அத் திருநீற்றுக் கோலம் அழிந்து விடும். அதை அறியாமலே தியானத்தில் திளைப்பர். தங்களையே மறந்திருப்பர். தியானம் செய்வதையும் மறந்திருப்பர். தியானப் பொருளாகிய சிவபரஞ்சுடரைக் காணும் காட்சியையும் உணரார். ஆனுல் அந்தக் காட்சியின் இன்பத்தில் திளைத்திருப்பர். அந்த நிலையில் அவர்களுக்கு நித்திய அனுட்டானம் முதலியனவும் நிகழா. இந்த நிலையை ;

"ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினெ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்"

"தேசமிடங் காலந்திக் காசனங்க ளின்றிச்
செய்வதொன்று போற்செய்யாச் செயலதனைச் செய்தங்
கூசல்படு மனமின்றி யுலாவ னிற்ற
லுறக்கமுணர் வுண்டிபட் டினியிருத்தல் கிடத்தல்

மாசதனிற் றூய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்திற் திருத்தத்தின் மைதுனத்திற் சினத்தி
ஞசையினின் வெறுப்பினிவை யல்லாது மெல்லா
மடைந்தாலு ஞானிகடா மரனடியை யகலார்"

(சிவஞான சித்தியார் சுபக்கம் சூத்திரம் - 8 செய் 32 - 33)

என்றதிற் காண்க. அவர்கள் நிட்டை நீங்கி உலகில் சரிக்கும் பொழுதும் உலகநினைவின்றிச் சிவ நினைவிலேயே உலகில் உலவிவருவர் என்பதையும் இப்பாடல்களால் அறிந்தோம்.

அத்தகைய நிலையில் அவர்களுக்கு ஒரொருகால் உலக நினைவு வரும். அப்பொழுது விளக்கின் மறைவை எதிர்பார்த்திருந்து அது மறைந்ததும் வந்து மூடும் இருளைப் போல் ஆணவ மலத்தின் வாசனை, சிவநினைவில் நீங்கி உலகியல் நினைவுக்கு வரும் சீவன் முத்தர்களைப் பற்றிக் கொள்ளும். பின்னர் அந்த வாசனுமலமே முழு மலமாக ஆற்றல் விரிந்து அவர்களைப் பிறவியில் செலுத்தும். எனவே அதனின்றும் தப்புவதற்காக உலகநினைவு திரும்பியவுடன் சீவன் முத்தர்கள், தங்களை யொத்த சீவன்முத்தர்களின் கூட்டத்தில் கலந்திருந்தும் சிவனடியார்களின் சிவவேடங்களையும் திருக்கோயிலையும் சிவபெருமானுகவே கருதி வழிபட்டும் உய்வர்.

இதனை ;

செம்மலர் நோன்றுள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே.

(சிவஞானபோதம் சூ - 12)

என்று நம் ஞான சாத்திரம் கூறுகின்றது.

ஈண்டு, நேயம் மலிந்தவர் வேடம் என்பது சிவவேடம். அதில் தலையாயது திருநீறு. அது சிவச்சின்னமாக மட்டுமன்றிச் சிவபெருமானுகவேயுள்ளது. ஆதலின் உலக நினைவு வந்ததும் சீவன் முத்தர்கள் அதுவரையும் திருநீறே பிற நறுமணக் கலவைகளோ

பூசாதிருந்ததை நினைந்து அப்பொழுது பூசும்பொழுது திருநீற்றையே நிறையப் பூசினார்கள் என்க. திருநீற்றையே நிறைப் பூசினார்கள் என்பதை **பூசிற்றும் திருநீறே நிறைப்பூசி** என்றருளினார்.

போற்றி - வணங்கி எனலுமாம். திருநீறு அணியும் பொழுது "சிவய நம" என்று திருவைந்தெழுத்தை ஓதி இறைவனை வணங்கி நீறணியும் மரபு நினைக. திருவைந்தெழுந்து சிவனுக்கு வணக்கம் என்னும் பொருளுடைத்தாதல் முன்னம் சிவபுராணத் தொடக்கத்தில் விளக்கினோம்.

பின்ரு - பிற்படுதல் எனலுமாம். இதனைச் "செலவுதான் பின்ருது பேணும் புகழான்பின்" (திணைமாலை 87) என்றதில் காண்க. ***பின்ரு நேசம்*** - உள்ளத்தின் செயல்; எந்தை பெருமானே என்று பேசுதல் வாக்கின் செயல்; திருநீற்றை நிறையப்பூசுதல் உடலின்செயல்; திரிகரணங்களாலும் வழிபடுதல் கூறியவாறு.

பின்ருநேசம் பற்றி;

" அறுகெடுப் பாரய னுமரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்க வொட்டோம்.

(திருவாசகம் - 199)

என்று நம் அடிகளே பின்னர்த் திருப்பொற்சுண்ணத்தில் (5) அருளிச் செய்வது காண்க.

பிறப்பிறப்பைக் கடந்தார்- சீவன்முத்தர்கள். அவர்கள் இப்பொழுது தாங்கியுள்ள பருவுடல் வீழ்ந்தபின் வீடுபேறடைவார்கள். மீண்டும் பிறவியிலும் அதன்பின் மரணத்திலும் சேரமாட்டார்கள். அவர்கள் அவ்வாறு பிறப்பிறப்பை நீத்து வீடுபேறெய்தும் நிலை இனி நிகழ்வுள்ளது. உறுதிபற்றி ஈண்டு இறந்தகாலத்திற் கூறினார்.

அவர்வெள்ளக்கள்வன் - கடல் போன்று மிகுந்த ஆசையுள்ள கள்வன். ஆசை என்றும் பிறவிக்குக் காரணமானது.

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து "

(திருக்குறள் - 361)

என்றார் திருவள்ளுவரும்.

அவா எல்லை காண இயலாத கடல்போன்றதாகலின் அதனால் வரும் பிறவிகளும் எல்லையற்றன என்றவாறு.

கள்வன் - கடல் போன்று ஆசையுள்ளவனாயினும் அதை மறைத்து அடியார் போன்று நடித்தலின் கள்வன் என்றார். **கள்ளம்** கறுப்பு நிறம் குறித்தது எனலுமாம். உள்ளம் வெள்ளர்களாகிய சீவன் முத்தர்கள் பிறவிவெள்ளம் கடந்தனர். உள்ளம் கறுப்புள்ள நான் பிறவிவெள்ளத்தில் மூழ்கினேன் என்றதும் குறிப்பு.

அந்தோ - வியப்பிற் பிறந்த இரக்கக் குறிப்பு.

கள்வனேனை நீ ஆட்கொண்ட வண்ணம் தான் என்னை - திரிகரணங்களும் தூயவர்களாகிய சீவன் முத்தர்களை ஆட்கொண்ட நீ, முக்கரணங்களும் தூய்மையற்ற வஞ்சகனாகிய என் தகுதியின்மை கண்டும் என்னையும் ஆட்கொண்ட காரணம் யாது? என்றவாறு. ***என்னை*** - வினவடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. ***தான்*** - இரண்டும் அசைநிலைகள். ***ஏகாரம்*** - ஈற்றசை.

இத்திருப்பாடலில் மனமொழி மெய்களின் ஈடுபாடு குறித்தமையால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். "மாசற்ற மணிக்குன்றே" என்றதனால் ஒளி மண்டலங்கள் அனைத்துக்கும் ஒளி அருளும் சிவபெருமானின் அருளியல்பு மெய்யுணர்வுக்கன்றிச் சுட்டறிவுக்குப் புலப்படாது என்பது பெற்றும். இதனால் "***சுட்டறுத்தல்***" என்னும் பதிகம் நுதலிய பொருள் எய்துவது காண்க.

29. வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
நேகனேகன் னணு வணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் தடுமாறி யிமையோர் கூட்டம்
எய்துமா றறியாத வெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமா னென்சொல்லிச் சிந்திக் கேனே உரு

(இ - ள்)

எங்கள் தலைவனே! தேவர்கள் குழு உன்நிறம் சிவப்பன்று, வெண்மையானதுமன்று. நீ பலராகவும் ஒருவனுகவும் ஆவாய்; அணு வடிவினனுமாவாய் அணுவினும் கடந்த நுண்ணியனுமாவாய் என்று இங்ஙனம் பலவாறு கூறி, மனங்கலங்கித் தள்ளாடி நின்னையடையும் நெறியினின்றும் அறிய இயலாத எம் தந்தையே! உன் உண்மையான நிறத்தையும் திருவுருவத்தையும், தாமரை மலர்போன்ற திருவடிகளையும் உள்ளவாறு நான் காண அருள்புரிந்து, நெறியறியாது திகைக்கும் அடியேனை உறுதியாக இனிப் பிறவி வராமல் பாதுகாத்து ஆளாகக் கொண்டனை. அத்தகைய நின்னை எங்ஙனம் பாராட்டி எவ்வாறு நினைவு கூற வல்லேன்.

(வி - ரை)

"எம்பெருமான்" என்பதை முதலில் வைத்து "இமையோர் கூட்டம்" என்பதை அதன்பின் அமைத்து இத்திருப்பாடலுக்கு உரைகாண்க.

எம்பெருமான் - நீ விண்ணோர் பெருமானுயின் உன் வண்ணமும் வடிவும் அவர்களுக்குக் காட்டியிருக்க வேண்டும். ஆனுல் நீ அவற்றை அவர்களுக்குக் காட்டாமல் குருவடிவாக இந்த மண்ணுலகத்துக்கு வந்து எனக்குக் காட்டினை. ஆதலின் நீ எம்பெருமான் என்று உரிமை பாராட்டியவாறு.

இமையோர் கூட்டம். இமையோர் - தேவர்கள். கண் இமைக்காதவர்கள். இறைவன் திருமேனி ஞானநாட்டம் பெற்ற

பேரடியார்களுக்கே கட்புலனுவது. அவன் திருமேனி பேரொளிப் பிழம்பாக இருப்பினும் காணும் தேவர்களின் கண்கள் இமையாது காண வல்லவையாயினும் காணவல்லன அல்ல என்றவாறு.

கூட்டம் - தேவர்களின் குழு முப்பத்து மூன்று கோடி அமரர்களைக் கொண்டதாயினும் அந்தப் பெருங்குழுவில் ஒருவர்கூட இறைவனைக் காணும் பதிபுண்ணியம் செய்தாரல்லர் என்றவாறு.

வண்ணம்தான் - உன் நிறமானது.

சேயதன்று - செம்பொன்னின் நிறம்; எரிபோல மேனி; பவளநிறம் என்றெல்லாம் நூல்கள் வாயிலாகத் தேவர்கள் அறிந்திருப்பினும் உன் நிறம் அஃதன்று. உனக்கு வடிவம் என்று ஒன்றிருந்தால்தானே அதில் நிறமிருக்கும். அவ்வப்பொழுது அடியவர்களுக்கு நீ காட்டும் திருமேனி அம்பிகையின் வடிவமன்றோ?

வெளிதேயன்று - வெண்ணிறமுமன்று.

நீ காட்சி நல்கும் திருமேனி முழுவதும் திருநீறு படிந்திருப்பதால் அந்த வெண்ணிறம் திருநீற்றின் நிறமேயாகும்.

செம்மை வெண்மை ஆகிய இருநிறங்களும் கூறி விட்டதால் இனம்பற்றி ஏனைய நிறங்களும் அல்ல; அவை உனக்கு வடிவாக அமையும் உன் பேரருளுடைமையின் உருவகமான அம்பிகையின் நிறங்களேயாம் என்றவாறு.

ஏகன் - நீ ஒருவன். பதிப்பொருள் ஒன்றே என்பது நினைக. ஏகன் என்றதால் நீ ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அகண்ட வடிவினனுகிய முதல்வன் என்றவாறு.

அனேகன் - நீ ஒருவன் அல்லன். ஆன்மா உன் அட்டமூர்த்தங்களுள் ஒன்று. எண்ணற்ற ஆன்மாக்களை நீ உனக்கு உன் தனித்தனி உடல்களாகக் கொண்டிருத்தலின் நீ பலராக உள்ளாய் ; ஆதலின் ஏகனல்லன்.

ஏகன் அனேகன் - "ஏகன் அனேகன் இறைவனடிவாழ்க" என்று முன்னம் சிவபுராணம் (4-ல்) அருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

அணு - பருப்பொருள்கள் எல்லாவற்றுக்கும் பருப்பொருளாகிய நீயே, நுண்பொருள்கள் எல்லாவற்றுக்கும் நுண்பொருளாகவும் உள்ளாய்.

அணுவில் இறந்தாய் - அணுவிலுள்ள பரமாணுவையும் கடந்த மிக நுண்ணியனுகவும் நீ விளங்குகின்றாய். சிவபரம்பொருளின் இவ்வியல்புகளை ;

திருச்சிற்றம்பலம்

பரியர் நுண்ணியர் பார்த்தற் கரியவர்
அரிய பாடல ராடல ரன்றியும்
கரிய கண்டத்தர் காட்சி பிறர்க்கெலாம்
அரியர் தொண்டர்க் கெளியரை யாறரே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5 - 27 - 5)

என்று அரசுகள் தேவாரம் விரித்தல் காண்க.

முன்னர்ச் சிவபுராணம் (33) - ல் "நுண்ணியனே" என்றருறியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

இறைவன் பரியனுக இருக்குங்கால் அந்தப்பருமை லடிவில் அடங்கிய அவன் குணமாண்புகள் அனைத்தும் அணுவினும் கடந்த அவன் நுண்ணிய வடிவிலும் அடங்கியிருக்கும். இவ்வுண்மையை;

திருச்சிற்றம்பலம்

"பண்ணிய தழல்காய் பாலளா நீர்போற்
பாவமுன் பறைந்து பாலனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினு நம்பநின் பெருமை
நுண்ணிடை யொடுங்க நீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே"

திருச்சிற்றம்பலம்

(திருவிசைப்பா.141)

எனக் கருவூர்த்தேவர் தீட்டும் அழகோவியத்தில் கண்டின்புறுக.

எண்ணந்தான்தடுமாறி - மனங்கலங்கித் தவித்து எனலுமாம்.

தடுமாற்றம் - குறிக்கோளை எய்த இயலாமல் நிலை குலைந்து நிச்சயிக்க முடியாது அலமருதல். இதனை;

பொருமாறிற் கிளர்தடந்தோ ளொருமாறன்
மனங்கிடந்த புழுக்க மாற
வருமாறிற் கண்ணருவி மாறுது
களிப்படைய மண்ணும் விண்ணும்
உருமாறிப் பவக்கடல்வீழ்ந் தூச லெனத்
தடுமாறி யுழலு மாக்கள்
கருமாறிக் கதியடையக் கான்மாறி
நடித்தவரைக் கருத்துள் வைப்பாம்.

(திருவிளையாடற்புராணம் - 13)

என்று பரஞ்சோதிப்பன்னவர் பரவுவதாலறிக.

பதிபுண்ணியம் செய்யாது பசுபுண்ணியங்களின் பயனுகப் போகம் நுகரும் தேவர்கள் இவ்வாறு தடுமாறுதல் இயல்பு. அவர்களே இப்பூவுலகம் சிவன், உயிர்களை உய்யக் கொள்ளும்பூமி என்றும் அதில் சென்று நாம் பிறவாமல் நாளை வீணுகக் கழிக்கின்றோம் என்றும் விதந்து போற்றும் இம்மண்ணுலக வாசிகளான அடியார்களேனும் தடுமாற்றமின்றிச் சீவன் முத்தர்களைப் போலச் சிவபெருமானின் வண்ணமும் வடிவும் இருப்பிடமும் காண்கின்றூர்களோ என்னில் அஃதுமில்லை. அதனை;

திருச்சிற்றம்பலம்

கழியுளா ரெனவுங் கடலுளா ரெனவும்
காட்டுளார் நாட்டுளா ரெனவும்
வழியுளா ரெனவும் மலையுளா ரெனவும்
மண்ணுளார் விண்ணுளா ரெனவும்
சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார்
தொண்டர்வாய் வந்தன சொல்லும்

பழியுளார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே

(திருமுறை 3 - 121 - 2)

எனவரும் பிள்ளையார் திருவாக்காலறிக

எய்தும் ஆறு அறியாத எந்தாய் - இறைவனை எய்தும் நெறியையும் அந்த நெறியிற் சென்று இறைவனை எய்துதலையும் அறியாத இமையவர் கூட்டம் என்றவாறு. **ஆறு அறியாத** என்புழி, ஆற்றினின்றும் என ஐந்தனுருபு விரித்துக் கொள்க.

அறியாத - அறியப்படாத என்னும் செயப்பாட்டுப் பெயரெச்ச வினை ''எந்தாய்'' என்ற செயப்படு பொருளைக் கொண்டு முடிந்தது.

எந்தாய் - எங்கள் அன்னையே எனலுமாம்

நஞ்சு - ஆல கால நஞ்சு. சில உணவுப் பொருள்களில் நஞ்சு சிறிய அளவில் இருக்கும். அப் பொருள்களைத் தொடர்ந்து உண்பவர்களுக்கு அந்த நஞ்சு சிறிது சிறிதாக நாளடைவில் கேடு பயக்கும். பாம்பினிடத்தும் நஞ்சுள்ளது. அது பாம்பினால் தீண்டப்பட்டோருக்கு மட்டுமே தீங்கு தரும். ஆனால் ஆலகால நஞ்சு உண்ணாத நிலையிலும் கணப்பொழுதில் எல்லா உலகங்களையும் அழிக்கும் என்பது நினைக.

அமுது செய்தாய் - உண்ணுதல், நஞ்சு இறப்பைத் தருவது. அமுது இறவாமையைத் தருவது. இறைவன் நஞ்சை உண்டும் அந்த நஞ்சு இறப்பைத் தராததுடன், இறவாமையாகிய அமுதின் பயனைத் தந்தது. எனவே அதை அமுதாகச் செய்துவிட்டான் என்றவாறு. நஞ்சு, மாயேயங்களுள் ஒன்று; அழியக் கூடியது. இறைவன் அதை உண்டதால் அஃதவன் கழுத்தில் தங்கி என்றும் அழியாமை பெற்றது எனலுமாம்.

ஈண்டு ;

திருச்சிற்றம்பலம்

ஆலத்தி ஞலமிர் தாக்கிய
கோன்தில்லை யம்பலம் போல்
கோலத்தி ஞள்பொருட் டாக
வமிர்தங் குணங்கெடினுங்
காலத்தி ஞன்மழை மாறினும்
மாருக் கவிகைநின்பொற்
சீலத்தை நீயு நினையா
தொழிவதென் தீவினையே

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 27)

என்று நம் அடிகளே அருளியுள்ளது காண்க.

தேவர்களும் அசுரர்களும் கடைந்தது திருப்பாற்கடலை; நஞ்சு எழுந்ததும் அந்தக் கடலில்தான். அதை ஈண்டு *முந்நீர்* என்று நிலவுலகக்கடலாகக் கூறியது இனம்பற்றி வந்த உபசாரம்.

உன்றன் வண்ணம்தான் அது காட்டி - திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் குருவடிவில் பேரொளி வீச அமர்ந்திருந்தாய்; நான் தொலைவில் வரும்பொழுதே அந்தப் பேரொளியை என்பால் வீசி உன்னிடம் நண்ணச் செய்தாய். எனவே முதலில் நீ எனக்கு உன் திருமேனி வண்ணத்தையே காட்டினுய்.

வடிவுகாட்டி - அருகில் வந்த எனக்கு உன் திருமேனியைப் பிறகு தெளிவாகக் கட்புலஞகச் செய்தாய்.

மலர்க்கழல்கள் அவைகாட்டி - உன்னை எய்தியதும் உன் திருவடிகள் இரண்டையும் எனக்குக் காட்டினுய்.

உன்றன் - இதை வடிவு, மலர்க் கழல்கள் என்பனவற்றினுடனும் கூட்டுக.

வழியற்றேனை - உன்னை எய்தும் நெறியறியாது தடுமாறிய என்னை. தேவர்கள் கூட்டம் உன்னையடையும் நெறியறியாது உன் வண்ணமும் வடிவும் மலர்க்கழல்களும் காணுது தடுமாறி நிற்க எனக்கு அவற்றை நீயே வந்து

காட்டினாய் என்றவாறு. ***வழியற்றேனை*** - துணையற்றவனை என்றார் திரு. தேசிகர் அவர்கள்

திண்ணம்தான் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய் - இனிப்பிறப்பது உறுதி என்றிருந்த என்னை ; இனி நான் பிறவியெடுப்பதில்லை என்பது உறுதி என்ற முறையில் பாதுகாத்து உன் அடிமையாகக் கொண்டாய்.

ஆட்கொண்டு பிறவாமற் காத்தாய் - என்று மாற்றிக் கொள்க. ஆட்கொண்ட பிறகே பிறவி நீங்கும் என்பதறிக.

என் சொல்லிச் சிந்திக்கேன்- முதலில் மனம் சிந்திக்கும் ; பிறகு அந்தச் சிந்தனை சொல்லாக வெளிவரும். ஈண்டு நம் அடிகள் இறைவனின் பேரருளை நினைந்து மனம் பரவசமாக நின்றாராதலின் அன்பு மேலீட்டால் முதலில் பேச்சு நிகழ்ந்தது. பின்னர் அந்தப் பேச்சினின்றும் சிந்தனைக்குச் சென்றார். ஆதலின் ''என் சொல்லிச் சிந்திக்கேன்" என்றார் என்பதை "***சிந்திக்கேன்***" என்பதன் முன்னும் கூட்டியுரைக்க. ஈண்டு *10-ம்* திருப்பாடலின் உரையில் எடுத்தாண்ட திருமுறை (6 - 95 - 7) பாடலை நினைக.

"*தான்*- "*ஏ*" - இரண்டும் அசைகள்

இத் திருப்பாடலில் தேவர்கள் கூட்டம் தடுமாறி நிற்கத் தகுதியற்ற தம்மை ஆட்கொண்ட பேரருளை நினைந்து எம்பெருமானே உன்னை என் சொல்லிச் சிந்திக்கேன் என்றதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும்; இறைவன் வண்ணமும் வடிவமும் காணப்படாமல் ஏகனும் அனேகனுமாய் அணுவினும் நுண்ணியனாய் அணுவையும் கடந்தவனாய் நின்ற நிலை வழுத்தப்படுவதால் பதிகம் நுதலிய "***சுட்டறுத்தல்***" பெற்றும்.

30. சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே உ௬

(இ - ள்)

இந்த மண்ணுலகில் திருப்பெருந்துறைக்கு வலிய வந்தருளினுய் ! அடியேனை உன் அடிமையாக ஆட்கொண்டு, என்னுள்ளே புகுந்தருளிய வித்தையினை யுடையவனும் யாவராலும் விரும்பத்தக்க அமிழ்தப் பெருங்கடலு மானவனே ! மலையே ! செந்தாமரை மலர் வனம் போன்ற திருமேனி வண்ணமுள்ள ஒப்பற்ற ஒளிவிளக்கே! நாய் போன்று இழிந்த என் நினைவனைத்தும் உன்னைப் பற்றியதாகவே நிகழச் செய்து; என் இரு விழிகளையும் உன் திருவடி மலர்களுக்கே உரிமையாக்கி, என் வழிபாட்டையும் அத்திருவடி மலர்களுக்கே உரியதாக்கி, என் சொற்கள் அனைத்தையும் உன்னைப் பற்றியே மொழியும் மணிமொழிகளுக்கு உரிமையாக்கி; சத்து மல்லாத அசத்து மல்லாத துணையற்ற இந்த ஏழையேனுக்கு, என் ஐம்புலன்களும் நிறைய நுகர்ந்து இன்புறும் வண்ணம் உன்னையே தந்தருளினுய். (உன் பேரருள் வெள்ளத்தை எவ்வாறு வழுத்துவேன்)

(வி - ரை)

"வந்தனை ! என்னை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே ! மலையே !" என்பதை முதலில் அமைத்து அதன்பின் "செந்தாமரைக் காடனைய தனிச்சுடரே" என்பதைப்புணர்த்து இந்தத் திருப்பாடலுக்கு உரை காண்க.

வந்தனை - இந்த மண்ணுலகில் திருப்பெருந்துறைக்கண் என்பொருட்டு நீயே வலிய எழுந்தருளினுய். "வலிய வந்து அடியேனை" ஆளாகக் கொண்டு என் உள்ளே புகுந்தருளிய" என்பது கதிர்மணிவிளக்கம். "வந்து புகுந்த" என்புழி "வந்தனை" என்பது எச்சம் முற்றுக நின்று திரிந்தது என்னும் கருத்தால், ''வினையெஞ்சுகிளவியும் வேறுபல் குறிய" என்னும் தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - எச்சவியல் - சூத்திரம் 457 - விதியில் அடக்கி முற்றுத்திரிசொல் என்னும் சேனுவரையர் உரையையும் மேற்கோள்காட்டுவது கதிர்மணி விளக்கம்.

வந்தெனை - என்று பாட பேதம் காட்டி வந்து எனை என உரைப்பர் திரு.தேசிகர் அவர்கள்.

ஆட்கொண்டு - திருப்பெருந்துறை நிகழ்ச்சி பற்றிய சரித அகச்சான்று.

ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை - ஆட்கொண்ட பின்பு உள்ளே புகுந்தான் என்க.

புகுதல் - முன்னம் (11-ல்) "புகுந்திடுவான்" - என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

விச்சை - இறைவனைக் கடலே ! மலையே! காடே! என்றார். அவை ஒவ்வொன்றும் மிகப்பெரியவை. அவை மூன்றும் ஒரே சமயத்தில் அணு அளவுள்ள ஆன்மாவினுள் புகுந்ததே விச்சையாயிற்று.

விச்சை - மந்திரம் ; மாயம். கள்வர்கள் இவற்றில் வல்லவர்களாயிருத்தலைச் சிலப்பதிகாரம் கொலைக்களக்காதை - (166 முதல் 211 வரை) யில் காண்க. ஈண்டு இறைவன் உள்ளம்கவர் கள்வனாதலும் நினைக.

மால் அமுதப் பெருங்கடலே ! மலையே. மால் - விரும்பத்தக்க அமிழ்தம் தருவதாகலின் கடல்யாவராலும் விரும்பத்தக்க தாயிற்று. ***மால்*** - பெரிய எனலுமாம். ***மால்*** - மயக்கம் என்று பொருள் கொண்டு விச்சையினாலே ஜாலம் செய்யும் என்றார் கவியரசு அவர்கள். ***மால்*** வியக்கத்தக்க எனலுமமையும்.

கடலே ! மலையே ! - கண்டார்க்கு அச்சத்தை விளைவித்தல் ; கடைந்த பின் நஞ்சும் சிறிது அமுதமும் நல்கல் ; ஊழியின் முடிவில் ஒடுங்கிச் சுருங்குதல் என்பன பௌதிகக் கடலின் இயல்புகள். காணும் மெய்யடியார்களுக்கு விருப்பத்தை விளைவித்தல், முற்றும் அமிழ்தமயமாதல், எக்காலத்தும் சுருங்கி ஒடுங்காமை ஆகிய இயல்புகள் இறைவனுக்குண்மையால் "***மாலமுதப் பெருங்கடலே***" என்றார். இறைவனின் சலிப்பற்ற தன்மையைக் குறிக்க ***மலையே*** என்றார். உலகிலுள்ள கடல் மலைகளோடு இங்கு உருவகப்படுத்தப்பட்ட மலைகடல்களிடை வேற்றுமை தெரிவித்தவாறு. உருவகத்துடன் கூடிய வேற்றுமையணி.

செந்தாமரைக்காடு - இறைவன் திருமேனியின் வண்ணம் குறித்தது.

தனிச்சுடரே. தனிச்சுடர்! - உலகில் உள்ள பொருள்களைக் காண உதவுவன கதிரவன், மதி, நெருப்பு ஆகிய மூன்று சுடர்களே. ஆனால் அவை

தாமாகவே ஒளியுள்ளன அல்ல. இறைவனுகிய பேரொளியினின்றும் ஒளிபெற்றுச் சுடர்வன. அவற்றின் ஒளியும் பௌதிகப் பொருள்களையே காட்டுவதன்றி உயிரைப் பற்றியுள்ள இருளை ஓட்டி ஆன்மாவைக் காட்டாது. சிவபரஞ்சுடர் முச்சுடர்களுக்கு ஒளி நல்குவதன்றி அக இருளையும் ஓட்டி உயிரைக் காட்டும். ஆதலின் தனிச்சுடர் என்ருர்.

ஈண்டு,

"நாயகன் கண்ண யப்பா ஞயகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி ஞலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமா ரொளிக ளெல்லாம் சிவனுருத் தேச தென்ருர்."

(சிவஞான சித்தியார் - சுபக்கம் சூத் - 1, செய் - 52)

என்று நம் ஞான சாத்திரம் நவில்வது காண்க. "மெய்ச்சுடருக் கெல்லா மொளி வந்த பூங்கழல் (119)" என்று நம் அடிகளே அருளுவது நினைக.

"முச்சுடர்களில் ஞாயிறும் திங்களும் காலும் ஒளி அவ்வக்கிரகங்களைப் பற்றுக் கோடாகக் கொண்டு ஒளிர்வன ; தீயின் ஒளி எரிபொருளைப் பற்றுக் கோடாகக் கொண்டு சுடர்வது. ஆனுல் சிவவொளியோ யாதொரு பற்றுக் கோடும் இன்றி ஒளிர்வது. ஆதலின் ***தனிச்சுடர்*** என்ருர்" என்று விளக்குவர் திரு. தேசிகர் அவர்கள்.

நாயினேன் தன் சிந்தனை நின் தனக்கு ஆக்கி. நாயினேன் - சிவ்புராணம் (60 -ல்) "நாய்" - என்றதன் கீழ் விளக்கியவை காண்க.

சிந்தனை நின்தனக்கு ஆக்கி. சிந்தனை - மனம் ஆங்காரம் புத்தி சித்தம் என்பன அந்தக்கரணங்கள். இவற்றுள் மனம் ஒரு பொருளைப் பற்றும். சித்தம், அப்பொருள் எது என்று ஆய்வு செய்யும். பற்றிய பொருள் பாம்போ, கயிருே, என்ன ஐயம் நிகழ்ந்துழி, அதை இன்னதென்று நிச்சயிப்பேன் என்று முனைத்தெழுவது ஆங்காரம். அப்பொருள் "பாம்பன்று; கயிறே " என நிச்சயிப்பது புத்தி. அவ்வாறு நிச்சயித்த உண்மையைச் சித்தம் ஆன்ம அறிவில் பதித்து விடும். பின்னொரு காலத்தில் அவ்வாறு ஆன்ம அறிவில் பதிந்துள்ள உண்மையை மீண்டும் வெளிக்கொண்டு வருவது சித்தம். இவ்வாறு நினைவு கூர்வதையே ஈண்டுச் சிந்தனை என்ருர்.

இவ்வுண்மைகளை;

"அந்தக் கரண மடைவே யுரைக்கக்கே
ளந்தமனம் புத்தியுட ளுங்காரஞ் -சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பல்கா லெழுந்திருந்தங்
குற்றதுசிந் திக்கு முணர்" (உண்மை விளக்கம் - 17)

என்று நம் ஞான சாத்திரம் நவிலும்.

நம் அடிகள் உலகியல் அறிவுமிக்க மிகச் சிறந்த கல்வியாளர். பின்னர்ப் பாண்டியப் பேரரசின் முதலமைச்சராக அமர்ந்து பல அரசியல் அனுபவங்கள் பெற்றவர். அக்கால எல்லையில் பல உலகியல் உண்மைகளை அவர் சித்தம் ஆய்ந்திருக்கும்; ஆய்வுகளின் முடிவு அவர் ஆன்ம அறிவில் பதிவு பெற்றிருக்கும். பின்னர் திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதும் தொடர்ந்து பெற்ற சிவானுபவங்களும் அவ்வாறே பதிவு பெற்றிருக்கும். இஞ்ஞான்று சித்தம், முன்பதிவாகியுள்ள உலகியல் நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக வெளிக் கொண்டுவரின் நம் அடிகள் மீண்டும் உலகியலில் சென்று உழல வேண்டி வரும். ஆதலின் இறைவன் சித்தம் அவ்வாறு செய்யாமல் சிவானுபவ நினைவுகளையே வெளிக்கொண்டு வரச் செய்தான் என்பார் ***"சிந்தனை நின்தனக்கு ஆக்கி"*** என்றருளினர்.

கண் இணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி. கண்இணை - இருகண்கள் ஞானேந்திரியங்களுள் கண் ஒன்று மட்டுமே பொருள்கள் உள்ள இடம் சென்று அவற்றின் மீது படிந்து பற்றுவது. எனவே இதைச் சென்று பற்றும் இந்திரியம் என்று ஞானநூல்கள் கூறும். ஏனைய நான்கு ஞானேந்திரியங்களாகிய நாக்கு, காது, மூக்கு, தோல் ஆகியவை உடம்பிலேயே நின்று பொருள்கள் தம்முடன் வந்து புணரும் பொழுது மட்டும் அவற்றைப் பற்றி நுகர்வன. ஆதலின் அவற்றை நின்று பற்றும் இந்திரியங்கள் என ஞான நூல்கள் வழங்குகின்றன. நம் அடிகளின் அகத்தே சிந்தனை முழுவதும் நிறைந்திருந்த இறைவன், புறத்தே அவருக்குத் திருப் பெருந்துறையில் குருவடிவில் காட்சி தந்தான். அவர் உயிரினுள் நின்று அவர் ஆன்ம போதம் கண்பார்வையுடன் சென்று குருவடிவில் அமர்ந்திருக்கும் தன் திருவடிகள் இரண்டையும் பற்றச் செய்தான். அவை பற்றியதும் அக்கண்களைத் தன் உடைமையாகவே ஆக்கிக் கொண்டான் என்றவாறு.

நின் திருப்பாதப் போது - தாமரை மலர் போன்ற உன் இரண்டு திருவடிகள். ***திரு*** - செல்வம். வீடுபேறாகிய செல்வம். இரண்டு பாதங்களில்

ஒன்று சிவபெருமானது ; மற்றொன்று உமையம்மையது. அவை முறையே ஞானமும், பேரருளும் குறிப்பனவாம். இறைவன் உயிர்களுக்கு நல்கி வீட்டின்பம் அளிப்பான் என்ற குறிப்பு.

ஞானேந்திரியங்களில் சிறந்ததான கண்ணைக் கூறியதனால் நின்று பற்றும் ஏனைய நான்கிந்திரியங்களையும் இறைவன் தன் உடைமையாக்கிக் கொண்டான் என்பது பெறப்படும். அந்த உண்மையைப் பின்னர் "***ஐம்புலன்கள் ஆர்***" என்றதால் உறுதிசெய்தல் காண்க.

வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி - என் வழிபாட்டையும் அத்திருவடிப் போதுகளுக்கே உரிமையாக்கிக் கொண்டு என்க. இதனால் காயத்தால் செய்யும் வழிபாடு குறிப்பிடப்பட்டது.

அம்மலர் - என்றது கண்ணிணையைத் கொண்ட அப்பாத தாமரைகளைச் சுட்டி நின்றது. "***அ***" என்பது அத்தகைய என்ற பொருள் பட நின்றது.

மலர்க்கே - என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை. ஏனைய தெய்வங்களை நீக்கிச் சிவபெருமானையே வணங்கும் ஏகநாயக வழிபாடு குறித்தது. முன்னம் 6 -ம் திருப்பாடலில் "உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லாது" என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் பார்க்க.

வாக்கு உன் மணி வார்த்தைக்கு ஆக்கி - என் வாக்கிந்திரியத்தை நின் புகழ்களை இடைவிடாது கூறுவதற்கே ஆக்கிக்கொண்டு. இதனால் வாக்கினால் செய்யப்படும் வழிபாடு குறித்தது. ஆகத் திரிகரணங்களாலும் வழிபடும் முறை கூறியவாறு காண்க.

மணிவார்த்தை - சிவபெருமானின் பொருள்சேர் புகழ். அவன் புகழ் ஒளிமிக்கதாகலின் ***மணிவார்த்தை*** என்றார். முன்னம் சிவபுராணம் (20 -ல்) "உரைப்பன்" என்றதன் கீழ் எடுத்தாண்ட திருக்குறளும் அதன் கீழுரைத்தவையும் காண்க.

மணிவார்த்தைக்கு ஆக்கி - நம் அடிகளின் புலமைத் திறம் முழுவதையும் சிவபெருமான் தன் பொருள் சேர் புகழ்களைப் பாடுவதற்கே ஆக்கிக்கொண்டு அவருக்கு இறைவன் "மாணிக்கவாசகர்" என்று தீட்சா நாமம் சூட்டியதையும் திருவாசகத்துக்கு ''மணிவாசகம்" என்றும் ஒருபெயர் வழங்குவதையும் நினைக. ★

★ That my poor abilities in poetry shall be all and ever conscrated to God's glory; and I leg you receive this as one testimony - George Herbet

மணிவார்த்தை - திருவைந்தெழுத்து என்று உரை கண்டார் திரு. பாரதியாரவர்கள்

ஏகாரத்தை "நின்றனக்கே", "போதுக்கே;" "வார்த்தைகளுக்கே", என ஒவ்வொன்றுடனும் இயைத்துரைக்க.

ஐம்புலன்கள் - இவை மெய், நாக்கு, கண், மூக்கு, செவி என்பன. இவற்றைச் சிவபெருமான் தன் உடைமைகளாக ஆக்கிக் கொண்டமையின் அவை வேறு உலகப் பொருள்களைப்பற்ருவாயின. "***மெய்***" - தென்றல் முதலிய ஊற்றின்பங்களைச் சிவமாகவே நுகரும். "வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் ஈசனெந்தை இணையடி நீழலே என்பது நம்அரசுகள் தேவாரம். "***நாக்கு***" உண்ணும் இன்சுவை உணவையெல்லாம் உள்ளக் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குப் படையலான பிரசாதமாகவும் சிவ வடிவமாக அமைந்து வழிபாட்டுக்குதவிய திரவியங்களாகவும் கருதி உண்ணுதல். "***கண்***" - உலகப் பொருட்கள் அனைத்தையும் காணினும் கண்களுடன் ஆன்ம அறிவு உடனிருந்து நோக்காமையின் அவற்றைப் பற்ருமல், குருவடிவில் வந்து ஆட்கொண்ட சிவபெருமானின் திருவுருவக்காட்சி ஒன்றை மட்டுமே ஆன்ம அறிவு உடனிருந்து காணப்பார்த்து அக்காட்சியை மட்டும் ஆன்ம அறிவிற் பதிவித்தல். ***மூக்கு*** - உலகில் நுகரும் நறுமணங்களை எல்லாம் குருவடிவில் வந்த சிவபெருமானின் திருவடித் தாமரையின் சிவமணமாகவே கருதி நுகர்தல். ***செவி***- ஏனைய உலகியல் புகழ்களை எல்லாம் ஒதுக்கிச் சிவபெருமானின் புகழ் சேர் பொருள்களை மட்டுமே கேட்டல். ஆளுடைய அரசுகளின் திருவங்க மாலைப்பதிகம் முற்றும் ஈண்டு நினைக.

ஆர்தல் - நிரம்ப நுகர்தல்.

உன்னைத் தந்தனை - கடலும் மலையும் காடும் ஓர் உயிரினுல் எத்தனை நுகரப்படினும் முற்றிலும் தீரா. இதுபற்றி முன்னம் சிவபுராணம் (16 -ல்) "மலை" - என்றதன் கீழுரைத்தவையும் ஆண்டு எடுத்தாண்ட அடிக்குறிப்பும் காண்க.

சிவபெருமான் அருளும் பேரின்பப் பெருஞ்செல்வம் மெய்யுணர்வினுல் மட்டும் நுகர்ந்தின்புறப்படுகிறது. சடப்பொருள்களை மட்டும் நுகர்ந்தின்புறும் ஐம்புலன்கள் அதை நுகர மாட்டா. எனினும் அவிர்சடையான் அருட்கடலில் மூழ்கினுர்க்கு மெய்யுணர்வில் நேர்படும்

சிவபோகம் இடையருத புலன் நுகர்ச்சிக்கும் எளிவரும் என்பதை,

திருச்சிற்றம்பலம்

உணர்வி னேர்பெற வருஞ்சிவ
போகத்தை யொழிவின்றி யுருவின்கண்
அணையு மைம்பொறி யளவினு
மெளிவர வருளினை யெனப் போற்றி
இணையில் வண்பெருங் கருணையே
யேத்திமுன் னெடுத்தசொற் பதிகத்திற்
புணரு மின்னிசை பாடின
ராடினர் பொழிந்தனர் விழிமாரி

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருஞான சம்பந்த நாயனூர் புராணம் - 161)

எனவரும் ஆளுடைய பிள்ளையாரின் தில்லைத்தரிசன நிகழ்ச்சியாலறிக.

இறைவன் நம் அடிகள்பால் எடுத்துக் கொண்டது ஞானேந்திரியங்களையும் கன்மேந்திரியத்தில் வாக்கையும் மட்டுமே. ஆனுல் அவருக்குத் தன்னையே தந்து விட்டான். நம் அடிகள் பின்னரும் ;

திருச்சிற்றம்பலம்

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே யீசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர்கைம் மாறே"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் - 395)

என்றருளுவது காண்க.

"நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற

(திருவுந்தியார் - 6)

என்று நம் ஞானசாத்திரம் நவில்வதும் காண்க.

ஐம்புலன்கள் - இவை மெய், நாக்கு, கண், மூக்கு, செவி என்பன. "***ஆக்கி***" - என்னும் எச்சங்கள் "***ஆர்***" என்னும் செயவென் எச்சத்துடன் அடுக்கித் "***தந்தனை***" என்ற முன்னிலை வினை கொண்டுமுடிந்தன.

இரண்டுமிலி தனியனேற்கே - சத்தாகிய பதியோ, அசத்தாகிய சடமோ அல்லாத சதசத்தாகிய ஆன்மா. இதற்கு இவ்வாறின்றி நூலறிவும் மேலைத்தவத்தால் வரும் நுண்ணறிவும் இல்லாதவனென்றும் உரைப்பர்.

தனியன் - திருவருளை எய்துதற்குரிய சாதனைகளாகிய துணையற்றவன். அறிவுள்ளதும் அல்லேன்; அறிவற்ற சடமும் அல்லேன்: அவற்றினின்றும் தனிப்பட்டு அறிவித்தால் அறிபவனுயுள்ளேன் எனலுமாம்.

ஏ - ஈற்றசை

இத் திருப்பாடலில் இறைவன், ஞானேந்திரியங்களையும் வாக்கையும் தன்னுடைமைகளாக்கித் தன் புகழ் பாடவைத்தமை கூறியதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். உணர்வில் நேர்வரும் சிவபோகத்தை ஆர நுகர்வித்தமையால் பதிகம் நுதலிய "***சுட்டறுத்தல்***" பெற்றும்.

31. தனியனேன்பெரும் பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே

(இ - ள்)

இறைவனே ! துணையற்ற மூடனாகிய யான் பிறவிப் பேராழியில் வீழ்ந்து, துன்பமாகிய பேரலைகளால் அலைக்கப்பட்டுப் பற்றுக் கோடு ஒன்றும் இல்லாமல், கோவைப் பழத்தை ஒத்த சிவந்த வாயையுடைய மகளிர் என்னும் புயற்காற்றால் சுழற்றப்பட்டு, காமமாகிய பெரிய சுறாமீனின் வாயருகில் நெருங்கி, "இந்த நிலையினின்றும் தப்பிப் பிழைக்கும் வழி எது என்று பன்முறை நினைந்து," திருவைந்தெழுத்தாகிய கட்டு மரத்தைப் பற்றிக் கொண்டு, செயலற்றுள்ள என்னைத் தோற்றக் கேடு இல்லாத வளமிக்க வீடு பேறாகிய கரையைக் காட்டி, ஆட்கொண்டு அருளினை. (நின் அருட்பெருமை இருந்தவாறு என்னே !)

(வி - ரை)

''முனைவனே" என்பதை முதலில் வைத்து, அதன்பின் ''மூர்க்கனேற்கே" என்பதைப்புணர்த்து இத் திருப்பாடலுக்கு உரை காண்க.

முனைவன் - கடவுள். முன்னம் 22-ம் திருப்பாடலில் ''முனைவன்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

மூர்க்கன் - பிடிவாத குணமுள்ள அறிவில்லாதவன். முன்னம் போற்றித் திருவகவல் (63)-ல் ''கொடிறும் பேதையும் கொண்டது விடாது" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

தனியனேன். தனியன் - துணையற்றவன் முன்னம் (26-ம்) திருப்பாடலில் "தனியன்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

இதற்கு இவ்வாறன்றி ''உடம்பெடாத தனிநிலை " என்பர் திரு.கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள். அஃதாவது கேவல நிலை. அதனால் இத்திருப்பாடலிலேயே "பிறவிப் பெரும் பௌவத்து எவ்வத்தடந்திரையால் எற்றுண்டு" என்பதால் சகலநிலையும் ; அதன்பின் "முதலந்த மில்லா மல்லற் கரை காட்டி" என்பதால் சுத்த நிலையும், இறுதியாக '' ஆட்கொண்டாய் " என்பதால் முத்திநிலையும் கூறியவாறு காண்க.

பிறவிப் பெரும் பௌவம் - பௌவம் - கடல் . பிறவிப் பௌவம் என்னாது ''பிறவிப் பெரும் பௌவம்" என்றது பௌதிகச் கடலினின்றும் பிரித்துக்காட்ட வேண்டியென்க. பிரித்தற்கான காரணம், முன்னைப் பிறப்பு

பின்னைப் பிறப்புக்குக் காரணமாயும், பின்னது முன்னதன் காரியமாயும் காரண காரியத் தொடர்ச்சியால் முடிவின்றி வருதலாம். ஈண்டு திருக்குறள் 10-க்குப் பரிமேலழகர் உரை காண்க.

தடந்திரையால் எற்றுண்டு - பேரலைகளால் மோதி அலைக்கப்பட்டு. கடல் அலைகளால் அலைக்கப்படுதல் கூறியதால் கடலில் ''வீழ்ந்து'' என்பது வருவித்துரைக்கப்பட்டது.

தடம் திரை - பேரலைகள். கடலினின்றும் கரைநோக்கி வரும் அலைகள் பேரலைகளாகவும் திரும்பிச் செல்வன சிற்றலைகளாகவும் இருத்தல் கண்கூடு. பிறவியில் நாம் நுகரும் துன்பங்கள் மிகுதியாகவும் இன்பங்கள் குறைவாகவும் இருத்தல் பொதுவாக நாம் காணும் உண்மை. எனவே, பேரலைகள் துன்பங்களாகவும் சிற்றலைகள் இன்பங்களாகவும் கொள்வாம். மிகுதிபற்றிப் பேரலைகள் பற்றி மட்டும் ஈண்டுக் கூறிச் சிற்றலைகளை உய்த்துணரவைத்தார். அவையும் பசு புண்ணிய நுகர்ச்சிகளாதலின் ஆகாமிய வினைகளைத் தோற்றுவித்துப் பிறவிக்கு வழி கோலுவன. எனவே இரண்டு அலைகளும் துன்பந்தருவனவே.

பற்று ஒன்று இன்றி - கடலில் வீழ்ந்தவன் அலைகளால் அலைக்கப்படும் பொழுது யாதேனும் ஒரு பற்றுக் கோடு கிடைப்பினும் அதைப்பற்றிக் கொண்டு ஒரு வேளை கரையேறிப் பிழைக்கலாம்; அத்தகைய பற்றுக் கோடும் இல்லாமல் என்றார். கரைசேரும் ஆசையன்றி வேறு ஆசை ஒன்றுமின்றி எனலுமாம்.

கனியை நேர்துவர் வாயார் என்னும் காலால்கலக்குண்டு . கனி - கோவைப்பழம். ***நேர்*** - போன்ற ***துவர் வாயார்*** - சிவந்த வாயையுடைய மகளிர். ***கால்*** - காற்று. ஈண்டுச் சூறுவளியைக் குறித்து நின்றது.

கலக்குண்டு - புயற்காற்றால் சுழற்றப்பட்டு. அழகிய இளம் பெண்கள் என்னும் புயலால் சுழற்றப்பட்டு என்றவாறு.

கனியினேர் - என்பதும் பாடம்.

துவர் - என்பதைப் பவளம் என்று கொண்டு கோவைக் கனியையும் பவளத்தையும் ஒத்த செந்நிறமுள்ள வாயினர் எனலு மமையும். ஈண்டுப் பவளம், உதடுகளின் இயற்கை வண்ணத்தையும், கோவைக்கனி அவ்வுதடுகளின் மேல் பூசப்படும் ஒப்பனை வண்ணத்தையும் குறித்து நின்றன.

துவர் - செந்நிறம் குறிப்பதால் கனி என்பதை மதுரச்சுவை தரும் கனிகள் போன்ற சொற்களாகக் கொண்டு உரை வகுத்தார் திரு.கா.சு. பிள்ளையவர்கள். இளம் மகளிரின் அழகிய வாய்களாலும் அவற்றால் அவர்கள் பேசும் இனிய மயக்குமொழிகளாலும் கலக்குண்டவன் என்றவாறு.

காலால் கலக்குண்டு - இயல்பான வாழ்க்கையைச் சூறுவளி கலக்கிச் சின்னபின்னப்படுத்துவது. மகளிர் தரும் மயக்கமும் ஆன்ம யாத்திரிகனைக் கலக்கிச் சின்னபின்னப்படுத்து மீண்டும் பிறவியிற் செலுத்துவது.

மகளிர், ஈண்டு உரிமை மகளிரை மட்டுமின்றி நெறிதவறிய பிற மகளிரையும் பரத்தையரையும் குறித்து நின்றது.

காற்று, மெல்லியதாகத் தொடங்கும் பொழுது இன்பம் பயந்து பின் புயலாக மாறும் பொழுது துன்புறுத்தி அலைப்பது போல் மகளிர் இன்பமும் தொடக்கத்தில் இன்பம் பயப்பது போல் தோன்றி முடிவில் ஆன்ம வாழ்வையே சீர்குலைப்பதாகும்.

காம வான் சுறவின் வாய்ப்பட்டு - ***காமம்*** - மேலே மகளிர் மேற்கொண்ட ஆசையைக் கூறிவிட்டதால் ஈண்டு, மண், பொன் என்பவற்றின் மேலும் அவற்றால் எய்தும் வேறு எல்லாப் பொருள்கள் மேலும் கொண்ட ஆசையைக் குறித்தது. அந்த ஆசை பெரிய சுறாமீனாக உருவகப்படுத்தப்பட்டது. **வான்** - பெரிய. **சுறவு** - சுறாமீன். பெரிய சுறாமீனின் வாய்ப்பட்டார் மீள்வதின்மையின் ஈண்டு, வாயருகில் நெருங்கி என்றுரைத்தாம். வாய்ப்பட்டார் உடனே கடியுண்டு மாண்டு விழுங்கப்படுவராகலின் அவர் இனி "**என்னே உய்யுமாறு என்றென்று எண்ணு**"தற்கும் **புணை பிடித்துக் கிடப்பதற்கும்** வாய்ப்பில்லை என்பது நினைக.

என்று என்று எண்ணி - பலவாறு பலமுறையும் சிந்தித்து எனலுமாம்.

அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை - அஞ்செழுத்து - முன்னம் சிவபுராணம் (1)-ல் "நமச்சிவாய" என்பதன் கீழுரைத்தவை பார்க்க.

புணை - நீரில் மிதக்கும் மரக்கட்டைகளைக் கொண்டு கட்டப்பட்டது. நீர் நிலைகளில் செல்லப்பயன்படுத்துவது. இதைக் கட்டுமரம் என்பர். திருவைந்தெழுத்தாகிய புணை உவர்கடலில் மட்டுமின்றிப் பிறவிக்கடலிலும் காத்துக் கரை சேர்க்கும் வாய்மையை;

திருச்சிற்றம்பலம்

''இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருநாவுக்கரசு நாயனர் புராணம் - 129)

என்று நம் சேக்கிழார் பெருமான் செப்புவது காண்க.

கிடக்கின்றேனை - கிடத்தல் - செயலின்றி இருத்தல். மூர்க்கனுகலின் புணை கிடைத்தும் அதன் உதவியால் கரையேற முயலாது கிடந்தேன் என்றவாறு.

திருவைந்தெழுத்தைப்பற்றிக் கணித்தல் ஒன்றே அமையும்; வேறு தவம் வேண்டா ; வீடுபெறலாம் என்றது குறிப்பு. இந்த உண்மையை நம் அடிகளே பின்னர்;

திருச்சிற்றம்பலம்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனுரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே

திருச்சிற்றம்பலம் (திருவாசகம் - 553)

என்றருளுவது காண்க.

அஞ்செழுத்தின் - என்பதிலுள்ள ''இன்'' சாரியை. ***கிடக்கின் றேனை***- கிடக்கின்றேன் வினையாலணையும் பெயர். **"ஐ"** இரண்டாம் வேற்றுமை உருபு.

முதல் அந்தம் இல்லா மல்லல் கரை - தோற்றமும் அழிவும் இல்லாத வளம் பொருந்திய முத்தியின்பம். ***மல்லல்*** - வளம். சிவபோகமாகிய வீட்டின்பம். ***கரை*** - வீடுபேறு.

இத்திருப்பாடலில்; பிறவி, துன்பம், மகளிர், காமம், திருவைந்தெழுத்து, வீடுபேறு இவற்றை முறையே கடல், பேரலை, சூறாவளி, சுறுமீன், புணை, கரை என்னும் இவற்றால் முற்றுருவகம் பெறச்

சொல்லோவியம் தீட்டப்பட்டிருத்தல் கண்டு மகிழ்க.

காட்டி ஆட்கொண்டாய். காட்டி - வீட்டு நெறியில் செலுத்தி.

ஆட்கொண்டாய் - வீடுபேறு நல்கினுய். அடிகள் இப்பொழுது சீவன் முத்த நிலேயில் மட்டும் உள்ளார். வீடுபேறு இனிக்கிட்டவுள்ளது. உறுதிபற்றி "**ஆட்கொண்டாய்**" என்று இறந்த காலத்தில் கூறினுர்.

ஈண்டு;

யாது நிலேயற் றலேயு மெழுபிறவிக் கடலே
ஏறவிடு நற்கருணே ஓடக்காரனும்

(திருவேளேக்கார வகுப்பு)

எனவரும் அருணகிரி நாதரின் திருவாக்கை நினேக.

இத்திருப்பாடல் முற்றுருவகமாக அமைந்து இன்பம் செய்வதை. ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

'' அறிவி லொழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையு மிடும்பை யீட்டமும்
இனேயன பலசரக் கேற்றி விணேயெனும்
தொன்மீ காமனுய்ப்ப வந்நிலேக்
கருவெனு நெடுநக ரொருதுறை நீத்தத்துப்
பிறப்பெனும் பெருங்கட லுறப்புகுந் தலேக்கும்
துயர்த்திரை யுவட்டிற் பெயர்ப்பிட மயர்த்துக்
குடும்ப மென்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறையெனுங் கூம்பு முரிந்து குறையா
வுணர் வெனும் நெடும்பாய் கீறிப் புணரு
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்ன மலங்கல்
மதியுட னணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக
தொல்லெயி லுடுத்த தில்லேக் காவல
வம்பலர் தும்பை யம்பல வாணநின்
னருளெனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.

திருச்சிற்றம்பலம்

(கோயில் நான்மணிமாலே - 16)

எனவரும் பட்டினத்தடிகள் திருவாக்குடன் ஒப்பிட்டுச் சுவைக்க.

இத்திருப்பாடலில் மகளிர் மயக்கு, மண்பொன் ஆசைகள் ஆகியவை கடியத்தக்கன என்ற குறிப்பால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; முதலந்தமில்லா வளம் பொருந்திய வீட்டின்பம் முதலந்தமில்லான் அருளால் மட்டுமே எய்தத்தக்க தென்ற குறிப்பால் பதிகம் நுதலிய "**சுட்டறுத்தல்**" பெற்றும்.

32. கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே உஅ

(இ - ள்)

கற்றுத் தேர்ந்த பின்நூல்களில் வல்லார் வாய்க்கேட்டுத் தெளிவு பெற்றார்கள். எவராலும் அறிய இயலாதவனும்; சிறிதும் அழிவில்லாதவனும்; சுற்றத் தொடர்பு இல்லாதவனும், கற்காமலே எல்லாவற்றையும் அறிந்தவனும் ஆகிய சிவபெருமான்; நாட்டிலுள்ள உயர்ந்தவர்கள் அனைவரும் ஏமாற்றத்தால் திகைத்து நிற்க, இந்த மண்ணுலகத்தில் தகுதியில்லாதவனும் இழிந்தவனுமாகிய அடியேனுக்குப் பேரருளை வழங்கி நாய் போன்ற கடையவனான எனக்கு; மேலோர்களுக்குங் கூடக் காட்டக் கூட" தனவாகிய எல்லாவற்றையும் காட்டியும், பின்பும் கேட்கப்படாத எல்லாவற்றையும் கேட்கச் செய்தும் தகுதியற்ற சிறியேனை மீண்டும் பிறவியெடுக்காமல் காப்பாற்றி அடிமையாகக் கொண்டு அருள் செய்தான். எங்கள் தலைவன் செய்த இந்த மாய வித்தையை என் என்பது.

(வி -ரை)

கேட்டாரும் அறியாதான் - யாரும் கேட்டும் அறியாதான் என்று மாற்றிக் கொள்க.

ஆரும் - யாரும் - சத்தினி பாதர்களல்லாத சாதாரண உலகமக்கள்.

கேட்டு அறியாதான் - கேள்வி - கல்வி. நூலறிவால் அறியமுடியாதவன் நூல்களும் அவற்றைக் கற்பிப்போர் புகட்டுவனவும் சொற்களாலானவை. சொற்கள், நால்வகை வாக்குக்களான மாயேயங்களான சடங்கள். அவற்றைக் கொண்டு மாயையைக்கடந்து நின்று அதை இயக்கும் ஞான மூர்த்தியை அறிய முடியாது. அஃதாவது பாச ஞானத்தால் பதியை அறிய இயலாது என்றவாறு.

இதனை ;

பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடு முள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதி
ஞசைதரு முலகமெலா மலகைத்தே ராமென்
றறிந்தகல வந்நிலையே யாகும் பின்னு
மோசைதரு மஞ்செழுத்தை விதிப்படி யுச் சரிக்க
வுள்ளத்தே புகுந்தளிப்ப னூனமெலா மோட

(சிவஞான சித்தியார் -சுபக்கம் -சூத் - 9 செய் - 1)

என்று நம் ஞான சாத்திரம் நவில்வது காண்க.

கேடு ஒன்று இல்லான் - கேடு - அழிவு - ***ஒன்று*** - சிறிது கூட. ஒன்றும் என்பதிலுள்ள உம்மை தொகுத்தலாயிற்று: பதிப்பொருள் அழிவற்றது என்ற உண்மை நினைக. இது சிவம் என்ற சொல்லுக்கு விளக்கமாக அமைந்தது.

கிளை இல்லான் - கிளை இருமுது குரவரும் பிற சுற்றத்தாரும். அவன் கேடும் நலமும் இல்லாதவனாகலின் அவற்றை உசாவும் சுற்றமும் இல்லாதவனானன். உயிர்களுக்கு அவன் சுற்றமாவதன்றித் தனக்கெனச் சுற்றமில்லாதவன். இதனையே பின்னர் நம் அடிகளும் ;

திருச்சிற்றம்பலம்

'' எந்தை யாயெம் பிரான்மற்று மியாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே "

(திருவாசகம் - 51)

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் - 257)

என்றருளுவது காண்க.

கிளையின்மை ''தன்வயத்தனுதல்" என்ற அவன் எண்குணங்களில் ஒன்றைக் குறிப்பதாக உரைப்பார் திரு. கா.சு. பிள்ளையவர்கள்.

கேளாதே எல்லாம் கேட்டான் - கல்வி வாயிலாக அன்றியும் செவிப்புலன் வாயிலாக அன்றியும் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் அறிபவன். இஃது இறைவனின் எண்குணங்களுள் ஒன்ருன" இயற்கையுணர் வினனுதல்" என்பதால் ஆவது. "**எல்லாம்**" என்றது அவனது ''முற்றுமுணர்தல்" குணத்தாலாவது. உபலக்கணத்தால் ''காணுதே எல்லாம் கண்டான்" என்பன முதலியவாகக் கொள்க.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

''உண்ணு துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணு யிலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணு ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணு யுலகுக்கு நின்ருய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 55 -11.)

நாட்டார்கள் விழித்திருப்ப. நாட்டார்கள் - நாடு - ஞாலத்தின் ஒரு பகுதியாகிய தேசம். அதில் வசிக்கும் வீடுபேற்றை விரும்பி முயன்று கொண்டிருக்கும் அடியவர்கள்.

விழித்திருப்ப - ஏமாற்றத்தால் கண்களைப் பெரிதாகத் திறந்து கொண்டு; அவர்களை விட்டு என்னை ஆட்கொண்டதன் காரணம் இன்னும் தெரியாமல் திகைத்து நிற்க. ஏமாற்றத்தால் பெரிதாக விழித்திருத்தலைப் பேழ்கணித்தல் என்பர். இதனை நம் அடிகளே;

திருச்சிற்றம்பலம்

நிற்பார் நிற்கநில் லாவுலகில்
நில்லோ மினிநாம் செல்வோமே
பொற்பா லொப்பாந் திருமேனிப்
புயங்க னாள்வான் பொன்னடிக்கே
நிற்பீ ரெல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே யொருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற் கரியன் பெருமானே

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் - 609)

என்று அருளுவது காண்க.

பேழ்கணித்தல் - அச்சத்தால் பெரிதாக விழித்தலுமாம் ஈண்டு, நம் தவமுயற்சியில் ஏதேனும் குறைபாடு நிகழ்ந்து விட்டதோ என்ற அச்சம். இச் சொல அச்சம் என்ற பொருளில் வருவதை;

திருச்சிற்றம்பலம்

அரிதிற் றிறக்கத் தாம் பாட
அடைக்க வவர்பா டியவெளிமை
கருதி, "நம்பர் திருவுள்ள
மறியா தயர்ந்தே" னெனக்கவன்று

பெரிது மஞ்சித் திருமடத்தி
லொருபா லணைந்து பேழ்கணித்து
மருவு முணர்விற் றுயில் கொண்டார்
வாய்மை திறம்பா வாகீசர்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருநாவுக்கரசு நாயனர் புராணம் - 275)

என்று நம் சேக்கிழார் பெருமான் தீட்டும் செஞ்சொல்லோ வியத்திற் காண்க.

விழித்திருப்ப - என்பதற்கு இவ்வாறன்றி ''வீட்டின்பத்திலே நாட்டமுடையவர்களாகச் சோர்வின்றி விழிப்புடன் அன்பர்கள் பலர் இருக்கவும் என்னை ஆண்டாய்" என்றுரைப்பது. கதிர்மணி விளக்கம்.

ஞாலம் - உலகம். இடவாகு பெயராய் அதில் வசிக்கும் உயர்ந்தோர்களைக் குறித்து நின்றது. இறைவன் அருளிப்பாட்டைக் கண்டு வழுத்தியுய்வோர்கள் அவர்களேயாவர் இந்த உண்மையை,

திருச்சிற்றம்பலம்

முன்புநீ நமக்குத் தொண்டன்
முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் மேவ லாலே
பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத்
தொடர்வரத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர்
நாந்தடுத் தாண்டோ மென்றார்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - தடுத்தாட்கொண்ட புராணம் - 67)

என்று நம் சேக்கிழார் பெருமாள் செப்புவதிற் காண்க.

நாயினுக்குத் தவிசிட்டு - நாயினுக்குத் தவிசிட்டது போல் - என உவம உருபு விரித்துக் கொள்க.

தவிசு - மெத்தையாலாகிய சிறிய இருக்கை.

நம் அடிகளை, இறைவன் திருப்பெருந்துறையில் குருவடிவில் ஆட்கொண்டு மெய்யடியார்கள் வடிவில் அங்குக் கூடியிருந்த சிவகணங்களின் கூட்டத்தில் அமரச் செய்தான். சிவனடியார்கள் கூட்டம் மிக விழுமிய ஒன்று. அக் கூட்டத்தில் அமரும் தகுதி ஏனைய உலகமக்களுக்கு இன்று. தான் அவ்வுலக மக்களினும் தாழ்ந்து நாய் போன்ற இழிந்த இயல்புகளுடையவன். எனினும் இறைவன் தன்னை அந்தக் கூட்டத்தில் அமரச் செய்தான்; ஓரிடத்துக்குச் சான்ஞேர் ஒருவர் எழுந்தருளின் அவ்விடத்துக்குரியார் அவருக்குச் சிறந்த இருக்கை அளித்து அதில் அமரச் செய்து மரியாதை செய்வார். அத்தகைய இருக்கையை அங்கு நுழைந்த இழிந்த நாய் ஒன்றுக்கு அளித்து அதில் அமரச் செய்வது போன்றது இறைவன் தம்மை அடியார் கூட்டத்தில் இருக்கச் செய்தது; என்றவாறு

நாயினுக்குத் தவிசிட்டு- என்பது இத்திருப்பாடலில் கூறப்பட்டுள்ள பொருள். ''நாய்மேற் றவிசிட்டு" என்று 234 - ம் பாடலில் கூறப்படுவதன் பொருள் வேறு. அதனை அந்தப்பாடல் உரையில் விளக்குவாம்.

இட்டு - இதற்கு ''ஒரு மொழியாகிய திருவைந்தெழுத்தின் உண்மையை அறிவித்து" என்பர் முதலியாரவர்கள்.

நாயினேற்கே - "பின்னும்" என்று அடுத்த அடியில் வருவதை ஈண்டுங் கூட்டிப் "பின்னும் நாயினேற்கே" என்றுரைக்க. தகுதியற்ற எனக்கு அருள் செய்தது மட்டுமின்றிப் பின்னும் காட்டாதன எல்லாம் காட்டிக் கேட்பித்து மீட்டும் பிறவாமற் காத்தாட் கொண்டான் என்றவாறு.

நாய் - இதுபற்றி முன்னம் சிவபுராணம் (60 -ல்) "நாய்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

காட்டாதன எல்லாம் காட்டி - காட்டாதன என்றதால், காட்டக் கூடியன உண்டு என்பது பெற்ரும். அஃது உலகியல். ***காட்டாதன*** - பதி பசு பாசம் என்ற இவற்றின் சிறப்பியல்புகள் ***எல்லாம்*** - முற்றிலும். ***காட்டி*** பதி பசு பாசங்களின் பொது இயல்புகளை மட்டும் அறிந்துள்ள ஏனையோருக்கு உணர்த்தாத அவற்றின் சிறப்பியல்புகளை எனக்கு அறிவித்து.

பின்னும் - தகுதியற்ற எனக்கு அருள் செய்தான் அதன் பின்னும் காட்டாதன எல்லாம் காட்டினன் அதன் பின்னும் கேளாதன எல்லாம் கேட்பித்தான். அதன் பின்னும் பிறவாமற் காத்தான் ; அதன் பின்னும் ஆட்கொண்டான் என ஒவ்வொன்றுடனும் கூட்டியுரைக்க

கேளாதன எல்லாம் கேட்பித்தான். கேளாதன - பெத்த நிலையில் உபதேசம் பெற இயலாத முத்தி பஞ்சாட்சரம், தூலபஞ்சாட்சரம் முதலியவற்றைப் பெத்த நிலையில் உபதேசம் செய்து என்னைப் பக்குவம் செய்து இப்பொழுது முத்தி பஞ்சாட்சரத்தை உபதேசம் செய்தான் என்றவாறு.

இங்கு சிவஞான போதம் 8 -ம் சூத்திரத்தையும் 9 -ஆம் சூத்திரம் மூன்றும் அதிகரணத்தையும் சிவஞான மாபாடியத்துடன் நினைக. ''காட்டாதன வெல்லாங்காட்டி தன் கருணைத் தேன் காட்டி" (180) என்று.... நம் அடிகள் பின்னரும் அருளிச் செய்வது சிந்திக்க.

கேடொன்றும், விழித்திருப்பவும், காட்டியும், கேட்பித்தும் என உம்மைகள் விரித்துப் பொருள் விளக்குவது கதிர்மணி விளக்கம். என்னை என் ஐ - என்தலைவன் எனலுமாம்.

மீட்டேயும் பிறவாமை - இங்ஙனம் அவன் காட்டியும் கேட்பித்தும் அருளியதால் நான் பிறவாமை எய்தினேன் என்றவாறு. ஏகாரம் அசை.

காத்து ஆட்கொண்டான் - ஆட்கொண்டு காத்தான் - என்று மாற்றிக் கொள்க. நான் பிறவி நெறிக்குச் சென்றாலும் அவ்வாறு செல்லாமல் தடுத்து அடிமையாகக் கொண்டான். அதனால் நான் பிறப்பில் செல்லாது காக்கப்பட்டேன் என்றவாறு.

காத்தல் பிறவியில்புகாமல் காத்தலும், பிறப்பித்து இன்ப துன்ப நுகர்ச்சிகளால் மலபரிகாரம் எய்தச் செய்து இறுதியில் அழிவில்லாத இன்பம் தரும் வீட்டுலகில் உய்தலுமாம். இவ்விரண்டனுள் சிறந்ததாகிய பிறவியே வராது காத்தலைத் தகுதியற்ற எனக்குச் செய்தான் என்க.

விச்சை - மாயா சாலம். தகுதியுள்ளோர் பலர் நிற்க, இழிந்த எனக்கு இத்துணை அருளிப்பாடுகளைச் செய்து காத்தாட் கொண்டதன் காரணம் மாய வித்தை போல எனக்குப் புரியவில்லை என்றவாறு. இந்த வித்தையை என்னென்பேன் என இசையெச்சம் வருவித்து முடிக்க.

விச்சை - ஞானம் என்று பொருள் கொண்டு எம் பெருமான் தன்னை அறிந்து அனுபவித்தற்கு எனக்கு அருளிய ஞான சக்தியே இத்துணைப் பேறுகள் எல்லாவற்றுக்கும் காரணம் என்றுரைப்பது கதிர்மணி விளக்கம்.

விச்சை - வியக்கத்தக்க அற்புதச் செயல் என்பர் திரு. கா.சு. பிள்ளையவர்கள்.

தான் ஏ - இரண்டும் அசைகள்

இந்த அழகிய திருப்பாடலை ஆன்மார்த்த சிவபூசை புரியும் எண்ணற்ற அன்பர்கள் உச்சிக்கால பூசையில் ஓதும் பஞ்சபுராணப் பாடல்கள் ஐந்தில் ஒன்ருக ஓதிப் பயன் பெறுகின்றுர்கள். ★

இத் திருப்பாடலில் ''நாய்க்குத் தவிசிட்டது போல இழிந்த எனக்கு அருள் செய்த விச்சையை என் என்பேன்" என்றதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்ரும். கேட்டாரும் அறியாதான் என்பது முதலிய இறை இலக்கணங்களும் காட்டாதன முதலிய அனுபவ இலக்கணங்களும் சுட்டி உணரப்படுவனவாக இல்லாமல், மெய்யுணர்விஞல் தெளியத் தக்கன; ஆதலின் பதிகம் நுதலிய "**சுட்டறுத்தல்**" பெற்ரும்.

33. விச்சை தா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
 மிகுகாத லடியார்தம் அடிய ஞக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி
 அகநெகவே புகுந்தாண்டா னன்பு கூர
அச்சஞண் பெண்ணலியா காச மாகி
 ஆரழலா யந்தமா யப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
 சிவபெருமா னெம்பெருமான் தேவர் கோவே
உகூ

---

* `For, verily, I say unto you, That many prophets and righteous men have desired to see those things which you see, and have not seen them, and to hear those things which you hear and have not ....heard them

- St. Mathews (13 :: 17)

Quoted by Thiru K.M. Balasubramaniam B.A., B.L.

(இ -ள்)

தூயவனுகி, அவன் அவள் அது என்னும் உலகத் தொகுதியாகி, ஞானப் பெருவெளியாகி, அரிய ஒளி வடிவமாகி, முடிவிடனுகி, அதற்கு அப்பாலாகியும் நிலைபெற்றவனும் வெட்சியின் அழகிய மலரையொத்த செம்மேனியுடையவனுமாகிய எங்கள் சிவபெருமான், எங்கள் தலைவனும் தேவர்கள் தலைவனுமாகி ஆண்டவன்; மிக்க மெய்யன்புள்ள தன் அடியார்களுக்கு என்னை அடியவனுகச் செய்து, பண்டைய வாசனு மலம் இன்றும் தாக்குங் கொலோ என்னும் அச்சத்தை ஒழித்து அடிமையாகக் கொண்டான்; அமிழ்தம் ஊற்றெழுந்து உள்ளம் உருகும் பொருட்டும் மெய்யன்பு மிகும் பொருட்டும் என் உட்புகுந்து ஆட்கொண்டருளினுன். இங்ஙனம் அவன் செயலைக் கேட்கப் புகுகின், இதனை ஒத்ததாகிய வித்தை வேறுண்டோ ? (இல்லை) என்றவாறு.

(வி -ரை)

இத் திருப்பாடலின் மூன்ருவது அடியை முதலிலும் நான்காவது அடியை அதையடுத்தும் வைக்க ; அதன்பின் "மிகுகாதல்" என்பதிலிருந்து "அகம் நெகவே" என்பது வரையுள்ள பகுதியைப் புணர்க்க; பின்னர் "அன்புகூரப் புகுந்தாண்டான்" என்பதை யமைத்து அதன் பின், "கேட்கப்புகின்" என்பதையும் அதன்பின் "விச்சை தான் இது ஒப்பதுண்டோ" என்பதையும் வைத்துப் பொருள் கொள்க.

அச்சன் - தூயவன் என்று பொருள்படும் ஒரு வட சொல் (அச்ச - தூய). ***அச்சன்*** - நுண்ணியன் எனலுமாம். அச்சாணி போன்றவன் எனலுமொக்கும்.

அச்சன் - தந்தை என்ற பொருளில் திசைச் சொல்லாகக் கொள்ளலும் ஒக்கும். மலைநாட்டு வழக்குக் காண்க. இறைவன் எல்லா உயிர்களுக்கும் தந்தையாவதும் நினைக.

ஆண் பெண் அலி ''அவன்" ''அவள்" ''அது" என வரும் சிவஞான போதம் முதற் சூத்திரம் நினைக. ஆண் பெண் என்பதால் உயர்திணை உயிர்களும், "***அலி***" என்றதால் உயர்திணை மனிதப்பிறவிகள் மட்டுமின்றி அஃறிணை உயிர்களும் சடப்பொருள்களும் குறித்து இவையனைத்தும் கலந்த

உலகத் தொகுதி என்றவாறு. உலக இயக்கம் சிவபெருமானை யின்றி இல்லை என்பது நினைக.

திருச்சிற்றம்பலம்

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *6 - 38 - 7*)

எனவரும் நம் அரசுகள் அமுதவாக்குச் சுவைக்க

அரும்பவிழ் . . . .
. . . . . ஒள்ளிய
ஞானப் பாணி வானத்துறை ஞரும்
விழையும் விழைவிலென் றுகடீர் மாமண்
அறிவர லவாஅச் செறிமல வுவர்நீர்
மன்றன் மாசற மண்ணல்
என்றன ரம்மல மொன்றி லோரே

(ஞானாமிர்தம் - *43*)

(உ - ரை)

ஒள்ளிய **ஞானப் பாணி** - அழகிய ஞானமாகிய நீரைக் கொண்டு **வானத்துறைஞரும் விழையும் விழைவில் என்** - தேவர்களும் விரும்புகின்ற - அவா வின்மை யென்றும்;

தூகள்தீர் மாமண் குற்றமற்ற மகத்தாகிய மண்ணையிட்டு ;

அறிவு அறல் செறிமலம் - அஞ்ஞானமாகிய திணிந்த நிபிடமலமும் ***அவா உவர்நீர்*** - அவா வாகிய மூத்திரமும் என்னும் இரண்டு நாற்றத்தையும் ; ***மாசற மண்ணல்*** மன்றல் என்றனர் - மாசறக் கழுவுதலே பரிமளமாகிய ஆன்ம சுத்தியாவதென்று அருளிச் செய்தனர் ;

அம்மலம் ஒன்றிலோர் - அந்த மலம் ஒன்றுதல் இல்லாத பெரியோர்கள்.

அவனே யவனி முதலாயி னானு
மவனே யறிவாய்நின் றானு - மவனேகா
ணாணகிப் பெண்ணா யலியாகி நின்றானுங்
காணாமை நின்றானுங் கண்டு

(திருக்களித்துப்படியார் - 88)

எனவரும் ஞான சாத்திரம் நினைக.

ஆகாச மாகி. ஆகாசம் - தகராகாசம். இதைப் பூத ஆகாயம் என்றும் அடுத்துவரும் "***ஆரழல்***" என்பதைப் பௌதிக நெருப்பு என்றும் கொண்டு இவை இறைவனின் அட்ட மூர்த்தங்களில் குறிப்பிடப்படுவதால் ஏனைய ஆறு மூர்த்தங்களையும் இனம்பற்றி ஈண்டு அடக்கி உரைத்தனர் முன்னுரையாளரில் சிலர். பஞ்ச பூதங்கள் அனைத்தும் "***அலி***" என்று மேலே அருளியதுள் அடங்கி விட்டமை காண்க.

ஆரழல் - உள்ளக் கமலமலரை அலர்வித்து அதன் நாப்பண் உள்ள தகராகாசமாகிய நுண்ணிய ஞானப் பரவெளியில் சிவபெருமானை ஒளி வடிவமாகத் தியானம் செய்யும் இந்த முறையை "***தகரவித்தை***" என்பர். இந்த ஞானவொளி சிவயோகிகளுக்கு மட்டுமே காண இயல்வதாம்; ஏனையோர் காண்டற் கருமைபற்றி '***ஆரழல்***" என்றார். இந்த உண்மையை;

திருச்சிற்றம்பலம்

தளிர்போல் மெல்லடி யாடனை யாகத் தமர்ந்தருளி
எளிவாய் வந்தென்னுள்ளம் புகுதவல்ல வெம்பெருமான்
களியார் வண்டறையுந் திருக்கா ளத்தி யுள்ளிருந்த
ஒளியே யுன்னையல் லாலினி யொன்று முணரேனே

(திருமுறை 7 - 26 - 9)

திங்கள் சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த
அருட்டிரு நோக்க மெய்த
தங்கிய பவத்தின் முன்னைச்
சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற்
பொருவிலன் புருவ மானார்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் -கண்ணப்ப நாயனார் புராணம் 104)

என்று நம் திருமுறைகள் தெருட்டுவதறிக.

ஆரழல் - நான்முகனாலும் திருமாலாலும் பல்லூழி முயன்றும் முடியும் அடியும் காணமுடியாது நின்ற நெருப்பு மலையாகக் கொண்டுரைத்தார் திரு. பாரதியாரவர்கள்.

அந்தமாய் - பேரூழியின் முடிவில் பருப்பொருள்கள் நுண் பொருள்கள் அனைத்தும் மாயையுள் ஒடுங்க, மாயை சிவபெருமானின் திருவடிகளில் வைப்புச் சத்தியாக நிற்கும்படி முடிவைச் செய்பவன் என்றவாறு. சிவஞான போதம் முதற் சூத்திரம் நினைக.

அப்பால் நின்ற - அயன், திருமால் உருத்திரன் என்னும் அதிகார தேவர்கள் மூவருள் ஒருவனாகிய குணிருத்திரன் பிரகிருதி புவனம் முடிய ஒடுங்குவதற்கு முடிவிடனாக உள்ளான். ஆதலின் அவனை நீக்கிச் சிவபெருமானாகிய மகா ருத்திரனைக் குறிப்பிடுதற்காக "***அப்பால்***" என்றார். அவன் அம்மூவருக்கும் மேம்பட்டு அவர்கள் தலைவனாக உள்ளான். அவனே சுத்தமாயா புவனங்கள் ஒடுங்குவதற்கு இடமாக உள்ளவன். எல்லாம் ஒடுங்கிய பின் உமையம்மையும் அவனுள் ஒடுங்க அவன் ஒருவனே பரம சாந்தமான நிலையில் நிற்பன் என்பது தோன்ற "***அப்பால் நின்ற***" என்றார். மறைகளும் சிவாகமங்களும் கூறும் இந்த உண்மையை;

திருச்சிற்றம்பலம்

"பாதந் தனிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற யேக பாதர்
ஓதத் தொலிமடங்கி யூருண் டேறி
யொத்துலக மெல்லா மொடுங்கியபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த ஞரே"

திருச்சிற்றம்பலம்

(பாதந்தரிப்பார் - பா - ம்) (திருமுறை 6 - 35 - 2)

என்று நம் அரசுகள் விரித்துரைத்தல் காண்க.

செச்சை மாமலர் புரையும் மேனி - சிவபெருமான் நம் அடிகளை ஆட்கொள்ளத் திருப்பெருந்துறையில் தாங்கி வந்த அந்தணக்கோலம். இது சரித நிகழ்ச்சியின் அகச்சான்றுகளுள் ஒன்று

செச்சை- வெட்சிப்பூ. இது செந்நிறமுள்ளது. குருதேவரின் திருமேனி வண்ணத்துக்குப் பண்பு பற்றி வந்த உவமம்.

மாமலர். மா - மாண்பு எனலுமாம். இறைவன் திருமேனி நிறத்துக்கு உவமையானதால் இந்த மலர் மாண்பு பெற்றது. *மா* - சிறந்த என்றுர் திரு. பாரதியாரவர்கள்.

எங்கள் சிவபெருமான். எங்கள் - மெய்யன்பர்கள் எல்லாரையும் உளப்படுத்திக் கூறியவாறு. இவர்கள் திருப்பெருந்துறையில் நம் அடிகளுடன் கூடியிருந்தவர்கள். சரிதக் குறிப்பின் மற்றெரு அகச்சான்று.

சிவபெருமான்- இன்பவடிவினன். மங்கலம் செய்பவன். முன்னம் சிவபுராணம் (12 -ல்) ''சிவன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

தேவர்கோ - மிக இழிந்தவனுகிய எனக்கு மட்டும் அவன் தலைவன் அல்லன், மிக உயர்ந்த தேவர்களுக்கும் அவனே தலைவன் என்றவாறு. இஃது அவன் எண்குணங்களுள் ஒன்றுன முடிவிலாற்றலுடைடைமை குறித்தவாறு.

மிகு காதல் அடியார்* - *மிகு - வினைத் தொகை. மெய்யடியார்களின் சிவபக்தி கணந்தோறும் வளர்ந்து கொண்டே இருப்பதால் ***மிகு காதல்*** என்றூர். ''கூடும் அன்பினில் கும்பிடல்" என்பது பெரியபுராணம். இதுபற்றி முன்னம் திருவண்டப்பகுதி" (92 -ல்) ''மீக்கொள மேன்மேல் " என்றதும் அதன் கீழுரைத்தவையும் காண்க.

அடியார்தம் அடியன் ஆக்கி - சிவனடியார்களுக்குத் தம்மை அடியவனுக்கி. சிவஞானபோதம் 12-ம் சூத்திரம் ''அன்பரொடு மரீஇ" என்றதும் அதற்கு மாபாடியம் தரும் விளக்கமும் காண்க.

அச்சம் தீர்த்து ஆட்கொண்டான் - முன்னம் 28-ம் திருப்பாடலில் உரையின்கீழ் எடுத்தாண்ட சிவஞானசித்தியார் பாடலின் கீழ் விளக்கியவை காண்க. வாசனுமலம் வந்து தம்மைத் தாக்குமே என்ற உணர்வையே இங்கு "***அச்சம்***" என்றூர். "***மிகு காதல் அடியார்தம் அடியனுக்கி***" யதால் இறைவன் அந்த அச்சத்தைத் தீர்த்தான் என்றவாறு.

அடியார்கள் அஞ்சவேண்டியவற்றை எல்லாம் நம் அடிகள் திருவாசகம் அச்சப்பத்து முழுவதிலும் கூறினூர் என்றும்; இறைவனின் அபயகரம் அச்சம் தீர்த்தலேயும், வரதகரம் ஆட்கொண்டதையும் குறிக்கும் என்றுமுரைத்தாரும் உண்டு.

ஆட்கொண்டான் - இஃது, இறைவன் நம் அடிகளே புறத்தே ஆட்கொண்ட திருப்பெருந்துறை நிகழ்ச்சி குறித்த சரித அகச்சான்று.

அமுதம் ஊறி அகம் நெகவே புகுந்தாண்டான் அன்புகூர - அகம் நெகவே அமுதம் ஊறி அன்பு கூரப்புகுந்தாண்டான். என்று மாற்றிக் கொள்க. ***அகம் நெகவே அமுதம் ஊறி. அகம்*** - நெஞ்சம். இது மனம் முதலிய அந்தக் கரணங்கள் நான்கன் தொகுப்பு. நம் அடிகளார் தம் நெஞ்சைக் ''கல்" என்றும் ''இரும்பு" என்றும் ஆங்காங்குக் கூறிச் செல்கின்றூர். கல்லும் இரும்பும் எளிதில் உருகாதன. மிகுந்த வெப்பமூட்டி உருக்கினுல் அவை முறையே கற்பிழம்பாகவும் இரும்பின் குழம்பாகவும் உருகி ஓடுவன. உருகி அமுதமாக ஊற்றெடுப்பன அல்ல. ஈண்டு தம் நெஞ்சம் உருகி அமுதமாக மாறியது மட்டுமின்றி அந்த அமுதம் ஊற்றெடுக்கலாயிற்று என்றூர். இஃது எவ்வாறு இயலும் ?

மனம் முதலிய அந்தக் கரணங்கள் நான்கும் அசுத்தமாயையின் காரியமாகிய பிரகிருதிமாயையில் தோன்றிய தத்துவங்கள். மாயை, இயல்பாக உயிரின் அறிவை விளக்குவதாகும். ஆனால் அசுத்தமாயை அறிவை மயக்கி அறிவிக்கும். இதற்குக் காரணம் எங்கும் வியாபகமாக உள்ள ஆணவமலம் மாயை முழுவதும் வியாபித்திருப்பதாகும். ஆயினும் சுத்த மாயையில் சிவபெருமான் நேரே இருந்து தொழில் புரிவதால் அங்குள்ள ஆவணமலம் வலிகுன்றிப் பகலவன் முன் இருள் போன்று தன் இருப்பையும் காட்ட இயலாதிருக்கும். அங்குங் கூட ஈசுர தத்துவம் வரையுள்ள புவனங்களில் ஆணவமலம், அதிகார மலவாசனையாக இருக்கும். பிரகிருதி மாயா புவனங்களில் இவ்வாணவமல வாசனை இருப்பின் அஃது ஆன்மாவை உலகியலில் ஈடுபடுத்தி முழு ஆணவமலமாக மாறிப் பிறப்பிற் செலுத்திவிடும். அவ்வாறு நிகழாமற் காத்துக் கொள்ளவே சாதகன் தன்னையொத்த சீவன்முத்தர் கூட்டத்தில் இருந்து சிவவேடத்தையும் திருக்கோயிலையும் சிவபெருமானாகவே கருதி வழிபடும்படி சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம் ஆற்றுப்படுத்துகின்றது. ஆனால் சுத்தமாயையிலுள்ள புவனங்களில் இறைவன் திருமுன் சிறப்பினால் மலவாசனை ஆன்மாவை மயக்கி யறிவிக்கும் ஆற்றலற்றதாகின்றது. பெருங்காயம் வைத்திருந்த குப்பியுள் பெருங்காயம் முழுவதும் செலவான பின்பும் அதன் வாசனை நிற்கும். ஆனால் அதை அட்டில் தொழிலுக்குப் பயன்படுத்த இயலாது. அவ்வாறே இந்த மல வாசனையும் சுத்த மாயாபுவனங்களில் ஆன்மாவை மயக்கியறிவிக்கும் திறனற்று நிற்கும். ஆன்மா, ஈசுரதத்துவத்திலுள்ள புவனங்களைவிட்டு மேற்புவனங்களுக்குச் செல்லும் பொழுது மலவாசனை ஈசுரதத்துவ புவனங்களிலேயே நின்று விடும். இவை பொது விதிகள். எனினும் உலக நன்மையின் பொருட்டுப் பதமுத்திகளில் உள்ள எந்த உயிரையும் இறைவன் பிறவியில் செலுத்தும் வாய்ப்புள்ளது. அங்ஙனம் செலுத்தப்படும் உயிர் எந்தப்பணிக்காகச் செலுத்தப்பட்டதோ அந்தப்பணியை முடித்து இறைவனைச் சாரும். உலக மயக்கில் படாது. ஆதலின் ஆண்டு மாயை மயக்கி அறிவிப்பதில்லை. அசுத்தமாயையில் சிவபெருமான் நேரே இருந்து தொழிற்படுவதில்லை யாதலின் ஈண்டு மாயா காரியமாகிய மனமும் மயங்கி அறிகின்றது. ஈண்டு, நம் அடிகளை ஆட்கொள்ள இறைவன் அவர் நெஞ்சத்தில் புகுந்துவிட்டதால் அந்த நெஞ்சில் அவன் எண்குணங்கள் நிறைந்து அவையே

தொழிற்படுகின்றன. கல்லின் தன்மையும் இரும்பின் இயல்பும் மாறி வரம்பிலின்பமுடைமையாகிய குணத்தின் மயமாகி விடுகின்றது. நெஞ்சம் உருகும் பொழுது அமுதம் பெருக்கெடுத்தோடுகின்றது. அந்த அமுதமும் வரம்பில் இன்பமாதலின் மேலும் மேலும் ஊறுகின்றது. அதனால் பக்தியாகிய இறைவன்பு மாட்டன். மேலும் சிறக்கின்றது. இவற்றுக்கெல்லாம் காரணம் அவன் நெஞ்சினுட் புகுந்து ஆண்டதேயாகும். அகம் நெகிழும் பொருட்டும் அன்பு கூறும் பொருட்டும் புகுந்து ஆண்டான் என்றவாறு.

இவ்வாறு அந்தக் கரணங்கள் மாறுவதையே பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங்களாக மாறுதல் என்று நம் ஞான நூல்கள் கூறுகின்றன. அக்கரணங்கள், பதிப்பொருள் தங்கித் தொழில் செய்வதற்குத் தகுதிபெற்றுப் பதியை அறியவும் அனுபவிக்கவும் துணை செய்கின்றன.

ஈண்டுப் "**புகுந்தாண்டான்**" என்றது நம் அடிகளின் அகத்தே புகுந்து ஆட்கொண்ட நிகழ்ச்சி. இதற்கும் மேற்கூறிய திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டை நுணித்தும் நுனித்தும் ஆய்ந்து உளங் கொள்க.

புகுந்து - முன்னம் 15-ம் திருப்பாட்டில் "புகுந்திடுவான்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

ஆண்டான் - அருள்புரிந்தான்.

கேட்கில் - ஆராயப்புகுந்தால் எனலுமாம்.

நெகவே - ஏகாரம் தேற்றம்.

அகம் நகவே என்று பாடங் கொண்டு என் நெஞ்சமே என்னைப்பார்த்துச் சிரிக்க என்றுரைத்தார் சீகாழித்தாண்டவராயர்.

வொப்பதன்றே, கொண்டாயமுதமூறி, ஆகாயமாகி என்பனவும் பாட பேதங்கள்.

முன்னம் திருப்பாடல் 18 - உரையில் எடுத்தாண்ட மேற்கோள் பாடல்களைப் பார்க்க.

விச்சை - வித்தை - ஞானமாகிய பேராற்றலே இந் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணம் என்றவாறு. கல்லையும் இரும்பையும் உருக்கி அமுதமாக ஊற்றெழச் செய்த மாய வித்தை எனலுமாம்.

இத்திருப்பாடலில், நெஞ்சம் அமுதூறி அன்பு கூரச் செய்ததால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; இறைவன் ஆகாசமாய் ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற நிலை வழுத்தப்படுவதால் பதிகம் நுதலிய "**சுட்டறுத்தல்**" பெற்றும்.

34. தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே ௩0

(இ -ள்)

எங்கள் சிவபெருமான் அமரர்களின் தலைவன் ; பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் யாரும் அறிய இயலாத மகாதேவன்; வளம் பொருந்திய உலகங்கள் எல்லாவற்றையும் தோற்றுவித்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களைப் புரிவோரும் தன்னின் வேருயுள்ளோருமாகிய நான் முகன் திருமால் உருத்திரன் என்னும் மூவருக்கும் தலைவனாய் நிலை பெற்றுள்ள தலைமையுள்ள வடிவினன்; முன்னோர்க்கெல்லாம் மாண்புள்ள தந்தையும் உமையம்மையால் ஆளப்படுகின்ற இடப் பாகத்தையுடையவனும் எம்தந்தையும் எல்லாருக்கும் தலைவனுமாகிய அவன் வலியவந்து மிகச் சிறியவனாகிய என்னையும் ஆளாகக் கொண்டருளினான் ஆதலின் யாம்; பிறர் எவருக்கும் அடிமையல்லோம்; எதற்கும் அச்சமுறோம்; அந்தப் பெருமானின் அடியார்களுக்கு அடியவர்களோடு கூடிவிட்டோம் ; மேலும் மேலும் கூடினோம்; இன்ப வாரிதியில் மூழ்கித் திளைத்தாடிக் கூத்தாடுவோமாக.

இத்திருப்பாடலுக்கு ஆற்ருெழுக்காகப் பொருள் காண்க.

(வி -ரை)

தேவர்கோ அறியாத தேவதேவன் - தேவேந்திரனும் அறியாத மகாதேவன் என்றுரைத்தனர் முன்னுரையாளர்கள். அவர்கள் இறைவனே அறியாத வரலாற்றை முன்னம் கீர்த்தித்திருவகவல் (94) -ல் "இந்திர ஞாலம் போல வந்தருளி" என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக் காண்க.

செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்கும் மற்றை மூவர். செழும் பொழில்கள் - செழும் தேவர் முனிவர் முதலிய அறிவுடையோரை உலகங்கள் தம்மிடத்தில் கொண்டிருப்பதால் செழும் பொழில்களாயின.

பொழில்கள் - பிரகிருதிமாயையிலுள்ள உலகங்கள். அவை பல வாயினமையின் பொழில்கள் என்ருர்.

பயந்து காத்து அழிக்கும் மற்றை மூவர் - படைக்கும் தொழிலேச் செய்யும் நான்முகன், காத்தல் தொழிலேச்செய்யும் திருமால், அழிக்கும் தொழிலேச் செய்யும் உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும். ***மற்றை***-மும்மூர்த்திகளினின்லும் வேருன.

கோனய் நின்ற முதல்வன். கோன் ஆய் - மும்மூர்த்திகளுக்கும் தலைவனுக. எனவே இவன் மும்மூர்த்திகளுள் ஒருவனுகிய உருத்திரன் அல்லன் என்பது பெற்ரும். அவன் பிரகிருதி புவனங்கள் முடியச் சங்காரம் செய்யும் குணிருத்திஞவான். சிவபெருமான் சுத்தமாயா புவனங்கள் முடிய அனைத்தையும் சங்கரிக்கும் மகாருத்திரன் ஆவன். மகா சங்காரத்தில் குணிருத்திரனும் ஒடுக்கப்படுகின்ருன். அப்பொழுது ஒடுங்காது நிற்பவன் சிவபெருமான் ஒருவனே ஆவன். அதை வலியுறுத்தவே ஈண்டு "***நின்ற முதல்வன்***" என்ருர். ***முதல்வன்*** - மீண்டும் புனருற்பவத்தில் அனைத்தும் தோன்றக் காரணமாயுள்ளவன் என்ற குறிப்பு. "சங்கார காரணனுயுள்ள முதலையே முதலாக வுடைத்து இவ்வுலகம்" என்னும் சிவஞான போத முதற் சூத்திரத்தின் கருத்துரை காண்க.

இதற்குச் சிவஞானமாபாடியம் தரும் விளக்கம்:-

"சங்காரம் ஐவகைப்படும். அவற்றுள் முதலாவது, நிவிர்த்தி கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்; இரண்டாவது, பிரதிட்டா கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்; மூன்ருவது வித்தியா

கலேயிலடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; நான்காவது சாந்தி கலேயிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்; இறுதியது, சாந்தியதீத கலேயிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்.

அவற்றுள், ஈண்டைக்கேற்புடையது இறுதிக் கண்ணதாகலின், ஈண்டுச் சங்கார காரணன் என்றது சுத்தமாயா புவனுந்தம் சங்கரிக்குஞ் **சங்கார காரணனுகிய** பரமசிவனே ; அயன் மாலொடுங் கூடக்குணதத்து வத்தில் வைகிப் பிரகிருதி புவனுந்தஞ் சங்கரிக்கும் குணிருத்திரனே யன்றென உணர்க. என்னே? அவன் பிரகிருதியின் மேற்பட்ட புவனங்களுக்குச் சங்காரகாரணனன்மையாலும், பரமசிவன் இலயம் போகம் அதிகாரமென்னும் மூன்றவத்தையினும் முறையே அருவம் அருவுருவம் உருவமென்னும் மூன்று திருமேனி கொண்டு, சத்தன் உதியுத்தன் பிரவிருத்தனெனவும் சிவன் சதாசிவன் மகேசனெனவும் பெயர் பெற்று, நிற்பனென்றும், இங்ஙனம் தொழிலால் வேறுபட்டதன்றிப் பொருளால் வேறுபாடில்லேயென்றும், பசு வர்க்கத்திற் பிரளயாகலரிற் பக்குவமுடையவன் சீகண்ட ருத்திரனென்றுஞ் சைவாக மங்களெல்லாம் ஓதுதலின், மகேசுரமூர்த்தி யிறுவாயான திருமேனியே பரமசிவனுக்குச் சுதந்தர வடிவம், ஏனேயவை அன்னவல்ல வென்பது பெறப்படுதலானும் என்பது. இவ்வேறுபாடுணதற்கன்றே பொதுப்படச் சங்காரகாரணனே என்ருெழியாது **சங்கார காரணனுயுள்ளே முதலேயே** என விதந் தோதியதூஉமென்க" என்பதாகும். முன்னம் போற்றித் திருவகவல் (122-ல்) "முதல்வன்" என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க. திருப்பாடல் (8-ல்) எடுத்து விளக்கியவையும் காண்க. மேலும்

தேவரி னுருவ னென்பர்
திருவுருச் சிவனேத் தேவர்
மூவராய் நின்ற தோரார்
முதலுருப் பாதி மாத
ராவது முணரா ராதி
யரியயற் கறிய வொண்ணு
மேவுரு நிலேயு மோரா
ரவனுரு விளேவி மோரார்

(சிவஞானசித்தியார் -சுபக்கம் -சூத் - 1 செய் - 49)

என்ற நம் ஞான சாத்திரமும் காண்க.

இனி "*நின்ற*" என்பதற்கு மும்மூர்த்திகளையும் அதிட்டித்து நின்ற எனலுமாம். சிவபெருமான் மும்மூர்த்திகளையும் அதிட்டித்து நின்று முத்தொழில்களையும் செய்வித்தலை ;

'பூவண்ணம் பூவின் மணம் போல மெய்ப்போத வின்பம்
ஆவண்ண மெய்கொண் டவன்றன்வலி யாணை தாங்கி
மூவண்ண றன்சந் நிதிமுத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னுன் விளையாட்டின் வினையை வெல்வாம்

(பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், கடவுள் வாழ்த்து)

என்றதிற் காண்க.

மூர்த்தி - வடிவம். இதனுல் மும்மூர்த்திகளைச் சிவபெருமான் அதிட்டித்து; தான் மூர்த்திமானுக நின்று தொழில் புரிகின்றுன் என்பது காண்க.

மூவர்மூர்த்தி கோனய் - நின்ற முதல்வன் - மும்மூர்த்திகளின் வடிவங்களில் மூர்த்திமானுக நின்ற முதல்வன் என்றவாறு.

மூர்த்தி - சுயம்பு. தன் விருப்பம் போல் திருவுருவம் எடுத்துக் கொள்வோன். அட்ட மூர்த்தங்களான எட்டுவகைத் திருமேனிகள் கொள்வோன் என்றெல்லாம் உரைத்தனர் முன்னுரையாளரில் சிலர்.

மூதாதை. மூப்பு- மாண்பு. அஃதாவது உயர்ச்சி. சிவஞான சித்தியார் சூத் - 2 செய் - ௯-ல் "ஈண்டு மூப்பென்றது உயர்ச்சியின் மேற்று, அது விண்ணோர்க்கெல்லாம் மூப்பாய் என்பதனுலும் மூத்த திருப்பதிகமென்பதனுலு முணர்க என்று நம் மாதவச்சிவஞான முனிவர் உரை கூறுவது காண்க.

பேரூழிக் காலத்தில் ஒடுங்கிய மும்மூர்த்திகளைப் புனருற்பவ காலத்திற் படைத்தலின் ***மூதாதை*** எனக் கொண்டனர் திரு. தேசிகரவர்கள். மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட வித்தியேசுரர் முதலியோர்க்கும் முன்னேனுதல் பற்றி ***மூதாதை*** எனக் கொண்டார் திரு. முதலியாரவர்கள்.

மாது ஆளும் பாகத்து எந்தை . மாது- உமையம்மை. இறைவனின் பேரருளின் உருவகம். பேரருளால் ஆளப்படும் பாகம் என்றும், பேரருளை ஆளும்பாகம் என்றும் இரட்டுறமொழிய நின்ற நுட்பமும் நயமும் காண்க.

இதனைத் தடுமாறு தொழிற் பெயர் என்பர் தொல்காப்பியர். முன்னம் திருவண்டப்பகுதி (103-ல்) "பேரமைத்தோளி காதலன்" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க. விறகு விற்றது, மண் சுமந்தது முதலிய திருவிளையாடல்களைப் பேரருளால் ஆளப்பட்டமைக்கு எடுத்துக் காட்டுக்களாகக் காட்டி விளக்குவர் கவியரசு அவர்கள்.

பேரூழிக்காலத்து உமையம்மை யாவையும் தன்னுள் ஒடுக்கியபின் அவனுள் ஒடுங்கி விடுவள். பின்னர்ப் புனருற்பவத்தில் பேரருட் குணம் மேலோங்கி நின்றாலன்றிப்புனருற்பவம் நிகழாது. ஆதலின் அம்பிகை அப்பொழுது வெளிப்பட்டு அவன் செயல்களை ஆட்சி செய்வள் என்பது நினைக. திருவைந்தெழுத்தில் வகரம் சிகரத்துள் ஒடுங்கி நின்று ஓரெழுத்து மந்திரமாகிய சிகரமே திரிபுடியற்ற தியானத்தில் நிற்பதையும் பின்னர் அந்த மந்திரம் ''சிவ" எனும் ஈறெழுத்து மந்திரமாகிச் சாதகனைத் துரிய நிலைக்குக் கொண்டு வருவதையும் நினைக.

33-ம் திருப்பாட்டில் ''எங்கள்" என்றதன் கீழுரைத்தவை காண்க. பன்மை, சிவபெருமான் தம்மை ஆட்கொண்டதனால் விளைந்த பெருமிதம் குறித்து நின்றது எனலுமாம். பின்னரும் ''யாமார்க்கும்" ''மேவினோம்" ''ஆடுவோம்" என வருவன நினைக.

யாவர்கோன் - சகலர்களாகிய மனிதர்களிலிருந்து அபக்குவராகிய விஞ்ஞானகலரில், சிவதத்துவ புவனத்தை விரும்பிச் சிவதீக்கைபெற்று நாத மூர்த்தியை வழிபட்டு, அதிகாரமல வாசனையும் நீங்கி முத்தராய் சூக்கும மலவாசனை மாத்திரமுடையவர்களாகி நாததத்துவ புவனங்களில் தங்கி அங்குள்ள போகங்களை நுகரும் ஆன்மாக்கள் வரையுள்ள ஆன்மாக்கள் அனைவருக்கும் **கோன்** என்றவாறு.

யாவர்கோன் நான்காம் வேற்றுமை உருபும், உம்மையும் தொக்குநின்றன. ''யாவருக்கும் கோன்" என்று அவற்றை விரித்துக் கொள்க.

"அவனுக்குயாரும் தலைவர்கள் இல்லை ; அவன் யாராலும் ஏவப்படுவதுமில்லை." (ஸ்வேதாஸ்வதர உபநிடதம்) என்ற சுருதி நினைக.

என்னையும் வந்து ஆண்டு கொண்டான் - என்னையும் மிகவும் இழிந்தவனாகிய என்னையும்; உம்மை இழிவு சிறப்பு. திருப்பெருந்துறையில் கூடியிருந்த மெய்யடியார்களை ஆண்டு கொண்டதுடன் என்னையும் ஆண்டு கொண்டான் என்ற இறந்தது தழுவிய எச்சவும்மையுமாம்.

வந்து - என் இருப்பிடம் தேடித் தானே மண்ணுலகுக்கு வலிய எழுந்தருளி ''நடித்து . . . . . அடியேனை அடித்தடித்து வக்காரமுன் தீற்றிய அற்புதம்" (569) என்பர் பின்னரும். அடியவன், ஆணவமலம் பிணிப்பால் அவனைத் தேடி அடையும் ஆற்றலற்றவன். ஆதலின் அவனே என்னிடம் வலிய வந்தான். அவ்வாறு வந்ததற்குக் காரணம் அவனது பேரருள் என்றவாறு.

யாமார்க்கும் குடி அல்லோம் - குடி - அரசின் ஆட்சிக்குட்பட்ட குடிமை - Citizen - எனலுமாம். சிவபெருமானின் குடியாகி விட்டதால் ஏனைய அரசின் குடியல்லோம் என்றவாறு. அவ்வாறு ஆட் கொள்ளப்பட்டதன் பெருமிதம்;

திருச்சிற்றம்பலம்

'' பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை யேத்தத் -துணிந்தென்றும்
எந்தையார்க் காட்செய்யப் பெற்ற விதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு

(அற்புதத் திருவந்தாதி - 78)

" இறுமாந் திருப்பன்கொலோ – ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ

(திருமுறை 4 - 9 - 11)

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-98-1)

என்று நம் அடிகள் காலத்துக்குப் பின் திருவவதாரம் செய்த பெருமக்கள் அருளுரைகளிலும் எதிரொலிப்பது காண்க.

யாதும் அஞ்சோம் - ஆதி ஆத்மிகம், ஆதிபௌதிகம் ஆதி தெய்வீகம் ஆகிய மூன்று வழிகளில் வரும் பிராரத்த வினைகள் எவற்றுக்கும் அச்சமுறோம். அஞ்சாமைக்குக் காரணம் முடிவிலாற்றலுடைய சிவபெருமானின் குடியாகி அவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பாதுகாக்கப்படுவது என்றவாறு.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்
சுடர்த் திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முற ணேறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தி யாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை

திருச்சிற்றம்பலம்

எனவரும் நம் அரசுகளின் அமுதவாக்கு நினைக. (திருமுறை 4 - 2 -1)

மேவினோம் அவனடியார் அடியாரோடு மேன் மேலும் - அவன் அடியார் அடியாரோடு மேவினோம் ; மேன் மேலும் மேவினோம் என மேவினோம் என்பதை ஈரிடத்தும் கூட்டுக.

அவன் அடியார் அடியார் - . சிவபெருமானை வணங்குவதால் அவன் அருளைப் பெறலாம். அவன் அடியார்களை வணங்குவதால் சிவவேடத்தைச் சிவனெனவே வணங்கிய பலன்பெறலாம். அடியார்கள் சிவனை வழிபட்டுப் பூசனை முடிவில் அந்த வழிபாட்டின் பயன்களையும் இறைவன் திருவடிகளிற் சாத்தி விடுகின்றனர். அடியார்களை வழிபடுவதால் அவர்கள் உள்ளத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானையும் வணங்குவதாயிற்று; அது சிவ வழிபாட்டின் பயனையும் தந்தது. அவன் திருவடிகளின் அடியார்கள் சமர்பித்த அவர்கள் பூசனைப் பயனையும் தந்தது. இதையே மேலும் நீட்டி அவன் அடியார் அடியார்களின் சிறப்பை மிகுவித்தார். இந்த உண்மையைப் பின்பற்றியே நம் அடிகளுக்குப்பின்னர் திருவவதாரம் செய்த நம்பி ஆரூரர் திருத்தொண்டத் தொகை முழுவதும் "அடியார்க்கும் அடியேன்" என்றருளி நம்மை நெறிப்படுத்தினர்.

மேன்மேலும் மேவினோம் - என்றமையால் அடியார்கள் திருக்கூட்டத்தில் ஓர் ஓரத்தில் நின்றுவிடாமல் உள்ளே நுழைந்து நடுப்பகுதியை நோக்கி நகர்வதானர். அடியார்களின் எண்ணிக்கை அளவற்றதாகலின் நடுப்பகுதியை நோக்கி மேலும் மேலும் சென்று கொண்டே இருந்தார் என்றவாறு. அவ்வாறு செல்லச் செல்ல உலகுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள இடைவெளி நீண்டு கொண்டே சென்றது என்றவாறு. அடியார்கள் என்றது ஈண்டுச் சீவன் முத்தரைக் குறித்து நின்றது. அது பற்றி முன்னர் சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரத்தில் "அன்பரொடு மரீஇ" என்றதும் ஆண்டு விரித்து விளக்கியதும் ௯-ம் திருப்பாட்டில் "சிவம்" என்றதன் கீழ் உரைத்தவற்றும் காண்க.

ஈண்டும்;

'' சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாம்
சாரிற் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே ''

(கந்தரலங்காரம் - 49)

'' அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே "

(தாயுமான சுவாமிகள் - பராபரக்கண்ணி - 155)

எனவரும் ஆன்றோர் வாக்குக்களை நினைக.

குடைந்தாடி ஆடுவோமே- "மேன்மேலும்" என்றதனை ஈண்டும் கூட்டி ''மேன்மேலும் குடைந்தாடி ஆடுவோமே" என்க. இறைவன் வலிய வந்து உட்புகுந்து ஆட்கொண்டதால் பெருகும் அமுத வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கும் இன்பானுபவம் குறிப்பிடுகின்றார். குடைந்து ஆடுவதால் இன்பம் பெருகிற்று; அந்த இன்ப நுகர்வு அதை மேலும் நுகர வேண்டும் என்ற ஆவலை உண்டாக்கியது. எவ்வளவு நுகர்ந்தாலும் ''போதும்" என்ற மனநிறைவை ஏற்படுத்தாத சிவானந்தமாகலின் மேலும் மேலும் குடைந்தாடிக் கொண்டே இருப்போம் என்றவாறு.

குடைந்து ஆடி - என்பது சிவானந்தத்தில் திளைத்தல். **ஆடுவோமே** என்றது சிவானந்த நுகர்வின் களிப்பினால் ஆடும் ஆனந்தக் கூத்து

ஈண்டு;

செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்க ளறுத்தீச னேசரொடுஞ் செறிந்திட்
டங்கவர்தந் திருவேட மாலயங்க ளெல்லா
மரனெனவெ தொழுதிறைஞ்சி யாடிப் பாடி
யெங்குமியா மொருவர்க்கு மெளியோ மல்லோம்
யாவர்க்கு மேலானோ மென்றிறுமாப் பெய்தித்
திங்கண்முடி யாரடியா ரடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே

(சிவஞானசித்தியார் -சுபக்கம் -சூத் - 12. செய் - 1)

என்ற நம் ஞான சாத்திரம் நினைக.

இத் திருப்பாடலில் அவனடியாரடியாரோடு மேன்மேலும் குடைந்தாடுவோமே என்றதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; "அறியாத தேவ தேவன் என்றதால் பதிகம் நுதலிய "**சுட்டறுத்தல்**" பெற்றும்.

௪. ஆத்தும சுத்தி

"**ஆத்ம சுத்தி** " என்பதற்கு "**உயிரின் தூய்மை**" என்பது பொருள். முந்தைய பதிகத்தில் உயிரின் சுட்டறிவுக்கு இறைவனின் உண்மை புலப்படாதென்பதும், அதனுல், இறைவனேச் சுட்டுப் பொருள்களுள் ஒன்ருக வைத்து எண்ணக் கூடாது என்பதும் விளக்கப்பட்டன. அங்ஙனம் இறைவன் நிலேயைச் சுட்டறுத்து உணர்வதற்குச் சிறந்த கருவியாக உள்ளது "மெய்யுணர்வு." அந்த மெய்யுணர்வு, விளக்கம் பெற உயிர்க்கு இன்றியமையாதது தூய்மை நிலே. அந்த நிலேயோ, யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களுக்கு ஏதுவாகிய வினேமாசு நீங்கிய வழி எய்துவதாகும். அஃதாவது ஆன்மா தற்போதத்தினின்றும் நீங்குதல். சுத்தி என்பதற்கு நீக்கம் பெறுதல் என்பது பொருள். தசகாரியங்களில் அவ்வாறு பொருள்படுதல் காண்க. அந்தத் தற்போத நீக்கமோ, முக்கரணங்களும் தொடர்ந்து இறைபணி புரிவதால் பெறக் கூடியது. முக்கரணங்களுள் சிறந்ததாகிய மனத்தை முன்னிலேப்படுத்தி, ஏனேய இருகரணங்களின் செயலின்மைக்கு அதனேயே காரணமாகக் கூறி, இடித்துரைக்கின்ருர். உயிரின் தூய்மைக்குரிய சிவப்பணிகளே இந்தப் பதிகத்தின் முதல் ஐந்து திருப்பாடல்களால் அருளிச் செய்கின்ருர். பின்னர் இந்தச் சிவப்பணியில் தமக்குக் கிடைத்த அரன் அணுக்கம் பண்டைய பாசத்தொடர்பினுல் ஒரோவழி நெகிழ்ந்த ஞான்று தமக்கெய்திய ஆற்ருமையைப் பின் ஐந்து திருப்பாடல்களால் அருளிச்செய்கின்ருர்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

35. ஆடு கின்றிலை கூத்துடை
யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும்
செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின்
றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ
றலறிலை செய்வதொன் றறியேனே ௩௧

(இ - ள்)

பிணத்தைப் போல இயக்கமின்றிக் கிடக்கும் நெஞ்சமே ! அன்பு மிகுதியால் கூத்தாடுவாயல்லை; நம்மை ஆளாக உடையவன் திருவடிகளுக்கு அன்பு செய்கின்றாயு மல்லை; என்பு உருகிப் பாடுகின்றாயு மல்லை; துடிக்கின்றாயு மல்லை; வணங்கு கின்றாயு மல்லை; நம் பெருமானின் திருவடித் தாமரைகளைச் சென்னியில் அணிந்து கொள்வாயுமல்லை; அவன் திருவடிகளை மலர் பெய்து வழிபடுவாயுமல்லை; அவன் யாண்டுளன் என்று தேடுவாயுமல்லை ; ஒவ்வொரு தெருவிலும் சென்று அலறுவாயு மல்லை; இத்தகைய இயல்புகளில் உனக்கு ஒப்பானவர் யாருமில்லாதவன்; ஆதலின் உன் பொருட்டு யான் செய்யத் தக்கது இன்னதென்று ஒன்றையும் அறியாதுள்ளேன்.

(வி -ரை)

"பிண நெஞ்சே" - என்பதை முதலில் வைத்து இத்திருப்பாடலுக்கு உரை காண்க.

பிண நெஞ்சு - பிணம், இயக்கமில்லாததும் விரைவில் அப்புறப்படுத்த வேண்டியதுமாகும். உவமத்தொகை. ஈண்டு, அறிவின்மை குறித்து நின்றது. அவ்வாறு இடித்துரைப்பின் நாணங்கொண்டு எழுந்து பணி கேட்கும் என்பது குறிப்பு.

ஆடுகின்றிலை கூத்து - கூத்து ஆடுகின்றிலை என்று மாற்றிக் கொள்க. இஃது இறை அகம் நெக்கு அமுதமுற உட்புகுந்து ஆட்கொண்டதால் விளைந்த களிப்பின் வெளிப்பாடாகிய ஆனந்தக் கூத்தை நீ இயற்றவில்லை என்றவாறு. ஆடுதல் பாடுதல் பணிதல் என்பன பத்தியின் மிகுதியால் செய்யப்படுவன. முன்னம் போற்றித் திருவகவல் (62)-ல் "ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க. "நஞ்சுமிழ் . . . பாடுதல், பரவுதல் பணிதலோ விலமே " (கோயில் நான்மணிமாலை - 8) என்றது நினைக.

திருச்சிற்றம்பலம்

"தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினு னீடி யறிவரும் பதிகம்
பாடினுர் பரவினுர் பணிந்தார் "

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - தடுத்தாட்கொண்ட புராணம் 107))

எனவரும் சேக்கிழார் பெருமான் செஞ்சொல் ஓவியமும் காண்க.

உடையான் - நம்மை ஆளாகவும் உலகங்களில் உள்ள எல்லாவற்றையும் தன் உடைமையாகவும் கொண்டவன்.

ஆடுகின்றிலை, கூத்துடையான் கழற்குஅன்பிலை - என்று பிரித்துக் கூட்டி உரை செய்தனர் முன்னுரையாளர்களில் சிலர். அவ்வுரையில் பொருட் சிறப்பின்மை வெளிப்படை.

சுழற்கு அன்பிலை - இத் திருப்பாடலில் கூறப்படும் ''ஆடுதல்" முதலாகிய செய்கைகள் அனைத்தும் இறைவன் திருவடிக்கண் செலுத்தும் மெய்யன்பின் விளைவுகள். அவற்றை நான் கைக்கொள்ளாமையால் எனக்கு இறைவன் திருவடிகளில் அன்புண்டாகவில்லை என அருளினர்.

என்புருகிப்பாடு கின்றிலை - மனம் அந்தக்கரணங்களில் ஒன்று. கட்புலனுகும் வடிவற்றது. சத்துவ குணம் மேலோங்கி நிற்கும் பொழுது

மனம் உருகும். அவ்வுருக்கம் கண்ணீர் சொரிதல், குரல் தழுதழுத்தல், உடல் நடுங்குதல் ஆகிய மெய்ப்பாடுகளால் அறியப்படும். அந்த நிலையில் உடம்பிலுள்ள தாதுக்களில் மிக வன்மையான எலும்பும்கூட வன் செயல்களில் ஈடுபடாது. அவ்வெலும்பும் கூட உருகும் அந்நிலை எய்த இறைவனின் அருட்குணங்களை இசையில் அமைத்துப் பாடுகின்றிலை என்றார்.

பதைப்பதும் செய்கிலை. பதைத்தல் - மனஉருக்கத்தால் உடல் நிலை கொள்ளாது தவித்து நடுங்குதல், முன்னம் போற்றித் திருவகவல் (61) - ல் ''உடல்கம்பித்து'' என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க. 25-ம் திருப்பாட்டில் ''பதைத்து'' என்றருளியதும் காண்க.

பணிகிலை - ஆடல் பாடல் பதைத்தல் என்ற இம்மூன்று செயல்களும் முருகிய பத்தியினால் முறையே உடல், வாக்கு, மனம் என்ற முக்கரணங்களாலும் நிகழ்வன. அதனால் இறைவன் அருள்கூர்ந்து தன் திருவடிகளை அகக்காட்சிக்கு நல்கினான். அப்பொழுதும் நெஞ்சம் அவன் திருவடிகளை வணங்காமை குறிக்கப் ***பணிகிலை*** என்றார்.

பாதமலர் - இதைப் பாதமலர் பணிகிலை '' பாதமலர் சூடுகின்றிலை'' ''பாதமலர் சூட்டுகின்றதுமிலை'' என ஒவ்வொன்றுடனும் கூட்டியுரைக்க.

சூட்டுகின்றது மிலை ''திருவடிக்கண் மலரைச் சூட்டுகின்றது மிலை'' என ஏழன் உருபும் இரண்டன் உருபும் விரித்துக் கொள்க. ***மலர்சூட்டுதல்***- மலர்தூவி வழிபாடு செய்தல். முன்னர் (9-ல் ''தண்மலரிட்டு முட்டாதிறைஞ் சேன்'' என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

துணையிலி- எனக்குத்துணையாக நில்லாத; துணையை இழந்து நிற்கும் எனலுமாம். இறைவனை எய்துதற்குத்துணையாக மேற்கூறிய ''ஆடுதல்'' ''கழற்கு அன்புகொள்ளுதல்'' ''என்புருகிப் பாடுதல்'' ''பதைத்தல்'' ''பணிதல்'' ''பாதமலர் சூடல்'' ''பாதத்தின்கண் மலர்களைச் சூட்டுதல் ''தேடுதல்'' ''தெருவுதோறலைதல்'' என்ற செயல்களாகிய துணைகள்.

தேடுகின்றிலை - தேடுதல் - உள்ளத்தே புக்கவன் யாண்டொளித்தனன் என்று முயன்று தேடுதல்.

இதனை;

திருச்சிற்றம்பலம்

தேடிக் கண்டுகொண்டேன் திரு
மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 9 - 12)

எனவரும் நம் அரசுகள் திருவாக்கிலும் காண்க.

தெருவுதோறலறிலை - என் நெஞ்சமே தேடியும் கிட்டாமையால் தன்வயம் இழந்த நிலையிலுள்ள நீ, இறைவன் திருவுலாச் செல்லும் தெருக்கள் ஒவ்வொன்றிலும் சென்று இறைவன் திருப்பெயர்களைக் கூறி அவனை ஈண்டு "யாரும் கண்டீரோ" என்று அலறியிருக்க வேண்டும். அவ்வாறும் நீ செய்தாயல்லை.

இலை - ஆறு இடங்களிலும் ஈற்றில் நின்ற ஐகாரம் முன்னிலை ஒருமை விகுதி.

செய்வதொன்று அறியேனே- நெஞ்சமாகிய உன் நிலை இஃதாகலின் மேற்கொண்டு செய்யத்தக்கது என்ன என்பதை ஒரு சிறிதேனும் அறிவேனாயின் அதைக் கடைப்பிடிப்பேன் ; அஃதும் அறியேனாகலின் என் செய்வேன் என்றவாறு. **ஒன்றும்** என உம்மை விரித்துக் கொள்க.

நெஞ்சமே! இறைவன் நம்மை ஆட்கொள்ளு முன்பு நீ அவனை நினையாதிருந்திருப்பின் அஃது உன் அறியாமையால் நிகழ்ந்த பிழை என்று பொறுத்துக் கொள்ளலாம்; ஆனால் அவன் நம்மை புறத்தும் அகத்தும் ஆட்கொண்ட பின்னரும் நீ அவனை நினையாதிருத்தல் மன்னிக்கத்தக்கதன்று அதற்காக உன்னை என் செய்வது என்று தெரியவில்லை என்றவாறு.

ஈண்டு ;

ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய் (திருக்குறள் 848)

எனவரும் வள்ளுவர் வாக்கு நினைக.

இத் திருப்பாடலில் ''ஆடல் " முதலிய பக்திப் பெருக்கின் மெய்ப்பாடுகளின் இன்றியமையாமை கூறப்பட்டுள்ளதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; அவை ஆன்மாவைத் தூய்மை செய்தற்கு வேண்டப்படுவன என்பதால் பதிகம் நுதலிய "**ஆத்தும சுத்தி**" பெற்றும்.

36. அறிவி லாத எனைப்புகுந்
தாண்டுகொண் டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய
எந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள்பெற்
றிருந்துமா றுடுதி பிணநெஞ்சே
கிறியெ லாமிகக் கீழ்ப்படுத்
தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே ௩௨

(இ - ள்)

என் மனமே நீ பிணத்தை ஒத்தனையோ? அல்லை; மெய்யறிவு இல்லாத அடியேனை வலிய வந்து அடிமையாகக் கொண்டு தன்னை அறிவதற்குக் கருவியாகிய ஞானத்தை நல்கி, மேலாகிய வீட்டுலகுக்குச் செல்லும் வழிகள் எல்லாவற்றையும் விளங்கச் செய்த எங்கள் தந்தையை ; பாசப் பிணிப்பை ஒழிப்பவனாகிய சிவபெருமானை; என்றும் நீங்காமைக்கு ஏதுவாகிய இனிய அருளுதவிகளை எளிதிற் பெற்றுக் கொண்டும்; மாறுபட்டு நிற்கின்றாய் ! பொய்ம்மையெல்லாம் மேலோங்கி நிற்கச் செய்தாய்; என்னைக் கீழ்ப்படுத்துக் கெட்டொழியுமாறு கெடுத்தாய்.

(வி - ரை)

"*பிணநெஞ்சே* " - என்பதை முதலில் வைத்து இந்தப் பாடலுக்குப் பொருள் காண்க.

"*பிணநெஞ்சே* " - 35-ம் திருப்பாட்டில் ''பிணநெஞ்சே" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. இயக்கம் இன்றிக்கிடத்தலின் பிணத்தை ஒத்தாய் என்று ஆண்டு ஏகாரத்தை விளியாகக் கொண்டு பொருள் விரித்தாம்.

பிணம் இயக்கமற்றுக்கிடக்கும் சடம். ஆனல் ஈண்டு, நெஞ்சம் ''மாருடுதல்'' "கிறியெலாம் மிகச் செய்தல்" "ஆன்மாவைக் கீழ்ப்படுத்தல்" ''கெடுமாறு கெடுத்தல்'' ஆகிய தீய செயல்களைச் செய்கின்றது. எனவே இது பிணமன்று என்ற பொருளில் "**பிணநெஞ்சே**" என்பதிலுள்ள ஏகாரத்தை விளியாகவோ தேற்றேகாரமாகவோ கொள்ளாது, எதிர்மறை குறித்தவினுப் பொருளில் வந்ததாகக் கொள்க.

அறிவிலாத - ஆட்கொள்வதற்குத் தகுதியான மெய்யறிவு இல்லாத.

புகுந்து - முன்னம் 15-ம் திருப்பாடலில் ''புகுந்திடுவான்'' என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

அறிவதை அருளி - இறைவனல் ஆட்கொள்ளப்படுவதற்குக் தகுதி, உயிர் தன் இயல்பையும் தன்னை அடிமையாகக் கொண்டுள்ள இறைவன் இயல்பையும் அறிந்திருத்தல் வேண்டும். இறைவள் அவற்றை எனக்கு அருளித் தகுதியுடையவனுக்கினன் என்றவாறு. அவ்வாறு தகுதியுள்ளவனுக்கியது என்னை ஆட்கொள்வதற்காக என்றவாறு. ***அறிவதை*** அது, பகுதிப் பொருள் விகுதி.

அறிவதை அருளுதலை,

''ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டந்நிய மின்மையி னரன்கழல் செலுமே''

(சிவஞானபோதம்-சூ.8-)

என்று ஞானசாத்திரத்தில் வருவதாலறிக.

மேல் நெறி எலாம் புலமாக்கிய - மெய்யறிவை அருளிய அளவில் நில்லாது அதனல் எய்தத் தக்க வீட்டின்ப வழிகள் பலவற்றையும் புலப்படச் செய்தான்.

மேல் - இந்திர பதம் முதலியவற்றை அடைவதற்கான நெறிகள் மேன்மையல்லாத நெறிகளாம். அவற்றினின்றும் பிரித்துக் காட்டுவதால் பிரிதினியைபு நீக்கிய விசேடணம்.

எலாம் - வீடடைதற்குறிய அன்பு நெறி, ஞான நெறி போன்ற உயர்நெறிகள் அனைத்தையும்.

பல நெறிகளை அறிவித்து அவை எல்லாவற்றினும் சிறந்தது வீட்டு நெறி என்று தெரிவித்து.

மேல் நெறி - மெய்ந்நெறி என்பதும் பாடம்.

எந்தையை - 28-ம் திருப்பாட்டில் "எந்தைபெருமானே" என்றதன் கீழும் 33-ம் திருப்பாட்டில் ''எங்கள்" என்றதன் கீழும் உரைத்தவை பார்க்க.

பந்தனை அறுப்பானை - பந்தனை - பாசப்பிணிப்பு. சிவ நெறியில் செல்லத் தடையாக நின்ற பாசத்தை அகற்றும் ஞாஞ்சிரியனை - என்றவாறு.

பிரிவிலாத இன் அருள்கள் - பிரிவு - பிரிவு. முன்னம் போற்றித் திருவகவல் (78-ல்) ''பிறிவு" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

உயிர்கள் இறைவனை வேண்டுங்கால் அவனையே தமக்குத் தரும்படி வேண்டுவதும் உலகின்பத்தை நல்கும்படி வேண்டுவதும் ஆகிய இருதிறத்தன. அவன் அவற்றுக்கு அவை வேண்டியவற்றையே நல்குகின்றான். ஈண்டு நம் அடிகள் அவனைப் பிரிவிலாத அருளை வேண்டிப் பெற்றார். ஆதலில் இஃது **இன் அருள்** ஆயிற்று. ஏனையது இன்னாமையை விளைவிக்கும் பிரிவுடைய அருளாகும். ஆதலின் ''**இன்**" என்றது பிரிதினியைபு நீக்கிய விசேடணம். **இன் அருள்கள்** பலவாதற் பற்றி ***"இன்அருள்கள்"*** என்று பன்மையிற் கூறினார்.

இந்தப்பிரிவிலாத இன்னருள் பெற்ற நிலையை முன்னம் "இமைப் பொழுதும் என்னெஞ்சின் நீங்காதான்" (சிவ புராணம் 2) என்றருளியது நினைக.

இனி, இவ்வின்னருள் பல. உயிர் படைப்புக்கு வருமுன் அநாதி கேவலத்தில் தன்னையும் தன்னை மூடியிருக்கும் காரிருளையும் அறியாது செயலற்றுக் கிடக்கும் பொழுதே இறைவன் அவ்வுயிருள் நின்று, அதைப் படைப்புக்குத் தகுதியாக்கும் இன்னருள் செய்கின்றான். இவ்வுதவியை அவன் எஞ்ஞான்று தொடங்குகின்றான் என்பதைக் கூற இயலாது. உயிர் என்றுளதோ அன்றே இவ்வுதவியும் உள்ளது. அஃதாவது அநாதியாகவுள்ளது. இதையே நம் தாயுமானார் "என்று நீ அன்று நான் உன் அடிமையல்லவோ" என்றருளினார். அந்நிலையில் உயிருக்குக் காரண உடம்பு கஞ்சுக உடம்பு, குண உடம்பு,

புரியட்டக உடம்பு ஆகியவற்றைப் படிப்படியாகக் கொடுத்துச் செயலாற்ற இன்னருள் புரிகின்றான். பருவுடல் பெற்று உலகிற்கு வந்து வினைகளைச் செய்து அவற்றின் பயன்களை நுகரச் செய்து அனுபவம் வருவிப்பதன் மூலம் ஆணவமலப் பிணிப்பைப் படிப்படியாகத் தளர்த்துகின்றான். அந்நிலைகளைச் சிவபுராணம் 26 முதல் 31 அடிகள் வரை அருளிய பகுதிகளிலும், போற்றித் திருவகவல் 10 முதல் 86 அடிகள் முடிய அருளிய பகுதிகளிலும் அவற்றின் கீழுரைத்தவற்றிலும் காண்க. பின்னர் மானிடப்பிறவியில் உரிய காலத்தில் குருவடிவில் வந்து பக்குவத்துக்கேற்றவாறு பல்வேறு தீட்சைகள்வழிப் பாசமோசனம் செய்கின்றான். பின்னர்ச் சுத்த தத்துவங்களில் உள்ள புவனங்களில் உயிரை உய்த்து அதிகாரப்பதங்களில் இருத்தியும், அடுத்து அதிகார மலவாசனை மட்டும் உள்ள நிலைகளில் இருத்தியும், பின்னர் அதிகார மல வாசனையும் இல்லாத நிலைகளில் நிறுத்தியும் இன்னருள்கள் புரிகின்றான். முடிவில் வீட்டுலகில் உயிரை இருத்தித் தன்னையே தந்து முடிவில்லாத இன்ப நிலையில் திளைத்துக் கொண்டிருக்கும் இன்னருளை தருகின்றான் என்பன ஈண்டுக் கொள்க.

மாறுடுதி - பிணங்குகின்றாய் எனலுமாம். இறைவன், உயிர்களுக்குச் செய்யும் அருளிப்பாடுகள் இருவகையன. ஒன்று, உயிர்கள் நன்னெறியில் ஒழுகுவதன் பயனாகச் செய்வது. அஃது அறக்கருணை மற்றொன்று, தீய நெறியில் ஒழுகுவதன் பயனாக உயிர்களை ஒறுத்துத் திருத்துவது. இது மறக்கருணை. இவ்விரண்டும் உயிர்கள் உய்தி கருதிச் செய்வனவாம். எனவே மறக்கருணை காட்டும் பொழுதும் உயிர்கள் அவனை நிந்தியாது பற்றிப் பிரிவிலாதொழுக வேண்டும். ஆயின், ஈண்டு ***பிரிவிலாத இன் அருளாகிய*** அறக்கருணை பாலிக்கப்பட்டும் நெஞ்சம் அவனுடன் மாறுபட்டுப் பிணங்கி நிற்கின்றது என்றவாறு.

கிறிஎலாம் மிக. மிக - மேலோங்கி நிற்க. பொய்ம்மை எப்பொழுதும் கீழ்பட்டுத் தேய்ந்து முடிவில் ஒழிய வேண்டியது. ஆனால் உன் மாறுட்டத்தால் மேலோங்கி நிற்கின்றது என்றவாறு. ***எலாம்*** - வஞ்சகம் பொய் முதலிய இழி குணங்கள் எல்லாவற்றையும்.

என்னைக் கீழ்ப்படுத்தாய். மிக என்பதை ஈண்டும் கூட்டி "என்னை மிகக் கீழ்ப்படுத்தாய்" என்க. பொய்ம்மை ஒழிவதனுல் உயிர் நன்னிலை எய்தி இறையருட் பேற்றினுல் மிக உயர்ச்சி பெறும் என்பது ஞான நூல்களின் துணிவு. ஈண்டு; நீ பொய்ம்மைகள் எல்லாவற்றையும் மிக மேற்படச் செய்ததனுல் என்னை மிகக் கீழ்ப்படச் செய்து விட்டாய் என்றவாறு.

கெடுத்தாய் என்னைக் கெடுமாறே. கெடுமாறு -ஆறு- வழி . எந்த வழியிற் சென்ருல் என்னைக் கெடுக்க முடியுமோ அந்த வழியில் சென்று என்னை மீண்டும் தலையெடுக்க முடியாமல் கெடுத்து விட்டாய்.

என்னை - ஈற்றில் நின்ற ஐகாரத்தை இரண்டாம் வேற்றுமை உருபாகக் கொள்ளாது இந்தச் சொல்லை வினுவாகக் கொண்டு, அவ்வாறு கெடுத்தற்கு நான் உனக்குச் செய்த தீங்கு ''என்ன?'' என்றும்; அவ்வாறு கெடுத்ததால் நீ பெற்ற ஊதியம் ''என்னே?'' எனவும் கொள்ள நின்றது காண்க.

இத்திருப்பாடலின்கண் "கிறியெலாம் மிகக் கீழ்ப்படுத்தாய்" என்றதால் சதகம் நுதலிய "பத்திவைராக்கிய விசித்திரம்" பெற்றும்; உயிரின் தூய்மைக்குரிய பிரிவிலாத இன்னருளின் பெருமை பேசப்படுவதால் பதிகம் நுதலிய 'ஆத்துமசுத்தி" பெற்ரும்.

37. மாறி நின்றெனைக் கெடக்கிடந்
தனையையெம் மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றில மினியுனைச்
சிக்கெனச் சிவனவன் திரடோண்மேல்
நீறு நின்றது கண்டனை
யாயினு நெக்கிலை யிக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன்
பரிசிது கேட்கவுங் கில்லேனே ௩௩

(இ - ள்)

யாம் கூறும் அறிவுரையை ஏற்றுக் கொள்ளாத அறிவற்ற நெஞ்சமே! என்னுடன் மாறு பட்டு நின்று, யான் கெடுமாறு என்னுடன் கிடந்த நின்னை

இனி உறுதியாகத் தெளிய மாட்டோம்; சிவபெருமானுகிய அவ்விறைவனின் திரண்டதோள்களின்கண் திருநீறு நிலேத்து விளங்குவதைக் கண்டாயாயினும் உருகுகின்ருயல்லே; இவ்வுடலேப் பிளப்பாயல்லே; உன் தன்மை கேடு விளேப்பதாகும்; இதனேக் கேட்கவும் ஆற்றேன்.

(வி - ரை)

"எம்மதியிலி மட நெஞ்சே" - என்பதை முதலில் வைத்து இத் திருப்பாடலுக்கு உரை காண்க.

எம் - நான் கூறும் அறிவுரைகளே மட்டுமின்றி ஏனே அன்பர்கள் கூறும் நல்லுரைகளேயும் ஏற்காமை குறிக்கப் பன்மையிற் கூறினுர்.

மடம் - தெரிந்தும் தவறு செய்தல் என்பர் கவியரசு அவர்கள்.

மதியிலி - மதி - நுண்ணறிவை குறித்தது. அவ்வறிவு முன்னேத் தவத்தால் வருவது. நீ, மேலேத்தவத்தினேயாயின் உன் பரிசு இவ்வாறு கெடுவதாக முடியாது.

மாறி நின்று எனே - எனே மாறி நின்று - என்று மாற்றிக் கொள்க. சிவபெருமானே அடைதற்குரிய தவ நெறியில் எனக்குத் துணே நிற்கக் கடமைப்பட்ட நீ, அவ்வாறு துணே நில்லாமையுடன் என்னுடன் பகைமையையும் மேற்கொண்டு என்னேக் கெடுக்கின்ருய் என்றவாறு.

கெடக் கிடந்தனேயை - என்னுடன் கிடந்தே என்னேத் கெட்டுப் போகும்படி செய்த உன்னே. முன்னிலே வினேயாலணேயும் பெயராய் இரண்டனுருபு ஏற்று நின்றது.

கெட - "கெடுப்ப" என்பது ***கெட*** என்று தொகுத்தலாயிற்று. வெளிப்பட நிற்கும் புறப்பகை அறிந்து ஒழித்தற்குரியது. மறைந்து நிற்கும் உட்பகை அதனினும் கொடியது என்றவாறு.

தேறுகின்றிலம் இனி உனேச் சிக்கென - உனே இனிச் சிக்கெனத் தேறுகின்றலம் என்று மாற்றிக் கொள்க.

இனி - முன்னம் பல முறை உன்னே நம்பிக் கெட்டோம்; இனி அவ்வாறு நம்போம் என்றவாறு. ***சிக்கென*** உலக வழக்கில் கூறும்படி நிச்சயமாக நம்பமாட்டோம்.

சிக்கென- உறுதிபயக்கும் துணையாக. **தேறுகின்றிலம்**- எம் மதியிலி மட நெஞ்சே என்றதில் கூறப்பெற்ற ஏனைய மெய்யடியார்களையும் உளப்படுத்தும் பன்மையிற் கூறினர்.

இதனை;

திருச்சிற்றம்பலம்

'' நாய்வயின் உள்ள குணமுமில் லேனைநற் றொண்டுகொண்ட
தீவயின் மேனியன் சிற்றம் பலமன்ன சின்மொழியைப்
பேய்வயி னும்மரி தாகும் பிரிவெளி தாக்குவித்துச்
சேய்வயிற் போந்தநெஞ் சேயஞ்சத் தக்கதுன் **சிக்கனவே**"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 343)

எனவரும் நம் அடிகள் வாக்காலே யறிக.

சிவன்அவன்- **சிவன்**- மங்கலம் செய்பவன். முன்னம் சிவபுராணம் (12)-ல் ''சிவன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. **அவன்** - பரம்பொருள் என்று பண்டே கூட்டி அறியப்பட்டவன். பகுதிப்பொருள் விகுதி என்பாருமுண்டு.

திரள்தோள் மேல் - ஆடவர்க்குரியனவாகச் சாமுத்திரிகா லட்சணப்படி அமைந்த இரண்டு திரண்ட தோள்கள். தோள்களைக் கூறியதால் ஏனைய உடலுறுப்புக்களும் அவ்வாறே அமைந்தவை என்பது கொள்க. இது திருப்பெருந்துறையில் மானிடச்சட்டை தாங்கிக் குருவடிவில் வந்த கோலம்.

நீறு நின்றது கண்டனை. நீறு - திருநீறு. இஃது உமையம்மையாக உருவகம் செய்யப்படும் இறைவனின் ''பேரருள்" என்ற குணம்.

இதை;

திருச்சிற்றம்பலம்

" இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 2 - 66 - 8)

எனவரும் நம் பிள்ளையார் அமுதவாக்காலறிக.

அந்தப் பேரருளாகிய திருநீறே அவன் திருமேனியில் நின்று ஆன்மாக்களுக்குக் கட்புலனுகின்றது. அந்தக் காட்சியில் ஒன்றி மனம் திளைப்போர் வினைகளெல்லாம் அழிகின்றன என்று நம் அடிகளே பின்னர்க் கூறுவதை ;

திருச்சிற்றம்பலம்

'' தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூய்ச்சிற்றின் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி யம்பல வன்றன்வெற்பில்
புனைவளர் கொம்பரன் னாய அன்ன காண்டும் புனமயிலே

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 118)

என்பதாலறிக.

நின்றது கண்டனை - இறந்த காலத்தில் கூறியது. இறைவன் திருப்பெருந்துறையில் நம் அடிகளை ஆட்கொண்ட பின் அவரையும் ஏனையோரையும் விட்டுத் திருவுருவம் கரந்து கயிலையை எய்தியது குறித்து நின்றது. "அவன் பேரருள் சேயதாகியதை அறிந்தும் நெஞ்சமே நீ இன்னும் உயிர்தாங்கி இருக்கின்றாய்" என்று இரங்கியவாறு.

இஃது இந்தச் சரித வரலாற்றில் மட்டுமின்றித் திருநீற்றுக்கோலம் அடியவர்களைப் பரவசப்படுத்தும் என்பதை;

திருச்சிற்றம்பலம்

'' சேலும் கயலும் திளைக்குங்கண் ணா ரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று..
புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 9 திருப்பல்லாண்டு-8)

எனவரும் சேந்தனுர்பெருமான் திருவாக்கா லுமறிக. திருநீறு கூறப்பட்டதால் உபலக்கணத்தால் உருத்திராட்சமும் கொள்க.

நெக்கிலே - மனம் நெக்குவிட்டு உருகவில்லே. இஃது உண் நிகழ்ச்சி.

இக்காயம் கீறுகின்றிலே - பிரிவாற்ருமையால் இந்த உடம்பைப் பிளந்து கொள்ள வில்லே. ஏனைய அடியவர்கள் தங்களேத் தாங்களே இவ்விதம் ஒறுத்துக் கொண்டதைக் கீர்த்தித்திருவகல் 132 முதல் 139 வரையுள்ள பகுதியில் கூறியருளியவற்றிலும் ஆண்டுரைத்தவற்றிலும் காண்க.

கெடுவது உன் பரிசு இது - இது உன் பரிசு - இது நெஞ்சம் உருகாமையும் உடலேச் சிதைத்தற்கு இசையாமையுமான உன் இயல்பு.

கெடுவது - தொழிற்பெயரளவாய் நின்றது. கெட்டுப்போவது தான் உன் இயல்பு. இந்த இயல்பு கெட்டொழிவதாக என வியங்கோள் வினே முற்ருகச் கொண்டுரைக்கவும் நின்றது.

கேட்கவும் கில்லேன் - உன் இந்த இயல்பைக் கேட்கவே பொறுக்க இயலாத யான், அதைப் பார்க்கவும் உடனிருந்து அனுபவிக்கவும் நேர்ந்ததே என வெறுப்புற்று இரங்கியவாறு. *கில்* - ஆற்றல் உணர்த்தும் இடைச்சொல்.

இத்திருப்பாடலில் இறைவன் பிரிவாற்ருமையைத் தாங்காமல் நெஞ்சம் நெக்குவிடாமலும் உடலேப் பிளந்து கொண்டு மாண்டொழியாமலும் இருத்தல் பற்றி இரங்குவதால் சதகம் நுதலிய "*பத்தி வைராக்கிய விசித்திரம்*" பெற்ரும். இங்ஙனம் கொடிய நெஞ்சத்தை நன்னெறிப்படுத்துத் தூய்மை செய்ய விரும்புவதால் பதிகம் நுதலிய "*ஆத்தும சுத்தி*" பெற்ரும்.

38. கிற்ற வாமன மேகெடு
வாயுடை யானடி நாயேனே
விற்றெ லாமிக வாள்வதற்
குரியவன் விரைமலர்த் திருப்பாதம்
முற்றி லாவிளந் தளிர்பிரிந்
திருந்துநீ யுண்டன வெல்லாமுன்
அற்ற வாறுநின் னறிவுநின்
பெருமையும் அளவறுக் கில்லேனே ௩௮

(இ - ள்)

நெஞ்சமே! சடப்பொருள்கள் அனைத்தையும் தன் உடமையாக உடையவனும்; அடிமையும் நாய் போன்றவனுமாகிய என்னை முழு உரிமையுடன் ஆள்வதற்கு உரியவனு; எனக்கு எல்லா நலன்களும் மிகும் வண்ணம் அருள உரியவனுமாகிய சிவபெருமானுடைய; நறுமணம் பொருந்திய தாமரை மலர்கள் போன்ற திருவடிகளாகிய முற்றுதலில்லா இளந்தளிர்களின்றும் பிரித்திருந்தும்; முன்னர் நீ நுகர்ந்தன எல்லாம் அற்றதையும்; அதனை அறியும் நின் அறிவையும், அதனாலாகிய நின் பெருமையையும்; அளவிட்டு வரையறை செய்யும் ஆற்றலுடையவன் அல்லேன்; ஆதலால் நீ செய்தவாறு என்னே ! கெடுவாயாக !

(வி -ரை)

இத் திருப்பாடலை -"மனமே! எல்லாம் உடையான்; "அடி நாயேனை விற்று ஆள்வதற்கு மிக உரியவன்; விரைமலர்த் திருப்பாதம் முற்றிலா இளந்தளிர் பிரிந்து இருந்தும்; நீ முன் உண்டன எல்லாம் அற்றவாறு ; நின் அறிவும் நின் பெருமையும்; அளவு அறுக்க கில்லேன்;" கிற்றவா கெடுவாயே; என்று அன்னுவயம் செய்து கொண்டு பிறகு பொருள் காண்க.

(வி - ரை)

உடையான் - எல்லா உலகங்களிலுமுள்ள எல்லாச் சடப்பொருள்களும் மாயையினின்றும் இறைவனால் படைக்கப்பட்டவை. எனவே அவை அனைத்தும் அவன் உடைமைகளே. எனவே அவன் அவற்றுக்கு உடையவனாகின்றான். ஆன்மாக்கள் அனைத்தையும் தன் அடிமைகளாகவும் உடையவன்.

அடிநாயேனை - அடிமையாகிய நாய் போன்ற என்னை. எல்லா உலகங்களிலுமுள்ள உயிர்களும் இன்னும் படைப்புக்கு வராத உயிர்களும், புனருற்பவத்துக்கு வராத உயிர்களும் சிவபெருமானுக்கு அடிமைகளே. வீட்டுலகத்திலும் அடிமைகளே என்பன நினைக. **நாயேனை** - நாய்பற்றி முன்னம் சிவபுராணம் 60-ல் ''நாய்'' என்றதன் கீழுரைத்தவை காண்க.

விற்று எலாம் மிக ஆள்வதற்கு உரியவன் - விற்று எலாம் ஆள்வதற்கு மிக உரியவன் என்று மாற்றிக் கொள்க. நிலையியல் இயங்கியல் சொத்துக்களுக்கு உரியவர்களின் உரிமை இரு வகைப்படும். அச்சொத்துக்களை அனுபவிக்கவும் அவற்றில் வரும் வருவாயைப் பெற்றுக் கொள்ளவும் மட்டும் உரிமையுள்ளோர் ஒரு வகையினர். இவர்களுக்கு அச் சொத்துக்களை விற்கவோ, ஒற்றி (Mortgage with possession; Mortgage without possession) போக்கியம் அடமானம் தானம் போன்றவற்றில் கொடுக்கவோ உரிமை இல்லை. மற்றொரு வகையினருக்கு இவ்வுரிமைகள் அனைத்துமுண்டு. இவ்வுரிமையைச் சகல சுதந்தர பாத்தியம் அல்லது முழு உரிமை என்பர். ஈண்டு நம் அடிகள் குறிப்பது இறைவனுக்குத் தன் அடிமையாகிய என் மீது முழு உரிமையும் உள்ளது என்று குறிப்பிடும் அளவில் மட்டும் நின்றது.

திருச்சிற்றம்பலம்

விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன்
விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை
கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதீரே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7-95-2)

எனவரும் நம்பிகள் திருவாக்கும் இப்பொருளில் வருதல் காண்க.

எலா மிக - அடிமையாக ஏற்றுக் கொண்ட நிலையிலும் அன்பு, தவம் முதலிய உயரிய நலன்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப் பெற்ற அடிமைக்கே மேலும் வளர்ந்து மிகுதியாகும் பொருட்டு எனலுமாம். சிவபுண்ணியப் பயன் நுகருந்தோறும் குறைவுபடாமல் மேலும் மேலும் வளரும் என்ற உண்மை நினைக.

எலாம் - எல்லாவகையாலும். உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் எனலுமொக்கும் என்றும் கூறுவர் கவியரசு அவர்கள்.

விரைமலர்த் திருப்பாதம் - நறுமணம் மிக்கதும் தாமரைமலர் போன்றதுமான திருவடிகள். உவமையணி. "போன்ற" என்ற உவம உருபு தொக்கி நின்றது.

விரை- நறுமணம். இது மலருக்கும் திருப்பாதத்துக்கும் தனித்தனியே கூட்டியுரைக்க நின்றது. முன்னம் சிவபுராணம் (44 -ல்) "நாற்றத்தின் நேரியாய்" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

இதற்கு இவ்வாறறன்றித் தேவர்கள் நாள்தோறும் மூன்று வேளையும் அரிசந்தானம், சந்தானம், கற்பகம், பாரிசாதம், மந்தாரம் ஆகிய ஐந்து தேவதருக்களின் நறுமணமிக்க மலர்களைச் சொரிந்து வணங்குவதால் நறுமணம் ஏறிற்று என்றுரைப்பர் கவியரசு அவர்கள் . ★

முற்றிலா இளந்தளிர்- முற்றாத இளந் தளிராகிய திருவடிகள் . உருவக அணி. தளிரிலும் மெல்லியது இளம் தளிர் ; அதனினும் மெல்லியது என்பார் முற்றிலா இளந்தளிர் என்றார். இளம் தளிர் நாட்செல்லச் செல்ல முற்றிய இலையாகிப் பின் பழுத்து உதிரும். இறைவன் காலதத்துவத்துக்கு அப்பால் நின்று அதை இயக்குபவனாகலின் அவன் திருவடிகள் என்றும் இளமை மாறாத பொலிவின என்றவாறு.

பிரிந்திருந்து நீ - சந்தியில் மறைந்து நிற்கும் மகர ஒற்றை விரித்து, *பிரிந்திருந்தும்* -என - உரைத்துக் கொள்க.

இதற்கு இவ்வாறன்றி ''திருவடிகளைப் பிரிந்த ஆன்மா, மரத்தினின்றும், பிரிந்த இளந்தளிர்போல" எனப்பொருள் கொண்டு,

---

★ *பஞ்ச பாதப புஷ்பகந்த*
பதாம் புஜத் வைய சோபிதம்
(சந்திரசேகராஷ்டகம் மார்க்கண்டேய முனிவர்)

பஞ்ச பாதப - ஐந்தருக்கள்.

But now thou'rt severed like a young and tender shoot ....

என்று மொழிபெயர்த்தார் திருவாசகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பாளர். அது பொருளன்று என்று ஒதுக்குக.

உண்டன எல்லாம் முன் அற்றவாறும் - துக்கத்தால் உணவில் வேட்கையுண்டாகாது; உண்டாலும் செறிக்காது ; எனவே சோறு முதலியன வேண்டாது திரவ உணவையே கொள்வர். ஆனால் இறைவனின் தளிரடிகளைப் பிரிந்த உனக்கோ நீ உண்ட உணவு எல்லாம் செறிக்க வேண்டிய கால அளவுக்கு முன்பே செறித்து விட்டதே என்றவாறு.

இறைவன் திருவடியை விட்டுப் பொறிகள் வாயிலாக நுகரும் பசு புண்ணியத்தின் பயன்களாகிய இன்ப நுகர்ச்சியால் வரும் மகிழ்ச்சி மறுகணத்தில் அந்தப் பசு புண்ணியத்துடனும் அதன் பயன்களுடனும் அழிவதாகும் என்பது தொனிப்பொருள்.

நின் அறிவும் நின்பெருமையும் - அவ்வாறு அவ்வின்ப நுகர்வின் மகிழ்ச்சியையும் அதில் திளைக்கும் உன் அறிவையும் உன் பெருமையையும்.

அளவறுக்கில்லேன் - அளவறுக்க என்பதிலுள்ள ஈற்றகரம் தொகுத்தலாயிற்று. அளந்து வரையறை செய்து கூறும் ஆற்றலற்றவனானேன் என்றவாறு. "***கில்***" ஆற்றலுணர்த்தும் ஓர் இடைச்சொல்.

கிற்றவா - ஆதலால். நீ செய்தவாறு என்னே என்று இகழ்தவாறு. கிற்றவாறு என்பது கிற்றவா என நின்றது. ***கிற்றல்*** - செய்தல். "என்னே" என்றொரு சொல்லெச்சம் வருவித்துக் - "***கிற்றவாறு என்னே***" என்றுரைக்க.

கெடுவாய் - மாறுபட்ட இந்த நெறியில் ஒழுகும் நீ அழிந்துபோவாய் என்றவாறு.

கிற்றவா மனமே கெடுவாய் - என்பதற்குச் சிற்றின்பத்தில் செலுத்துதலில் வல்லமையுடைய அவாப் பொருந்திய மனமே நீ கேடடைதற்குரியாய் என்பர் திரு. பாரதியாரவர்கள்.

கிற்றவா- என்பதனை ''கில், தவா'' ''கிற்று அவாம்'' என்றும் பிரித்து ஆசை கெடாதிருக்கின்ற என்றும்; வேண்டுவன வெல்லாம் பெற ஆசைப்படுகின்ற என்றும் ''முடிந்தவரை'' என்றும், "சுழலுதலை விரும்புகின்ற" என்றும் பலவாறு பொருள் கூறுவாரும் உளர்.

இத் திருப்பாடலில் சிவபெருமானுக்கு எவ்வாற்ருலும் அடிமையாதல் வேண்டும்; அவன் திருவடிப் பிரிவு ஆற்ருெணுதது என்று கூறப்படுவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்ரும்; அவன் திருவடி மலர்களை ஒரு கணமும் பிரியாதிருத்தலே உயிருக்கு உறுதி பயக்கும் என்பது வற்புறுத்தப் படுவதால் பதிகம் நுதலிய "**ஆத்தும சுத்தி**" பெற்ரும்.

39. அளவ றுப்பதற் கரியவன்
இமையவர்க் கடியவர்க் கெளியானங்
களவ றுத்துநின் ருண்டமை
கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தேயும்
உளக றுத்துனை நினைந்துளம்
பெருங்களன் செய்தது மிலைநெஞ்சே!
பளக றுத்துடை யான்கழல்
பணிந்திலை பரகதி புகுவானே ௩௫

(இ-ள்)

மனமே! தன் இயல்பைத் தேவர்களும் வரையறுத்து உணர்வதற்கு அரியவனும், மெய்யடியார்கள் வரையறுத்து உணர்வதற்கு எளியவனுமாகிய சிவபெருமான், நம்வஞ்சத்தை யொழித்து, நம்முள் நிலைபெற்று நம்மை அடிமையாகக் கொண்ட இயல்பை உள்ளத்தினுட் கொண்டு உணர்ந்து உருகி ஈடுபட்டிருந்தும் வீட்டுலகை எய்தும் பொருட்டுப் புலனுகர்ச்சிகளாக உள்ளனவற்றை வெறுத்து; நின் இயல்பை நினைந்து, உள்ளத்தை இறைவன் எழுந்தருளுதற்குரிய பெருமை மிக்க இடமாகச் செய்தாயுமில்லை; தடை செய்யும் குற்றத்தை ஒழித்து ஆளாகக் கொண்டவன் திருவடிகளை வணங்கினுயுமில்லை; நின் இயல்பு இருந்தவாறு என்னே!

(வி - ரை)

''நெஞ்சே'' என்பதை முதலிலும் ''பரகதி புகுவானே'' என்பதை மூன்ருமடிக்கு முன்பும் வைத்து இந்தத் திருப்பாடலுக்குப் பொருள் காண்க.

அளவறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு - இமையவர்க்கு அளவறுப்பதற்கு அரியவன்- என்று மாற்றிக் கொள்க. ***இமையவர்***- விபுதர். உடல் வலிமையும் அறிவின் ஆற்றலும் மிகுந்தவர்கள். உடல் வலிமையையும் அறிவின் மிகுதியையும் கொண்டு இறைவனை அளவிட முடியாது; ஆதலின் அவர்களுக்கு அரியவன் என்றார். ***இமையவர்*** - இமையவர்க்கும் என்ற உயர்வு சிறப்பும்மை விரித்துக் கொள்க. ***இமையவர்*** - இமையோர். தேவர்கள், அவர்கள் கண்களை இமைப்பதில்லையாகலின் இமையோர் எனப்பெற்றனர். கண்களை இமைக்காது நோக்கியும் இறைவன் இயல்பை அளவறுக்க இயலாதவராயினர் என்பது நயம். ***அளவு*** - இயல்பு. இதற்கு அளவை என்று பொருள் கொண்டு இறைவனைக் காண்டல், கருதல், உரை என்ற அளவைகளால் அறுதியிட்டுக் கூற இயலாது என்றுரைத்தனர் முன்னுரையாளர்களில் சிலர். அளவை நூல்களால் இறைவனை உணர முயல்பவர் பூவுலகிலுள்ள புலவர் பெருமக்களேயாவர். போகத்திலழுந்திப் புத்தி மயங்கி நிற்கும் தேவர்கள் அந்த முயற்சியில் ஈடுபடுவதில்லை என்று இவ்விளக்கத்தை மறுப்பர் திரு. தேசிகரவர்கள். அவர் மறுப்பு ஏற்புடைத்தே.

"அளவறுப்பதற்கு" என்பதை அடியவர்க்கு என்பதுடனும் கூட்டி அடியவர்களுக்கு அளவறுப்பதற்கு எளியான் என்க.

மெய்யடியார்கள் தம் எளிமையை நினைத்து அரன் தொண்டில் ஈடுபட்டு அவன் திருவருளையே பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகலின் அவர்க்கு அவன் இயல்பை அறிவது எளிதாயிற்று . ★

இதனையே நம் அடிகள்

"வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி"

(போற்றித் திருவகல் 116 - 117)

என்று அருளியது நினைக.

★ "A devotee holds the Lord to speak under his control; God comes to him whenever he calls."

Sri Ramakrishna Paramahamsar

அளவறுப்பதையரியவன் என்பதும் பாடம்.

களவறுத்து நின்றுண்டமை - "நின்று ஆண்டு களவு அறுத்தமை" என்று மாற்றிக் கொள்க. ***களவு*** - திருட்டு. இறைவன் செயலையும் உடைமைகளையும் தன் செயலாகவும் தன் உடைமைகளாகவும் கொண்டு ஒழுகுதல். வஞ்சகம் எனலுமாம். இதனை வஞ்சனையைச் செய்யும் கட்டுக்கு ஆகுபெயராகக் கொண்டார் திரு. பாரதியாரவர்கள். ***நின்று*** - ஆட்கொண்ட பின்னரும் ஆன்மா மீண்டும் பாசத்தில் வீழ்ந்து விடாமல் ஆன்மாவினுள்ளே நின்றான் என்றவாறு.

கருத்தினுள் கசிந்து உணர்ந்து இருந்தேயும் - "கருத்தின் உள் உணர்ந்து கசிந்து இருந்தேயும்" என்று மாற்றிக் கொள்க. இறைவன், திருப்பெருந்துறையில் தமக்கு உபதேசம் செய்து ஆட்கொண்ட புற நிகழ்ச்சி உலகுக்குத் தெரியும். அவனே நம் உள்ளத்தினுள்ளும் புகுந்து ஆட்கொண்ட அக நிகழ்ச்சியை ஈண்டுக் கூறுகின்றார்.

நெஞ்சத்தை ஓர் உயர்திணை உயிர்போல இந்தப்பாட்டில் முன்னிலைப்படுத்து விளித்தார். எனவே அந்த நெஞ்சையுளப்படுத்தி "***நம் கருத்தினுள்***" என்று அந்த நெஞ்சுக்கு ஒரு நெஞ்சிருப்பதாகக் கூறினர். இங்ஙனம் கூறும் செய்யுள் மரபை.

'' நோயும் . . . .
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்

(தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பொருளியல் - சூத் - 2)

'' அன்றவ . . . .
வருந்தினை வாழியென் நெஞ்சே பருந்திருந்
. . . . .
ஒழியச் சூழ்ந்தனை யாயின் தவிராது
செல்லினிச் சிறக்கநின் னுள்ளம் . . . . .

(அகநானூறு -19)

என்பவற்றிற் காண்க. திருவாசகத்தில் இவ்வாறு வரும் இடங்களில் எல்லாம் இங்ஙனம் கொள்க.

பரகதி புகுவான் - நீ சென்று சேர வேண்டிய மேலான வீட்டுலகை அடையும் பொருட்டு. வான் ஈற்று வினையெச்சம். **புகுவானே** - ''ஏ'' ஈற்றேகாரம். **பரகதி புகுதல்** - சாதனைக்கான பயன். **உள கறுத்து உனை நினைந்து** - **உள** - ஐம்புலன்களின் நுகர்ச்சிகளாக உள்ளனவற்றை. **கறுத்து** - சினந்து. "கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள்" (தொல்காப்பியம் சொல்லதிகாரம் 366) வெறுத்து எனலுமாம். **உனை நினைந்து** - இறைவனை நோக்கித் தவம் செய்யக் கடவதாகிய உன் இயல்பை மனங்கொண்டு.

உளம் பெருங்களன் செய்ததுமிலை - சிவபெருமான் எழுந்தருளும் திருக்கோயிலாவதற்குத் தகுதியாக உன் உள்ளத்தைப் பெருமை பொருந்திய இடமாகச் செய்ததுமில்லை. உள்ளத்தைப் பெருங்களன் செய்யும் முறையை,

திருச்சிற்றம்பலம்

''கருமுதற் றொடங்கிப் பெருநா ளெல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையிற் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதி னிகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிருள் நிறத்து மதனுடை யடுசினத்
தைவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி யருள்விளக் கேற்றித்
துன்ப விருளைத் துரந்து முன்புறம்
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தவென் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி
செந்தைநீ யிருக்க யிட்டனன் னிந்த
நெடுநில வளாகமு மடுகதிர் வானமும்
அடையப் பரந்த வாதிவெள் ளத்து
நுரையெனச் சிதறி யிருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கும் மாருதங் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்

கால மிதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் ருய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி யிமையக்
கொழுந்தையு முடனே கொண்டிங்
கெழுந்தரு ளத்தகு மெம்பெரு மானே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கழுமல மும்மணிக் கோவை - 4)

என்று நம் பட்டினத்தடிகள் தீட்டும் அழகோவியத்தில் கண்டு களிக்க.

உளம் பெருங்களன் செய்தலே அந்தரியாக பூசை என்பது கதிர்மணி விளக்கம்.

பளகு அறுத்து உடையான் கழல் பணிதிலே* - *பளகு - குற்றம். உள்ளத்திலுள்ள காம முதலிய அறுவகைக் குற்றங்கள். ஆணவமலமாகிய குற்றம் எனலுமாம். இதைப் **பள கறுத்து உடையான்** - என்று கொண்டு "நஞ்சை யணிந்த நாதன்" என்பர் சீகாழித்தாண்டவராயர்.

களவு பளகு - இவை இரண்டையும் மறைந்துள்ள தீவினைகள் என்று கொண்டு hidden என்று மொழிபெயர்த்தார் Dr.G.U.Pope அவர்கள். அவை ஆகாமியம், சஞ்சிதம், இன்னும் துகர்ச்சிக்குவராத பிராரத்தம் என்பவற்றிலுள்ள தீவினைகள் என்பன அவர் கருத்து.

உடையான் கழல் பணிகிலே - பெருங்களன் செய்ததுமிலே என்று அருளியதால் ஈண்டும் பணிதலேச் செய்ததுமிலே என உம்மை விரித்துக் கொள்க. ***உடையான் கழல் பணிதலேப்*** ''பகிர்முக பூசை" என்பது கதிர்மணி விளக்கம்.

"நின் இயல்பு இருந்தவாறு என்னே" என்று இசையெச்சம் கூட்டி முடிக்க.

இத்திருப்பாடலில் இறைவன் ஆண்டமை கருதிக் கருத்தினுள் கசிந்து உணர்ந்து இருத்தல் கூறப்பட்டதால் சதகம் நுதலிய "**பத்திவைராக்கிய**

விசித்திரம்" பெற்றும்; உள்ளம் பெருங்களன் செய்தல், உள கறுத்தல், பள கறுத்தல், பணிதல் ஆகியவை கூறப்பட்டதால் பதிகம் நுதலிய '*ஆத்தும சுத்தி*' பெற்றும்.

40. புகுவ தாவதும் போதர
வில்லதும் பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவது மெந்தையெம்
பிரானென்னை யாண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவதும் நித்தலு
மமுதொடு தேனொடு பால்கட்டி
மிகுவ தாவது மின்றெனின்
மற்றிதற் கென்செய்கேன் வினையேனே

நசூ

(இ -ள்)

அடைவதற்குரியதும், அடைந்தால் மீண்டு வருதற்குரிய நெறி இல்லாததுமான சிவநகர் புகுதற் பொருட்டுச் செல்வதற்குத் தடையாக உள்ள அகப்பற்றை நீக்கி ஒழிவு செய்தலும், எங்கள் தந்தையும் எங்கள் தலைவனும் என்னை ஆட்கொண்டருளியவனுமான சிவபெருமானுடைய திருவடிகளுக்கு அன்பு செய்து உருகுதலும், நாள்தோறும் அமுதொடும் தேனொடும் கலந்த பாலும் கற்கண்டுமாகிய இவற்றின் மிக்கதாகிய இனிய சுவை உண்டாதலும், இல்லையாயின்; இந்த நிலைக்குத் தீவினையுடையேன் யாது செய்ய வல்லேன்.

(வி -ரை)

போதரவு இல்லதும் - அடைந்தால் திரும்பி வர வழி இல்லாததும். ***போதரவு*** - திரும்புதல்; தொழிலாகு பெயராய் வழியை உணர்த்திற்று.

ஈண்டு,

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

(திருக்குறள் - 356)

என்ற தெய்வநூலும் அதற்குப் பரிமேலழகர் உரையும் காண்க.

பொன்னகர் - சிவலோகம். பொன் போலப் போற்றத்தக்க வீட்டுலகம். பொன்னைப் போன்று இயல்பாகவே பாசங்களினீங்கிய இடம்; பொன்னூர் மேனியனின் இருப்பிடம். அழகிய நகரம் எனலுமாம். அழகின்மையைச் செய்யும் ஆணவமலமில்லாத உலகம் எனலுமமையும்.

உகுவதாவதும்- உகுதல்- ''யான்'' என்னும் தன்முனைப்புத் தேய்ந்து அழிதல், அது தேய்ந்து அழிவதற்குச் சாதனங்கள் திருவைந்தெழுத்தை விதிப்படி கணித்தல், சிவபூசை, திருக்கோயில் வழிபாடு, அடியவர் கூட்டம், திருமுறை பாராயணம் என்பன. **ஆவது** - உண்டாவது.

பொன்னகர் - இதற்கு இவ்வாறன்றிச் சுவர்காதி போகங்கள் என்று பொருள் கொண்டு ''சத்து அசத்து இரண்டின்பாலும் தடையின்றிப் பிரவேசிக்கும் சதசத்தான மனதே! உள்ளபடி சார்வதேது? சாராத தேது? கேட்பாயாக; "சொர்க்காதி போகத்தை விரும்புவது நன்றன்று" என்றுரைத்தார் சீகாழித் தாண்டவராயர். இசையெச்சமாகப் பல சொற்களைப் பெய்து வலிந்து வினைமுடிவு காண வேண்டியுள்ளதால் இவ்வுரையின் பொருத்தம் மேலும் ஆய்வுக்குரியதாயுள்ளது.

எந்தை எம்பிரான் என்னை ஆண்டவன் - "***எந்தை***" "***எம்***" 33-ம் திருப்பாட்டில் ''எங்கள்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

அகப்புறப் பற்றுக்களை நீக்கியபின் இறைவனை எய்தும் செந்நெறி புலப்படும். அந்நெறியும் சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என நான்காம். அவை பற்றி முன்னம் 9-ம் திருப்பாடலின் கீழ் விரித்துரைத்தாம். அவற்றுள் ஈண்டு "***எந்தை***" என்றது சற்புத்திரமார்க்கம் குறித்தது. ***பிரான்*** - தலைவன். இது தாசமார்க்கம் குறித்து நின்றது. ***என்னை ஆண்டவன்*** - ஞான குருவாக வந்து என்னைத் தன் அடிமையாகக் கொண்டவன். இது சன்மார்க்கம் குறித்து நின்றது. உபலக்கணத்தால் சகமார்க்கமும் உடன் கொள்க. திருப்பெருந்துறையில் நம் அடிகளுடன் கூடியிருந்த அடியார்களையும் பின்னர்ப் பொய்கையில் சோதி தோன்றியது கேட்டு அங்கு ஓடிவந்து சேர்ந்த அடியார்களையும் இறைவன் ஆட்கொள்ளும்போது அவரவர் பக்குவத்துக்கேற்ப நால்வகை நெறிகளாலும் ஆட்கொண்டான் என்பது கருத்து.

கழற்கு அன்பு நெகுவதாவதும் - கழல் - ஆணவ மலத்தை வெற்றி கொண்ட சின்னம். ஈண்டுக் கழலை அணிந்த திருவடியைக் குறித்து நின்றது. ***அன்பு நெகுவதாவது - அன்பு*** - இது மனைவி, மக்கள், பொன், மண் போன்ற புறப் பொருள்கள் பொருட்டு நிகழ்வதாயின் அது பொன்னகர் புகத்தடையாகும். ஆதலின் அதை "***எந்தை கழற்கு அன்பு***" என்றார். ***நெகுவது*** - உள்ளம் கட்டுவிட்டு உருகுதல், இறைவன் திருவடிக்கு அன்பு செய்து உருகுதலே அன்பு நெறியாகும்.***நித்தலும்*** - நாள்தோறும் எனலுமாம். அமுதம் முதலியவற்றின் நுகர்ச்சி உலப்புடையது; ஆனால் பேரின்பம் என்றும் குறைவுபடாததும் அழியாததுமாகலின் ***நித்தலும்*** என்றார்.

அமுதொடு தேனொடு பால் கட்டி மிகுவதாவதும்- அமுது தேன் பால் கட்டி என்பன பண்பாவாகு பெயர்களாய் அவற்றால் வரும் இன்பம் குறித்தன. ***அமுது*** - தேவர்கள் உணவு, அஃது இன்பம் பயப்பதை நாம் உரை அளவையால் பெற்றும்.

தேன் பால் கட்டி - என்பன மக்கள் உணவு. அவற்றால் வரும் இன்பம் காட்சி அளவையாற் பெற்றும். "**ஒடு**" உருபு எண்ணுப் பொருட்டு. இதற்கு இவ்வாறன்றி "**ஒடு**" உருபு இருமுறை வந்தது , தேவர் உணவு மக்கள் உணவு என்ற வேறுபாட்டைப் புலப்படுத்தற்கே என்பது கதிர்மணி விளக்கம். ***கட்டி*** - கற்கண்டு. ***மிகுவதாவது*** - தேன் பால் கற்கண்டு இவை அனைத்தையும் கலந்து உண்பதால் வரும் சுவையினும் மிகுந்த இன்சுவை பயப்பது என்றவாறு. இவை மூன்றின் கலவையை விட தேவருணவாகிய அமுதம் மிகுந்த இன்சுவை தருவதேனும் அந்தச் சுவையும் அதனால் வரும் பயனும் நிலையானவையல்ல. வீட்டின் இயல்புணர்ந்து அதை அடையத்தடையாக உள்ள அகப்பற்றை அழித்தலும், அவ்வழிவால் அவ்வீடுபேற்றுக்குரிய இறைவனை நாடி அவன் திருவடியை நினைந்து உருகுதலும், அவ்வுருக்கத்தால் வரும் இனிமையும் ஒன்றினின்றும் ஒன்று தோன்றி நாள் தோறும் வளர்ந்து இன்பம் பயப்பதால் "***மிகுவதாவது***" என்றார்.

அசுரரை வஞ்சித்துப் பெறப்படுதலில் அமுதமும், ஈக்களைக் கொன்று திரட்டப்படுவதால் தேனும், கன்றினுக்குரியதைக் கவர்ந்து பெறுவதால் பாலும், கரும்பை அழித்து உடல் வருந்திப்பெறப் படுவதால் கற்கண்டும் இன்பம் பயப்பன. மெய்யடியார்கள் தம்மைத்தாமே வருத்திக் கொள்ளும்

தவத்தால் பெறப்படுவது இறை இன்பம் ஆதலின் இஃதின்பம் மிகுவதாயிற்று என்று விளக்குவார் திரு. பாரதியாரவர்கள். **ஆவது** - ஆதல்.

இன்று - இதை "***உகுவது***" "***நெகுவது***" "***மிகுவது***" என்பவற்றின் ஒவ்வொன்றனுடனும் தனித்தனிக் கூட்டுக. இங்ஙனம் கூட்டியுரைப்பதைப் ''பிரத்தியேக பந்தம்" என்பர் வடமொழியாளர்.

இத்திருப்பாடலில் "***ஆவதும்***" என்ற சொல் நான்கு இடங்களிலும் இல்லை என்பது "**இல்லதும்**" "***இன்று***" என ஈரிடங்களிலும் வருகின்றன. இவற்றுள் ''**புகுவதாவதும் போதர வில்லதும்**" என்பன இரண்டும் பொன்னகர் என்ற வீட்டுலகின் இலக்கணங்கள். முடிவில் உயிர்கள் அங்குப் புகும்; புகுந்தபின் மீட்சியில்லை என்பது பொருள். அடுத்துவரும் "**உகுவதாவதும்**", "***நெகுவதாவதும்***" "***மிகுவதாவதும்***" அவ்வீட்டை அடைவதற்குரிய சாதனங்கள். இவை தம்மிடம் இல்லை என்று முடிக்கின்றார். இச்சொற்கள் '***இன்று***' என்பதைத் தழுவி நின்றன.

இங்குவரும் **ஆவதும்** என்ற சொற்கள் தெரிநிலைப் பொருளில் வந்தன. "***உகுவதோ***" "***நெகுவதோ***" "***மிகுவதோ***" இன்று - என்றவாறு.

அன்றெனின் - என்பதும் பாடம்.

மற்று - வினை மாற்றுப் பொருளில் வந்தது.

இதற்கு என் செய்வேன் - வீட்டு நெறிக்கான செந்நெறிச் செலவும், அதற்குத் தடைகளாக உள்ள பற்றுக்களின் ஒழிவும்; அவை ஒழிவதால் பத்தியைக் கொண்டு வீட்டு நெறியில் முன்னேறுதலும், அவ்வாறு முன்னேறி வீட்டை எய்திப் பேரின்ப முறுதலும் ஆகிய இவற்றில் ஒன்றேனும் அடைந்திலேன்; இது குறித்து யான் செய்யக் கடவது யாது? என்றிரங்கியவாறு.

வினையேனே - இங்ஙனம் எய்தப் பெறாமைக்கு என் தீவினையே காரணம் என உடம்பொடு புணர்த்தோதினர்.

இத் தீவினை நான் எப்பொழுதோ செய்தது. அஃது உடனே பலனளிக்காமல் அடங்கியிருந்து வளர்ந்து இப்பொழுது வெளிப்பட்டு வருத்துகின்றது என்று வருந்தியவாறு.

ஈண்டு ;

'' தீயவை செய்தார் கெடுத லிழறன்னே
வீயா தடியுறைந் தற்று''

(திருக்குறள் - 208)

என்ற வள்ளுவர் வாய்மொழி நினைக.

இந்த வினையின் வெம்மையை இறைவன் திருவடி நிழலால் மாற்றி விடலாம் என்பதை

திருச்சிற்றம்பலம்

சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்னும்
நிழலா வனவென்று நீங்காப் பிறவி நிலைகெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவ கால வனங்கடந்த
அழலா ரொளியன காண்கவை யாற னடித்தலமே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 92 - 9)

என்வரும் அரசுகள் வாக்காலறிக. ★

இத் திருப்பாடலில் வீடு பேறு எய்துதற்கான நல்லியல்புகள் ஒன்றேனும் தம்மிடம் இல்லையே என்று கூறி இரங்குவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; இவ்வியல்புகள் அனைத்தும் உயிர் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள இன்றியமையாதவை என்பது பெறப்படுவதால் பதிகம் நுதலிய "**ஆத்தும சுத்தி**" பெற்றும்.

★ *மென்னிழற் றருவை யடைபவர் தம்மை*
விடாநிழல் விட்டிடு மாபோல்
நின்னடிக் கமல மடைந்திடிற் றொடர்ந்து
நீங்கலா வினையுநீங் குறுமே
கன்னலிற் கனியிற் சுவைதரு மமுதே
கண்மணி யேயருட் கடலே
யென்னுயிர்த் துணையே யென்கரத் திருக்கு
மீசனே மாசிலா மணியே

(சிவப்பிரகாச சுவாமிகள் குறுங்கழிநெடில்)

41. வினையென் போலுடை யார்பிற
ராருடை யானடி நாயேனைத்
தினையின் பாகமும் பிறிவது
திருக்குறிப் பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந்
திருந்துநான் முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை யிரும்புகன்
மனஞ்செவி யின்னதென் றறியேனே.

நஎ

(இ - ள்)

என்னைப் போலத் தீவினையுடையார் பிறர் யாவர்; அடிமையும் நாய் போன்று இழிந்தவனுமாகிய என்னைத் தினையின் ஒருகூறு அளவுள்ள நேரமோ இடமோ நீங்கியிருப்பது இறைவனின் திருவுள்ளக் கருத்தன்று; ஆதலின், ஆண்டவனுடைய திருவடிகளாகிய நல்ல தாமரை மலர்களை நானே விட்டு நீங்கியபின் உயிருடன் இருந்தும், யான் என் தலையை வலிய பொருள்களின் மீது மோதுதல் செய்கிலேன், பிளத்தலும் செய்கிலேன்; ஆதலின் பாவித்தற்கிடமாகிய இத்தகைய என் மனம், இரும்பும் கல்லுமாகும்; காதுக்கு உவமையாகக் கூறத்தக்க பொருள் எது என்று கூற அறிந்திலேன்.

(வி - ரை)

வினை - ஈண்டுத் தீவினையை உணர்த்திற்று. என்னைப்பிரிந்திருப்பது இறைவன் திருவுள்ளக் கருத்தன்று. அதற்கு மாறாக நான் அவன் திருவடிகளைப் பிரிந்திருக்கின்றேன். அவ்வாறு நான் பிரிந்ததற்குக் காரணம் என் தீவினையே என்றவாறு.

என்போல் உடையார் பிறர் யார் - என்போன்று இத்துணைத் தீவினையுடையவர் யாருளர்? என எதிர்மறை குறித்த வினா. ஒருவருமிலர் என்றவாறு. அப்படியாரேனும் ஒருவர் இருப்பின் அவரைப் பார்த்தேனும் ஆறுதல் பெறலாம்; அதற்கும் வழியில்லை என்றவாறு.

உடையான் அடி நாயேனை - உடையான் - என்னைத்தன் அடிமையாகவும் எல்லாப் பொருள்களேயும் தன் உடைமையாகவும் கொண்ட சிவபெருமானுக்கு. "**உடையானுக்கு**" என்பதிலுள்ள நான்கனுருபு தொகுத்தலாயிற்று.

தினையின் பாகமும் பிறிவது - தினை - மிகப்பெரிய பொருள்களுக்குப் பனையையும் மிகச்சிறிய பொருள்களுக்குத் தினையையும் உவமை காட்டுவர். பனையினும் பெரிய மலை போன்றவையும் தினையினும் சிறிய அணுப்போன்றவையும் உளவாயினும் ''பனையையும் தினையையுமே " உவமை காட்டுவது மரபு. ஈண்டு நம் அடிகள் அந்த மரபினின்றும் வழுவாது நின்றும் அதே சமயம் தினையினும் சிறிய பொருளை உவமை காட்டுவான் புகுந்து "***தினையின் பாகமும்***" என்ருர். தினை என்னும் தானியத்தின் ஒரு மணியின் பல கூறுகளில் ஒரு கூறு என்றருளினர். ***பாகம்*** - கூறு. இது காலம் இடம் இரண்டற்கும் கொள்ள நின்றது.

பிறிவது - பிரிந்திருப்பது. முன்னம் போற்றித் திருவகவல் (78-ல்) ''பிறிவு" என்றதன் கீழுரைத்தவை காண்க.

அடி நாயேனை - வலிய தீவினையுடையவனும் அவன் அடிமையும் இழிந்தவனுமாகிய என்னை. நாய் பற்றி முன்னம் சிவபுராணம் (60-ல்) ''நாய்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

திருக்குறிப்பு அன்று - இப் பிரிவு நிகழ வேண்டும் என்பது அவன் திருவுள்ளங் கொண்டதாலன்று. என் தீவினை காரணமாக நானே செய்து கொண்டது என்க.

நான் நாய் போன்று இழிந்தவன், அவனுல் ஆட்கொள்ளப்படத் தகுதியற்றவன் என்று தெரிந்திருந்தும் அவன் என்னை ஆட்கொண்டான். அஃது அவன் பேரருளினுலாம். அவ்வாறு ஆட்கொண்ட பின் என் தகுதியின்மை கண்டு என் பிரிவை அவன் திருவுள்ளம் பற்றியிருப்பானுகின் அவனது முற்றறிவுடைமைக்கும், பேரருளுக்கும் இழுக்காக முடியும்; ஆதலின் இஃதவன் திருவுள்ளக் குறிப்பன்று என்க.

ஆன்மா, இறைவனின் அட்ட மூர்த்தங்களுள் ஒன்று. அவன் அதை விட்டு நீங்குவதில்லை. அநாதி கேவலம், சர்வசங்காரத்தின் பின்னுள்ள கேவலம், சகலம், சுத்தம், வீடுபேறு ஆகிய எல்லா நிலைகளிலும் இறைவன் ஆன்மாவுடன் பிரிப்பின்றியுள்ளான். இரு பொருள்களும் அழிவற்றவை ஆதலின் ஆன்மாவை விட்டு இறைவன் தினையின் பாகமும் பிரிந்திருப்பதில்லை என்பது நினைக.

மற்று அதனாலே - *மற்று* அசை.

அதனாலே - பிரிவதற்குக் காரணம் நானே ஆதலின் ஒறுக்கப்படத்தக்கவன் நானே என்றவாறு.

பாத நன்மலர் - நல்ல மலர் போன்ற பாதம் என்று உவம உருபு விரித்துப் பொருள் கொள்க.

நன் - நல்ல. வழிபடாதாரையும் தன்னை இகழ்ந்தாரையும் சோபான முறையில் உயர்த்தி மலபரிபாகம் நிகழ்வித்துக் கரையேற்றலின் நல்ல மலராயிற்று.

மலர் - ஈண்டுத் தாமரை மலரைக் குறித்தது. அடைமொழியின்றிப் "பழம்" என்னில் அது வாழைப்பழத்தையே குறிப்பது போல அடைமொழி இன்றி மலர் என்னில் அது தாமரை மலரையே குறிக்கும் என்பதுணர்க. தாமரைமலர் ஈண்டு இறைவன் திருவடிக்கு வடிவம் பற்றி உவமையாயிற்று

"தாமரை புரையுங் காமர் சேவடி"

(குறுந்தொகை -கடவுள்வாழ்த்து)

என்றது காண்க. தாமரை மலரில் நறுமணம் கமழ்வது போல் இறைவன் திருவடிகளிலும் வீட்டின்ப நறுமணம் கமழ்வதால் பண்புபற்றிய உவமையுமாம்.

பிரிந்திருந்து நான் முட்டிலேன் தலைகீறேன் - ***பிரிந்து இருந்து*** - இறைவன் திருவடிகளை நானே பிரிந்தேன். அந்தப் பிரிவாற்றாமையால் என் உயிர் தானாகவே நீங்கி இருக்க வேண்டும். பிரிந்திருந்தும் நான் என்று சந்தியில் மறைந்துள்ள மகரவொற்றை வெளிப்படுத்துப் பொருள் கொள்க.

உம்மை இழிவு சிறப்பு. ***தலை முட்டிலேன் தலைகீறேன்*** எனத் ***தலை*** என்ற சொல்லை ஈரிடத்தும் கூட்டியுரைக்க. பிரிவாற்றாமையால் தானே உயிர் நீங்காதிருப்பின் கல் முதலிய வலிய பொருள்கள் மீது என் தலையை முட்டியோ, அன்றி வாள் மழு போன்ற படைக்கலன்களால் தலையைப் பிளந்து கொண்டோ நான் என் உயிரைப் போக்கிக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறும் செய்திலேன் என்றவாறு. ஞானேந்திரியங்களில் கண், மூக்கு, நாக்கு, செவி என்ற நான்கும் மெய்யின் ஒரு பகுதியும் தலையில் உள்ளன. இவ்வுறுப்புகளை இயக்கும் மூளையும் தலையில் உள்ளது. இவை இந்தப்பிரிவைத் தடுத்து நிறுத்தாமையால் இவற்றுக்கு இருப்பிடமான தலையைச் சிதைத்துக் கொண்டு இறந்தேனல்லன் என்றவாறு. ***தலை*** திருவடியைச் சூட்டிக் கொள்ளும் உரிமையுள்ளது என்பது நினைக. ***தலைகீறேன்***- என்றதன் பின் "***ஆதலின்***" என்று ஒரு சொல்லெச்சம் வருவித்து உரைக்க.

இனையன் பாவனை இரும்பு கல்மனம் செவி இன்னது - இனையன் இத்தகையவன். ***பாவனை*** பாவித்தற் கிடமாகிய மனம் குறித்து நின்றது.

இரும்பு கல் - இரும்பாலும் கல்லாலும் ஆனது.

செவி இன்னது - காது இன்ன பொருளாலானது. உபலக்கணத்தால் கண், மூக்கு, நாக்கு, மெய் என்பவற்றையும் கொள்க. ★

என்று அறியேன் - என்று அறியும் ஆற்றலற்றவனாயுள்ளேன் என்றவாறு. ***செவி*** - அவன் உபதேசத்தைக் கேட்டிருந்தும் கூட அவன் திருவடிகளைப் பிரிந்துள்ளது. எனவே இதற்கு உவமையாக இரும்பும் கல்லும் அமையா. எனவே வேறு எதனை உவமை கூறுவேன் என்றவாறு.

இத் திருப்பாடலில் இறைவன் திருவடிகளைப் பிரிந்த பின்பும் நான் இன்னும் உயிருடன் உள்ளேனே என்று வருந்தி இரங்குவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம் பெற்றும்**". முனைவன் திருவடிகளைத் தினையின் பாகமும் பிரியா திருப்பதே உயிர் தூய்மையுற்று மேற்கதி நண்ணுவதற்கான வழி என்ற குறிப்பால் பதிகம் நுதலிய "***ஆத்தும சுத்தி***" பெற்றும்.

★ "ஒரு மொழி யோழிதன் னினங் கொளற் குரித்தே"

நன்னூல் 358

42. ஏனை யாவரு மெய்திட
 லுற்றுமற் றின்னதென் றறியாத
தேனை யானெயைக் கரும்பினின்
தேறலைச் சிவனையென் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன்
கூறனைக் குறுகிலே னெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின்
றேன்கெடு வேனுயி ரோயாதே ௫அ

(இ - ள்)

திருப்பெருந்துறையில் உடனிருந்த அடியவர்களும், அவர்கள் சோதியிற் கலந்த செய்தியறிந்து ஓடி வந்த அடியவர்களும் வீடு பேறடைந்தும், இன்ன தன்மையுடையது என்று அறிய வொண்ணுதவனும், எனக்குத் தேனும் ஆவின் நெய்யும் கரும்பின் இனிய சாற்றின் தெளிவும் ஆயவனை; இன்ப வடிவினனும் சிவலோக நாதனும் மான் விழி போன்ற பார்வையையுடைய உமையம்மையைத் தன் ஒரு கூற்றில் உடையவனுமாகிய இறைவனை; நீண்ட காலமாக நண்ணப் பெற்றிலேன்; இந்த நிலையில்; கேடடையத்தக்க யான், என் உயிர் கெட்டு ஒழியாது இவ்வுலகில் வாழ்ந்திருந்து உடலை நீண்ட காலமாக ஓம்புகிறேன்.

(வி - ரை)

ஏனையாவரும் - ஏனையவர் - திருப்பெருந்துறையில் நம் அடிகளுடன் கூடியிருந்த அடியார்கள். இந்தத் திருக்கூட்டத்தில் நம் அடிகள் தவிர ஏனையவர்கள். ***யாவரும்*** - மேற்குறித்த அடியவர்கள் சோதியில் புகும் செய்தி அறிந்து தாங்களும் அதில் புகுவதற்காக ஓடோடி வந்த அடியவர் கூட்டத்தில் இருந்த அனைவரும். திருப்பெருந்துறையில் கூடியிருந்தவர்களில் நம் அடிகள் மட்டும் சோதியிற் புகவில்லை; ஏனையோர் புகுந்து அதன் வழி வீடுபேறுற்றனர். ஆனல் செய்தியறிந்து ஓடிவந்த கூட்டத்தில் இவ்வாறு ஒருவர் கூட மீதமிலர்; ***யாவரும்*** வீடு பேறுற்றனர். அவர்கள் சோதியிற் புகாவிடினும், வேறு வழிகளில் தங்கள் உயிர்களை நீத்து வீடடைந்தனர்.

அவ்வாறு உயிரை வலிந்து நீக்காமல் ''பதஞ்சலிக் கெய்திய பரம நாடக என்று இதஞ்சலிப்புற்று ஏங்கி" நின்றவர்களும் காலப்போக்கில் தங்கள் தவவழி நம் அடிகளுக்கு முன் வீடுபேறுற்றனர் என்றவாறு. இது பற்றி முன்னம் கீர்த்தித் திருவகவல் 132 - முதல் - 139 வரையிலுள்ள பகுதிகளையும் ஆண்டுரைத்தவையும் காண்க.

எய்திடல் உற்றும் - வீடுபேறு அடையப்பெற்றும். இந்தப் பகுதிக்கு இவ்வாறன்றி "மெய்யன்பர்கள் அல்லாத திருமால் முதலிய பெருந் தேவர்கள் சிவபெருமானைக் கயிலை முதலிய இடங்களில் அடைந்து காணப்பெற்றும்; அவன் இயல்பு இன்னதென்று அறிந்திலர்" என்றுரைத்தனர் முன்னுரையாளரில் சிலர். அவர்கள் இறைவனை எய்திடப்பெற்றது காமிய தவத்தின் பயனும். அதனால் அவர்கள் அவனிடம், அசுரர் முதலியவர்களால் வந்த துன்பங்கள் நீங்கித் தங்கள் பதங்களில் நீடித்து நிலைபெற்றுப் பொருளும் பொன்னும் போகமும் தொடர்ந்து துய்த்தலையே இரந்து எய்தினர். அருளும் அன்பும் அறனும் அவற்றின் பயனாகிய வீடுபேறும் வேண்டினார் அல்லர். ஆதலின் அவர்கள் இறைவன் தன்மையை இன்னதென்றறியா தொழிந்தனர்.

இன்ன தென்றியாத - வீடுபேறுற்றவர்கள் இறைவன் இயல்பை அறிந்தனர். ஆனால் நான் அறியாது நிற்கின்றேன் என்பர் சீகாழித்தாண்டவராயர்.

தேனை ஆன்நெய்யை கரும்பின் தேறலை சிவனை சிவலோகக் கோனை, மானன நோக்கிதன் கூறனை - ***என் சிவலோகக் கோனை*** - என்பதிலுள்ள **என்** என்பதை **தேன்** முதல் ***மானன நோக்கி*** முடியவுள்ள ஒவ்வொன்றன் முன்பும் கூட்டிப் பொருள் காண்க.

என் தேனை - தேன் பலபூக்களில் பல ஈக்களால் பல நாட்களாகச் சிறிது சிறிதாகத் திரட்டப்பட்டது. தேனின் சாரம் எந்த மலரினது என்று பிரித்து அறிய முடியாதது. இறைவன் இயல்பும் முனிவர்கள் பலரால் பல நூல்களிலிருந்து பல்லாண்டு காலமாகச் சிறிது சிறிதாகத் திரட்டி உரைக்கப்பட்டது. அத்துணை விழுமிய தேன் எனக்குரியது என்றவாறு.

ஆன் நெய் - பசுவின் நெய்யும் ஆவின் உடலிற் குருதியாய் அதன் மடியிற் பாலாய் வந்து காய்ச்சிய பின் தயிராக்கப்பட்டுக் கடைந்த பின்

வெண்ணெய் ஆகி உருக்கியபின் நெய்யாகக் கிடைப்பது. இது, தேன் போலன்றி ஓரிடத்திலேயே பெறப்படினும் தொடர்ந்து பல நிலைகளில் புரியும் பல முயற்சிகளின் பயனுகக் கிடைப்பது.

இறைவனும் வேதமாகிய ஆவினின்றும் பெறப்படும் நெய்யே. வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள பல கன்மங்களைச் செய்வதனுல் புண்ணியமாகிய பாலும், அதனின்று சிவபுண்ணியமாகிய தயிரும், அதனின்று பக்தியாகிய வெண்ணெயும், அதனின்றும் சிவத்தை அனுபவித்தலாகிய நெய்யும் பெறலாம் என்று ஒப்புமை காட்டித் தொடர்புபடுத்திக் கொள்க.

என் நெய் - இத்துணை விழுமிய நெய் எனக்குரியது. இதை நான் துய்த்தின்புறுவேன் என்றவாறு.

கரும்பின் இன் தேறலே - கருப்பஞ்சாற்றிலுள்ள இன்சுவை பயக்கும் தெளிந்த பகுதியை. கருப்பங்கழி இன்சுவையைத் தன்மாட்டுடைத்து. மனைவி, மக்கள், செல்வம் என்ற புறப்பற்றுக்களாகிய கரும்பின் தோகையை நீக்கி, உடல் முதலிய புறக் கருவிகளாகிய ஈர்க்கைக் களைந்து; மனம் முதலிய அந்தக் கரணங்களாகிய சக்கையைக் கழித்துச் சிவமாகிய கருப்பஞ்சாற்றின் தெளிந்த பகுதியைப் கொள்ள வேண்டும் என்றவாறு.

என் கரும்பின் இன் தேறல் - அந்தக் கருப்பஞ் சாற்றின் தெளிவை நுகரும் தம் உரிமையை உரைத்தவாறு. ***தேன், ஆன்நெய், கரும்பின் இன்தேறல்*** - என்ற இவை மூன்றும் உவமஆகுபெயர்களாய் அவை போல்பவன் என்று பொருள் தந்து, அறியாத என்ற பெயரெச்சத்திற்கு முடிவுகளாயின.

இவற்றின் கலவையைச் சுவைத்தால் எதன் சுவை என்று பிரித்தறிய இயலாத ஓர் இனிய சுவையைப் பயக்கும். ஆதலின் ***இன்னதென்றறியாத*** என்முர் எனலுமாம். "இரும்பைக் . . . . கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே"

(சிவஞான சித்தியார்-சுபக். சூ - 11 அதி - 2, செய் - 12)

என்று ஞானசாத்திரம் நவில்வது காண்க.

மெய்யன்பர்களுக்கு ஆண்டவன் முதலில் எளியனுய்க் காட்சியளித்துப் படிப்படியாகத் தன் அரிய நிலையையும் உணரவைத்து, முடிவில் இன்பத்துள் திளேப்பிப்பன்; இம்முறையில் எளிமையாகக் கிட்டும் தேனின் சுவையில் தொடங்கிப் படிப்படியாக அருமை நிலையைப் புலப்படுத்தி ஆட்கொண்டதைக் குறிப்பதாக நயம்பட உரைப்பது கதிர்மணி விளக்கம்.

ஆன்நெய் - கறந்து பெற்ற பாலே அட்டுப் பிறையூற்றித் தயிரான பின், கடைந்துபெற்ற வெண்ணெயை உருக்கிப் பெறுவது நெய். ***கரும்பின் இன்தேறல்*** என்றது வெல்லத்தை. கழனியினின்றும் வெட்டி வந்த கரும்பை ஆலேயிலிட்டுச் சாறு பிழிந்தெடுத்து அதை அட்டு மாசு நீக்கிப் பெற்ற பாகை அச்சில் வார்த்துப் பெறுவது வெல்லம். அதன்பின்பே நெய்யும் வெல்லமும் சுவைத்தற்குரியன. ஆனுல் தேனடையிலிருந்து எடுத்த தேன் அவ்வித முயற்சிகளின்றி உடனே சுவைக்கும் நிலேயினது. ஆதலின் தேனே அடைமொழிகளின்றிக் கூறினுர். அவ்வாறே மிக எளிதில் மெய்யடியார்களேச் சிவானந்தம் நுகரச் செய்யும் சிவபெருமானே ஈண்டு அடைமொழிகளின்றிக் கூறினுர். "***சிவன்***" என்னும் இச்சொல் னகரவொற்று நீங்கிச் "சிவ" எனும் காரண பஞ்சாட்சரமாக நிற்பதையும், அது கணிப்போரை மிக எளிதில் உய்விக்க வல்லதையும் நினைக. உய்விப்பவன் சிகரமாகிய இறைவன் ; அவன் உய்விப்பதற்குக் காரணமாக நிற்பது அவன் பேரருளின் உருவகமாகிய அம்பிகை; அவள் ஈண்டு வகரமாக நிற்பது காண்க. காரண பஞ்சாட்சரம் கணிப்போரை எளிதில் உய்வித்தல் பற்றி முன்னம் 31-ம் திருப்பாட்டில் "அஞ்செழுத்தின் புணே பிடித்துக் கிடக்கின்றேனே" என்றதன் கீழுரைத்தவை கொண்டு தெரிக. ***என் சிவனே*** என்றது உரிமைபற்றி.

என்சிவலோகக் கோனே - என்கோனே; சிவலோகக் கோனே; என்று பிரித்துரைக்க.

சிவலோகக் கோன். கோன் - அரசன். வைகுண்டம் முதலிய ஏனைய உலகங்களினின்றும் பிரித்துணர்த்தும் பிரிதினியைபு நீக்கிய விசேடணம். இவ்வாறே "***ஆனெயை***" என்றதும் மேதி முதலிய பிறவற்றின் நெய்களினின்றும் பிரித்துணர்த்தும் பொருட்டாம்.

சிவலோகக் கோன் என்றதால் - சிவலோகத்தில் உள்ள சாலோக

சாரூப, சாமீபப் பதங்களைப் பெற்றவர்களுக்கு அரசன் என்றவாறு. சிவலோகவாசிகள் சோபான முறையில் உயர்ந்து சென்று இன்பம் துய்த்தலின்; பல முயற்சிகளில் படிப்படியாக மாறி வந்து நெய்யாக இன்பம் நல்கும் "**ஆனெய்**" யைக் குறிப்பிட்டார் "**என்**" என்பது தம் உரிமையை வலியுறுத்தும் பொருட்டென்க.

என்மான் அன்ன நோக்கிதன் கூறனே - மான் போன்ற பார்வையுள்ள உமையம்மையைத் தன் உடலில் ஒரு கூறுகக் கொண்டவனே. உமையம்மையின் உடலில் ஒரு கூறுக நிற்பவன் எனவுமமையும். முன்னம் திருவண்டப்பகுதி (103 -ல்) "பேரமைத்தோளி காதலன் வாழ்க" என்றதன் கீழ் விளக்கியவையும் இலக்கணக்குறிப்பும் காண்க.

ஈண்டு மான் போன்ற பார்வையினளாகிய உமாதேவி அருட்சத்தியைக் குறித்து நின்றது. அருளே இவன் உடையனுயினும், அருள் இவனே உடையதாயினும் அருளைப் பெறுபவன் ஆன்மாவே என்க. உமையம்மைக்கு உவமை கூற மயில் போன்ற சாயலள்; ஓதிமம் ஒத்த நடையினள்; கிள்ளையொத்த மொழியினள் என்ற உவமைகள் எத்தனையோ நிற்க, மானின் கண்ணையுங் கூடக் கூருது கண்ணின் தொழிலாகிய பார்வையைக்குறிக்க **நோக்கியை** என்றது சட்சு தீட்சை பற்றிய குறிப்பு நின்றது.

பூவுலகில் மெய்யடியார்களைப் பற்றுக்களினின்றும் பிரித்து பல படிமுறைகளில் பக்குவம் வரச் செய்து சட்சு தீட்சையால் சஞ்சித வினைகளை ஒழித்துப் பிராரத்த வினையை உடலூழாய்க் கழியச் செய்து ஆகாமியம் ஏருமல் காப்பதால், பல படிகளில் பக்குவப்படுத்தப்பட்டுக் கிடைக்கும் "***கரும்பின் இன்தேறலின் தெளிவை***" உவமையாகக் காட்டினுர்.

சிவனே கோனே கூறனே; தேனே ஆனெயை தேறலே என்று நிரனிறையாகக் கூட்டிப் பொருள் கொள்க.

குறுகிலேன் - எய்தினேனல்லன். ***குறுகுதல்*** - இறைவன் திருமுன்பு உடல் குறுகிநிற்றல். பணிவுடன் வணங்குதல் குறித்தது.

நெடுங்காலம் - நெடுங்காலம் குறுகிலேன்; நெடுங்காலம் இருந்து ; நெடுங்காலம் ஊனே ஓம்புகின்றேன்; என ஒவ்வொன்றனுடனும் கூட்டியுரைக்க.

நெடுங்காலம் - திருப்பெருந்துறையில் இறைவனைப் பிரிந்தபின் இதுவரையும் கடந்த காலம் சிறிதேயாயினும் பிரிவாற்ருமையின் துன்பத்தால் அது நெடுங் காலமாகத் தோன்றிற்று.

நெடுங்காலம் - என்றன் பின் ''செல்ல'' என்னும் பொருள் தரும் ''ஆக'' என்ற ஒரு சொல் வருவித்து அதன்பின் ''உம்மையும்'' விரித்துக் கொண்டு "நெடுங்காலமாகவும்" என்றுரைக்க.

ஊனை - ஊன் - உடல் "தானெனை. . ஊனுயிர் வேறு செய்தான்". எனவரும் நம்பிகள் தேவாரம் காண்க. உடலை ஓம்புகின்றேன் என்ஞது ''ஊனை'' ஓம்புகின்றேன் என்ருர். உடம்பு கிடைத்தன் பயனை இப்பிறவியில் பெருததால் இனி அஃது உயிரற்ற உடம்பாக, நாய் நரி முதலிய விலங்குகளுக்கு உணவாகும். "**ஊன்**" ஆயிற்று. **ஓம்புகின்றேன்-** இவ்வுடலை உன் திருவடிகளை ஓம்புதற் பொருட்டன்றி வினைகளை ஓம்புகற் பொருட்டுப் பாதுகாக்கின்றேன் என்றவாறு.

கெடுவேன் - இரக்கப்பொருட்டாகிய ஓகாரம் விரித்து இந்த நிலையிலேயே இருந்து அழிந்து ஒழிவேன் போலும் எனலுமாம்.

உயிர் ஓயாதே - இந்தப்பயனற்ற உடம்பை விட்டு உயிர் நீங்கிவிடாமல் காப்பாற்றுகின்றேனே என்று இரங்கியவாறு. ***உயிர் ஓயாதோ*** என எதிர்மறை குறித்த விஞவாகக் கொண்டு இந்த உயிர் போகாதோ என்று வெறுத்துரைத்தவாறுமாம். இந்த உயிர் இவ்வுடலை விட்டுப் போகாதிருப்பின் இறைபணி செய்யாது. மாருகப் பிராரத்த வினையைப் புசித்துக் கழிப்பதாகக் காட்டிக் கொண்டு மேலும் மேலும் ஆகாமியத்தை ஏற்றிக்கொள்ளும் என்க.

இத் திருப்பாடலில் இறைவனை நெடுங்காலமாகப் பிரிந்துள்ளேன் என்று கூறி இரங்குவதால் சதகம் நுதலிய "**பத்தி *வைராக்கிய விசித்திரம்***" பெற்ரும், ஊன் உடம்பை ஓம்புதலை விட்டுச் சிவபெருமாஞகிய தேனை நுகர்தல் வேண்டும் என்றதால் உயிர் தூய்மையடைவதாகிய பதிகம் நுதலிய "***ஆத்துமசுத்தி***" பெற்ரும்.

43. ஒய்வி லாதன வுவமனி
விறந்தன வொண்மலர்த் தாடந்து
நாயி லாகிய குலத்தினுங்
கடைப்படு மென்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய வின்னருள்
புரிந்தவென் றலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை
யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே
நக

(இ - ள்)

அழியாதனவும் உவமங்களைக் கடந்தனவும் ஞான ஒளி பொருந்தியனவும் தாமரை மலர்கள் போன்றனவுமான திருவடிகளை அளித்து இழிந்த நாய்களின் கூட்டத்தினும் கடைப்பட்ட எனக்கு வீடடைதற்குரிய சிறந்த அன்பு வழியை அறிவுறுத்தருளி, அன்னையிடத்துத் தோன்றிய இனிய அருளினும் சிறந்த அருளை இடைவிடாது நல்கிய என் ஆண்டவனை நெடுங்காலமாகக் காணப்பெறேன்; அதனுல் நெருப்பில் விழுந்து இறந்திலேன்; திண்ணிய மலை மீதிருந்து கீழே உருண்டு விழுந்து ஒழிந்திலேன்; மிகுந்த நீர்ப்பெருக்குள்ள கடலில் மூழ்கி அழிவனே; அஃதுமிலன்; என்றவாறு.

(வி - ரை)

ஒய்தல் - சுருங்கி வந்து இறுதியில் அழிதல். **ஒய்தல்** - உள்ளதன் நுணுக்கம் என்பர் தொல்காப்பியனுர் ''ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம் (தொல் - சொல் - சூத் - 324) உயிர்களைக் காப்பதனுல் மெலிவடைந்து அழிதல். பதிப்பொருள் நித்தியமாதலின் அதற்கு மெலிவோ அழிவோ இல்லை என்றவாறு. இடைவிடாது திருவைந்தொழில் புரிந்தாலும் ஒய்வடைவதில்லை என்றுருமுண்டு.

இறைவன், உயிர்களுக்கு அருளும் மெய்ஞ்ஞானத்தை அவன் திருவடிகள் என்பது மரபு. அந்த ஞானம் எஞ்ஞான்றும் அழிந்து ஒழியாமை

பற்றி "*ஒய்விலாதன*" என்றார். இஃது அனுமான அளவை. இதன் உறுப்புக்கள் ஐந்தனுள் ''மேற்கோள்'' ''ஏது'' "எடுத்துக்காட்டு" என்ற மூன்றும் சிறந்தன. ஈண்டு, மேற்கோள், இறைவன் திருவடிகள் அழியாத இயல்பின என்பது. அதற்கு ஏது, அந்தத் திருவடிகளுக்கு உரிய இறைவன் என்றும் அழிவில்லாதவன் என்பது. இதற்கு எடுத்துக்காட்டு வேண்டும். அழிவின்மையும் யாண்டும் நிறைந்துள்ளமையும் ஆகிய இயல்புகளுள்ள இறைவனைப் பற்றிய செய்திக்கு அந்தப் பொருளின் வியாபகத்துக்கு உட்படாத பிறிதொரு பொருளைத்தானே எடுத்துக் காட்ட வேண்டும். ஈண்டு அஃதின்மையால் அளவை இலக்கணம் பிழைபடுமன்றோ? இத்தகைய இடங்களில் உடன்பாட்டு முகமாக எடுத்துக்காட்டு இயம்ப இயலாமையால் எதிர்முகமான எடுத்துக்காட்டை மேற்கொள்வர் அளவை நூலோர் ஆதலின் ஈண்டு ''உவமனில் இறந்தன'' என்று எதிர்மறை முகமாக மொழிந்தார்.

உடன்பாட்டு முகமான எடுத்துக்காட்டை "**அந்வய திருட்டாந்தம்**" என்றும் எதிர்மறைமுகமான எடுத்துக்காட்டை "**வெதிரேக திருட்டாந்தம்**" என்றும் வடமொழியில் வழங்குவர். இங்ஙனம் விளக்குவது கதிர்மணி விளக்கம்

உவமனில் இறந்தன - சிவபெருமான் திருவடிகளுக்கு அத்திருவடிகளே உவமை என்பது முன்னம் போற்றித் திருவகவல் (10 -ல்) ''மலரடி இணைகள்'' என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் கொண்டு தெளிக. ***உவமன்*** - உவமம் என்பதன் ஈறு திரிந்தது.

ஒண்மலர்த்தாள் - ஒண்மை ஞானமாகிய ஒளி.

மலர்த்தாள் தந்து - தாமரை மலர் போன்ற திருவடிகளை அருளி. இது திருவடி தீட்சை நல்கிய வரலாற்றுக்குறிப்பு.

நாயிலாகிய குலத்தினும் - நாய்களின் இனத்துக்கே உரிய இழி செயல்களினும். நாய் பற்றி முன்னம் சிவபுராணம் (60 -61) ல் ''நாய்'' என்றதன் கீழுரைத்தவை காண்க.

என்னை - எனக்கு. இரண்டாம் வேற்றுமை உருபு நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்த உருபு மயக்கம்.

நன்னெறி காட்டி - திருவடி தீட்சை செய்தபின் இறைவனை அடைவதற்கான சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நால்வகை வழிகளைக் காட்டி என்றவாறு. திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற பின் நம் அடிகள் திருக்கோயில் கட்டியது; மாகேசுர பூசைகள் நடத்தியது; தியானத்தில் இறைவனைக் கூடி இன்பத்தில் திளைத்தது; தாமே ஆனந்த வடிவமாக மாறியது ஆகிய சரித நிகழ்ச்சிகளை நினைக.

தாயில் ஆகிய இன்அருள் புரிந்த - தாயில் ஆகிய அருள்; இன்அருள் என்று பிரித்துக் கூட்டியுரைக்க. ***தாயில் ஆகிய அருள்*** - அன்னையிடத்து மகவின் பொருட்டுத் தோன்றும் அன்பு. இது, கைம்மாறு கருதாது செலுத்தப்படுவதால் உலகில் ஏனையோர் காட்டும் அன்பினும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் இந்த அன்பு இந்த ஒரு பிறவியுடன் அழியக்கூடியது. அன்பு செலுத்தப் பெற்ற மகவுக்குப் பிறப்பை ஒழிக்கும் ஆற்றலற்றது. ***இன் அருள்*** - இஃது இறைவன் உயிர்கள்மாட்டுக் காட்டுவது. பிறப்பை ஒழித்து நிலையான வீட்டின்பம் நல்கலால் **இன்அருள்** என்றார். எனவே இஃது அன்னை அன்பினும் சிறந்ததாகி "**இன்அருள்**" ஆயிற்று. இதை அறக்கருணை என்பது கதிர்மணி விளக்கம். ***புரிந்த*** - விரும்பிச் செய்த எனலுமாம்.

'' இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

(திருக்குறள் - 5)

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு ''விரும்புதல்'' ''எப்பொழுதும் சொல்லுதல்'' என இருபொருள்களைப் பரிமேலழகர் உரைப்பது காண்க.

நனி காணேன் - நனி என்னும் உரிச்சொல் காணுமைக்கு ஏதுவாகிய கால மிகுதியைக்குறித்து நின்றது. திருப்பெருந்துறையில் பிரிந்த பின் நீண்ட காலமாக மீண்டும் காணப் பெற்றிலேன் என்றவாறு. பிரிவுத்துன்பம் ஆற்றொணுமையால் பிரிந்துள்ள காலம் மிக நீண்டதாகத் தோன்றி வருத்துவதாயிற்று.

தீயில் வீழ்கிலேன் - பிரிவுத்துன்பம் தாங்காமல் நெருப்பில் வீழ்ந்து இறந்தேனல்லேன். தற்கொலை செய்து கொள்வோர் தீக்குளித்து இறத்தல் மிகவும் கொடிய தற்கொலை முறையாகும். உடல் முழுதும் நெருப்புச் சுட்ட புண்ணாகித் துன்பம் தாங்க முடியாமல் துடித்த பின்பே உயிர் நீங்கும்.

ஆதலின் இந்த வழியைத் தேர்ந்தெடுக்கத் தக்க மனவலியற்றவனுனேன் என்றவாறு.

திண் வரை உருள்கிலேன் - மலேயின் உச்சியினின்றும் கிழே குதித்து உருண்டு வீழ்ந்து உயிர் துறத்தல் தற்கொலே செய்து கொள்வோர் பின்பற்றும் மற்றெரு வழி. இது தீக்குளித்தலேப் போன்று அத்துணேத் துன்பம் தராது. தலே முதலிய முக்கிய உடலுறுப்புகளில் அடிபட்டதும் உடனே நினேவுமாறி உயிர் நீங்கி விடும். எனினும் அடிபட்டதன் வேகம் குறைந்திருக்கின் உடனே உயிர் நீங்காது வலியில் சில காலம் துன்புறுதலும் கை கால் போன்ற ஏனைய உடலுறுப்புகள் மட்டும் சிதைந்து துன்புறுதலும் நிகழும். ஆதலின் தீக்குளித்தலுக்குத் தேவையான மனத்திண்மை இதற்கு வேண்டுவதின்று. அந்தத் திண்மையும் தமக்கு இல்லேயாகலின் இம்முறையையும் தாம் பின்பற்றி இறக்கவில்லே என்று இரங்குகின்ருர்.

திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பில் இப்பகுதியை ''மலேகளின் உச்சியில் சுற்றித்திரிந்திலேன்" என்று பொருள் தரும்படி Wander not hills என்று மொழி பெயர்த்தார். மொழி பெயர்ப்பாளர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரல்லர்; ஆதலின் "**உருள்கிலேன்**" என்பதை ''உலாவுகிலேன்" என்று பிழையாகப் பொருள் செய்து கொண்டார் என்று தெரிகின்றது.

செழுங்கடல் புகுவனே - செழுமை; கடலின் மிகுந்த நீர்ப்பரப்புக்குறித்து நின்றது. கடலுள் வீழ்ந்து ஆழ்ந்தால் தண்ணீர் நுரையீரலுட் புகுந்து சிறிது நேரத்தில் மூச்சு முட்டி வீழ்ந்தார் இறந்து விடுவர். இது மேற் குறித்த இரண்டையும் விடத் துன்பம் குறைவாயுள்ள தற்கொலே வழி. இதை மேற்கொள்ள ஒரளவு மனவலி இருந்தால் போதும். தமக்கு அந்த அளவும் மனத்திண்மை இல்லே என்று கூறி இரங்குகின்ருர்.

புகுவேனே - ஏகாரம் எதிர்மறை குறித்த வினுப் பொருளில் வந்தது.

பிறந்ததின் பயனே முழுமையாக நுகர்ந்தாயிற்று என்று அமைதியுற்ற போதும்; இனி வாழ்தல் வீண் என்று முடிவு செய்த போதும் அறநூல்களில் விதித்த வண்ணம் தற்கொலே செய்து கொண்டு உயிர்விடுவர். அவர்களேத்

தற்கொலைப்பாவம் தொடராது என்பது நூல்கள் கூறும் விதி. அத்தகைய தற்கொலைகளுக்கான வழிகள் ''வடக்கிருத்தல்'' "தீப்பாய்தல்;" "வரையுருள்தல்" "கடலில் வீழ்தல்" போன்றவையாம். இவ்வாறு உயிர் நீத்தலைப் "**பிராயோபவேசம்**" என்பர் வடமொழியாளர்.

இங்ஙனம் உயிர் நீத்தோரை நம் அடிகள் கீர்த்தித்திருவகவல் 132 முதல் 137 வரையுள்ள அடிகளில் குறிப்பிட்டார். நம் போன்றோர் உய்யும் பொருட்டு நம் அடிகள் இன்னும் சில காலம் இந்த நிலவுலகில் வாழவேண்டும்; திருவாசகமும் திருக்கோவையாரும் வெளி வர வேண்டும்; பௌத்த சமயம் நிராகரிக்கப்பட வேண்டும் என்று இறைவன் திருவுள்ளம் கொண்டான். ஆதலின் அடிகளை ஏனையோருடன் சோதியில் புகுதல் வேண்டா எனவும் தில்லைக்கு வரும்படியும் பணித்தான். ஆதலின் அடிகள் சோதியில் புகவோ அல்லது ''பிராயோபவேசம்'' செய்து கொள்ளவோ இயலாதவரானர். ஆனல் அடிகள் இறைவன் தம்மை அவ்விதம் பணித்ததற்குக் காரணம் தம்தீவினையே என்று முன்பாட்டிற் கூறினர். அந்தத் தீவினையின் காரணமாகத்தாம் பிராயோபவேசம் செய்து கொள்ளத்தக்க மன வலிமை இல்லாதவனுனேன் என்று இந்தப்பாடலில் கூறி இரங்குகின்ருர்.

41 -ம் திருப்பாடலில் நம் அடிகள் இறைவன் திருவடிகளைப்பிரிந்த அணிமை தோன்றப் "பாத நன்மலர் பிரிந்திருந்தும்" என்றருளினர். 42-ம் திருப்பாடலில் அவ்வாறு பிரிந்திருந்தாலும் மீண்டும் கூடலாமே; பிரிந்து நெடுங்காலமாகியும் கூடவில்லையே என்பார் ''குறுகிலேன் நெடுங்காலம்'' என்று குறிப்பிட்டார், இந்தத் திருப்பாடலில் காலம் மிக நெடிதாகியும் இன்னும் காணப்பெற்றிலேனே என இரங்குவார் ''தலைவனை நனிகாணேன்'' என்று கூறியருளினர்.

இத் திருப்பாடலில் நம் அடிகள் இறைவனைப் பிரிந்த துன்பத்தால் தீப்பாய்தல் முதலியவற்ருல் உயிர் நீத்தேனல்லேன் என்பதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்ரும்; இறைவன் திருவடிக்காட்சி இடையருது நிகழ்வதே உயிர்த் தூய்மைக்கு இன்றியமையாதது என்று கருதப்படுவதால் பதிகம் நுதலிய "**ஆத்தும சுத்தி**" பெற்ரும்.

44. வேனில் வேள்கணை கிழித்திட
மதிசுடு மதுதனை நினையாதே
மானி லாவிய நோக்கியர்
படிறிடை மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள்
புரிந்தவென் சிவனகர் புகப்போகேன்
ஊனி லாவியை யோம்புதற்
பொருட்டினு முண்டுடுத் திருந்தேனே
சO

(இ - ள்)

தேன் போன்ற இனிய சுவையுடைய திருவருளை இடைவிடாது விரும்பி அருளிய என் சிவபெருமானின் உலகத்துள் நுழையச் செல்லாதவனாகி; இளவேனிற் கிழவனாகிய காமவேளின் மலரம்புகள், என் உள்ளத்தைக் கிழிக்கவும்; அந்தப் புண்ணில் வெண்கதிர்ச் செல்வன் சுடுகின்ற, மாறுபட்ட, அந்தத் துன்பத்தையும் நினையாமல்; மானின் விழி போன்ற விழிகளுள்ள மகளிரின் வஞ்சகத் தொழில்களின்கண் மத்தினாற்கடையப்படும் தயிரைப் போன்று கலக்குண்டு, ஊனுடம்பினிடத்து உயிரை நிறுத்தி இன்னமும் பேணுதற் பொருட்டு நல்லுணவுகளை உண்டும், நல்லாடைகளைத் தரித்தும் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றேனே என்று இரங்கியவாறு.

(வி -ரை)

மூன்றும் அடியை முதலில் வைத்து இத் திருப்பாடலுக்குப் பொருள் செய்க.

தேனிலாவிய திருவருள் புரிந்த என் சிவன். தேன் - ஆனெய், கற்கண்டு ஆகியவற்றை விட எளிமையானதும் இன் சுவை பயப்பதுமாகிய தேனின் இயல்பை 43-ம் திருப்பாட்டில் விளக்கினும். தேன் ஈண்டுத் தேனின் பயனாகிய மதுரச் சுவை பயப்பதற்குப் பயன் பற்றி வந்த உவமையாகித் திருவருள் நல்கும் இனிமைக்கு எடுத்துக்காட்டாயிற்று. *திருவருள்* - தேன் தன்னுட்பெய்த உண் பொருளைக் கெட்டுப் போகாமல் நெடுங்காலம் பாதுகாப்பது போலத் திருவருளும் தன் வியாபகத்துள் அடங்கி நிற்கும்

ஆன்மாவைப் பாசத்தாற் பிணிக்கப்படாது காத்தோம்புகின்றது நினைக. ***புரிந்த*** - இடைவிடாது விரும்பிச் செய்த. 43-ம் திருப்பாடலில் ''புரிந்த'' என்றதன் கீழுரைத்தவை பார்க்க. ***என் சிவன்*** - திருப்பெருந்துறையில் தம்மை அடிமையாகக் கொள்வதற்கு வலிய எழுந்தருளித் திருவருள் பாலித்த உரிமை பற்றி "***என் சிவன்***" என்றார். ''சிவன்'' பற்றி முன்னம் சிவபுராணம் (12-ல்) ''சிவன்'' என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

நகர் புகப்போகேன் - ***நகர்*** - சிவலோகம். திருக்கயிலை புகப் போதல். சிவலோகத்துக்குச் செல்வதற்கான செந்நெறிச் செலவை மேற்கொள்ளுதல். **போகேன்** - போகேனாகி. முற்றெச்சம். இஃது ஈற்றடியிலுள்ள "**இருந்தேன்**" என்ற வினையைக் கொண்டு முடியும்.

வேனில் வேள் கணை கிழித்திட. வேனில் வேள் - காமன். காமவேள் முருகவேள் என்ற இருவரில் செவ்வேட் பரமனினின்றும் பிரித்துணர்த்த "***வேனில் வேள்***" என்றார். பிறிதினியை நீக்கிய விசேடணம் ***வேனில்*** - இளவேனிற் காலம். இது காமனின் தொழில் உச்சநிலையில் ஆட்சி புரியும் காலம். **வேள்** - விரும்பப் பெறுபவன் ; விருப்பத்தைச் செய்பவன். ***கணை*** - மலரம்புகள். மன்மதனின் அம்புகள் ஐந்து. அவை செந்தாமரை, அசோகு, மா, மல்லிகை, கருங்குவளை என்பன.

கிழித்திட - இறைவன் மாட்டு உருகாத தம் மனத்தை முன்னம் 41-ம் திருப்பாடலில் ''கல்'' என்றார். கல்லின் மீது எஃகினாற் செய்த அம்புதாக்கினும் அம்பின் முனை சிதைந்து வீழும்; கல் ஊறுபடாது. ஆயினும் அந்தக் கல்லின் மீது ஈண்டு மெல்லிய மலரம்புகள் தாக்கியதும் கல் பிளவு பட்டது என்றார். இறைவன் மாட்டுக் கல்லாயிருந்த மனம் பெண்ணாசையுற்ற ஞான்று மலர்களாலே பிளவுபடும் அளவு புல்லியதாயிற்று என்று இரங்கியவாறு.

மதி சுடும் - நிலாவின் கதிர்கள் மிகவும் தட்பமானவை. காம நோயுற்றார் மனத்துக்கு அந்தக் குளிர்ச்சி நெருப்பைப் போன்று சுடுவதாகயுள்ளது என்றவாறு. திருவருளின் கவசம் இன்றாயின் காமனின் மலரம்புகளும் மதியின் கதிர்களும் இளையோரை என்ன பாடுபடுத்தும் என்பதை நம்பியாரூரர் பரவையம்மையார் மாட்டு நடந்த நிகழ்ச்சிகள் நன்கு காட்டும். அவை;

திருச்சிற்றம்பலம்

"தந்தி ருக்கண் ணெரிதழ விற்பட்டு
வெந்த காமன் வெளியே வுருச் செய்து
வந்தென் முன்னின்று வாளி தொடுப்பதே!
எந்தை யாரரு ளிவ்வண்ண மோவென் பார் (164)

" ஆர்த்தி கண்டுமென் மேனின் றழற்கதிர்
தூர்ப்ப தேயெனைத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்க நெடுங்கங்கை நீண்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலை தண்மதி (165)

"கந்தங் கமழ்மென் குழலீ ரிதுவென்?
கலைவாண் மதியங் கனல்வா னெனையிச்
சந்தின் றழலைப் பனிநீ ரளவித்
தடவுங் கொடியீர் தவிரீர்! தவிரீர்!
வந்திங் குலவுந் நிலவும் விரையார்
மலயா னிலமு மெரியாய் வருமால்
அந்தண் புனலு மரவும் விரவுஞ்
சடையா னருள்பெற் றுடையா ரருளார் (175)

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - தடுத்தாட் கொண்ட புராணம்)

என்பனவாம்.

ஈண்டு நம் அடிகள் மலரம்புகளால் பிளக்கப்பட்ட மனப்புண்ணுள் மதியின் கதிர்களாகிய நெருப்பு நுழைந்து சுட்டது என்று துன்பத்தின் மிகுதியை உச்சநிலையிற் காட்டிய புலமை நயம் காண்க.

அது நினையாதே - மகளிர் காமனின் சேனை என்பதை எண்ணாமல் எனலுமாம்.

மான் நிலாவிய நோக்கியர் படிறிடை - காமனின் மலரம்புகளுக்கும் நிலாவின் கதிர்களாகிய நெருப்புக்கும் அஞ்சி இள

மகளிரைப் புகலடைந்தேன் என்றவாறு. மானின் கண்கள் போன்ற சாயல் நிலவிய கண்களேயுடைய இளமகளிர். **படிறு** - வஞ்சகம். இம்மகளிரின் கண்கள் வெளித்தோற்றத்தில் மானின் கண்களேப் போன்று மருண்ட நோக்குடையன. ஆனல் தம் மாட்டு இளேஞரை வலிந்து ஈர்த்து அவர்கள் சீலத்தையும் செல்வத்தையும் கவர்ந்து கொண்டு நோய்களேயும் நரக வாழ்வையும் தருதலின் படிறு என்ருர். **நோக்கியர்** - என்றதால் அவர்கள் பார்வை என்பது பெற்ரும். **மானுலாவிய** - மான்போன்ற. உவமஉருபு தொக்கது. **படிற்றிடை** - என்றதன்பின் ''பட்டு'' என்ெருரு சொல் வருவித்து **நிீனயாதே** என்ற எச்சத்துடன் கூட்டி **புகப்போகேன்** என்றதற்கு முடிவாக்குக.

மானுலாவிய - என்பதும் பாடம்.

மத்திடு தயிராகி - கடையப்படும் தயிர் எவ்வாறு மத்திஞல் கீழும் மேலும் சுற்றிலும் முன்பாகவும் பின்பாகவும் கலக்கப்படுகின்றதோ அவ்வாறு கலக்குண்டு. துன்புற்று.

கடையப்பட்ட தயிர் தன் உடைமையாகிய வெண்ணெயை நீங்கித் தன் இயல்பு கெட்டுப் பெயரும் இழந்து மோர் என்ற பெயர் பெறுவது போன்று வஞ்சக மகளிர் மயக்கில் வீழ்ந்த இளேஞரும் தம் செல்வத்தைப் பரிகொடுத்து மனத்திண்மை கெட்டு உலகியல்புகழை இழந்து கீழ் மக்கள் என்ற பெயரும் பெறுவர் என்றவாறு.

ஈண்டு, நம் அடிகள் கூறியவை நம் போன்ற சாதாரண மக்களிடை ஆங்காங்குக் காணலுறும் மகளிராசையாகிய குற்றத்தைக் கண்டு வருந்தி அதைத் தம் மேலேற்றிக் கொண்டு நாமுய்யுமாறு அருளிச் செய்ததாகும்.

இதற்கு இவ்வாறன்றி; நம் அடிகள் அமைச்சராயிருந்த காலத்தில் திருமணம் புரிந்து கொண்டு. இல்வாழ்வில் ஈடுபட்டிருந்தார் என்றும் அந்தத் திருமணமும் அவர் திருப்பெருந்துறைக்குப் புறப்படச் சிறிது காலத்துக்கு முன் நிகழ்ந்ததென்றும் தம்மை இன்றியமையா திருக்கும் இளம் மீனவியை நீத்து அடிகள் இறைவனுடன் செல்ல மாட்டாதவராய் வருந்திக் காமங்காரணமாக அருளியது போன்று அன்பிஞல் அருளிச் செய்தார் என்றும் திருப்பெருந்துறையில் இறைவன் ஆட்கொண்டு தில்லேயில் வருக என்றருளியபின் நம் அடிகள் திருவாதவூரில் தம் இளம் மீனவியாருடன்

வாழ்ந்திருந்து இறைவன் திருவருட் பேற்றை அவருக்கும் உணர்த்திப் பின் தில்லை சென்றார் என்றும் அம்மையாரும் அமைதியுற்று நம் அடிகளையும் சிவபெருமானையும் வழிபட்டிருந்து வீடு பேறடைந்தார் என்றும் உய்த்துணர வேண்டும்; என விபரீத ஆராய்ச்சி செய்து முடிவு காண்பாருமுண்டு. பின்னால் ''அன்னைப்பத்து" அருளியுள்ளதால் நம் அடிகளுக்குப் பெண் மகவு ஒன்றிருந்தது என்பாருமுளர். அது பற்றி அப்பகுதி உரையில் ஆய்வோம்.

நல்ல வேளையாக இவ்வாராய்ச்சியாளர்கள் நம் அடிகள் "**நோக்கியர்**" என்று பன்மையில் கூறியதால் இளம் மகளிர் பலரை மணந்திருந்தார் என்றும், ''படிற்றிடை" என்றதால் அவ்விளமகளிர் அனைவரும் விதிப்படி மணந்த மனைவியர் அல்லர்; சேரிப்பரத்தையராவர் என்றும் தங்கள் ஆய்வை மேலும் விரிவாக்கி முடிவு கண்டிலர். இக்குறையைப் பின்னர் வந்த ஆய்வாளர் ஒருவர் 131 -ம் திருப்பாடலுக்குத் தாம் வகுத்த உரையில் நிறைவு செய்கின்றார்! அவர் விளக்கத்தை அப்பாடல் உரையிற் காட்டுதும்.

நம் அடிகள் வரலாற்றை இரண்டு திருவிளையாடற் புராணங்களும் திருவாதவூரர் புராணமும் விளக்கமாகக் கூறுகின்றன. அவற்றுள் யாண்டும் நம் அடிகள் மனைவியுடன் மகிழ்ந்து இல்லறம் நடத்தியதாகக் காண்கிலம் மாறாக முதலமைச்சர் பதவி முதலியவற்றிலும் பற்றின்றி எப்பொழுது ஆலமுண்டான் அடிகளை நண்ணுவோம் என்ற நினைவுடனே பணியாற்றிதாகக் காண்கின்றோம். இவ்வுண்மையை;

'' கள்ளக் காதல னிடத்தன்பு கலந்துவைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோ லும்பரைக் காப்பான்
பள்ளக் காரியுண் டவனிடத் துள்ளன்பு பதிந்து
கொள்ளக் காவல னிடைப்புறத் தொழிலுமுட் கொண்டார்.

(பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் - 17)

என்ற சொல்லோவியத்திற் சுவைக்க.

இவையெல்லாம் நம் அடிகள் காலத்துக்குப் பன்னூறு ஆண்டுகளின் பின் தோன்றிய புராணக் கதைகள். இவற்றில் புலவர்களின் கற்பனை வளமே மிகுந்துள்ளமையால் வலிய சான்றுகளாகா எனின் ;

நம் அடிகள் காலம் மூன்றும் நூற்றுண்டின் பிற் பகுதி என்பது முன்பு கண்டோம். இப்புராணங்கள் எல்லாம் சுமார் பதினேழாம் நூற்றுண்டின என்பது உண்மையே. பழுத்த தமிழ்ப் புலமை மலிந்த பாண்டிய நாட்டில் இடைப்பட்ட இந்த ஆயிரத்து நானூறு ஆண்டுகளாகப் பரம ஆசாரிய மூர்த்திகளாகிய நம் அடிகள் வரலாற்றை ஒருவர் கூடப் பாடவில்லை என்பது ஏற்புடைத்தாக இல்லை. பல புராணங்கள் தோன்றிக் காலப் போக்கில் மறைந்தன என்பதே பொருத்தமாகும். அவற்றிற்கண்ட சரிதக்குறிப்புக்களையும் செவிவழிச் செய்திகளையும் கொண்டே இப்போதுள்ள புராணங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றிற்கண்ட செய்திகளை மறுக்க வேறுவலிய சான்றுகள் இருந்தால் மட்டுமே நாம் புராணச் செய்திகளைக் கைவிட இயலும். மாருக எந்தச் சான்றுகளுமில்லாமல் தங்கள் கற்பனை வளத்தால் வரலாறு இவ்வாறு தான் இருந்திருக்கும் என்று உய்த்துணர்ந் தோதுவார் முடிவுகள் ஒதுக்கத்தக்கனவே.

அவை சரி; ஆனுல் நம் அடிகள் வாக்கிலே வந்துள்ள உண்மைகளை அவர் சரிதத்துக்கு அகச்சான்ருகக் கொள்ளாமல் பிறர் குற்றங்களைத் தம்மேல் ஏற்றிக் கொண்டு பாடினுர் என்பதை எவ்வாறு மரபாகக் கொள்வம் எனில், கூறுதும்.

திருச்சிற்றம்பலம்

'நினையா தொழிதிகண் டாய்நெஞ்ச
மே யிங்கோர் தஞ்சமென்று
மனையா ளையும் மக்கள் தம்மையுந்
தேறியோ ராறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்பன்நந்
தாதைநொந் தாதசெந்தீ
அனையா னமரர் பிரானண்ட
வாண னடித்தலமே

திருச்சிற்றம்பலம்

(காரைக்காலம்மையார் - திருவிரட்டைமணிமாலை - 13)

இந்தத் திருப்பாடல் உலகர் குற்றத்தைத் தம்மேல் ஏற்றிக் கொண்டு பாடப்பட்டதா? அன்றி அம்மையாரின் சரிதத்துக்கு அகச்சான்ருக

அமைந்துள்ளதா? அகச்சான்ருயின் பெண் பாலராகிய அம்மையாருக்கு மனைவி எவ்வாறு இருந்திருக்க இயலும்?

எனவே, பயனற்றதும், கேடு விளைவிப்பதுமாகிய இத்தகைய ஆய்வுகளை விடுத்துத் திருவாசகத்தின் உள்ளக் கிடக்கையை உணர முயல்வோமாக.

ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டு* - *ஊனில் - ஊனுடம்பில். நித்தியப் பொருளாகிய உயிரை ஓம்ப வேண்டுமாயின் நித்தியப் பொருளாகிய பதியின் திருவடி நிழலில் அதனை இருத்தத் தவமுயல்தல் வேண்டும். அவ்வாறன்றி அழியும் மாலையதாகிய உடம்பில் அதை இருத்தி ஓம்பமுயலுதல் அறிவுடைமையன்று என்றவாறு. ***ஊன்றில் ஆவி*** - ஆணவமலமாகிய குற்றம் நிற்கின்ற உயிர் எனலுமாம். அந்தக் குற்றமும் உயிர் முழுவதும் பரவியிருத்தலின் ***ஊன் நிலாவிய ஆவி*** என்ருர் எனலுமொக்கும்.

ஊனுலாவிய - என்பதும் பாடம்.

ஓம்புதற்பொருட்டு - பாதுகாத்து வளர்த்தற்காக.

இனும்உண்டு உடுத்து இருந்தேன் - முன்னைத் திருப்பாட்டில் கூறியாங்கு பிராயோபவேச முறைகளால் துஞ்சாவிடினும், இந்த உடல் இயல்பாகவேனும் மரணத்தால் அழிந்தொழிந்து விடாமல் அதை ஓம்புதற் பொருட்டுச் சத்துள்ள உணவுகளை ***உண்டும்*** குளிர் முதலியவற்ருல் ஊறுபட்டொழியாமைப் பொருட்டும் அணி செய்தற் பொருட்டும் ***உடுத்தும் இருந்தேன்*** என்று இரங்கியவாறு.

ஈண்டு;

'' கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியும் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியும் துயரும் விடாய்படக் கூற்றுவ னூர்க்குச் செல்லும்
வழியும் துயரும் பகரீர்! பகரீர்! மறந்தவர்க்கே

(கந்தரலங்காரம் - 56)

எனவரும் அருணகிரிநாதர் திருவாக்கு நினைக.

இனும் - இன்னும். இன்னும் ஓம்புதற் பொருட்டு; இன்னும் இருந்தேன் என ஈரிடத்தும் கூட்டியுரைக்க.

உண்டு உடுத்து - உண்டும் உடுத்தும் என எண்ணும்மைகள் விரித்துக் கொள்க. **உண்டு** - சத்தான உணவை உண்பதால் உடல் செழிக்கும். **உடுத்து** - பகட்டான ஆடைகளை அணிவதால் உடம்பின் தோற்றம் பொலிவுறும். இவை இரண்டும் வஞ்சகமுள்ள இளமகளிரை ஈர்ப்பனவாம். அது செந்நெறிச் செலவுக்குத் தடையாகும். **உண்டு உடுத்து** - இச்செயல்கள் பிராரத்த வினை நுகர்ச்சியையும் இருத்தல் அவ்வாறு நுகர்ந்துகொண்டு இருக்கும் பொழுதே ஆகாமிய வினைகளை ஈட்டிக் கொள்வதையும் குறிப்பாலுணர்த்துவது நுணித்தறிக. *ஏ* - ஈற்றசை. இந்த ஏகாரத்தைப் பிரித்துப் **பொருட்டு** என்பதுடன் புணர்த்துப் "**பொருட்டே**" எனலுமாம்.

இத் திருப்பாடலில் மத்துறு தயிர் போலக் கலக்குண்டு ஊனில் ஆவியை ஓம்புதல் கடியப் படுவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும்; சிவனகர் புகப் போகும் தவத்தில் முனைய வேண்டும் என்ற குறிப்பால் பதிகம் நுதலிய "***ஆத்தும சுத்தி***" பெற்றும்.

ரு. கைம்மாறு கொடுத்தல்.

''***கைம்மாறு கொடுத்தல்*** " என்பது நமக்கு ஓர் உதவி செய்தார் மாட்டுச் செய்ந்நன்றிக் கடனாக உதவுதல் என்னும் பொருளதாம். முன் பதிகத்தில் உயிரின் தூய்மைக்கு மனம் மொழி மெய் ஆகிய மூன்றாலும் சிவத் தொண்டு புரிதல் வேண்டும்; அவற்றுள்ளும் மனத்தாற் செய்யப்படும் தொண்டு தலையாயது என்பது கண்டாம். சிவத் தொண்டினால் வினை மாசு கழுவப்பட்டுத் தூய்மையுற்ற உயிர்க்கு ஆலமர் அண்ணல் ஆசாரியனாக எழுந்தருளி, ஞானத்தை நல்கி, இன்பவடிவான தன் அருளமுதைத் துய்க்கச் செய்வன். தீவண்ணன் திருவடிக் காட்சியில் உயிர் திளைந்திருக்கும். உயிருக்குத் தொல்லை வினையின் தொடர்ச்சியால் அந்தக் காட்சி ஒரொரு சமயம் மறையும். அந்த நிலையில் எல்லையற்ற பேரின்பத்தில் தன்னைத் திளைக்கச் செய்த சிவபரஞ்சுடருக்குத் தான் செய்யக்கூடிய கைம்மாறு யாது என்று உயிர் சிந்திக்கும். இன்ப வடிவான இறைவன் ஆட்பட்ட ஆன்மாவின் உடல் பொருள் ஆவி மூன்றையும் தான் முன்பே எடுத்துக் கொண்டான்; எனவே காள கண்டனுக்குக் கைம்மாறாகக் கொடுக்க ஆன்மாவிடம் அதன்

உடைமையாக ஒன்றும் இல்லை. எனினும் அவன் செய்த அருளுதவியை மறவாமல் அவன் அருள் வழி நின்று அவனை அடைவதாயின் அதை ஒருவாறு கைம்மாருகக் கொள்ளலாம். அங்ஙனம் நின்று அடையாமைக்கு வருந்துவதே இந்தப் பதிகத்தில் பகரப் படுகின்றது.

கலிவிருத்தம்

45. இருகை யானையை யொத்திருந் தென்னுள்ளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே

(இ - ள்)

விண்ணுலக வாசிகளுக்கு ஒப்பற்ற ஒரு முதலே! நான், இரண்டு துதிக்கைகளையுடைய களிற்றைப் போல உயிர் வாழ்ந்திருந்து என் நெஞ்சினுள்ளே ஒளிரும் மூலப் பொருளாகிய உன்னை உணர்ந்தேனல்லேன்; துன்பத்தையே கண்டேன்; எனினும் எனக்கு நின் திருவடிக் காட்சி நல்கி, ''வருக" என்று கட்டளையிட்டனை; அதன்படி வருவதற்கு ஆற்றலற்றவனுனேன்; மீண்டும் பொறி வழியே புலனுகர்ச்சியில் ஈடுபடுவதற்கே ஆற்றலுள்ளவனுகின்றேன்; அதனுல் நீ செய்த உதவிக்குக் கைம்மாறு கொடுக்கும் ஆற்றலற்றவனுனேன்.

(வி - ரை)

இத் திருப்பாடலில் ''வானுளோர்க் கொருவனே!" என்பதை முதலில் வைக்க; அதன் பின் ''யான்" என்பதைப் புணர்க்க; பின்னர் முதலிரண்டடிகளையும் அவற்றைத் தொடர்ந்து ''கிற்றிலேன் கிற்ப னுண்ணவே" என்பவற்றையும் அமைத்துப் பொருள் செய்க.

வானுளோர்க்கு ஒருவனே - வான் உளோர் - பூவுலகுக்கு மேல் வைகுந்தம் வரையுள்ள உலகங்களில் வசிக்கும் தேவர்கள் முதல் திருமால் முடியவுள்ளவர்கள். அவர்கள் பசு புண்ணியங்களை மிகுதியாகச் செய்தவர்களாதலின். புண்ணியம் பாவம் இரண்டையும் செய்த பூவுலக

வாசிகளேயும் பாவம் மிகுதியாகச் செய்த நரகவாசிகளேயும் விட இறைவனுக்கு அணுக்கமாக வுள்ளனர் என்றவாறு. **ஒருவன்** - முன்னம் திருவண்டப்பகுதியில் *(43)* ''ஒருவன்'' என்றதன் கீழுரைத்தவை காண்க.

யான் இருகையானையை ஒத்திருந்து. இருகையானை - இல்பொருளுவமம்.

யானை பருத்த உடலும் பேருணவும் கொண்டது. அந்த உணவைத் தன் துதிக்கையால் வாரி வாரி உண்ணும். அத்தகைய யானைக்கு இரண்டு துதிக்கைகள் இருக்குமாயின் எவ்வாறு மிகுதியாக உண்ணுமோ அவ்வாறு யான் மிகுதியாகப் புலன்களால் உலகியற் பொருள்களை நுகர்கின்றேன்.

யானை தன் ஒருகையையே சுவாசிக்கவும், மோப்பம் காணவும் உணவுண்ணவும், வேறு தொழில்களை செய்யவும் பயன்படுத்திக் கொள்கின்றது. எனக்கு இரண்டு கைகள் இருப்பினும் அவற்றைச் சேர்த்து உன்னை வணங்கப் பயன்படுத்துகின்றேனல்லேன்; மாருக உணவைத் தேடவும், பிறபோகங்களின் நுகர்ச்சிக்காகப் பொருள் தேடவும் பயன்படுத்திக் கொள்கின்றேன் என்று இரங்கியவாறு.

இருகையானை - என்றது விலங்கினின்றும் வேற்றுமை கூறியதாகக் குறிப்பர் திரு. முதலியாரவர்கள்.

இருகையானை - இருமை - பெருமை. அது ஞானேந்திரியமாகிய நாசி கன்மேந்திரமாகிய கை என இரண்டு இந்திரியங்களுமாகத் துதிக்கை ஒன்றே பயன்படுவது. ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் குறைவறப் பெற்றிருந்தும் தவமுயன்று நின்னை அடைகிலேன் என்பது குறிப்பு; எனலுமாம்.

இனி, இதற்கு இவ்வாறன்றி இருகையானையை மானிடச்சட்டை தாங்கிக் குருவடிவில் வந்து ஆட்கொண்ட சிவபெருமானைக் குறிப்பதாகக் கொண்டு சாமுத்திரிகா இலக்கணப்படி அமைந்த ஆடவரின் உடலுறுப்புக்களில் கையை யானையின் துதிக்கைக்கு உவமையாக்கி இரண்டு துதிக்கைகளையுடைய யானை போன்ற உன்னையே தியானம் செய்து சிவோகம் பாவனையால் நானும் உன் வடிவமாக மாறி - என்பர் திரு. பாரதியாரவர்கள்.

ஆடவரை யானைக்கும் அவர்கள் கைகளை யானையின் துதிக்கைக்கும் ஒப்பிடுவதை;

திருச்சிற்றம்பலம்

கடுவிசை முடுகிப் போகிக் களிற்றொடும் பாகர் வீழ்ந்த
படுகளங் குறுகச் சென்றான் பகைப்புலத் தவரைக் காணான்
விடுசுடர் மழுவொன் றேந்தி வேறிரு தடக்கைத் தாய
அடுகளி றென்ன நின்ற வன்பரை முன்பு கண்டான்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - எறிபத்த நாயனார் புராணம் - 34)

என்று சேக்கிழார் பெருமான் செப்புவதாலறிக.

இச் செய்யுளின் ஆங்கில மொழியாக்கத்தின் கீழ்க் கொடுத்துள்ள அடிக்குறிப்பில் An elephant with two trunks would be utterly lost; So I, serving two masters the heavenly master and the sense world என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலுள்ளவாறு இறைவன் திருத்தொண்டுக்கு ஒரு கையும் புலன்களின் தொண்டுக்கு ஒரு கையும் என்ற கருத்து மூல பாடத்தில் இல்லை. இறைவனுக்குத் தொண்டு செய்யாது புலனுகர்ச்சியிலேயே ஈடுபடுவதாகத்தான் நம் அடிகள் கூறியுள்ளார்.

யான் என் உள்ளக் கருவைக் கண்டிலேன் - சிவோகம் பாவனையால் என் உள்ளத்தில் நினைவைச் செயற்படுத்தும் சிவபெருமானைக் கண்டேனல்லேன்.

உள்ளக்கரு - உள்ளத்தின் செயல் நினைப்பு. ஆன்மாவைத் தன் உடலாகக் கொண்ட அவிர்சடையான் அதன் உள்ளத்தின் உள்ளே நின்று நினைக்கச் செய்கின்றான். ஆதலின் அவனை உள்ளக்கரு என்றார். இவ்வுண்மையை ;

திருச்சிற்றம்பலம்

துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப்படுத் தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங்காட்டெம் மடிகளே

(திருமுறை 1 - 45 - 1)

''வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்ருன் றன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடற் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 19 -8)

என்பவற்ருலறிக.

உள்ளக் கருவாகிய நின்னைக் கண்டிலேன் என்க. முன்னிலைக்கண் படர்க்கை வந்த மயக்கம்.

கண்டது எவ்வமே - "எவ்வமே கண்டது" என்று மாற்றிக் கொள்க. **எவ்வம்** - துன்பம். **கண்டது** - அனுபவித்தது.

பூவுலகில் உயிர்கள் இன்பம் துன்பம் ஆகிய இரண்டும் கலந்த பிராரத்த வினைப்பயனை நுகரும். ஈண்டு, இன்ப நுகர்ச்சி பசு புண்ணியங்களின் பயனுக வருவதாம். அந்த நுகர்ச்சியில் ஆகாமியம் ஏறிப் பிறவியிற் செலுத்துவதால் உயிருக்குத் துன்பம் தருவதேயாகும். ஆதலின் **கண்டது எவ்வமே** என்று பிரிநிலை ஏகாரம் புணர்த்தோதினுர்.

வருக என்று எனைப் பணித்தனை - தவமுயற்சியில் ஈடுபட்டு நின்னைக் காண முடியாது புலனுகர்ச்சியில் ஈடுபட்டு இழிந்த யான் உன்னை யடையத் தகுதியற்றவன். எனினும் உன் பேரருளினுல் இந்த மண்ணுலகுக்கு இறங்கி வந்து என்பாலணைந்து என்னை நின்னிடம் வரும்படி கட்டளையிட்டாய் என்றவாறு.

கிற்றிலேன் - அவ்வாறு வரும் ஆற்றலில்லேன்.

கிற்பன் உண்ணவே - "உண்ணவே கிற்பன்" என்று மாற்றுக. புலன்களின் வழியே சென்று உலகியற் போகங்களை நுகர்வதற்கு மட்டும் ஆற்றலுள்ளவனுவேன் என்றவாறு.

உண்ணவே - என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம். உண்ண என்பதை உணவு என்று கொண்டு சுவையாக உண்பதில் மட்டுமே ஆற்றலுடையவன் என்றுரைத்தாரும் உண்டு. அஃதும் போக நுகர்ச்சியுள் ஒன்றுதல் நினைக.

"உள்ளக்கருவாகிய நின்னைக் காணத் தவமுயலேன்" என்று இரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். "வானுளோர்க்கு ஒருவனான நீ என்னை வருக என்று கூறிய பேரருளுக்காக நினக்குக் கைம்மாறு செய்ய ஆற்றலற்றவனாக உள்ளேன்" என்றதால் பதிகம் நுதலிய "***கைம்மாறு கொடுத்தல்***" பெற்றும்.

46. "உண்டொ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே" சஉ

(இ -ள்)

ஒரு சிறந்த முதற்பொருள் அழிவற்றதாக உள்ளது என்று பொது வகையில் உணரும் அடியவர்கள் அனைவருக்கும், அந்தப் பொருள் பெண்ணோ ஆணோ அலியோ என்று துணிந்து அறிய இயலாத இயல்பில் இருக்கின்றாய்; அடிமையாகிய எனக்கு இயல்பில் இருந்தவாறு எழுந்தருளிவந்து காட்சி நல்கினாய்; அங்ஙனம் அருளிய உன் உண்மை இயல்பைக் கண்டிருந்தும் காணாதவனானேன்; இஃதென்ன? கண்மயக்கமோ? என்றவாறு .

(வி -ரை)

இத்திருப்பாடலை ஆற்றொழுக்காகப் பொருள் செய்க.

ஓர் ஒண் பொருள் - ஓர் - ஓர் என்பதன் குறுக்கல் விகாரம். ஒப்புடையதும், உயர்வுடையதும் என மற்றொன்றை இல்லாதது. முன்னம் திருவண்டப்பகுதி *(43-ல்)* ''ஒருவன்" என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க.

ஒண் பொருள் - ஒண்மை - இயற்கையுணர்வினனாதல் முதலிய எண்குணங்களையும் குறித்து நின்றது. பேரொளி மயமானது என்க.

உணர்வார்க்கு எலாம் - அகம் புறம் என்ற இரண்டிலும் ஒத்த நிலையில் மாற்ற மனங்கழிய நிற்கும் பரம்பொருள் மெய்யுணர்வுக்கு மட்டும் நேர்படும்; பிறவாற்ருல் அதனை அறிய இயலாது என்றவாறு.

பெண்டிர் ஆண் அலி என்று அறியொண்கிலை - மெய்யுணர்வால் இறைவன் இயல்பை உணர்ந்த அடியவர்க்கும் அப்பொருள் உயர்திணைப் பெண்பாலோ உயர்திணை ஆண்பாலோ அஃறிணை அலியோ அஃதிணையில் உயிருள்ள ஒன்ருே அன்றி உயிரற்ற சடப்பொருளோ என்று தம் அறிவு கொண்டு வரையரை செய்து அறிய இயலாதவனுக உள்ளாய்! அவ்வாறு அறிந்து கூற இயலாததால் "***பொருள்***" என்று கூறியருளினுர்.

பெண்டிர் - பெண்டு என்பதன் போலி.

பெண் - இஃது ஈண்டு இறைவனின் எண்குணங்களில் ஒன்ருன பேரருளைக் குறித்து நின்றது. அம்பிகை அதன் உருவகம். அம்பிகையும் இறைவனும் குணமும் குணியுமாகப் பிரிக்க இயலா நிலையினர். அருளே ஆன்மாவை அழைத்துச் சென்று சிவத்துடன் சேர்ப்பதாகலின் பெண்ணை முதலிற் கூறினுர். முன்னரும் சிவபுராணம் (18-ல்) "அவனருளாலே அவன்ருள் வணங்கி" என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

ஆண் - திருவருளாகிய பேரருளினுல் ஆன்மா சென்று சேருமிடம் சிவன் ஆதலின் பெண்ணை அடுத்து "***ஆண்***" என்ருர்.

அலி - ஆன்மா சென்று சேரும் குணமும் குணியுமாக நிற்கும் இறைவனைத் தவிர ஏனைய அஃறிணைப் பொருள்கள் அனைத்தும்.

இனிச் சிவஞானபோதம் முதற் சூத்திரம் மொழியும் அவன் அவள் அது என்னும் முக்கூறுகளாயுள்ள உயிர்களும் பாசமுமாகிய பொருள்களில் ஒன்று என்று கூற இயலாத பெற்றியனுன இறைவன் எனலுமாம்.

பெண் ஆண் அலி என்பன மாயேயங்களாலான உடல்களும் அஃறிணைப் பொருள்களுமாம். அவை சுட்டியறிப்படும் வகையில் கால எல்லையினுள்ளும் இட எல்லையினுள்ளும் தோன்றி நின்று அழியும் மாலையன. பேரூழிக்காலத்தில் அவை அனைத்தும் மாயையுள் ஒடுங்க, மாயை

சிவபெருமான் திருவடிக் கீழ் அவன் வைப்புச் சத்தியாக நிற்கும். ஆதலின் இறைவன் அம்மாயேயங்களில் ஒன்றுக அறியப்படான் என்க. ★

அறி ஒண்கிலே - அறிய ஒண்கிலே என்க. அறிய என்பதிலுள்ள ஈற்றகரம் தொகுத்தலாயிற்று.

ஒண்கிலே - ''ஒண்ணுகில்லே என்பது ''ஒண்கிலே" என நின்றது. ''ஒன்று" என்பது ''ஒண்ணு" என மருவிற்று. ஒன்றுகில்லேயாகிய நீ என்றவாறு.

தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினுய் - எண்குணங்களுள்ள பதிப் பொருள் ஒன்று உண்டு என்று உணரும் தத்துவ ஞானிகளுக்கும் அந்தப் பொருளாகிய நீ பெண், ஆண், அலி என்ற இக்கூறுகளில் வைத்து இன்னதென்று அறியமுடியாத இயல்பினனுய் இருந்தும், சிற்றறிவுள்ள உன் தொண்டனுகிய என்னிடம் நீயே வலிய வந்து உன் உண்மை இயல்பு இன்னதென்று உள்ளவாறு காட்டி வெளிப்பட்டருளினே என்றவாறு. இது திருப்பெருந்துறையில் குருவடிவில் வந்து தன்னுள்ளே அனைத்தும் அடங்கி நிற்றலேக் காட்டிய சரித்திர வரலாறு. ***உள்ளவா*** - உள்ளவாறு என்பது ஈறுகெட்டு நின்றது. ***தோன்றினுய்*** - அவ்வாறு எனக்குத் தோன்றிய உன் பேரருளுக்கு என்ன கைம்மாறு செய்வேன் என்பது குறிப்பு.

கண்டும் கண்டிலேன் - குருவடிவாக வந்த போது உன்னேக் கண்டேன். பிறகு நீ பிரிந்து சென்று விட்டாய். அதனுல் உன்னே இப்பொழுது காணுதவனுனேன்.

உன்னே நான் என் மனத்தில் நிறுத்தித் திரிபுடியின்றித் தியானம் செய்தேன். அப்பொழுது காண்பான் காட்சி காணப்படும் பொருள் ஆகிய மூன்றில் காணப்படும் பொருளாகி உன் காட்சி மட்டும் நின்றது. அதனுல் உன்னேக் "***கண்டேன்***" ஆனேன். காண்பானுகிய என் இருப்பும் காண்பதாகிய தொழில் நிகழும் உணர்வும் என் உணர்வில் நிற்கவில்லே. ஆதலின்

---

* "That there's a God, we all do know"
But what God is, we cannot show.
(Robert Herrick)

காண்பதாகிய செயலை நான் செய்யவில்லை என்பார், "**கண்டிலேன்**" என்று அருளினர்.

என்ன கண்மாயமே - என்ன - கண்டுகொண்டிருந்த பொருள் காட்சியில் மறைந்ததன் காரணம் என்ன? ***கண்மாயமே*** - ஈற்றேகாரம் வினைப் பொருளில் வந்தது.

கண்மாயம் - கண்கட்டி வித்தை. அஃது அனைவரும் அறிந்த ஒன்றைத் திடீரென்று மறையச் செய்வதும், ஒருவரும் அறியாத ஒன்றைக் காட்டுவதுமாகும். இதனை Optical illusion என்பர்.

இறைவனைக் கண்டார்க்கு இனிப் பிறவித் துன்பம் இல்லை. ஆனல் நான் குருவடிவில் கண்டிருந்தும் இன்னும் வினைப்பயனுகத் துன்புறுகின்றேன்; இஃது என்னமாயம் என்றவாறு. ***மாயம்*** - தந்திரம், வியப்பு; மயக்கம் எனலுமாம்.

இத் திருப்பாடலில், "மெய்யடியார்கள் அனைவருக்கும் சுட்டியறியப்படாத பெருமையாளனுகிய நீ எனக்கு உள்ளவாறு வந்து காட்சி நல்கினுய், அத்துணைச் சிறந்த நீ சிறியவனுகிய என்பால் வந்து தோன்றினுய்" என்றதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். "தொண்டனேற்கு உள்ளவாறு காட்சி கொடுத்தாய், அதற்கு உனக்கு எவ்விதம் கைம்மாறு கொடுப்பேன்" என்றதால் பதிகம் நுதலிய "***கைம்மாறு கொடுத்தல்***" பெற்றும்.

47. மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞான மேவிசும் பேயிவை வந்து போங்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே சு௬

(இ - ள்)

மிக உயர்ந்த பதங்களிலுள்ள பெருந்தேவர்களும் அறிய இயலாததாகிய ஒப்பற்ற வடிவமே; எளியவனுகிய என்னையும் அடிமை கொண்ட ஆடலரசே ; மண்ணும் விண்ணும் தோன்றி ஒடுங்குவதற்குத் துணைக் காரணமான கால தத்துவம் போல இருக்கும் தலைவனே; அரிய பொருளாகிய உன்னைக் காண்பது எஞ்ஞான்று.

(வி - ரை)

இத்திருப்பாடலை ஆற்றொழுக்காகப் பொருள் செய்க.

மேலைவானவர் - மேல் ஐவானவர் என்று பிரிக்க. பூவுலகுக்கு மேலுள்ள அமரருலகின் தலைவனாகிய இந்திரனுக்கு மேலுள்ள அயன் திருமால் உருத்திரன் முதலியோர். இவர்கள் சிவபெருமான் அமர்த்திய அதிகார பதங்களின் தலைவர்களாக உள்ளவர்கள். ஆதலின் இறைவனுக்கு அணுக்கமாயுள்ளவர்கள் அவ்வணுக்கம் பற்றி இறைவனை அறிவர்களோ எனின் அதிகாரமலத்துள் அழுந்தியுள்ள பெத்தான்மாக்கள் ஆகலின் இறைவனை அறியார்கள் என்க. **வானவரும்** - உம்மை உயர்வு சிறப்பு.

கோலமே - கோலம் - அழகு என்னும் பண்பு. பண்பாகு பெயராக அழகையுடைய வடிவத்தைக் குறித்தது. பதிப்பொருள் அழகுகளுக்கெல்லாம் இருப்பிடம் என்பதும், அழகின்மையைச் செய்யும் ஆணவமலத்தினின்றும் இயல்பாகவே நீங்கியதென்றும் அறிக. ஈண்டு குறிக்கும் "***கோலம்***" திருப்பெருந்துறையில் குருவடிவாக வந்து ஆட்கொண்ட மூர்த்தம். வானவராலும் அறியப்படாதது கோலத்துக்கு அடை.

எனை ஆட்கொண்ட கூத்தனே - திருப்பெருந்துறையில் குருந்த மரத்தினடியில் அமர்ந்திருந்த அவன் அழகில் ஈடுபட்டு அண்மையிற் சென்ற என்னை ஆட்கொண்ட அருளாடலைச் செய்தவன். திருவைந் தொழில்களில் ஐந்தாவதாக உள்ளது **அருளுதலாகும்**. அருள் வழங்குவதற்காக இறைவன் இயங்குவதைத் திருவருட் கூத்து என்பர். ஈண்டு, நம் அடிகளை அடிமையாக ஏற்றுக் கொண்டதுமன்றி அருளையும் நல்கினான். அதனையே ஈண்டு, "***எனை ஆட் கொண்ட கூத்தனே***" என்றருளினார்.

கூத்தியற்றுவோர் தம் அங்க அசைவுகள் கரணங்கள், முகபாவங்கள் ஆகியவற்றால் பார்ப்பவர் உள்ளத்தில் படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் அவற்றை இயற்றும் அம்பலவாணனையும் காணச் செய்வர். ஆனால் தங்கள் உள்ளத்தில் தாம் அம்பலவாணன் என்று நினையாமல் கூத்தியற்றுவோன் என்ற உண்மையையே கொள்வர். அவ்வாறே இறைவன் திருவைந்தொழில்களைச் செய்யினும் தன் சொரூபநிலையில் விகாரமின்றியே இயற்றுவன் என்பது நினைக.

கூத்தனே - மேலே வானவரும் அறிய இயலாத நீ இழிந்தவனும் தகுதியற்ற எளியவனுமாகிய நான் அறியும்படி வந்ததும், என்னை ஆட்கொண்டதும் அருள் புரிந்ததும் வினோதக் கூத்தே எனலுமாம்.

''நகவே தகும் எம்பிரான் என்னை நீ செய்த நாடகமே" *(14)* என்று முன்னர் அருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

இறைவன் பக்குவ ஆன்மாக்களுக்குக் குருவடிவில் வந்து தனிமையில் உபதேசம் புரியும் அருளாடல் அவ்வான்மாக்களால் மட்டுமே காணக் கூடியது. அம்பலவாணன் வடிவில் பொதுவாக இயற்றும் நடனம் யாவருங் காணக்கூடியது.

ஞாலமே விசும்பே - **ஞாலம்** - மண்; **விசும்பு** - ஆகாயம். ஐம்பூதங்களில் மண்ணையும் வெளியையும் கூறினர். உபலக்கணத்தால் இடையிலுள்ள நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றையும் கொள்க. இவை ஐந்தும் ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்கையும் குறிக்கும். இறைவன் அவைகளனைத்திலும் அவ்வவற்றின் வண்ணமாகவே நிற்பதால் அவற்றை இறைவனாகவே கொண்டார்.

ஏகாரம் இரண்டையும் விளியாகக் கொள்ளற்க; அஃறிணைப் பொருள்களாகிய அவற்றுள்ளும் இறைவன் எழுந்தருளியுள்ளான் என்ற பொருளில் தேற்றேகாரங்களாகக் கொள்க. அஃறிணைச் சுட்டு என்பது கதிர்மணி விளக்கம். **ஞாலமும் விசும்பும்** - ஆகிய இவை என எண்ணுப்பொருளாகவும் கொள்க.

இவை வந்து போங்காலமே - படைத்தலையும் ஒடுக்குவதையும் செய்பவன் இறைவன். இத்தொழில்களுக்குக் காலம் அவனுக்குத் துணைக்காரணமாக உள்ளது. ஆதலின் இறைவன் காலதத்துவம் போல இருப்பவன். அவனைக் காலம் என்றார். **காலமே** என்பது விளி. இவ்வுண்மையை;

சீலமோ வுலகம் போலத் தெரிப்பரி ததனு னிற்குங்
கோலமு மறிவா ரில்லை யாயினுங் கூறக் கேணீ
ஞாலமே ழினையுந் தந்து நிறுத்திப்பின் னாசம் பண்ணுங்
காலமே போலக் கொண்ணீ நிலை செயல் கடவுட் கண்ணே.

(சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ - *1* அதி - *2* செய் - *30.*)

காலமே கடவு ளாகக் கண்டனந் தொழிலுக் கென்னிற்
காலமோ வறிவின் ருகு மாயினுங் காரி யங்கள்
காலமே தரவே காண்டுங் காரணன் விதியி னுக்குக்
காலமுங் கடவு ளேவ லாற்றுணைக் கார ணங்கான்

(ஷி. சூ - 1 அதி - 1 - செய் - 10)

என்று நம் ஞான சாத்திரம் நவிலுதலிற் காண்க.

வந்து - படைப்பு. **போம்** - ஒடுக்கம் இவை இரண்டும் கூறியதால் இடையில் அவை நிலே பெற்றிருக்கும் காத்தலேயும் கொள்க. இவை முறையே இறந்தகாலம் நிகழ்காலம் வருங்காலம் ஆகிய மூன்று பகுதிகளாக உள்ள கால தத்துவம். அஃது ஈண்டு அந்தத் தத்துவத்தை இயக்கும் இறைவனேக் குறித்து நின்றது. இறைவன் பஞ்சபூதங்களாகவும் மூன்று காலங்களாகவும் உள்ளதை. முன்னம் 12-ம் திருப்பாடலில் ''காலமுமாய்" என்றதன் உரையில் எடுத்தாண்ட நின்ற திருத்தாண்டகத்திற் காண்க.

"**காலம்**- என்பது ஈண்டு ஏதுப்பெயர் கொண்டது. காலப் பெயரன்று. என்னேயெனின், ''நிலனே காலம் கருவி" (தொல் சொல் 113) என்ற விடத்து, ''காலம் " என்றது அவ்வவ்வினே நிகழ்ச்சிக்குரிய சிறப்புக் காலத்தையன்றி, எல்லாவற்றுக்கும் ஏது வெனப்படும் பொதுக்காலத்தை அன்ருகலானும்; ஈண்டுக் கருதியது பொதுக்காலத்தையன்றிச் சிறப்புக்காலத்தை அன்ருகலானும், பிற பொருள்களோடு ஒப்பப் பொருள் எனப்படுமாகலானும் என்க" என்று விளக்குவர் திரு. முதலியாரவர்கள். ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" ஞால மேவிசும் பேநலந் தீமையே
கால மேகருத் தேகருத் தாற்ளுேழும்
சீல மேதிரு வீழி மிழலேயுள்
கோல மேயடி யேனேக் குறிக்கொளே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5 - 13 - 3)

எனவரும் அரசுகள் தேவாரம் நினேக. ★

★ *"உலகங்களே அழிக்கவல்ல காலம் நான்.*
உலகங்களேச் சங்கரிக்கத் தலேப்பட்டிருக்கிறேன்

(பகவத் கீதோபநிஷதம் 11 - 32)

உனை என்று கொல் காண்பதே - உனை - கால தத்துவத்தின் எல்லையே பெரிதாக, அதனையுங் கடந்து கால காலனாக நிற்கும் உன்னை. ***என்று காண்பதே*** - இவ்வுடம்பு முகந்து கொண்டு வந்துள்ள என் வாழ்நாளாகிய சிறிய எல்லைக்குள் நின்று எவ்வாறு காண்பேன் என்றவாறு. ***கொல்*** - அசை

இத்திருப்பாடலில் "உனை என்று கொல் காண்பதே" என்று மனம் ஏங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். மேலைவானவரும் அறிய இயலாத அரியவனான நீ, எளியேனுக்கு உன் திருக்கோலத்தைக் காட்டி, ஆட்கொண்டு ஞானோபதேசம் செய்த அம்பலவாணனே என்றதால், அவன் செய்த அந்தப்பேருதவிக்குக் கைம்மாறு கொடுக்கும் ஆற்றலற்றவனாயுள்ளேன் என்பது பெறப்படுதலின் பதிகம் நுதலிய "***கைம்மாறு கொடுத்தல்***" பெற்றும்.

48. காண லாம்பர மேகட் கிறந்த தோர்
வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே சச

(இ - ள்)

பதிஞானத்தினால் காண்பதற்குரிய மேலான பொருளே; கட்புலனாற் பற்றப் படாவண்ணம் கடந்து நிற்பதாகிய பேரொளிப் பிழம்பாக உள்ள பொருளே; ஈண்டு ஒரு பறவைக்குஞ்சு போல, வீணனாகிய யான்; ஐம்புலன்கள் உலகப் பொருள்களிற் சென்று படியாமற் பாதுகாத்துக் குற்றமுள்ள இந்த உடம்பை விட்டு நீங்கி; உன்னைப் பொருந்தும் வழியை அறியாதவனாக உள்ளேன் என்றவாறு.

(வி - ரை)

இத் திருப்பாட்டில் ''புலன் போற்றியே" என்ற பகுதியை ''பாணனேன்" என்றதன் பின்வைக்க, அதன்பின், ''படிற்றாக்கையை விட்டுனைப் பூணு மாறறியேன்" என்பவற்றை அமைத்து உரை காண்க.

காணலாம் பரம் - இறைவன் ''சொரூபம்" ''தடத்தம்" என்ற இரு நிலைகளில் உள்ளான். சொரூபநிலை கண்ணாற் காண்பதற்கு இயலாத

நிலையாகும். தடத்த நிலை, பக்குவான்மாக்கள் தன்னைக்கண்டு வழிபட்டு உய்யவேண்டும் என்ற பேரருளால் அந்த அருளே தன் வடிவமாக அவன் எழுந்தருளும் வடிவமாகும். இந்த வடிவத்தையும், அவன் ஆன்மாவைத்தன் அருள் நோக்கால் தூய்மை செய்து, தன் அருளே கண்ணுகக் காணும்படித் தானும் ஆன்மாவுடனிருந்து கண்டால் மட்டுமே ஆன்மா இறைவனைக் காண இயலும். இதையே பதிஞானத்தால் மட்டுமே இறைவனைக் காண இயலும் என்று நூல்கள் நுவலும். இத்தகைய தவப்பயன் இல்லார் இறைவனைக் காணும் மெய்யடியார் பக்கத்தில் நின்றுலும் காண இயலாது. ஆளுடைய பிள்ளையார் தோணியப்பரை நேரிற் கண்டார். அண்மையில் நின்ற சிவபாத விருதயருக்கு ''என்னை இது செய்த பிரான் இவனன்றே" என்று சுட்டிக் காட்டினுர்; எனினும் சிவபாத விருதயர் காணுராயினுர் என்பது நினைக.

இதனை ;

திருச்சிற்றம்பலம்

"தாணுவி னைத்தனி கண்டு தொடர்ந்தவர் தம்மைப்போற்
காணுதல் பெற்றில ரேனு நிகழ்ந்தன கண்டுள்ளார்
தோணி புரத்திறை தன்னரு ளாத றுணிந்தார்வம்
பேணு மனத்தொடு முன்புகு காதலர் பின்சென்ருர்."

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருஞான சம்பந்த நாயனுர் புராணம் - 86)

எனச் சேக்கிழார் பெருமான் செஞ்சொல்லோவியம் தீட்டுதல் காண்க.

ஈண்டு;

'' ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே"

(சிவஞானபோதம் - சூத்திரம் - 9)

என்று நம் ஞான சாத்திரம் நவில்வது நினைக. திருப்பாடல் 32-ல் "கேட்டு அறியாதான்" என்றதன் கீழ் விளக்கியவை காண்க.

பரம் - மேலான பொருள்.

கட்கு இறந்தது ஓர் வான் நிலாப் பொருளே - பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் காணும் எல்லையைக் கடந்து நிற்கும் பேரொளிப் பொருள்.

கட்கு - கண்ணுக்கு. *இறந்தது* - கடந்து நிற்பது. கண் பிரகிருதி மாயையின் தத்துவங்களில் ஒன்று. அது பிரகிருதி மாயையின் காரியமாகிய வானவெளியையே ஓரளவு தொலைவுவரையே சென்று அங்குள்ள பொருள்களை மட்டுமே காணும் ஆற்றலுள்ளது. அது மாயையைக் கடந்து நிற்கும் இறைவனைக் காண இயலாதது இயல்பே.

ஓர் - ஒப்பற்ற. இறைவன் உவமனிலி என்றது நினைக.

வாள் நிலாப் பொருள் - *வாள்* - ஒளி - ''வாள் ஒளி ஆகும்''
(தொல் - சொல். சூ. 361) என்றது காண்க.

முச்சுடர்களில் செங்கதிரவனும் நெருப்பும் ஒளியுள்ளனவாயினும் மிகுந்த வெப்பமுள்ளவை. நிலா ஒளியுடன் குளிர்ச்சியுமுள்ளது. ஆதலின் குளிர்ந்த இன்னருள் காலும் இறைவனுக்கு எடுத்துக்காட்டாயிற்று எனலுமாம். தண்ணருள் நோக்கமுள்ளவனாய் குருவடிவில் வந்து தமக்குக் **காணலாம் பரமாக** அருளிய இறைவன் பின்னர் மறைந்ததைக் "**கட் கிறந்த தோர் வாணிலாப் பொருள்**" என்றார்; எனலுமமையும். இது நம் அடிகளின் சரித வரலாறு குறிக்கும் அகச்சான்று.

வான் நிலாம் பொருளே - என்பதே சரியான பாடம் என்று கொண்டு ''கண்ணொளியைக் கடந்ததாகிய ஒரு பேரொளி நிலை பெற்றுள்ள பொருளே'' என்றுரைப்பர் திரு. முதலியாரவர்கள். இதுவரை வெளிவந்த வேறு பதிப்புக்களிலும் கிடைத்த ஓலைச் சுவடிகளிலும் இந்தப்பாட பேதம் காணப்படாமையால் ஈண்டு, *வான் நிலாப் பொருளே* என்றே பாடம் கொண்டாம்.

இங்கு ஓர் பார்ப்பு என - *இங்கு* இவ்வுலக வாழ்வில்.
ஓர் பார்ப்பு என - *பார்ப்பு* - பறவைக்குஞ்சு.

''அவற்றுள் பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை"

(தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியல் - சூத் - 4)

என்று இலக்கணம் இயம்புதல் காண்க.

இதற்கு இவ்வாறன்றிப் ''பன்றிக்குட்டி" என்றும், "குரங்குக்குட்டி" என்றும் உரைத்தனர் முன்னுரையாளரில் சிலர். பன்றியின் இளமைப் பெயர் ''குருளை" என்றும் குரங்கின் இளமைப் பெயர் "குட்டி" என்றும் வழங்குவது தொல்காப்பியம். பன்றிக் குருளையைக் குட்டி, பறழ், பிள்ளை எனவும் கூறலாம் என்பது உரையாசிரியர் விளக்கம். ***பார்ப்பு*** என்று அவை யாண்டும் குறிக்கப்படவில்லை. எனவே அவை உரையல்ல என ஒதுக்குக.

பாழனேன் - பாழ் நன் என்பது எதுகையை நோக்கிப் ***பாழனேன்*** என்று திரிந்தது. ''பாழ்" என்பது வினைப்பகுதியாயும் நிற்றலின் நகர இடைநிலை பெற்றது. பிறவிப் பயனை எய்தாது பாழாகிய நான் என்றவாறு.

புலன் போற்றி - போற்றுதல் உலக இன்பங்களிற் செல்லாது பாதுகாத்தல். "போற்றி" என்ற எச்சம் காரணப் பொருளில் வந்தது.

அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு

(திருக்குறள் - 343)

என்ற தமிழ்மறை நினைக.

படிற்று ஆக்கையை விட்டு. படிறு - வஞ்சகம் பொய் என்ற குற்றங்களையுடைய.

ஆக்கை - யாக்கை என்பதன் மருவு. யாக்கை கட்டப்பட்டது. எழுவகைத் தாதுக்களால் கட்டப்பட்ட உடம்பு என்றவாறு.

விட்டு - உடம்பை விட்டு நீங்கி. பெண் பறவையின் வயிற்றின்றும் வெளிவருவது முட்டை. முட்டையினின்றும் குஞ்சு வெளிப்படும். குஞ்சு, முட்டையினுள் சில காலம் தங்கித் தன் உடம்பு உருப்பெற்றுக் குஞ்சாகி வெளிவருவதற்குத் தகுதியாகும் வரை அந்த முட்டையைப் பயன்படுத்திக் கொள்ளும். உரிய காலத்தில் முட்டையை உடைத்துக் கொண்டு குஞ்சாக வெளி வந்து தன் தாயுடன் சேர்ந்து கொள்ளும். பிறகு அந்த முட்டையைப்

புறக்கணித்து விடும். அது போன்று நானும் இந்த உடம்பைத் தவம் முதலிய நோற்றற்காகப் பயன்படுத்திக் கொண்டு, உன்னைக்கண்ட பின் இந்த உடம்பை விட்டு வெளியேறி உன்னையடைந்திலேன் என்பார் "**இங்கு ஓர் பார்ப்பு எனப் படிற்று ஆக்கையை விட்டு உனைப்பூணுமாறு அறியேன்**" என்று அருளிச் செய்தார்.

ஈண்டு;

'' குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம் பொ டுயிரிடை நட்பு.

(திருக்குறள் - 338)

என்று பொய்யா மொழி புகல்வது நினைக.

பன்றிக்குட்டியும் குரங்குக் குட்டியும் வருத்தமின்றி இவ்வாறு தங்கள் உடம்பைத் தாங்களே தகர்த்து விட்டு வெளியேறித் தாயுடன் கூடி மகிழ்வதில்லை என்பது சிந்திக்க.

ஆக்கையை விடல் - சாதல். பிரயோபவேசம் செய்தல், "தியானம் முதலியவற்றால் உடல் கழன்று நிற்றல் எனலுமாம்" என்பர் கவியரசு அவர்கள். "**உனை**"- உன் திருவடிகளை- சிவபெருமானுக்கும் அவன் உடலுறுப்புக்களுக்கும் வேற்றுமை இன்மையறிக. முன்னம் கீர்த்தித் திருவகவல் 1-ல் ''திருவடி" என்றதன் கீழ் எடுத்தாண்ட சிவஞான சித்தியார் பாடல் பார்க்க.

பூணும் ஆறு அறியேன் - பூணுதல். திருவடிகளைத் தலைக்கு அணியாகத் தரித்துக் கொள்ளுதல்.

ஆறு - வழி. தள்ள வேண்டிய உடலைத் தள்ளி விட்டுக் கொள்ள வேண்டியதான உன் திருவடியைத் தலை மேல் தரித்துக் கொள்ளும் வழி. ***அறியேன்*** - அந்த வழியை அறியமாட்டேன்.

இத் திருப்பாடலில் ''பாணனேன் படிற்றாக்கையை விட வேண்டும்" என்று உடற் சுமையை வெறுத்துக் கூறுவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றாம்; புலன்களை உலகியல் வழியில் செல்லாமல் தடுத்து நிற்காமலும் இந்த உடம்பை உதறி விட்டு உன்

திருவடிகளைப் பூணுமலும் உள்ள வீணுகிய நானும் காணும் படி குருவடிவில் வந்தாய் என்பது, அதற்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன் என்பது குறிப்பெச்சமாக நிற்பதால் பதிகம் நுதலிய "**கைம்மாறு கொடுத்தல்**" பெற்ரும்.

49. போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
ருற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே
சருு

(இ-ள்)

''என்னைக் காத்தருள்க " என்று உன்பால் நெஞ்சத்தால் நினைந்து நாவினுல் உன் புகழ்களைச் கூறித்துதித்து உடலால் உன் திருக்கோயிலைச் சுற்றிப்புரண்டு வலம் வந்து பக்தி நெறியில் நிலை பெற்று நின்று உறுதியான மெய்யன்பினுல் உன்னைக் கூவி அழையாமல் இருக்கின்றேன். இத்தகைய என் கொள்கை, போர் செய்ய உன் எதிரில் வந்து, உன் கமல மலர் போன்ற திருவடியிற் பொருந்தப் பெற்ற கூற்றுவனின் கொள்கை போன்ற ஒருவகைக் கொள்கையேயாம்.

(வி - ரை)

இத் திருப்பாடலில் முதலடியிலுள்ள ''புகழ்ந்தும்" என்பதை ''என்றும்" என்றதை அடுத்து அமைத்துப் பொருள் கொள்க.

போற்றி - பாதுகாத்தருள்க.

இறைவழிபாடு மனம், வாக்கு, உடல் ஆகிய மூன்று கரணங்களாலும் செய்ய வேண்டிய ஒன்ருகும். அவ்வழிபாடு இரு வகைப்படும். உலகியலின்பங்களைப் புலன்களாரத் துய்ப்பதற்கு அருள வேண்டும் என்பது ஒன்று. வீடுபேறு நல்க வேண்டும் என வேண்டுவது மற்ருென்று. சீவன்முத்த நிலையை எய்தியோரும் ஒரொருகால் உலக நிலைக்குத் திரும்புவர் அல்லரோ; அப்பொழுது அவர்களை உலக நினைவுகளாகிய பாசம் வந்து பற்றும். அவ்வாறு தம்மை வந்து பற்ருமல் காத்தருள வேண்டும் என்று

இறைவனை நம் அடிகளார் மனத்தால் வேண்டுவார் "**போற்றி**" என்றார். இது மனத்தால் செய்யும் சிவவழிபாடு. **போற்றி** வியங்கோள் வினைமுற்று. ''வணக்கம்'' எனலுமாம்.

புகழ்ந்தும் - இறைவன் பொருள் சேர் புகழ்களை விருப்பத்துடன் இடையறாது கூறித்துதித்தல்; இசையில் அமைத்துப் பாடுதல் என்பன. நெஞ்சம் நினைந்ததை நாவால் மொழிதல். இது வாக்கால் செய்யும் சிவவழிபாடு. **புகழ்ந்து** என்று பாடலில் உள்ள சொல்லில் மகரவொற்றுச் சந்தியில் மறைந்துள்ளது தெரிக. அதை வெளிக்கொணர்ந்து பொருள் செய்க.

புரண்டும் - திருக்கோயிலின் திருச்சுற்றில் நிலத்தில் விழுந்து இறைவன் எழுந்தருளியுள்ள புனிதமும், எண்ணற்ற அடியவர்களின் திருவடிகள் நாள்தோறும் மிதிக்கும் பேறும் பெற்ற தரையில் தன் உடம்பின் உறுப்புகள் அனைத்தும் தீண்டும்படி உருண்டுருண்டு வலம் வருதல். ''அங்கப் பிரதட்சிணம்; உருள்தண்டம்'' என்ற பெயர்களில் இன்றும் இவ்வித வழிபாடுகாணவுள்ளது. இது நெஞ்சம் நினைந்து வாக்கு வழுத்திய பொருளை உடம்பால் வழிபடுவது.

இத் திரி கரண வழிபாடுகள் அனைத்தும் வீடு வேண்டிச் செய்யத்தக்கன. அவற்றை நான் செய்கிலேன் என்று இரங்கியவாறு.

நின்று - இத் திரிகரண வழிபாடுகள் வீடு பேறு விரும்பி ஒரொருகால் நிகழ்ந்து, பின் உயிர் உலகியலிற் சென்று புலனுகர்ச்சியில் ஈடுபடாமல் எப்பொழுதும் நிலையாக நிற்கவேண்டும் என்பார் "***நின்று***" என்றருளினார்.

ஆற்றல் மிக்க அன்பு - ஒரு பொருளின் மீது மேலைப்பிறவிகள் பலவற்றிலும் இடையறாது ஆழ்ந்து பற்றிய அன்பே ஆற்றல் மிக்க அன்பாகும். அஃது இறைவன் மேல் செலுத்தப்படும் பக்தியாயின் அது முடிவிலாற்றலுடைய இறைவனை வெற்றி கொள்வதாகும். இதை நம் நாயன்மார்கள் சரிதம் பலவற்றுள்ளும் பரக்கக் காணலாம். எடுத்துக்காட்டாக;

திருச்சிற்றம்பலம்

" நண்ணிய வொருமை யன்பி னுருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி யிளைத்தபின் றிறம்பி நிற்க
வொண்ணுமோ? கலய னார்த மொருப்பாடு கண்ட போதே
யண்ணலார் நேரே நின்று ரமரரும் விசும்பி லார்த்தார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - குங்குலியக் கலய நாயனர் புராணம் 28)

என்று தொண்டர்சீர் பரவுவார் துதித்தலில் காண்க. நம் ஞானசாத்திரம் நவிலும் ''அயராஅன்பு" இஃதேயாகும்.

ஆற்ற மிக்க அன்பு - என்று பாடங் கொண்டு ஒரு பொருட் பன்மொழி என்றுரைத்தார் முன்னுரை ஆசிரியருள் ஒருவர். அப்பாடம் பொருட் சிறப்பின்மை வெளிப்படை.

அழைக்கின்றிலேன் - கரணங்கள் தூய்மையாகப் பெற்று அயரா அன்பினுல் உன்னைக் கூவியழைத்தல் இன்றியமையாதது; எனினும் அவ்வாறு செய்கிலேன் என்றவாறு. இதன்பின் ''அதனுல்" என்ெருரு சொல்லெச்சம் வருவித்துரைக்க.

ஏற்றுவந்து எதிர் தாமரைத்தாள் உறும் கூற்றம் அன்னதொர் கொள்கை என் கொள்கையே. ஏற்று வந்து - மிக்க அன்பினுல் உன்னை அழைத்து நற்பேறு பெறும் புண்ணியம் எனக்கு இல்லையாயினும் வன்பினுல் இயமன் உன்னிடம் போர் ஏற்று உன் திருமுன் வந்து.

எதிர் தாமரைத் தாள் உறும் - எதிர்ப்பட்டுப் பங்கயம் போன்ற உன் திருவடிப் பேறு கிடைக்கப்பெற்ற.

தாமரைத்தாள் - தாமரைமலர் போன்ற பாதம். வடிவம் பற்றி வந்த உவமை.

உறுதல் - பொருந்துல்.

கூற்றம் - இயமன். கூற்றம் என்றது இயமன் செயலை. அஃது உடலையும் உயிரையும் வேறுவேருகக் கூறு செய்வது.

அன்னதோர் கொள்கை என் கொள்கையே - அதைப் போன்ற செயல் என் செயலாகும் என்றவாறு.

கூற்றுவன் மார்க்கண்டேயர் உயிரை வௌவும் பொருட்டு இறைவன் திருவுள்ளத்துக்கு மாருக திருமுன்னர் சென்ருனுயினும் சிவபெருமான் திருவடியினுல் தீண்டப்பெறும் பேறு எய்தினுன். இதனே,

திருச்சிற்றம்பலம்

" மேலு மறிந்தில ஞன்முகன் மேற்சென்று கீழிடந்து
மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி பாடுசெய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்தசிந்தைக்
கால னறிந்தா னறிதற் கரியான் கழலடியே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *4-113-10*)

எனவரும் அரசுகள் திருவாக்காலறிக.

கொள்கை - செயல். அஃது அயரா அன்பினுல் சிவபெருமானே அழைத்திருக்க வேண்டும்; அவ்வாறு செய்யாது கூற்றுவனேப் போல இறைவன் திருவுள்ளத்துக்கு மாருக நடத்தல். இக் கொள்கைக்கு ;

" கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
ஞற்ற றலேப்பட் டவர்க்கு "

(திருக்குறள் 269)

என்ற வள்ளுவர் வாய்மொழியை மேற்கோள் காட்டினுர் திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பாளருள் ஒருவர். அஃதிங்குப் பொருத்தமின்மை வெளிப்படை.

இத் திருப்பாடலின் கடைசி இரண்டடிகளுக்கு உரை வகுத்த முன்னுரையாளர்களிற் சிலர் ;

"அன்பினுல் அழைத்து அடையும் பேறு எனக்கு இல்லேயாயினும் வன்பினுல் கூற்றுவன் எதிர்ப்பட்டுத் திருவடிப் பேறு பெற்றது போன்ற ஒரு பேறு பெறத் தலேப்பட மாட்டேனு" என்றும்; "அன்பு காரணமாக நினேயேனுயினும் அச்சம் காரணமாக நினேயேனே" என்றும்; ''பக்தியினுல்

உன் அருளுக்குப் பாத்திர மாகாவிடினும் பகைமையினுல் உன் சினத்துக்குக் காரணமாகி உன்னுல் வெறுக்கப்படும் பேறேனும் எய்தேனே" என்றும்; "தாமரை மலர் போன்ற தாள் என்றதால் தாமரை மலர் மென்மையும் தண்மையும் மணமும், நிறமும் உடையதாய் எல்லாக் கருவி கரணங்களுக்கும் இன்பம் தந்தது என்ருர்" என்றும்; "பரிச வேதி போலத் திருவடி தீண்டியதும் கூற்றுவன் ஆணவ வலிகுன்றி நிற்க, இறைவனின் இடைவிடாத காட்சியும் அருளும் பெற்ருன்" என்றும் விரித்துரைத்தனர்.

கூற்றுவன் சிவபெருமான் திருமுன் வந்தது வன்பினுல் அவர் திருவடிகளை அடைந்துய்தற்கன்று ; மார்க்கண்டேயர் உயிரைக் கவர்வதற்கு மட்டுமே. நம் அடிகள் ஈண்டு விழைவது பக்தியினுல் இறைவன் திருவடிகளை எய்துதற்கேயன்றி, இறைவன் ஒறுப்பான் என்ற அச்சத்தாலன்று; அவர், இறைவன் திருவடி நிழலை எய்தி வீட்டின்பம் நுகர்வதை மட்டுமே விரும்புகின்ருரன்றி, அவனுல் ஒறுக்கப்படும் நிலையையன்று. பின்னர், ''அடியேன் . . . . உடையாய் கூவிப்பணி கொள்ளாது ஒறுத்தால் ஒன்றும் போதுமே" (495) என்று அருளிச் செய்வது வேறு ஒரு மன நிலையினின்றும் பாடியது. தாமரைமலர் ஈண்டு இறைவன் திருவடிகளுக்கு வடிவத்தாலும் வண்ணத்தாலும் மட்டுமே உவமையாக நின்றது. கூற்றுவன் நெஞ்சில் உதைத்த ஞான்று அது தாமரைமலர் போன்று மென்மையாகப் பொருந்த வில்லை. அவன் உயிர் நீங்கி விடும் வண்ணம் உறுமேறன்ன வன்மையாக உதைத்தது. அப்பொழுது அது தண்ணிதாயன்றிச் சினவெப்பம் கால்வதாக உதைத்தது. தாமரைமலர் ஐம்புலன்களுக்கும் இன்பம் தரும் என்று விளக்கும் முன்னுரையாளர் அது செவிக்கு எவ்வாறு இன்பம் நல்குகின்றது என்று விளக்கிஞரல்லர். தாமரையில் முரலும் வண்டுகளின் ஓசை எனக் கூறின் அது தாமரையால் வருவதன்று; வண்டுகள் வழங்குவதாகும். மேலும் புலனுகர்ச்சிகளை எல்லாம் விட்டு இறையன்பில் திளைத்தலை மட்டுமே விரும்புவதாக முன் பல இடங்களில் பகர்ந்த நம் அடிகள் ஈண்டு அவற்றை விரும்புவதாகக் கூறுவது ஏற்புடைத்தன்று; அற்றன்று. ஈண்டு இறைவன் திருவடியாகிய தாமரை என்பதால் இஃது உலகியலின்பமாகிய ஐம்புலனுகர்ச்சியன்று எனில் ; சீவன்முத்தர்கள் நுகரும் வீட்டின்பமாயினும் அதை நுகர்கின்ரேம் என்ற உணர்வு நிற்பின், உயிர் துரியாதீத நிலையில் துய்க்கும் ஆனந்தாதீத நிலையினின்றும் துரிய நிலைக்கு

இழிந்து விடும் என்றும் உணர்க. அஃது ஆனந்தானுபவ நிலே. ஆனந்தாதீத நிலேயை;

" ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினு - னேகமா
யுள்ளத்தின் கண்ணுஞ னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணுனே வுற்று."

(சிவஞான போதம் சூத். 11 -அதிகரணம் 1. உதாரண வெண்பா 2)

என்று சிவஞானபோதம் செப்புவதும் அதற்குச் சிவஞானமா பாடியமும் பார்க்க.

இனி, பரிசவேதி தீண்டியதும் செம்பு பொன்னுகி விடும். பின்னர் வேதி விலகினும் பொன் செம்பாவதில்லே. சிவபெருமான் திருவடி தீண்டியதும் கூற்றுவன் ஆணவமலசத்தி மடங்கிச் சீவன்முக்தனுகவில்லே. அவன் ஆணவமலமும் பரிபாகம் எய்தவில்லே. அந்த மலத்துடன் அவன் இறந்தொழிந்தான். வீடுபேறு எய்தவில்லே. அவனே இறைவன் மீண்டும் உயிர்ப்பித்த நிலே வேறு. அது தேவர்கள் வேண்டுகோள் பொருட்டும் பூதேவியின் சுமை குறைத்தற் பொருட்டும் இறைவன் செய்த அருளிப்பாடு. அவ்வாறு எழுந்த கூற்றுவனும் மலபரிபாக மெய்தி எழுந்திருக்கவில்லே. எனவே, இவ்வுரைகளெல்லாம் நம் அடிகளின் திருவுள்ளக்கிடக்கையை விளக்குவன அல்ல என்று ஒதுக்குக.

கூற்றுவன் எதிர் ஏற்று வந்து தாமரைத் தாளுற்ற வரலாறு :-

மிருகண்டு என்னும் முனிவர் தம்மனேவியுடன் வாழ்ந்து வந்தார். மக்கட் பேரின்மையால் அவர் சிவபெருமானே நோக்கித் தவங்கிடந்தார். இறைவன் அவருக்குக் காட்சி கொடுத்து "உனக்குத் தீயகுணங்கள் நிறைந்தவனும் மெய்யுணர்வில்லாதவனும் ஊமையும், செவிடும், குருடும், நோயாளியுமாக நூறுண்டு வாழ்ந்திருக்கும் புதல்வன் ஒருவன் வேண்டுமா ? அன்றிப் பேரழகும் குறைகளற்ற நல்ல உடலமைப்பும், சிவபக்தியும் கொண்டு நோயற்றவனுய்ப் பதினறு ஆண்டுகள் மட்டுமே வாழும் மைந்தன் ஒருவன் வேண்டுமா" என்றுசாவினுன். முனிவர், இறைவன்

இரண்டாவதாகக் கூறிய மைந்தனே வேண்டும் என்று கேட்டுப் பெற்றுர். அவ்வாறு உதித்த சேய்க்கு ''மார்க்கண்டேயர்'' என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். எல்லா நற்குணங்களும் சிவபக்தியும் நிறைந்த மார்க்கண்டேயர் வளர்ந்து வந்து பதினுரட்டைப் பருவத்தை நெருங்கினுர். பெற்றோர்கள் அவர் வாழ்நாள் நெருங்கி வருவதை எண்ணித் துன்புற்றனர். அதை அறிந்த மார்க்கண்டேயர் காசி நகரில் சிவபெருமானை நோக்கித் கடுந்தவம் புரிந்தார். விதிக்கப்பட்ட வாழ்நாள் எல்லையில் கூற்றுவன் அவர் உயிரை வெளவ வந்தான்.

அப்பொழுது அவர் சிவபூசை செய்து கொண்டிருந்தார். கூற்றுவன் அவர் மீது தன் காலபாசத்தை வீசினுன். மார்க்கண்டேயர் சிவபெருமானைப் புகலடைந்து சிவலிங்கத் திருமேனியைக் கட்டித் தழுவிக் கொண்டார். கூற்றுவன் தன் கயிற்றை இழுத்தான். சிவலிங்கத்தினின்று சிவபெருமான் உருத்திர வடிவுடன் வெளிப்பட்டார். பெருத்த சினத்துடன் கூற்றுவன் மார்பில் உதைத்தார்; அவன் தரையில் விழுந்து மாண்டான். மார்க்கண்டேயருக்கு என்றும் பதினுறு ஆண்டுகள் கொண்ட நிலையில் மரணமற்று வாழ வரம் நல்கினுர். காலம் உருண்டோடியது. பிறந்த உயிர்கள் மரணமின்மையால் மிக முதுமையடைந்தும் தொடர்ந்து வாழலாயின. உலகில் இட நெருக்கடி ஏற்பட்டது. உயிர்களும் வரும் பிறவிகளில் மீதமுள்ள சஞ்சித வினைகளை நுகர்ந்து கழித்து அதனுல் ஆணவமலத்தின் பிணிப்புப் படிப்படியாகத் தளர்வதாகிய ஆன்ம வாழ்வில் முன்னேற்றமின்றி வருந்தின. இந்நிலை கண்டு திருமாலின் தலைமையில் தேவர்கள் கயிலை சென்று சிவபெருமானை வணங்கிக் கூற்றுவனை உயிர்ப்பிக்க வேண்டினர். இறைவன் அவ்வாறே தென்திசைக் காவலனை எழுப்பினுர். "இனிச் சிவனடியவர்கள் மாட்டு உன் ஆட்சியைச் செலுத்தாதே. அவர்கள் வாழ்நாள் இறுதியில் நம் கணங்கள் அவர்களைக் நம் உலகுக்கு அழைத்து வந்து உரிய பதங்களில் அமர்த்தும்" என்று கூறி அவனை மீண்டும் தென்திசைக் காவலனுக்கி அனுப்பியருளினுர்.

இவ் வரலாறு கந்தபுராணம் - அசுரகாண்டம் - மார்க்கண்டேயப் படலத்தில் 285 பாடல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்த *Dr.* **G.U. Pope** *M.A., D.D.* அவர்கள் இச் செய்யுளின் ஆங்கில ஆக்கத்தின் கீழ்

அடிக்குறிப்பாக மார்க்கண்டேயர் சரிதத்தைத் தந்து அதன் கீழ் தம் கருத்துக்கள் சிலவற்றைக் கூறிப் போந்தார். அவற்றின் தமிழக்கம் வருமாறு:

1. கூற்றுவன், சிவபெருமான் திருவுள்ளப்படி தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த கடமையையே செய்தான்; ஆனுல் அதற்காக அவன் மிகவும் மோசமாக நடத்தப்பட்டான்.

2. மரணம் எத்துணை அஞ்சத்தக்க தாயினும் அஃதின்றி உலகம் இயங்காது.

3. வாதவூரடிகள் இந்தப் புராணக் கதையை மிக அருமையாகக் கையாண்டுள்ளார். சிவபெருமானின் திருவடி தீண்டடியதும் இறந்துகிடந்து கூற்றுவன் உயிர் பெற்றெழுந்தான். இறந்தவனுக்குச் சமமாகக்கிடந்த யானும் உன்ஞல் தீண்டப்பட்டு மீண்டும் உயிர் பெற்றவனுவேன்.

திருவாசகமணி திரு. K.M. பாலசுப்பிரமணியம் B.A.,B.L., அவர்களும் திருவாசகத்தை ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்தார். அந்த மொழி பெயர்ப்பு நூலே Dr. G.U. Pope அவர்களுக்குப் படையலாக்கி மகிழ்ந்தார். ஆனுல்; அந்த நூலில் இந்தத் திருப்பாடலின் கீழ் சில குறிப்புகளேத் தம் கருத்துக்களாகத் தந்துள்ளார். அவற்றின் தமிழாக்கம் வருமாறு :

"சிவபெருமான் செயல்பற்றி டாக்டர் அவர்களின் தீர்ப்பை விளக்கி மறுக்க ஈண்டுப் போதிய இடமில்லே. எனினும் அந்தத் தீர்ப்பை வாசகர்கள் வழிமொழியாதிருக்கச் சிலவற்றை நினேவூட்ட விரும்புகின்றேம்."

"இறைவன் ஆணேப்படி கூற்றுவன் தன் கடமையைச் செய்ய முயன்றதில் தவறில்லேயெனினும் இந் நிகழ்ச்சியில் அவன் அச்சமின்றியும் மரியாதையின்றியும் திருக்கோயிலின் கருவறையில் வரம்பு மீறி நுழைந்தது பெருங்குற்றம்; அங்கு வழிப்பாட்டில் ஈடுபட்டிருந்த பக்தரும் சிவபெருமானேப் புகலடைந்தவருமாகிய ஒருவர் உயிரை அந்தக் கருவரையினுள்ளேயே கவர முயன்றது அதனினும் பெருங்குற்றம்; சட்டப்படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவன் கூட இன்று இறைவனேப் புகலடைந்தவனேக் கருவறையுட் சென்று கொலே செய்வாணுயின் நாம் அவன் செயலே நியாயப் படுத்தாது கொடுங்குற்றம் என்று முடிவு

செய்வோமன்ரே? கூற்றுவன் செயலும் அவ்வாருன ஒரு கொடுங் குற்றமே! இரண்டாவதாக இறைவனிடம் புகலடைந்த உயிரை அதன் உடலினின்றும் இறைவன் அனுமதியின்றிப் பிரிப்பதற்கு இவ்வுலகில் எந்த சக்தியும் துணிவு கொள்ள இயலாது.

மேலும் மார்க்கண்டேயர் கூற்றுவனிடம் அஞ்சவேண்டுவதில்லை என்று இறைவனிடம் வரம் பெற்றிருந்தார். இந்த உண்மையைச் கூற்றுவன் அறியாதவனல்லன்; ஆணவத்தால் அதை வேண்டுமென்றே புறக்கணித்தான். எனவே, இறைவனுல் உதைத்துக் கொல்லப்படத் தகுதியுடையவனே ஆனுன்.

இனித் திருவாசகத்தில் இந்தப் பகுதியை விளக்க டாக்டர் போப் அவர்கள் "நான் மாண்டொழிந்த கூற்றுவனை யொத்து உயிரற்றவனேயாவன்; எனினும் உன் பரிசம் இறந்த உயிரையும் மீண்டும் உயிர்ப்பிக்கும்" என்ருர். நம் வழிபாட்டுக்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் போப் அவர்களுடன் இங்கு நாம் மாறுபடுகின்ருேம். இந்தத் திருவாசகச் செய்யுளின் கருத்து ''நான் ஆற்றல்மிக்க அன்பினுல் உன்னைக்கூவிப் புரண்டு துதிக்கிலேன்; ஆனுல் என் நெறி பக்தி நெறியிலன்றி உன்னுடன் முரண்கொண்டு உன் ஆணையை மீறி நடந்து உன் தாமரை மலர் போன்ற திருவடியின் முன் நிற்கத் துணிவு கொண்ட கூற்றுவனின் நெறி போன்றதேயாகும். அஃதாவது இனிய பக்தி நெறியால் உன் திருவடியை நாடாது பகைத்து வந்து உன் திருவடியின் முன் நிற்கும் அபாய நெறியைக் கைக்கொண்டேன்" என்றவாறு.

இனி வாசகர்கள் இந்த இருவிளக்கங்களில் தங்களுக்குச் சரியானதென்று கருதும் ஒன்றை ஏற்றுக் கொள்ளலாம்."

தெளிவும் முழுமையும் பொருந்திய திருவாசகமணி அவர்களின் சரியான இவ் விளக்கத்துக்குமேல் டாக்டர் போப் அவர்களின் கருத்துப்பற்றி நாம் கூறுவதற்கு அதிகமில்லை. இக் கூற்றுவன் மீண்டும் உயிர் பெற்றது இறைவன் திருவடிப் பரிசத்தினுலன்று; "அந்தகனே எழுக" என்ற இறைவன் அருளிப் பாட்டினுல் மட்டுமே என்பதையும் நினைக.

தலவிசேடம் - மார்க்கண்டேயரின் இந்தச் சரிதப்பகுதி காசியில் நிகழ்ந்ததாக மேலே குறிந்தாம்.

காசி - வாரணசி என்ற இப் பெருநகரம் உத்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள புண்ணியத்தலம். கங்கைக் கரையில் விசுவநாதர் திருக்கோயில் என்ற பெயரில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டுத் திருக்கோயில்களினின்றும் மாறுபட்ட வகையில் அமைந்துள்ளது. கருவறையின் நான்கு பக்கங்களிலும் வாயில்கள். அடியார்கள் எதன் வழியும் உட்செல்லலாம். ஆவுடையாரின்றி இலிங்கத் திருமேனி மட்டும் ஒரு சிறிய பள்ளத்தில் நிறுவப்பட்டுள்ளது. அடியார்கள் தாங்களே தீண்டித் திருமுழுக்காட்டி வழிபடலாம். கருவறையைச் சூழ்ந்துள்ள திருச்சுற்றில் அன்னபூரணி, அவிமுக்தேசுரர் முதலிய மூர்த்தங்கள் சிறு சிறு சுற்றாலயங்களில் உள்ளன. திருக்கோயிலின் பெரும் பகுதி மொகலாயர் ஆட்சியில் மகமதியர்களால் கைப்பற்றப்பட்டு மசூதியாக மாற்றப்பட்டுள்ளது. திருக்கோயில் வளாகத்தில் அம்பிகையின் கோயில் தனியாக அமைந்துள்ளது. அம்பிகையின் திருநாமம் ***அன்னபூரணி***. திருக்கோயிலுக்குச் சுமார் ½ கிலோ மீட்டர் தொலைவில் ***காசி விசாலாட்சியின்*** கோயில் தனியாக உள்ளது. இது தமிழ் நாட்டினரான தனவணிக சமூகத்தினரின் ஆட்சியில் உள்ளது. இந் நகரில் வேறு வேறு இடங்களில் உள்ள அனுமான் திருக்கோயில், பைரவர் திருக்கோயில் ஆகியவை வழிபடத்தக்கன. கங்கைக்கரையில் உள்ள 64 நீராடும் துறைகளும் பார்க்கத் தகுந்தவை. கங்கையின் மறுகரையில் வியாசர் காசியுள்ளது. புகழ்பெற்ற காசி ஹிந்துப் பல்கலைக்கழகம் இந்நகரிலுள்ளது. திருக்கோயிலுக்கு அண்மையிலுள்ள நகரத்தார் திருமடமும் கேதார கட்டத்திலுள்ள திருப்பனந்தாள் காசி மடத்துக்குச் சொந்தமான குமாரசுவாமி மடமும் கேதார நாதர் திருக்கோயிலும் தமிழ்நாட்டு அன்பர்கள் தங்கவும் வழிபடவும் வசதியானவை.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய ***காசிரகசியம்*** என்ற அழகிய நூல் காசி நகரின் தலபுராணமாக உள்ளது. அதிவீர ராம பாண்டியர் செய்யுள் நடையில் மொழி பெயர்த்த தமிழ் நூல் ***காசிகாண்டம்***. இஃதும் காசியின் புராண வரலாறு கூறுவது.

திருக்கடவூர் - காசிக்குச் சென்று வந்தோர் தங்கள் தங்கள் ஊர்களில் காசி விசுவநாதர் திருக்கோயில் என்ற பெயரில் தனியே சிவாலயங்கள் அமைப்பதும் முன்பே உள்ள சிவாலயங்களில் காசி விசுவநாதர் விசாலாட்சி அம்மை மூர்த்தங்களுக்குத் தனியே சந்நிதிகள் அமைப்பதும்

நீண்ட காலமாக தமிழ்நாட்டில் நிகழ்ந்து வருவது. தமிழ்நாட்டில் உள்ள அட்ட வீரட்டத்தலங்களும் அவ்வாறு அமைந்தவையே. இவை தேவார காலத்துக்கும் முற்பட்டவை. அவ்வகையில் அமைந்த **திருக்கடவூர் வீரட்டானம்** மார்க்கண்டேயர் சரிதம் நிகழ்ந்த இடமாகப் போற்றப்படுகின்றது. இது சோழ நாட்டில் காவிரியின் தென்கரையில் தேவாரப் பாடல் பெற்ற 47-வது தலமாக வைத்தெண்ணப்படுவது. மூவர் பெருமக்களாலும் பாடப்பெற்ற பெருமையுள்ளது. பதிகங்கள் 5. உலா ஒன்றும் உள்ளது. புகழ் பெற்ற ***அபிராமி அந்தாதி*** இத்தலத்து அம்பிகையின் மீது பாடப்பட்டது. இறைவர்- ***அமிர்தகடேசுவரர்***. அம்பிகை - ***அபிராமி. பாலாம்பிகையுடனமர் கால சம்மார மூர்த்தியின்*** சந்நிதி தனியே உள்ளது. தலவிருட்சம் ***வில்வம்.*** தீர்த்தங்கள் - ***அமிர்தபுஷ்கரணி, காலதீர்த்தம். பாபவிமோசனலிங்கம், புண்ணிய வர்த்தமானலிங்கம், எதிர்காலேஸ்வரர், கள்ளவாரணப் பிள்ளையார்.*** மூர்த்தங்கள் தரிசிக்கத்தக்கன. குங்குலியக் கலய நாயனார்; காரி நாயனார்; திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார், அபிராமிபட்டர் ஆகியோர் இவ்வூரினர். திருக்கோயில் தருமபுர ஆதீனத்தின் ஆட்சியில் மிக நன்கு பராமரிக்கப்படுகின்றது. இப்பதி நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை - தரங்கம்பாடி இருப்புப்பாதையில் திருக்கடையூர் என்ற நிலையத்தில் உள்ளது.

இத் திருப்பாடலின்கண் நம் அடிகள் இறைவனைத் தாம் நேரிய அன்பு வழியில் சென்றடையும் ஆற்றல் இல்லேனாயினும், மாறுபட்டு வன்பு வழியிலேனும் அடைவேன் என்று கூறுவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். முக்கரணங்களின் தூய்மையால் விளையும் மெய்யன்பால் இறைவனை எய்த இயலாத நிலையிலும் தன்திருவடிப் பேற்றுக்கு என்னை ஆளாக்கப் பிறிதொரு கொள்கையை நினைவுறுத்திய இறைவனின் அருளிப்பாட்டுக்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன் என்பது பெறப்படுதலின் பதிகம் நுதலிய "***கைம்மாறு கொடுத்தல்***" பெற்றும்.

50. கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மறுமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளு மெண்ணெயும் போனின்ற எந்தையே சசூ

(இ-ள்)

எல்லாப் பொருள்களிடத்தும் நடுவிலும் கீழும் மேலும் ஆகிய எல்லா இடத்தும், எள்ளும் அதன்கண் நிற்கும் எண்ணெயும் ஒத்து நிறைந்து நிலையாக உள்ள என் தந்தையும்; தேனும் அதை உண்ணும் வண்டுகளும் நீங்காத கொன்றை மலர்மாலையை அணிந்தவனுமாகிய சிவபெருமான்; ஆற்றல் மிக்க அன்பினுல் அழைக்கும் வலியில்லாத என்னை; மெய்யடியார்களைக் கூவி அழைத்து அடிமைகளாகக் கொள்வது போன்று; கூவி அழைத்து அடிமையாக்கிக் கொள்வானே? என்றவாறு.

(வி-ரை)

இப்பாடலை, ''யாவுளும், நள்ளும் கீழுளும் மேலுளும் எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தை; கள்ளும் வண்டும் அருமலர்க் கொன்றையான்; கில்லெனை அன்பரிற் கூய்ப் பணி கொள்ளுமே" என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

யாவுளும் - இயங்குதிணை நிலைத்திணைகளாகிய சித்துப் பொருள் சடப்பொருள்களாகிய எல்லாப் பொருள்களுள்ளும் அப்பொருள்களாகவும் அவையுள்ள இடங்களாகவும் இறைவன் அந்தர்யாமியாகக் கலந்தும் அவற்றினின்றும் வேருகவும் உள்ளான் என்றவாறு. பதிப்பொருளாகிய இறைவன் அகண்டப் பொருளாக எங்கும் வியாபித்து ஏனையவற்றை எல்லாம் தன்னுள் வியாப்பியமாக அடக்கிக் கொண்டுள்ளான். கண்டப் பொருள்கள் அனைத்தும் அவனுள் அடங்கியவை. ஆணவமலமும் மாயாமலமும் அகண்டப் பொருள்களாக யாண்டும் வியாபித்திருப்பினும் இறைவன் வியாபகத்துள் அடக்கமே. கடல் என்பது கடல் நீர் பரவியுள்ள இடத்தைக் குறிக்கும். அவ்விடம் முழுவதும் கடல் நீர் பரவியிருப்பினும் அது கடலாகிய வெற்றிடத்துள் வியாப்பியமாக அடங்கி இருப்பதாகும். இங்குக் கடலிடத்தை இறைவனுகவும், கடல் நீரையும் அதிலுள்ள உப்பையும் மேற்குறித்த இருமலங்களின் வியாபமாகவும் ஒப்பிட்டு உளங்கொள்க.

அடுத்துக் கன்ம மலமும் அகண்டமான வியாபகப் பொருளே. கடலில் கடல்நீர் வியாப்பியமாக அடங்கி இருத்தல் போன்று கன்ம மலமும் மாயாமலத்துள் வியாப்பியமாக அடங்கி இருக்கும். பசுவாகிய ஆன்மாக்கள் பல. அவை பெத்த நிலையில் ஆணவ மலப்பிணிப்பால் அணுவளவாகச் சுருங்கி இருப்பினும் முத்தி நிலையில் அகண்டமாக எங்கும் வியாபகமாக நிற்பன. இருப்பினும் இறைவன் வியாபகத்துள் அடங்கியே நிற்கும். எனவே, இறைவன் கண்டம் அகண்டம் என்ற எல்லாப் பொருள்களையும் தன் வியாபகத்துடன் அடக்கிக்கொண்டு தான் அவற்றுள்ளும் விரவி நிற்பன். இதனையே ஈண்டு **யாவுளும்** என்றருளினர். இறைவன் - என்ற சொல்லின் பொருள் யாண்டும் நிறைந்துள்ளவன் என்பது.

இறுத்தல் - தங்குதல். யாண்டும் தங்குதல். இச் சொல் சிவபெருமானுக்கே வழங்கப்பட்டிருத்தலைப் பழைய நூல்களில் பரக்கக் காணலாம்.

நள்ளும் கீழுளும் மேலுளும் - ஒரு பொருளைப் பகுக்கின் மேல் கீழ் நடு என்று மூன்று பகுதிகளாக ஓர் அளவுக்குட்பட்டு நிற்கும். அதைக் கண்டப் பொருள் என்பர். இதனால் கண்டப் பொருள்கள் அனைத்திலும் இறைவன் நிறைந்துள்ளான் என்பது பெற்றும். **நள்ளும்** - நள்ளுளும் என உருபு விரித்துக் கொள்க.

எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தை - ஆமணக்கு விதை, கடலை, பனை, தேங்காய் போன்றவற்றிலும் நெய் கிடைக்கும். ஆயினும் அவற்றில் மேல் ஓடுகள் கடினமாக நெய்ப்பசையின்றி நிற்பன. சாறுள்ள கனிகளிலும் தடித்த மேல் தோல்களில் கனியின் சாறு இருப்பதில்லை. ஆனால் எள்ளின் மேல் தோல் மிகவும் மெல்லியது. அதன் கண்ணும் நெய்ப்பசை இருக்கும். எனவே மேல் தோல் உட்பட எள்ளில் நெய்ந்நிறைந்திருப்பது இறைவன் பொருள்கள் முற்றிலும் வியாபித்து நிற்பதற்கு உவமையாயிற்று.

இந்த உண்மையை, "எள்ளில் எண்ணெய் போன்றும், தயிரில் வெண்ணெய் போன்றும், மரக்கட்டையில் தீ போன்றும் பரமாத்மன் ஜீவாத்மாவிடம் அந்தர்யாமியாக இருக்கிறான்" என்று உபநிடதம் கூறும். (ஸ்வேதாச்வதரோப நிடதம் 1 - 15)

நின்ற - நிற்றல் -நிலை பெற்றிருத்தல். காலத்தாலும் இடத்தாலும், பிற பொருள்களாலும் கேடின்றி நிலை பெறுதல். எள்ளில் உள்ள எண்ணெய் காலத்தாலும், செக்கு முதலிய கருவிகளாலும், கேட்டைதலும், பிரிக்கப்படுதலும் காண்கின்றோம். இறைவன் அவ்வாறு கேடுபடாமலும் பிரிக்கப்படாமலும் நிலைபெற்றிருப்பான் என்றவாறு.

எந்தை - நான் அவன் மைந்தனாதலின் அவனால் எப்பக்கமும் சூழ்ந்து நின்று காக்கப் பெறுவதற்கு உரிமையும் கூவிப் பணிகொள்ளப்படுவதற்கு உரிமையும் உள்ளவன் என்க.

கள்ளும் வண்டும் அறாத கொன்றையான் - கொன்றை மலர் காலையில் மலர்ந்த நாண் மலராயின் அதில் தேன்நிறைந்திருக்கும், வண்டுகள் மொய்த்துத் தேனை உண்ணும், தேன் அற்று விடும்; வண்டுகளும் வேறிடம் பறந்து சென்று விடும்; மறுநாள் அந்த மலர் வாடி உதிர்ந்து விடும். ஈண்டுக் கொன்றை என்றது இறைவன் அணிந்துள்ள கொன்றை மலராலான மாலையை. அஃது அவன் உபாங்கங்களுள் ஒன்று. இறைவன் திருவுருவம் மட்டுமின்றி அவன் உபாங்கங்கள் முதலியனவும் அவன் குணமாகிய அருளாகும். அவன் குணியாக நிற்கின்றான். எனவே, திருவருள் காலத்தாலும் இடத்தாலும் எல்லையில்லாததாகி நித்தியப் பொருளாக யாண்டும் நிறைந்துள்ளது. எனவே, காலதத்துவத்தைக் கடந்து நிற்கும் திருவருளாகிய கொன்றை என்றும் வாடி உதிர்வதில்லை. அதிலுள்ள தேனாகிய வீட்டின்பம் எத்தனை வண்டுகள் மொய்த்து எத்தனைக் காலம் உண்டாலும் அளவு குறைந்து அற்றுப் போவதில்லை. ஆதலின், "**கள்ளும் வண்டும் அறுமலர்க் கொன்றை**" என்றார் ; "**கள்ளறுக் கொன்றை**", "**வண்டறுக் கொன்றை**" என்று பிரித்துக் கூட்டியுரைக்க. இதுபற்றி முன்னம் கீர்த்தித்திருவகவல் (1- ல்) ''திருவடி" என்றதன் கீழ் எடுத்தாண்ட சிவஞான சித்தியார் சுபக்கம் சூத்திரம் -1- செய்யுள் 47-ம் அதற்குச் சிவாக்கிர யோகிகள் உரையும் நம் விளக்கமும் காண்க.

இங்கு "**வண்டு**" என்றது வீட்டின்பத்தில் ஆனந்தாதீதத்தில் திளைக்கும் முத்தான்மாக்களை. இது பற்றி முன்னம் கீர்த்தித்திருவகவல் (73 -ல்) ''தேன் அமர்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

இவ்வுண்மையையே "பூரணத்தினின்றும் எத்தனை அளவு எடுத்தாலும் மீதமாக நிற்பது பூரணமே" என்ற உபநிடதம் உரைப்பது சிந்திக்க.

எந்தையாகிய கொன்றையான் - என்று கூட்டியுரைக்கவும் நின்றது.

கில்லேனே- கில் + ஏ + ஏன். கில் - பகுதி; ஏ - எதிர்மறை இடைநிலை; ஏன் - விகுதி. கில்லேன் எனே - கில்லேனே என்பது *கில்லேனே* என்று குறுகி நின்றது. *எனே* - எனேயும் என்பதிலுள்ள உம்மை தொகுத்தலாயிற்று.

அன்பரிற் கூய்ப் பணி கொள்ளும் - மெய்யன்பர்களைக் கூவி அடிமைகளாக ஏற்றுக் கொள்வது போல ஆற்றல்மிக்க அன்பால் அழைக்க வலியற்றவனுகிய என்னையும் கூவி அழைத்துப் பணி கொள்வானே என்றவாறு. அவன் பேரருளாகிய அடையாள மாலை அணிந்துள்ளவன். ஆதலின் தகுதியற்ற என்னையும் தன் அருள் காரணமாகக் கூவி அழைத்து அடிமையாக ஏற்றுக் கொள்வான் என்றுரைக்கவும் நின்றது காண்க.

"*பணிகொள்ளும்*" என்பதிலுள்ள "*கொள்ளும்*" என்பது ''காகு" என்னும் ஓசை வேறுபட்டால் இங்ஙனம் இருவகைப் பொருள் கொள்ள நின்றது என்றும், காகு என்பது ஒரு சொல்லிற் பிறிதொரு பொருள் தோன்றுதற்குரிய ஓசை வேறுபாடு என்பர் வடநூலார் என்றும் விளக்குவது கதிர்மணி விளக்கம்.

எந்தையே - ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. இவ்வாறு தகுதியற்ற என்னையும் கூவி அடிமையாக ஏற்றுக் கொண்டதால் அவன் எனக்குத் தந்தையேதான் என்றவாறு.

இறைவன் மெய்யடியார்களை வலிந்து கூவி அடிமையாக்கிக் கொள்வதை;

திருச்சிற்றம்பலம்

"பித்தனு மாகப் பின்னும் பேயனு மாக ; நீயின்
றெத்தனை தீங்கு சொன்னு யாதுமற் றவற்ரு ஞணேன்
அத்தனைக் கென்னை யொன்று மறிந்திலை யாகி னின்று
வித்தகம் பேச வேண்டா பணிசெய வேண்டு" மென்ருர்.

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம் 41)

என்று பெரியபுராணம் பேசுவதாலறிக.

இத் திருப்பாடலில் நம் அடிகள், ஆற்றல் மிக்க அன்பினுல் கூவி அழைக்கும் வலியற்றவனுகிய என்னையும் மெய்யடியார்களைக் கூவிப் பணி கொள்வது போலக் கூவிப்பணி கொள்வானே என்றருளுவதால் சதகம் நுதலிய "*பத்தி வைராக்கிய விசித்திரம்*" பெற்றும். சிவபெருமான் தன் குணமாகிய பேரருளையே வடிவமாகக் கொண்டவன். அவன் உபாங்கங்களுள் ஒன்ருன கொன்றை மாலையும் அவன் அருளே. ஆதலின் தகுதியற்ற என்னையும் அவன் கூவி அடிமையாக ஏற்றுக் கொள்வான். அவ்வருளிப்பாட்டுக்கு யான் என்ன கைம்மாறு செய்வேன் என்று இரங்குவது குறிப்பால் பெறப்படுவதால் பதிகம் நுதலிய "***கைம்மாறு கொடுத்தல்***" பெற்றும்.

51. எந்தை யாயெம் பிரான்மற்று மியாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே. சஎ

(இ - ள்)

எனக்குத் தந்தையும் அன்னையும் தலைவனும் ஆகிய சிவபெருமான், ஏனைய எல்லா ஆன்மாக்களுக்கும் தந்தையும் தாயும் தலைவனும் ஆவன்; தனக்குத் தந்தை தாய் தலைவன் ஆகிய அம்முறை உரிமை இல்லாதவன்; ஆன்ம கோடிகளில் எவரும் மனத்தாலும் அறிவதற்கு அரிய ஞானமாகிய திருவையுடைய பெருமான்; யான் அவனுக்கு அடிமையாவதற்கு முன்பே என்னுட் புகுந்து ஆட் கொண்டவன் என்றவாறு.

(வி - ரை)

எந்தை ஆய எம்பிரான் - மனித வாழ்வில் மக்களுக்கு இன்றியமையாத தொடர்பினர் தந்தையும் அன்னையும். தலைவனுமேயாவர்.

எம் - என்றது ஈண்டு அடியார்கள் அனைவரையும் உளப்படுத்திக் கூறிய பன்மைக் குறிப்பு. மனிதப் பிறப்பில் உயிர் தாயின் கருவில் சேர்வதற்கு முன்பே இருதிங்கள் தந்தையின் உடலில் தங்கியிருப்பது. பின்னர்க் கல்வி சீலம் முதலியவற்றைப் புகட்டிச் சான்ருேனுக வளர்ப்பவனும் தந்தையே. பின்னர்த் தன் செல்வத்தைக் கொடுப்பவனும் தந்தையாதலின் தந்தையை

முதலில் வைத்தார். ''இறைவன் உதவிய உடம்பினை ஏற்ற ஆன்மா அவனுடைய பரம ஐசுவரியம் முழுதும் சுதந்தரமாக அனுபவிக்கும் சித்தாக விளங்கத்தக்க அக்குகனை 'எந்தை' என்றது "ஏற்புடைத்தேயாம்" என்று ஸ்ரீ மத் பாம்பன் சுவாமிகள் கூறுவது நினைக. (தகராலய ரகசியம் பக்கம் 44).

எம் - என்பதை ***ஆய்*** என்றதன் முன்பும் கூட்டியுரைக்க.

எம் ஆய் - கருவில் பின்னர்ப் பத்துத்திங்கள் சுமந்து ஈன்று புரந்தவளாகலின் தாயை அடுத்து வைத்தார். கருவுற்ற காலத்தில் மகவுக்காக அவள் நுகரும் துன்பங்களை முன்னம் போற்றித் திருவகவல் (13 முதல் 25 வரையுள்ள) பகுதிகளையும் அவற்றின் கீழ் விளக்கியவற்றையும் பார்த்தறிக.

யாய் - அன்னை. அஃது ''ஆய்" என்றும் வழக்கிலுள்ளது. ***யாய்*** அன்னை என்பதை

" யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு யெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"

(குறுந்தொகை 40)

என்றதிற் காண்க.

எம்பிரான் - பிரான். தலைவன்- தந்தை தாயரால் வளர்க்கப் பெற்று இளமைப் பருவம் எய்தியதும் ஒருவற்குத் தலைவன் தொடர்பு ஏற்படுகின்றது. அந்தத் தலைவன்; குடித்தலைவன், ஊர்த்தலைவன், கல்வித்தலைவன், தொழில் தலைவன், கட்சித்தலைவன், நாட்டுத்தலைவன் ஞானோபதேசத் தலைவன் எனப் பல்வகையில் அமைவன். தந்தை தாய் தலைவன் என்ற இம்மூவரும் பிறவிகள் தோறும் வேறு வேறாக அமைவர். இவர்கள் உடலைப் பற்றிய தொடர்புள்ளவர்கள். உயிரைப்பற்றிய தொடர்புள்ள சிவபெருமான் அநாதி கேவல நிலையிலிருந்து ஆன்மா வீடு பேறு எய்தும் வரையுமன்றிப் பின்னர் வீடு பேற்றிலும் தந்தையும் தாயும் தலைவனுமாய் நிற்பவன். ஆதலின் இம்மூவருக்கும் "***எம்***" என்ற உரிமை அடைமொழி புணர்த்தோதினர்.

மற்று யாவர்க்கும் தந்தை தாய் தம்பிரான். மற்று - இந் நிலவுலகில் சிவனடியார்களாக என்னுடன் கூடியிருப்பவர்கள் தவிர ஏனைய உயிர்களுக்கும். அவர்களில் உலகாயதரும் புறப்புறம் புறம் என்ற நெறியினரும் அடங்குவராகலின் **எம்** என்ற அடையின்றி வாளா கூறினர்.

தந்தை தாய் தம்பிரான் - அவர்கள் சிவபெருமானை ஏற்காவிடினும் அவன் அவர்களுக்கும் பிறவி தோறும் தந்தையும் அன்னையும் தலைவனுமாக நின்று உய்விக்கின்றான் என்றவாறு.

யாவர்க்கும் - மேற்கூறியவாறன்றி நம் அடிகளுடன் பூவுலகில் வாழ்ந்த சிவனடியார்களைத் தவிர ஏனையோருக்கும் என்றுரைப்பினும் ஒக்கும். அவர்களுள் சிவநெறியினரும் அடங்குவர். அந்த ஏனையோர் நாத தத்துவத்திலுள்ள புவனங்களில் மேவிச் சிவதீக்கை பெற்று நாத மூர்த்தியை வழிபட்டு அதிகாரமலவாசனையும் நீங்கி முத்தராய்ச் சூக்கும லயவாசனை மாத்திரமுடையவர்களாய் அப்புவனங்களிலுள்ள போகங்களை நுகர்ந்து கொண்டிருப்பவர்களிலிருந்து அநாதி கேவலத்தில் உள்ளவர்கள் முடிய உள்ள ஆன்மாக்கள் யாவருக்கும் என்க.

பிரான் மற்றியாவர்க்கும் - என்பது சீகாழித் தாண்டவராயர் கொண்ட பாடம்.

தனக்கு அஃதிலான் . தனக்கு - சிவபெருமானுக்கு. எல்லோருக்கும் தந்தையாயும் தாயாயும் தலைவனாயுமுள்ள சிவபெருமான் தனக்குத் தந்தை தாய் தலைவன் ஆகியோர் உள்ளவனா எனின்; இலன். சிவபெருமான் ஓரிடத்தில் பிறந்தான் ஓரிடத்தில் இறந்தான் என்று யாண்டும் கேட்கப்படாமையில் பிறவா யாக்கைப் பெரியோனாகிய அவனுக்குத் தந்தையும் தாயுமிலர். இதை நம் அடிகளே பின்னர் ''கோயில் . . . . தாயுமிலி தந்தையிலி தான் தனியன் . . . ." (திருவாசகம் 257) என்று கூறுவது காண்க. "சேர்ந்தறியாக்கையான்" (திருவாசகம் 187) என்பதால் தனக்கு மேல் தலைவன் ஒருவனையும் இல்லாதவனானான். இதனை;

திருச்சிற்றம்பலம்

" பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க விருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படுமெம்மிறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே.

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 9)

என்று நம் திருமூலநாயனார் தெருட்டுவது காண்க.

அஃது - இச்சொல் அஃறிணை ஒருமைச் சுட்டு. ஈண்டுத் தந்தை தாய் தம்பிரான் ஆகிய மூவரும் உயர்திணை. எனவே அவர்களைச் சுட்டாமல் அவர்கள் முறை உரிமையைச் சுட்டி நின்றது.

முந்தி என்னுள் புகுந்தனன் - முந்தி - நான் படைப்புக்கு வருமுன், காரணதேகம் பெறுவதற்கு முன்பாக அநாதி கேவலத்தில் கிடந்த போதே.

என்னுள் புகுந்தனன் - என் உயிரினுள்ளே நான் அறியாமல் நுழைந்தான். ஆன்மா இறைவனின் அட்ட மூர்த்தங்களுள் ஒன்று என்பது நினைக. ஆன்மா அநாதியாதலின் இறைவனும் அதனுள் அநாதியாகவே இருக்கின்றான்; ஆதலின், ஈண்டுப் புகுதல் என்பது உபசாரமாத்திரையாகவே நின்றது. இவ்வுண்மையை நம் அடிகளே பின்னர்,

திருச்சிற்றம்பலம்

" உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியே னணிகொடில்லை கண்டேனே"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 475)

என்று அருளுவது காண்க.

இதற்கு இவ்வாறன்றி; *முந்தி* - எதிரில் தோன்றி எனவும்; விரைந்து எனவும்; அமரர் முனிவர் ஆகியோர் சிந்தனைகள் தன்னையடையு முந்தி

எனவும் பலவாறுரைத்தனர் முன்னுரையாளர்.

புகுந்தனன் - முன்னம் திருப்பாடல் 15-ல் ''புகுந்திடுவான்'' என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

சிந்திப்பதற்கான நெஞ்சமோ அஃது இடம் பெறுதற்கான உடம்போ எனக்கில்லாத அநாதி கேவலநிலையிலும் அவன் என்னுள் இருப்பதாலும் என் சிந்தனை முதலியவற்றையும் அவனே இயக்குவதாலும் என் கருத்தை அறிந்து அதை நிறைவேற்றுவான் என்றவாறு. ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகி நின்று தேடினே னாடிக் கண்டேன்
உள்குவா ருள்கிற் றெல்லா முடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட் டேனே"

(திருமுறை *4-75-3*)

" உருத்திரனை உமாபதியை உலகா னானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன் தன்னைப்
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பி னானைப்
பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்பதனை நித்திலத்தின் தொத்தொப் பானை
நீறணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே"

(திருமுறை *6-90-5*)

திருச்சிற்றம்பலம்

எனவரும் நம் அரசுகளின் அமுத மொழிகளும், முன்னம் 45 - ம் திருப்பாடலில் கீழ் எடுத்தாண்ட திருமுறை ***6-19-8*** -ம் பாடலும் சுவைக்க.

யாவரும் சிந்தையாலும் அறிவரும் செல்வனே. யாவரும் - மேலே முதலாம் அடியில் யாவர்க்கும் என்றதன் கீழுரைத்த நம் அடிகளும் அவருடன் இம்மண்ணுலகில் வாழ்ந்த மற்றை அடியார்களும் அவர்களுக்கு மேல் நாததத்துவம் வரையுள்ள புவனங்களில் வாழும் யாவரும் என்க.

சிந்தையாலும் அறிவரும் - முக்கரணங்களில் உடம்பு, பருப் பொருளாதலின் அதன் இயக்கம் ஓர் எல்லைக்குட்பட்டு மெதுவாக நிகழும். மொழி, உடம்பை விட நுண்மையானதாகலின் அதன் இயக்கம் விரைவாகவும் இயங்கும் எல்லை பன்மடங்கு மிக்கதாகவும் இருக்கும். மனம், மிக நுட்பமானதாகலின் அது, நொடிப்பொழுதில் எண்ணற்ற புவனங்களிலும் சஞ்சரித்து மீளும். ஆதலின் அதற்குச் "சதாகதி" என்றும் பெயருண்டு. ஆயினும் மனத்தின் செயலாகிய சிந்தை இயங்குவது அதை இயக்குவிக்கும் உயிரினுலாகும். உயிர் இறைவனின் அட்டமூர்த்தங்களுள் ஒன்று. ஆதலின் உயிருக்கு உயிராகிய இறைவன், உயிரை இயக்க உயிர், சிந்தையை இயக்கும். இயக்குவோன், தன் உள்ளத்தில் ஒரு செயலை உன்னி அதை வடிவாக்கவே கருவிகளை இயக்குவன். எனவே கருவிகளின் இயக்கத்துக்கு முன்பே அவை செய்து முடிக்கும் செயலை இயக்குவோன் அறிந்தவனுவன். ஆதலின் கருவியாகிய சிந்தையாலும் அறிதற்கு அரியவன் சிவபெருமான் என்றவாறு. சிந்தை, சடப் பொருளாகிய மாயேயம். அது மாயையின் காரியம். அது, மாயையைக் கடந்து நின்று அதை இயக்கும் இறைவனை அறிவது இயலாதது என்க.

செல்வனே- ஞானமாகிய திருவையுடையவன். அவன் யாவராலும் அறிவரியவனுதல் போல அவனது ஞானமாகிய செல்வமும் யாவராலும் அளவிட்டு அறிவதற்கு அரியது என்க. "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்பது ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு, ''முக்கட் செல்வர்" என்று போற்றுவது புறநானூறு (பாட்டு 6 வரி 18)

ஏகாரம் ஈண்டு தேற்றப் பொருளில் வந்தது. திருமால் முதலிய பிற தெய்வங்களினின்றும் பிரித்துக் காட்டுவதாகக் கொண்டு பிரிநிலை ஏகாரம் எனலுமாம்.

இத்திருப்பாடலில் யாவர்க்கும் தந்தை தாய் தம்பிரானு யுள்ளவன் எமக்கு எந்தையாயும் எம் அன்னையாயும் எம் பிரானுயு முள்ளான் என்றதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும், யாவரும் சிந்தையாலும் அறிவரும் செல்வனுகிய அவன் முந்தி என்னுள் புகுந்தனன் என்றதால், தகுதியற்ற என்னையும் வலிந்து புகுந்து அடிமையாகக் கொண்ட பேரருளுக்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன் என்று குறிப்பில் கூறுவதால் பதிகம் நுதலிய "**கைம்மாறு கொடுத்தல்**" பெற்றும்.

52. செல்வ நல்குர வின்றிவிண் ணேர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே சஅ

(இ - ள்)

நாம் தற்போதுள்ள பொருளாதார நிலைக்கு மேலாக நல்வினைப் பயனுற் பெறப்படும் உயர்நிலையெய்த வேண்டும் என்ற ஆசையும்; தீவினைப் பயனுல் நாம் இப்போதுள்ள நிலைக்கும் கீழாக இழிந்து விடுவோமோ என்ற அச்சமும் இல்லாதவனுய்; விண்ணுலக வாசிகள், மனிதர்கள், நரகில் உழல்பவர்கள் ஆகிய அனைவருக்கும் அனைத்துக்கும் எய்துதற் கரியவனுமான பரம் பொருளின் அளவுபடாத திருவடிகளைக் கண்டு வழிபடும் பேறு பெற்றும், அவற்றை நீங்கினேன்; இந்தப் பிரிவு கல்லின் வகைகளில் ஒன்று எனக் கருதற்குரிய வன்நெஞ்சம் உடைய நான் அடைந்த துன்பமாகும்.

(வி - ரை)

செல்வம் - தற்போதுள்ள நம் பொருளாதார நிலைக்கும் மேலாக நம்மால் கருதப்படுவது.

நல்குரவு - நாம் தற்போதுள்ள பொருளாதார நிலைக்கும் கீழாக இழிந்து விடுவோமே என்ற அச்சம்.

இறைவனுக்கு, அவன் தற்பொழுதுள்ள செல்வ நிலைக்கு மேலான நிலை ஒன்று இல்லை, அவன் இப்போதிருக்கும் நிலைக்கும் கீழாக இறங்கி விடுவோமோ என்ற அச்சமுமில்லை. இதனையே, ''வேண்டுதல் வேண்டாமை யிலான்" என்றது திருக்குறள் (4). இதை ''அவாப்தகாமம்" என்பர் வடநூலார்.

செல்வமும் நல்குரவும் பண்பாகுபெயர்களாக முறையே செல்வத்தின் மீதுள்ள ஆசையையும், நல்குரவு பற்றிய அச்சத்தையும் குறித்து நின்றன.

விண்ணேர் புழு புல் வரம்பு இன்றி - விண்ணேர் - மண்ணுலகுக்கு மேற்பட்ட உலகங்களில் வாழ்பவர்கள். மிகுந்த பசு புண்ணியங்களைச் செய்து அவற்றின் பயன்களாகிய இன்பங்களைத் துய்ப்பதற்கு மேலுலகங்களில் பிறந்து வாழும் இவர்கள் மூவுலகங்களிலும் இயங்கும் ஆற்றலுள்ளவர்கள். இது நல்வினைப் பயன் காரணமாக வந்த பிறவிகளில் மனிதப் பிறவிக்கு மேற்பட்ட நிலையைக் குறிக்கும்.

புழு - இஃது அழுக்கு நிலத்தில் வாழ்வதும் மண்ணில் சிறிது தூரமே இயங்க வல்லுதுமான உயிர்ப்பிறவி. ஈண்டு மனித உயிர்களைக் குறித்து நின்றது.

புல் - இது, விண்ணர், புழுப்போன்று இயங்குதிணை உயிரன்றி நிலையியல்திணை உயிர். ஈண்டு இது, தீவினைகளை மிகுதியாகச் செய்து அவற்றின் பயனை நுகரும் நரகம் முதலிய கீழுலக வாசிகளைக் குறித்து நின்றது.

வரம்பு இன்றி - பாகுபாடில்லாமல். புல்லுக்கு அரியதாகிய ஒரு பொருள், புழுவுக்கு அரியதன்றுயும் ; புழுவுக்கு அரியதாகிய ஒரு பொருள் விண்ணவர்களுக்கு அரியதன்றுயும் இருக்கலாம்; ஆனுல் ஈண்டு இந்தப் பொருள் அத்தகைய பாகுபாடின்றி எல்லா உயிர்களுக்கும் அரும்பொருள் என்றுர்.

"***இன்றி***" எனும் வினையெச்சம் **அரும் பொருள் ஆக** இருக்கும் என்ற ஆக்கச் சொல்லுடன் முடிவது குறிக்க.

இப் பகுதியுள் "***செல்வம் நல்குரவு இன்றி***" என்பதற்கு ''நல்வினைப் பயனுகிய செல்வமுடையார், தீவினைப் பயனுகிய நல்குரவுடையார் என்ற ஏற்றத்தாழ்வு இன்றியும் - என்று உயிர்களுக்குப் புணர்த்துரைத்தனர் முன்னுரையாளர்கள். உயிர்களின் உயர்வு தாழ்வு "***விண்ணேர் புழுபுல் வரம்பு இன்றி***" என வருவதால் "***செல்வம் நல்குரவு இன்றி***" என்பதை இறைவனுக்குப் புணர்ந்துரைத்தலே சிறப்பு என்க.

யாவர்க்கும் - ஆன்ம கோடிகள் அனைவருக்கும். நாத தத்துவத்தில் உள்ள புவனங்களில் வாழ்வோர் முதல் அநாதி கேவலத்தில் உள்ளோர் வரை உள்ள உயிர்கள்.

எல்லையில் கழல் கண்டும் பிரிந்தேன் - எல்லைஇல் கழல் - சொல் எல்லையையும் கருத்து எல்லையையும் கடந்து நின்ற இறைவன் திருவடிகள். பின்னரும் நம் அடிகள் ''பாதாளம் ஏழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர்'' என்றுர். (திருவாசகம் 164). கழலுக்கு எல்லை இருந்திருப்பின் ஒரு வேளை திருமால் கண்டிருப்பான் என்க.

கழல் - தானியாகு பெயராக இரண்டு திருவடிகளையும் குறித்து நின்றது. ஈண்டு, ''முற்றுமுணர்தல்'' ''முடிவிலாற்றலுடைமை'' என்ற அவன் குணங்களைக் குறிப்பாலுணர்த்தின.

எல் ஐ இல் கழல் என்று பிரித்து மெய்ஞ்ஞானமாகிய ஒளிக்கும் அழகுக்கும் இருப்பிடமான கழல் என்றுரைக்கவும் நின்றது. இறைவன் திருவடிகளை "மெய்ஞ்ஞானம்" எனவும் "அருட்சத்தி" எனவும் சிவாகமங்கள் செப்பும்.

கண்டும் பிரிந்தனன் - வரம்புக்குட்பட்ட பொருளைக் காணும் கண்களுக்கு வரம்புட்படாத இறைவன் திருவடிகளைக் காணும் ஆற்றலின்று. ஆயினும் அவன் அருளினுலே எனக்கு அவற்றைக் காட்டினுன். கிடைத்தற்கரிய பொருள் ஒன்று கிட்டின் அறிவுடையோர் அதனை விட்டு நீங்காமல் நன்கு பாதுகாப்பர். ஆனுல் நான் அத்திருவடிகளைக் காணும் பேறு பெற்றும் பின்னர் அவற்றைப் பிரிந்தேன். அதற்கு என் தீவினையின் மிகுதிப்பாடே காரணம். அந்தத் தீவினையை முற்றிலும் ஒழிப்பதற்கு அவன் இதுவரை நல்கிய அருளை விட மிக அதிகமாக நல்க வேண்டும் என்பது குறிப்பு.

கல்வகை மனம் - செங்கல் கருங்கல் மாக்கல் ஓடைக்கல் படிகக்கல் போன்ற கல் வகைகளுள் என் நெஞ்சும் மனக்கல் என ஒன்ருயிற்று. ஆதலின் அதில் குழைவு இல்லை. எனவே திருவடிக்காட்சி கொடுத்த இறைவன் பிரிந்ததும் அதனுல் நான் துன்புறுவதும் தக்கதே. இந்தத் துன்பம் நீங்க வேண்டுமாயின் அவன் மீண்டும் காட்சி தந்து என் மனமாகிய கல்லைப் பிசைந்து மென்கனியாக்கும் வித்தையைச் செய்ய வேண்டும் என்றவாறு. முன்னம் 25-ம் பாடலில் "நெஞ்சம் கல்லாம்" என்றதும் அதன் கீழுரைத்தவையும் காண்க.

பட்டகட்டமே - நான் அனுபவிப்பது துன்பமே. இன்பம் சிறிதும் கலவாத துன்பம் என இன்பத்தினின்றும் பிரித்தோதுவதால் ஏகாரம் பிரிநிலையாயிற்று. தேற்றம் எனினும் அமையும். "**எல்லையில் கழலை**"ப் பிரிந்ததனுல் பட்ட துன்பம் எல்லையற்றதாயிற்று. அரிய பொருள் ஒன்றைப் பெற முயன்றும் அது கிட்டாததால் வரும் துன்பத்தினும் கிட்டிய பின் இழப்பதால் வரும் துன்பம் மிகக் கொடியதாகலின் பட்ட கட்டமும் எல்லையில்லாததாயிற்று.

"*கட்டம்*" என்னும் பெயர்ப் பயனிலைக்கு எழுவாய், "*பிரிந்தனன்*" என்பது. அந்தப்பிரிவு எனக்குப் பெருந்துன்பமாயிற்று என்றவாறு.

இத் திருப்பாடலில் யாருக்கும் காட்சிக்கு அரிய பொருள் கல்வகை மனத்தினனாகிய எனக்கு எளிவந்து காட்சி தந்தது; எனினும் நான் அதைப் பிரிந்து எல்லையில்லாத துன்பத்தை அடைகின்றேன் என்பதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; காட்சி கொடுத்த அருளிப்பாட்டுக்கு நான் கைம்மாறு செய்திலேன் ; அதற்குக் காரணம் என் கல்வகை மனம் என்பதால் பதிகம் நுதலிய "**கைம்மாறு கொடுத்தல்**" பெற்றும்.

53. கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே சரு

(இ - ள்)

ஆனேற்று ஊர்தியினனே! உலகியலறிவு கூட இல்லாத சிறியேனாகிய என்னைப் பாசப்பிணிப்பு நீக்கி அடிமையாக ஏற்றுக் கொண்டு, திருநீறு அணிந்த மெய்யடியார்களுடன் மற்ற அன்பர்கள் அனைவரும் கண் கூடாகக் காணும் வண்ணம் சமய வாதம் புரிவதற்கான வித்தியா மண்டபத்தில் வீற்றிருக்கும்படி அமர்த்தினாய்; இதற்கு யான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்?

(வி - ரை)

மூன்றாவது அடியின் ஈற்றுச்சீரான ''ஏற்றினை" என்பதை முதலிலும் அதன்பின் நான்காவது அடியையும், பின்னர், முதலடிமுதல் மூன்றும் அடியின் மூன்றாவது சீர்வரையுள்ள பகுதிகளையும் அமைத்துப்பாடலை அன்னுவயப்படுத்திக் கொள்க.

ஏற்றினை - முன்னிலைப் பெயர். ஆனேற்றின் வடிவமாக உள்ள அறத்தை இறைவன் ஊர்தியாகக் கொண்டு நடத்துபவன் என்று சிவாகமங்கள் கூறும். ஆதார ஆதேயப் பாதுகாப்புக்கு அடையாளமாக, ஊர்தியாக இவரப்படுபவதும் கொடியாக உயர்த்தப்படுவதும் ஆனேறே என்பது நினைக.

"கண்ணி கார்நறுங் . . . .
ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப.

(புறநானூறு - கடவுள் வாழ்த்து)

என்பது பாரதம் பாடிய பெருந்தேவனார் வாக்கு.

எட்டினேடு இரண்டும் அறியேனையே - ஒன்றும் அறியாத அறிவிலியை. தமிழ் எழுத்துகளில் முதலிற் நிற்பன உயிரெழுத்துக்கள். அவற்றுள் அகரமும் உகரமும் கூட வரி வடிவில் எழுதத்தெரியாதவன் என்றார். தமிழ் எண் வடிவங்களின் ''அ'' எட்டையும் ''உ'' இரண்டையும் குறிக்கும். இவற்றின் கூட்டுத்தொகை பத்து. அது தமிழ் எண் வடிவில் ''ய'' என்று வரையப்படும். எழுத்தறிவில்லாதவர்கள் கூட உலக அனுபவத்தால் எட்டும் இரண்டும் சேர்ந்தது பத்து என்பதை அறிவர். நான் அந்த அளவு உலக அறிவு கூட இல்லாதவன் என்றவாறு. இது நான் கலைத்துறையில் அறிவில்லாதவன் என்றவாறு. நம் அடிகள் தம்மை இவ்வாறு தாழ்த்திக் கொள்வதைத் திருவாசகத்தில் ஆங்காங்குப் பரக்கக் காணலாம். இந்த உலகியலறிவின்மையை;

" அ உ அறியா அறிவில் இடைமகனே
நொ அலையல் நின்னாட்டை நீ "

(யாப்பருங்கலம் சூத் 7 விருத்தியுரை)

என்பதிற் காண்க.

நம் அடிகள் இவ்வாறு கூறினாராயினும் இந்த அடியில் பொதிந்துள்ள விழுமிய பொருளைக் காண்பாம்.

எட்டும் இரண்டும் சேர்ந்தால் அதன் கூட்டுத்தொகை பத்து. இந்த எண்ணின் தமிழ் வரிவடிவம் ''ய''. இஃது ஆன்மாவை அறியாதவன்; ஆன்ம இலக்கணம் அறியாதவன்; தன்னையே அறியாதவன் என்பது போதரும்; இது யோக நெறி அறியாதவன் என்பதாகும்.

"ய" கரம் ஆன்மாவைக்குறிக்கும்,

" உற்ற குறியழியு மோதுங்காற் பாடைகளிற்
சற்றும் பொருடான் சலியாது - மற்றதுகே
ளீசனரு ளாவி யெழிலார் திரோதமல
மாசிலெழுத் தஞ்சினடை வாம்".

(உண்மை விளக்கம் 42)

என்று நம் ஞானசாத்திரம்.

"சிவயநம" என்னும் சூக்கும பஞ்சாட்சரத்தில் "சி" கரம் சிவபெருமானையும், "வ" கரம் அருட்சத்தியையும், "ய" கரம் ஆன்மாவையும், "ந" கரம் திரோதான சத்தியையும் ''ம'' கரம் ஆணவ மலத்தையும் குறித்து

நிற்கின்றன என்பது பொருள். இங்கு,

" எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்- சிட்டன்
சிவாய நம வென்னுந் திருவெழுந்தஞ் சாலே
யவாயமற நின்றாடு வான்."

(உண்மை விளக்கம் 32)

எனவரும் நம் ஞான சாத்திரம் நினைக.

எட்டு "அ" கர வடிவாகவும் இரண்டு "உ" கரவடிவாகவும் "இரண்டும்" என்புழி இறுதி மகரவொற்றாகவும் இருத்தல் அறிக. எனவே "**எட்டினோடிரண்டும்**" என்றது அவற்றின் இயைபாகிய "**ஓம்**" என்ற பிரணவமந்திரம். இது சிவமந்திரமாகிய திருவைந்தெழுத்தின் சுருக்கமே. ஏனைய தேவர்களைக் குறிக்கும் மந்திரங்கள் பிரணவத்தோடு எண்ணப்பட்ட எட்டெழுத்து முதலிய பெயர் பெறும். பிரணவமாகிய சமட்டிப் பஞ்சாட்சரத்தின் விரிவே சிவமந்திரமாகிய திருவைந்தெழுத்தாகலின் இது பிரணவமின்றியும் ஓதப்பெறுவதாகும். ஆதலின் திருவைந்தெழுத்தின் இயல்பு அறியாதவன் என்றவாறும்.

பிரணவத்திலுள்ள "அ" கரம் சிவத்தையும் "உ" கரம் சத்தியையும் குறித்து நிற்பன. எனவே சிவம் சத்தி என்பவற்றின் பொதுவும் சிறப்புமாகிய இயல்புகளை அறியாதவன் எனலுமாம். எட்டும் இரண்டும் சேர்ந்தது பத்து. அது தசகாரியங்களை உணர்த்தும் என்றுரைத்தாரும் உளர்.

இஃது உபதேச நெறியையும் அறியாதவன் என்றவாறு. இதனை;

திருச்சிற்றம்பலம்

" எட்டு மிரண்டு மினிதறி கின்றிலர்
எட்டு மிரண்டு மறியாத வேழைகள்
எட்டு மிரண்டு மிருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே."

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 986)

என்று திருமுறை தெருட்டுவதறிக. ஈண்டு எட்டும் இரண்டும் பிரணவம் என்று அறியாத ஏழையர் இரண்டும் மூன்றும் சேர்ந்தது நான்கு என்பர் என

இழித்துக் கூறுவது காண்க. **எட்டினேடு**-என்றதில் "ஓடு" எண்ணிடைச் சொல்.

கட்டு அறுத்து எனை ஆண்டு - கட்டு அறுத்து -ஆன்மாவை அநாதியே பந்தித்துள்ள ஆணவமலத்தின் பிணிப்பை நீக்கக் கன்மமலத்தையும் மாயாமலத்தையும் கூட்டி வினைகளைத் தோற்றுவித்து; அவற்றின் பயன்களை நுகரச் செய்து ஆன்மாவை அவற்றின் பிணிப்பினின்று விடுவித்தும்; மானிடச்சட்டை தாங்கி வந்து உபதேச வாயிலாக உண்மையை உணர்த்தியும் உய்வித்தல். இதைப் "**பாசநீக்கம்**" என்று நம் சாத்திரங்கள் பகரும். "பாசமாம் பற்றறுத்து" (சிவபுராணம் 64) என்முர் முன்னரும்.

எனை - எட்டையும் இரண்டையும் சேர்த்து எண்ணத் தெரியாத அறிவிலியாகிய என்னை. இஃது "என்னை" என்றதன் தொகுத்தலாயிற்று.
ஆண்டு- அடிமையாக ஏற்றுக் கொண்டு; பட்டி மண்டபத்தில் வீற்றிருக்கும் தகுதி பெறச் செய்து. இது பாச நீக்கத்தின் பின் உயிர் எய்தும் இன்ப நுகர்ச்சி. இதைத் **திருவடிப் பேறு** என்பர்.

கண்ஆர நீறு இட்ட அன்பரொடு யாவரும் காணவே. கண் ஆர நீறு இட்ட அன்பரொடு - பார்ப்பவர் கண்கள் நிறைய அனுபவிக்கும்படி திருநீற்றுக் கோலத்தில் திகழும் சிவனடியார்களுடன். காண்பவர்களும் சிவனடியார்களாதலின் அவர்களைத் திருநீற்றுக் கோலம் கவர்ந்தது என்றவாறு. இதனை;

திருச்சிற்றம்பலம்

" சேலுங் கயலும் திளைக்குங்கண் ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் கும்மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமுமொத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே."

திருச்சிற்றம்பலம்

(திருப்பல்லாண்டு 8)

என்று நம் திருமுறை விளக்குவது காண்க.

ஒடு - சிறப்பு நோக்கிச் சிவனடியார்களை "**யாவரும்**" என்பவர்களுடன் பிரித்துக் காட்ட ஒடு உருபு புணர்த்தார். பக்குவ ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் பொழுது அதைக் காணும் தகுதியும் உரிமையும் பெற்றவர்கள் சிவனடியார்கள். இவ்வுண்மையை;

திருச்சிற்றம்பலம்

" முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் மேவ லாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாந்தடுத் தாண்டோ மென்றார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - தடுத்தாட்கொண்ட புராணம் - 67)

என்று பெரியபுராணம் பேசுவது காண்க. ***நீறிட்ட அன்பர்கள்*** - மல நீக்கம் பெற்ற சீவன்முத்தர்கள்

யாவரும் காணவே - கண்ணார நீறிட்ட அன்பர்கள் காணவே; அவர்களுடன் ஏனையோர் அனைவரும் காணவே; என்று இருபாலர்க்கும் கூட்டியுரைக்க. ஈண்டு யாவரும் என்றது உலக மக்களை. சோபான முறையில் அவர்களும் திருவருளின் பெருமையை உணர்ந்து கண்ணார நீறிட்ட அன்பர்கள் நிலைக்கு உயரும் பொருட்டு இறைவன் அவர்களுக்கும் இவ்வருளிப்பாட்டைக் காட்டினான் என்க. இறைவன் ஏனையோரும் இத்தகைய அருளிப்பாட்டைக் காணச் செய்பவன் என்பதை;

திருச்சிற்றம்பலம்

ஆவதென் னின்பால் வைத்தஅடைக்கலப் பொருளை வௌவிப்
பாவகம் பலவுஞ் செய்துபழிக்கு நீ யொன்று நாணாய் !
யாவருங் காண வுன்னைவளைத்துநான் கொண்டே யன்றிப்
போவதுஞ் செய்யே னென்றான்புண்ணியப் பொருளாய் நின்றான்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருநீலகண்டநாயனார் புராணம் - 26)

என்று நம் சேக்கிழார் பெருமான் செஞ்சொல் ஓவியம் தீட்டுவதிற் காண்க.

பட்டி மண்டபம் ஏற்றினை. பட்டி மண்டபம் - இஃது இந்நாளில் பொழுது போக்காக நிகழும் ஏச்சுமொழிகள் நிறைந்த பட்டிமன்றங்களுடன் மயங்கற்பாற்றன்று. நகரங்களில் முன்னாட்களில் பட்டிமண்டபங்கள் பல இயங்கிய என்பதைப் பழைய இலக்கியங்களிற் பிற நெறியினரும் காட்டிச் சென்றனர். ★

★ *" பல்கேள்வித் துறை போகிய*
தொல்லாணை நல்லாசிரிய
ருறழ் குறித் தெடுத்த வுருகெழு கொடியும்"

(பட்டினப் பாலை 169 - 171)

" ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்"

(மணிமேகலை 1 ; 60 - 61)

" மன்னவர் தருதிறை யளக்கு மண்டபம்
அன்மென் னடையவ ராடு மண்டபம்
முன்னரு மருமறை யோது மண்டபம்
பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்"

(கம்பராமாயணம் - நகரப்படலம் - 62)

இப்பட்டி மண்டபங்களில் அறிஞர் கூடியிருப்பர். அங்கு வாதம் மட்டும் தான் நிகழும் என்பதில்லை. ஆய்வும் நிகழலாம், ஐயந் தெளிதலும் நிகழலாம், அனுபவப் பகிர்வும் நிகழலாம்; கூடியிருப்போரைக் கருத்திற் கொண்டு பொருள் கொள்ள வேண்டும். இங்கு நம் அடிகள் சொன்னது சிவனடியார்கள் கூட்டத்தைக் குறிக்கும். பட்டினப் பாலையில் கூறுவது, தம் மொடு வாதம் புரியும் குழுவினர் உளராயில் வருக என்று கொடி உயர்த்திக் குழுமியிருந்தனர் என்ற செய்தி குறிப்பதாகும். மணிமேகலை கூறுவதும் வாதம் புரிவோர் கூட்டம் குறித்ததேயாகும். சங்கற்ப நிராகரணத்தில் கூறப்படும் தில்லைத் தேர் நிலையில் இருந்த மண்டபத்தில் கூடிய கூட்டமும் இத்தகையதே. கம்பர் கூறியது நூல்களை ஆய்வு செய்வோர் கூடும் மண்டபம். நம் அடிகள் தில்லையில், இறைவன் திருவருட் குறிப்பின் படியும் மன்னவன் வேண்டுகோளின் படியும் ஈழ நாட்டுப் புத்தரொடு வாதம் புரியும் பொழுது கூடிய கூட்டமும் நினைக. மதுரையில் அறிஞர் கூடும் மண்டபத்தில் புக்கு

பட்டி - என்பதை "நாய்" என்று கொண்டு, நாயைக் கற்றோர் குழுவில் ஏற்றியவாறு என்பர். அவ்வாறு கொள்ளுங்கால் மண்டபம் என்பது பட்டி மண்டபத்தைக் குறிக்காதொழிதல் காண்க. இதை மந்திரோபதேசம் செய்யக்கூடிய மண்டபம் என்றார் முன் உரையாசிரியர்களில் ஒருவர். இச்சொல் நம் தொல் இலக்கியங்களில் இப்பொருளில் வழங்கவில்லை.

ஏற்றினை - ஏறும்படி செய்தனை. அடுத்து வரும் "*ஏற்றினை*" என்ற சொல்லை முன்னிலைப் பெயராக் கொள்ளாமல் "*ஏற்றினை ஏற்றினை*" என அடுக்குத் தொடராகக் கொண்டு "அடுக்கு வியப்பால் வந்தது" என்றனர் முன்னுரையாசிரியர்கள் சிலர்.

"*ஏற்றினை ஏற்றினை*" என்பதில் முதலில் வரும் "ஏற்றினை" "யாவருங் காணவே கண்ணார நீறிட்ட அன்பரொடு எனைப் பட்டி மண்டபம் ஏற்றினை" என்றும்; அடுத்து நிற்கும் "ஏற்றினை" என்பதற்கு என்னுடன் பட்டி மண்டபம் ஏறிய "கண்ணார நீறிட்ட" அன்பர்களுக்கும் மேலாக என்னை அந்தப் பட்டி மண்டபத்தில் உயர்த்தினாய் என்றும் உரைக்க நின்றன எனலுமாம்.

இத் திருப்பாடலில். கட்டறுத்தல் மலங்கழுவுதலையும், கண்ணார நீறு இடுதல் மலிந்தவர் வேடத்தையும், பட்டி மண்டபம் ஏற்றல் அன்பரொடு மரீஇ இருத்தலையும் குறிப்பாலுணர்த்திச் சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரத்தைப் புகட்டுதல் காண்க.

வாயிலை அடைத்திருந்த ஒருவனைச் சபித்தும், வாழ்வித்தும் பாடிய மந்திரப் பாடல் பற்றித் தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் உரையில் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். அந்த மண்டபம் நூல்களை ஆய்வு செய்யும் மண்டபமாகலாம். இங்கு நம் அடிகள் திருவாக்கினின்றும் திருவாரூர்த் திருக்கோயிலில் இருந்த தேவாசிரிய மண்டபம் போன்று திருப்பெருந்துறையிலும் ஒரு மண்டபம் இருந்தது; அதில் அடியார்கள் கூடிச் சிவஞானம், சிவானுபவம் பற்றித் தங்களுள் ஆய்வு செய்து தெளிவு பெற்றனர் என்று கொள்ளலாம். ஞான நெறியில் கேட்டலின் பின் சிந்தித்தல் தெளிதல் என்பவற்றுக்கு அம்மண்டபம் பயன்பட்டிருக்கும். அக்குழுவில் அமரத் தகுதியில்லாத தம்மை அதில் இறைவன் அமரச் செய்தான் என்று நம் அடிகள் கூறுகின்றார்.

ஈண்டு, நம்மடிகள், இறைவன், தம்மைக் கட்டறுத்து ஆண்டு கொண்ட அருளிப்பாட்டை நினைந்து உருகுவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; தகுதியற்ற தம்மைத் தகுதியுடையவனுக்கிச் சீவன் முத்தர்கள் நாப்பண் இருத்தினமை கூறி அதற்கு என்ன கைம்மாறு இயற்ற வல்லேன் என்பதைக் குறிப்பால் உணர்த்துவதால் பதிகம் நுதலிய "**கைம்மாறு கொடுத்தல்**" பெற்றும்.

54. அறிவ னேயமு தேயடி நாயினேன்
அறிவ ஞகக்கொண் டோவெனே யாண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ ஞேவல்ல ஞேவரு ளீசனே ரு0

(இ -ள்)

ஞான வடிவமானவளே! இனிய அமிழ்த மயமானவளே! அடிமையும் இழிந்தவனுமாகிய என்னே; அறிவுடையவனுகத் திருவுளங் கொண்டோ அடிமையாகக் கொண்டது? அடியவனே அடிமையாக ஏற்றுக் கொண்ட காலத்தில் என்பாற் கண்டது அறிவிலாமையையன்ருே? இந்த நிலையில் யான் அறிவுடையனே அறிவில்லாதவனே எங்கள் இறைவனே இதனைத் தெளிவித்து அருள்புரிவாயாக.

(வி -ரை)

அறிவனே. அறிவன் - முற்றுமுணர்தல்; இயற்கையுணர்வினுதல் முதலிய அருட்குணங்களுள்ளவன். சிவபெருமானே ஞானவடிவினன் என்று சிவாகமங்கள் கூறுவது நினைக.

அமுதன் - வரம்பில் இன்பமுடைமை பற்றி "***அமுதனே***" என்ருர். "ஆரூரத்தா ஐயாற்றமுதே" என்பது நம்பிகள் தேவாரம். "அத்தன் ஆனந்தன் அமுதன்" (திருவாசகம் 157) என்பார் பின்னரும்.

அறிவனே - என்றதால் சிவபெருமான் ஒருவராலும் அணுகுதற்கரிய ஞானவடிவினன் என்று அவன் அருமையையும்; அமுதனே என்றதால் அடைந்தார்க்கு இனியனுவன் என்று அவன் எளிமையையும் கூறியது காண்க.

நீ முற்றுணர்வினன், இயற்கையுணர்வினனும் ஆவை; எனவே, என்னே ஆட்கொள்ளு முன்பே நான் அறிவற்றவன் என்பது தெரிந்தே என்னே ஆட் கொண்டாயாதல் வேண்டும். ஆதலின் ஆட்கொண்ட பின்பு நான்

அறிவற்றவன் என்பதை அறிந்து என்னை விட்டுப் பிரிந்தாய் என்பது ஏற்புடைத்தன்று. ஈண்டுத் திருக்குறளில் "தெரிந்து வினையாடல்" என்ற அதிகாரம் முழுவதும் சிந்திக்க.

இறைவன் ஆட்கொள்வதால் உயிர்களின் மலப்பிணிப்புத் தளர்கின்றது. அந் நிலையில் அவை வேம்பு தின்ற புழுக்களைக் கரும்பினில் விட்டபோதும் அவை கரும்பினை விரும்பாது மீண்டும் வேம்பினையே நாடல்போல, உலகியலை நாடும்; அவற்றுக்கு மலம் பக்குவப்படும் பொருட்டு இறைவன் அவற்றைச் சிறிது பிரிந்து நிற்பன். அதனால் எய்தும் துன்ப நுகர்ச்சியால் இறைவனை மீண்டும் தேடும். இந்நிலையில் திருவடிப்பதிவும், மலபரிபாகமும் இறைவனால் ஆட்கொள்ளப்படுதலும் உடன் நிகழ்வனவாதல் காண்க.

அமுதே. அமுதம் - உண்ணும்பொழுது இனிய சுவை பயப்பது, உண்ட பின்பும் நோயற்ற நீண்ட வாழ்வைத் தந்து இன்பம் பயப்பது. அவ்வாறே இறைவனும் நினைக்கும் போதே உயிருக்கு இன்பம் தந்து பின்னரும் உய்விப்பது காண்க.

அடி நாயினேன் எனை - என்று இணைக்க. ***அடி*** - அடிமையாகிய; உன் அடியைப் பற்றுக் கோடாகக் கொண்ட. ***நாயினேன்*** - நாய்பற்றி முன்னம் சிவபுராணம் (61) ''நாய்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. நாய் தன் தலைவன் தன்னை ஒறுத்து விலக்கினும் அவனை நீங்காது. அவ்வாறே யானும் நீ விலக்கினும் விலகேன் என்றவாறு. ***எனை*** - "என்னை" என்பதன் தொகுத்தலாயிற்று. உனக்கு ஆளாவதற்கு தகுதியற்ற என்னை என்றவாறு.

அறிவனாகக் கொண்டோ ஆண்டது - நீ என்னை அடிமையாக ஏற்றுக் கொண்ட போது நான் அறிவுடையவன் என்று தெரிந்தோ என்னை ஆளாகக் கொண்டாய்? ஓகாரம் எதிர்மறை குறித்த வினாப் பொருளில் வந்தது. ஆணவ மலம் உயிரின் அறிவை முழுமையாக மறைத்து அறியாமையைச் செய்வது. அதை நீக்குவதற்கு இறைவனாகிய ஞானஒளி வேண்டும். எனவே நீ என்னைத் தேடிவந்து ஆட்கொண்ட நாளில் நான் அறியாமை இருளில் மூழ்கிக்கிடப்பவன்; அதை விலக்குவதற்கு நீ வந்து ஆட்கொள்ள வேண்டும் என்று தெரிந்தே நீ வந்தாய் என்றவாறு.

அறிவிலாமை அன்றே கண்டது - ஆட்கொண்ட நாளில் என்பால் அறிவில்லை என்பது முற்றுணர்வினனாகிய உனக்குத் தெரிந்தது தானே.

ஆண்ட நாள் அறிவனோ அல்லனோ - "நீ என்னை ஆட்கொண்ட நாளில், என்னை அறிவனாகக் கொண்டிருந்தனை என்றால், எனக்கு அறிவுறுத்தி ஆட் கொள்ள வேண்டிய நிலை இருந்திருக்காது; அறிவிலாமையே கண்டாய் என்றால், அப்பொழுது நான் ஒரு சடம். அறிவில்லாத சடப்பொருளுக்கு எவ்வாற்றானும் அறிவுறுத்த இயலாது. அறிவுறுத்திய நிலையும் உண்டாயிருக்காது". ***அறிவனோ அல்லனோ*** - உன்னைப் போன்று முற்றறிவுடையனும் அல்லேன்; பாசத்தைப் போன்று சடமுமல்லேன்; அறிவித்தால் அறியும் தன்மையுடையவன். ஆதலின் சித்தென்னும் சாதி ஒருமை பற்றி, என்னை அறிவித்து ஆட்கொண்டு அமுதம் ஊட்டினாய் என அவன் செய்த பேருதவியை நினைந்து வியந்து உருகும் முகத்தால் நம் அடிகள்; பதிப் பொருளின் இயல்பு, பசுவின் இயல்பு, பதி பசுவுக்கு அறிவிக்கும் உரிமை ஆகிய மெய்ப்பொருட் கோட்பாடுகளை இத்திருப்பாடலில் அருளியுள்ளார்கள். இதுபற்றியே இப்பாடலைப் பொன்னேபோல் போற்றி நம் அருணந்தி சிவம்;

" அறிவறி யாமை யிரண்டு மடியேன்
செறிதலான் மெய்கண்ட தேவே - யறிவோ
வறியேனோ யாதென்று கூறுகே னாய்ந்து
குறிமாறு கொள்ளாமற் கூறு"

(இருபாவிருபஃது - 3)

என்று ஞான சாத்திரம் சமைத்து நல்கினார்

வல்லனோ - என்று மூலபாடத்திலுள்ள வகரம் உடம்படு மெய்யாதலறியாது, "வலிமையுள்ளவன்" என்று பிழையாகக் கொண்டு, *"Was I then Strong"* என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் ஆங்கில மொழி பெயர்ப்பாளர். ''அறிவுண்மையா? அறிவின்மையா?" என்பனவே ஈண்டு உசாவப்படுவன; உடல் வலிமையன்று என்பது வெளிப்படை. மொழி பெயர்ப்பாளரின் தாய்மொழி தமிழன்று; சமய நெறியும் சித்தாந்த சைவமன்று ; அவற்றால் இந்தப் பிழை என்று ஒதுக்குக.

அருள் - சொல்லியருள்க. *ஈசன்* - ஞானமாகிய செல்வத்தையுடைய

தலைவன். இத்தகைய ஐயத்துக்குத் தெளிவு வேண்டுமாயின் அதனை நல்கவல்லவன் ஞானமாகிய திருவையுடைய இறைவனே யாதலின் ஈண்டு **ஈசனே** என்று விளித்தார்.

ஈசன் - அதிகாரமுள்ளவன் என்று பொருள் கொண்டு, என்னை அறிவற்றவனுகக் கண்டிருந்தும், தகுதியற்றவன் என்று தள்ளி விடாமல் அருள்புரிவாயாகின், அவ்வாறு ஏன் அருள் செய்தாய்? என்று உன்னை உசாவும் அதிகாரமுள்ளவர் உனக்கு மேல் யாரும் இலர் என்பர் கவிரயசு அவர்கள். "***ஈசன்***" இதுபற்றி முன்னம் சிவபுராணம் 11 - ல் ''ஈசன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

இத் திருப்பாடல் சொல் பொருள் பின்வருநிலை அணியில் அமைந்துள்ளது.

இத் திருப்பாடலில் ''அறிவனே அமுதே" என்றதற்குப் பத்தி ஏதுவாதலும் "அறிவிலாமை அன்றே கண்டது" என்றதற்கு வைராக்கியம் ஏதுவாதலும் கொண்டு சதகம் நுதலிய **''பத்தி வைராக்கிய விசித்திரம்"** பெற்றும்; அறிவில்லாத நிலையிலும் தம்மை இறைவன் ஆட்கொண்டமை கூறுவதால் இதற்கு யாது கைம்மாறு செய்வேன் என்ற குறிப்பால் பதிகம் நுதலிய **"கைம்மாறு கொடுத்தல்"** பெற்றும்.

௬. அநுபோக சுத்தி

"அநுபோக சுத்தி" என்பதைச் "சுத்த அநுபோகம்" என்று மாற்றிக் கொள்க. அதற்குச் "சுத்த நிலை இன்பம்" என்று பொருள் கொள்ளலாம். "சுத்தவனு போகத்தைத் துய்த்தலனு" (உண்மை விளக்கம் 51) என ஞான சாத்திரம் நவிலல் நினைக. சுத்தம் என்பது ஈண்டு "நிலை" என்ற பொருளில் வந்தது. நிலை "அருள்நிலை" என்றும் "ஆனந்த நிலை" என்றும் இரு பிரிவாயுள்ளது. ஆன்மா, தத்துவங்களினீங்கித் தன்முனைப்பற்று அருளில் தோய்ந்து ஆனந்தம் நுகரும் நிலைக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொண்டதை முன்னம் 2 - ம் பதிகத் தலைப்பில் விளக்கினும். அவ்வாறு தகுதி பெற்ற ஆன்மா, திருவருளில் தோய்ந்து பெறும் இன்ப நுகர்ச்சியும் அத்திருவருட் குணத்தில் குணியாகிய சிவத்தில் தோய்வதாற் பெறும் இன்ப நுகர்ச்சியுமே இப்பதிகத்தில் பரவப்படுகின்றன. பின்வரும் பதிகங்களில் "காருணியத் திரங்கல்" தவிர, மற்றவை "ஆனந்தத் தழுத்தல்" "ஆனந்த பரவசம்" "ஆனந்தாதீதம்" என அமைதல் குறிப்பிடத் தக்கது. எனவே, "ஈண்டுச்

சிவாநுபவம் இன்னதெனப்படுகின்றது என்று இந்தப் பதிகத் தலைப்புக்குப் பொருள் கொள்ளலாம்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

55. ஈச னேயென் னெம்மானே
யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன்
றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே
செய்வ தொன்றும் அறியேனே ருக

(இ- ள்)

யாவர்க்கும் எவற்றுக்கும் இறைவனே; எனக்குச் சிறப்பு முறையிலுள்ள எங்கள் தலைவனே; என் தந்தையாகிய பெரியோனே, எனக்குப்பிறவியை ஒழிப்பவனே; ஒளி வடிவானவனே; ஞானப் பெருவெளியை யுடையவனே; ஒரு பொருளாக மதிக்கத்தக்க இயல்பற்ற தீய நாய் போன்ற இயல்பினனாகிய என்னை ஆட்கொண்டருளிய நின்னை நினைக்கவுமாட்டேன்; ஆட்கொண்ட நின் பொருட்டுச் செய்யத்தக்கது இன்னது என்பதையும் அறிந்திலேன் என்றவாறு.

(வி-ரை)

ஈற்றடியிலுள்ள "தேசனே அம்பலவா" என்ற பகுதியை, இரண்டாம் அடியிலுள்ள "நாசனே" என்றதன் பின் அமைத்து இத் திருப்பாடலுக்குப் பொருள் கொள்க.

ஈசன் - யார் எதுவேண்டினும் கொடுக்கும் அதிகாரமும் செல்வமு முள்ளவன். முன்னம் சிவபுராணம் 11 -ல் "ஈசன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

என் எம்மானே . எம்மான் - எங்களை அடிமையாகவுடைய தலைவன் என்று உரிமை பாராட்டியவாறு. **என்** - என்றது மேலும் சிறப்புரிமை காட்டி நின்றது. இதற்கு "0! My mighty one" என்ற ஆங்கில மொழி பெயர்ப்பு பிழைபட்டது என்பது தேற்றம்.

எந்தை பெருமான்- என் தந்தையும் தலைவனுமாயுள்ளவன். உலகில் ஒருவற்குத் தந்தையாவானும் தலைவனுவானும் வேறு வேருவர். தந்தை கல்வி முதலியன நல்கிச் சான்ரேனுக்குபவன்; பின்னர்த் தன் செல்வம் முதலியவற்றுக்கு உரியவனுக்குபவன். தலைவன் ஏவிப் பணிகொள்பவன். ஈண்டு இறைவன் ஞானத்தை நல்கி உயிரை உய்வித்துப் பின்னரும் வீட்டுலகமாகிய செல்வத்தை வழங்குவதால் **எந்தை பெருமான்** என்ருர். என் தந்தைக்கும் தலைவன் என்றுரைக்கவும் நின்றது. ***பெருமான்*** - பெருமையுடையவன்.

என்பிறவி நாசனே - என் பிறப்பையும் அதைத் தொடர்ந்து வரும் இறப்பையும் ஒழிப்பவனே என்றவாறு. ***பிறவி*** - என்றது ஈண்டு இம்மண்ணுலகில் மட்டுமன்றிப் புவனங்கள் அனைத்திலுமுள்ள எல்லா உலகங்களிலும் சென்று பிறத்தலையும் இறத்தலையும் குறித்து நின்றது. பிறவிகள் வினைப் பயன்களைத் துய்ப்பதற்காக வருவன. இறைவன் குருவடிவில் வந்து சஞ்சித வினைகளைத் தீட்சையால் சுட்டு எரித்து விட்டான். பிராரத்த வினைகளை உடலூழாய்க் கழியச் செய்து சீவன்முத்தனுக்கினுன். ஆகாமியங்கள் ஏருமல் அவனே ஏற்றுக் கொண்டான். ஆதலின் இனிப் பிறவியில்லை என்றதால் கன்ம மலத்தினின்றும் விடுதலையளிக்கின்ருன். பிறவியின்மையால் தநு கரண புவன போகங்கள் தேவையில்லை. எனவே, அவற்றை நல்கும் மாயா மலத்தினின்றும் விடுதலையளிக்கின்ருன். ஆணவ மலம் பரிபாகம் எய்தும் நிலையிலேயே இவ்விரு மலங்களும் விலகுவன. இவை விலகுவதால் ஆணவ மலமும் சத்தி மடங்கி நிற்கின்றது. இனி அடுத்து உயிர் எய்த நிற்பது வீடுபேறே என்றவாறு.

தேசனே அம்பலவா. தேசன் - ஞானவொளி நிலையாக உள்ள குருவின் திருமேனி. ***தேசு*** - ஒளி. திருப்பெருந்துறையில் நம் அடிகளை ஆட்கொண்ட கோலம்.

அம்பலம் - பொது இடம், புறவெளி, ஞானுகாசம், தில்லையிலுள்ள ஆடரங்கு. இறைவன் நம் அடிகளை அங்குவரப்பணித்த சரித நிகழ்ச்சி நினைக. திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் அடியார்கள் பலர்சூழ நம் அடிகளை ஆட் கொண்ட இடம் எனலுமொக்கும்.

யாதும் ஒன்று அல்லாப் பொல்லா நாயான நீசன் - உலகப் பொருள்கள் எவற்றுடனும் வைத்து ஒரு பொருளென மதிக்கும் தகுதியற்றவன் யான், தகுதியற்ற பொருள் உள வாயின் அவற்றேடு வைத்து எண்ணத்தக்கவன், அப்பொருள் பொல்லாங்குள்ள நாய்; நான் அந்த நாயினும் இழிந்தவன். யாதும் ஒன்றும் அல்லா - என்பதை யாதொன்று மல்லா என்று கூட்டியுரைக்க.

பொல்லா நாய். பொல்லாமை - நன்றியறிவில்லாத தீமை. இங்கு இஃது இல்பொருள் உவமையாக நாய்க்குப் புணர்த்துரைக்கப்பட்டது. நாய் பற்றி முன்னம் சிவபுராணம் 60 - ல் "நாய்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

ஆண்டாய்க்கு. நினைக்க மாட்டேன் - ஆண்டாய்க்கு என்பதிலுள்ள நான்காம் வேற்றுமை உருபு இரண்டாம் வேற்றுமைப் பொருளில் வந்த உருபு மயக்கம். ஆண்டாயை நினைக்கவும் மாட்டேன் என்று உம்மை விரித்துப் பொருள் கொள்க. *மாட்டேன்* - நினைக்கும் ஆற்றலற்றவன். ஆதலின் நீயே என் உள்ளம் புகுந்து என்னை நினைக்கச்செய் என்றவாறு.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" மறைகளு மமரர் கூட்டமும் மாட்டா
தயன்திரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்
அறைகழ லரன்சீ ரறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்கு மம்பலத்துள்
நிறைதரு கருணு நிலயமே ! உன்னைத்
தொண்டனேன் நினையுமா நினையே"

திருச்சிற்றம்பலம்

(திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா கோயில் 11)

என்றது நினைக. முன்னம் 45-ம் திருப்பாடலில் "உள்ளக்கரு" என்றதன் கீழுரைத்தவையும் பார்க்க.

செய்வது ஒன்றும் அறியேனே - நினைப்பின் வழி நிகழ்வது செயல். உன்னை நினைக்கவே இயலாதவன் உன் பொருட்டு என்ன பணி செய்யப் போகின்றேன் என்று இரங்கியவாறு.

ஏ - இதை ***ஒன்றும்*** என்பதுடன் புணர்த்துச் ***செய்வது ஒன்றுமே*** அறியேன் என்றுரைக்கவும் நின்றது.

இத் திருப்பாடலில் முதலடியில் "***என் எம்மானே***" என்பதிலுள்ள "***என்***" என்பதைப் பாடலின் ஈற்றிலமைத்து வினவாக்கி இதற்குக் காரணம் ***என்*** என்றுரைத்து ''என் மாட்டுள்ள மலமே காரணம் என்பதைக் கருத்தாக்குக" என்பர் திரு. முதலியாரவர்கள்.

என் என்பதை ஈற்றடியிலுள்ள ***செய்வது*** என்பதன் முன்புணர்த்து ''என்செய்வது" என்றுரைத்தலுமொக்கும். ***செய்வது*** இவ்வாறு நான் உன்னை நினையாமலிருக்கும் இந்த அவலம் நீங்க நான் செய்ய வேண்டுவது எனலுமொன்று.

இத் திருப்பாடலில் ''யாதுமொன்றலல்லாப் பொல்லா நாயான நீசன்" என்றதால் வைராக்கியமும் உன்னை நினைக்க வேண்டும் என்ற குறிப்பினால் பத்தியும் கூறப்படுவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். ''நீசனேனை ஆண்டாய்க்கு நினைக்க மாட்டேன்" என்றதால், உயிர் சிவத்தில் தோய்ந்து பெறும் இன்பம் இன்னதெனக் குறிப்பால் உணர்த்துவதால் பதிகம் நுதலிய "***அநுபோக சுத்தி***" பெற்றும்.

56. செய்வ தறியாச் சிறுநாயேன்
செம்பொற் பாத மலர்காணப்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்ய னேனான் உண்டுடுத்திங்
கிருப்ப தானேன் போரேறே ருஉ

(இ -ள்)

போரில் அரியேறு போன்றவனே, செய்யத்தக்கது இன்னதென்று

அறிந்து கொள்ள இயலாத சிறுமையுடைய நாய் போன்றவனும், செம்மையானதும் பொன் போன்றதுமாகிய நின் திருவடி மலரைக் காணும் பேறற்ற பொய்ம்மையாளர் அடையத்தக்க தீமைகள் எல்லாவற்றையும் ஒருங்கே அடைவதற்குத் தகுந்தவனும் பொய்ம்மையாளனுமாகிய யான், பொய்ம்மை சாராத உண்மை அடியவர்கள் நறுமணம் பொருந்திய தாமரை மலர் போன்ற நின் திருவடிகளை எய்துதல் நேரில் பார்த்தும் சான்றோர்கள் வாயிலாகக் கேட்டிருந்தும் உணவுண்டும் ஆடைகளை அணிந்தும் இவ்வுலகில் வாழ்ந்திருக்கலானேன்.

(வி -ரை)

போரேறே என்பதை முதலில் வைத்து இந்தப் பாடலுக்குப் பொருள் செய்க.

போரேறே - போர் செய்கின்ற அரியேறு; விலங்குகளின் அரசன் என்னும் ஆண் சிங்கம் இயல்பாக மிகவும் சோம்பலுள்ளது. பசியில்லாத போது ஓரிடத்தில் படுத்துக் கிடக்கும். அப்பொழுது வேறு விலங்குகள் அதன் அண்மையில் உலாவினும் சுண்டெலி அணில் போன்றவை அதன்மீது ஏறி விளையாடினும் அவற்றைப் பொருட்படுத்தாது கிடக்கும். ஆனல் பசி வந்த போதோ அல்லது புலி, கரடி, யானை முதலிய பெரிய விலங்குகளுடன் சண்டையிடும் போதோ பெருஞ்சினமும் ஆற்றலும் கொண்டு கிளர்ந்தெழுந்து தாக்கி அழிக்கும். ஆதலின் அரியேற்றுக்குப் ''போர்'' என்ற அடை புணர்த்தார். வீரமிக்க ஆடவரை அரிமா ஆனேறு களிறு முதலியவற்ருல் விளிப்பது கவிமரபு. " சிம்ஹசம்ஹநந:" சிரேஷ்ட மான உறுப்புக்களும் உருவமுடையவன் என்பர்.

இதற்கு, இவ்வாறன்றி, ''அன்பர்களைக் காமம் முதலிய அறு பகைகளாகிய யானைகள் தாக்கா வண்ணம் அவற்றை அழித்து ஒழிக்கும் ஆண்சிங்கம் போன்றவன்" என்பது கதிர்மணி விளக்கம்.

செய்வதறியாச் சிறுநாயேன் - செய்யத்தக்கவற்றையும் செய்யத் தகாதனவற்றையும் பகுத்தறியும் ஆற்றலில்லாத சிறுமையுள்ள நாய் போன்றவன். **சிறுமை** - தகாதன செய்தல். **நாயேன்** - இழிந்தவன் ; முன்னம் சிவபுராணம் 61-ல் ''நாய்" என்றதன் கீழ் விளக்கியுள்ளவை காண்க. ★

★ நாய் வெளியிற் சென்ருல் சிறுவர்கள் கல்லை விட்டெறிவார்கள், வீட்டினுட் சென்ருல் அது தொட்டனவும் எறிய வேண்டி வரும். ஆதலின் அது வெளியும் உள்ளுமற்ற கடையில் (வாயிலில்) நிற்கவேண்டி வரும் - நாலாயிரத் திவ்யப் பிரபந்தம். பெரிய வாச்சான் பிள்ளை உரை.

செம் பொற் பாதமலர் காணு - செம்மை - ஆணவமலமாகிய குற்றத்தை நீக்கி உயிர்களைச் செம்மை செய்கின்ற. பொன்னுக்கு அடையாகக் கொண்டு செம்பொன் எனலுமாம். ***பொன்*** - இயல்பாகவே களிம்பு இல்லாதது. சேர்ந்தார்க்கு உயர்வளிப்பது. உலகில் எல்லாப் பொருள்களையும் விலைக்கு வாங்கத்தக்கது. இறைவன் திருவடிகளுக்கு உவமையாயிற்று. ***பாத மலர்*** - திருவடிகளாகிய தாமரை மலர். தாமரைமலர் வடிவத்தாலும் வண்ணத்தாலும் நறுமணத்தாலும் ஈண்டு இறைவன் திருவடிகளுக்கு உவமை.

பாதம் - வீடுபேறு எனக்கொண்டு முக்தியின்பம் மலர்வதைக்காணுத பொய்யர் என்று கூட்டியுரைக்கவும் நின்றது. ***காணு*** - நிட்டை கூடி அகத்திலும் வழிபாட்டால் புறத்திலும் காணுதவன் என்றவாறு. வீடுபேறு என்று பொருள் தருவதை "சேவடிபடருஞ் செம்மலுள்ள மொடு" எனவரும் திருமுருகாற்றுப்படை (62)க்கு நச்சினுர்க்கினியர் உரையாலுமறிக.

பொய்யர் பெறும் பேறு அத்தனையும். பொய்யர் - நிலையற்றனவாகிய உலக இன்பங்களை வெறுத்து வீட்டின்பமே விரும்பும் மேலோர் போல் நடிக்கும் வஞ்சகர். ***பெறும் பேறு*** - பொய்ம்மையாளர் எய்தக் கூடிய தீவினைப்பயன்களாகிய துன்பங்கள். அவற்றைப் பேறு என்றது எதிர்மறை இலக்கணையாக இழிவு குறித்து நின்றது. இது வஞ்சப்புகழ்ச்சி.

அத்தனையும் பெறுதற்கு உரியேன். அத்தனையும் - துன்பங்கள். முழுவதையும், தீவினைகளின் பயனுக வரும் துன்பங்களில் சில கழுவாயால் நீங்கும்; சில குருவின் சட்சு தீட்சையால் நீங்கும்; சில அழுத்தமான சிவ வழிபாட்டால் விலகும். ஈண்டு அவ்வாறன்றி அவை அத்தனையும் நான் நுகர்ந்து துன்புறுவதற்குத் தக்கவன் என்ருர். அதற்குக் காரணம் செம் பொற்பாத மலர் காணுச் சிறுமை என்றவாறு. "**நாயேனும் உரியேனும்**" என எண்ணும்மை விரித்துக் கொள்க.

எத்தனையும் - என்பது சீகாழித் தாண்டவராயர் கொண்ட பாடம்.

பொய்யிலா மெய்யர் - மெய்யர் என்ருலே அமையும் "***பொய்யிலா மெய்யர்***" என்றது எற்றுக்கெனின் பொய்ம்மை இருவகைப்படும். அவற்றைத் தீமை பயக்கும் பொய் ; குற்றமில்லாத நன்மை பயக்கும் பொய் என்று நீதிநூல் விளக்கும், அதை;

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

(திருக்குறள் 292)

என்ற தேவர் திருவாக்கால் தெரிக.

புரை தீர்ந்த நன்மை பயக்கும் பொய்யாயினும் அது செயலாகவோ அன்றி வைகரி வாக்காகவோ வெளிப்படுமுன் உள்ளத்தில் சூக்குமை, பைசந்தி, மத்திமை வாக்குக்களாக முகிழ்த்து வடிவம் எடுக்கும். அப்பொழுது அது மெய்யாகவே நிற்கும். வெளியில் வைகரி வாக்காக வெளிப்படும் போது. அந்த மெய்ம்மைக்கு மாருன பொய்யாக வெளிப்படும். எனவே அந்தப் பொய்யையும் நீக்கி உள்ளத்தில் உள்ளதையே உரையாகவும் செயலாகவும் வெளிப்படுத்தும் ***மெய்யர்*** என்றவாறு.

வெறியார் மலர்ப்பாதம் மேவக்கண்டும். வெறி - நறுமணம். இது தாமரை மலரின் நறுமணம் வீட்டின்பம் இரண்டும் குறித்து நின்றது. ***ஆர்*** - நிறைந்த. ***மலர்ப்பாதம் மேவ*** - வீட்டின்பம் பெறுவதற்குத் தகுதியும் உரிமையும் உள்ளவர்கள் பொய்யிலா மெய்யர்களே என்றவாறு. **கண்டும்** - திருப்பெருந்துறையில் பொய்கையின் நாப்பண் எழுந்த ஒளியில் கலந்தவர்களும், செய்தி அறிந்து ஓடிவந்து ஒளியிற் கலக்க முடியாதவர்களாய் எரியிற்பாய்ந்தும், மயக்க மெய்தியும்; புரண்டு வீழ்ந்தலறியும்; கடலில் விழுந்தும், நாத நாத என்று அரற்றியும் பாதம் எய்தியவர்கள். இவர்கள் பற்றிக் கீர்த்தித்திருவகவல் 132 முதல் 137 வரை உள்ள பகுதிகளில் விளக்கியவை காண்க.

கேட்டு இருந்தும் - திருப்பெருந்துறையில் பொய்கைக் கரையில் நேரில் கண்டது போலன்றி நூல் வாயிலாகவும் ஆன்றோர் வாயிலாகவும் கேட்டிருந்தும். சண்டீச நாயனர், திருமூல நாயனர், கண்ணப்ப நாயனர் சங்கம் இருந்து தமிழராய்ந்த பொய்யடிமையில்லாத புலவர்கள் போன்ற எண்ணற்றவர்கள் வீடுபேறுற்றதை அறிந்திருந்தும் என்றவாறு. **கண்டும் கேட்டிருந்தும்** கூட நான் செய்யத்தக்கவை இன்னவென்று அறியாச் சிறு நாயேனுனேன் என்று இரங்கியவாறு. உம்மைகள் சிறப்பும்மைகள்.

பொய்யன் ஆனேன் - நிலையற்றதான உலக வாழ்க்கையில் ஈடுபட்டவனுனேன்.

உண்டு உடுத்து இங்கு இருப்பது ஆனேன் - தொண்டு செய்து உன்னை எய்துதற்குரிய தவம் செய்யாத யான் இவ்வுலகில் இருக்க உரிமையில்லாதவன். ஆனால் யானே இவ்வுலகில் உயிர் வாழ்ந்திருப்பதானேன். அத்துடன் அமையாமல் உடல் கொழுக்க உண்டும் அந்த உடல் அழகு பெற்றுப் பாவையரைக் கவர நன்கு உடுத்தும் திரிவதானேன் என்றவாறு.

"*உரியேன்*"- என்றதன் பின்னர், ''ஆதலின்" என்னும் சொல்லெச்சம் வருவித்து அதனை, "**இருப்பதானேன்**" என்றதனோடு இயைத்து, ''இஃதென் தீவினை இருந்தவாறு" எனக்குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

இத் திருப்பாடலில் ''பொய்யர் பெறும் பேறு அத்தனையும் பெறுதற் குரியேன்" என்றதனால் தொண்டர்க்கான பணிவு தம்மிடமில்லை என்று அதை விரும்புவதும்; "உண்டுடுத் திங்கிருப்பதானேன்" என்றதனால் உடற் சுமையின் வெறுப்பும் குறிப்பிடப்பட்டுச் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். உடலோம்பலால் சிவானுபவத்துக்குரிய தூய்மை ஏற்படாது என்பதும் உடலோம்பலை ஒழித்தலே தூய்மைக்கு வழி என்பதும் குறிப்பிடப்படுவதால் பதிகம் நுதலிய "**அநுபோக சுத்தி**" பெற்றும்.

57. போரே றேநின் பொன்னகர்வாய்
நீபோந் தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ
டுடன்வந் தருள அருள் பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ்
சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ
கொடியே னுயிர்தா னுலவாதே ருரு

(இ -ள்)

ஆணவ மலத்துடன் போர் செய்யும் அரியேறு போன்றவனே ! நின்கயிலைத் திருக்கோயிலினின்றும் நீ எழுந்தருளிக் கச்சணிந்த இளமைமிக்க மெல்லிய கொங்கைகளையுடைய உமையம்மையுடன் சேர்ந்து இம்மண்ணுலகிற்கு வந்து, ஆணவ மல இருளின் வலிமையை மடக்கி அருள்புரிய, அந்தத் திருவருளைப் பெற்ற சிறப்பு மிக்க மெய்யடியார்கள் நின்

திருவடிகளை எய்துவதை அறிந்திருந்தும், கொடியவனாகிய என் உயிர் தானே கெட்டு ஒழியாது இருக்கக் கண்கெட்டுக் குருடாகிய ஊர் எருதைப் போல இவ்வுலகத்தில் நான் அலைந்து திரிவனோ? என்றவாறு.

(வி - ரை)

இத் திருப்பாடலைப் ''பேரேறே! நின் பொன்னகர் வாய் நீ போந்தருளி வாரேறிள முலையா ளோடுடன் வந்து, இருள் நீக்கி அருள, அருள் பெற்ற சீரேறடியார் நின் பாதம் சேரக் கண்டும், கொடியேன் உயிருலவாது கண்கெட்ட ஊரேறாயிங் குழல்வேனோ " என்று அன்னுவயப்படுத்திக் கொண்டு உரை காண்க.

போர் ஏறு - 56-ம் திருப்பாட்டில் ''போரேறே" என்றதன் கீழுரைத்தவை காண்க. போரின் முடிவு ஈண்டு இருள் நீக்கமாகக் கூறப்படுதலின் இங்குக் குறிக்கப்படும் போர் ஆணவமலத்துக்கு எதிராகப் பொரப்படுவது என்பது பெற்றாம். இறைவன் "**போரேறு**" என்று உருவகிக்கப் பெறலின் சாடப்படும் ஆணவமலம் யானை என்று கொள்க.

நின் பொன்னகர் வாய் நீ போந்தருளி. பொன்னகர் - ஈண்டுத் திருக்கயிலையைக் குறித்து நின்றது. 56-ம் திருப்பாடலில் ''பொன்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

வாய் - ஏழாம் வேற்றுமை உருபு ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்த வேற்றுமை உருபு மயக்கம். திருக்கயிலைக் கோயிலினின்றும் என்றவாறு.

போந்தருளி -புறப்பட்டு. ஒருசொன்னீர்மைத்து. இந்தப் போர் ஆணவமலத்துக்கு எதிராகப் பொரப்படுவது. அந்த மலம் கயிலைக்கண் முனைத்து நில்லாதது. ஆதலின் அஃது முனைத்து நிற்கும் பூவுலகுக்குச் செல்ல வேண்டுவதின்றியமையாமையின் ***போந்தருளி*** என்றார். என்னை? கயிலை தவிரச் சுவர்க்கம் நரகம் முதலிய ஏனைய எல்லா உலகங்களிலும் வாழும் உயிர்கள்மாட்டு ஆணவமலமுள்ளதே எனில்; பூவுலகில் மட்டுமே மலபரிபாகம் எய்தப்பக்குவமுள்ள உயிர்கள் வாழ்கின்றன. அந்தப் பரிபாகத்துக்காக இறைவன் ஈண்டு எழுந்தருள வேண்டியுள்ளது. ஏனைய உலகங்களிலுள்ள உயிர்கள் கன்மானுபவத்தால் சோபான முறையில் பக்குவமுற்று முடிவில் மலபரிபாகத்துக்குத் தகுதியாகிப் பூவுலகில் வந்து பிறக்கும். அப்பொழுது இறைவன் அவற்றை அணைந்து உய்விப்பன் என்க.

போந்தருளி என்ற செய்தெனெச்சத்தைப் "போந்தருள" என மாற்றிப் பொருள் கொள்க.

நீ - நீ நின் பொன்னகர் வாய், நீ போந்தருளி என ஈரிடத்தும் கூட்டுக.

வார் ஏறும் இளமென்முலையாளோடு உடன் வந்தருள. ***வார் ஏறும் இளமென்முலையாள்*** - உமையம்மை. சிவபெருமானின் எண்குணங்களுள் ஒன்றுன பேரருள் ஈண்டு உமையம்மையாக உருவகம் செய்யப்பட்டது. திருவருள், காலதத்துவத்துக்கு அப்பாற்பட்டு நின்று அந்தத் தத்துவத்தை இயக்குவது. ஆதலின் அது, காலத்தால் விளையும் முதுமையும் தளர்ச்சியும் எய்தாதது. எனவே, என்றும் இளமை குறித்து நிற்பதை உணர்த்த "*வாரேறிளமென்முலை*" என்றுர். அம்பிகையின் கொங்கைகள் இரண்டும் பரம் அபரம் ஆகிய இரு ஞானங்களை நல்கவல்லன. அறியாமையைச் செய்யும் ஆணவமலத்தை ஒழித்தற்கு அவை உயிர்களுக்கு வேண்டப்படுவன என்பதுணர்த்தியவாறு.

உடன் வந்தருள --உடனுய் என்று ஆக்கம் வருவித்துரைக்க. உயிர்களுக்கு அருள்புரியவும் ஞானம் நல்கவும் திருவருள் இறைவனுள் ஒடுங்கி நில்லாது வெளிப்பட்டு வரவேண்டியதன் இன்றியமையாமை நினைக.

இங்கு;

"அம்மையப்ப ரேவுலகுக் கம்மையப்பர் ரென்றறிக
அம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்ப - ரம்மையப்ப
ரெல்லா வுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்து
மல்லார் போல் நிற்பாரவர்"

(திருக்களிற்றுப்படியார் 1)

" அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை - யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணுர் கண்ணுக்
கிரவிபோ னிற்குமர னேய்ந்து"

சிவஞானபோதம் (சூ-5 அ-2 வெ.2,3)

அருளது சக்தி யாகு மரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க்களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன்

சிவஞான சித்தியார் (சுபக்கம், சூத் -5. செய் -9)

என்ற ஞானசாத்திரம் உளம் கொள்க.

இருள் நீக்கி அருள - ஆணவ மலத்தின் ஆற்றலை மடங்கச் செய்தல். இது பாசநீக்கம். இந்த நிலையை,

" *அவனே தானே யாகிய வந்நெறி*
யேக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே

(சிவஞானபோதம் சூத் -10)

என்று ஞான சாத்திரம் நுவல்வதிலும் அதன் கருத்துரையிலும் காண்க.

அருள் பெற்ற - இது பாசநீக்கத்தின் பின் எய்தும் சிவப்பேறாகும். இதைச் சிவஞான போதம் 11-ம் சூத்திரம் ''அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்று கூறுகின்றது. பாச நீக்கத்துக்கு உயிரின் சாதனம் ஏதுவாயினும் இறைவன் திருவருள் இன்றியமையாததாகலின் "**இருள் நீக்கி**" என்று இறைவன் செயலாகவும் ; பாச நீக்கத்தின் பின் சிவப்பேறு தானே எய்தும் என்பது தோன்ற "***அருள் பெற்ற***" என உயிரின் செயலாகவும் கூறிய நுட்பம் நுனித்தறிந்தின்புறுக.

சீரேரடியார் - தவத்தால் மலப்பிணிப்பு நீங்க நீங்க மெய்ஞ்ஞான விளக்கம் மிகுந்தவர்களாகிய அடியவர்கள். திருக்கயிலை வாயிலில் திருமால் முதலிய பெருந்தேவர்களும் காத்திருக்க, இறைவன் உமையம்மையுடன் கயிலையை விட்டு நீங்கி மண்ணுலகில் தங்கள் மாட்டு வரும் சிறப்பு மிகுந்த அடியவர்களாதலின் சீரேரடியார் என்றார்.

நின்பாதம் சேரக்கண்டும். நின் பாதம் - வீடுபேறு. உயிர்கள் இறுதியில் எய்தி இன்புறத்தக்கதான இடம்.

கண்டும் - நூல்களிலிருந்தும் ஆன்ரேோர் வாய்மொழிகளிலிருந்தும் அறிந்திருந்தும். அவ்வாறு அறியப்பெற்றவர்கள் நம் அடிகள் காலத்துக்கு முற்பட்ட நாயன்மார்களும் மனுநீதிச் சோழர், முசுகுந்தச் சக்கரவர்த்தி, வரகுண தேவர் முதலிய எண்ணற்ற பெருமக்களுமாவர்.

இதற்கு இவ்வாறன்றி நம் அடிகள் சரிதத்துக்கு அகச்சான்ருகக் கொண்டு திருப்பெருந்துறையில் நம் அடிகளுடன் கூடியிருந்து பின் வீடு பேறுற்ற அடியவர்கள் என்று பொருள் கொண்டனர் முன்னுரை ஆசிரியர்களில் சிலர். திருப்பெருந்துறைக்கு இறைவன் குருவடிவில்தான் வந்திருந்தார். வாரேரிள மென்முலேயாளோடு வரவில்லே என்று தடை நிகழுமாதலின் அப்பகுதிக்கு "உமையம்மை இறைவனின் திருவருளின் உருவகம்; இறைவன் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளிய ஞான்று நம் அடிகளே உய்விக்க வேண்டும் என்ற திருவருளிஞல் எழுந்தருளினுர்; அந்தத் திருவருளே ஈண்டு 'வாரேரிளமென்முலே யாளோடுடன் வந்ததாக உருவகத்தால் கூறப்பட்டது" என்று அமைதி செய்ய முயல்வர். திருப்பெருந்துறையில் இறைவன் தாங்கி வந்த குருவடிவம் அவன் திருவருளாலானதே. எனவே அதையே "வாரேரிளமென் முலேயாளோடுடன் வந்தருளி" என்று மீண்டும் விதந்து கூற வேண்டுவதில்லே. எனவே இவ்வுரைகள் எல்லாம் ஏற்புடையன வல்ல என்று ஒதுக்குக.

கொடியேன் உயிர்தான் உலவாது - சீரேரடியார்கள் தங்கள் தவ வலிமையால் வீடுபேறுற்றதை அறிந்திருந்தும் நானும் அவர்களேப் போலத் தவமுயன்று வீடடைந்திருக்க வேண்டும்; அவ்வாறு செய்கிலன்; அது செய்யாமையால் உயிரை வெறுத்து மாண்டிருக்க வேண்டும்; அஃதுஞ். செய்கிலன். ஆதலின் **கொடியேன்** என்ருர். **உலத்தல்** - அழிதல். ஈண்டு, உயிர் நித்தியப் பொருளாதலின் **உலத்தல்** , உயிர் இந்த உடலோடு கூடியிருக்கும் நிலேயின் அழிவாகிய மரணம் குறித்து நின்றது. ***தான்*** - தாஞகவே அழியாது.

கண்கெட்ட ஊரேருய் இங்கு உழல்வேனே - ***ஊர் ஏறு*** திருக்கோயில்களுக்குப் பொதுமக்கள் சேங்கன்றுகளேச் சூலம் பொறித்து உரிமையாக்கி விடுவர். அவை வளர்ந்து வலிய ஆனேறுகளாகும். மந்தை முதலிய பொது இடங்களிலும் பொதுமக்களின் கழனிகளிலும் வயிருர

உண்டு கொழுத்து வளரும். திருக்கோயிலுக்கு உரிய ஏருகலின் யாரும் அவற்றை அரசுக்குச் சொந்தமான கால்நடைப்பட்டி (Cattle Pound) முதலியவற்றில் அடைப்பதில்லை. இவற்றை "ஆள்வாரிலிமாடு" என்பர் நம் அடிகள் வேறோரிடத்தில். தின்று கொழுத்தும் உழவு முதலிய வேலைகளின்றியும் திரியும் இவை கண்ணும் குருடாயின் பள்ளம் முதலியவற்றில் வீழ்ந்து வருந்தும். அந் நிலையில் நான் நாதனின்றி உண்டு கொழுத்துப் பணி செய்யாது உலக இன்பங்களில் விழுந்து அல்லலுறுதல் தக்கதன்று என்றவாறு. ***கண்கெட்ட*** - ஒழுங்கற்ற. வழி தெரியாத எனலுமாம்.

ஊரேறு - என்பதை முன் உரையாசிரியர்கள் பொலிகாளை என்றும் ஊர்ப்பன்றி என்றும் கூறிப்போந்தனர். ஆங்கிலத்திலும் ''பன்றி என்றே கொண்டு மொழி பெயர்த்தனர். பொலிகாளைகள் ஊர்பொதுவில் விடப்படுவன அல்ல. பொலிகாளைகளையும் பன்றிகளையும் தனி நபர்கள் உரிமையாக வைத்திருப்பர். எனவே, இவ்வுரைகள் பொருந்தாமை கண்டு ஒதுக்குக.

கண்டும் கண்கெட்ட - முரண் சுவை காண்க.

இத்திருப்பாடல் உயிர் வாழ்தலை வெறுத்துரைப்பதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். இருள் நீக்கப்பெற்ற அடியார்கள் இருள் நீக்கமும் அருள் பெறலும் குறிக்கப்படுவதால் பதிகம் நுதலிய "***அநுபோகசுத்தி***" பெற்றும்.

58. உலவாக் காலந் தவமெய்தி
யுறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க
மாட்டேன் மணியே யுனைக்காண்பான்
அலவா நிற்கு மன்பிலேன்
என்கொண் டெழுகேன் எம்மானே ரு௪

(இ-ள்)

மாணிக்க மலை போன்றவனே ! எங்கள் தலைவனே ! இவ்வுலகில் பெரிய முனிவர்கள் பலர், நின்னைக் காணும் பொருட்டு, எல்லையற்ற காலம்

தவம் புரிந்து உடலையும் வெறுத்து மிகவும் வாட்டம் எய்தி நிற்க, தீவினையாளனான என்னைத் தொண்டனாக ஏற்றுக் கொண்டனை ; மலமயமான இவ்வுடம்பை ஒழிக்கும் ஆற்றலில்லேன், நின்னைக் காண்பதற்காகத் துன்புற்று நிற்கும் உண்மை அன்பு இல்லேன்; இந்த நிலையில் எதனைப் பற்றுக் கோடாகப் பிடித்துக் கொண்டு உய்வேன் என்றவாறு.

(வி -ரை)

இத் திருப்பாடலை : ''மணியே! எம்மானே! இங்குப் பல மாமுனிவர் உனைக்காண்பான் உலவாக்காலம் தவமெய்தி உறுப்பும் வெறுத்து நனிவாட பாவியேனைப் பணிகொண்டாய், மலமாக்குரம்பை இது மாய்க்க மாட்டேன், உனைக்காண்பான் அலவா நிற்கும் அன்பிலேன் என் கொண்டு எழுகேன் ? என்று - அன்னுவயப்படுத்திக் கொண்டு உரை காண்க.

* **மணியே** - நவமணிகளுள் மாணிக்கம் செந்நிறமானதும் ஒளி வீசுவதுமாகும். சிவபெருமான் நிறம்பற்றியும் மல இருளை ஓட்டும் ஞானப் பேரொளி காலுதல் பற்றியும் உள்ள ஒப்புமை பற்றி ஈண்டு, மாணிக்கமணி அவனுக்கு ஒப்புமை. மாணிக்கமணி நாகத்தின் முடியில் இருப்பதாகக் கூறுவது நூல்மரபு. உலக இன்பமாகிய நஞ்சுகாலும் ஐந்தலை நாகமாகிய ஐம்புலன்களின் ஆற்றலை அடக்கிச் சிவமாகிய நாகமணியைப் பெற வேண்டியுள்ளதால் அந்த மணியின் அருமையை உளங்கொள்க.

★ *" மணியே மணியி னொளியே*
ஒளிரும் மணிபுனைந்த
அணியே யணிவு மணிக்கழகே
அணுகா தவர்கட்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
அமரர் பெரு விருந்தே
பணியே னொருவரை நின்பத்ம
பாதம் பணிந்தபின்னே்"

அபிராமியந்தாதி 24

சிவபெருமானை **மணி** என்று கூறுவதை ;

திருசிற்றம்பலம்

"மணியினை மாமறைக் காட்டு
மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப்
பித்தன தெண்கடலிற்
பிணியன கன்மிதப் பித்தன
சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர்
பிரான்றன் னருந் தமிழே"

திருச்சிற்றம்பலம்

(திருத்தொண்டர் திருவந்தாதி 25)

என்பதிற் காண்க.

எம்மானே - முனிவர்கள் நிற்கத் தம்மைப் பணி கொண்டதற்கேற்ப எங்கள் தலைவனே என்று உரிமை பாராட்டி விளித்தார். அதற்கு நான் தகுதியுள்ளவனுமாறு எனக்கு உன்பால் மிகுந்த அன்பைக் கொடு என்பது கருத்து.

இங்கு - இந்த மண்ணுலகில். மேல் கீழ் உலகங்கள் இருவினைப் பயன்களை நுகர்ந்து கழிக்கவே இடங்களாவன. இந்தப் பூவுலகமோ சிவவழிபாடு செய்து வீடு பெறுதற்குரிய இடம். ஆதலின் மாமுனிவர்கள் பலர் இறைவனைக்காண உலவாக்காலம் தவமெய்தி உறுப்பும் வெறுத்து நனிவாட இந்தப்பூவுலகே இடமாக அமைந்தது என்றவாறு. முன்னம் போற்றித் திருவகவல் 117-ல் ''ஏனோர்'' என்றதன் கீழ் எடுத்தாண்ட நம் அடிகள் திருவாக்குக் காண்க.

பலமா முனிவர். *முனிவர்* - இடைவிடாது தியானத்திலமர்ந்து இறைவனை மனத்தில் நிறுத்தி இன்ப துன்பங்களில் ஈடுபடாது, விருப்பு வெறுப்பு அச்சம் முதலியவற்றை நீக்கிய இயல்பும் உறுதியான புத்தியுமுள்ளவர்கள்.

உனைக்காண்பான் - இறைவனை அடைவதற்காக. **காண்பான்** இரண்டும் பானீற்று வினையெச்சம்.

உலவாக்காலம் தவம் எய்தி. ***உலவாக்காலம்*** எண்ணுக்கு அடங்காத காலம்; எண்ணி அழியாத காலம்.

தவம் எய்தி - குளிர்காலத்தில் பொய்கை முதலிய நீர் நிலைகளில் கழுத்தளவு தண்ணீரிலும், கோடை காலத்தில் தம்மைச் சுற்றிலும் வளர்க்கப்பட்டு எரியும் நெருப்பின் நடுவிலும் எண்ணிலடங்காத நாட்கள் நின்று, உணவு நீர் முதலியனவற்றை ஒழித்து இறைவனை நினைந்து செய்யும் தவநிலையை அடைந்து.

உறுப்பும் வெறுத்து. ***உறுப்பு*** - உடம்பு. உடம்பினை "அங்கம்" என்று கூறுதல் வடமொழி வழக்கு. இதனை;

" குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு" (திருக்குறள் 704)

" உறுப்பொத்தான் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு" (திருக்குறள் 993)

எனவரும் முதற்பாவலர் மொழிகளாலும் அவற்றுக்குப் பரிமேலழகர் உரைகளாலு மறிக.

நெடுநாள் புரியும் கடுந்தவத்துக்குக் கருவியாக உதவிய இந்த உடம்பையும் வெறுத்து. உம்மை உயர்வு சிறப்பு.

நனிவாட - தவத்தின் கடுமையும், காலத்தின் நெடுமையும், தவத்தின் நோக்கமாகிய இறைவனை காண்பதின் அருமையும் குறித்து **"நனிவாட"** என்றார். உடம்பும் மனமும் மிகவும் வாட்டமடைய என்றவாறு. **நனி**- மிகுதி.

அவைதாம்,

" உறுதவ நனிஎன வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப"

(தொல். சொல். சூத். 294)

பாவியேனைப் பணி கொண்டாய். ***பாவியேன்*** - தீவினையாளன். ஒரு பொருளைக் கொடுக்கும் பொழுது அந்தக் கொடையில் கொடுப்போன் தகுதியும் கொள்வோன் தகுதியும் விரவி நிற்கும். ஈண்டுக்கொடுப்போன் தகுதியே மேலோங்கி நிற்பது காண்க. ***பணிகொள்ளுதல்*** - அடிமையாக ஏற்றுக்கொண்டு அவ்வடிமையின் தொண்டை ஏற்றல்.

ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

"பண்ணெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பல ரேம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே

திருச்சிற்றம்பலம்

(கருவூர்த் தேவர் திருவிசைப்பா- தஞ்சை இராசராசேச்சரம் 8)

எனவரும் திருமுறைப்பாடலை நினைக. ★

★ கட்டழ கமைந்து காளையம் பருவங்
கடந்திடா துள்வலி யுடைத்துக்
கலங்கல்செய் பிணியின் றியன்றயாக் கையரய்க்
கல்வியங் கடல்கடந் தவராய்
நட்டவர் விரும்பு மாறுநீ செய்ய
நடக்குநா ளுடல்வெறுத் துனையே
நம்பியா ரூரன் முதலியோர் நண்ண
நானுடல் விடுமென வழிவேன்
பட்டிருள் விழுங்க வலர்கதி ரவனும்
பனிமதி யோடுயிர்த் தொகையும்
பார்புனல் சுடுதீ வளிவிசும் பென்னப்
பட்டவைம் பூதமு மாகு
மெட்டுரு வடைந்து முருவொன் றின்றி
யிற்றென வுணர்வரும் பொருளே
யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு
மீசனே மாசிலா மணியே.

(சிவப்பிரகாச சுவாமிகள் நெடுங்கழி நெடில் -2)

மலமாக்குரம்பை இது மாய்க்க மாட்டேன். குரம்பை - குடிசையாகிய உடம்பு. குடலில் கழிவுப்பொருளாகிய மலம் ஒன்று மட்டுமே இருக்கும். குரம்பையாகிய இவ்வுடலில், மலம், கொழுப்பு, சுக்கிலம், சிறுநீர், குறும்பி, கபம், சளி, சீழ், கண்ணீர், வியர்வை, பீளை, குருதி என்னும் பன்னிரு தூய்மையற்ற பொருள்களும் இருப்பதால் இதை ***மலமாக் குரம்பை*** என்றார். ***மாமலக்குரம்பை*** என்று மாற்றிக் கொள்க. மிகுந்த கழிவுகள் நிறைந்த உடம்பு என்றவாறு.

இது மாய்க்கமாட்டேன் - இவ்வுடல் தவத்துக்குக் கருவியாயமையினும், மாயேயம் என்பதை மனங்கொள்ளல் வேண்டும். அது மாயையின் காரியம். இறைவன் மாயையைக் கடந்து நின்று அதை இயக்குபவன். ஆதலின், மாயேயமான உடம்பு அவனைக் காணவோ எய்தவோ இயலாதது மட்டுமன்றித் தடையாகவும் உள்ளது. எனவே இதன் ஒழிவில்தான் உயிர் தூய்மையடைந்து சிவானுபவத்துக்குத் தகுதியாகும். இது தானே ஒழியும் நிலை இன்மையால் யான் இதனை ஒழித்தல் வேண்டும். ஆனால் பற்றுமிகுதியால் யான் இதை மாய்க்க இயலாதவனாக உள்ளேன் என்றவாறு.

உடம்பில் உள்ள மனம் முதலிய புற அந்தக் கரணங்களும் சூட்சுமதேகம் முதலிய அக அந்தக் கரணங்களும் மாயேயங்கள். அவற்றால் இறைவனைத் தியானத்தில் நிறுத்த முடியாது என்பதை;

" பாவிக்கின் மனாதி வேண்டும்
பயனிலை கரண நீத்துப்
பாவிப்ப னென்னி லென்ன
பழுதுள பாவ கத்தால்
பாவிக்க வொண்ணா னென்று
பாவிப்ப னென்னி னீயென்
பாவிக்க வேண்டா வாண்ட
பரனருள் பற்றி னோர்க்கே"

(சிவப்பிராகசம் 86)

என்ற திருப்பாடலை மதுரை சிவப்பிரகாசர் உரையுடன் காண்க.

நின் திருவடியை வேட்டு முற்றும் துறந்த புண்ணிய சீலர்களாகிய முனிவர் பலர் எல்லையற்ற காலம் அரிய தவம் புரிந்தனர்; யானோ பாவி; அம் முனிவர் உடம்புகள் தவ உடம்புகள்; என் உடம்போ மலமாக் குரம்பை;

அத்தவ உடல்களையும் முனிவர்கள் வெறுக்கின்றனர்; நான் மலமாக்குரம்பையாகிய என் உடம்பை ஒழிக்கத் துணிவற்றுள்ளேன். இத்துணை ஏற்றத் தாழ்வுகளுக்கிடையில் அம்முனிவர்கள் தங்கள் தவத்தின் குறிக்கோளை எய்தாமல் நிற்க நீ என்னை ஆண்டாய் என்றவாறு.

உனைக் காண்பான் - மூன்றும் அடியில் உள்ள இந்தச் சொல்லை இடைநிலைத் தீவகமாகக் கொண்டு "உனைக்காண்பான் மலமாக் குரம்பை இது மாய்க்க மாட்டேன்" எனவும் ''உனைக் காண்பான் அலவா நிற்கும் அன்பிலேன்" எனவும் ஈரிடத்தும் கூட்டிப் பொருள் கொள்க.

அலவாநிற்றல் - அலவுதல் - துன்பத்தால் சுழன்று வருந்துதல், அலவா நிற்கும் அன்பிலேன் என்கொன்டு எழுகேன் என்றவாறு. ★

அன்பிலேன் - அன்பில்லாதவனுகிய நான்.

அன்பலேன் - என்பது காழித் தாண்டவராயர் கொண்ட பாடம்.

என்கொண்டு எழுகேன் - நெறிகள் பலவற்றுள்ளும் அன்பு நெறி சிறந்ததாகவும் மேம்பட்டதாகவும் உள்ளது. அன்பின்மையால் நான் அதைக் கைவிட்டு விட்டேன்; இனி எதைப் பற்றுக் கோடாகப் பற்றிக் கொண்டு வீழ்ச்சியினின்றும் மேலேறி உய்வேன் என்றவாறு.

இந்தத் திருப்பாடலில் கண்ட செய்திகளை நம் அடிகளே பின்னர்;

திருச்சிற்றம்பலம்

" புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டியாயண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணு
மன்ன யென்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினுய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேனின்னும் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 397)

என்று அருள்வது நினைக.

★ ஆதுல மாக்களு மலவுற்று விளிப்ப (மணிமேகலை காதை -வரி 42)
நறையும் விரை மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி. (குறிஞ்சிப்பாட்டு 7-8)

இத் திருப்பாடலில் ''பாவியேனைப் பணிகொண்டாய் உனைக்காண்பான் அலவா நிற்கும் அன்பிலேன்." என்பவற்றால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். ''மலமாக்குரம்பை இது மாய்க்க மாட்டேன்" என்ற குறிப்பினால் அதை மாய்த்தலே சிவானுபவத்தின் பொருட்டு உயிர் தூய்மைபெற வழி என்பது தெளிவாவதால் பதிகம் நுதலிய "**அநுபோகசுத்தி**" பெற்றும்.

59. மானேர் நோக்கி யுமையாள்
பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின்
தெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் திருக்குறிப்புக்
கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தானேன் உடையானே ருரு

(இ -ள்)

மானின் கண்கள் போன்ற விழிகளுள்ள உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனே! இந்தப் பூவுலகத்துக்கு வந்து என்னை அடிமை கொண்டருளி, மெய்யடியார்களுக்குத் தேனும் அமிழ்தமும் கரும்பின் தெளிவான சாறுமாக விளங்குகின்றவனே! பேரின்பவடிவினனே! அழகிய தில்லையில் விளங்குகின்ற அரசனே! உயிர்கள் அனைத்தையும் உன் அடிமைகளாகவும், உலகங்கள் அனைத்தையும் உன் உடைமைகளாகவும் உடையவனே! நின் திருவுள்ளக் குறிப்புச் சாரப் பெற்ற மெய்யடியார்கள் நின் திருவடிகளை அடைய; யான் ஊன் நிறைந்த புழுக் கூடாகிய இந்த உடம்பைப் பாதுகாத்து இவ்வுலகில் இருப்பவனானேன்; இனி எவ்வாறு உய்வேன் என்றவாறு.

(வி -ரை)

இத் திருப்பாடலின் ஈற்றிலுள்ள "**உடையானே**" என்பதை மூன்று மடியிலுள்ள "**கோனே**" என்றதை அடுத்து வைத்துப் பொருள் காண்க.

மானேர் நோக்கி : மான் + நேர் + நோக்கி - மான் போன்ற பார்வையுடையவள். மான் + ஏர் + நோக்கி என்று பிரித்து ''மான் போன்ற அழகிய கண்களையுடையவள்" என்றுரைக்கவும் நின்றது.

மான் நேர் நோக்கி - மானின் கண்கள் அழகுடையன மட்டுமல்லாமல் அச்சத்தால் மருட்சியும் உடையன. ஈண்டு உமையம்மையார் திருவருளின் உருவகம். இறைவன் தன் அடியார்களுக்கு அருள் செய்ய வரும்பொழுது அம்மையுடன் எழுந்தருளுவதை அறுபான் மும்மை நாயன்மார்களில் பெரும்பாலனவர்கள் சரிதத்தில் காணலாம். அருள்பாலிக்க வேண்டியுள்ளமையால் அம்பிகை வெளிப்படையாகத் தெரியும் வண்ணம் அவளுடன் எழுந்தருகின்றான். ஒவ்வொரு சமயமும் அந்தக் குறிப்பிட்ட அடியாரின் மலபரிபாகம் கருதி அவன் அருள் செய்யாது ஒழிவனோ என்ற நினைவால் அம்பிகையின் அன்னையுள்ளம் அச்ச மெய்தும். அதைக் குறிக்க ஈண்டு மருட்சியை வெளிப்படுத்தும் மானின் அழகிய கண்களை போன்ற விழிகளுடையவள் என்ற பொருளை வெளிப்படுத்தும் "***மான் நேர் நோக்கி***" என்றார். இவ்விதம் நயம்பட விளக்குவது கதிர்மணி விளக்கம்.

மானின் கண்கள் போன்ற அழகிய கண்களுடைய மகளிர் நோக்கம் அச்சத்தையும் வெளிப்படுத்தும் என்பதைத் திருஞான சம்பந்த நாயனார் சரிதத்தாலறியலாம். பாண்டிய மன்னன் வெப்பு நோயுற்றுக் கிடந்த போது சமணர்கள் தங்கள் மந்திரங்களால் அந்த நோயைத் தீர்க்க முயன்று தோற்றனர். ஞானபோனகர் எழுந்தருளினார். சமண குருமார்கள் பலரும் தங்கள் சமய நூற் கொள்கைகளை எடுத்தோதிக் கூக்குரலிட்டு வாதில் வெல்ல முயன்றனர். பிள்ளையார் ஒருவர்; பாலப்பருவத்தினர்; நிலைமை கண்ட பேரரசியார் மங்கையர்க்கரசியம்மையார் அச்சமுற்றனர். நிகழ்ந்தவற்றைப் பெரியபுராண வாயிலாகவே காண்போம்.

திருச்சிற்றம்பலம்

" பிள்ளையா ரதுகேளாப் ''பேசுகநும் பொரு ளெல்லை
உள்ளவா' றென்றருள வூத்தைவாய்ப் பறிதலையர்
துள்ளியெழுந் தனேகராய்ச் சூழ்ந்துபத றிக்கதற
வொள்ளிழையா ரதுகண்டு பொறாராகி யுண்ணடுங்கி " (758)

"தென்னவன் றன்னை நோக்கித் 'திருமேனி யெளியர் போலும்
இன்னருட் பிள்ளையார்மற் றிவருவ ரெண்ணி லார்கள்
மன்ன! நின் மயக்க மெங்கள் வள்ளலார் தீர நல்கும்
பின்னையிவ் வமணர் மூள்வார் வல்லரேற் பேச" வென்றார்(759)"

" மாறனு மவரை நோக்கி வருந்தனீ !" யென்று "மற்று
வேறுவா தென்கொ? லென்மேல் வெப்பொழித் தருகர் நீரும்
ஆறணி சடையி னருக் கன்பரா மிவரு நீங்கள்
தேறிய தெய்வத் தன்மை யென்னிடைத் தெரிப்பீ" ரென்றான் (760)"

" ஞானவா ரமுத முண்டார் நற்றவத் திருவை நோக்கி
"மானினேர் விழியி னாய்கேள் ! மற்றெனைப் பால னென்று
நீநனி யஞ்ச வேண்டா நிலையிலா வமணர்க் கென்றும்
யானெளியேன லே"னென் றெழுந்திருப் பதிகம் பாடி (761)"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம், திருஞான சம்பந்த நாயனார் புராணம்)

அந்தத் திருப்பதிகத்தில் பாலருவாயர் பகர்வதையும் பார்ப்போம் ;

திருச்சிற்றம்பலம்

" மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வா யொரு பாலனீங்கிவ னென்று நீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய விடங்களிற்பல வல்லல்சேர்
ஈனர்கட் கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே "

திருச்சிற்ம்பலம்

(திருமுறை 3 - 39 - 1)

மங்கையர்கரசியம்மையார் ஆன்மவருக்கத்தில் ஒருவர். அவர் புற நிகழ்ச்சிகளைக் கண்டு அஞ்சினர் என்பது ஒக்கும். ஆனல் ஈண்டு, இறைவனுடன் எழுந்தருளி வருபவள் உமையம்மை. குணமாகிய பதிப்பொருளின் குணியாக நிற்பவள்; அவள் அஞ்சினள் என்பது எவ்வாறு ஏற்புடையதாகும்? முற்றறிவுடைய பதிப்பொருளுக்குத் தான் அந்த அடியாருக்கு அருள் செய்யப் போகின்றேம் என்பது தெரியாதா? அவ்வாறு

அருள் செய்யா விடினினும் அஃதும் அந்த அடியாரின் உய்வின் பொருட்டுத்தானே ? அதற்கு ஏன் அஞ்ச வேண்டும் எனிற்; கூறுதும்.

உமையம்மையுடன் இறைவன் திருக்காட்சி பெறும் அடியார் சிறிதளவு வாசனுமலம் கொண்டவராயிருப்பின் அது நீங்கிப் பக்குவம் எய்த வேண்டும்; அஃது அந்த அடியவரின் உள்ளத்தில் முகிழ்க்கும் அச்சம் அவரை வருத்துவதால் வினைப்பயன் நுகர்ச்சியாகி மலவாசனையும் நீங்கும். உயிர் உய்தியெய்தத் தகுதி பெறும். அவ்வாறு உயிர் அஞ்சுவதற்குப் பதிப்பொருளாகிய திருவருளும் அவ்வுயிருடன் ஒன்ருக நின்று அச்சமுற வேண்டும். அந்த அச்சத்தின் வெளிப்பாட்டையே ஈண்டு "***மானேர் நோக்கி***" என்றருளினுர் என்க.

ஈண்டுச் சிவ ஞானபோதம் பதினேராம் சூத்திரத்தின் கீழ் ;

''ஆன்மாவையின்றி யமையாதகண் ஒருருவத்தைக் காணுங்கால், ஆன்மபோதங் கண்ணொளி யெனத் தானென வேற்றுமையின்றி உடனுய் விரவி நின்று கண்ணுக்குக் காட்டிய உருவத்தைக் கண்கண்ட தென்றும், கண்ணையதிட்டித்து நின்ற ஆன்மாக் கண்டதென்றும் பிரித்தறியப் படுமாறின்றி இருவகைக் காட்சியும் ஒன்றனை யொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே நிகழும் முறைமைபோல, முதல்வனையின்றியமையாத ஆன்மா ஒரு விடயத்தை யறியுங்கால், அம்முதல்வனது சிற்சத்தி, ஆன்ம சிற்சத்தியெனத் தானென வேறின்றி உடனுய் விரவி நிற்ப, முதல்வனும் ஆன்மாவில் அவ்வாறு விரவி நின்றறி வித்த விடயத்தை ஆன்மா அறிந்ததென்றும் ஆன்மாவை அதிட்டித்து நின்ற தானறிந்தா னென்றும் பிரித்தறியப் படுமாறின்றி, இருவகை யறிவும் ஒன்றனையொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே விடயத்துச் செல்லுமாறு செய்துவரும் பெத்தம் முத்தி யிரண்டினும் ஒரு பெற்றித்தா யுண்மையின் . . . .

- என்று சிவஞான மாபாடியம் விளக்குவது காண்க.

முன்னம் சிவபுராணம் 18-ல் ''அவனருளலே அவன்ருள் வணங்கி " என்றதன் கீழ் எடுத்தாண்ட திருமுறைப்பாடல்களும் சிவஞானபோத சூத்திரமும் நினைக.

இவ்வாறு அம்பிகை அஞ்சுவதைக் ''காணும் உபகாரம்" என்றும், ஆன்மா அஞ்சுவதைக் "***காட்டும் உபகாரம்***" என்றும் நூல்கள் நுவலும்.

ஈண்டு 42-ம் திருப்பாடலில் ''என்மான் அன்ன நோக்கிதன் கூறனே'' என்றருளியுள்ளதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. அஃது ஆன்மாவின் மேலைத்தவத்தால் இறைவன் மானிடச்சட்டை தாங்கிக் குருவாக வந்து சட்சு தீக்கையருளி மலபரிபாகம் செய்யும் குறிப்பு. இங்கு "**மானேர் நோக்கி**" என்று கூறுவது பக்குவ ஆன்மா வாசனுமலநீங்க அவ்வான்மா அச்சத்தால் வருந்தும் வண்ணம் திருவருளும் அவ்வான்மாவுடன் ஒன்றுக நின்று அஞ்சுவதாகிய ''காணும் உபகாரம்'' என்று வேறுபடுத்து உணர்க.

உமையாள் பங்கா - பேரருளாகிய இறைவன் குணம் இறைவனுக்குத் திருமேனியாக அமைகின்றது என்பதை முன்னம் கண்டாம்; உமையம்மை பேரருளில் உருவகம் என்பதும் முன்னம் கண்டாம். ஈண்டுப் பேரருளை வெளிப்படையாகத் தன் இடது பாகத்தும் தன் திருமேனி வடிவமாக வலது பாகத்தும் கொண்டவன் என்றவாறு.

வந்து இங்கு ஆட்கொண்ட - "இங்கு வந்து" என மொழிமாற்றிக் கொள்க. **இங்கு** கயிலையை விட்டு இந்தப்பூவுலகில்கண் நான் இருக்குமிடத்துக்குத் தானே வலிய எழுந்தருளி. ***ஆட்கொண்ட*** - என்னை அடிமையாக ஏற்றுக்கொண்ட. இது திருப்பெருந்துறை நிகழ்ச்சி பற்றிய சரிதப்பகுதிக்கான அகச்சான்று. ***இங்கு வந்து ஆட்கொண்ட*** '' இங்கு உவந்து ஆட்கொண்ட எனலுமாம்.

தேனே அமுதமே கரும்பின் தெளிவே. தேன் - முன்னம் நூற்சிறப்பில் ''திருவாசகம் என்னும் தேன்'' என்ற பகுதியில் ''தேன்'' என்றதன் கீழுரைத்தவை பார்க்க. தேன், தேனடையினின்றும் நேரே கிட்டுவது நாவிற் பட்டதும் மிக இனிமைபயப்பது. இவ்வுலக மக்கள் அனைவரும் சுவைக்கக்கிட்டுவது. ***அமுதம்*** - தேவாமுதம். மேலுகவாசிகளில் தேவர்களுக்கு மட்டும் கிட்டுவது. தானவர் வானவர் இரு திறத்தினரும் முயன்று பெற்றதாயினும் வானவர்க்கே கிட்டியது. உண்டவர்க்கு நோயற்ற நீண்ட வாழ்நாளும் உடல் வலிமையும் தருவது. உண்ணத்தெவிட்டாதது. ***கரும்பின் தெளிவு*** - கருப்பஞ் சாற்றின் தெளிவான பகுதி. கோது, துகள் முதலியன நீங்க வடிகட்டப்பட்ட கருப்பஞ்சாறு என்றவாறு.

இம்மூன்றும் சுவைப்போர்க்கு மதுரம் பயப்பது போல இறைவனும் இவ்வுலக மக்கள் யாவராயினும் தன்புகழை ஓதித் துதிப்போர்க்குத் தேனைப் போல இன்பம் பயக்கின்றுன். மேலுலகங்களில் பக்குவம் வாய்ந்த பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆகியோருக்கு மட்டும் எளியவனுகி இனிமை

பயக்கின்றுன்; தேவர் முதலியோருக்கு அரியவனுகின்றுன்.

அதிகமான் நெடுமானஞ்சி என்ற மன்னனின் முன்ஞேர்கள் தேவரை வழிபட்டு விண்ணுலகில் மட்டும் விளைந்து வந்த கரும்பைப் பூவுலகுக்குக் கொண்டு வந்தனர் என்பதைப் புறநானூற்றுல் அறிகின்றோம்.

அப்பாடற் பகுதிகள்;

'' அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியு
மரும் பெறன் மறபிற் கரும்பிவட் டந்து
நீரக விருக்கை யாழி சூடிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல"

(புறநானூறு 99)

" மதியேர் வெண்குடை யதியர் கோமான்
. . . .
. . . ., ..., . . . யந்தரத்
தரும்பெற லமிழ்த மன்ன
கரும்பிவட் டந்தோன் பெரும்பிறங் கடையே"

(புறநானூறு 392)

என்பன.

ஈண்டுக் "**கரும்பின் தெளிவே**" என்றது வீட்டுலகில் சாயுச்சிய முத்தி பெற்றவர்களே துய்க்கும் சிவானந்தமாகிய வீட்டின்பத்தைத் தங்கள் தவவலிமையால் இந் நில வுலகின்கண் பருவுடலில் சீவன்முத்தர்கள் துய்க்கும் நிலை குறித்து நின்றது.

சிவனே - இன்பவடிவானவனே. தேன், அமுது, கரும்பின் தெளிவு ஆகியவற்றைப் போல் இன்பம் பயப்பதால் "**சிவனே**" என்றுர். மங்கலம் செய்பவன் எனலுமாம். முன்னம் சிவபுராணம் (12-ல்) ''சிவன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

தென்தில்லைக் கோனே. தென்தில்லை - அழகியதில்லை, இந்திய நாட்டின் தென்பகுதியிலுள்ள தில்லை எனலுமாம். **கோன்** - அரசன். தில்லையில், எல்லா உயிர்களும் உய்யத் திருவைந் தொழிற் கூத்தியற்றி உலகங்களையும் உயிர்களையும் இயக்கும் தலைவனுக எழுந்தருளி யிருத்தலிற் **கோன்** என்றுர்.

"உமையாள் பங்கா" என்றருளியதனுற் படைப்பும்; *"தேனே அமுதே தெளிவே"* என்றருளியதனுற் வளர்ச்சி வகைப்பட்ட காப்பும்; *"சிவனே"* என்றருளியதனுல் ஒடுக்கமும், *"தில்லைக் கோனே"* என்றருளியதனுல் அம் முத்தொழிலும் அவன் இயற்றும் கூத்தால் நிகழ்கின்றன என்பதும், *"உடையானே"* என்றருளியமையால் அவனுடைய முதன்மையும் புலப்படுத்தியருளியவாறும் என்று முடித்துரைப்பர் திரு. பாரதியாரவர்கள்.

உன் தன் திருக்குறிப்புக் கூடுவார் - உயிர்கள் இறைவன் மாட்டுக் கொண்ட அன்பே பக்தியாகும். அந்த அன்பினுல் உந்தப்பட்டு இறைவனை எய்தச் செய்யும் முயற்சிகளே தவமாகும். அன்பின் வலிமைக் கேற்றவாறு தவமும் திண்மையுடையதாகின்றது. அத் திண்மைக்கேற்ப இறைவன் திருவுள்ளம் தவமுயல்வோர் மாட்டு அருள்பாலிக்கின்றது.

நின்கழல் கூட - தீவிரதர அன்பினுல் கடுந்தவம் முயல்வோர் இறைவனின் பேரருளால் ஈர்க்கப்பட்டு அவன் திருவடிகளாகிய வீடுபேற்றை எய்துகின்ருர்கள் என்றவாறு. இங்கு இவ்வாறு கழல் கூடியவர்கள் திருப்பெருந்துறையில் சோதியிற் கலந்தும் பிறவாற்ருல் இறைவன் பாதம் எய்தியும் வீடுபெற்ற அடியவர்களைக் குறித்து நின்றது. நம் அடிகளின் சரித அகச்சான்றுகளுள் ஒன்று. *கூட* - இதன் பின் "கூடேனுகிய நான்" எனும் எழுவாய் வருவிக்க. *கழல்* - தானியாகுபெயர்.

ஊனர் புழுக்கூடு இது காத்து - என்பு, நரம்பு, தசைகளால் கட்டப்பட்டுப் புழுக்களுக்கு உறையுள்ளாக உள்ள இந்தக் கூட்டை, யான் வாழ்வதற்குரிய இல்லமாக எண்ணி இதை எனக்குரியதென்று ஓம்பி இருக்கலானேன். என் அறியாமை இருந்தவாறு என்னே? என்றவாறு.

"நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை - நாடியரன்
றன்னுலே தன்னையுங் கண்டு தமைக்காணு
ரென்னு மெனவறிவா ரின்று"

(சிவஞான போதம் சூத்-9 அ-1- உ- 1)

என்ற ஞான சாத்திரம் நினைக.

இது - இழிவு கருதிய சுட்டு. இவ்வுலகில். இவ்வுடலில் எனலுமாம். "இனி எவ்வாறு உய்வேன்" என்பது குறிப்பெச்சமாய் இறுதிக்கண் எஞ்சி நின்றது.

இத் திருப்பாடலில் இறைவனைத் தேனே அமுதே கரும்பின் தெளிவே என விளித்து உன் கழல் கூடவியலாதவனாக உள்ளேன் என்று கூறி இரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். ஊனார் புழுக்கூடு காத்து இங்கு இருப்பதானேன் என்றிரங்குவதால் இது சிவானுபவத்துக்குத் தடை யென்பதும், இதன் ஒழிவே தூய்மை பயப்பது என்பதும் குறிப்பால் பெறப்படுவதால் - பதிகம் நுதலிய "***அநுபோக சுத்தி***" பெற்றும்.

60. உடையா னேநின் றனையுள்கி
யுள்ள முருகும் பெருங்காதல்
உடையா ருடையாய் நின்பாதஞ்
சேரக் கண்டிங் கூர்நாயின்
கடையா னேனெஞ் சுருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தாக முடித்தாயே ருகூ

(இ -ள்)

உலகங்களை எல்லாம் உன் உடைமையாகவும் உயிர்களை எல்லாம் உன் அடிமையாகவும் கொண்டுள்ள இறைவனே! நின்னை நினைந்து நெஞ்சம் உருகும் பேரன்புடையார் தம்மை அடிமையாகவுடைய நின் திருவடிகளை எய்தி இன்புறுதலை அறிந்தும் கூட உள்ளம் கரையாதவனும் கல்வியறிவு இல்லாத மனம் உடையவனும் நெஞ்சக் கனிவு இல்லாதவனுமாகிய யான். ஊர்ப்பொது நாய் போல இவ்வுலகத்தில் கடைப்பட்டவனாய் முடை நாற்றம் வீசுகின்ற புழுக்கூடாகிய இவ்வுடலை ஓம்பிக் கொண்டு இந்தப் பூவுலக வாழ்க்கையில் இருக்கும்படி முடிவு செய்து விட்டாயே ! இதுதான் என்னை வந்திங் காட்கொண்ட அருளுக்குரிய செயலோ ?

(வி -ரை)

இத் திருப்பாடலில் ''இங்கு ஊர் நாயின் கடையானேன்" என்பதைக் ''கசியாதேன்" என்றதன் பின் புணர்த்துப் பொருள் காண்க.

உடையானே - சிறப்பு முறையில் ஒரு பொருளைக் குறிப்பிட்டு, அதனை உடையான் என்னுது, பொதுவாக *உடையான்* என்றமையால் எல்லாவற்றையும் உடைய இறைவன் ஒருவனையே குறிக்கும் என்பது நினைக. *உடையானே* - வாளா பெயராக நின்றது எனலுமாம்.

நின் தனை உள்கி - பொதுவாக உலகில் இளைஞர் இளமகளிரையும், மங்கையர் இளைஞரையும் காதலால் நினைவதால் உள்ளம் உருகும். அதை விலக்கி ஈண்டு இறைவனை நினைந்துருகும் அன்பைக் குறிப்பதற்காக "*நின்றனை உள்கி*" என்றார். சிவபெருமான் உருவம், அருவம், அருவுருவம் என்ற மூவகைத் திருமேனிகள் கொண்டவன். அவற்றுள் உருவத்திருமேனியே நெஞ்சால் நினைத்தற்குரியது. அதனை உள்ளத் தாமரையின் நாப்பண் நிறுத்தி நினைவு கூர்தல் உள்குதலாகும். அவ்வாறு நினைவு கூரும் போது நினைவின் திண்மையால் நினைத்தற் கருவியாகிய உள்ளம் நெகிழ்ந்து கரையும். அந்த நிலையே காதல் ஆகும். *நின் தனை உள்கி* - நின்னை உள்கி என்பது பொருள். *தன்*- செய்யுட் சுவைபட வந்த அசைநிலை. *ஐ* - இரண்டாம் வேற்றுமை உருபு.

பெருங்காதல் உடையார் - உள்ளம் முழுவதும் கரைந்த நிலையில், உயிர் சிவபாவனையில் ஈடுபட்டு மலநாசம் எய்தும். பலகால் நினைந்து நினைந்து உள்ளம் உருகும் அன்பே பேரன்பாகும். அதனை ஈண்டுப் "*பெருங்காதல்*" என்றார்.

உடையாய் - பெருங்காதல் உடையவர்களை உன் அடிமைகளாக உடையவனே என்றவாறு. இந்தப் பெருங்காதல் உடையவர்களையே ;

" *தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா*
ரெம்மை யுடைமை யெமையிகழார் - தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்"

(சிவஞானபோதம் அவையடக்கம்)

என்று சாத்திரம் சாற்றுவது நினைக.

பெருங்காதல் உடையார் உடையாய் நின்பாதம் சேரக்கண்டும் - பேரன்புடையவர்கள் தங்களை அடிமைகளாக உடைய நின் திருவடிகளை எய்துவதை அறிந்திருந்தும். "*உடையாய்*" என்னும் குறிப்பு வினைமுற்று பெயரெச்சப் பொருளில் நின்றது. "உடையாயாகிய நின்" என்று விரித்துக் கொள்க. அத்தகைய பக்குவமுள்ளவர்களே ஆன்ம இயல்பையும் ஆண்டவன் இயல்பையும் உணரும் மதுகையுள்ளவர் என்றவாறு.

கண்டு - கண்டும் என உம்மை விரித்துக் கொள்க. கண்டும் உருகாதேன் என்று முடித்துக் கொள்க.

கண்டும் - அறிந்தும். திருப்பெருந்துறையில் சோதியிற் கலந்தும் வேறு வழிகளில் பாதம் எய்தியும் உய்ந்தவர்களை நேரில் கண்டது மட்டுமன்றி நூல்கள் வழியும் ஆன்றோர்வாய் மொழியாலும் முன்னம் வீடுபேறுற்ற அடியவர் பலர் சரிதங்களை அறிந்திருந்தும் என்றவாறு. "**கண்டும்**" என்ற எச்சம் "இருப்பதாக" என்பதிலுள்ள "**ஆக**" என்பதோடு முடியும்.

நெஞ்சு உருகாதேன் - நின்னை நினைந்து உருகும் பெருங்காதல் உடையார் நின் பாதம் சேரக்கண்டேன். நானும் அவர்களைப் போல் உன் திருவடிகளை அடைந்திருக்க வேண்டும். அதற்குரிய தகுதி இலனாயினும் என் மனம் உருகும் நிலையையேனும் எய்தினேனோ எனின்; அஃதுமிலன்; என்றவாறு.

கல்லா மனத்தேன் - உள்ளம் உருகும் பக்குவம் இலனெனினும் பதியாகிய நின் இயல்பும் அடிமையாகிய என் இயல்பும் என்னைப் பிணித்துள்ள மலத்தின் இயல்பும் என்ற சமய உண்மைகளையேனும் நூல்கள் வழிக்கற்றும் ஆன்றோர் வாய்மொழி வழியாகக் கேட்டும் மனத் தெளிவேனும் எய்தினேனோ எனின்; அஃது மிலன் என்றவாறு.

இவ்வாறு நூல்களின் வழி எய்துவது அபர ஞானம்; இது நெஞ்சுருகுதலாகிய அனுபவ ஞானமாகிய பரஞானத்துக்கு ஏதுவாகும். பரஞானம் அபர ஞானம் என்ற இரண்டும் இல்லேன் என்றவாறு.

கல்லா மனத்தேன் - என்பதைக் கல்ஆம் மனத்தேன் என்று கொண்டு கல்லைப் போன்ற நெஞ்சம் உடையேன் என்றுரைத்தனர் முன்னுரையாளரில் சிலர். ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் இரண்டிலும் அவ்வாறே கொண்டு

My mind is stone stony heart என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்தப் பொருள் ''நெஞ்சுருகாதேன்'' என்பதிற் பெறப்படுவதால் இஃது உரையன்று என ஒதுக்குக.

கசியாதேன் - ***கசிதல்*** - கனிதல்; குழைதல். இஃது உள்ளம் உருகுவதற்கு முன் நெக்குவிட்டு நெகிழும் நிலையாகும். இந்த நிலையை ;

திருச்சிற்றம்பலம்

'' கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகே னுயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிருமாந் திருந்தேனெம் பெருமானே யடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே.

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 548)

என்று நம் அடிகளே பின்னர் அருளுவது காண்க.

இங்கு ஊர் நாயின் கடையானேன் . இங்கு - இவ்வுலகத்தில். ***ஊர் நாய்*** .. யாருக்கும் உரிமையற்றதால் ஊரைப் பாதுகாத்துக் கொண்டு சுற்றும் நாய். நாய்ப் பிறப்பே மிகவும் இழிவானது. அதுபற்றி முன்னம் சிவபுராணம் (60- ல்) ''நாய்'' என்றதன் கீழுரைத்தவை பார்க்க. அந்த நாயும் ஒருவருக்கு உரியதாயின் அதற்கு உணவு கொடுத்தும் இருப்பிடம் தந்தும் நோயுற்ற காலத்தில் கால்நடை மருத்துவரிடம் சிகிச்சை பெறச் செய்தும் பிறர் துன்புறத்தும் பொழுது தடுத்தும் பாதுகாப்பர். ஆனால் யாரும் உரிமை கொள்ளாத ***ஊர் நாய்***, எச்சில் இலை உணவு, கான்ற சோறு, மலம் முதலிய இழிந்த பொருட்களைத் தின்றும்; இருப்பிட மின்றி ஊரைச் சுற்றியலைந்தும் வேறு நாய்களின் தொடக்கால் சொறி முதலிய நோய்களால் வருந்தியும்; சிறுவர் முதலியவர்களால் கல்லடிபட்டும் துன்புறும். அந்த நாயைக் காட்டிலும் நானும் கடைப்பட்டவனானேன் என்றார்.

நாயின் - இன் - நாயைக் காட்டிலும். ஐந்தாம் வேற்றுமை உவம உருபு உறல் பொருளில் வந்தது. அந்த நாய், பிறவியிலேயே இழிந்தது. ஆனால் நான் கிடைத்தற்கரிய மானிடப் பிறவி பெற்றும் ஆறறிவு பெற்றிருந்தும் இழிந்தவனானேன் என்பார். ***ஊர் நாயினும் கடையானேன்*** என இழிவு சிறப்பும்மை விரித்துப் பொருள் கோடாலுமொக்கும்.

ஊர் நாய் ஊரைக்காத்தலேயேனும் செய்யும், யான் அத்தொழிலும் செய்யேன் என்றுரைப்பது திரு. முதலியாரவர்கள் உரை.

முடையார் புழுக்கூடு இது காத்து - இந்த உடல் இறைவன் திருவடிகளை எய்தத் தவமுயல்வதற்கான ஒரு கருவி. அந்தப் பயனை அடையாவிடில் இது முடைநாற்றம் வீசும் ஊனல் ஆனதும் புழுக்கள் வாழும் கூடாய் நிற்பதுமாம். அந்த நிலேயில் இதை ஒழித்தல் வேண்டும். பெருங்காதலுடைய அடியவர்கள் இந்த உடம்பைத் தவம் செய்ய அமைந்த கருவியாகப் பயன்படுத்தினர். தவத்தின் பயனுக உன் திருவடிகளையும் எய்தினர். அதை நானும் அறிந்திருந்தேன். எனினும், தவம் முயன்று உன் திருவடியை எய்தினேனல்லன்; தவத்துக்குப் பயன்படாத இவ்வுடலை ஒழித்தேனு மல்லன்; அது தாஞக அழியும்படி விட்டேனுமல்லன்; மாருக அஃது அவ்வாறு அழிந்து விடாமல் காத்து வருகின்றேன் என்று இரங்கியவாறு.

இங்கு இருப்பது ஆக முடித்தாயே. இங்கு - இந் நிலவுலகில். இந்த உடம்பில் எனலுமாம். ***இருப்பது*** - வாழும்படி. ''***கடையானேன்***'' ''***உருகாதேன்***'', ''***கசியாதேன்***'' என்பன எழுவாய்கள். ''***இருப்பது***'' - என்பது வினைமுற்று வடிவில் வந்த தொழிற் பெயர். ***ஆக*** - நிகழும்படி. ***முடித்தல்*** - வரையறுத்தல். திருப்பெருந்துறையில் இறைவன் நம் அடிகளைப் பொய்கை நடுவில் தோன்றும் பேரொளியில் புகவேண்டா என்று அருளிய குறிப்பு.

இறைவன் அவ்வாறு தமக்கு ஆணையிட்டதால் தாம் ஏனைய அடியவர்களுடன் சோதியிற் புகுந்து வீடுபேறு எய்த முடியாது போயிற்று; அதற்கான பக்குவம் தமக்கு இல்லை; அது தமது தீவினையின் மிகுதியே என்று அடிகள் கருதினர்கள். ஆனல் இறைவன் நம் அடிகளை அவ்வாறு தடுத்து நிறுத்திய காரணம் ''திருவாசகத்தில் ஏனைய திருப்பாடல்களும் நம் அடிகள் மூலம் நமக்குக் கிடைத்தல் வேண்டும்; திருக்கோவையார் என்ற நூல் வெளிவருதல் வேண்டும்; திருவாசகமும் திருக்கோவையாரும் இறைவன் திருக்கரத்தாலே எழுதப்பட்டு நம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்; இலங்கை மன்னனின் பெண் ஊமைத்தன்மை நீங்கி நம் அடிகளை வணங்கி உய்ய வேண்டும்; இலங்கை மன்னனும் அவன் பௌத்த குருமார்களும் நம் அடிகளில் அருள் நோக்கம் பெற்று மலபரி பாகமுற்றுச் சிவநெறி சார்ந்து உய்யவேண்டும்; தில்லைவாழந்தணர்களும் அவர்கள் வழி உலகினரும்

"திருவாசகத்தின் பொருள் திருவம்பலமுடையானே" என்றுணர்ந்து உய்ய வேண்டும் என்பனவாம்.

பாடலின் ஈற்றில் உள்ள ஏகாரம் தேற்றம்.

இப் பாடலின் ஈற்றில், ''இதுதான் அடியேனை இங்கு வந்து ஆட்கொண்ட அருளின் செயலோ" என்று குறிப்பெச்சம் வருவித்து முடித்துக் கொள்க.

இத் திருப்பாடலில் நெஞ்சு உருகுதல் வேண்டும் என்ற குறிப்பினுலும் முடையார் புழுக்கூடு என்ற வெறுப்பினுலும் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்ரும். நெஞ்சு உருகாமை முதலியனவும், புழுக்கூடு காத்திருத்தலும் சிவானுபவத்துக்குத் தடையாகலின்; உருகுதலும் உடம்பின் ஒழிவும் சிவானுபவத்துக் குரிய தூய்மை பயத்தலின் பதிகம் நுதலிய "**அநுபோக சுத்தி**" பெற்ரும்.

61. முடித்த வாறும் என்றனக்கே
தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோரா மற்
சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் து கிலிறையே
சோர்ந்த வாறும் முகங்குறுவேர்
பொடித்த வாறும் இவையுணர்ந்து
கேடென் றனக்கே சூழ்ந்தேனே ருள

(இ-ள்)

முன்னம் உண்மை அடியார்கள் தளர்ந்துவிடாமல் அவர்களைத் திருப்பெருந்துறையில் ஏற்றுக் கொண்டதும், எனக்கு இவ்வூன் உடலைக் காத்து இவ்வுலகில் இருக்கும்படி முடிவு செய்ததும் பொருத்தமே; கள்வனுகிய யான் இவ்வுலகில் பெண் ஒருத்தியின் வாயிதழ் துடித்த விதமும் ஆடை சிறிது நழுவிய விதமும் முகத்தினின்றும் சிறு வியர்வை அரும்பிய விதமும் ஆகிய இவற்றை அறிந்தும் எனக்கே யான் கேடு தேடிக் கொள்ளலானேன்.

(வி -ரை)

இப்பாடலை; முன்அடியாரைச் சோராமற் பிடித்தவாறும் என் தனக்கே முடித்தவாறும் தக்கதே; சோரனேன் இங்கு ஒருத்தி வாய் துடித்தவாறும், துகில் இறையே சோர்ந்த வாறும், முகம் குறுவேர் பொடித்த வாறும் இவை உணர்ந்து என் தனக்கே கேடு சூழ்ந்தேனே - என்று அன்னுவயப்படுத்திக் கொள்க.

முன் அடியாரை - முன்னம் திருப்பெருந்துறையில் நம் அடிகளுடன் கூடியிருந்த அடியார்களும் பின்னர்ச் சோதியிற் கலக்க ஓடோடி வந்தும் சோதியில் புக இயலாது பல முயற்சிகளால் இறைவன் பாதம் எய்தியவர்களாகிய அடியார்களுமாவர். முன்னம் கீர்த்தித் திருவகவல் 130 முதல் 137 வரை அருளியவை. நம் அடிகள் பின்னரும் ;

திருச்சிற்றம்பலம்

" அருளா ரமுதப் பெருங்கடல்வாய்
அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை யிதுபொறுத்தே
எய்த்தேன் கண்டா யெம்மானே
மருளார் மனத்தோ ருன்மத்தன்
வருமா லென்றிங் கெனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 485)

என்றருளியுள்ளதும், ஆங்காங்கு வேறிடங்களிலும் குறித்து மனம் நெகிழ்வதும் காண்க.

இதற்கு இவ்வாறன்றி ''முன்" என்பதை வினைத்தொகையாகக் கொண்டு ''நாடிய அடியாரை" என்றுரைப்பார் திரு. கா.சு. பிள்ளையவர்கள். உன்னைத் தவத்தினால் நாடியடைய முயன்ற அடியார்கள் என்றவாறு.

சோராமல் - தளர்ந்துவிடாமல், இந்தச் சொல்லை அடியாரைச் சோராமல் பிடித்த வாறும், ''சோராமல் இவையுணர்ந்து, சேராமற் கேடு சூழ்ந்தேன்" என மூன்றிடங்களிலும் கூட்டிப் பொருள் கொள்க.

பிடித்தவாறு - ஆட்கொண்டவாறு. திருப்பெருந்துறையில் அடியார்களையும் என்னையும் ஆட்கொண்டவாறு என்றுரைக்கவும் நின்றது.

அடியார்கள் சோராமல் இறைவன் ஆட்கொண்டு தாங்கும் உண்மையை,

திருச்சிற்றம்பலம்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5 -19-9)

எனவரும் நம் அரசுகளின் அமுதவாக்காலு மறிக.

இதற்கு மாறாக இன்று ''முடித்தவாறும் தக்கதுதானோ?" என்று முடிக்கவும் நின்றது.

முடித்தவாறும் தக்கதே - அடியேன் பாசப்பிணிப்பினால் முன்வினைப் பயன்களை நுகர வேண்டியவன். ஆதலின் முடையார் புழுக்கூடாகிய இவ்வுடலை ஓம்பிக் கொண்டு என்னை இங்கிருக்கும்படி முடிவு செய்தனை; ஏனைய அடியார்களுக்கு வினையெச்சம் இன்மையால் அவர்கள் இங்கிருக்கவோ அன்றிப் பிறவியிற் செல்லவோ வேண்டுவதில்லை; ஆதலின் அவர்களைத் தளரவிடாமல் உன் திருவடி நிழலில் சேர்த்துக் கொண்டாய். ஆதலின் உன் இவ்விரு செயல்களும் பொருத்த முடையனவே என்றவாறு. இதுபற்றி முன்னம் 60-ம் பாடலில் ''முடித்தல்" என்றதன் கீழ் விளக்கியவை காண்க.

சோரனேன். சோரன் - கள்வன். சிவவேடம் தாங்கி நிற்கும் நம் அடிகள், சிவனடியார்கள் அனைவருக்கும் தம் தோற்றத்தால் சிவமாகவே கண்டு வழிபட நிற்கின்றார். ஆனால் இளம் பெண் ஒருத்தியின் பார்வையில் அவள் காமத்தை ஏற்றுக் கொள்ளும் காமுகனாக நிற்கின்றார். அஃதுண்மையன்று. எனவே உண்மைக்கும் பொய்ம்மைக்கும் ஒரே சமயத்தில் காரணமாக நிற்கும் தம்மைச் ***சோரன்*** என்றார்.

ஒருத்தி வாய் துடித்த வாறும் - *ஒருத்தி* - காம வயப்பட்ட இளம் பெண் ஒருத்தி. பெண்ணுசையை ஒழித்தல் வேண்டும்; அல்லாக்கால் அஃது ஆன்ம முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி உயிரைப் பிறவியில் செலுத்தும்; பின் ஆகாமியம் ஏறுவதால் தொடர்ந்து பிறப்பிறப்பில் சுழல வேண்டிவரும் என்பதைத் திருவாசகத்தில் பல இடங்களில் நம் அடிகள் உணர்த்திச் செல்கின்றுர். ஆங்கெல்லாம் பெண்ணுசையை மகளிர் என்று பன்மையாகக் குறிப்பிட்டும்; அவர்கள் தொடக்கில் விழும் உலக மக்களின் குற்றங்களைத் தம்மேல் ஏற்றிக் கொண்டுரைத்தும் செல்லும் அடிகள் ஈண்டு அந்தப் பெண்ணுசையை தம் மேலேற்றிக் கொள்ள வசதியாக அமையும் பொருட்டு அதை இளம்பெண் ஒருத்தியாக உருவகம் செய்து "*ஒருத்தி*" என்றுர்.

வாய் துடித்த வாறும் - பெண்ணுசையின் உருவகமாக நிற்கும் அந்த **ஒருத்தியின்** காமச் செயல்கள் சிலவற்றைக் கூறும் வகையில் அவள் வாய் **துடித்தது** என்றுர். காமம் மிகுந்ததால் தன் வச மிழந்து நிற்பாள் போல, நடித்துப் பேச இயலாமல் உதடுகள் துடித்த அளவில் நின்றன என்ற வாறு.

துகில் இறையே சோர்ந்த வாறும் - பேச இயலாத நிலையில் காம மிகுதியால் தன் உடல் சிறிது மெலிய அதனுல் தான் அணிந்திருந்த புடவை நெகிழ்ந்து கீழிறங்கியதாக நடித்தாள்.

முகம் குறுவேர் பொடித்த வாறும் - மேற்குறித்த இரு செயல்களும் நம் அடிகள் மாட்டுப் பயன்படாமையால் இனி என் செய்வம் என்ற வருத்தம் தோன்ற நின்றுள்; அந்தத் துன்ப நினைவின் வெப்பத்தால் அவள் முகத்தில் சிறு வியர்வை அரும்பிற்று என்றவாறு. **பொடித்தல்** - அரும்புதல்

வாய்துடித்தலால் மொழியும் துகில் சோர்தலால் மெய்யும் முகம் சிறு வியர்வு அரும்புதலால் மனமும் ஆக முக்கரணங்களும் காமத்தின் வயப்பட்டன என்றவாறு.

திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பில் இந்தப் பாடலின் பகுதிகள்: "முன் அடியாரைப் பிடித்தவாறும் = *I left Thy saints* துகிலிறையே சோர்ந்த வாறும் = *the folds of circling robe* முகங் குறுவேர் பொடித்த வாறும் = *the timid bashful looks* என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மொழி பெயர்ப்பில் பாடலின் கருத்து அமையவில்லை என்பது வெளிப்படை.

இந்நிகழ்ச்சிகளை;

''சுரிகுழன் மடவார் இளமுலைப் பணைப்பும்
துகிலிறை சோர்வதும் நகையும்
வரிவிழித் தொழிலும் சேயிதழ்த் துடிப்பும்
மனத்திடை யெழுதிவைத் தழிவேன்

(கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 72)

என்று நம் மாதவச் சிவஞானமுனிவர் மொழிவது காண்க.

இவ்வாறு வினையெச்ச முள்ள உயிர்களை அவற்றின் பக்குவம் கருதி மாயை மயக்கும் என்பதை;

நித்தமா யருவா யேக நிலையதா யுலகத் திற்கோர்
வித்துமா யசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுகர ணமுமு யிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே

(சிவஞான சித்தியார் - சுபக்கம் சூத். 2 - அதி. 3 - செய். 53)

என்று நம் ஞானசாத்திரம் நவிலும்.

இவை உணர்ந்து - அந்தப் பெண்ணின் காமச் செயல்கள் நம் அடிகள் மாட்டு யாதொரு மயக்கத்தையும் நிகழ்த்தவில்லை. எனினும், இத்தகைய செயல்கள் உலக மக்களை அலைத் தொழிப்பன. அவை அவள் மாட்டு நிலை பெறுவதற்குத் தம் திருமேனித் தோற்றமும் காரணமாயிற்றே என்பதை உணர்ந்து நம் அடிகள் வருந்தினர் என்க. **உணர்ந்து** - உணர்ந்தும் என உம்மை விரித்துக் கொள்க.

சோராமல் - என்பதை ஈண்டும் புணர்த்துச் ***சேராமல் இவை உணர்ந்து*** என்றுரைத்துக் கொள்க.

இப் பகுதியில் ***ஒருத்தி*** என்பதை நம் அடிகள் இல்லறத்தில் நின்ற ஞான்று அவர் மனைவியாக அமைந்த அம்மையார் என்றும் தாம் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று அமைச்சர் பதவி, இல்லறம் முதலியவற்றைத் துறந்து இறைவன் ஆணைப்படியே தில்லை செல்ல வெளியேறிய போழ்து தம் மனைவி மாட்டு நிகழ்ந்த வாய் துடித்தல்,

துகிலிறையே சோர்தல், முகம்குறு வியர் பொடித்தல் ஆகியவற்ருல் மனம் அலேப்புண்டார் என்றும் விரித்துரைத்தார் முன்உரையாசிரியர்களில் ஒருவர். அதன் பொருத்தமின்மை முன்னம் 44-ம் திருப்பாடலில் ''மத்திடு தயிராகி" என்றதன் கீழ் விரித்து விளக்கினும். எனவே இங்கும் இவ்வாய்வின் முடிவை வெறும் கற்பனே என்று ஒதுக்குக.

கேடு என்றனக்கே சூழ்கின்றேனே - சோராமல் என்பதை ஈண்டும் புணர்த்து "**என்றனக்கே சோராமல் கேடு சூழ்கின்றேனே** " என்றுரைத்துக் கொள்க.

உலக மக்களே அலேத்தொழிக்கும் காமச் செயல்களேப்புரியும் பெண் ஒருத்தியின் செயல்களுக்குத் தம் திருமேனியின் தோற்றம் காரணமாயிற்றே என வருந்தும் நம் அடிகள் தம் உடம்பை விட்டொழித்து உயிர் நீங்கச் செய்யவும் இயலாது இறைவன் தம்மைச் சோதியிற்புகாமல் தில்லே வரும்படி இட்ட ஆணே தடை செய்கின்றதே என்பதை நினேந்து வருந்துகின்ருர். அவ்வாறு தில்லே செல்ல வேண்டுமாயின் உயிர் உடலில் தங்கியிருக்க உணவும் உலகில் சஞ்சரிக்க உடையும் தேவை. அதற்காக உண்பதும் உடுப்பதும் செய்யும் தொழில், காமச் செயல்களுள்ள பெண் ஒருத்தியின் தொழில்களுக்கு நிலேக்களனுவதால் எனக்கு நானே கேடு சூழ்ந்து கொள்கின்றேன் என்று இரங்குகின்ருர்.

எனக்கே - என்பதிலுள்ள ஏகாரத்தைப் பிரித்து **கேடு** என்பதுடன் புணர்த்து **கேடே சூழ்கின்றேன்** என்க. ஏகாரம் பிரிநிலே. தேற்றமுமாம். **சூழ்தல்** - சதுரப்பாட்டுடன் ஆராய்ந்து தேடிக் கொள்ளல்.

சூழ்கின்றேனே - ஏகாரம் ஈற்றசை. ஆதலின், விரைவில் இந்த ஊனுடலே ஒழித்து என்னே உன் திருவடி நிழலில் சேர்த்துக் கொள் என்பது இந்தத் திருப்பாடலில் போந்த கருத்து.

இத் திருப்பாடலில் அடியார்களே நீ ஆட்கொண்டது தக்கதே. அவ்வாறே என்னேயும் ஆட்கொண்டு வீடுபேறருள்க என்ற குறிப்பால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்ரும். ''இவையுணர்ந்து கேடென்றனக்கே சூழ்கின்றேனே" என்றமையால் இத்தகைய செயல்களில் ஈடுபடாமை உயிர்சிவானுபவம் நுகர்த்தற்கான தூய்மையாகும் என்பது பெறப்படுவதால் பதிகம் நுதலிய "**அநுபோக சுத்தி**" பெற்ரும்.

62. தேனைப் பாலைக் கன்னலின்
தெளியை யொளியைத் தெளிந்தார்தம்
ஊனை யுருக்கு முடையானை
உம்ப ரானை வம்பனேன்
நானின் னடியேன் நீயென்னை
யாண்டா யென்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந்
தன்மை யாமென் றன்மையே ருஅ

(இ -ள்)

உன்னை எய்தினார்க்குத் தேனே ! பாலே ! கருப்பஞ்சாற்றின் தெளிவே! பேரொளிப்பிழம்பாய் உள்ளவனே ! உன்னைப் பதிப்பொருள் என்று தெளிந்த மெய்யன்பர்களின் ஊனுடம்பை உருக்கும் தலைவனே! மேலான சிவபுரத்தின் மன்னனாகிய இறைவனே ! வீணனாகிய யான் உனக்கு அடிமை; நீ என்னை ஆண்டு கொண்டவன் என்று கூறினால், அடியேனைக் குறித்து நீ நகைத்தே அருளலாம் தன்மையாகும் என் இயல்பு என்றவாறு.

இத் திருப்பாடலை ஆற்றொழுக்காகப் பொருள் கொள்க.

(வி -ரை)

தேனை, பாலை, கன்னலின் , தெளியை, ஒளியை, உடையானை, உம்பரானை என்பன முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள். இவற்றில் உள்ள இரண்டாம் வேற்றுமை உருபு எட்டாம் வேற்றுமைப் பொருளில் வந்த வேற்றுமை உருபு மயக்கம். இவற்றைப் படர்க்கையாகக் கொண்டுரைத்தனர் முன்னுரையாளர்கள். இந்தப் பதிகத்தில் ஏனைய ஒன்பது திருப்பாடல்களிலும் இறைவனை நம் அடிகள் முன்னிலையில் விளித்துள்ளார். எனவே ஈண்டும் அவ்வாறே கொள்ளலே பொருத்தமாகும். சந்திகளில் வல்லினம் மிக்கது ஓசை குறித்து வந்த செய்யுள் விகாரம்.

தேன் - தேனடையினின்றும் அப்பொழுது எடுத்த புதிய தேன் என்க. தேன்பற்றி முன்னம் நூற்சிறப்பில் ''தேன்'' என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

பால் - அப்பொழுது கறந்து உடனே காய்ச்சப்பட்ட ஆவின்பால்.

கன்னலின் தெளி - அப்பொழுது வெட்டி உடனே ஆலையிலிட்டுப் பிழியப்பட்ட கருப்பஞ்சாற்றின் தெளிவு. வெல்லம், கற்கண்டும் என்றும் உரை கொள்வர்.

முன்னம் சிவபுராணம் (46-ல்) ''கறந்த பால்'' ''கன்னல்'' என்பவற்றின் கீழுரைத்தவை பார்க்க. இவற்றுக்கு அவ்வாறன்றி ''அதிதீவிர பக்குவிகளாகிய தீவிரதரர்க்குத் தேன் போல உடன் மிக இனிப்பவனும்; தீவிரபக்குவிகளுக்குப் பால் போல உண்ட போது இனிப்பவனும்; மந்த பக்குவிகளுக்குக் கரும்பின் தெளிவாய்ச் சக்கையும் கோதும் நீக்கி நுகரப்படும் போது இனிப்பவனும் உள்ளான் என ஆன்மாக்களின் மூவகை நிலைகளையும்; அவர்களுக்கு இறைவன் நுகரப்படு பொருளாய் விளங்கும் நிலை வேறு பாட்டினையும் விளக்கிய வாறு; என்று சகலருக்கே இவையனைத்தையும் புணர்த்துரைப்பர் திரு. தேசிகரவர்கள்.

தெளிவை - என்ற பாடபேதமும் காணப்படுகின்றது.

ஒளியை - ஞானப் பேரொளியாக உள்ளவன். கதிரவன் முதலிய ஒளிப்பொருள்களுக்கெல்லாம் சிவபெருமான் ஒளிவழங்குபவனாக உள்ளான் என்று ஆகமங்கள் கூறுவது நினைக. இதுபற்றி முன்னம் 30-ம் திருப்பாடலில் ''தனிச்சுடரே'' என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க. 33-ம் திருப்பாடலில் ''ஆரழல்'' என்றருளியதும் அதன் கீழ் விளக்கியவையும் பார்க்க. இறைவன் இங்ஙனம் கருவி கரணங்களுக்குத் தேன் முதலியவை போல இன்பம் பயப்பதுடன் உயிர் உணர்வுக்கும் இன்பம் பயக்கும் ஞான ஒளியாகவும் உள்ளான் என்றவாறு.

தெளிந்தார் - இறைவன், இங்ஙனம், பேரின்பமயமான ஞான வடிவினன் என்பதை ஆகமம் முதலிய நூல்களை ஐயம் திரிபு அறக்கற்றும் ஞானாசிரியன் உபதேசவாயிலாகவும் அறிந்து சிந்தித்துத் தெளிவடைந்தவர்கள்.

ஊனை உருக்கும் உடையானை - அங்ஙனம் தெளிந்தவர்கள் நிட்டை கூடி இறைவனாகிய அருளமுதத்தை உண்ண உண்ண அவர்கள் உள் ஒளியைப் பெருக்கி ஊனுடலைக் கரையச் செய்பவனும் அவர்களைத் தன் அடிமைகளாக உடையவனுமாகிய தலைவன். உடல் பொருள் ஆவி அனைத்தும் இறைவனின் உடமையாகலின் தன் உடமையாகிய அடிமையின் உடம்பை உருக்குதற்கும்

இறைவன் உரிமையுள்ளவன் என்பது போத **உடையானை** என்றருளினர்.

தவத்திஞல் ஞானத்தில் திளைப்பவர்களுக்கு ஊனுடல் சுருங்கச் சுருங்க உள்ளொளி பெருகும் என்பதை நம் அடிகளே பின்னர்;

திருச்சிற்றம்பலம்

" பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 542)

என்றருளுவது காண்க.

பிணியிஞலும், வறுமையாலும் உலகியற் கவலைகளாலும் ஊனுடல் சுருங்குதலை நாம் மக்கள் மாட்டுக் காண்கின்ரேம். அதன் பயன் துன்பமே. அவ்வாறன்றி அவ்வுடற் சுருக்கம் தவத்திஞல் உண்டாயின் அது மிகவும் சிறந்தது என்பதை ''விரதம் தனில் இளைத்த மேனி" என்ற ஔவைப்பிராட்டியின் வாக்காலுமறிக.

திருச்சிற்றம்பலம்

'' உலகமுவப்ப . . . .
. . . . ஊன்கெழு மார்பின்
என்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர்"

திருச்சிற்றம்பலம்

(திருமுருகாற்றுப்படை 129 -131)

என்பதும் நினைக.

உம்பரானே - உம்பரான் - எல்லா உலகங்களுக்கும் மேல் உள்ளதாகிய சிவலோகம். **உம்பர்**-மேலுள்ளது. அதற்கு அரசன் என்றதனுல் அவனது முழுமுதல் தலைமைபெற்றும். இதனை நம் அடிகள் பின்னரும் ;

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 534)

என்றருளுவது காண்க.

உம்பரானே ! என விளியாக் கொள்க. சிதாகாச சொரூபன் என்பர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியாரவர்கள். இதை, **உம்பர் ஆன்** என்று இரு சொற்களாகப் பிரித்துத் தேவர்களின் பசு; காமதேனு என்றுரைத்தனர் முன்னுரையாளர்களில் சிலர். இது பற்றிப் பிள்ளர் 67 -ம் திருப் பாடலில் "கடவுளானே என்பதன் கீழ் விரித்துரைப்போம்.

வம்பனேன் - புதியவன், இயற்கைக்கு மாறுபட்டவன் எனலுமாம். உன் சிறந்த தன்மைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட இயல்புகளுடைய யான் என்றவாறு.

நான் நின் அடிமை , நீ என்னை ஆண்டாய் - மானிட வாழ்வில் உயிர்கள் முக்கியமாகக் கொண்டடொழுரும் செயல்கள் இரண்டே. ஒன்று தவத்தில் ஈடுபட்டு வீடுபேறெய்தும் வழியில் முன்னேறுவதற்கு இவ்வுடலைக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளல்; மற்றொன்று உடலை ஓம்பி இவ்வுலக வாழ்வில் ஈடுபட்டுப் பயனற்ற செயல்களைப்புரிந்து பிறப்பிறப்புச் சுழலில் விடுபடாமல் வருந்துதல். இதனையே;

" தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றெல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு "

(திருக்குறள் - 266)

என்று முப்பானூல் மொழியும்.

எனவே சரியை முதலிய தவமுயற்சிகளில் ஈடுபடாமல் அவச் செயல்களையே புரியும் யான் வீணனேன். நான் அடியார்களைப் போல நடித்து **நீ என்னை ஆண்டாய்** என்றால் அது பொய்யாகும். அன்றியும் ''உள்குவாருள் கிற்றெல்லாம் உடனிருந்து அறியும்" முற்றறிவின னநின்னை ஏமாற்ற முயன்ற பாவமுமாகும். அடிமை கொள்ளற்குரிய தகுதி என்பால் உள்ளதா இன்றா என்று பகுத்தறியும் ஆற்றல் நின்பால் இல்லை என்பதும் போதரும்.

தானும் சிரித்தே அருளலாம் தன்மை என்தன்மையே. தானும் - உலக மக்கள் சிரிப்பதன்றித் தாங்களும் நகையாடற்குரியதே. உம்மை - எச்சப் பொருட்டு. ***சிரித்தே*** - ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது.

அருளலாம் தன்மை - நான் உன் அடிமை என்றும் நீ என்னை ஆண்டாய் என்றும் நான் கூறினல் அக்கூற்று மேற்குறித்த காரணங்களால் உன் ஒறுப்புக்குரிய பாவமாகும். ஆயினும் பேரருளாளனகிய நீ என்னை அவ்வாறு ஒறுக்காமல் என் கூற்றை எள்ளி நகையாடி ஒதுக்கிய அளவில் நிற்பாய். அஃதுன் அருளின் இயல்பு என்றவாறு.

இத்திருப்பாடலில் இறைவன் தேன், பால், கன்னலின் தெளி, ஒளி, ஊனை உருக்கும் உடையான். உம்பரா என்றெல்லாம் விளிக்கப்படுவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; இறைவன் அருள் பெறுவதற்குத் தவமுயற்சியாகிய தகுதி வேண்டும் என்பது பெறப்படுவதால் பதிகம் நுதலிய "***அநுபோகசுத்தி***" பெற்றும்.

63. தன்மை பிறரா லறியாத
  தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா
  புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே
  யென்னன் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி
  யெந்தாய் எங்குப் புகுவேனே ருகூ

(இ - ள்)

உன் இயல்பு பிறரால் அறியப்படாத தலைவனே ! தீய நாய் போன்ற சிறுமையுள்ள என்னை ஆட்கொண்ட ஐயனே ! என்னை ஆட்கொண்ட பின் புறத்தே செல்லும்படி விட்டுவிடுவாயோ? அவ்வாறாயின்; அடியேனைப் பாதுகாப்பவர் யாரோ? எங்கள் தலைவனே! நான் யாது செய்ய வல்லேன்? பொன் மயமாகவே விளங்கும் திருமேனியுடைய என் தந்தையே ! வேறு எவ்விடத்தில் புகலடைவேன் ; என்றவாறு.

(வி -ரை)

இத் திருப்பாடலை ஆற்றொழுக்காகப் பொருள் கொள்க.

தன்மை பிறரால் அறியாத தலைவா - அரசன் முதலியோர் உயிர்களுக்கு உலகத்தலைவர்கள்; சிவபெருமான் உயிர்த்தலைவன். உலகத் தலைவருள் அரசனை உலகில் உள்ள ஏனைய உயிர்களாகிய அவன் குடிமக்கள் நன்கு அறிவர். அவன் குணம் செயல் முதலியவற்றையும் வரையறுத்துணர்வர். ஆனால் அரசன் தன் குடிமக்கள் ஒவ்வொரு வரின் குணம் செயல்களை அவ்வாறு அறியான். அவர்களுள் பெரும்பாலானவர்களைப் பார்த்திருக்கவும் மாட்டான். ஏனைய உலகியல் தலைவர்களும் இவ்வாறே ஆவர். ஆனால், உயிர்த் தலைவனாகிய இறைவனோ தன் அடிமைகளாகிய ஆன்மாக்கள் ஒவ்வொன்றின் குணம் செயல்களை ஒருங்கே அறிவன். ஆனால் உயிர்கள் எவையும் அவன் குணம் செயல்களை வரையறுத்து முற்றிலுமாக உணரா. இவ்வுண்மையையே நம் அடிகள் பின்னரும் " பெற்றிபிறர்க்கரிய பெம்மான்" (திருவாசகம் -194) என்றருளுவது காண்க. இதனால் சிவபெருமானின் தலைமை இலக்கணம் மிகச் சிறந்த முறையில் நிறுவப்பட்டது கண்டின்புறுக.

ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொருப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை

இன்ன தன்மைய னென்றறி வொண்ணு
எம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம்வைகும் வயற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7 - 59 - 1)

எனவரும் நம்பிகள் தேவாரம் நினைக.

தன்மை - குணம் செயல் இரண்டன் இயல்புகள்.

அறியாத - அறிய முடியாத. அளவிட முடியாத எனலுமாம்.

பொல்லா நாயான- நாய் பிறப்பினுள் மிக இழிவுடையதாகும். இது பற்றி முன்னம் சிவபுராணம் 60-ல் ''நாய்'' என்றதன் கீழுரைத்தவை பார்க்க. அத்துணை இழிந்ததேனும் அது நன்றியறிவினால் மிக உயர்ந்ததாகும். ஈண்டு, உயர்வுக் கேதுவாகிய அதன் நன்றியறியும் நலன் என்பால் இல்லை; அதன் இழிவு மட்டும் உள்ளது என்பார் ''***பொல்லா நாயான புன்மையேன்***'' என்றார். இது பிரிதின் இயைபு நீக்கிய விசேடணம். ***பொல்லா நாய்*** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பொல்லாத நாய் என்றவாறு.

புன்மையேனை ஆண்டு ஐயா - புன்மையேன் - இழிவுடையவன்.

ஆண்ட - அடிமையாக ஏற்றுக் கொண்ட.

ஐயா - தலைவனே.

ஆண்ட ஐயா என்பது ***ஆண்டவையா*** என்று உடம்படு மெய் பெற்று வர வேண்டும். அவ்வாறு வரின் ஏனைய அடிகளிற் போலக் காய்ச்சீராக அமைந்து யாப்புக் கெடாதிருப்பினும் பக்குவிட்டொலிப்பதால் செய்யுளின் ஓசை நயம் குன்றும்; ஆதலின் ''***ஆண்டையா***'' என்றருளினார். ***ஆண்ட*** என்ற நிலை மொழி யீற்றகரம் கெட்டு நின்ற மெய்ம்மேல் வருமொழி முதலிலுள்ள ஐகார உயிர் ஏறி ***ஆண்டையா*** என்று வந்தது.★ என்தெற்குத்தருக. ''***ஆண்ட***'' என்று பெயரெச்சம் ''***ஐயா***'' என்ற பெயரைத் தழுவியது. இதற்கு

★ *" புள்ளியீற்று முன்னுயிர் தனித்தியலாது*
மெய்யொடுஞ் சிவணுமவ்வியல் கெடுத்தே"
(தொல்காப்பியம் எழுத்ததிகாரம். புள்ளியல் - சூத் - 36)

இவ்வாறின்றி **ஆண்டு** என்ற வினையெச்சமாகக் கொண்டு, அஃது இந்த அடியின் ஈற்றுச் சீரான ''விடுவாயோ" என்பதிலுள்ள **விடு** என்ற வினையைத் தழுவி முடிந்ததாக உரைப்பினும் ஒக்கும். இப்பொருளில் **ஆண்டு** என்பதற்கு ''அருளி" என்று பொருளுரைத்துக் கொள்க.

புறமே போக விடுவாயோ - என்னை ஆட்கொள்ளும் பொழுதே நான் உன் அடிமையாவதற்குத் தகுதியற்றவன் என்பது முற்றறிவினனான உனக்குத் தெரியும்; தெரிந்தும் நீ என்னை ஆட்கொண்டது உன் பேரருளின் திறத்தாலானது. ஆட்கொண்ட பின் என்னை புறத்தே தள்ளி விடுவாயாயின் அஃதுன் "முற்றுமுணர்தல்" ''பேரருளுடமை" என்பவற்றுடன் முரணுமே! ஆதலின், நீ என்னைப் புறமே போக விடமாட்டாய் என்பது குறிப்பு. இறைவன் அத்துணை விழுமிய பெருமையுடையனாதலின் அவனை **ஐயா** என முன்பே விளித்தார். **ஐயன்** -வியப்புக்குறிய பெருமையுடையவன் ''ஐயவியப்பாகும்" (தொல் சொல் உரியியல் - 379)

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட உயிர் அவன் அடிமைத் திறத்தினின்றும் மீட்சி பெறுவதில்லை என்பதை;

திருச்சிற்றம்பலம்

" மீளா அடிமை யுமக்கே யாளாய்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே "

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *7-95-1*)

எனவரும் நம்பிகள் நற்றமிழிலும் காண்க.

இப்பகுதிக்கு இவ்வாறன்றி; **ஆண்ட** - அநாதி கேவலத்தினின்றும் எடுத்து அடிமைப்படுத்திக் கொண்ட என்றும்; ***புறமே போக விடுதல்***

சகலாவத்தையில் பராமுகமாயிருத்தல் என்றும் உரைப்பார் சீகாழித் தாண்டவராயர்.

புறமே போக விடுவாயோ - என்றதன் பின் "*விடின்*" என்ற ஓர் சொல் வருவித்துக் கொள்க.

என்னை நோக்குவார் யாரே - என்னைநோக்கி இரங்குபவர் ஒருவரும் இலர் என்றவாறு. மிகச் சிறந்த தலைவன் ஒருவனிடம் பணியாற்றிவன் அத்தலைவனால் விலக்கப்படின் ஏனையோர் அவனை நோக்கி ''அத்துணைப் பெருமை மிக்க தலைவனாலேயே தள்ளப்பட்டவன் இனி யாரிடமும் ஒழுங்காகப் பணியாற்றான் என்று ஒதுக்குவதன்றி இரக்கம் கொண்டு தம்மிடம் பணியாளனாக ஏற்றுக் கொள்ளார் என்றவாறு.

எம்பெருமான் - நாயை, அதன் தலைவன் புறத்தே தள்ளிவிடினும், நாய், அவனை விடாது தொடர்வது போல, என்னைப் புறமே போகவிடினும் நீ என் தலைவனே ஆவாய்; நான் உன்னை விடாது தொடர்ந்து அடிமை புரிவேன் என்றவாறு.

என் நான் செய்கேன் - நான் என் செய்கேன் - என்று மாற்றிக் கொள்க. நீ என்னைக் கை விடின் புகலிடம் பிறிதின்மையால் யான் செய்யத்தக்கது யாது? உன்னையே தொடர்ந்து பற்றுவதன்றி வேறில்லை என்பது குறிப்பு.

பொன்னே திகழும் திருமேனி எந்தாய் . பொன் திகழும் திருமேனி - *பொன்* - அதன் பேரொளியைக் குறித்து நின்றது. திருப்பெருந்துறையில் இறைவன் ஞானாசிரியனாக வந்து நம் அடிகளை ஆட் கொண்டபோது அவன் திருமேனி பொன்னொளி போலப் பேரொளி வீசி நம் அடிகளின் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தது. அதை அவர்தம் உள்ளக்கிழியில் அழகொழுக எழுதிக் கொண்டார். அதையே ஈண்டுக் குறிப்பிடுகின்றார். *பொன்னே* - ஏகாரம் தேற்றம்.

எந்தாய் - எம் தந்தையே ! உன் பேரானந்தப் பெருஞ்செல்வத்தை அடைவதற்குரிய மைந்தன் நானாதலின் அதை எனக்கு உபதேசவாயிலாக வழங்கினாய் என்றவாறு. குருவை, ஞானத்தந்தை என்றும் மாணவனை அவன் மைந்தன் என்றும் கூறும் மரபு நினைக.

எம்தாய் - எனப்பிரித்து எங்கள் அன்னேயே எனலுமொக்கும். அநாதி கேவலத்தினின்றும் ஆன்மாவை எடுத்துத் தனு கரண புவன போகங்களே நல்கிப் படிமுறையில் அன்னே போல வளர்ப்பவன் இறைவன் என்பது நினேக. இதனே நம் அடிகளும் பின்னர் ''பேதித்து நம்மை வளர்தெடுத்த பெய்வளே" (திருவாசகம் 168) என்றருளுவது நினேக.

எங்குப்புகுவேன் - எவரிடத்தில் புகலடைவேன். தந்தையாகிய உன்னேத் தவிர எனக்குச் செல்லுமிடம் வேறு இல்லே என்றவாறு. **புகுவேனே** - ஏகாரம் ஈற்றசை.

புகுதல் - முன்னம் 15-ம் திருப்பாடலில் ''புகுந்திடுவான்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

இத்திருப்பாடலில் ஒவ்வோரடியிலும் குறிப்பிட்ட கருத்துக்கேற்ப நம் அடிகள் இறைவனேத் ''தலேவா" ''ஐயர்" ''எம்பெருமான்" ''எந்தாய்" என்று விளித்தல் நினேந்து இன்புறத்தக்கது. வஞ்சம் அறியாச் சிறு மகவுதன் பெற்ருேரை நோக்கித் தன் குறைகளேக் கூறுவது போல நம் அடிகள் விண்ணப்பம் செய்வன அவர்தம் உள்ளக் கனிவும் பேரன்பும் சிவபெருமான் மாட்டுள்ள பேரார்வமும் நினேந்து நினேந்து பயில்வோர் உள்ளம் உருகச் செய்வன.

இத்திருப்பாடலில் நம் அடிகள் இறைவனே விளித்து விண்ணப்பம் செய்யும் அன்பு மொழிகளால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கியவிசித்திரம்***" பெற்ரும். இறைவனேத் தவிர வேறு புகலிடமின்மை கூறப்படுவதால் அவனே நினேந்து உருகும் தவமே உள்ளத்தைத் தூய்மைப்படுத்திச் சிவானுபவம் நுகரத்தக்க தாக்குகின்றதால் பதிகம் நுதலிய "**அநுபோக சுத்தி**" பெற்ரும்.

64. புகுவே னெனதே நின்பாதம்
போற்றும் அடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோளுேக்கி
நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லே நினேக்காண
நீயாண் டருள அடியேனுந்
தகுவ னேயென் றன்மையே
யெந்தா யந்தோ தரியேனே கூ0

(இ -ள்)

பழி பாவங்களுக்கு நாணமுருத நாய் போன்று இழிந்த அடியேன்; முன்னர் நின்னை வழிபட்டு நின்ற மெய்யடியார் குழுவின் நடுவே நின்று, என் தோள்களின் பணைப்பைப் பார்த்து இறுமாந்து களித்தேன்; நின் திருவுருவைக் கண்டு இன்புறுதற்குரிய குழைந்த மெய்யன்பு என்மாட்டில்லை; இந் நிலையில் நீ அடிமை கொண்டு திருவருள் பாலித்தற்கு அடிமையாகிய யானும் தகுதியுடையவன் ஆவனோ? எம் தந்தையே! என் இயல்பு இருந்தவாறு என்னே! ஐயகோ! இவ்வுலக வாழ்விற் பொறுத்திருக்க மாட்டேன்; எனக்குரிய நின் திருவடிகளை எய்துவேன்.

(வி -ரை)

இத் திருப்பாடலை - "நாணம் இல்லா நாயினேன், பண்டு போற்றும் அடியாருள் நின்று, தோள் நோக்கி நகுவேன்; நினைக்காண நெகும் அன்பு இல்லை; நீ ஆண்டு அருள அடியேனும் தகுவனே; எந்தாய் ! தன்மை என் அந்தோ தரியேன்; எனது நின் பாதமே புகுவேன்" என்று இத்திருப்பாடலை அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

நாணம் இல்லா நாயினேன்- நன்மக்கள் இழிந்த செயல்களுக்கு நாண மெய்துவர்; பழி பாவங்களுக்கு நாண வேண்டும் என்பது அறநூல் விதி இதனை ;

''நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில் "

(திருக்குறள் 833)

என்ற தேவர் திருவாக்கும் அதன்கீழ் ''நாண வேண்டுமவை; பழி பாவங்கள்" என்ற பரிமேழகரின் உரைக்குறிப்புங் காண்க. ஈண்டு உண்மை அன்பில்லாத தாம், மெய்யடியார்கள் திருக்கூட்டத்தின் நடுவில் புகுந்ததும்; அதற்காக இறுமாந்து களிப்பெய்தியதும் பழிக்கத்தக்க செயல்கள். அவை பற்றி நாண மெய்தாமையின் "**நாணம் இல்லா நாயினேன்** என்று தம்மை இழித்துக் கூறினர். நாண வேண்டியதற்கு நாணு திருக்க நேரின், பின்னர் உயிரை நீத்தலும் தக்கது என்பது அறநூல் விதி.

இதனை,

"நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப் பொருட்டா
ஞண்டுறவார் நாணுள் பவர்

(திருக்குறள் 1017)

என்று பொதுமறை புகல்வது காண்க.

''உயிரினும் சிறந்தன்று நாணே . . . . . .

(தொல்காப்பியம் - பொருளதிகாரம் - களவியல் - சூத். 111)

என்று இலக்கணம் இயம்புவதும் நினைக.

நின்னைக் காணுமாறு நெகுதலைச் செய்யும் அன்பு என்மாட்டில்லை. அது காரணமாக நீ என்னைப் பிரிந்தாய்; அப்பிரிவுணர்ந்தும் நான் நாண மெய்தாமல் நாய் போன்று இழிந்த தன்மையனுயுள்ளேன் என்றுரைப்பர் திரு. பாரதியாரவர்கள்.

பண்டு போற்றும் அடியாரும் நின்று. பண்டு - திருப்பெருந்துறையில் அடியவர்கள் புடைசூழ இருந்த நீ என்னை ஆட்கொண்ட அந்தச் சமயத்தில் **போற்றும் அடியார்** - அடியார்கள் வேடத்திலிருந்த சிவகணங்கள் . **நின்று** - அவ்வடியவர் குழுவுள் நிற்கவும் தகுதியற்ற நான் அவர்கள் நடுவில் நின்று.

தோள் நோக்கி நகுவேன் - தகுதியற்ற என்னை அவ்வடியார்கள் குழு நடுவில் நிறுத்தியதுமன்றி அவர்கள் காணும் வண்ணம் என்னை ஆட்கொண்டாய். அவ்வாறு ஆட்கொண்டு உபதேசம் செய்தவுடன் நான் சித்தவிருத்தியை அடக்கித் தொண்டு செய்வது ஒன்றையே கடமையாகக் கொண்டு ஒழுகவேண்டியவன். ஆனல், அவ்வாறு செய்யாமல் அவ்வடியார்கள் காண நீ என்னை ஆட்கொண்ட பெருமையை நினைத்து இறுமாப்பினுல் தோள்கள் பூரிக்க இருந்தேன் என்றவாறு. இன்பம் நுகருங் காலத்து இறுமாப்பினுல் தம் தோள் பணைப்பை நோக்குதலும்; துன்பம் நுகருங் காலத்துக் கன்றி வாடுதலும் உலகமக்களின் இயல்புகள் என்பது நினைக. **நகுதல்** - களிப்படைதல்.

இப்பகுதிக்கு இவ்வாறன்றி, **பண்டு** - உடல் வனப்பிலும் இளமையிலும் ஆசை வைத்த அன்றைக்கு என்றும்; அடியார்கள்

தோணேக்கம் ஆடுங்கால் அவர்களுடன் கலந்து என் தோளினை நோக்கி இது தலைவன் துயில் கொள்ளும் இன்பாலன்றே என்று எண்ணுதலான் நின்பால் வேட்கை கொண்டேன்; ஆனால் நின்னைக் காண நெகுதலைச் செய்யும் அன்பு என்மாட்டில்லை, அதன் பொருட்டு நான் நாணமடையாத நாயானேன் என்றும்; பெண்ணொருத்தி அடிகள்பால் காதலுற்று ஆயத்தாரோடும் தோணேக்கமாடினாள்; அடிகள் அதுகுறித்து இகழ்ந்து நகைத்தார்; அது குற்றமாயிற்று என்றும்; அடிகள், தம்மை ஆட்கொண்ட இறைவன் குருவடிவில் அமர்ந்திருந்த ஞான்று அவன் தோள்களின் வனப்பில் ஈடுபட்டு மகிழ்ந்ததைக் கூறுகின்றார் என்றும் பலவாறு உரைத்தனர் முன்னுரையாசிரியர்கள்.

"**நின்பாதம் போற்றும் அடியார் உள் நின்று நகுவேன்**" என்று நம் அடிகளே தெளிவாகக் கூறியிருப்பதால் இஃது அடிகளின் இளமைக் காலத்தில் வேறோரிடத்தில் நிகழ்ந்ததன்று என்பது தேற்றம். "**அடியாருள் நின்று**" என்னும் பகுதிக்கு நம் அடிகள் ஏனைய மெய்யடியார்கள் நடுவில் நின்று இறைவனைக் கண்டார் என்பதே போதரும்; அங்குத் தோணேக்கம் முதலிய ஆடல்கள் நிகழ்ந்ததாகக் கொள்ளச் சான்றுகளில்லை. பெண் ஒருத்தி நம் அடிகள்பால் காதலுற்றுத் தோணேக்க மாடியிருந்தால் ''பரமேபார்த்திருக்கும்" நம் அடிகள் நோக்கில் அந்த ஆட்டம் பட்டிருக்காது. அவர் அதை இகழ்ந்து நகைத்திருக்கவும் மாட்டார். வெறுத்து ஒதுங்கிச் சென்றிருப்பார். அவ்வாறு செய்திருப்பின் அது குற்றமுமாகாது. நம் பரம ஆசாரிய மூர்த்திகளான அரசுகள் பெருமான் திருப்புகலூரில் தவமுயன்று வீடுபேற்றுக்கு அணியரான நிலையில் விண்ணுலக அரம்பையர் ஆண்டுற்று ஆடல் பாடல் முதலிய கைதவங்களால் அவரை மயக்க முயன்ற ஞான்று அவர் சித்தநிலை திரியாது நின்று "திருவாரூர் அம்மானுக் காளாளேன்; அலையேன்மின் நீர்" என்று அவர்களைக் கடிந்து ஒதுக்கியதும் நினைக. அஃது அப்பெருமானுக்கு உயர்வளித்த தன்றிக் குற்றமாகாமையும் காண்க. நம் அடிகள் குருவின் தோள் வனப்பில் ஈடுபட்டு மகிழ்ந்திருந்தால் அதற்காக அவர் நாணமடைந்திருக்கவும் வேண்டுவதில்லை. குருவின் வடிவமும் அதிலுள்ள அங்கங்களும் திருவருளே என்பதை முன்னம் கீர்த்தித் திருவகவல் 1-ல் ''திருவடி" என்றதன் கீழ் விரித்து விளக்கினும். அத்திருவருளாகிய தோள்களின் வனப்பில் ஈடுபடுதல்

ஆன்மாவை மிக உயர்த்தி உய்விப்பதன்றி நாணமுறுதற்கு ஏதுவன்று. எனவே இவையனைத்தும் உரைகளல்ல என ஒதுக்குக.

நெகும் அன்பில்லேன் - நின் அடியார் குழு நடுவுள் இடம் பெற்ற ஒன்று கொண்டே அதற்கான தகுதி எனக்கு எய்தி விட்டதாக எண்ணி இறுமாந்தேன். ஆனால் நின்னைக் காண்பதற்காக அன்பினால் நெஞ்சம் குழைந்திருக்க வேண்டும். அத்தகைய அன்பு இல்லாதவனானேன் என்றவாறு. அவ்வாறு நெகும் அன்புள்ள நெஞ்சில் நின்மலன் எழுந்தருளியிருப்பான் என்பதை,

திருச்சிற்றம்பலம்

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5-90-9)

எனவரும் அரசுகள் திருவாக்காலறிக.

நீ ஆண்டு அருள அடியேனும் தகுவனே - அத்தகைய அன்பு என்பாலின்மையால் நான் உன்னைக் காண்பதற்கே தகுதியற்றவன், பின்னர் நீ என்னை ஆட்கொள்ளவும், அதன்பின் அருள்புரியவும் எவ்வாறு தகுதியுடையவனாவேன்; என்றவாறு. ***தகுவனே***- ஏகாரம் எதிர்மறை குறித்த வினாப் பொருளில் வந்தது.

எந்தாய் ! தன்மை என் ? - ***எந்தாய்*** - எம் தந்தையே; உன் அருள்பெறத் தகுதியற்றவனாயினும் நான் உன் மைந்தன். ஆதலின் உன் உடைமையாகிய திருவருளைப் பெறுவதற்கு உரிமையுள்ளவன் என்பது குறிக்க எம் என்றார். ***தன்மை என்*** - என் இழிந்த இயல்பு இருந்தவாறு என்னே! என்று வருந்தியவாறு. ***எம்தாய்*** - எங்கள் அன்னையே எனலுமாம்.

அந்தோ தரியேன் - நாததத்துவத்திலுள்ள புவனங்களில் தங்கிச் சிவதீக்கை பெற்று அதிகார மலவாசனையும் நீங்கி முத்தராய்ச் சூக்கும லயவாசனை மட்டுமுடையவர்களாய் சிவபெருமானை வழிபடும்

விஞ்ஞானகலர்களும் பன்னெடுங்காலம் தவமுயன்றும் எய்துதற் கரிய இறைவன் எளிவந்து எனக்குக் காட்சியளிக்கவும் காணும் பேறு இன்மையால் இனி இந்த உலக வாழ்வு எற்றுக்கு என்பார் "**அந்தோ தரியேன்**" என்றார். **அந்தோ**- ஐயோ ! அவலம் குறித்து நின்ற இரக்கச் சொல் **தரித்தல்** பொறுத்திருத்தல்.

எனது நின்பாதமே புகுவேன் - நான் உன்னால் ஆட்கொள்ளத்தக்க தகுதியற்றவன். எனினும் உன் பேரருள் காரணமாகவும் நான் உன் மைந்தன் என்ற உரிமையாலும் நீ என்னை ஆட்கொண்டு விட்டாய். அதனால் உன் திருவடி எனக்கு உரிமையுடையதாயிற்று. உரிய இடத்தை எய்துதற்குத் தடையின்மையின் "**எனதேநின் பாதம்**"; "**புகுவேன்**" என்றார். **எனதே** என்பதிலுள்ள ஏகாரத்தைப் பிரித்துப் **பாதம்** என்பதுடன் கூட்டித் தேற்றேகாரமாகப் பொருள் கொள்க. முன்பாட்டில் ''எந்தாய் எங்குப் புகுவேனே" என்று வருந்திக் கூறியதற்கு ஈண்டு அமைதி கூறியவாறு காண்க. "**புகுதல்**" - பற்றி முன்னம் 15-ம் திருப்பாட்டில் உரைத்தவை காண்க.

இப்பகுதிக்கு இவ்வாறன்றிப் **புகுவேன்** - நின்னைக்காணுமாறு நெகுதலைச் செய்யும் அன்பு என்மாட்டில்லை, அது காரணமாக நீ என்னைப் பிரிந்தனை. அப்பிரிவுணர்ந்தும் நாணமில்லாத நாயானேன்; ஆதலால் எனக்கமைந்த புன்னெறிக்கண்ணே நான் புகுவேனாவேன். அத்தகைய அடியேனாகிய யானும் நீ ஆண்டு அருளத் தகுதியுடையேன் ஆவனோ; தகேன்; ஆதலின் ஐயகோ ! என் தன்மை யான் தாங்ககில்லேன். அங்ஙனமாக நின்னை நொந்து ஆவதென் என்றுரைத்தார் திரு. பாரதியாரவர்கள்.

இத் திருப்பாடலின் கண் ''எந்தாய் அந்தோ தரியேன்" என்றிரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றாம்; ''புகுவேன் எனதே நின்பாதம்" என்பதால் இறைவன் திருவடிகளைக் கூடுவதே சிவானுபவத்துக்குரிய தூய்மைபயப்பது என்பது போதருதலில் பதிகம் நுதலிய "***அநுபோக சுத்தி***" பெற்றாம்.

எ. காருணியத்திரங்கல்

காருணியத் திரங்கல் என்பது சிவபெருமானின் பேரருளைக் குறித்து இரங்குதல் என்றும் பொருளதாகும். சிவானுபவம் துய்த்தற்காக உயிர் தூய்மை செய்து கொள்ளப்படவேண்டும். அது முன்பதிகத்திற் பகரப்பட்டது. அவ்வாறு உயிர் தூய்மை எய்தியபின் வேண்டப்படுவது சிவபெருமானின் திருவருள் விளக்கமேயாகும். ''பாச நீக்கத்தின்'' பின் ''சிவப்பேறு'' கிட்டும் என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடு. அந்தச் சிவப்பேறு ''ஆனந்தத்து அழுந்துதல்'', ''ஆனந்த பரவசம்'', ''ஆனந்தா தீதம்'' என இனிவரும் மூன்று பதிகங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அந்தச் சிவப்பேற்றுக்கு முன்னரும் பாச நீக்கத்துக்குப் பின்னரும் ஆன்மாவுக்கு வேண்டுவது இறைவன் திருவருட்பதிவு ஆகும். அந்தத் திருவருளே ஈண்டுக் "**காருணியம்**" என்று குறிக்கப்பட்டுள்ளது. அதை வேட்டே நம் அடிகள் ''காத்தருள்க'' என்னும் பொருளுள்ள "**போற்றி**" என்னும் துதிமொழியை இந்தப் பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் பல முறை ஓதி இறைவனை இறைஞ்சுகின்றார். இஃதே இந்தப் பதிகம் நுதலும் கருத்தாகும்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

65. தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள்
விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள்
நின்மலா போற்றி போற்றி . . . சூக

(இ - ள்)

இவ்வூன் உடலோடு கூடிய வாழ்க்கையைப் பொறேன்; இன்பம் செய்பவனே! என்னைக் காத்தருள்க; நுண்ணிய சிதாகாயத்தில் விளங்கும் தொன்மையானவனே! காத்தருள்க; சிறியோமாகிய எங்கள் திண்ணியனே! காத்தருள்க; நிகரில்லாத தனி முதல்வனே ! காத்தருள்க. தேவர்கள்

தலைவனே! காத்தருள்க; தில்லையம்பலத்தில் அருட்கூத்தியற்றும் ஆடலரசே! காத்தருள்க; பாசப்பிணிப்புள்ள எங்களைத் தூயவனே காத்தருள்க.

(வி -ரை)

காய வாழ்க்கை தரிக்கிலேன் - என்று மாற்றிக் கொள்க.

சங்கரன். சம் - சுகம்; ***கரன்*** - செய்பவன். சுகம் செய்பவன்; இன்பத்தைத் தருபவன் என்றவாறு. மங்களமானவன்; மங்கலம் செய்பவன் எனலுமாம். இறைவனை விளித்துக் காய வாழ்க்கை தரிக்கிலேன் என்றமையால் காய வாழ்க்கை, துன்பம் செய்வது என்பது பெற்றாம்.

காயம் - ஊனுடம்பு. ஊனுடம்புடன் கூடிய இவ்வுலக வாழ்க்கையை ஒழித்து இன்ப வாழ்வளித்தலாகிய மங்கலம் செய்து என்னைக் காத்தருள்வாயாக என்றவாறு. பின்னரும் நீத்தல் விண்ணப்பம் 39-ல் "தினைத்துணை யேனும் பொறேன்று யராக்கையின் திண்வலையே" என்பது காண்க.

போற்றி - காத்தருள்க. இந்தச் சொல்லுக்கு ''வணக்கம்" என்ற பொருளும் உண்டு என்பதை முன்னம் பார்த்தோம். ஈண்டுக் காத்தருள்க! என்ற பொருளே சிறந்ததாகும். ஈண்டுப் "***போற்றி***" என்பதிலுள்ள இகரத்தை வியங்கோட் பொருளாகக் கொண்டு பொருள் கொள்க.

வான விருத்தன் - ***வானம்*** - ஈண்டுத் தகராகாயம் குறித்து நின்றது. ஞானகாயமாகிய ஆண்டுச்சிவபரம்பொருளை வழிபடுவதைத் ***தகரவித்தை*** என்பர் வடநூலார். ***விருத்தன்*** - பழமையானவன். இறைவனின் முதுமை காலதத்துவத்தைக் கடந்து நிற்பது; ஆதலின் காலதத்துவத்துக்குட்பட்ட நம்மால் அளவிட்டு அறிய வொண்ணாத பெருமையுடையது. ***விருத்தம்*** - மேம்பாடு, மூப்பு என்னும் பொருள்களுள்ளது.

ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

அந்நிலையா ரூரனுணர்ந் ''தருமறையோ யுன்னடியென்
சென்னியில்வைத் தனை"யென்னத் "திசையறியா வகைசெய்த
தென்னுடைய மூப்புக்கா" ணென்றருள வதற்கிசைந்து
தன்முடியப் பால்வைத்தே துயிலமர்ந்தான் தமிழ்நாதன்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - தடுத்தாட் கொண்ட புராணம் - 86)

என்றவிடத்து ''மூப்பு" என்ற சொல் வயதானவன்; மேம்பாடுடையவன் என்ற இருபொருள்களிலும் வருதல் காண்க.

விடலை - இளைஞன். பதினாறு அகவைக்கும் முப்பது அகவைக்கும் இடைப்பட்ட ஆண் மகனை உணர்த்தும் சொல். காலதத்துவத்துக்கு உட்பட்ட மனிதப் பிறப்புள்ள நாம் பாலனாகி விடலையாகிப் பின் வயது முதிர்ந்தவர்களாவோம். இதற்கு மாறாக இறைவன் விருத்தனாகி விடலையாகிப் பின் பாலனான நிலையை நாம் திருவிளையாடற்புராணம் விருத்தகுமார பாலரான படலத்திற் காண்கின்றோம். அஃது மெய்யன்புள்ள பெண் ஒருத்திக்கு அருள்பாலித்தற்காக என்பதும் நினைக. ***விடலை*** - வலிமைமிக்க இளம்பருவத்தினன். ***விருத்தனே விடலையே*** - என்று கூறுவதிலுள்ள முரண் சுவை கண்டின்புறுக.

ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

" விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய வாதிதேவ னடியிணையே பரவும்
நிருத்தர்கீத ரிடர்களையாய் நெடுங்களம்மே யவனே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *1-52-6*)

என்ற பிள்ளையார் வாக்கு நினைக.

ஒப்பில் ஒருவனே - ஒப்பில் - உவமையில்லாத. தன்னைப் போன்ற இரண்டாவதாக ஒருவனை இல்லாதவன். ''நிர்உவமன்;" என்பர் வட நூலார்.

ஒருவன் - முன்னம் திருவண்டப்பகுதி - 43 ல் ''ஒருவன் என்னும் ஒருவன்" என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க. வினை ஒப்பில் ஆன்மாக்களால் அறியப்படும் ஒரே பதிப் பொருள் என்று உரைப்பர் திரு. தேசிகர் அவர்கள்.

உம்பர் தம்பிரான் - உம்பர் - மேலுலக வாசிகள். இவர்கள் சிவதத்துவபுவனத்தை விரும்பிச் சிவதீக்கை பெற்று நாதமூர்த்தியை வழிபட்டுக் கொண்டு அதிகார மலவாசனையும் நீங்கி முத்தராய்ச் சூக்கும லயவாசனை மட்டுமுள்ள ஆன்மாக்களிலிருந்து இந்திரன் உலகில் வசிக்கும் சகலர்களாகிய தேவர்கள் வரையுள்ள அனைவரையும் குறிக்கும். ***தம்பிரான்*** - ***தம்*** - சாரியை ; ***பிரான்*** - தலைவன். பிரியமுள்ளவன். பிரியாதவன் எனலுமாம்.

தில்லை நிருத்தனே - தில்லையிலுள்ள பொன்னம்பலத்தில் திருவைந்தொழிற் கூத்தாகிய அருள் நடனத்தை இடைவிடாது புரிபவன்.

தேவர்களுக்குத் தலைவனாயினும் அவர்கள் காண்டற்கு அரியனாய்ப் பூவுலகிலுள்ள அடியவர்களுக்கு எளியனாய் அவர்கள் காணும் வண்ணம் தில்லை நகரின்கண் ஐந்தொழிற் கூத்து இயற்றும் அருளாளன் - என்பது கதிர்மணி விளக்கம்.

எங்கள் நின்மலன் - அவன் இயல்பாகவே பாசங்களினீங்கியவன். எனவே திருக்கூத்து அவன் பொருட்டன்று. அநாதியே பாசப்பிணிப்புள்ள ஆன்மாக்களாகிய நாங்கள் பாசத்தினீங்கி உய்யும் பொருட்டு. ஆதலின் **எங்கள் நின்மலன்** என்றார்.

இத் திருப்பாடலில் நம் அடிகள் இறைவனை ஏழுமுறை விளித்து, எட்டு முறை காத்தருள்க என்று விண்ணப்பம் செய்தார். இஃது ஆண்டவனை; அழைக்கும் அளவினும் தமக்குக் காப்பு வேண்டும் அளவில் ஆர்வம் விஞ்சி நிற்பது காரணம் என்று விளக்குவது கதிர்மணி விளக்கம்.

இத் திருப்பாடலில் ''தரிக்கிலேன் காய வாழ்க்கை" என்றதனால் வைராக்கியமும் ''போற்றி" என்றதனால் பத்தியும் குறிப்பிடப்படுதலின் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். இறைவனைச் சங்கரன் முதலிய சொற்களால் விளித்துக் காத்தருள வேண்டிப் பலமுறை விண்ணப்பம் செய்து கொள்வதால் பதிகம் நுதலிய "**காருணியத்திரங்கல்**" பெற்றும்.

66 போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய
சயசய போற்றி போற்றி கூஉ

(இ -ள்)

ஓம் நமச்சிவாய ! காத்தருள்க; பாம்பை அணியாகக் கொண்டவனே மயங்குகின்றேன்; ஓம் நமச்சிவாய காத்தருள்க; யான் புகுவதற்குத் தகுதியான இடம் வேறு ஒன்று மற்றவன்; ஓம் நமச்சிவாய காத்தருள்க; என்னைப்புறத்தே தள்ளிவிடலாகாது; ஓம் நமச்சிவாய காத்தருள்க; வெல்க; வெல்க; காத்தருள்க ! காத்தருள்க!

(வி -ரை)

ஓம் நமச்சிவாய ! போற்றி - என்றமைத்துக் கொள்க.

நிலைமொழி ஈற்றில் மகரவொற்று நின்று வருமொழி முதலில் மெல்லினம் வரின் புணர்ச்சியில் மகர மெய் கெடும் என்பது இலக்கணவிதி.

" மகர விறுதி வேற்றுமையாயிற்
றுவரக் கெட்டுவல்லெழுத்து மிகுமே

(தொல்காப்பியம் -எழுத்திகாரம் - புள்ளிமயங்கியல். சூத்.15)

"துவர" என்றதனால், இயல்பு கணத்துக் கண்ணும், உயர்திணைப் பெயர்க்கண்ணும், விரவுப் பெயர்க்கண்ணும் மகரக்கேடு கொள்க" என்ற இளம்பூரணர் உரைப்படி மகரம் கெட்டது என்க).

அதனால் ஈண்டு ''ஓம் நமச்சிவாய" என்றதிலுள்ள மகர மெய் கெட்டு ஓ நமச்சிவாய என்று மூல பாடத்தில் நிற்கின்றது. மறைந்த மகரவொற்றை வெளிப்படுத்தி ''ஓம் நமச்சிவாய" என்று கொண்டு உரை காண்க. இது பிரணவத்துடன் கூடிய தூல ஐந்தெழுத்தாகும். ''நமசிவய" என்ற திருவைந்தெழுத்து இவ்வாறு ''நமச்சிவாய" என நிற்பது பற்றி முன்னம் சிவபுராணம் 1-ல் "நமச்சிவாய" என்றதன் கீழ் விரிவாக விளக்கினும். ஆண்டுக் காண்க.

திருவைந்தெழுத்தை நகரம் முதலாக ஓதுதல் மறை வழக்கும், சிகரம் முதலாக ஓதுதல் ஆகம வழக்கும் ஆம். திருவாசகம் தமிழ் மறையாகலின் சிவபுராணம் ''நமச்சிவாய வாழ்க" என்று தொடங்குகின்றது. ஏனைய மந்திரங்களெல்லாம் பிரணவத்தோடு கூடியே எண்ணப்படுவன. சிவபெருமானுகவேயுள்ள திருவைந்தெழுத்து பிரணவம் இன்றியே எண்ணப்படுவது. காரணம் பிரணவமே சமட்டி பஞ்சாக்கரமாகும். அதன் விரிவே திருவைந்தெழுத்தாதல் முன்னம் மொழிந்தாம். ஈண்டுப் பிரணவத்துடன் கூட்டி **"ஓம் நமச்சிவாய"** என்றது பிரணவத்தின் வேறுபாடில்லாத திருவைந்தெழுத்தின் வாச்சியப் பொருளாகவுள்ள சிவபெருமானே என்று துதித்தவாறும்.

இதற்கு இவ்வாறன்றி ஓகாரம் இரக்கப் பொருளில் வந்தது என்றுரைத்தனர் முன்னுரையாளரில் சிலர்.

போற்றி - என்னைக் காத்தருள்க. வணக்கம் என்று பொருள் கொண்டனர் முன்னுரையாளர்களில் சிலர்.

புயங்கனே மயங்குகின்றேன். புயங்கம் - பாம்பு. பாம்புகளை அணியாகக் கொண்டவனுதலின் அவன் புயங்கன் என்று விளிக்கப் பெற்ருன். இது புஜங்கம் என்னும் வடசொல்லின் தமிழ் வடிவம். இதைப் புயகம், புஜகம், புயங்கமம் என்றும் கூறுவர். தாருகாவனத்து முனிவர்கள் உன்னைக் கொல்ல ஏவிய பாம்புகளையும் அணிகளாக ஏற்றுக் கொண்டு அவற்றை உய்வித்த நீ, உன் அடிமையாகிய என்னை ஏன் ஏற்றுக் கொள்ளலாகாது என்றவாறு. அந்த வரலாறு முன்னம் திருவண்டப்பகுதி (32-ல்) ''கானப்புலியுரி அரையோன் ஆன வரலாறு" என்றதன் கீழுரைத்தாம் ஆண்டுக் காண்க.

இனிப் "***புயங்கம்***" என்பது நடனவகைகளில் ஒன்று என்று பொருள் கொண்டு புயங்க நடனம் புரிபவனே என்றுரைப்பினுமொக்கும். இறைவன் புயங்க நடனம் ஆடுவதால் அது தான் ஆடலாகாத ஒன்று எனத் தவிர்த்த பாண்டிய மன்னன் பின்னர் அந்த நடனத்தையே கற்ற செய்தியை;

"மந்திரி கட்குச் சொல்லி வழங்கிய விருதை நோக்கி
யந்தவொண் புயங்க நட்ட மாடிட வேண்டு மென்று
சந்துற வாமத் தாண்மேல் வரவலத் தாண்மே னின்று
சிந்தையால் வருந்தி முற்றக் கற்றனன் சிறிது நாளில்"

(திருவாலவாயுடையார், திருவிளையாடற்புராணம் 32, 8)

என்றதில் காண்க.

மயங்குகின்றேன் - கலங்குகின்றேன்; திகைக்கின்றேன். நின்னை நண்ணுதற்குரிய தகுதி என்பாலில்லை. அதனுல் நீ என்னை ஏற்றுக் கொள்ள வில்லை. அந்தத் தகுதியைப் பெறுதற்குரிய வழியறியாமல் மயங்குகின்றேன் என்றவாறு.

புகலிடம் பிறிது ஒன்று இல்லேன் - இந்த மயக்கத்தைத் தீர்த்துக் கொள்ளத் திருவைந்தெழுத்தின் வாச்சியப் பொருளாக உள்ள நீ ஒருவனே எனக்கு நண்ணத் தக்க இடமாக உள்ளாய்; வேறு கதியில்லை என்றவாறு.

புறம் எனைப் போக்கல் - என்னைப் புறம் போக்கல் என்று மாற்றிக் கொள்க. நின்னினும் வேருக ஓரிடத்தை அமைத்து என்னை அதன்கண் செலுத்தாதே என்றவாறு. ***போக்கல்*** - அல்லீற்று எதிர்மறைப் பொருளில் வந்த வியங்கோள் வினை முற்று.

கண்டாய் - முன்னிலை அசை.

சயசய போற்றி போற்றி - வெல்க ; வெல்க ; காத்தருள்க ; காத்தருள்க என்று கூறிய அடுக்கு ஆர்வத்தாலுண்டாகிய விரைவு குறித்து நின்றது. இறைவனை நோக்கிக் கூறிய வெற்றி தமக்கும் உண்டாக வேண்டும் என்பது கருத்து. திருவைந்தெழுத்தைப் பிரணவத்துடன் கூட்டி நா நலம் கனிய நான்கு முறை இத்திருப்பாடலிற் கூறிய அந்த அழிவில் இன்பம் பெறுவதில் தமக்கு வெற்றிகிட்டும் என்று நம் அடிகள் கொண்ட துணிவு காட்டி நின்றது.

இத் திருப்பாடலில் ''புகலிடம் பிறிதொன்றில்லை'' ''புறமெனைப் போக்கல்" என்றமையால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். "கொல்ல வந்த பாம்புகளையும் அணிகளாக ஏற்று உய்வித்த நீ" என்றதால் என்னையும் ஏற்பாய் என்பது குறிப்பில் பெறப்படுவதால் பதிகம் நுதலிய "***காருணியத்திரங்கல்***" பெற்றும்.

67. போற்றியென் போலும் பொய்யர்
தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி
நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப்
புதுமதுப் புவன நீர்தீக்
காற்றிய மானன் வானம்
இருசுடர்க் கடவு ளானே கூஎ

(இ- ள்)

மெய்யன்பு இல்லா என்போன்றுரையும் அடிமைகளாக ஏற்றுக் கொள்ளும் வள்ளன்மையுடையோனே காத்தருள்க; நின் திருவடிக்கு வணக்கம்; வணக்கம்; தலைவனே காத்தருள்க; காத்தருள்க; நிலம், நீர், நெருப்பு, காற்று விசும்பு இரண்டு ஒளி மண்டலங்களான ஞாயிறு திங்கள் உயிர் என்னும் எட்டையும் திருமேனியாகக் கொண்டு மூர்த்திமானுக விளங்குகின்ற இறைவனே; நின் அருளாகிய புதியதேன் வெள்ளம் என்னைக் காத்தருள்க.

(வி -ரை)

இப் பாடலின் ஈற்றடியை மூன்றுமடிக்கு முன் அமைத்துப் பொருள் கொள்க.

பொய்யர் - அகத்தே அன்பு இன்றிப் புறத்தே அன்பு உடையராக நடிப்பவர். முன்னரும் "நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து" (15) என்றூர். பொய்யர்களுக்கு உவமை காட்டப் புகுந்த நம் அடிகள் தம்மையே எடுத்துக்காட்டாகக் கூறினர். உவமேயப் பொருளினும் உவமம் உயர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்று (உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலே தொல்காப்பியம் -பொருளதிகாரம் உவமையியல் சூத். 274) இலக்கணம் விதிக்கின்றது. ஆதலின் பொய்யர்களினும் தாம் பெரிய பொய்யர் என்று அடிகள் குறிப்பிடுகின்றூராகி "***என்போலும் பொய்யர்***" என்றூர்.

பொய்யர் தம்மை ஆட்கொள்ளும் வள்ளல். வள்ளல் - தகுதியுள்ளவருக்கு மட்டும் வழங்குவதுடன் நின்று விடாமல் தகுதியற்ருேருக்கும் வரையாது வழங்குபவன். அவ்வாறு வழங்கும் ஞான்று இப்படி நம்மிடம் வந்து கேட்கும்படி ஒருவன் கிடைத்தானே, இவனுக்கு வழங்குவது நம்பேறு என்று நினைந்து வழங்குபவன். அத்தகையோர் வள்ளன்மையைக் ''கொடைமடம்" என்பர். முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் வழங்கியவர்கள் வரலாறு நினைக. அருள்பெறுவதற்குத் தீனத்துவமே தகுதி என்றவாறு.

ஈண்டு,

சாற்றுவன் கேண்மதி மாற்றமொன் றுளதே
மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் வார
மொழிதடு மாற வுழுவலன் பலைப்பச்
சத்திநி பாதத் தன்மைவந் தடைந்தோர்க்
கப்பொருள் புரிதற் கதுபொழு தாகலின்
மெய்ப்பொரு ளுணர்த்துதல் வியப்பெனப் படாதே
சொற்றமிழ் விரகன் றுணைக்கண் சாத்த
முற்றுணர் கேள்வியர் பற்பல ராயினும்
கைசொலக் கேட்குங் கட்செவி மூங்கைக்
குய்வகை புணர்த்த தொருவியப் பாகலின்
அன்னது கடுப்ப நின் சந்நிதி விசேடத்
தின்னருள் பெருதவர் யாவரு மிலரென
வியப்புள தாக நயப்பதொன் றுளதே
அனையதீங் கென்னென வினவுதி யாலெனிற்

கதலித் தண்டிற் பொதிதழற் கொளீஇப்
பற்று திருப்பினும் பைப்பைய மூட்டுபு
மற்றொரு சூழ்ச்சியிற் பற்றுவித் தாலென
ஒருசிறி தெனினும் பருவமின் றுயினும்
பவவிரு டுரந்தருள் பதியத்
தவமில் பேதையேன் றனக்கருள் வதுவே."

(பண்டார மும்மணிக் கோவை 17)

எனவரும் குமரகுருபர முனிவரின் அமுத வாக்கை ஒப்புநோக்குக.

போற்றி நின் பாதம் போற்றி - திருவடி ஈண்டு இறைவனின் பேரருள் குறித்து நின்றது. பொய்யர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக உள்ள தம்மையும் அடிமை கொண்டு அத்திருவடி காட்சி தந்தமை நினைந்து அத்திருவடியை நடுவண் அமைந்து அதற்கு முன்னும் பின்னும் வணக்கம் கூறுகின்றார்.

நாதனே போற்றி போற்றி - திருவடியாகிய அவயவத்துக்கு வணக்கம் கூறிய பின் அவயவியாகிய இறைவனை விளித்துத் தம்மைக் காத்தருள வேண்டுகின்றார். அடுக்கு ஆர்வம் குறிக்கும் விரைவுப்பொருளில் வந்தது.

போற்றி நின் கருணை வெள்ளப் புதுமது - இறைவன் எல்லையற்று நிற்பது போல அவன் குணமாகிய பேரருளும் எல்லையற்றிருப்பதால் அதை **வெள்ளம்** என்றார். அந்தத் திருவருள் வீட்டின்பமாகிய பேரின்பம் பயத்தலின் உலகிலுள்ள இனிய சுவைப் பொருள்களில் சிறந்ததான தேனாக அதைக் கூறி னர். தேன் பற்றி முன்னம் நூற் சிறப்பில் ''திருவாசகம் என்னும் தேன்" என்றதன் கீழ் உரைத்தவை காண்க. ஈண்டுத் தேனை **மது** என்றது. மதுவை உண்டான் அறிவை இழந்து மது வசப்படுமாறு போலத் திருவருளை நுகர்ந்தோனும் தன்வசமிழந்து திருவருள் வசமாவது நினைக. தேனை உண்டவன் அதன் சுவையை அறிவான். அவன் மீண்டும் பின்னொரு நாளில் தேனை உண்ணும் போது அது முன்பு அவனுண்ட தேனின் சுவை போன்றுள்ளதையும் அறிவான். ஆனால் திருவருள் வயப்பட்டு வீட்டின்பம் நுகர்வோன், அந்த இன்சுவை அது வரையும் தான் நுகர்ந்திராத ஒன்று என்பது காண்பான். எனவே அதை **புதுமது** என்றார். அது நுகருந்தோறும் நுகருந்தோறும் புதுமையாயிருப்பதையும் உணர்வான்.

இதனே,

திருச்சிற்றம்பலம்

"உணர்ந்தார்க் குணர்வரி யோன்தில்லைச் சிற்றம் பலத்தொருவன்
குணந்தான்வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடை தாள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் 9)

எனவரும் நம் அடிகள் வாக்காலேயே அறிக.

புவனம் நீர் தீக் காற்று இயமான் வானம் இருசுடர் - ஐம்பெரும்பூதங்களும், கதிரவனும் திங்களும் ஆன்மாவும் ஆகிய எட்டும் இறைவன் திருமேனிகள் என்றும் அவன் அவற்றுள் மூர்த்திமானுக விளங்குகின்றுன் என்றும் சிவாகமங்களும் திருமுறைகளும் கூறுகின்றன. செய்யுளாகளின் ஐம்பெரும் பூதங்கள் முறை பிறழ வந்துள்ளன. இதனுல் இறைவன் யாண்டும் நிறைந்து எல்லாமாக விளங்குகின்றுன் என்பது பெற்றும்.

கடவுளானே - அட்ட மூர்த்தங்களாக உள்ள இறைவன் அவையாகவே நின்று விடாமல் அவற்றைக் கடந்தும் நிற்கின்றுன் என்றவாறு.

கடவுதல் - கடந்து நிற்றல். ''இறை'' ''தெய்வம்'' என்னும் தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவிகள் ''இறைவன்'' ''தேவன்'' என உயர்திணை மருங்கில் பால் பிரிந்திசைத்தல் போலக் ''கடவுள்'' என்ற பெயரும் ''கடவுளான்'' எனப் பால்பிரிந்து இசைத்தது என்பர் திரு. முதலியாரவர்கள்.

கடவுள் ஆன் - என்று பிரித்தால் காமதேனு என்னும் பொருள் தோன்றுகின்றது. காமதேனு சகலர்களைச் சேர்ந்த ஆன்ம கோடிகளில் ஒன்று. அஃதளிக்கும் இன்பம் பசு புண்ணியங்களின் பயனுக நுகரப்பட்டுக் கழிவது. முனிவர்கள் தேவர்கள் முதலியோர் அஃதளிக்கும் பொருள்களை நுகர்ந்து அவற்றின் இன்பத்தை அறிவர்; ஆகலின் அது புது மது வெள்ளமாதலின்று. ஆதலின் பொய்யர் தம்மை ஆட்கொள்ளும் வள்ளற்றன்மையும், ஆட்கொள்ளப்பட்டாரால் பாதம் போற்றப்படும் உயர்வும், அவர்களுக்கு நாதனுக நிற்கும் தலைமைப்பேறும் பெற்று, அட்ட மூர்த்தங்களில் மூர்த்திமானுகவும், அவற்றைக் கடந்தும் நிற்பதாகிய காமதேனு

ஒன்றிருப்பின் அஃதே சிவபெருமாஞகிய நீயாவாய் என்று இல்பொருளுமையாகக் கொள்க. 62-ம் திருப்பாடலில் "உம்பரானே" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

இத்திருப்பாடலில் "என்போலும் பொய்யர் தம்மை ஆட்கொள்ளும் வள்ளல்" என்று நெஞ்சுருகிக் கூறுவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்ளும். சிவபரஞ்சுடரின் பேரருளை நினைந்து ''போற்றி நின் கருணை வெள்ளப் புது மது" என்று பாதுகாப்பு வேண்டி இறங்குவதால் பதிகம் நுதலிய "***காருணியத்திரங்கல்***" பெற்றும்.

68. கடவுளே போற்றி யென்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை
யாண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை
யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி ௬௮

(இ -ள்)

எல்லாவற்றையும் கடந்து நின்றும், அவையனைத்தையும் உள் நின்றும் செலுத்தும் இறைவனே காத்தருள்க; அடியேனை அருள் நோக்கம் செய்து ஏற்றுக் கொண்டு அருள வேண்டும்; வணக்கம்; புறப்பற்றுக்கள் ஒழிய என் நெஞ்சை உருக்கி அடியேனை ஆட்கொள்ள வேண்டும்; வணக்கம்; உடலாகிய இந்த அகப்பற்றையும் ஒழித்து விரைவில் மேலான வீட்டின்பம் தந்து அருள்வாயாக வணக்கம்; சடையின்கண் கங்கையை வைத்து உலகைக் காத்தருளிய சங்கரனே வணக்கம்; வணக்கம்.

(வி -ரை)

கடவுளே. கடவுள்- கடவுதல் - கடந்து நிற்றல்; செலுத்துதல். சித்துப் பொருள்கள், சடப் பொருள்கள் ஆகிய அனைத்தினுள்ளும் நிறைந்து நின்று அவற்றைக் கடந்தும் நிற்பவன். அப்பொருள்களின் உள் நின்று அவற்றைச் செலுத்துபவன். இது பற்றி முன்னம் போற்றித் திருவகவல் 89-ல் ''கடவுள்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. நீ மெய்யுணர்வாலன்றி மக்களின் மன மொழிகட்கு எட்டாதவன்; ஆதலில் நான் உன்னை அறிந்து அடைய இயலாது; நீயே என் உள்நின்று என்னை உன்பால் செலுத்தி ஏற்றுக் கொண்டு காத்தருள்க என்றவாறு.

கண்டு கொண்டு அருளு போற்றி. கண்டு - சட்சுதீக்கை அருளி என் சஞ்சித வினைகளை எல்லாம் அழித்து.

கொண்டு - என்னை உன் அடிமையாகவும் என் உடல் பொருள் அனைத்தையும் உன் உடமைகளாகவும் கொண்டு. அவ்வாறு நீ ஏற்றுக் கொள்வதால் என் கருவிகரணங்கள் சிவமயமாகி விடுகின்றன. நான் முகந்து வந்த பிராரத்த வினைகளும் என் உடலூழாய்க் கழிகின்றன. அப் பிராரத்த வினைப்பயன் நுகர்ச்சியில் நான் செய்யும் வினைகளும் உன்னுடையவாகி ஆகாமியம் என்பால் ஏறுமல் ஒழிகின்றன. **அருளு** - அந்த நிலையில் யான் சீவன்முத்தனுகி வீடு பெறத் தகுதி பெறுகின்றேன். அதற்கு அருள் செய்வாயாக என்றவாறு. ''அருள்'' என்ற முதனிலை ஏவலிடத்து உகரம் பெற்று **அருளு** என நின்றது. ***போற்றி*** - வணக்கம். அந்த அருளிப்பாட்டுக்காக உன்னை வணங்குகின்றேன். போற்றி என்பதற்குக் காத்தருள்க என்று பொருள் கொண்டு சீவன் முத்த நிலையிலும் ஓரொருகால் உலக நினைவு வந்து வாசனுமலம் தாக்குவதுண்மையால் அந்த நிலையிலும் யான் வழுவிவிடாமல் காத்தருள்க எனலுமாம். சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம் நினைக.

விட உளே உருக்கி. விட - புறப்பற்றுக்கள் அனைத்தும் என்னை விட்டு ஒழியும்படி. ***உளே உருக்கி - உளே*** - உள்ளே. மனத்தின் உள்ளே. ***உருக்கி*** உருகும்படி செய்து. என் மனத்தின் உள்ளே நின்று அது பொறி வழிச் செல்லாமல் தடுத்து நிறுத்தி உன்னை நினைந்து உருகும்படி செய்து. புறப்பற்று ஒழிய மனம் பொறிகளின் வழிச் செல்லுதல் நிறுத்தப்பட வேண்டும். இதனையே;

''அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு ''

(திருக்குறள் 343)

என்று தெய்வநூல் தெருட்டுவது காண்க. அதற்குப் பரிமேலழகர் உரையும் பார்க்க.

உடலின் பற்று விடுபட அதன் உள்ளே உள்ள உள்ளம் உருகுதல் வேண்டும். விழுது நெய்யுள்ள ஒரு கொள்கலத்தில் நெய்யை உருக்கினுல் அதற்கு அந்தக் கொள்கலத்திலுள்ள பற்று விடுவது போல உள்ளமும் பக்தி வெப்பத்தால் உருக அதற்கு உடம்பின் பற்று நீங்கும் என்க.

என்னை ஆண்டிட வேண்டும் - அவ்வாறு என் உள்ளம் உருகுவதற்கு வழி நீ என்னை உன் அடிமையாக ஏற்றுக் கொள்வதேயாகும். அதனுல் உன் திருவடி என் உள்ளத்தில் நிலை பெறும்; அஃதென் உள்ளத்தை உருக்கும் என்றவாறு.

உடல் இது களைந்திட்டு - புறப் பற்றுக்கள் ஒழிந்த பின்பும் வீடு பேற்றுக்குத் தடையாக நிற்பது அகப்பற்ருகிய உடலின் பற்ருகும். ***இது*** - இதனையும் என உம்மை விரித்துக் கொள்க. அகப்பற்ருகிய உடம்பின் பற்று நீங்குவதற்கு உடம்பே ஒழிதல் வேண்டும். ஆதலின் உடல் ***இது*** களைந்திட்டு என்றருளினுர். ஈண்டு, உடல் என்றது இந்தப்பருவுடலை மட்டுமின்றி புரியட்டக உடல், குண சரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம் ஆகிய அனைத்தையுமாம். அவை அனைத்தையும் களைந்தபின் உயிர் எய்துவது பரமுத்தியாகிய சாயுச்சிய நிலை என்பது தெளிக.

ஒல்லை உம்பர் தந்து அருளு. ஒல்லை - மிக விரைவாக. அகப்பற்ருகிய உடம்பினுல் இடையருது வரும் துன்பத்தை நினைந்து அதனை விரைவில் ஒழித்து வீட்டுலகம் தரவேண்டுகின்ருர். பின்னரும் நீத்தல் விண்ணப்பம் 39 -ல் ''தினைத்துணையேனும் பொறேன் துயராக்கையின் திண் வலையே" என்றருளுவது காண்க.

திருச்சிற்றம்பலம்

ஈண்டு,

ஒல்லையாறி யுள்ளமொன்றிக் கள்ளமொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மை செய்து காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனும நாவினவின் றேத்த
வல்லவாறே வந்து நல்காய் வலிவலமே யவனே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *1 - 50 - 1*)

என்ற பிள்ளையார் திருவாக்கு நினைக.

உம்பர் - மேலிடம். ஈண்டு, எல்லாவற்றுக்கும் மேலாக உள்ள வீட்டுலகம் குறித்து நின்றது. ***தந்து! அருளு*** - பரமுத்தி தருதலாகிய அருளிப்பாட்டைச் செய்க.

இந்தப் பரமுத்தியையே ''வானேர்க்குயர்ந்த உலகம்" என்ருர் திருவள்ளுவ நாயனுர். அதனை;

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்"

(திருக்குறள் 346)

என்ற அவர் வாய்மொழியாலும் அதற்குப் பரிமேலழகர் உரையாலும் அறிக.

சடையுளே கங்கை வைத்த சங்கரா - இறைவன் தன்னைச் சார்ந்தாரின் குற்றங்களை நீக்கிச் செம்மைபடுத்துவன்; அவரால் பிறருக்குத் துன்பம் நேராமல் தவிர்த்து இன்பமே எய்தும்படியும் செய்வன். கங்கை, கலக்கமும் வேகமும் கொண்டு செருக்குடன் பூவுலகுக்கு இறங்கத் தொடங்கினாள். இறைவன் சடையில் நிலை பெற்றுக் கலக்கம் நீங்கித் தெளிவுபெற்றாள். அவள் வேகத்தால் உலகம் அழியாமல் காக்கப்பட்டது. உலகை ஊட்டி வளர்க்கும் ஒப்பற்ற நதியாகவும் உயிர்களின் பாவங்களைக் கழுவும் புனித ஆறாகவும் விளங்குகின்றாள். அதனால் அவளைச் சடையில் ஏற்ற சிவபரம்பொருளை அடிகள் *சங்கரன்* என்றார் - சங்கரன் - இன்பம் செய்பவன்; மங்கலம் கொடுப்பவன்; இன்பமயமாகவும் மங்கல வடிவாகவும் உள்ளவன். தம் புறப்பற்றும் அகப்பற்றும் நீக்கித் தம்மை ஏற்றுக் கொண்டு மங்கலமான வீட்டின்பம் தர வேண்டுவதால் இறைவனைச் *சங்கரன்* என்றார்.

சிவபெருமான் சடையுளே கங்கையை வைத்த வரலாற்றை முன்னம் போற்றித் திருவகவல் 109-ல் ''கங்கையைச் சடையில் தாங்கிய வரலாறு" என்றதன் கீழுரைத்தாம்; ஆண்டுக் காண்க. இறைவன் கங்கையைச் சடையிற்றாங்கிய செய்தியை;

எரிமலர்த் தாமரை இறைவீழ்த்த பெருவாரி
விரிசடைப் பொறையூழ்த்து விழுநிகர் மலரேய்ப்பத்
தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி
மணிமிடற் றண்ணல் . . . .

(பரிபாடல் 9 வரி 4 - 7)

எனவரும் சங்க இலக்கியத்தினும் காண்க.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பெருமகனார் இந்தப் பாடலின் மொழி பெயர்ப்பின் கீழ் அடிக்குறிப்பாக இந்த வரலாற்றைத் தந்தார். அதன் தமிழாக்கம் வருமாறு :-

சூரிய வமிசத்தைச் சேர்ந்த பகீரதன் என்ற மன்னனின் முன்னோர்கள் கபிலர் என்னும் முனிவரின் சாபத்தால் வெந்து சாம்பலாயினர். அவர்களை **உயிர்ப்பிக்க** மன்னன் கடுந்தவம் புரிந்து கடவுளர்களின் அருளால்

விண்ணுலகக் கங்கை பூவுலகுக்கு வர வரம் பெற்ருன். ஆனல் தெய்வ நதியின் வேகத்தால் பூவுலகம் அழிந்து விடும் என்று அஞ்சிய சிவபெருமான் நதியைத் தம் சென்னியில் ஏற்றுச் சடையில் நிறுத்தி உலகைக் காப்பாற்றினர். இந்தப் புராணக் கதையில் உண்மையான பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. இதன் தாத்பரியம், இமயமலை சிவபெருமானுக உருவகிக்கப்பட்டது; அதன் அடர்ந்த காடுகளே சிவபெருமானின் சடாமுடி; அவற்றின் நடுவிலிருந்து கங்கை நதி விண்ணிலிருந்து வீழ்வது போன்று கீழே விழுகின்றது. மலையுச்சியில் பிறைச் சந்திரன் ஒளிர்கின்றது.

பகீரத மன்னன் வரலாற்றில் கங்கை சகரன் மக்களை மீண்டும் உயிர்ப்பிக்க வரவழைக்கப்பட்டதாக இல்லை. அவர்கள் நற்கதியடைய அவர்கள் சாம்பலில் பாய்வதற்காகவே வரவழைக்கப்பட்டது. இமயமலை, அதன் காடுகள், அவற்றின் வழி கங்கை கீழே வீழ்வது, மலையுச்சியில் பிறைச் சந்திரன் இவையெல்லாம் சிவபெருமானுக உருவகம் செய்யப்பட்டது மொழி பெயர்ப்பாளரின் கற்பனையில்தான். அவர் வெளிநாட்டினராதலின் சிவமகாபுராணங்களை உள்ளவாறு அறியும் வாய்ப்பில்லாதவராஞர் என்று இந்த அடிக்குறிப்பை ஒதுக்குக.

இத் திருப்பாட்டில் "உடலிது களைந்திட்டு" என்றதனுல் சதகம் நுதலிய "*பத்தி வைராக்கிய விசித்திரம்*" பெற்ரும். "உள் உருக்கித் தம்மை ஆள்வான்; ஒல்லை உம்பர்தந்து அருளுவான்" என்றெல்லாம் இறைவன் கருணையை நினைந்து வேண்டி இரங்குவதால் பதிகம் நுதலிய "*காருணியத் திரங்கல்*" பெற்ரும்.

69 சங்கரா போற்றி மற்ருேர்
சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி
மால்விடை யூர்தி போற்றி
இங்கிவாழ் வாற்ற கில்லேன்
எம்பிரா னிழித்திட் டேனே சூரு

(இ -ள்)

இன்பம் செய்பவனே காத்தருள்க; ஒரு புகலிடம் வேறு இல்லேன்; காத்தருள்க; சினம் மிகுந்த பாம்பின் படம் போன்று அழகிய அல்குலையும்

சிவந்த வாயையும் வெண்ணிறமான பற்களேயும் கருநிறம் பொருந்திய ஒளிமிக்க கண்களேயும் கொண்ட உமையம்மையை ஒரு கூற்றில் கொண்டவனே காத்தருள்க; திருமாலாகிய ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டவனே காத்தருள்க; எங்கள் தலைவனே; இவ்வுலகில் இவ்வூன் உடலோடு கூடிய வாழ்க்கையைப் பொறுக்க மாட்டேன்; இகழ்ந்து வெறுத்தேன்.

(வி -ரை)

ஈற்றடியிலுள்ள ''எம்பிரான்" என்பதை அவ்வடியின் முதலில் வைத்துப் பொருள் கொள்க.

சங்கரன் - சுகத்தைச் செய்பவன்; மங்கலமானவன். புகலிடம் பிறிதொன்றின்றி இவ்வுலகில் இவ்வூனுடலுடன் கூடிய வாழ்க்கை பொறுக்க இயலாது அதை வெறுக்கின்றாராதலின்; இனிச் சுகமும் மங்கலமும் விரும்பி அவற்றைப் புணர்ப்போனைச் ***சங்கரா*** என்று விளித்தார். 68-ம் பாட்டில் ''சங்கரன்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

மற்றோர் சரண் இலேன் - சரண் - புகலிடம். சங்கரனாதலின் அவனே புகலடையத்தக்கவன். இழிந்ததும் தொல்லை தருவதுமாகிய உடலும் இவ்வுலக வாழ்வில் நுகரும் இன்பதுன்பங்களாகிய போகங்களும் அகப்பற்றுகவும் புறப்பற்றுகவும் நம்மைப் பிணித்திருப்பது மாயாமலம். அதை ஒழித்து நம்மை உய்விப்பவன் சங்கரன் ஒருவனே ஆதலின் ***மற்றோர் சரணிலேன் என்றார்***. "முன்னரும் புகலிடம் பிறிதொன்றில்லை" (66) என்றது நினைக.

பொங்கு அரா அல்குல் செவ்வாய் வெண்நகை கரிய வாட்கண் மங்கை. மங்கை - உமையம்மை. ஏனையவை அவளுக்கு அடை. உயிர்களின் பாசம் நீக்கி வீட்டுலகில் செலுத்தி இன்பம் துய்க்க வைப்பது இறைவனின் குணமாகிய பேரருள். அஃது இங்கு உமையம்மையாக உருவகம் செய்யப்பட்டது.

மங்கை - பன்னிரண்டு முதல் பதிமூன்று அகவை முடிய உள்ள இளம்பெண். இறைவன் கால தத்துவத்தைக் கடந்து நின்று அதைச் செலுத்துபவன்; ஆதலின், என்றும் முதுமையடையாது இளையோனாகவே இருப்பன். அவன் குணமாகிய உமையம்மையும் அவ்வாறே இருப்பள். பாலா - என்பது அவள் திருநாமங்களில் ஒன்று.

பொங்கு அரா அல்குல் - அவள் அல்குல் ஈண்டுப் பாம்பின் படம் போன்றது என்றவாறு. பாம்பினங்களில் நாகம் ஒன்றே படம் விரிப்பது. மிக்க சினங்கொண்ட போதும் மகுடி இசையில் ஈடுபடும் போதுமே படம்

விரிக்கும். ஆதலின் ஈண்டுப் "*பொங்கு அரா*" என்றார். பொங்குதல் சினமுற்றுச் சீறுதல். ***அரா*** - ஈண்டுப் பொருளாகுபெயராக நின்று படத்தை உணர்த்திற்று.

செவ்வாய் - சிவந்தவாய். ***வெண்ணகை*** - வெண்ணிறமான பற்கள்; ***கரிய வாட்கண்*** - கருநிறம் பொருந்தியதும் வாள் போன்று நீண்டும் கூர்மையாகவும் உள்ள கண்கள். இவையனைத்தும் உமையம்மையின் இளமைப்பருவம் விளக்கி நிற்பன. இவைபற்றி முன்னம் போற்றித் திருவகவல் *30 - 35* - ல் ''செவ்வாய்'' ''வெண்ணகை'' ''கூர்த்தநயனக் கொள்ளை'' என்பவற்றின் கீழுரைத்தவை பார்க்க. ஆங்குக் கூறியது இளம் பெண்களால் ஆன்ம சாதகன் அலைக்கப்பட்டு வினைக்கடலுள் ஆழ்வது. ஈண்டுக் கூறுவது அச்சாதகர்களை உலக அன்னையாகிய உமைப்பிராட்டி இனிய முகத்துடன் வரவேற்று அருள்பாலிப்பது. அத்தகையாளை உன்னில் ஒரு கூறாகக் கொண்டுள்ள உன்னையன்றி வேறு புகலிலேன் என்றவாறு. ***செவ்வாய் வெண்ணகை கரியவாட்கண்*** - முரண்தொடைச் சுவை கண்டின் புறுக. அணி நூலார் இதை விரோத அணி என்பர்.

மால்விடை ஊர்தி - திருமாலாகிய ஆனேற்றை ஊர்பவன். திருமால் தன் வைகுண்ட பதத்தையும் பெரிதாக எண்ணாமல் உனக்கு ஊர்தியாகித் தொண்டு செய்வதையே தன் பேறாக எண்ணிப் பணிபுரிகின்றான். நான் அவ்வாறு பணி செய்யாமல் உலக வாழ்வில் உழல்கின்றேன் என்று இரங்கியவாறு. ***மால்விடை*** - பெரிய விடை என்றுரைப்பாரும் உளர். ***ஊர்தி*** -இதிலுள்ள இகரம், செயப்படுபொருட் பொருளதாய் நின்று ''ஊரப்படுவது'' என்னும் பொருளையும், வினைமுதற் பொருளதாய் நின்று ''ஊர்பவன்'' என்னும் பொருளையும் தரும். இங்கு அது வினைமுதற் பொருளதாய் நின்று சிவபெருமானை உணர்த்திற்று.

இங்கி வாழ்வு - இங்கு இவ்வாழ்வு. வகரம் தொகுத்தலாயிற்று. இகரச்சுட்டு இழிவு குறித்து நின்றது. இவ்வுலகில் இவ்வூன் உடலோடு கூடியவாழ்வு என்றவாறு. ***ஆற்றகில்லேன்*** - பொறுத்திருக்க இயலாதவனானேன். ***கில்*** - ஆற்றலுணர்த்தும் இடைச்சொல்.

இழித்திட்டேன் - வெறுத்து இகழ்ந்தேன். இன்பம் நல்கும் பெருமான் அருள் வடிவான அம்மையுடன் என்னை ஏற்க நிற்க, நான் அவனை விட்டு அழியும் இயல்பினதாகிய இவ்வுடலுடன் துன்பம் தரும் இவ்வுலக வாழ்வில் எங்ஙனம் வாழ்வேன்? அதை ஆற்றாது வெறுத்து இகழ்ந்தேன் என்றவாறு.

இத்திருப்பாடலில் இவ்வுலக வாழ்வை ஆற்றேன்; இவ்வுடலை இழித்திட்டேன் என்பனவற்றால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றாம். பெருமை பொருந்திய திருமாலும் ஊர்தியாகத்

தாங்கும் எம் இறைவன் பேரருளுடன் கூடி எனக்கு இன்பம் தந்து மங்கலம் செய்து காக்கவுள்ளான் என்பது பெறப்படுதலின் பதிகம் நுதலிய "*காருணியத்திரங்கல்*" பெற்றும்.

70 இழித்தன னென்னை யானே
யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை
யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி
உம்பர்நாட் டெம்பி ரானே சுசு

(இ -ள்)

எம்பெருமானே; வணக்கம்; வணக்கம்; யானே என்னை இழிவுபடுத்திக் கொண்டனன்; ஆண்டவனுகிய நின்னை இகழ்ந்திலேன்; என்னை ஆட்கொண்டருளிய நின் திருவடிக்கு வணக்கம்; செய்த குற்றங்கள் அனைத்தையும் பொறுத்தருளுதல் பெரியோராயினேருக்குக் கடமையாகும்; வணக்கம்; மேலாகிய சிவலோகத்திலுள்ள எங்கள் தலைவனே; வணக்கம்; இவ்வூன் உடலோடு கூடிய வாழ்க்கையை ஒழித்து அருள்வாயாக.

(வி -ரை)

முதலடியிலுள்ள ''எம்பிரான் போற்றி; போற்றி" என்பதை அவ்வடியின் முதலில் வைத்தும்; ஈற்றடியிலுள்ள ''உம்பர் நாட்டெம்பிரானே" என்பதை அவ்வடியின் முதலில் வைத்தும் பொருள் கொள்க.

இழித்தனன் என்னை யானே - என்னை நீ, நரர்பயில் தேயந்தன்னில் நான் மறைபயிலா நாட்டில் விரவுதலை ஒழித்து இந்தப் புண்ணிய இந்திய நாட்டில் மாதவம் செய்த தென்திசையில் தவஞ்செய்து உயரும் சூழ்நிலையுள்ள ஆமாத்திய அந்தணர் குடியில் தோற்றுவித்தாய். பின்னரும் நான் பாண்டியப் பேரரசின் முதலமைச்சர் பதவி பெற்று உலகியலிலேயே சென்று வீணுகி விடாமல் மானிடச்சட்டை தாங்கித் திருப்பெருந்துறையில் என்னை நாடி வந்து ஆட்கொண்டு உய்வித்தாய். ஆயினும் நான் அவற்றை எல்லாம் மறந்தேன். உண்டுடுத்து இங்கு ஊரேருய் உழன்று எனக்கே நான் கேடு சூழ்ந்து கொண்டேன், என்றவாறு.

இந்நிலையைப் பின்னரும் ;

திருச்சிற்றம்பலம்

என்னு லறியாப் பதந்தந்தாய்
யான தறியா தேகெட்டேன்
உன்னு லொன்றுங் குறைவில்லை
உடையா யடிமைக் காரென்பேன்
பன்னா ளுன்னைப் பணிந்தேத்தும்
பழைய வடிய ரொடுங்கூடா
தென்னு யகமே பிற்பட்டிங்
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே (642)

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடி லாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாநான்
பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே (644)

திருச்சிற்றம்பலம்

என்று நம் அடிகளே அருளுவது காண்க.

பழித்திலேன் உன்னை திருப்பெருந்துறையில் நீ என்னை ஆட்கொண்டாய். அப்பொழுதே என் உயிரும் உடலும் உடைமைகளும் உன்னுடையவாகி விட்டன. இப்பொழுது உன்னிடம் ''இந்த உடலைக் களைந்திடு, இங்கு இவ்வாழ்வு ஆற்றகில்லேன்" என்றெல்லாம் முறையிடுவதால் உன் உடைமைகளான இந்த உடலையும் உலக வாழ்வையும் பழிப்பதன் மூலம் உன்னையே பழிப்பதாகக் கொள்ளற்க. நீ தந்த இந்த உடலைத் தவம் செய்வதற்குக் கருவியாகவும், இவ்வுலகைத் தவம் செய்வதற்குத் தக்க இடமாகவும் நான் பயன்படுத்தி உய்யாமல் இருகை யானையை ஒத்து உண்டு ஊரேறாய்த் திரிந்ததால் என்னை நானே இழித்துக் கொண்டேன் என்றவாறு.

என்னை ஆளுடைப்பாதம் போற்றி - என்னை அடிமையாக ஏற்றுக் கொண்ட உன் திருவடிகளை வணங்குகின்றேன். அந்த வணக்கம் நான், உன் உடைமைகளாகிய என் உடலையும் உலக வாழ்க்கையையும் வீணாக்கிய தீவினையைப் போக்கி என்னைக் காப்பதாக.

என் ஐ ஆளுடைப் பாதம் - என்று பிரித்து என் தலைவனாக நின்று என்னை ஆட்கொண்ட திருவடி எனலுமாம்.

பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை- ''சிறியோர் செய்த பெரும்பிழை எல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்பது ஆன்றோர் வாக்கன்றோ? அனைவரிலும் நீ பெரியவன்; மகாதேவன், உன் கடமை பிழைகளைப் பொறுப்பதெனின் சிறியோனாகிய என் இயல்பு பிழை செய்வது என்பது பெறப்படும். அப்பிழை உன் உடமைகளாகிய என் உடல் பொருள்களை அல்வழியில் செலுத்தி வீணாக்கியது; அதைப் பொறுத்தருள்க என்றவாறு.

இதனையே பின்னரும் நம் அடிகள்;

திருச்சிற்றம்பலம்

வெறுப்பன வேசெய்யு மென்சிறு
மையைநின் பெருமையினால்
பொறுப்பவ னேயராப் பூண்பவ
னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு
ளாலென் பிறவியைவேர்
அறுப்பவ னேயுடை யாயடி
யேனுன் அடைக்கலமே *(407)*

திருச்சிற்றம்பலம்

என்றருளிச் செய்வது காண்க.

உம்பர்நாட்டு எம்பிரானே. உம்பர் நாடு - மேலுள்ள நாடு. இஃது இங்கு எல்லா உலகங்களுக்கும் மேலுள்ள சிவலோகம் குறித்து நின்றது. "எல்லா உலகங்களுக்கும் தலைவனான சிவபெருமானாகிய நீ எனக்குத் தலைவனாக உள்ளாய்" என்ற விம்மிதத்தால் **எம்பிரானே** என்றார். உனக்கு மேல் வேறொரு தலைவன் இலன்; ஆதலின் தகுதியற்றவனாயினும் என் பிழையைப் பொறுத்து என் உடலையும் உலக வாழ்வையும் ஒழித்து எனக்கு வீடுதரினும் அதுபற்றி உன்னை உசாவுவார் யாருமிலர் என்றவாறு.

இத் திருப்பாடலில் நம் அடிகள் பத்தியின் முதிர்ச்சியால் ''ஒழித்திடு இவ்வாழ்வு"; "என்னை ஆளுடைப் பாதம் போற்றி" என்றருளியுள்ளமையால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; ''பிழைத்தவர் பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை" என்றருளியுள்ளமையால் பதிகம் நுதலிய "**காருணியத்திரங்கல்**" பெற்றும்.

71. எம்பிரான் போற்றி வானத்
தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை
கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி யென்னை
யாளுடை யொருவ போற்றி சுள

(இ -ள்)

எங்கள் தலைவனே காத்தருள்க; விண்ணுலகிலுள்ள பதவிகளில் இருக்கும் அவ்வத் தேவர்களுக்கு ஏறு போன்றவனே காத்தருள்க; பூங்கொம்பு போன்ற இடையையுடைய உமையம்மையை ஒரு பங்கில் உடையவனே; வெண்ணிறமான திருநீற்றினனே, காத்தருள்க; செம்மேனியுடைய பெருமானே காத்தருள்க; தில்லை நகரிலுள்ள அழகிய நுண்ணிய ஞானப் பெருவெளியினனே; காத்தருள்க; சிவலோகனே காத்தருள்க; சிறியேனுகியஎன்னை ஆட்கொண்ட ஒப்பற்ற முதல்வனே; காத்தருள்க.

(வி -ரை)

இத் திருப்பாடலை ஆற்றெழுக்காகப் பொருள் கொள்க.

பிரான் - உபகாரி எனலுமாம்.

வானத்து அவர்அவர் ஏறு. எம்பிரான் என்றதுமண்ணுலக வாசிகளுக்குத் தலைவன் என்றவாறு. ***வானத்து அவர் அவர்*** - என்றதால் மேலுலகங்களிலுள்ள திருமால் நான்முகன் இந்திரன் முதலிய பதங்களில் உள்ளவர்களுக்கும் சிவனே தனித்தனியே தலைவனுயுள்ளான் என்றவாறு. மண்ணுலகும் விண்ணுலகும் கூறியதனுல் இனம் பற்றி ஏனைய எல்லா உலகங்களுக்கும் தலைவன் என்பது பெற்றும்.

ஈண்டு; ''தேவர்களில் தற்போதமாகித் தேவரீரை மறந்தவர்களை அவரவர்க்குத் தகுதியான நிக்கிரகம் செய்யும் சிங்கமே!" என்று உரை விரித்தார் சீகாழித் தாண்டவராயர் அவர்கள்.

வானத்தவர் அவர் ஏறு - ***வானத்தவர்*** என்பதற்கு மேலான தவத்தையுடைய முனிவர்கள் என்று கொண்டும் ***அவர்*** என்பதைப் பகுதிப் பொருள் விகுதியாகக் கொண்டும் தவத்தில் மேம்பட்ட முனிவர்களுக்கு ***ஏறு*** போன்றவன் எனலுமொன்று.

வானம் என்பதை விண்ணுலகம் என்று கொண்டு அங்குள்ள முனிவர்களின் அரசன் என்று மொழி பெயர்த்தார் Dr. G.U. Pope அவர்கள். அவ்வாங்கில மொழிபெயர்ப்பு "Thou king of heavenly saints என்பதாகும்.

கொம்பரார் மருங்குல் மங்கை கூற - மாதொரு பாகனுகிய கோலம் ஈண்டு வழுத்தப்படுகின்றது.

கொம்பரார்- கொம்பு- பூங்கொம்பு போன்றவள். ***மருங்குல்-*** இடை. மெல்லிய இடை இளமைப் பருவம் குறித்து நின்றது.

கொம்பரார் - கொம்பர் - ***அர் - போலி ; ஆர்*** - போல என உவம உருபுப் பொருளில் வந்தது.

கொம்பரார் - என்பதற்கு வல்லிசாதகக் கொம்பு போலும் என்றுரை கண்டார் சீகாழித தாண்டவராயர். வல்லி சாதகம் என்பது கற்பக மரத்தில் படரும் கொடி. இதனை ''வல்லிசாதம்" என்றும் வழங்குவர். ஆன்மாக்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் வழங்குபவன் சிவபெருமானுகலின் அவனை ஈண்டுக் கற்பக மரமாகக் கொண்டார். பூங்கொம்பின் தன்மை பொருந்திய உமாதேவியார் என்றவாறு. உமையம்மை இறைவனின் பேரருளுடைமை என்னும் குணத்தின் உருவகம் என்றும், அஃது எஞ்ஞான்றும் முதுமையடைவதில்லை என்றும் முன்னம் விளக்கினும். ***மங்கை கூற*** - இறைவன் போகியாக இருந்து உயிர்களுக்குப் போகத்தைப் புரிபவன் என்ற உண்மை ஈண்டு குறிக்கப்படுகின்றது. இந்த நிலையை ;

"போகியா யிருந் துயிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னுற்போற் செய்த வினையினை வீட்ட லோரா
ரூகியா மூட ரெல்லா மும்பரி னொருவ னென்பர்

(சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ. 1 செய் 50)

என்று நம் ஞான சாத்திரம் நவிலல் காண்க.

வெண்ணிற - இது யோகியாயிருந்து உயிர்களுக்கு யோக முக்தி உதவும் உண்மை. சிவபெருமானே திருநீறு ஆகலின் இஃது ஈண்டு அவன் இயல்பாகவே பாசங்களின் நீக்கிய குறிப்புமாம்.

செம்பிரான் - இறைவனின் செந்நிறம், நேர்மை இரண்டையும் குறித்து நின்றது. அவன் இயல்பாகவே செம்மையானவன்; தன்னை அடைந்தோரையும் செம்மைப்படுத்துபவன்.

தில்லைச்சிற்றம்பலம் - இறைவன் தாங்கும் திருமேனிகளில் திருவைந்தொழில்களுக்கும் தானே தலைவன் என்பதைக் குறிப்பது கூத்தாடு தேவனாக விளங்கும் திருமேனியே. அந்தத் திருவுருவம் தில்லைச் சிற்றம்பலத்தில் திகழ்வது என்று குறிக்க இவ்விதம் அருளிச் செய்தார்.

தில்லை - நகரின் பெயர்.

அம்பலம் - என்பது பொது இடம். திருக்கோயிலிற் பொது மக்கள் அனைவரும் கூடி வழிபடுவதால் அஃது அம்பலமாயிற்று. இன்றும் மலை நாட்டில் திருக்கோயில்களை ''அம்பலம்" என்று வழங்குதல் நினைக. தில்லைக்கோயில் வளாகத்தில் தீட்சதர்களின் பொதுக்கூட்டம் நிகழும் இடம் "பேரம்பலம்" என வழங்கப்படுகின்றது. அதை விட இவ்விடம் அளவிற் சிறியதாகலின் "சிற்றம்பலமாயிற்று". சிதம்பரம் என்றும் வடமொழிப் பெயர் "ஞானகாயம்" என்னும் பொருள்பயப்பது. "***சிற்றம்பலம்***" என்பது அத்துடன் மயங்கி யறிதற்பாற்றன்று.

தலவிசேடம் - தில்லை - திருவண்டப் பகுதியின் ஈற்றில் உரைக்கப்பட்டுள்ளது. ஆண்டுக் காண்க.

உம்பரா - உம்பர் - மேலிடம். ***உம்பரான்*** - என்பதிலுள்ள "ஆன்" விகுதி கெட்டு உம்பர் என நின்று ''ஆ" பெற்று உம்பரா என விளிப் பொருளில் நின்றது. எல்லா உலகங்களுக்கும் மேலுள்ள சிவலோகத்தின் தலைவனே என்றவாறு.

உம்பர் ஆ - என்று பிரித்தால் காமதேனு என்ற பொருளும் தோன்றுகிறது. திருப்பாடல் 67 - ல் "***கடவுளானே***" என்றதன் கீழுரைத்தவை காண்க.

ஒருவன் - ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனி முதல்.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

சிவனொடொக் குந்தெய்வம் தேடினு மில்லை
அவனொடொப் பாரிங்கு யாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 5)

என்றது நினைக.

முன்னம் திருவண்டப்பகுதி 43-ல் ''ஒருவன்" என்றதன் கீழுரைத்தவையும் அடிக்குறிப்பும் காண்க. மேற்குறித்த தலைமை முதலிய எல்லா இலக்கணங்களும் நிரம்பிய ஒப்பற்ற பரம்பொருளே தம்மை ஆட்கொண்டது என்ற உவகை தோன்ற **ஆளுடை ஒருவ** என்றருளினர்.

இத் திருப்பாடலில் "என்னை ஆளுடை ஒருவ" என்று உளங்கசிந்து ஓதுவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். இறைவனின் பல்வேறு பெருமைக் குணங்களை எடுத்தோதி என்னைக் காத்தருள்க என்பதால் பதிகம் நுதலிய "***காருணியத்திரங்கல்***" பெற்றும்.

72. ஒருவனே போற்றி ஒப்பி
லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே சூஅ

(இ -ள்)

தனிமுதல்வனே வணக்கம்; நிகரற்ற என் தந்தையே வணக்கம்; மேலுலகவாசிகளின் ஞானாசிரியனே வணக்கம்; எங்கள் மெல்லிய இளந்தளிரே வணக்கம்; அடியேனை நின்பக்கல் வருக என்று பணித்து ஏற்றருள வேண்டும்; வணக்கம்; துணையற்ற என் தனிமையை ஒழித்து நின் திருவடியைத் தந்தருள வேண்டும்; வணக்கம்.

(வி -ரை)

ஈற்றடியிலுள்ள ''தமியனேன் தனிமை தீர்த்தே" என்பதை அவ்வடியின் முதலில் வைத்துப் பொருள் செய்க.

போற்றி - காத்தருள்க எனலுமாம். இத்திருப்பாடலில் பிற இடங்களிலும் வரும் இச்சொல்லுக்கு இவ்வாறே பொருள் கொள்க.

ஒப்பில் அப்பன் - உடற் காப்புச் செய்யும் இவ்வுலகத் தந்தை அளவில் நில்லாது உயிரையும் காத்து உய்விப்பவனுதலின் "**ஒப்பில்**" என்று அடைபுணர்ந்தார்.

"அகர வுயுர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து."

(திருவருட்பயன் -1)

என்றதும்; "தனக்குவமை யில்லாதான்" (திருக்குறள் - 7) என்றதும் காண்க.

பேரின்ப வாழ்வுக்குரிய செல்வங்கள் அனைத்தும் நல்குபவன் ஆதலின் "**ஒப்பில்**" என்ற அடைமொழியை "**ஒருவன்**" என்றதுடனும் புணர்த்துரைக்க.

வானோர் குருவன் - வானோர் - மேலுலகங்களில் உள்ளவர்கள். அவர்கள் பூவுலகுக்கு மேல் நாததத்துவம் வரையுள்ள புவனங்களில் வசிப்பவர்கள். இறைவன் அவர்கள் அனைவருக்கும் ஆசாரியனுவான். **குருவன்** - ஆசாரியன். "குரவன்" என்பது எதுகை நோக்கி உகரமாகி நின்ற செய்யுள் விகாரம். மெய்யன்பினராகிய அடியார்களையும் உளப்படுத்தி **எங்கள் குருவன்** என்ருர். குரு - கனம், பெருமை, மேன்மை, கௌரவம் என்ற பொருள்களையும் தரும்.

கோமளக்கொழுந்து. கோமளம் - மென்மையும் இளமையும் கொண்டது. அழகுள்ளது. கொழுந்து அழகின் மேல் எல்லை. சிவபெருமானின் பேரழகின் சிறுசிறு கூறுகளே ஏனைய எல்லார் மாட்டும் எல்லாப் பொருள்களிலும் காணப்படுவன. ''சிவக்கொழுந்து" என்பது சிவபெருமானின் திருநாமங்களில் ஒன்ருவதறிக. "பச்சை நிறம் போன்ற அம்மைக்கு ஆனந்தக் கொழுந்தே" என்ருர். சீகாழித் தாண்டவராயர்.

"வருக" என்று என்னை நின்பால் வாங்கிட வேண்டும் - துன்பத்தில் வருந்துபவன் ஒருவனைக் காக்க முயல்பவன் முதலில் அவனுக்கு இன்சொல் கூறிப் பின் துன்பம் நீக்கச் செயல்புரிய வேண்டும். ஈண்டு கோமளக் கொழுந்தாய் நின்று என் துன்பத்தை நீ அறிந்து கொண்டாய்; முதலில் என்னை

"நின்பால் வருக" என்று இன்சொற்கூறிப் பின் உன்னிடம் அழைத்துக் கொள்ள வேண்டும் என்றவாறு. மாயா காரியங்களாகிய தனு கரண புவன போகங்களில் சிக்கித் துன்புறும் என்னை முதலில் இன்சொற் கூறித் தேற்றுக. பின் அவற்றினின்றும் எடுத்து வீட்டின்பம் தருக என்பது வேண்டுகோள். **வாங்குதல்** - இழுத்துக் கொள்ளுதல், பிரித்தெடுத்து மீட்டுக் கொள்ளுதல், உய்வித்தல், ஏற்றுக் கொள்ளுதல். "உலகில் ஒற்றி வைத்திருந்த என்னை மீட்டுக் கொள்" என்பது திரு. பாரதியார் அவர்களின் உரைக்குறிப்பு.

"வலிய காருணியத்தால் அழைத்து என் போத நைவேதனங் கொண்டோய்" என்பது சீகாழித் தாண்டவராயரின் உரை.

தமியனேன் தனிமை தீர்த்தே - பதி பசு பாசம் என்ற மூன்றில், பதி, சத்துப் பொருள்; பாசம், அசத்துப்பொருள்; பசு, இவை இரண்டும் அல்லாத தனிப்பொருள். ஆதலிற் **தமியன்** என்றார்; இதைச் சதசத்து என்பர். ஆன்மாவைப் பந்தித்துள்ள பாசம் நீங்கினல் அவ்வான்மா **தனிமை** நீங்கிச் சத்தாகும். அஃதாவது சிவமாகும் (வீடு பேறெய்தும்). அந்நிலையையே ஈண்டு வேண்டுகின்றார்.

தருகநின் பாதம் - அந்தத் தனிமையை நீக்கித் துணை நிற்பது இறைவன் திருவடிகள். அஃதே வீடு பேறு ஆகும். அதைத் தருக என்கின்றார். இருவினைகளான புண்ணிய பாவங்களே முடிவில் பற்றித் தொடர்வன. அவற்றுள் பாவம் துணையாகாது. **தமியனேன்** என்றமையால் புண்ணியம் செய்யாதவன் என்பது போதரும் அந்தப் புண்ணியத் துணையில்லாத தனிமை கழிய அறிவு தர வேண்டும் என்று வேண்டுவார் அருணகிரிநாதர். அவர் திருவாக்கு;

" தமரு மமரு மனையு மினிய
தனமு மரசு மயலாகத்
தறுகண் மறலி முறுகு கயிறு
தலையை வளைய எறியாதே
கமல விமல நடன வுபய
கனக மணிகொ ளிருபாதம்
கருத அருளி எனது தனிமை
கழிய அறிவு தரவேணும்
குமர சமர புரியின் முருக
குலவு பழனி மலையோனே

கொடிய பகடு முடிய முடுகு
குறவர் சிறுமி மணவாளா
அமர ரிடரு மவுண ருடலும்
அழிய வமர்செய் தருள்வோனே
அறமு நிறமு மயிலு மயிலும்
அழகு முடைய பெருமாளே

(திருப்புகழ் 757)

இத் திருப்பாட்டில் இறைவனை "ஒருவனே" ''ஒப்பில்அப்பனே" "வானோர் குருவனே" "எங்கள் கோமளக் கொழுந்து" என்றெல்லாம் போற்றுவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். "என்னை வாங்கிட வேண்டும்;" "நின்பாதம் தருக" "தமியனேன் தனிமை தீர்க்க" என்று இறைவன் திருவருளை நினைந்து விண்ணப்பித்தலால் பதிகம் நுதலிய "**காருணியத்திரங்கல்**" பெற்றும்.

73. தீர்ந்தஅன் பாய அன்பர்க்
கவரினும் அன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண்
டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க்
கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாத நாயேற்
கருளிட வேண்டும் போற்றி சுசு

(இ -ள்)

இத்திருப்பாடலை ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

முதிர்ந்த மெய்யன்புள்ள அடியவர்களுக்கு அவர்கள் அளவினும் மிகுதியான அன்புடையவனே வணக்கம். சிறியேனது பொய் யொழுக்கத்தை ஒழித்தும் என்னை அடிமையாக ஏற்றுக் கொண்டும் அருள்புரிந்த பெருமைக் குணத்தினனே; வணக்கம்; பாற்கடலில் ஒழுகிப் பரந்த நஞ்சையுண்டு தேவர்களுக்கு அமுதம் கொடுத்தருளிய வள்ளலே; வணக்கம்; அழிவற்ற இன்பம் நிறைந்த நின் திருவடியை நாய் போன்ற இழிந்த எனக்குத் தந்தருள வேண்டும்; வணக்கம்.

(வி -ரை)

தீர்ந்த அன்பு - இனி இதை விட அதிகமான அன்பு இல்லை என்று கூறும்படியுள்ள மிக அதிகமான அன்பு.

அன்பு ஆய அன்பர் - அன்பைக் குணமாகக் கொண்டு, அதனையுடைய அன்பர் குணிப்பொருளாக இல்லாமல், முதிர்ந்த அன்பாகிய குணமே வடிவம் கொண்டாற் போன்ற உண்மை அடியவர். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு கண்ணப்ப நாயனர் ஆவர். அவர் அன்பு வடிவமாகத் திரிந்ததை; முன்பு 5-ம் திருப்பாடலில் "கண்டு" என்றதன் கீழ் எடுத்தாண்ட பெரியபுராணம்- கண்ணப்ப நாயனுர் புராணம் - 154 - ம் பாடலில் காண்க.

அவரினும் அன்ப - அவ்வடியார்கள் இறைவன் மீது எத்துணை அன்பு கொண்டுள்ளார்களோ அதனினும் அதிக அன்பை அவர்கள் மீது கொண்டுள்ளவன்.

இந்நிலையை;

திருச்சிற்றம்பலம்

முட்டி லன்பர்த மன்பிடுந் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட் டருளொடுந் தாழ்வுறும் வழக்காற்
பட்டொ டுந்துகி லநேககோ டிகளிடும் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - அமர்நீதி நாயனுர் புராணம். 35)

என்று சேக்கிழார் பெருமான் விளக்குவது காண்க.

பேர்ந்தும் என் பொய்ம்மை ஆட்கொண்டு அருளிடும் பெருமை .
பேர்ந்தும் - பெயர்த்தும் என்பது பேர்த்தும் என்றாகி எதுகை நோக்கிப் **பேர்ந்தும்** என மெலிந்து நின்றது. இதை "மெலிக்கும் வழி மெலித்தல்" என்று தொல்காப்பியம் கூறும்.

" *அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை*
வலிக்கும் வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழி தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலுங் குறுக்கும்வழி குறுக்கலு
நாட்டல் வலிய வென்மனுர் புலவர்.

(தொல்காப்பியம் - சொல்லதிகாரம் . எச்சவியல் சூ. 7.) என்பது சூத்திரம்.

பேர்ந்தும் - என் பொய் யொழுக்கத்தினின்றும் என்னைப் பெயர்த்தெடுத்தும் என்றவாறு. அது "நாடகத்தால் உன்னடியார் போல நடித்த" பொய்ம்மை.

பேர்ந்தும் என்பதற்குப் பிறவிதோறும் என்பது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு. "அடியேன் பசு போதத்தைப் பதிபோதமாக்கிய பெருமை" என்றார் சீகாழித்தாண்டவராயர்.

பேர்த்து - பிரித்தெடுத்து என்னும் பொருளில் வருவதை;

திருச்சிற்றம்பலம்

" ஓர்த்துள வாறு நோக்கி உண்மையை உணராக் குண்டர்
வார்த்தையை மெய்யென் றெண்ணி மயக்கில் வீழ்ந்தழுந்து வேனைப்
***பேர்த்தெனை ஆளாக் கொண்டு** பிறவிவான் பிணிக ளெல்லாம்*
தீர்த்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே"

(திருமுறை *4 - 73 - 2*)

திருச்சிற்றம்பலம்

எனவரும் அரசுகள் அமுதவாக்கில் காண்க.

'' ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

(திருக்குறள் 357)

என்ற வள்ளுவர் வாக்கில் பேர்த்து என்பதற்கு ''மாறி" என்று பொருளுரைத்தார் பரிமேலழகர்.

அருளிடும் பெருமை - பெயர்த்தலே பெருங்குணம். அஃதுதொருவனுக்கு நோய் நீக்குதல் போல. பின்னர் ஆட்கொள்ளுதல் பெருமைக்குணத்தின் இலக்கணம். அது நோய் நீக்கியபின் சத்துள்ள உணவுகள் தந்து உடலை ஓம்புதல் போல. ஈண்டு **பேர்த்தல்** பாச நீக்கமும் **அருளுதல்** திருவடிப்பேறு நல்கலையும் குறித்து நின்றன. **ஆட்கொண்டும்** - என்பதிலுள்ள எண்ணும்மை விகாரத்தால் தொக்கது.

பெருமை - பண்பாகுபெயராகப் பெருமைக்குணமுள்ள இறைவனைக் குறித்து நின்றது. வீடுபேறு இனி எய்த உள்ளதாகலின் "**அருளிடும் பெருமை**" என்று எதிர்காலத்திற் கூறினர்.

வார்ந்த நஞ்சு அயின்று வானோர்க்கு அமுதம் ஈ வள்ளல். ***வார்ந்த*** - ஒழுகிய. அமுதம் கடையும் பொழுது பாம்பின் வாயினின்றும் ஒழுகிய. **வள்ளல்** - பேரடியார்கள் தங்களிடமுள்ள மிக உயர்ந்தவற்றை இறைவனுக்கு அளிப்பர். ஆனல் தேவர்கள் தங்களைக் கொல்ல வந்த நஞ்சை இறைவனுக்கு அளித்தனர். இறைவன் கொடிய நஞ்சைத் தான் ஏற்றுக் கொண்டு மிக அரிய பொருளாகிய அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்தான். ஆதலின் அவனை வள்ளல் என்ருர்.

இறைவன் நஞ்சருந்திய வரலாறு முன்னம் பாடல் ௬ல் "நஞ்ச மஞ்சிய வரலாறு" என்றதன் கீழ் உரைத்தாம்.

ஆர்ந்த நின் பாதம். ஆர்தல் - நிறைதல். அழிவில்லாத வீட்டின்பம் நிறைந்துள்ள பாதம். வீடுபேறு. "சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு" என்ற திருமுருகாற்றுப் படை (62) க்கு நச்சினுர்க்கினியரும் அவ்வாறுரைத்தல் காண்க.

நாயேற்கு அருளிட வேண்டும் - நான் இழிந்தவன்; ஆகலின் பல குற்றங்களுள்ளவன். நீ நஞ்சம் உண்டு அமுதம் அருளிய வள்ளல்; ஆகலின் என் குற்றங்களைப் புறக்கணித்து வீடு பேறு நல்குவாய் என்றவாறு. நாய் பற்றி முன்னம் சிவபுராணம் 60-ல் "நாய்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

இத் திருப்பாடலின் முதலடியின் கருத்து இரண்டாம் அடியிற் கூறப்பட்டதற்கும், மூன்ருமடியின் கருத்து நான்காமடியிற் கூறப்பட்டதற்கும் ஏதுவாக அமைந்திருத்தல் அறிந்து இன்புறுக.

இங்குத் "தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப என் பொய்ம்மை ஆட்கொண்டு அருளிடும் பெருமை" என்பனவற்ருல் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்ரும். "நஞ்சயின்று வானோர்க்கு அமுதம் ஈ வள்ளல்" என்றமையால் பதிகம் நுதலிய "***காருணியத்திரங்கல்***" பெற்ரும்.

74. போற்றியிப் புவன நீர்தீக்
காலொடு வான மானய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற
மாகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவு யிர்க்கும்
ஈருயீ றின்மை யானய்
போற்றியைம் புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கை யானே எ0

(இ -ள்)

இந் நிலம் நீர் நெருப்பு வளி வானம் என்னும் ஐம்பெரும் பூதங்களும் ஆயினாய்; வணக்கம்; எல்லா உயிர்களும் உடம்புகளுடன் கூடிப் படைக்கப்படுவதற்கு நிமித்த காரணம் ஆகி; நீ படைக்கப்படுபவன் இலன் ஆனாய்; வணக்கம்; எல்லா உயிர்களும் தத்தம் உடம்புகள் அழிய நிமித்த காரணம் ஆகி நீ அழிவற்றவனானாய்; வணக்கம்; மனத்துடன் இணைந்து ஐம்பொறிகளும் நின்னைச் சார்தல் இல்லாத வண்ணம் சார்ந்திருப்பவனே; வணக்கம்.

(வி -ரை)

போற்றி - இச்சொல்லை ஒவ்வோரடியிலும் ஈற்றில் அமைத்துப் பொருள் கொள்க.

போற்றி - இது வாயால் வணக்கம் எனக் கூறிக் கைகுவிப்பதாகும். இந்தச் சொல் இப்பொருளில் வருவதை;

திருச்சிற்றம்பலம்

" போற்றிசைத்துன் னடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 57 - 9, 10)

என்னும் நம் அரசுகளின் அருந்தமிழிற் காண்க.

போற்றி - காத்தருள்க எனலுமாம்.

இப்புவனம் நீர் தீ காலொடு வானம் ஆனாய். *இப்புவனம்* - நம்மால் காணப்படும் உலகம், மண்ணுலகாதலின் இப்புவனம் என்று முதலில் அண்மைச் சுட்டிற் கூறினார்; பின்னர் நீர் தீ காலொடு வானம் என்று ஏனைய நான்கு பூதங்களையும் ஒடுக்க முறையில் வரிசைப்படுத்துக் கூறினார்.

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலகம் மாதலின்
இருவினை ஐம்பால் இயனெறி வழாமை
திரிவிற் சொல்லொடு தழாஅல் வேண்டும்"

(தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியல் - சூ.91.)

என்று இலக்கணம் இயம்புதல் காண்க.

வான் - இஃது ஏனைய நான்கு பூதங்களுக்கும் இடங்கொடுத்துத் தான் அவற்றுள் ஒடுங்காது நிற்றலின் அவற்றை ஒடு உருபு தந்து பிரித்து இந்தப் பூதத்தைத் தனியே கூறினர்.

ஐம்பூதங்கள் ஒடுக்கமுறை பற்றி முன்னம் 12-ம் திருப்பாட்டில் "இழிதருகாலம்" என்றதன் கீழ் விளக்கினும்.

ஐந்து பூதங்களும் வெளிப்படையாகக் கூறப்பட்டன. இனம்பற்றி நெருப்பின் கூருகிய ஞாயிறும் திங்களும், இவ்வாறு கூறுவதற்கு வினை முதலாகிய ஆன்மாவும் உடன் கொள்க. இவை இறைவனின் அட்ட மூர்த்தங்களாவன நினைக.

இவ்வாறு இறைவனுக்கும் உலகங்களுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு கூறப்பட்டது. இவை பற்றி முன்னம் சிவபுராணம் 67-ல் "யாவையுமாய் அல்லையுமாய்" என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. "உலகெலமாகி வேருய் உடனுமாகி" என்ற ஆகம முடிவும் நினைக.

எவ்வுயிர்க்கும் தோற்றம் ஆகி நீ தோற்றம் இல்லாய்; எல்லா உயிர்க்கும் ஈறுகி ஈறின்மையானுய் - உயிர்கள் அநாதி; நித்தியமானவை. தோற்றமும் ஈறும் இல்லாத உயிர்களுக்கு அவற்றைக் கூறியது இலக்கணை. இறைவன் உயிர்களுக்குத் தோற்றமும் ஈறும் ஆனுன் என்றது. அவை தத்தம் உடம்புகளுடன் கூடிப் படைக்கப்படுவதற்கும்; பின்னர் சங்கரிக்கப்படுவதற்கும் இறைவன் நிமித்த காரணனுய் நிற்பதைக் குறித்தது. ***"ஆனுய்" "இல்லாய்"*** - என்பன முன்னிலை விளி. ***தோற்றம் இல்லாய்*** - என்றது இறைவனின் காலங் கடந்த தொன்மையையும் முழுமுதற்றன்மையையும் உணர்த்தியவாறு.

உயிர்களின் உடம்புகளும் அவை வாழ்வதற்கான உலகங்களும் மாயையினின்றும் தோன்றுவன. எனவே, அவற்றின் தோற்றத்துக்கு மாயை முதற் காரணம். பின்னர் உலகங்களும் உயிர்களின் உடம்புகளும் அழியுங்கால் அவை மாயையுள் ஒடுங்குவன. ஆனல் மாயை

சடப்பொருள்; அதுதானுக இயங்காது. அது தனக்கு ஆதாரமாக உள்ள சிவசத்தியின்கண் நின்று அந்தச் சத்தி இயக்கிய வழியே அவ்வக் காரியங்களைப் பயப்பது. அதனுல் உலகங்களும் உயிர்களுக்கான உடம்புகளும் தோன்றவும் அழியவும் சிவபெருமானைக் காரணமாக "**ஆனுய்**" "**ஈருய்**" என்று கூறினுர்.

ஈண்டு;

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்ரு ணிற்ற லவர்வினையால்- வித்தகமாம்
வேட்டுவனு மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்தது.

(சிவஞானபோதம் - சூ. 1 - அதி - 2. வெண்பா 2)

என்றது காண்க. இதற்குச் சிவஞானமாபாடியமும் காண்க.

ஈருகி ஈறின்மை ஆனுய் - அனைத்தும் ஒடுங்கும் பேரூழியைச் செய்பவனும் அனைத்தும் ஒடுங்குவதற்கு இடமாக உள்ளவனும் மகாருத்திரனுகிய சிவபெருமானே என்பதை;

திருச்சிற்றம்பலம்

"பாதந் தரிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற ஏக பாதர்
ஓதத் தொலிமடங்கி யூருண் டேறி
யொத்துலக மெல்லா மொடுங்கியபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்தனுரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 35 - 2)

எனவரும் தாண்டகத்தமிழ் நினைக.

"அந்தம் ஆதி" என்னும் சிவஞான போத முதற் சூத்திரம் நினைக.

இவ்வியல்பால் இறைவன் உலகின் வேறு ஆவான் என்பதும் பெறப்படுதல் காண்க.

ஐம்புலன்கள் நின்னைப்புணர்கிலாப் புணர்க்கையானே - ஐம்புலன்கள் - ஈண்டு வாயில்களாக உள்ள ஐம்பொறிகளை உணர்த்தி நின்றன. மனம் பொறி வழிச் சென்று நுகரும் புலன்கள் எல்லாம் சடப்பொருள். இறைவன் ஞான வடிவினன். அவனை அவனருளே கண்ணுகக் காணும் மெய்யுணர்விஞலன்றிப் பிறவாற்றல் அறிய இயலாது. ஆதலின் அவன் ஐம்புலன்களும் புணர்கிலா நிலையினனுனன்.

எனினும் வினைக்கீடாகப் பிறந்த உயிர்கள் அனைத்தும் அவ்வினைப் பயன்களை நுகர்ந்து வினையொழிவு பெற்று வீடுபெற வேண்டும் என்னும் பேரருள் காரணமாக, இறைவன் அவ்வுயிர்கள் கன்மப் பயன்களை நுகரும் வண்ணம் அவ்வுயிர்களோடு உடனுக நின்று ஐம்பொறிகளைச் சார்ந்திருப்பன். இவ்வுண்மையையே **புணர்க்கையானே** என்று அருளிச் செய்தார். வினை ஒழிவின்பின் இறைவன் ஐம்பொறிகளை விட்டு விலகுவன். உயிர்களையும் அவற்றினின்றும் விடுவித்து வீட்டின்பத்திற் சேர்ப்பன். இதனுல், இறைவன் உலகத்தோடு உடனுதல் பெறப்படும்

ஈண்டு;

" பாணியின்றியே பற்றும்; பதமின்றி
மாண வேசெலும் மற்றுங்கண் ணின்றியே
காணுங் கேட்கும் காதின்றி என்னவே
பேணி மாமறை ஈசனைப் பேசுமே"

(சுவதா சுவேதரோப நிஷத் 19)

என்பது நினைக.

ஐம்புலன்கள் இறைவனை நண்ண இயலா என்பதை நம் அடிகள் பின்னரும்;

திருச்சிற்றம்பலம்

நினைப்ப தாக சிந்தை செல்லும்
எல்லை யேய வாக்கினுல்
தினைத்த னையு மாவ தில்லை
சொல்ல லாவ கேட்பவே

அனைத் துலகு மாய நின்னை
யைம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த
தெந்தை பாத மெய்தவே
திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 80)

என்று அருளிச் செய்தல் காண்க.

சிவபரஞ்சுடர் உலகெலாமாய், வேருய், உடனுய் நிற்பதாகக் கூறும் சைவ சித்தாந்தக் கொள்கை இத் திருப்பாட்டின் அமைந்திருப்பது கண்டின்புறுக.

இத் திருப்பாடலில் இறைவன் எங்கும் நிறைந்திருக்கும் இயல்பும் எல்லாவற்றையும் கடந்து நிற்கும் நிலையும் பரவப்படுவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்ரும். ஐம்புலன்களாற் பற்றப்படாத அவன் ஆன்மாக்கள் பொருட்டு ஐம்புலன்களைப்புணர்ந்து நின்று அவற்றினின்று ஆன்மாக்களை விடுவித்து வீடளிப்பது கூறியதால் பதிகம் நுதலிய "**காருணியத்திரங்கல்**" பெற்ரும்.

அ. ஆனந்தத் தழுந்தல்.

ஆனந்தம் என்பது இன்ப நுகர்ச்சியில் எய்தும் சுகம். உயிர் உடலளவில் எய்தும் இந்த இன்ப நுகர்ச்சி ஐம்பொறிகளின் வாயிலாக நுகரப்படும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்துமாம். பொறி வழி மனம் சென்று ஒரு புலனை அறியும் பொழுது பொது முறையிலன்றிச் சிறப்பு முறையில் அறிதல் அநுபவம். அஃது அழுந்தி அறிதலாகும். எடுத்துக்காட்டாக ஒரு மாங்கனியைச் சுவைக்குங்கால் அந்தச் சுவை அந்த மாங்கனி எந்த வகையைச் சேர்ந்தது; அதற்கும் வேறு வகை மாங்கனியின் சுவைக்கும் உள்ள வேறுபாடு யாது? என்று அறிவது அனுபவம்.

ஐம்பொறிகள் வழி அறியும் இன்பம் அனைத்தும் அழியும் மாலையன. அவை அளவில் மிகுமாயின் கேடுபயப்பன. சிவகரணங்கள் வாயிலாக நுகரும் சிவானந்தமே அழிவற்றதும், நுகருந்தோறும் மேன்மேலும் இன்பம் பயப்பதுமாகும். அதனையே நம் அடிகள் "**ஆனந்தம்**" என்கின்ருர். "அந்த

மொன்றில்லா ஆனந்தம் (395)" "உலப்பிலா ஆனந்தம்" (542) என்று வருவன காண்க. "உணர்வினேர் பெற வரும் சிவபோகம்" (பெரிய புராணம் திருஞானசம்பந்த நாயனுர் புராணம் 161) என்று சேக்கிழார் பெருமான் செப்புவது மஃதேயாம்.

மாயா காரியமாகிய உலகக் காட்சி ஒழிந்து பேரின்பமயமான சிவக்காட்சியில் ஈடுபடும் சாதகனுக்கு இவ்வின்பம் புலனுகும். மேலைத் தவத்தால் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டானதும் உயிர், பாசப் பிணிப்பினின்றும் விடுபடத் தவத்தில் ஈடுபட்டு மன மொழி மெய்களைத் தூயனவாக்கிக் கொள்ள இறைவனை இடையருது நினைந்து அவன் புகழ்களைத் துதித்து உடலால் வழிபாடு செய்யும். அவ்வழிபாட்டால் படிப்படியாக மல இருள் நீங்கும்; பொறி புலன்களின் நுகர்வு குறையும்; சிவானந்த விளைவு மிகும்; அந்தச் சிவானந்ததைச் சிறிது நுகர்ந்ததும் அதன் சுவை கண்டு உயிர் அதில் ஆழ்ந்து ஆழ்ந்து திளைக்கும்; அதனையே ஈண்டு **"ஆனந்தத் தழுந்தல்"** என்று தலைப்புக் கூறுகின்றது.

எழுசீர் ஆசிரிய விருத்தம்

75 புணர்ப்ப தொக்க எந்தை யென்னை
யாண்டு பூண நோக்கினுய்
புணர்ப்ப தன்றி தென்ற போது
நின்னெ டென்னெ டென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக
அன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக அங்க ணுள
புங்க மான போகமே. எக

(இ -ள்)

என் தந்தையே; நின் திருவடிப் பேற்றில் என்னைச் சேர்ப்பதாகிய காலம் பொருந்துவதாக; அடியேனை ஆட்கொண்டு, யான் அடிமைத் தன்மையை மேற்கொள்ளுமாறு அருள் நோக்கம் செய்தாய்; பின்னர் உன்னை என்னெடு இக்காலம் இயைவிப்பது அன்று என்று திருவுள்ளங்கொண்டு புறக்கணித்த பொழுது; இது குறித்து நான் செய்யத்தக்க துயாது ஆம்; இக்காலம் நின்னெடு என்னை இயைவிப்பதாக; இயைவிப்பதன்று ஆக;

அழகிய கண்ணேட்டமுள்ளவனே நின் திருவடிக்கண் உள்ள மெய்யன்பே உயர்ந்ததாகிய சிவானந்தத்தை விளைவிப்பதாக.

(வி -ரை)

எந்தை - தந்தையின் சொத்துக்கு உரிமையாளன் அவன் மைந்தன். வீடு பேருகிய உன் செல்வத்துக்கு நான் உரியவன் என்று குறித்தவாறு.

புணர்ப்பது ஒக்க - புணர்ப்பது - கூட்டுவிப்பது. இங்கு அது காலத்தைக் குறித்து நின்றது. நம் அடிகளின் மேலைத்தவத்தின் பயனுக இறைவன் மானிட வடிவம் தாங்கித் திருப்பெருந்துறையில் ஞானுசிரியனுக எழுந்தருயிருந்து அடிகள் வரவை எதிர்நோக்கியிருந்தான். "பந்தம் அறும் எல்லையது பார்த்து இனிதிருந்தான்" என்று வாதவூரடிகள் புராணம் - திருப்பெருந்துறைக்குச் சருக்கம் செய்யுள் 17 கூறுவது காண்க. அந்த நற்காலத்தை ஈண்டு இறைவனுகக் கூறுகின்ருர். "ஞாலமே விசும்பே இவை வந்து போங் காலமே" என்றுமுன்னரும் (47) காலதத்துவத்தை இறைவனுகக் கூறியது நினேக.

ஒக்க - அந்த நற்கால்ம் வந்து பொருந்துவதாக. இதற்கு இவ்வாறன்றிப் ***புணர்க்கை*** - சாலவித்தை என்று பொருள் கொண்டு; ***புணர்ப்பது ஒக்க*** - இந்திர சாலமாயின் அது நடவாத பொய்யாம். அது நடந்து முடிந்தபின் நிகழ்ச்சிகளின் எந்த அடையாளமும் இருக்காது; ஆனுல் ஈண்டு இறைவன் எழுந்தருளி ஆட்கொண்ட அடையாளங்களான அடியார் கூட்டம் முதலியன அவன் மறைந்த பின்பும் இருப்பதால் இந்திரசாலம் போன்றுள்ளது என்பார் ***ஒக்க*** என்றருளினுர் என்பர் கவியரசு அவர்கள். இங்கு "***ஒக்க***" என்பது செயவென்னெச்சமாகக் கொள்ளாது அவ்வெச்சப் பொருள் தருவதோர் உவமத் திரிபாகக் கொள்க.

ஒக்க - ஒக்கவே என்று தேற்றேகாரம் விரித்துப் பொருள் கொள்வது திரு. முதலியாரவர்கள் குறிப்புரை.

ஆண்டு பூண நோக்கினய் - "பூணநோக்கி ஆண்டாய்" என்று மாற்றிக் கொள்க.

பூண - என்னை அடிமை பூண்பதற்காக. ***நோக்கி*** - அருட்கண் பார்வை செலுத்தலாகிய சட்சுதீட்சை செய்து. ***ஆண்டாய்*** - அடிமையாகக் கொண்டாய்.

சட்சு தீக்கை முன்னரும், ஆட்கொள்ளுதல் அதன் பின்னரும் நிகழ்வன நினைக. இறைவன் அருள் நோக்கினல் மலஇருள் நீங்கி உயிர் தூய்மையெய்தும், அதன் பிறகே இறைவன் உயிரை அடிமையாகக் கொள்வான் என்பதை நாம் கண்ணப்ப நாயனுர் சரிதத்தில் கண்டாம். காளத்தியப்பர் அருள் நோக்கம் பெற்ற பின்பே நாயனுர் தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல நீங்கிப் பொருவிலன் புருவமானதும், அதன் பின்பே ஆறு நாட்களில் அவர் செய்த பணியை இறைவன் ஏற்றுக் கொண்டதும் நினைக. இது பற்றி முன்னம் 5-ம் பாடலில் ''கண்டு" என்றதன் கீழுரைத்தவை காண்க.

புணர்ப்பது அன்று இது என்ற போது - இந்தக் காலம் ''நீ நம் திருவடிகளைச் சேர்வதற்கு உரியது அன்று" என்று நீ அருளிச் செய்த பொழுது. திருப்பெருந்துறையில் ஏனைய அடியவர்கள் பொய்கை நடுவில் தோன்றிய ஒளியில் புகுந்து வீடடைந்தனர். இறைவன் நம் அடிகளை நீ அவர்களுடன் சோதியில் புகாதே! இன்னும் சின்னுள் இருந்து தில்லையம்பதிக்கு வருக என்று பணித்த வரலாற்றின் அகச்சான்று.

இது - ஈண்டுக்காலம் என்ற பொருள் தந்து நின்றது.

புணர்ப்பது அன்று - நீ நம் திருவடிகள் சேர்வதற்கு உரிய காலம் அன்று.

நின்னெடு என்னெடு இது புணர்ப்பது அன்று - என்று மாற்றிக் கொள்க. ***நின்னெடு*** - நின்னை. முன்றும் வேற்றுமை உருபு இரண்டாம் வேற்றுமைப் பொருளில் வந்தது. ***என்னெடு*** - என் திருவடி நிழலோடு என்றவாறு.

என் இது ஆம் - இது என் ஆம் - இஃது யாது ஆகும். ***இது*** - ஈண்டு இறைவன் திருவுள்ளக் குறிப்பை உணர்த்தி நின்றது. நீ எனக்கு சட்சு தீட்சை தந்து மல பரிபாகம் எய்துவித்து உன் திருவடிகளில் சேர்த்துக் கொள்ளத் தகுதி பெறச் செய்த பின், "இந்தச் சமயம் நீ நம் திருவடிகளை எய்துதற்கு உரியதன்று" என்று திருவுள்ளம்பற்றிஞயாயின் அதன் பின் நான் செய்யத்தக்கது ஒன்றுமில்லை என்றவாறு.

இது புணர்ப்பது ஆக அன்று ஆக - இந்தக்காலம் அடியேனை நின் திருவடிகளில் சேர்ப்பதற்குத் தகுதியுள்ளதாகவோ அல்லது தகுதியில்லாத தாகவோ ஆகட்டும். ***இது*** - காலத்தைச் சுட்டி நின்றது.

அங்கணுள - அழகிய கண்ணேட்ட முடையவனே! விளி. சட்சு தீட்சை நல்கிய குறிப்பு.

நின் கழல்கண் அன்பே புங்கமான போகமே புணர்ப்பது ஆக - உன் திருவடிக்கண் எனக்குள்ள மெய்யன்பே எனக்கு மேலான இன்பத்தைத் தருவதாக. எனக்கு வீடுபேறு கிட்டினும், கிட்டா தொழியினும் உன் திருவடிக்கண் மெய்யன்பு கொண்டிருக்கும் நிலையை அருள்வாயாக. அஃதே எனக்கு மேலான இன்பத்தை நல்கும் என்றவாறு. முன்னம் திருவண்டப்பகுதி (92 - ல்) ''மேன் மேல் மீக் கொள'' என்றதன் கீழுரைத்த பெரிய புராணப் பாடல் காண்க.

புங்கம் - சிறந்தது. ஈண்டுச் சிவானந்தத்தை உணர்த்தி நின்றது.

நின் கழற்கண்ணே - என்பதிலுள்ள ஏகாரத்தைப் பிரித்து **அன்பு** என்பதும் கூட்டி அன்பே என்க. பிரிநிலை ஏகாரம்.

நின்கழற்கண் - என்பதை இடைநிலைத் தீவகமாகக் கொண்டு "**நின் கழற்கண் அன்பே**"; "**நின் கழற்கண் புங்கமான போகம்**" என ஈரிடத்தும் புணர்ந்துரைக்க.

இந்தக்காலம் எனக்கு வீடுபேறு தருவதாக ஆகட்டும்; தருவதற்குத் தக்கதன்றாக ஒழியட்டும் என்று காலத்தை வெறுத்து இறைவன் திருவடிக்கண் மெய்யன்பையே வேண்டுதலின் சதகம் நுதலிய **பத்தி வைராக்கிய விசித்திரம்** பெற்றும்; நின் கழற்கண் அன்பே எனக்கு மேலான இன்பம் நல்கும் என்றமையால் பதிகம் நுதலிய "**ஆனந்தத்தழுந்தல்**" பெற்றும்.

76. போகம் வேண்டி வேண்டி லேன்பு
ரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழலி ணைய
லாதி லேனெ னெம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி யஞ்ச லிக்கணே
யாக என்கை கண்கள் தாரை
யாற தாக ஐயனே எ௨

(இ -ள்)

ஒப்பற்ற தனி முதல்வனே, என் தலைவனே, ஞானாசிரியனே, இன்பம் துய்த்தலை விரும்பி, இந்திரன் முதலிய விண்ணுலக வாசிகளின் இன்பங்களையும் விரும்புகின்றிலேன்; நின் திருவடித் துணையல்லாது வேறு பற்றுக் கோடு இல்லேன்; உடல் மனத்தினின்றும் வேறுபட்டு நடுக்கம் கொள்ள, என் கைகள் தலைமேல் குவிந்து தொழுதலாகிய செயலின் கண்ணே நிகழ்வனவாக, என்னுடைய விழிகளின் நீர் ஒழுக்கு ஆறாகப் பெருகுவதாக.

(வி -ரை)

"ஏக" "என் எம்பிரான்" "ஐயனே" என்பனவற்றை முதலில் அமைத்துப் பாடலை அன்னுவயப்படுத்திக் கொள்க.

ஏக - ஏகனே ! விளி. *ஏகன்* - ஒருவன். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். பதிப் பொருள் ஒன்றே என்பது நினைக. சிவபுராணம் 5 -ல் "ஏகன்" என்றது நினைக. முன்னம் திருவண்டப்பகுதி 43- ல் "ஒருவன்" என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

இதற்கு இவ்வாறன்றி "செல்வதற்கு" என்று பொருள் கொண்டு; "நின் திருவடித்துணை அல்லாது நான் செல்வதற்கு வேறு இடமில்லேன்" என்று உரை செய்தனர் முன்னுரையாளரில் சிலர்.

என் எம்பிரான் - பதிப்பொருளாகிய தனி முதலே தம் பொருட்டுத் திருப்பெருந்துறையில் ஞானாசிரியனாக எழுந்தருளியது குறித்து **என் எம் பிரான்** என்று தனியுரிமை கொண்டார்.

ஐயனே - தலைவனே. "**என்**" என்பதை ஈண்டும் புணர்த்து **என் ஐயனே** என்க.

புரந்தராதி இன்பமும் போகம் வேண்டி வேண்டிலேன் - போக நுகர்ச்சிக்குச் சிறந்தது இந்திர பதம்; ஆதலின் புரந்தாதி என்றார். **புரந்தரன்** - பகைவர்களின் நகரங்களை அழிப்பவன்; இந்திரன். **இன்பமும்** - இன்பம் என்றது ஈண்டு இன்ப வாழ்க்கையை. உம்மை - பூவுலக இன்பத்தினும் சிறந்தது என்பதைக் குறித்து நின்றது. *புரந்தராதி* என்றதால் குபேரன், நான்முகன் திருமால் பதங்களையும் கூறியதாயிற்று.

நின்கழல் லிணை அலாது இலேன் - ***நின் கழல்லிணை*** - நின் இரண்டு திருவடிகள். சில பதிப்புக்களில் "கழலிணை" என்று விகாரமின்றிக் காணப்படுவது பிழை. எல்லா அடிகளிலும் மூன்றாம் சீர் தேமா வாக அமைந்து ஓசை நலம் பயப்பது காண்க. ***அலாது இலேன்*** - பற்றுக்கோடு

என்ற ஒரு செயப்படு பொருள் வருவித்துப் ''பற்றுக்கோடு அலாது இலேன்'' என்க. இதன் கண் ''ஆதலின்'' என்றது தொக்கு நின்றது. "**அல்லாது**" "**இல்லேன்**" என்பவற்றிலுள்ள மெல்லொற்றுக்கள் செய்யுள் விகாரத்தால் தொக்கன.

ஆகம் விண்டு கம்பம் வந்து. ஆகம் - மார்பு. ஈண்டு இடவாகு பெயராக மனத்தைக் குறித்து நின்றது. மனமானது உடலிலுள்ள ஞனேந்திரியங்களையும் கன்மேந்திரியங்களையும் செயற்படுத்துவது. ஈண்டு, மெய்யன்பால் அவை மனத்தின் ஆட்சியினின்றும் விடுபட்டு வேருக நின்று முன் பழக்க வாசனையால் தாமே தொழிற்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்ருர். **விண்டு** - வேறுபட்டு. உருகி, இளகி புளகமுற்று எனலுமாம். **கம்பம்** - நடுக்கம். **வந்து** - வரப்பெற்று. வரப்பெற என்று திரிக்க. உடல் நடுங்குதல் சிவனடியார்களின் அகத்திலக்கணம் பத்தில் ஒன்ருதல் நினைக. முன்னம் போற்றித் திருவகவல் 61-ல் ''உடல் கம்பித்து'' என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

குஞ்சி அஞ்சலிக்கணே ஆக என்கை - "என் கை குஞ்சிக்கணே அஞ்சலியாக" என்று மாற்றிக் கொள்க. **குஞ்சி** - ஆடவரின் தலை மயிர். ஈண்டுச் சினையாகு பெயராகத் தலையை உணர்த்திற்று.

குஞ்சி - ஆடவரின் தலைமயிர் என்பதை,

திருச்சிற்றம்பலம்

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 12 - 10)

'' . . . . கோதையர் கூந்தல் குஞ்சியிற்
சோர்ந்தவி ழிதழி லியங்குமா நின்று

(பரிபாடல் 7, வரி 26 27)

என்பவற்றிற் காண்க.★

★ குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும் (நாலடியார் - 14 -1)

கை - கைகள். பால்பாக அஃறிணை. கன்மேந்திரியங்களான கைகள், மனத்தின் ஆட்சியினின்றும் விடுபட்டிருப்பினும் பழக்க வாசனையால் தாமே சென்னிமேற் சென்று குவிந்து வணக்கம் செய்ய என்றவாறு. முன்னர்ச் சிவபுராணம் 9-ல் ''கரங்குவிவார்'' என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

இதற்கு இவ்வாறன்றிக் ''குஞ்சி'' என்பதைத் தூக்கிய திருவடியாகக் கொண்டு, ''குஞ்சித பாதத்தின் கீழ்க்கும்பிட்டு'' என்றார் சீகாழித் தாண்டவராயர்.

கண்கள் தாரை ஆறு அது ஆக - ஞானேந்திரியமாகிய கண்களில் என் நெஞ்சம் பக்திப் பெருக்கால் உருகியதன் காரணமாகக் கண்ணீர் வெள்ளம் இடைவிடாது ஆறுபோல் பெருகி ஓட. கண்ணீர் பெருகுதல் மெய்யடியார்களின் அகத்திலக்கணம் பத்தில் ஒன்று என்பது நினைக. போற்றித் திருவகவல் 61-ல் ''உடல்கம்பித்து'' என்றதன் கீழ் விளக்கியவை காண்க. ***ஆறு*** - கண்ணீரின் பெருக்கையும் அஃது இடையறாது வழிவதையும் குறித்தது. வேறு உலக நினைவுகள் இடையில் குறுக்கிடாத சிவானந்த அனுபவத்தில் அழுந்தியுள்ள நிலை. ***அது*** - பகுதிப் பொருள் விகுதி. இரு கண்களிலும் இரு கண்ணீர் ஆறுகள் ஓடுவதைக் குறித்தது. ஈண்டு ***அது*** என்றது பன்மை ஒருமை மயக்கம். கன்மேந்திரியங்களிற் சிறந்த கையையும் ஞானேந்திரியங்களிற் சிறந்த கண்களையும் கூறியதால் இனம்பற்றி ஏனையவற்றையும் ஏற்ற பெற்றி அமைத்துக் கொள்க.

இதன்கண், உடல் நடுக்கமுற்றுக் கைகள் சென்னியிற்குவியக் கண்கள் ஆறுபோல் இடையறாது கண்ணீர் வெள்ளம் பெருக்க வேண்டும் என்றதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றாம். "புரந்தராதி இன்பமும் வேண்டிலேன்" என்றதால் பதிகம் நுதலிய "***ஆனந்தத்தழுந்தல்***" பெற்றாம்.

77 ஐய நின்ன தல்ல தில்லை
மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை
பொய்ம்மை யேனெ னெம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க
வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ
னக்கு மாக வேண்டுமே எ௭

(இ-ள்)

ஐயனே ; எங்கள் தலைவனே; அஞ்சனம் தோய்ந்துள்ள கண்களுள்ள உமையம்மையை ஒரு கூற்றில் கொண்டவனே; வஞ்சகனாகிய எனக்கு, நின்னையன்றி, வேறு ஒரு பற்றுக்கோடு இல்லை; (அங்ஙனமாகவும்) பொய்யொழுக்கம் உடைய யான் சேரப் பெற்றது பொய்ம்மையேயன்றி வேறு இன்று (எனவே) நின் திருவடி நிழலில் வந்து இரண்டற்ற நிலையில் இயைந்து இன்புறும் உண்மை அன்பர்களது சிறந்த அன்பே பொய்ம்மையாளனாகிய எனக்கும் உண்டாதல் வேண்டும்.

(வி-ரை)

"ஐய, என் எம்பிரான், மைகலந்த கண்ணி பங்க ; வஞ்சனேன் நின்னது அல்லது மற்றோர் பற்று இல்லை; பொய்ம்மையேன் கலந்தது பொய் அல்லது இல்லை; நின் கழற்கண் வந்து கலந்த மெய்யன்பர் அன்பே, எனக்கும் ஆக வேண்டும்" என்று இத்திருப்பாடலை அன்னுவயம் செய்து கொண்டு உரை காண்க.

ஐயன் - தலைவன். இறைவனைத் தலைவன் என்று தெரிந்தே பற்றுக் கோடாகக் கொண்டமை தோன்ற **ஐய** என்று விளித்தார்.

என் எம்பிரான் - யான் பொய்யொழுக்கம் உள்ளவன். அதை என் உயிருக்கு உயிராக நிற்கும் நீ அறிந்துள்ளாய். ஆயினும் என்னை ஆட்கொண்டாய். ஆதலின் அடியார்களாகிய எங்கள் அனைவருக்கும் நீ தலைவனாயினும் எனக்குச் சிறப்பு முறையில் உரியவன் என்றவாறு.

மை கலந்த கண்ணி பங்க ! அடியவர்களுக்கு வீடு பேறு நல்க எழுந்தருளுங் கால் பேரருளின் உருவகமான உமையம்மையுடன் எழுந்தருளும் குறிப்பு.

மை கலந்த கண்ணி - கண்ணுக்கு மை தீட்டிக் கொள்ளல் மகளிரின் இளமைப் பருவத்தில் மட்டும் மேற்கொள்ளும் ஒப்பனை. திருவருள், கால தத்துவத்துக்கு அப்பால் நின்று அதை இயக்குவது; ஆதலில் அஃது என்றும் முதுமை யெய்தாது இளமையாயிருப்பது நினைக.

மை, கருநிறமுள்ளது. அது, தான் மேலும் கருமை பெற்று அழகு பெற வேண்டி அம்பிகையின் கண்களிற் படிந்து பிரிந்து வர விருப்பமின்றி அக்கண்களுடனே கலந்து விட்டது என்பது நயம்.

பாவியாகிய யான் பாவத்தின் நிறமாகிய கருநிறமுற்று எண்ணற்ற பிறவிகளில் தீவினையின் பயன்களை நுகர்ந்து துன்புற்று வந்தேன். நான் உன் குழந்தைகளில் ஒருவனுதலின் நீ என் துன்பத்துக்கிரங்கி உன் அருள் நோக்கை என் மீது செலுத்தி வந்தாய். தொடர்ந்து பல காலம் நீ என்னை நோக்கி வந்தாய்; என் கருநிறம் உன் கண்களிற்படிந்து நிலைபெற்று விட்டது - என்னும் பொருளுள்ள அம்பிகையின் துதியாகிய வடமொழி நூல் ஒன்றில் அமைந்துள்ள சுலோகம் ஒன்றை நினைவு கூர்வர் கவியரசு அவர்கள்.

வஞ்சனேன் - வஞ்சம் வேறு, நான் வேறு என்றின்றி வஞ்சகத்தாலே செய்யப்பெற்ற நான். வஞ்சகன் என்போன் நெஞ்சம் அறிந்த ஒன்றைச் சொல்லாலும் செயலாலும் மாறுபடச் சொல்லியும் செய்தும் ஏமாற்றுபவன். நம் அடிகள் உண்மையில் வஞ்சகராக இருந்திருப்பின் அதை மறைத்துத் தம் சொல்லால் மாறுபடக் கூறியிருப்பர். அவ்வாறுரையாமல் "***வஞ்சனேன்***" என்று வெளிப்படக் கூறியது, நேர்மையிலும் தூய்மையிலும் தலை சிறந்து நிற்கும் சிவபெருமான் திருமுன்பு தம்மியல்பு கூறும் அடிமைப்பண்புதோன்ற இழிகுணம் கொண்ட உலக மக்களின் குறையைத் தம்மேலேற்றிக் கூறியதாம். இதுபற்றி முன்னம் 44 -ம் திருப்பாடலின் கீழ் விரித்துரைத்தவை காண்க.

நின்னது - ''நினது" என்பது விரித்தல் விகாரத்தால் ***நின்னது*** என்ருயிற்று. அது என்ற ஆறனுருபு இரண்டாம் வேற்றுமைப்பொருளில் வந்த வேற்றுமை உருபு மயக்கம். ***நின்னை*** என்றவாறு.

மற்று ஓர் பற்று - உயிருக்குப் பற்றுகோடாகிய உன்னையன்றி உனக்குச் சமமான வேறு ஒரு பற்று.

பொய்ம்மையேன் - பொய்யொழுக்கம் உடையவன். முதலடியில் "***வஞ்சனேன்***" என்றதன் கீழுரைத்தவை ஈண்டும் பொருந்தும்.

கலந்தது பொய் அல்லது இல்லை - யான் பொய்யொழுக்கம் கொண்டவனுதலின் என் அன்பும் பொய்யாகும் என்றவாறு. பின்னரும் 94-ம் திருப்பாடலில் ''யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்" என்றருளுவது காண்க. மெய்யுடன் சிறிது பொய் கலந்தேனல்லேன். பொய்யுடன் பொய்யையே கலந்தேன் என்றவாறு.

நின் கழற்கணே வந்து கலந்த மெய்யன்பர் அன்பு - "*கழற்கணே*" - என்புழி. ஏகாரத்தைப் பிரித்து அன்பு என்பதுடன் புணர்த்து அன்பே என்று கொள்க. ஏகாரம் தேற்றம்.

"*வந்து*" - என்றும் செய்தெனெச்சம், "*கலந்த*" என்ற பெயரெச்ச வினை கொண்டு முடியும். *மெய்* என்பதை அன்பர்க்கு அடையாகக் கொண்டு "*கலந்த மெய்யன்பர் அன்பே*" என இயைத்துக் கொள்க. மெய்யன்பர்கள் தொடக்க முதல் மேற்கொண்ட சரியை முதலிய தவங்களின் பயன் இப்பொழுது அவர்கள் இறைவன் திருவடியை அடைவதற்கு வந்து பயனளித்தலை "*வந்துகலந்த*" என்றருளியவற்றாலறிக.

''நின் கழற்கணே வந்து மெய்கலந்த அன்பர் என்று கூட்டியுரைப்பர் திரு. முதலியாரவர்கள்.

அன்பர் அன்பு பொய்ம்மையேன் எனக்கும் வந்து ஆக வேண்டும் என்று கூட்டியுரைத்தார் திரு. கா.சு. பிள்ளையவர்கள்.

மெய்கலந்த அன்பர் - மெய்யின் கண்ணும் அன்பு கலந்தவர் என்றுரைத்தார் திரு. பாரதியாரவர்கள்.

எனக்கும் ஆகவேண்டும் - மெய்ம்மையான அன்பு இன்றி அஃதுடையான் போல நடித்த பொய்யனுன எனக்கும் இனி வேண்டுவது உண்மை அடியார்களின் மெய்யன்பேயாகும். அஃதிதுகாறும் எய்தப் பெற்றிலேன். இனி உன் அருள் நோக்கால் அதை யான் அடைய வேண்டும் என்றவாறு. ★

எனக்கும் - வஞ்சகனுகிய எனக்கும். உம்மை இழிவுசிறப்பு.

★ *வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு*
மருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொரு சிறி
தடிய னேற்கு மருளல் வேண்டு

இத்திருப்பாட்டில் இறைவனை "ஐய", "என் எம்பிரான்" "மைகலந்தகண்ணிபங்க" என்று மும்முறை விளிக்கின்றார். அவற்றிற்கேற்ப விண்ணப்பம் செய்து கொள்ளும் பொருள்களும் "நின்னது அல்லது இல்லை மற்றோர் பற்று"; "வஞ்சனேன் பொய் கலந்ததல்லதில்லை, ; "மெய் கலந்த அன்பர் அன்பு எனக்கும் வேண்டும்" என் மூன்றாக நிற்பன கண்டின்புறுக.

இத்திருப்பாடலில் "மற்றோர்பற்று இல்லை" என்றதால் வைராக்கியமும் அன்பு எனக்கும் ஆக வேண்டும்" என்றதால் பத்தி நிலையும் பெறப்பட்டுச் சதகம் நுதலிய "பத்தி வைராக்கிய விசித்திரம்" பெற்றும். அவ்வாறு வேண்டப்படும் அன்பு நின் கழற்கணே மெய் கலந்த அன்பர் அன்பு என்றருளியதால் பதிகம் நுதலிய "ஆனந்தத்தழுந்தல்" பெற்றும்.

78 "வேண்டு நின்க ழற்க ணன்பு
பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை
யாவ வென்ற ருளுநீ
பூண்டுகொண் டடிய னேனும் போற்றி
போற்றி யென்று மென்று
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின்வ ணங்கவே. எசு

நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே"
(நால்வர் நாள்மணிமாலை 20)

(இ -ள்)

தெய்வ அரசனே; நீ, நாயைப் போன்று இழிந்தவனுகிய என்னைப் பொய்யொழுக்கத்தை ஒழித்து, ஆட்கொண்டு, இரக்கக்குறிப்புத் தோன்ற ஆறுதல் மொழி கூறி அருள் செய்ய வேண்டும்; அடிமையாகிய யானும், அந்த அடிமைத்தன்மையை மேற்கொண்டும் பன்முறை இறந்தும் பிறந்தும், காத்தருள்க ; காத்தருள்க என்று மொழிந்தும், எக்காலமும் நின்னை வணங்குவதற்காக, நின் திருவடிக் கண்ணே மெய்ம்மையான அன்பே எனக்கு வேண்டுவதாகும்.

(வி -ரை)

மன்ன, நீ நாயினேனைப் பொய்ம்மை தீர்த்து ஆட்கொண்டு ஆவ என்று அருளு, அடியனேனும் பூண்டு கொண்டும், மாண்டு மாண்டு வந்து வந்தும், போற்றி போற்றி என்றும், என்றும் நின் வணங்க, நின் கழற்கண், மெய்ம்மை அன்பே வேண்டும் - என்று இத்திருப்பாடலை அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

மன்ன - ஒரு நாட்டின் குடிமகன் அந்நாட்டு அரசனையே அரசுரிமையில் வைத்து ஒழுகுவன். அவன் இறந்து வேறு நாட்டிற் பிறந்தாலோ; அன்றி அந்நாட்டு மன்னன் இறந்து அவன் மகன் அரசுரிமை எய்திஞலோ, அன்றிப் பகையரசன் அந்நாட்டைக் கவர்ந்தாலோ வேறு ஒருவன் அக்குடிமகனுக்கு மன்னனுவன். இஃதுலகியல். ஆனல் தெய்வ அரசனுகிய சிவபெருமான்; ஒரு மனிதன் எத்தனைப் பிறவி எடுத்து எங்கெங்குப் பிறக்கினும் அவனுக்கு மன்னனுகவே திகழ்வன். இதனை நினைந்தே நம் அடிகள் "மாண்டு மாண்டு வந்து வந்து நின் வணங்கவே" என்ருர். ஆதலின் ஈண்டுக் குறிக்கப் பெறுபவன் தெய்வ அரசனுகிய சிவபெருமானே ஆவன்.

நாயினேனை - நம் அடிகள், தம்மைப் பொய்ம்மை தீர்த்து ஆட்கொள்ள வேண்டுங்கால் தம் இழிவு குறிக்க "***நாயினேனை***" என்றும், அவ்விறைபணியை மேற்கொள்ளக் குறிப்பிடும் பொழுது "***அடியனேன்***" என உயர்த்தும் கூறியுள்ள முறை அறிந்தின்புறுக. நாய்பற்றி முன்னம் சிவபுராணம் 60 -ல் உரைத்தவை பார்க்க.

பொய்ம்மை தீர்த்து ஆண்டுகொண்டு - பால் வாங்கும் கொள்கலம் தூய்மையற்றதாக இருப்பின் பால் கெட்டுவிடும்; ஆதலின் முன்னம் அதைத்

தூயதாக்கிக் கொள்ள வேண்டும் நான் பொய்யொழுக்கமுள்ளவன். நீ பேரருள் வள்ளலாதலின் உன் வண்மை காரணமாக என் பொய்ம்மை நீங்கி நான் தகுதியுள்ளவனுவதற்கு முன்பே நீ என்னை ஆட்கொள்ள முற்படவும் கூடும். அவ்வாறன்றி என் பொய்ம்மையை நீக்கிப்பின் ஆண்டருள்க என்று விண்ணப்பம் செய்தவாறு.

ஆவ என்று அருளு. ***ஆவ*** - அஅ - இரக்கக்குறிப்பு இடைச்சொல்லின் இரட்டிப்பு. அங்ஙனம் இரக்கம் காட்ட வேண்டும் என்றது, செயலின் பயனினும் இன்சொல்லின் பயன் விரைவில் முற்பட்டு ஆறுதல் அளிக்கும் என்பது பற்றியாம். ***அருளு*** - ''அருளுக" என்னும் முன்னிலை வியங்கோள் ஈறுதொக்கு "***அருளு***" என நின்றது.

அடியனேனும் - ''நீ என்னை ஆண்டு கொண்டும் அருளுக; யானும் அவ்வடிமைத் தன்மையைப் பூண்டு வணங்க" என்றவாறு. உம்மை எச்சப் பொருளில் வந்தது.

பூண்டு கொண்டு - உன் திருப்பணியை அணிகலனுக அணிந்து கொண்டும். ''பூண்டு கொண்டும்" என்பதலிலுள்ள எண்ணும்மை தொக்கது.

மாண்டு மாண்டு வந்து வந்து - இப்பிறப்பிலேயே வீடு பேறு எய்துதற்கு என் வினைகளின் எச்சம் தடையாகுமாயின் அவ்வினைகளின் இருப்புத் தீரும் வரை நான் மீண்டும் மீண்டும் இறந்து இறந்து மீண்டும் மீண்டும் பிறப்பேன். ***வருதல்*** பிறத்தல். அப்பிறப்புகளில்;

போற்றி போற்றி என்றும் - என்னைக் காத்தருள்க; காத்தருள்க என்று விண்ணப்பம் செய்து.

என்றும் நின் வணங்க - எப்பொழுதும் உன்னை வழிபடுவதற்காக.

நின் கழற்கண் மெய்ம்மை அன்பே வேண்டும் - நின் திருவடிக்கண் மாருத உண்மை அன்பே வேண்டும்.

அரசனிடத்தில் குறையிருக்கும் குடிமகன் ஒருவன் முடிவான பெரும் பயனைக் குறிப்பிட்டு வேண்டுவன்; அஃதெய்த ஏதேனும் தடையிருப்பின் அதனிற் சிறிது குறைந்த அளவுள்ளதையேனும் தருதல் வேண்டும் என்று தெரிவித்துக் கொள்வன். அவ்வாறே ஈண்டு நம் அடிகள் இறைவனிடம் வீடு பேறு வேண்டியவர், தமக்கு அப்பக்குவம் இன்றெனின் இனிவரும் பிறவிகள் அனைத்திலும் இறைவன் திருவடிக்கண் மாருத மெய்யன்பை வேண்டுகின்ருர். ஒருமுறை இறைவன் திருவருள் கிடைத்துவிட்டால் அது

பின் வரும் பிறவிகளிலும் ஆன்மா. வழுவிப் புறம் சென்று விடாது காத்து வந்து முடிவில் முடிந்த பயனாகிய வீடு பேறு நல்கும்; ஆதலின் வீடுபேருகிய பயனை உறுதியாகப் பயக்கும் சாதனமாகிய மெய்யன்பை அருள வேண்டினர்.

ஈண்டு. 16-ம் திருப்பாடலில் ''ஊடகத்தே நின்று'' என்றதன் கீழ் எடுத்தாண்ட அரசுகள் தேவாரப் பாடல்களை நினைக.

இத்திருப்பாடலின் மூன்றும் அடியின் இரண்டாவது சீர் "டடிய" என்பது; ''டடிய்ய'' என்று திரு. முதலியாரவர்களால் பாடங் கொள்ளப்பட்டுள்ளது.

இத்திருப்பாடலில் ''மாண்டு மாண்டு. வந்து வந்து மன்ன நின் வணங்கவே'' என்றதனுல் சதகம் நுதலிய "பத்தி வைராக்கிய விசித்திரம்" பெற்றும்; நின் கழற்கண் அன்பு வேண்டும் என்றது அவ்வன்பு சோபான முறையில் வீட்டின்பந் துய்க்கச் செய்யும் என்பது பெற்றுப் பதிகம் நுதலிய "ஆனந்தத் தழுந்தல்" பெற்றும்.

79. வணங்கு நின்னை மண்ணும் விண்ணும்
வேத நான்கு மோலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று
மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன
வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க
என்கொ லோநி னைப்பதே எரு

(இ -ள்)

நெருங்கிய கொங்கைகளுள்ள உமையம்மையை ஒரு கூற்றிற் கொண்டவனே, நின்னையன்றி வேறு ஒரு மெய்ப்பொருள் இல்லாமையால் உன்னைப் பூவுலக வாசிகளும் மேலுலகவாசிகளும் வணங்குவர்; நான்கு மறைகளும் உன்னை அணுக முயன்று தோற்று ஓலமிட்டு இளைத்து நிற்கும்; அடியார்களாகிய நாங்களும் உன்னை வணங்கி விடமாட்டோம் என்று விண்ணப்பம் செய்யவும் வெளிப்பட்டு நின்று அருள்புரிவதற்கு மாருகத் திருவுள்ளம் கொள்வது என்னையே ?

(வி -ரை)

இத்திருப்பாடலை; இணங்கு கொங்கை மங்கை பங்க; மற்று ஓர் உண்மை இன்மையின் நின்னை, மண்ணும் விண்ணும் வணங்கும், வேதம் நான்கும் நின்னை எய்தல் உற்று ஓலமிட்டு வணங்கும், யாம் வணங்கி ''விடேங்கள்'' என்ன வந்து நின்று அருளுதற்கு நினைப்பது என்கொல் என்று அன்னுவயம் செய்து கொண்டு உரை காண்க.

இணங்கு கொங்கை- பருத்து ஒன்றுடன் ஒன்று நெருங்கியிருக்கின்ற கொங்கைகள். இஃது ஈண்டுப் பெண் என்ற அளவில் நின்றது.

மங்கை - பருவம் குறித்த தன்று.

பங்க - திருவருளை உன் உடம்பின் ஒரு பகுதியாகக் கொண்டவனே. நீ வந்து நின்று அருளுதற்குக் காலத்தாழ்வோ மறுப்போ செய்ய இயலாது என்பது குறிப்பு.

மற்றும் ஓர் உண்மை இன்மையின் - உன்னைத் தவிர வேறு ஒரு சத்தியப்பொருளாகிய கடவுள் இன்மையால் மண்ணும் விண்ணும் வணங்குவதற்கும் அடியார்களாகிய நாங்கள் உன்னைப் பற்றிக் கொண்டு ''இனி விட மாட்டோம்'' என்று கூறுவதற்கும் காரணம் குறித்தவாறு.

உண்மை - மெய்ப்பொருளாகிய முழுமுதற் கடவுளுக்கு பண்பாகுபெயராய் நின்றது.

நின்னை மண்ணும் விண்ணும் வணங்கும் - மண், விண் என்பன இடவாகு பெயர்களாக முறையே பூவுலகில் வாழும் மக்களையும் பூவுலகுக்கு மேலுள்ள எல்லா உலகங்களிலும் வாழும் தேவர் முதலிய விண்ணுலக வாசிகளையும் குறித்து நின்றன. மூவுலங்களில் பூவுலகுக்குக் கீழுள்ள நரகங்களில் வாழ்வோர் பெரும் தீவினையாளர்களாகி அவ்வினைகளின் பயன்களாகத் துன்பம் நுகர்பவர். ஆதலின் அவர்களுக்கு இறைவனை வணங்கும் நற்பேறு இல்லை. எனவே, அவர்களை விலக்கி மண்ணும் விண்ணும் மட்டும் கூறினர். இவர்களில் விண்ணுலக வாசிகள் பசு புண்ணியங்களையே மிகுதியாகச் செய்து அவற்றின் பயனாக இன்பம் நுகர்பவர்கள். போகம் துய்த்தலிலேயே பெரிதும் காலம் கழியத்தங்கள் பதவிகளுக்கு அசுரர் முதலியோரால் ஆபத்து வந்துழி மட்டும் சிவ நினைவு வரப்பெறுவர். மண்ணுலகவாசிகள் இரு வினைகளையும் கலந்து செய்ததன் பயனாக இன்பம் துன்பம் இரண்டும் நுகர்வர். பதி புண்ணியப்பயனாக

சிவபரஞ்சுடரை வழிபட்டு வீடுபெறும் வாய்ப்புள்ளவர். எனவே அவர்களை முன் வைத்து "**மண்ணும் விண்ணும்**" என்றருளினர்.

வேதம் நான்கும் நின்னை எய்தலுற்று ஓலம் இட்டு வணங்கும் - உலகம் "சொற் பிரபஞ்சம்" "பொருட் பிரபஞ்சம்" என்ற இருகூற்றில் அடங்கும். மேலே "மண்ணும் விண்ணும்" என்றது பொருட் பிரபஞ்சம் ஈண்டு "**வேதம் நான்கும்**" என்றது சொற்பிரபஞ்சம். நான் மறைகளும் சிவபெருமான் பெருமையை அளவிட்டுக் கூறமுயன்று அம்முயற்சியில் தாம் கண்ட கீழ்ப்பட்ட தெய்வங்களை வருணித்துப் பரம் பொருள் இஃதன்று இஃதன்று என்று கழித்துக் கொண்டே சென்று முடிவில் சிவபரம் பொருளை அடைய முடியாமல் களைத்து நின்று ஓலமிட்டன என்றவாறு. முன்னம் சிவபுராணம் 34 -35 -ல் "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க. "அல்லை யீதல்லை யீதென மறைகளும் அன்மைச் சொல்லினுல் துதித்து இளைக்கும்" எனவரும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணப் பாடலும் நினைக. **ஓலம்** - முறையிட்டுத் துதித்தல். **வணங்கும்** - நாவற்றி இளைக்கும்.

யாம் வணங்கி விசேடங்கள் என்ன. யாம் - அடியார்களாகிய நாங்கள். நம் அடிகள் ஏனைய அடியார்களையும் உளப்படுத்தி "யாங்கள்" என்ருர். அடியார்கள் மேற்குறித்த மண்ணுலகவாசிகளுள் அடங்குவர். ஆயினும் அவர்கள் விண்ணுலக வாசிகள், ஏனைய மண்ணுலக வாசிகளின் தகுதிகளினும் சிறந்த தகுதியுள்ளமை பற்றித் தனியே பிரித்துக் கூறினர். அவர்கள் உண்மைப் பொருள் சிவபெருமானே என்பதை அறிந்து வணங்கிய அளவில் நின்றனர். அவ்வணக்கங்களும் காமியப்பலன் கருதிய வழிபாடுகளாம். கோரியவை கிட்டியதும் அவர்கள் இறைவனை விட்டு விட்டுத் தாங்கள் பெற்றதில் இன்பம் துய்ப்பர். ஆனுல் அடியார்களோ வணங்கியதுடன் ஒழியாமல் இறைவனைப் பற்றிக் கொண்டு "**யாம் விடேங்கள்**" என்பர் என்பன நினைக.

யாமும் என்னவும் என்பவற்றிலுள்ள உம்மைகள் தொக்கு நின்றன. **விடேம்** என்னும் தன்மைப் பன்மை முற்றுவினை "**கள்**" என்னும் விகுதி மேல் விகுதியைப் பெற்றது.

வினைச் சொற்களில் படர்க்கைக்கும், முன்னிலைக்கும் பன்மை குறிக்கும் விகுதிகளின் மேல் மேலும் "கள்" என்னும் ஒரு விகுதி கூட்டியுரைத்தல் இலக்கண நூல்களில் காணப்படுகின்றது. இதை விகுதி

மேல் விகுதி என்று இலக்கணம் அமைதிப்படுத்துகின்றது. ஈண்டு "**விடேம்**" என்றது தன்மைப்பன்மை. அதன் மீது ''கள்" என்று மீண்டும் ஒரு பன்மை விகுதி புணத்து "**விடேம்கள்**" என்ருர். அதற்கான காரணம் மேலே உரைத்தாம். இவ்விதம் தன்மைப்பன்மை மேல் மீண்டும் ஒரு "**கள்**" விகுதி புணர்த்து விகுதிமேல் விகுதியாக்குதல் மிக அரிய ஆட்சி.

வந்து நின்று அருளுதற்கு - வெளிப்பட்டுத் தோன்றி நின்று அருள் புரிவதற்கு எங்கும் நிறைந்துள்ள சிவபெருமான் மெய்யடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்கள் நினையும் வடிவில் வெளிப்பட்டு அருள்புரிதலைப் பெரியபுராணம் முதலியவற்ருல் அறியலாம். அடியார்களாகிய நாங்கள் திரிகரணங்களும் ஒன்றுபட்டு வணங்கியும் நீ வெளிப்படாமைக்குக் காரணம் யாது என்றவாறு.

நினைப்பது என் கொல் - என்று மாற்றிக் கொள்க. நீ வெளிப்படாமைக்குக் காரணமான உன் திருவுள்ளத்தில் கொண்டுள்ள எண்ணம் யாது? என் வினையெச்சம் இதற்குக் காரணமாயின் இப்பொழுது நான் அடியார்களுடன் சேர்ந்து பற்றிக் கொண்டு விடாமலிருப்பது உன்னை மட்டுமன்று; உன் பங்கிலுள்ள உமையம்மையையுமுடன் சேர்த்தே பற்றிக் கொண்டுள்ளேன். அவள் உன் திருவருளின் உருவகம். அந்தத் திருவருள் என் வினையெச்சங்களைப் போக்கி என்னைத் தகுதியுள்ளவனுக்கும் என்றவாறு.

இத்திருப்பாடலுக்கு இவ்வாறன்றி "**இணங்கு**" என்பதை "நினைப்பது என்கொல்; இணங்கு" என்று கூட்டி எனக்கு அருள்புரிய இணங்குவாயாக" என்று உரைத்தனர் முன்னுரையாளரில் சிலர். அவ்வாறு உரைப்பின் "கொங்கை" என்பது அடையின்றி வாளா நின்று அம்பிகையின் நித்திய இளமையை உணர்த்தாது ஒழியும். "**மங்கை**" என்ற சொல் இளமையைக் குறிப்பதாகக் கொள்ளின். "**கொங்கை**" என்ற சொல் வறிதே நிற்கும். ஆதலின் அஃதுரையன்று என ஒதுக்குக.

யாம் - என்பதை நம் அடிகளின் வாக்காக உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகக் கொள்ளாமல் ஏனைய அடியார்கள் கூற்ருகக் கொண்டு ''யாம் வணங்கி (நீ எய்தப் பெருமையால்) எய்தக் கூடிய வேறு ஒரு பொருளைப் பற்றுவோம் என எண்ணி மன உறுதியை நெகிழ விடமாட்டோம்" என்று சொல்லும் (அவர்களுக்கு) அருள் செய்ய அன்னை சம்மதிப்பாள்; யானும் அங்ஙனம் பற்றிக் கொண்டு விடேன் என்ருல் எனக்கும் அருள் செய்யச் சம்மதிப்பாள். குணமாகிய அவள் அருள் செய்ய முந்தும் பொழுது

குணிப்பொருளாகிய நீ மாறுபட முடியாதே என்று பொருள்பட உரைத்தார் முன் உரையாசிரியரில் ஒருவர்.

இத்திருப்பாடலில் "வணங்கியாம் விடேங்கள்" என்றருளியுள்ளதால் சதகம் நுதலிய "*பத்தி வைராக்கிய விசித்திரம்*" பெற்றும். அந்நெறியே பற்றி ஒழுகின் முடிவில் வீட்டின்பம் நுகரலாம் என்பது பெறப்படலின் பதிகம் நுதலிய "*ஆனந்தத் தழுந்தல்*" பெற்றும்.

80 நினைப்ப தாக சிந்தை செல்லும்
எல்லை யேய வாக்கினுல்
தினைத்த னையு மாவ தில்லை
சொல் லாவ கேட்பவே
அனைத்து லஃகு மாய நின்னை
யைம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த
தெந்தை பாதம் எய்தவே எசு

(இ -ள்)

என் தந்தையே; என் மனம் செல்லும் அளவும் நினைவதாக; சொல்லுதற்குரியன எல்லாம் கேட்கப்படுவனவே; (ஆதலின்) பொருந்திய சொற்களால், தினையளவும் பயன் விளைவது இன்று; உலகங்கள் எல்லாம் ஆய நின்னை; ஐம்பொறிகளும் அறியும் ஆற்றல் இல்லாதன ஆகும்; நின் திருவடி அடையஎண்ணில்; அத்திருவடி எத்துணை எத்துணை அளவுடையதோ, எவ்விடத்ததோ (அறிந்திலேன்).

(வி -ரை)

இத்திருப்பாடலை; "எந்தை, சிந்தை செல்லும் எல்லை நினைப்பதாக; சொல்லலாவ கேட்பவே; ஏய வாக்கினுல் தினைத் தனையும் ஆவது இல்லை; அனைத்து உலகுமாய நின்னை; ஐம்புலன்கள் காண்கிலா; (இங்ஙனமாதலின்) பாதம் எய்த அது எனைத்து எனைத்து; எப்புறத்தது - என்று அன்னுவயப்படுத்திக் கொண்டு பொருள் காண்க.

எந்தை - உன்மைந்தனுகிய சிறியேனுல் செய்யப்படும் பணி சிறியதாயினும் தந்தையாகிய நீ மனம் உவந்து ஏற்றுக் கொள்ளல் இயல்பு என்ற குறிப்பினது.

சிந்தை செல்லும் எல்லே நிணைப்பது ஆக - மனம் மொழி மெய் என்ற மூன்று கரணங்களில் மனமே பந்தத்துக்கும் வீட்டுக்கும் சிறந்த ஏது. அதன் தொடர்பு இன்றேல் மொழிகள் வெற்றுரையா யொழியும். பொறிகளும் புலனுகர்ச்சியின்றி வறியனவாம். மனம் பொறிகள் வாயிலாகப் புறத்தே சென்று பொருள்களை அறிவதுடன் உண் முகமாக நின்று கண்டவற்றையும் கேட்டவற்றையும் நினைந்து செயலாக்க உந்தும். சிவாகமங்களின் வாயிலாகச் சிவபெருமான் திருவுருவங்களைக் கேட்டும், புறத்தேயுள்ள திருக் கோயில்களில் சிவாக முறையில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவங்களைக் கண்டும் அவற்றை உள்ளத்தில் எழுந்தருளச் செய்து தியானம் செய்தும் அந்தரியாக பூசை புரிந்தும் வழிபடுவதைச் சகுணுே பாசனை என்பர். இந்த உருவ வழிபாடு முதிர முதிர நினைத்தற் கருவியாகிய சித்தவிருத்தி ஒடுங்கி முடிவில் மனுேலய சித்தி உண்டாகும். அஞ்ஞான்று உயிர் சிவபெருமானின் உண்மை இயல்பை உணர்ந்து இன்புறும். அந்நிலையை நிர்க்குணுேபாசனை என்பர். அஃது அருவ வழிபாடாகும். சகுணுேபாசனை அளவு மட்டுமே மனம் செல்லும். அதனையே ஈண்டு "***சிந்தை செல்லும் எல்லே நிணைப்பது ஆக***" என்ருர்.

சிவபெருமானின் உண்மை இயல்பை மனம் காண இயலாது என்று கொண்டு இயன்ற அளவும் அதைச் செலுத்தா தொழிதல் பெரும் குற்றமாம். இதனையே;

திருச்சிற்றம்பலம்

செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசா லுரைமின்கள் வாய்மையை
இல்லே யெனினும் பெரிதுள னெம்மிறை
நல்ல வரநெறி நாடுமி னீரே

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 2103)

என்று நம் திருமூல நாயனுரும் அறிவுறுத்தல் காண்க.

நம் அடிகள், சிந்தை, தம் வயத்தன்றிச் செல்லும் இயல்பினது என்பதைக் குறிக்கவே "செல்லும் எல்லை சிந்தையால் நினைப்பேன்" என்று தம்மை வினை முதலாகவும் சிந்தையைக் கருவியாகவும் கூறாமல் நினைப்பதற்கு வினை முதலாக மனத்தையே கூறினர். எனினும் அதன் செலவு உலகியலை விடுத்துச் சிவபெருமானை நோக்கிச் செல்வது திருவருளின் இயக்கத்தாலாகும்.

சொல்லலாவ கேட்பவே - நாம் சொல்லுவன எல்லாம் நூல்கள் வழியும் ஆன்றோர் வாயிலாகவும் கேட்டறிந்தனவே. அவற்றைக் கூறிய நூல்களும் ஆன்றோர்களும் சிவபெருமானை நேரில் கண்டறியாமல் தாங்கள் கற்ற நூல்களிலும் தங்களுக்கு உரைத்த ஆன்றோர் மொழிகளிலும் அறிந்தவையே.

ஏய வாக்கினல் தினைத்தனைத்தும் ஆவதில்லை - ஆதலின் திரிகரணங்களில் மற்றொன்றாகிய மொழியினால் சிறிதும் பயனில்லை. மெய்யுணர்வுக்கு மட்டுமே புலப்படுவன் என்பது கருத்து. வாக்கினல் ஆவதில்லை என்றதால் சிந்தை ஓரளவேனும் சொல்லும் என்பது பெற்றும். அது சகுஞேபாசனை வரையும் என்க. ***தினைத்தனை*** - தினையளவு. ***தினை*** - சிறுமை குறிக்கும் ஓர் அளவை.

அனைத்துலகும் ஆய நின்னை - இறைவன் உலகெலாம் ஆகி வேருய், உடனுமாய் நிற்கும் இம்மூவகை நிலைகளுள்ளும், வேறு ஆதல் உடன் ஆதல் ஆகிய இரண்டும் பொறிகளால் அறியப்படாதன. உலகு எல்லாமாகி நிற்கும் நிலை அறியப்படுவது. அவ்வளவிலாவது ஐம்பொறிகளாலும் அவனை நுகர்ந்து இன்புறலாமே, எனின்; அஃதும் இயலாது என்பார். "***உலகம்***" என்பது உயிரை உணர்த்தும். கலப்பினல் உடலில் உயிர் போல, அவ்வுயிர்களாகவே நிற்பன். அவன், அவ்வுயிர்களை இயக்கி அவற்றின் உள்ளும் புறமும் எள்ளில் எண்ணெய் போல விரவி நிற்பன். இவ்விறை இயல்பை மாயா காரியமாகிய புற உலகில் வைத்து எங்ஙனம் உணர முடியும்?

ஐம்புலன்கள் காண்கிலா - ஈண்டுப் புலன்கள் என்றது பொறிகளைக் குறிக்கும். முதலடியில் "***வாக்கு***" என்றது கன்மேந்திரியங்களை. ஈண்டு ஐம்புலன்கள் என்றது ஞானேந்திரியங்களை. இவை புறக்கருவிகளுக்கும் மனம் அகக்கருவிகளுக்கும் உபஇலக்கணம். எனவே, இறைவன் இவ்விருவகைக் கருவிகளுக்கும் எட்டாதவன் என்றவாறு.

பாதம் எய்த - இறைவனே ! நின் இயல்பு முற்றும் அறிய இயலாதது. ஆயினும் நின் திருவடிகளுக்கு அண்மையிலேனும் நண்ணலாமே எனின்; ***எந்தைபாதம் எய்த நினைப்பதாக சிந்தை*** - என்று கூட்டியுரைப்பர் கவியரசு அவர்கள். ***எய்த*** - நெருங்க. வினையெச்சம் தொழிற்பெயர் தந்து நின்றது.

அது எனைத்து எனைத்து - அடுக்கு அடியின் அளவிட்டறிய முடியாத பெருமையைக் குறித்து நின்றது.

எனைத்து என்பது இப்பொருளில் வருவதை,

'' எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்

(திருக்குறள் 144)

என்ற பொய்யா மொழியாலும் அதற்குப் பரிமேலழகர் செய்த உரையாலும் அறிக.

எப்புறத்தது - இஃது அடியின் சென்றடைய முடியாத சேய்மையைக் குறித்து நின்றது. "பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்" (திருவெம்பாவை 10) என்று நம் அடிகளே பின்னர் அருளிச் செய்வது நினைக.

சிவபெருமான் திருவடிகளின் அகலமும் நீளமும் அளவிடவெண்ணுதன என்பதை;

திருச்சிற்றம்பலம்

"எழுவா யிறுவா யிலாதன வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநர கக்குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன மிக்கவன்போ
டழுவார்க் கமுதங்கள் காண்கவை யாற னடித்தலமே "

(திருமுறை 4 - 92 - 5)

" உரைமாலை யெல்லா முடையவவ்வடி
உரையா லுணரப் படாதவடி
வரைமாதை வாடாமை வைக்கும்மடி
வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும்மடி

அரைமாத் திரையி லடங்கும்மடி
அகல மளக்கிற்பா ரில்லாவடி
கரைமாக் கலிக்கெடில நாடன்னடி
கமழ்வீரட் டானக் கபாலிய்யடி
திருச்சிற்றம்பலம்
(திருமுறை 6 - 6 - 7)

எனவரும் அரசுகளின் அமுதவாக்குக்களிற் காண்க.

இத்திருப்பாடலில் இரண்டாம் அடியின் இரண்டாம் சீர் "ஐயு" எனந் தேமாவாகக் கொள்க. மூன்றுமடியின் இரண்டாம் சீர் "லஃகு" என்று விரித்தல் விகாரம் பெற்றது.

இந்தத் திருப்பாடலில் உயிர் கன்மேந்திரிய ஞனேந்திரியங்களின் துணையைக் கொண்டு இறைவனை அடைய முடியாது என்று கூறி அவன் திருவருளின் துணையை வேண்டி இரங்குவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; எல்லையற்ற திருவடிகளை எய்தி வீட்டின்பம் நுகர விரும்புவதால் பதிகம் நுதலிய "**ஆனந்தத்தழுந்தல்**" பெற்றும்.

81. எய்த லாவ தென்று நின்னை
யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி
மற்றொ ருண்மை யின்மையிற்
பைத லாவ தென்று பாது
காத்தி ரங்கு பாவியேற்
கிஃத லாது நின்க ணொன்றும்
வண்ண மில்லை யீசனே.

(இ -ள்)

எங்கள் இறைவனே, (யான்) நின்னை அடைந்து இன்புறுவது எப்பொழுது; இவ்வஞ்சகனுக்கு நின் பற்றுக்கோடு அல்லாமல் உய்தி கூடுதற்குப் பிறிதொரு மெய்யாகிய பற்றுக் கோடு இல்லாமையால் (கை விடின்) துன்பம் விளையும் என்று திருவுள்ளம்பற்றிக் காத்து இரங்கி அருள்வாயாக. தீவினையாளனாகிய எனக்கு இங்ஙனம் நீயே இரங்கி அருளுதலாகிய இஃதல்லாது நின் திருவடி நிழலில் இயையும் வகை வேறு இல்லை.

(வி -ரை)

இத்திருப்பாடலை, 'எம்பிரான், நின்னை எய்தலாவது என்று, இவ்வஞ்சனேற்கு, உன்கண் அன்றி உய்தல் ஆவது, மற்று ஓர் உண்மை இன்மையின், பைதலாவது என்று, பாதுகாத்து இரங்கு ஈசனே, பாவியேற்கு ஈது அலாது நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை - என்று அன்னுவயப்படுத்திக் கொண்டு பொருள் காண்க.

எம்பிரான் - எம்மை ஆட்கொள்ளும் தலைவன். திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்டு ஏனைய அடியவர்களுடன் கூட்டினுய் ; ஆதலில் எங்கள் எல்லோருக்கும் தலைவன் என்றவாறு. *பிரான்* - பிரியமுள்ளவன்.
ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

எம்பிரா னெனக்கமுத மாவானுந் தன்னடைந்தார்
தம்பிரா னுவானுந் தழலேந்து கையானுங்
கம்பமா கரியுரித்த காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம புரத்துறையும் வானவனே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 2 -40 -1)

எனவரும் பிள்ளையார் திருவாக்கு நினைக.

நின்னை எய்தலாவது என்று - திருப்பெருந்துறையில் பிரிந்த உன்னை நான் மீண்டும் அடைவது எப்பொழுது. **எய்துதல்** ஆகிய வினையையும், **என்று** என்ற காலக் குறிப்பையும் செயப்படு பொருளாகிய **நின்னை** என்பதன் முன் கூறினுர். அடையப்பட்ட பொருள் துணியப்பட்டதால் அதை ஈற்றில் வைத்துத் துணியப்படாத ஏனைய இரண்டையும் முன்னர் வைத்து அவற்றில் விரைவு தோன்ற "**எய்தலாவது என்று நின்னை**" என்று கூறினுர். *எய்தல்* - அல் ஈற்றுத் தொழிற் பெயர். *ஆவது* - உண்டாவது.

இவ்வஞ்சனேற்கு - இகரச் சுட்டு இழிவு குறித்து நின்றது. *வஞ்சன்* - 77-ம் திருப்பாடலில் ''வஞ்சனேன்'' என்றதன் கீழுரைத்தவை காண்க.

உண்கண் அன்றி உய்தலாவது - பற்றுக்கோடு உன்னையல்லாமல். **கண்** - பற்றுக்கோடு என்னும் பொருளில் வந்தது. உலக வாழ்க்கைக்கு ஆதரவாகக் கருதப்படுவன பல. அவை எல்லாம் அப்பிறவியில் தாங்கும் உடல் பற்றியனவாம். உடம்பு நீங்கின் அவையும் நீங்குவன; இடையில்

நீங்குவனவும் உள; இறைவன் ஒருவனே உயிருக்குப் பற்றுக் கோடாக நின்று உய்தி தருபவன். **உய்தல்** - உய்வதற்குத்துணையாவது; வழியாவது. **ஆவது** - இடைச்சொல்.

ஈண்டு ;

" தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசா லக்கோலம்
வஞ்சனை பொறாமைலோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்மல பாண்டமோ
வாஞ்சனை யிலாதகனவே
எந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவுமூழ்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும் வகை என்கொலோ
தேடரிய சத்தா கியென்
சிந்தைமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே"

(தாயுமான சுவாமிகள் 12- தேசோமயானந்தம் -3)

என்னும் ஆன்றோர் அமுதவாக்கு நினைக.

மற்று ஒர் உண்மை இன்மையின் - ஆகவே, வேறு ஒரு பற்றுக் கோடான சத்தியப் பொருள் இல்லாமையினால். **உண்மை** - மெய்ப்பொருள். வஸ்து என்பர் வடநூலார். ஈண்டுப் பாண்பாகுபெயராக இறைவனைக் குறித்து நின்றது.

பைதல் ஆவது என்று - **பைதல்** - துன்பம். **ஆவது** - விளைவது. நம் பற்றுக் கோடு இல்லாதொழியின் இவனுக்குத் துன்பம் உண்டாகும் என்று கருதி. **பைதல்** - பையன், பயல். இளமை குறித்து நின்றதாகக் கொண்டு அறியாப் பாலகன் என்று இரங்கி அருளுக; என்பர் கவியரசு அவர்கள்.

பாதுகாத்து இரங்கு - இரங்கிப் பாதுகாத்து அருள் செய்க என்றவாறு. இரக்கத்துக்குக் காரணம் நம்மையன்றி வேறு பற்றுக் கோடான மெய்ப் பொருளற்றவன் என்பதும் அறியாப் பாலகன் என்பதும், துன்பமுறுவான் என்பதும் என்க.

பாவியேற்கு - பாவியேன் என்றது துன்ப விளைவுக்குக் காரணம் காட்டியவாறு.

இ:.து அலாது நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லையே - இஃது உயிர்கள், இறைவன் திருவருளாகிய அமுதத்தை ஏற்றுக் கொள்வதற்கான கொள்கலனுன தம்மைத் தூய்மைப்படுத்துக் கொள்வது. அது தவமுயற்சியால் அடைவதாகும். வீடுபேறு எய்துதற்கு இறைவன் பேரருளே சிறந்த காரணம். இவ்வுண்மையையே ஈண்டுக் கூறுகின்ருர். ***இ:.து*** - இறைவன் திருவருளைச் சுட்டி நின்றது. ***ஒன்றுதல்*** - இரண்டறக் கலத்தல். ***வண்ணம்*** - வழி - ***ஏ*** - ஈற்றசை.

இஃதலாது என்பது திரு. மு. அருணசலம் M.A., அவர்கள் கொண்ட பாடம். இது சிறப்பாயிருத்தலின் மூலத்தில் இவ்வாறே பதிப்பித்தாம். ***ஈ.தலாது*** என்பதும் பாடம்.

இத்திருப்பாட்டில் "***எய்துதல்***" "***உய்தல்***" "***ஒன்றுதல்***" என்ற மூன்றும் உயிர்களுக்கு வேண்டுவனவான செயல்கள். ***எய்துதல்*** - அரிய தவம் கிடந்து இறைவன் அண்மையை அடைதல். இது சரியையாலாவது. ***உய்தல்*** - இறைவனை அகத்தும் புறத்தும் வழிபட்டுப் பற்றறுத்துச் சிவப்பேற்றுக்குரிய தூய்மை பெறுதல். இது கிரியையாலும் யோகத்தாலும் கிட்டுவதாகும். ***ஒன்றுதல்*** - இறைவனுடன் இரண்டறக் கலந்து வீட்டின்பம் நுகர்தல். இது ஞானத்தால் பெறுவதாகும். இறைவன் இத்தவம் முயலும் உயிர்களுக்குக் காலதத்துவமாக நின்று ***எய்துதற்கும்*** பற்றுக் கோடாக நின்று ***உய்வதற்கும்*** திருவருளாக நின்று ***ஒன்றுதற்கும்*** உதவுவன் என்று தொகுத்துரைப்பது கதிர்மணி விளக்கம்.

இத்திருப்பாடலில் "நின்னை எய்தலாவது என்று" கூறி இரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்ரும்; திருவடிகளில் "ஒன்றும் வண்ணம்" வேண்டுவதால் பதிகம் நுதலிய "***ஆனந்தத்தழுந்தல்***" பெற்ரும்.

82. ஈச னேநீ யல்ல தில்லை
யிங்கு மங்கு மென்பதும்
பேசி னேனொர் பேத மின்மை
பேதை யேனெ னெம்பிரான்
நீச னேனை யாண்டு கொண்ட
நின்ம லாவொர் நின்னலால்
தேச னேயொர் தேவ ருண்மை
சிந்தி யாது சிந்தையே எஅ

(இ-ள்)

தலைவனே; இவ்வுலகத்தும் மறு உலகத்தும் தலைமைப்பொருள் நீ அல்லாமல் பிறிதொன்றில்லை என்பதையும்; உயிர் இரண்டற்றுக் கலக்கும் வீட்டு நிலையையும்; அறிவற்ற ஒருவனாகிய நான் பாராட்டிப் பேசியது உண்டு; எனக்குச் சிறப்புரிமையுடைய எங்கள் தலைவனே; இழிந்தவனாகிய என்னை; ஆளாகக் கொண்ட தூயவனே; ஞானப்பேரொளிப் பிழம்பாக உள்ளவனே; ஒப்பற்ற நின்னையல்லாமல் அறிதற்குரிய தெய்வம் பிறிதொன்று உள்ளது என்பதை என் மனம் நினையாது.

(வி-ரை)

இத்திருப்பாடலை, "ஈசனே, இங்கும் அங்கும் நீ அல்லது இல்லை பேதம் இன்மை; ஓர் பேதையேன் பேசினேன்; என் எம்பிரான்; நீசனேனை ஆண்டு கொண்ட நின்மலா; தேசனே; ஓர் நின் அலால் ஓர் தேவர் உண்மை சிந்தை சிந்தியாது - என்று அன்னுவயப்படுத்திக் கொண்டு பொருள் காண்க.

ஈசனே- செல்வமும் அதிகாரமும் கொண்ட தலைவனே. முன்னம் சிவபுராணம் 11-ல் "ஈசன்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

இங்கும் அங்கும் நீ அல்லது இல்லை என்பதும் - இம்மையிலும் மறுமையிலும் உன்னையல்லாது ஈசத்துவம் உடைய பிறர் இல்லை என்பதையும்.

இங்கு - இப்பிறப்பில் வாழும் பூவுலகம். **அங்கு** - மறு பிறப்பில் வாழும் விண்ணுலகம். **"இல்லை"** - என்ற முற்றுக்கு ஈசத்துவம் உடைய பிறிதொரு மெய்ப்பொருள் வினைமுதல். "நீயே உள்ளாய்" என்பதை விட "அல்லது இல்லை" என்றது தெளிவின் துணிவை வலியுறுத்திற்று.

பேதமின்மை உயிர், பாசம் ஒழிந்து இரண்டறக் கலந்து நிற்கும் வீட்டு நிலே. ***பேதம்*** வேறுபாடு.

இப்பகுதிக்கு இவ்வாறன்றி ***"அங்கும்"*** என்றது வீட்டுலகத்தையும் அடக்கிக் கூறியது என்றும், **பேதமின்மை** என்றது திருமால் முதலிய ஏனைய தேவர்களுக்கும் சிவபெருமானுக்கும் பேதமின்மை என்றும் உரைத்தனர் முன்னுரையாளர்களில் சிலர். அவ்வாறு பேதமின்மை பேசியதற்குக் காரணம் அடியேன் பேதையேனுயுள்ளமை என்பது அவர்கள் கூற்று. ஏகநாயக வழிபாட்டில் திளேத்து நின்று உலகரையும் அதில் நம் அடிகள் ஆற்றுப்படுத்திய உண்மையைத் திருவாசகம் திருக்கோவையார் இரண்டிலும் பரக்கக் காணலாம். ஆதலின் அஃதுரையன்று என ஒதுக்குக.

ஓர் பேதம் இன்மை- சிறிது கூட வேற்றுமை இன்மை. ***பேதமும்*** என்று இழிவு சிறப்பும்மையும் ***இன்மையும்*** என்ற எண்ணுமையும் தொக்கி நின்றன.

ஓர் பேதையேன் பேசினேன். பேசினேன் - அறிந்தேன். பேசியது, இம்மை, மறுமை, வீடுகளேப் பற்றிய உண்மைகளும் அம்மும்மைக்கும் உரிய தலேவன் நீயே என்பதும். பேதையாக இருந்தும் பேசியது நான் மறைகளிலும் சிவாகமங்களிலும் அவற்றை அறிந்தது காரணமாக.

ஓர்- என்றது குறுக்கல் விகாரம் பெற்று ***ஓர்*** என நின்றது.

இதனே,

பற்பல பொருளா யுள்ள பாசமு மதனே மேவி
உற்பவ பேதமான உடம்புயி ரொடுங்கு மாறும்
அற்புத புத்தி முத்தி யளித்தரு ளாலே மேலாந்
தற்பர னடாத்து மாறும் உணர்ந்தனர் சைவ நூலில்

(திருவாதவூரடிகள் புராணம் - மந்திரிச் சருக்கம். 19)

எனவரும் நம் அடிகள் வரலாற்றில் காண்க.

என் எம்பிரான்- இம்மைப் பிறவியை ஒழித்து வீட்டுலகில் விருப்பம் விஞ்சி நிற்கும் குறிப்புத் தோன்ற ***என் எம்பிரான்*** என்று சிறப்புரிமை பாராட்டிக் குறித்தார். இம்மைக்கு வேண்டுவது புகழ். மறுமையில் கிட்டுவது சுவர்க்க இன்பம். அஃது அறத்தால் கிட்டுவது; வீட்டுலகம் ஞானத்தாலடைவது.

இவ்வுண்மையை;

" நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்

(திருக்குறள் 1072)

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு உரைகண்ட பரிமேலழகர்; இம்மை மறுமை வீடுகட்குரியவாய புகழற ஞானங்கள் என்று கூறுவது காண்க.

நம் அடிகள் இம்மைக்கு வேண்டுவதான புகழையும் மறுமையில் எய்துவதாகிய புரந்தரன் மாலயன் வாழ்வுகளையும் வேண்டாமையை;

திருச்சிற்றம்பலம்

**வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார் தமைநாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன்மன்னு
திருப்பெருந்துறை யிறைதாள்
பூண்டேன்புறம் போகேனினிப்
புறம்போக லொட்டேனே**

(திருவாசகம் 510)

**" கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொட்ல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே"**

(திருவாசகம் 6)

திருச்சிற்றம்பலம்

எனவரும் அவர் வாக்குக்களாலே காண்க.

நீசனேனை ஆண்டுகொண்ட நின்மலா. நீசன் - பாசப்பிணிப்பால் இழிந்தவன். ஆண்டவன் திருமுன்பு அடிமை தன்னைக் கூறிக்கொள்ளும் முறையை உலகுக்கு அறிவுறுத்தவாறு. ***ஆண்டுகொண்ட*** - ஆளாக ஏற்றுப் பணி கொண்ட. ***நின்மலன்*** - இயல்பாகவே பாசங்களினீங்கியவன். அவனே உயிர்களின் பாசத்தை நீக்கத் தகுதியுள்ளவன் என்ற குறிப்பு.

தேசன் - ஞானமாகிய பேரொளிப் பிழம்பாக உள்ளவன். தேவர்களும் ஒளி உடம்பினர். அதனுல் அவர்களேயும் பரம்பொருளாகக் கருதுவாரும் உளர். ஆனுல் பேரொளிப் பிழம்பாக உள்ள நின்னையல்லால் என் உள்ளம் வேறு எவரையும் முழுமுதற் பொருளாகக் கருதாது என்ற குறிப்புத் தோன்றத் **தேசனே** என்று விளித்தார்.

ஓர் நின் அலால் . ஓர் - ஒப்பற்ற - **ஓர்** - என்ற சொல் **ஓர்** என நின்றது குறுக்கல் விகாரம்.**நின்அலால்** - முன்னம் 6-ம் திருப்பாட்டில் "பிறதெய்வம்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

ஓர் தேவருண்மை - ஓர்தல் - அறிதல். நூலறிவாலும் அனுபவ உணர்வாலும் அறிதற்குரிய கடவுள் பிறிதொன்று உள்ளதாக. "ஓர்தல்" என்ற தொழிற்பெயர் குறுக்கல் விகாரம் பெற்று விகுதி குன்றி வினைத்தொகையாக நின்றது.

சிந்தை சிந்தியாது - என்மனம் உன்னையன்றி வேறு ஒரு கடவுள் இருப்பதாக நினையாது.

இத்திருப்பாடலில், நம் அடிகள் தம் மனம் மொழி, மெய்களால் இறைவன் திருத்தொண்டில் ஈடுபட்டிருந்தும் தம் தவமுயற்சியில் குறைவுள்ளது என்று கருதுவதால் அதை நிறைவாக்க"இனி உன் திருவருளே வேண்டுவது" என்பதும் குறிப்பெச்சமாகக் கொள்ள உள்ளன.

இத்திருப்பாடலில் நம் அடிகள் தம் அகப்புறக் கரணங்கள் இறைவனையே பற்றி நிற்றலைக் கூறுவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும்; "எந்தைநின்னை எய்தலுற்று இருப்பனே" என்பதால் வீட்டின்பம் வேட்டல் குறிப்பாலுணர்த்தியது. இதனுல், பதிகம் நுதலிய "**ஆனந்தத்தழுந்தல்**" பெற்றும்.

83. சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரிலைம்பு லன்களான்
முந்தை யான கால நின்னை
யெய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனெ
னுள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்னம்
எய்த லுற்றி ருப்பனே. அஉ

(இ-ள்)

ஐயனே, மனம் செயல் கேள்வி மொழி என்னும் இவற்ருலும்; சிறப்பற்ற ஐம்பொறிகளாலும் பழமையான காலத்தில் நின்னை அடையப்பெருத அறிவிலியாகிய நான்; தீயில் வீழ்ந்து வெந்திலேன்; என் மனம் நாணி உடைந்தேன் அல்லேன்; என் தந்தையாகிய நின்னை, இன்னமும் அடைவதற்கு விருப்பமுற்று வாழ்ந்து இருக்கலானேன்.

(வி-ரை)

மூன்ருமடியில் உள்ள "வெந்துஐயா" என்பதிலுள்ள "ஐயா" என்பதை இத்திருப்பாட்டில் முதலில் வைத்து உரை காண்க.

சிந்தை செய்கை கேள்வி வாக்கு - இவை மனம் முதலிய அகப்புறக் கரணங்களும் வாக்கு செவி முதலிய புறக்கரணங்களுமாம். சிவபெருமானை நோக்கிச் செய்யும் தவங்கள் இவற்ருல் நிகழ்வன. இக்கரணங்களுள் தலையாயது மனம். அஃதில்வழி நிகழும் மொழியும் செயலும் பயனற்றவை. மனம் மொழி மெய்யாகிய முக்கரணங்களில் மொழிப்பணி தான் பிறருக்குக் கூறலும் பிறர் மொழிவதைத் தான் கேட்டலும் என இரு திறத்தன. ஆதலின் "**கேள்வி**" "**வாக்கு**" என்ருர்.

சீர்இல் ஐம்புலன்களால் சிறப்பில்லாத ஐம்புலன்களால். இவை, உலகைச் சிவமயமாகக் காணுது, உலகியற் பொருட்களைப் பற்றிக் கொண்டு, கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் இயல்பு பற்றி இவற்றைச் ***சீர்இல் ஐம்புலன்கள்*** என்ருர். உலகைச் சிவமயமாகக் காணும் சிறப்புள்ள ஐம்புலன்களை வரகுண தேவர் வரலாற்றிற் காண்க. அவர், உதிர்ந்து கிடந்த வேப்பங்கனிகளைச் சிவலிங்கங்களாகக் கண்டார்; தவளைகளின் ஓசையை ஈசனைப் பாடிய துதி மொழியாகக் கேட்டார் என்பன போன்றவற்றைத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவை மொழியும்.

சிறப்பில்லாத ஐம்புலன்கள் என்றதால் அவை உயிரைப் பிறவியில் வீழ்த்தும் இழிந்த ஐம்புலன்கள் என்பது பெற்ரும்.

ஐம்புலன்களால் - என்புழி "**ஆல்**" என்ற மூன்ரும் வேற்றுமை உருபை, சிந்தை செய்கை கேள்வி வாக்கு என்பன ஒவ்வொன்றுடனும் இணைத்து எண்ணும்மையும் விரித்துக் கொள்க.

முந்தையான காலம் - பண்டைப்பிறப்புக்களில் கழிந்த காலம். முன் பிறப்புக்களில் சிவபரஞ்சுடரைச் சிந்தை முதலிய கரணங்களால் பேரொளி.

பற்றியிருந்தால் இப்பொழுது திருவடி இன்பம் எளிதிற்கிட்டியிருக்கும் என்றவாறு.

நின்னை எய்திடாத மூர்க்கன் - அவ்வாறு நின்னை முன்பு பற்ருமைக்குக் காரணம் என் மூர்க்கத்தன்மை என்றவாறு. ***மூர்க்கன்*** - அறிவும் அன்புமற்று வறிதே ஒன்றனைப் பற்றிக் கொண்டு, தெருட்டினும் தெருளாது கொண்டது விடாது சொற்போர் புரிபவன்.

வெந்து விழுந்திலேன் - "விழுந்து வெந்திலேன்" என்று மாற்றிக் கொள்க. விழுவது தீயின்கண்.

என் உள்ளம் வெள்கி விண்டிலேன் - கரணங்களுள் தலையாகிய மனம், சிவபரம்பொருளைத் தான் பற்றிக் கொண்டு மற்றைக் கரணங்களையும் சிவன்பால் செலுத்த வேண்டிய கடப்பாடுள்ளது. அக்கடமையைச் செய்யாததற்கு அது நாணமுற வேண்டும்; ஆனுல் அதற்குமாருக உலகியலில் தானும் சென்று மற்றைக் கரணங்களையும் செலுத்திக் கேடு விளைக்கின்றது. அதனுல் அது பிளந்து அழிதல் வேண்டும். அவ்வாறு செய்யவில்லையே என்று இரங்கியவாறு.

எந்தையாய நின்னை - நீ என் தந்தை. ஆதலின் மைந்தனுகிய என் குறைபாடுகளை நீக்கித் தகுதியுடையவனுக்குவாய் என்று கருதி.

நின்னை எய்தலுற்று இருப்பனே - இவ்வுடலைத் தீயில் வீழ்த்து அழிக்காமலும் மனம் பிளந்து இறவாமலும், நின்னை அடையலாம் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகின்றேன். ***ஏகாரம்*** ஈற்றிசை.

இத்திருப்பாடலில் "எந்தையாய நின்னை எய்தலுற்று இருப்பன்" என்றதால் பத்தியும் "வெந்து விழுந்திலேன்" என்றதால் வைராக்கியமும் அறியப்படுவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்ரும். மனம் முதலிய கரணங்களால் தவம் முயலுதலே அழிவில் இன்பம் நுகர்வதற்கு வழி என்பது பெறப்படுவதால் பதிகம் நுதலிய "***ஆனந்தத்தழுந்தல்***" பெற்ரும்.

84. இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை
யாண்டு கொண்டு நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ
னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டி யானு முண்டி
ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்க ணென்க
ணென்ப தென்ன விச்சையே அ0

(இ-ள்)

இரும்பு போன்ற வலிய நெஞ்சத்தையுடைய வஞ்சகனாகிய என்னை ஆட்கொண்டருளிய நின் திருவடிகள் கருப்பஞ்சாறு போன்ற அருளமுதத்தை ஊட்டி, என் உயிரில் கலந்து பிரிந்து போகவும், தீயும் உள்ளது; சிறியேனும் உயிருடன் இருந்ததுண்டு, நல்ல உணவுகளை வயிறுர உண்டதும் உண்டு, அங்ஙனம் உண்டு உயிருடன் இருந்தும், நின்னிடத்து எனக்கு அன்பும் உள்ளது என்று கூறுதல் என்ன மாயவித்தை?

(வி-ரை)

இத்திருப்பாடலை ஆற்றொழுக்காகப் பொருள் கொள்க.

இருப்பு நெஞ்ச வஞ்சனேனை - நெஞ்சம் அன்பினால் குழைந்து இறைவனை நினையாமையால் "இருப்பு நெஞ்சம்" என்றார். நெஞ்சின் திண்மை கூறவேண்டி "இருப்பு நெஞ்சம்" என்று கூறுதல் மரபு. இதனை,

" சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
வங்கயற்க ணெம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி

(திருவிளையாடற் புராணம் கடவுள் வாழ்த்து -2)

என்றதிற் காண்க.

அவ்வளவில் நில்லாமல் வஞ்சித்தலாகிய தீமையும் பயத்தலின் "**வஞ்சனேனை**" என்றார். இதுபற்றி முன்னம் 77 -ம் திருப்பாட்டில் "வஞ்சனேன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

ஆண்டு கொண்ட நின்னதாள் - ஆளாக்கிப் பணியும் கொண்ட நின் திருவடிகள். இருப்பு நெஞ்சம் ஆதலின் அதிற் குழைவு இல்லை. அத்துடன் தீமைக் குணமும் இருப்பதால் "**வஞ்சனேன்**" என்றார். அவ்வாறிருந்தும் பேரருள் காரணமாக இறைவன் ஆளாக்கிப் பணியும் கொண்டான். எனவே ஆண்டான் இயல்பு மிகச்சிறந்து நிற்க, அடிமையின் இயல்பு பிழைபட்டதாயிற்று.

நின என்புழி அகரம் ஆறும் வேற்றுமைப் பன்மை உருபாக நின்றது. அது, விரித்தல் விகாரத்தால் ***நின்ன*** என ஆயிற்று.

கருப்பு மட்டு வாய்மடுத்து. கருப்புமட்டு - கருப்பஞ்சாறாகிய தேன். ***மட்டு*** - தேன். அடையடுத்த உவமை ஆகு பெயராக நின்று இனிய சுவைமிக்க திருவருள் அமுதத்தைக் குறித்து நின்றது. உவமம் உயர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்பது விதி. ஈண்டு, ஈடும் எடுப்பு மற்ற திருவருளுக்கு உவமை காட்ட அதனினும் உயர்ந்த பொருள் இன்மையின், உலகியற் பொருள்களில் இனிமையிற் சிறந்த கருப்பஞ்சாற்றை உவமையாகக் கூறினார்.

வாய்மடுத்தல் - உண்டல். வாய் மடுப்பித்து என்றதில் பிறவினை விகுதி குன்றி ***வாய்மடுத்து*** என நின்றது. ஊட்டி என்பது பொருள்.

"இரும்பு"; "கரும்பு" என்பன "இருப்பு"; "கருப்பு" என்று வந்தன. இருப்பு நெஞ்சம் அல்வழித்தொகை. ***கருப்பு மட்டு*** வேற்றுமைத் தொகை. இரண்டுமே ஈண்டு வலித்தல் விகாரம் பெற்றன.

வன்றொடர் மொழியு மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே;
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதி கிளையொற்றாகும்

(தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - குற்றியலுகரப்புணரியல் சூ.9.)

எனைக்கலந்து போகவும் - நின்திருவருள் அமுதத்தை ஊட்டி, என்னைக் கலந்து பிரிந்து செல்லவும். சிவபெருமான் தாளை அருட்சத்தி என்று ஆகமங்கள் கூறும். அது கலத்தல் என்பது உயிரில் சிவசக்தியாகிய ஞானஒளி விரவுதல். பேரருள் காரணமாக இறைவன் தகுதியில்லாத என்னை வலிய ஆட்கொண்டு தன் அருளமுதத்தை உண்பித்து தன் அருள் ஞான ஒளியை என் உயிரில் கலக்கச் செய்து நெடிது நில்லாது பிரிந்து செல்லவும் என்றவாறு.

இது திருப்பெருந்துறையில் இறைவன் நம் அடிகளை ஆட்கொண்டு பின்பு பிரிந்து சென்ற சரித வரலாற்றின் அகச்சான்று.

நெருப்பும் உண்டு - உடலைச் சுட்டு ஒழிப்பதற்கு நெருப்புமுண்டு என்றார். நீரில் மூழ்குதல், நஞ்சு உண்டல், வரையினின்றும் உருளுதல் போன்றவை நெருப்பைப் போல விரைவில் எரித்து உடலைச் சாம்பலாக்காமையால் நெருப்பைக் கூறினர். திருவடியைக் கலந்து இன்பம் நுகர்ந்த இவ்வுயிர் இறைவன் பிரிந்து சென்ற பின் முடையார் புழுக்கூடாகிய இவ்வுடலில் சிறையுண்டு வருந்தலாயிற்றே என்று இரங்கி அத்துன்பத்துக்கு ஏதுவாகிய இவ்வுடம்பைத் தீயில் வீழ்த்து ஒழிக்காது வாழ்கின்றேனே என்றவாறு.

யானும் உண்டு இருந்தது - இத் தொடரை "***யானும் இருந்தது உண்டு***" எனவும், இதிலுள்ள "***உண்டு***" என்ற குறிப்பு வினைமுற்றை "***உண்டது***" என்றதன் பின்னும் கூட்டி "***உண்டது உண்டு***" எனவும் கொள்க. எரிக்கும் கருவியாகிய நெருப்பும் எரிக்கப்படும் பொருளாகிய என் உடம்பும் ஆயத்தமாக இருந்தும் நான் என் உடம்பை அந்த நெருப்பில் வீழ்த்து ஒழிப்பதற்குத் துணிவு பெற்றேனல்லன்; மாறாக அந்த நெருப்பைக் கருவியாகக் கொண்டு சத்துள்ள சுவையான உணவுகளை அட்டு வயிறார உண்டு இந்த உடம்பைக் கொழுக்க வைக்கின்றேனே என்றவாறு. முன்னரும் "தீயில் வீழ்கிலேன், திண்வரையுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே (43)" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

ஆயினும் - அஃதாயினும். ***நின்கண் என் கண் விருப்பும் உண்டு என்பது*** - "என்கண் நின்கண் விருப்பும் உண்டு என்பது" என்று மாற்றிக் கொள்க. இங்ஙனம் பிரிவாற்றாத நிலையில் உடலை நெருப்பில் வீழ்த்து அழிக்காமல் அதற்கு மாறாக உணவினால் ஓம்பி வாழ்ந்து கொண்டிருந்தும் நின்பால் எனக்கு அன்பு உண்டு என்று கூறுதல்.

என்கண் - என்புழி ஏழாம் வேற்றுமை உருபை "எனக்கு" என நான்காம் வேற்றுமை உருபாக மாற்றுக. "***நின் விருப்பும் உண்டு***" என்புழி என் உடம்பின்மேல் அன்பு உளதாதலேயன்றி ''நின் கண்ணும் அன்பு உண்டு'' என்றும் பொருள் தருதலால் உம்மை எச்சப் பொருளில் நின்றது.

என்பது - என்று கூறுதல். பேச்சளவில் அன்றி உள்ளத்தில் மெய்யாக அன்பு இல்லை என்றவாறு.

என்ன விச்சையே - என்ன மாயவித்தை. ***விச்சை*** - இல்லதை உள்ளதாகவும், உள்ளதை இல்லதாகவும் காட்டுதல் மாயவித்தை. ஈண்டு இல்லதை உள்ளதாகக் கூறியதாகும்.

என் அவிச்சை - என்று பிரித்து ''என்ன அறியாமை'' என்று உரை கொண்டாரும் உளர். இத்திருப்பாட்டின் பொருட்கிடக்கையை நோக்க அவ்வுரையின் சிறப்பின்மை தேற்றம்.

இத்திருப்பாடலில் ''இருப்பு நெஞ்ச வஞ்சனேனை ஆண்டு கொண்ட நின்னதாள்'' என்றதால் பத்தியும்; "நெருப்பு முண்டு யானுமுண்டு" என்றதால் வைராக்கியமும் பெறப்படுதலின் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும்; "நின்னதாள் கருப்பு மட்டு வாய் மடுத்து எனைக்கலந்தது" என்றதால் பதிகம் நுதலிய "***ஆனந்தத்தழுந்தல்***" பெற்றும்.

கூ. ஆனந்த பரவசம்

ஆனந்தம் என்பது பக்குவம் முதிர்ந்த உயிர் மெய்யுணர்வின் வாயிலாகத் திருவருளைப் பற்றி நின்று பேரின்பம் நுகர்தலாகும். இதன் இயல்பு முந்தைப் பதிகம் நுதலிய பொருளாகிய "***ஆனந்தத் தழுந்தல்***" என்றதன் கீழ் விளக்கப்பட்டுள்ளது. பொறிகள் வாயிலாக நுகரப்படும் உலகியல் இன்பத்தை உவர்த்து, மெய்யுணர்வு கருவியாக நுகரும் சிவானந்தத்தில் தோயும் வண்ணம் உயிருக்கு ஒரு சிறிது இடம் கிட்டினும் நழுவ விடாமற் பற்றிக் கோடற்கு இறைவனை வேண்டுதல் முன்னைப் பதிகம் நுதலிய பொருள். அவ்வாறு ***ஆனந்தத்தழுந்தல்*** கிட்டியதும் அதன்கண் மேலும் மேலும் ஆழ்ந்து தன் வசம் அழிதல் "***ஆனந்த பரவசம்***" அஃதே இப்பதிகத்தின் தலைப்பு. பரவசம் என்பதற்குப் ''பிறர்வயப்படல்'' என்பது பொருளாயினும் ஈண்டுத் தன்வசம் அழிதலே கருத்தாகும். ''அழிவில்லா

இன்பத்தை நுகர்கின்றேம்" என்று எண்ணும் மனநிலை ஒழிதலே தன் வசம் அழிதலாகும். அற்றேல், ''யான்'' என்னும் உயிர்முனைப்பு முற்பட்டு இன்பத்தோய்வுக்குப் புறம்பாக நேரும். ஆழ்ந்து உறங்கும் ஒருவன், அவ்வுறக்கநிலையில் ''துயில் இன்பத்தை நுகர்கின்றேன்'' என்ற எண்ணமின்றி நுகர்தல் தன்வயம் இழத்தலாகும். இஃது, அஞ்ஞான நிலையில் நிகழ்வது. சிவானந்தத்தில் தன்வயம் இழத்தல் ஞானநிலையில் நிகழ்வது. துயிலுணர்ந்தவன் வினையெச்சத்தால் மீண்டும் உலகியலில் ஈடுபடுகின்றான். திருவருளில் ஆழ்ந்தோர் வினையெச்சம் இன்மையால் மீண்டும் பிறத்தலின்றி அழிவில்லாத வாழ்வில் தலைப்படுவர். உயிர், கருவி கரணங்களின் சார்புண்மை குறியாது திருவருள் இன்பத்தில் தன்வசம் இழந்து தோய்தல் வேண்டும் என்பதும் எவ்வாற்றானும் அந்நிலையினின்றும் நழுவுதல் கூடாது என்பதும் இப்பதிகம் நுதலிய பொருள். "**ஆனந்தத்தழுந்தலின்**" பின் நிகழ்வது பரவச நிலையாதலின், இப்பதிகம் அதன் பின் வைக்கப்பட்டது.

கலிநிலைத் துறை

85. விச்சுக் கேடு பொய்க் காகா
தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும்
வந்துன் றாள்சேர்ந்தார்
அச்சத் தாலே யாழ்ந்திடு
கின்றேன் ஆரூரெம்
பிச்சைத் தேவா என்னான்
செய்கேன் பேசாயே அக

(இ -ள்)

திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பிச்சை ஏற்கும் திருவுருக்கொண்ட எங்கள் இறைவனே, பொய்மையின் வித்துக்கு அழிவு நேர்தல் கூடாது என்று அடியேனை இவ்வுலகில் இருக்கச் செய்தனை, அன்பு செய்யும் தொண்டுக்கு உரியார் எல்லாரும் நின்பாலுற்று நின்திருவடி நிழலை எய்தினர்; பிறப் பிறப்புப் பற்றிய அச்சம் காரணமாக வருந்துகின்றேன்; யான் என்ன செய்கேன்; திருவாய் மலர்ந்தருளுக.

(வி -ரை)

"ஆரூர் எம் பிச்சைத்தேவா" என்பதை இத்திருப்பாடலின் முதற்கண் வைத்து உரை காண்க.

ஆரூர் எம் பிச்சைத்தேவா. ஆரூர் - திருவாரூர். திருமகள் நிறைந்து இருக்கும் ஊர் என்பது பொருள். அவள் இங்குத் தவங்கிடந்து திருமாலைத் தன் கணவனுகப் பெற்ருள் என்பது தல வரலாறு. இது நிலமகளுக்கு நெஞ்சத்தாமரை மலர் என்பது நம் சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

திருச்சிற்றம்பலம்

பூதமி யாவையி னுள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதன் மங்கை யிதய கமலமாம்
மாதொர் பாகனு ராரூர் மலர்ந்ததால்

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருமலைச் சிறப்பு -33.)

என்பது அத்திருவாக்கு.

இஃது உயிர்களின் இதய கமலத்தைத் குறிப்பில் உணர்த்துவது. திருவாரூரில் கோயில் கொண்டுள்ள சிவபரஞ்சுடரின் திருப்பெயர் தியாகராசன். அவனே உயிர்களின் நெஞ்சத் தாமரையிலும் வீற்றிருந்து உயிர்களுக்கு வேண்டுவனவற்றை எல்லாம் வழங்கும் வள்ளல் என்பது அத்திருப்பெயரின் பொருள்.

எம்பிச்சைத் தேவா - பிச்சாடனமூர்த்தி. இது தாருகாவனத்து முனிவர்களின் மனைவியர்பால் பலியேற்கச் சென்ற திருக்கோலம். சிவமூர்த்தங்கள் அறுபத்து நான்கில் ஒன்று. இறைவன் பிச்சைத் தேவனுன வரலாறு முன்னம் திருவண்டப் பகுதி 32 -ல் ''கானப் புலியுரி அரையோன் ஆன வரலாறு" என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக் காண்க. **எம்** - உரிமை பாராட்டியவாறு.

அந்த ஊரோ செல்வத்துக்கு அதிபதியாகிய திருமகள் நிறைந்திருக்கும் ஊர். அதன் அரசனுகிய நீயோ யாவர்க்கும் எல்லாவற்றையும் வரையறை இன்றி வழங்கும் தியாகராசன். ஆனுல், நீ கொண்டுள்ள கோலமோ பிச்சையேற்கும் கோலம். இஃதென்னே என்றவாறு.

உயிர்கள் சிற்றறிவுள்ளவை. பாசத்தால் பிணிப்புண்டவை. எனவே அவை தாமாக இயங்கா. அவை அறங்களைச் செய்து புண்ணியப் பயனால் பாசப்பிணிப்பு மெல்ல மெல்ல விலகி மேற்கதி எய்துதல் வேண்டும். அதற்காக இறைவன் அவற்றின் உள் நின்று இயக்குகின்றான். பலிஇடுதல் அறச்செயல். அது நிகழ இறைவன் உயிர்களின் உள் நின்று பலி சொரியும்படி இயக்குதல் வேண்டும். தீவினைப்பயனால் வறுமையுற்று வருந்துவோர் பலி உணவை ஏற்றுண்டு பசி நீங்குவர். அவர்கள் இரத்தல் தொழில் செய்து உணவு பெற வருந்துவதால் தங்கள் தீவினைப்பயன்களை நுகர்ந்து கழித்து மேற்கதி எய்துவர். இதற்காக இறைவன் அவர்கள் உயிரினுள் நின்று பலி ஏற்கும்படி அவர்களை இயக்குவன். எனவே பலி பெய்வோனும் இறைவன்; பலியை ஏற்போனும் இறைவனே என்பது பெற்றும். இத்தத்துவத்தை விளக்குவதே பிட்சாடனக் கோலம். ஈண்டு நம் அடிகள் இக்கோலம் குறித்து வழுத்துவது மெய்யடியார்களின் பசுபோதத்தைப் பலியாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு வீட்டின்பம் வழங்கும் வள்ளல் என்ற குறிப்பினது.

ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

வாரி ருங்குழல் வாணெ டுங்கண்
மலைம கள்மது விம்மு கொன்றைத்
தாரி ருந்தட மார்பு நீங்காத்
தைய லாளு ல குய்ய வைத்த
காரி ரும் பொழிற் கச்சி மூதூர்க்
காமக் கோட்டமுண் டாக நீர்போய்
ஊரி டும்பிச்சை கொள்வ தென்னே
ஓண காந்தன் தளியு ளீரே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7 -5- 6)

தானமால் களிறு மாநிதிக் குவையும்
ஏனைய பிறவு மீகுந ரீக
நலம்பா டின்றி நாண்டுறந் தொரீஇ
இலம்பா டலைப்ப வேற்குந ரேற்க

புரவலர் புரத்தலு மிரவல ரிரத்தலும்
இருவே றியற்கையு மிவ்வுல குடைத்தே; அதா அன்று;
ஒருகா லத்தி லுருவமற் றொன்றே
இடப்பான் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலப்பா லிரத்தன் மாநிலத் தின்றே
விண்டொட நிவந்த வியன்றுகிற் கொடிகள்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பம தாற்றுபு
கொடியா ரெத்துணைக் கொடுமை செய்யினும்
மதியார் செய்திடு முதவியை யுணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது, வாழிய பெரிதே

(திருவாரூர் நான்மணிமாலை -9)

என்பன நினைக.

இச் செய்தியைத் தியாகராசப் பெருமான் மாணிக்க நாச்சியார் வீட்டில் பிச்சை ஏற்றதாக் கூறும் தலப்புராண வரலாறு என்பர் திரு. தேசிகர் அவர்கள்.

பொய்க்கு விச்சுக் கேடு ஆகாது என்று - என்று மாற்றிக் கொள்க. உலகத்தில் ஒரு பயிர் நிலை பெற்று, வழி வழியாகப் பயன்தருதற்கு அதன் விதையைத் தேர்ந்தெடுத்துப் பாதுகாத்து வைப்பர். பொய்ம்மையாகிய பயிர் ஒன்றே ஒன்றுதான் உலகில் உள்ளது. அதற்கு ஒரே ஒரு விதைதான் இருக்கின்றது என்றால் அந்த விதை அழிந்தால் உலகில் இனி அந்தப் பயிரும் இல்லாது போகும். அந்த ஒரே விதை யான். எனக்கு வீடு பேறு தந்து விட்டால் இனி உலகில் பொய் என்பதே இல்லாது போகும். ஆதலின் என்னை இங்கு இருத்தி ஏனைய மெய்யடியார்களுக்கு வீடு பேறு நல்கினாய் என்றவாறு.

விச்சு - வித்து என்பதன் போலி. **கேடு** - அழிவு . **பொய்** - பிறவி. பிறக்கும் உயிர்கள் பல உளவேனும் ஏனைய அடியார்கள் எல்லாரும் பிறவி

நீக்கும் கருவியாகத் தங்கள் உடலைப் பயன்படுத்தி வீடு பேறுற்றனர்; யான் ஒருவனே அதை அடைந்திலேன் என்றவாறு.

இங்கு எனை வைத்தாய் - திருப்பெருந்துறையில் நம் அடிகளை மட்டும் நிறுத்தி ஏனைய அடியார்களைப் பொய்கையில் தோன்றிய சோதியில் புகுந்து கயிலை நண்ணும்படிப் பணித்த வரலாற்றுக்கு அகச் சான்று.

இச்சைக்கு ஆனார் எல்லாரும் - உனக்கு அன்புடன் தொண்டு செய்த அடியவர்கள் அனைவரும்.

இச்சை - காரணஆகுபெயராய் நின்று அன்புடன் செய்யும் தொண்டை உணர்த்திற்று.

இதனை,

திருச்சிற்றம்பலம்

பனைபுரை கைம்மத யானை யுரித்த பரஞ்சுடரே
கனைகடல் சூழ்தரு நாகைக்கா ரோணத்தெங் கண்ணுதலே
மனை துறந் தல்லுணு வல்லமண் குண்டர் மயக்க நீக்கி
எனைநினைந் தாட்கொண்டாய்க் கென்னினியான்செயு மிச்சைகளே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *4-103-6*)

எனவரும் நம் அரசுகள் தேவாரத்திற் காண்க.

ஆனார் எல்லாரும் - அத்தொண்டுக்கு உரிய உண்மை அடியார்கள் அனைவரும். இவர்கள் திருப்பெருந்துறையில் வீடு பெற்றவர்கள்.

வந்து உன்தாள் சேர்ந்தார் - ***வந்து*** - கயிலையினின்றும் உன்னுடன் இவ்வுலகுக்கு வந்து. ***உன்தாள் சேர்ந்தார்*** - என்கண் முன்பாகவே பொய்கை நடுவில் எழுந்த பேரொளியில் புகுந்து உன் திருவடி நிழலையடைந்தனர்.

அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன் - பிறவித் துன்பத்துக்கு அஞ்சி அந்த அச்சத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கிறேன். ***அச்சம்*** - நான் பொய்ம்மை நீங்கி மெய்யன்புடையவனாகி உன் திருவடி நிழலடையும் தகுதி பெற இன்னும் எத்தனைக் காலம் எத்தனைப் பிறவிகள் எடுக்க வேண்டுமோ என்ற அச்சம். ஆழத்தின் மிகுதி குறிக்க நிகழ்காலத்திற் கூறினார். ***ஆழ்தல்*** - வருந்துதலுமாம்.

நான் என் செய்கேன்- என்று மாற்றிக் கொள்க. இத்துன்ப நிலையில் யான் செய்யத்தக்கது இன்னது என்று எனக்குத் தெரியவில்லை.

பேசாயே - நீயே திருவுளம்பற்றி அருள் செய்ய வேண்டும். **பேசாய்** - சொல்லுக. *ஏ* - ஈற்றிசை. கருவிகளை இயக்குவோனும் பயன் விளைவிப்பவனும் இறைவன் ஆதலின் வீட்டின்பப்பேறு வேண்டி நான் மேற்கொள்ள வேண்டிய சாதனங்கள் என்ன என்று நீயே திருவாய் மலர்ந்தருள்க. என்றவாறு.

இத்திருப்பாடலில் ''என்னுன் செய்கேன்" என்றதால் பத்தியும்; பொய்க்கு வித்தாக இங்கு வைக்கப்பட்டேன் என்றதால் ''வைராக்கியமும்" குறிக்கப்பட்டுச் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். "மெய்த் தொண்டர்கள் எல்லாரும் உன் திருவடி சேர்ந்தனர். என்னை இங்கு இருத்தினுய்" என்றதால் யானும் திருவடி நிழலை எய்தி இன்பம் துய்த்தல் வேண்டும் என்பது குறிப்பால் எய்தப் பெற்றுப் பதிகம் நுதலிய "**ஆனந்த பரவசம்**" பெற்றும்.

தலவிசேடம் - திருவாரூர் - கீர்த்தித் திருவகவல் 73 -ல் "தேனமர் சோலைத் திருவாரூர்" என்றதன் கீழுரைக்கப்பட்டது. ஆண்டுக்காண்க.

86 பேசப் பட்டே னின்னடி
யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல
ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு
கின்ற தமையாதால்
ஆசைப் பட்டே ஞட்பட்
டேனுன் னடியேனே அஉ

(இ -ள்)

உன் மெய்யடியாருள் ஒருவனுக வைத்து மெய்யன்பரால் பாராட்டப் பெற்றேன்; ஞானுசிரியனுக எழுந்தருளிய நின் திருக்கரத்தால் திருநீறே பூசப்பட்டேன்; உலகத்தவரால் உன் அடியவன் என்று இகழப்பட்டேன்; இனித் துன்புறுதல் பொருந்தாது; வீட்டின்பப்பேறு குறித்து அவாவுடையேன்; உன் அடியவனுக ஆளாயினேன்.

(வி -ரை)

இத்திருப்பாடலை ஆற்றொழுக்காகப் பொருள் செய்க.

நின் அடியாரில் பேசப்பட்டேன் - என்று மாற்றிக் கொள்க. ***நின் அடியாரில்*** என்பதை நடுநிலைத் தீவகமாகக் கொண்டு நின் அடியாரில் பேசப்பட்டேன்; நின் அடியாரில் திருநீறே பூசப்பட்டேன் என்று ஈரிடத்தும் புணர்த்துப் பொருள் கொள்க. பின்னர்ப் பூதலரால் ஏசப்பட்டேன் என்பதால் ஈண்டுப் "***பேசப்பட்டேன்***" என்றது பாராட்டிப் பேசப்படுதல் என்பது பெற்றும். அவ்வாறு பேசியவர்கள் மெய்யடியார்கள். ஏசியவர்கள் பூதலர். "***நின் அடியாரில் பேசப்பட்டேன்***" என்புழி "***இல்***" மூன்றும் வேற்றுமை உருபுப் பொருளில் வந்தது.

நின் அடியாரில் திருநீறே பூசப்பட்டேன் - நின் மெய்யடியார்கள் நாப்பண் ஞானசிரியனுக எழுந்தருளிய நின்னுல் திருநீறு அணிவிக்கும் பேறு பெற்றேன் என்றவாறு. திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் ஞானசிரியனுக எழுந்தருளி இருந்த இறைவன் நம் அடிகளை அருள் நோக்கால் பார்த்துக் கரத்தால் அவர் திருமேனியில் திருநீறு அணிவித்தார். அருள்நோக்கு சட்சு தீட்சையாகி நம் அடிகள் உயிரையும் திருநீற்றுப்பூச்சு அவர் உடலையும் பாசப் பிணிப்பு ஒழித்துத் தூய்மைப்படுத்தின. திருநீற்றுப் பூச்சை அங்கியில் குளித்தல் என்று சிவாகமங்கள் கூறும். குரு, மாணவனைக் கையால் தீண்டித் திருநீறு அணிவித்தல் சைவ மரபு. இது பரிச தீட்சையுமாம்.

திருநீறே என்ற ஏகாரம் சிவநின்மாலியங்களான ஏனைய சந்தனக் கலவை முதலிய நறுமணப் பொருள்களினின்றும் பிரித்தோதலின் பிரிநிலை ஏகாரம். இதுபற்றி முன்னம் 28 -ம் திருப்பாட்டில் "திருநீறே நிறையப்பூசி" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. அவ்வாறு சட்சு தீட்சையும் பரிசதீட்சையும் நல்கித் திருநீறு அணிவித்து மாணவனை உய்விப்பது ஏனைய நல்லடியார்கள் காண அவர்கள் நடுவில் நிகழ்த்துவதாம். இதுபற்றி முன்னம் 28,32,53 திருப்பாடல்களில் உரைத்தவை காண்க.

பூதலரால் உன் அடியான் என்று ஏசப்பட்டேன். பூதலர் - பூவுலகில் உள்ள சாதாரண மக்கள். இவர்கள் திருவருட் பண்பின் பெருமையறியாதவர்கள். ஆதலின், நம் அடிகள் பாண்டியப் பேரரசின் முதலமைச்சராக இருந்து சிறப்பு எய்தியதை விட்டுச் சிவனடியாராக ஒரு மூலையில் ஒடுங்கி இருப்பது கண்டு, எள்ளி நகையாடினர். இந்நிகழ்ச்சியை

நம் அடிகளே முன்னம், ''சகம்பேயென்று தம்மைச் சிரிப்ப" (போற்றித் திருவகவல் 6) என்று அருளியுள்ளது காண்க.

பூ - பூவுலகம். ***தலம்*** - உள்ளிடம். நிலவுலகிலுள்ளோர்.

இனிப் படுகின்றது அமையாது ஆல் - இறைவனாலும் அவன் மெய்யடியார்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அறியா உலக மக்களால் ஏசப்பட்டதனால் இனிப் பிறப்பிறப்புகளில் துன்புறுதல் பொருந்தாது என்றார்.

படுதல் - துன்புறுதல். இது தொழிற் பெயர் அளவில் நின்றது. ***ஆல்***- அசை. ***அமையாதால். தன்மையால்*** என்பது சீகாழித் தாண்டவராயர் கொண்ட பாடம்.

ஆசைப்பட்டேன் - நின் அடியாரால் பாராட்டப் பெற்றதும், நின்னால் திருநீறுபூசி ஏற்றுக் கொள்ளப்பட்டதும் ஏதுவாகக் கொண்டு வீடு பேறு எய்த அவாவுற்றேன் என்றவாறு.

உன் அடியேன் ஆட்பட்டேனே - என்று மாற்றிக் கொள்க. எவ்வாற்றானும் நான் உன் அடியவனே என்றவாறு. ஏகாரம் - தேற்றம்.

இத்திருப்பாடலின்கண் ''திருநீறே பூசப்பட்டேன்" என்றதால் பத்தியும்; ''ஏசப்பட்டேன்" என்றதால் வைராக்கியமும் பெறப்படுதலின் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றாம்;" ஆசைப்பட்டேன்" என்று திருவடி நிழலை அவாவித் தன் வயம் இழந்து மொழிவதால் பதிகம் நுதலிய "***ஆனந்த பரவசம்***" பெற்றாம்.

87. அடியே னல்லேன் கொல்லோதானெனை
யாட்கொண் டிலைகொல்லோ
அடியா ராவா ரெல்லாரும்
வந்துன் றாள்சேர்ந்தார்
செடிசே ருடல மிதுநீக்கமாட்டே
னெங்கள் சிவலோகா
கடியே னுன்னைக் கண்ணாரக்
காணுமாறு காணேனே. அ௭

(இ -ள்)

எங்கள் சிவலோக நாயகனே; மெய்யடியார் ஆயினுர் அனைவரும் நின்னை அணுகி நின் திருவடி நிழலை எய்தினர்; கடியவனுகிய யான் முடை நாற்றம் வீசும் இவ்வுடலை ஒழிக்கவும் மாட்டேன்; இன்பம் தரும் நின்னைக் கண் நிறையக் காணும் வழியையும் அறிந்திலேன்; (அதனுல்) யான் உன் அடியேன் அல்லனே; நீ என்னை ஆட்கொண்டதில்லையோ ?

(வி -ரை)

இத்திருப்பாடலை, ''எங்கள் சிவலோகா அடியார் ஆனுர் எல்லாரும் வந்து உன்தாள் சேர்ந்தார்; கடியேன், செடிசேர் உடலம் இது நீக்கமாட்டேன்; உன்னைக் கண்ணுரக்காணும் ஆறும் காணேன்; அடியேன் அல்லேன் கொல்லோ; தான் எனை ஆட்கொண்டிலை கொல்லோ" என்று அன்னுவயப்படுத்திக் கொண்டு பொருள் காண்க.

எங்கள் சிவலோகா. சிவலோகம் - மங்கலத்தை செய்வதும் மங்கலமாகவே இருப்பதுமான வீட்டுலகம். ***சிவலோகன்*** - வீட்டுலகின் தலைவனுகிய சிவபெருமான். அவனே செடிசேர் உடலம் நீக்கி ஆன்மாக்களை மங்கல வடிவமாக்கி மங்கல உலகில் சேர்ப்பவன். ***எங்கள்*** என்றது அடியார்கள் அனைவரையும் உள்ளிட்டு உரிமை பாராட்டியது.

அடியார் ஆனுர் எல்லாரும் வந்து உன் தாள் சேர்ந்தார். அடியார் ஆனுர் - சரியை முதலிய தவங்களால் வீடு பேறு எய்துதற்குத் தங்களைத் தகுதியுடைய அடியார்களாக ஆக்கிக் கொண்டவர்கள்.

வந்து - சாலோக முதலிய பத முத்திகளில் படிப்படியாக ஏறி வந்து. ***உன்தாள் சேர்ந்தார்*** - சாயுச்சிய முத்தியை அடைந்தார்கள். நான் சேரவில்லை என்பது இசையெச்சம். என்னையும் தகுதியுள்ளவனுக்கி உன் தாள் நிழலில் சேர்த்துக் கொள் என்ற குறிப்புத் தருதலின் குறிப்பெச்சமுமாம்.

கடியேன் - உள்ளக்குழைவில்லாதவன். கடுமையான இயல்புள்ளவன். அவசரப்படுபவன் எனலுமாம். ''கள்வன் கடியன் கலதி" என்றுபின்னரும் (233) கூறுதல் காண்க. கடிந்து நீக்கத்தக்கவன் எனலு மொக்கும்.

செடிசேர் உடலம் இது நீக்க மாட்டேன். ***செடி*** - தீவினையால் எய்தப்பட்டு அதன் பயனாகிய துன்பம் நுகரும் குற்றமுள்ள உடல். முடைநாற்றம் வீசுகின்ற உடல் எனலுமாம். இச்சொல் இப்பொருளில் வருவதை;

திருச்சிற்றம்பலம்

செடியாய வுடறீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையா மறுபிறப்பே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *2-43-11*)

எனவரும் ஞான போனகர் நற்றமிழிற் காண்க.

உடலம் - உடல் ''அம்" சாரியை பெற்று வந்தது.

இது - இறைவன் திருவடியை எய்தத் தடையாக உள்ள இவ்வுடம்பு.

நீக்கமாட்டேன் - திருவடிப்பேற்றுக்குத் தடையாக உள்ள இந்த உடம்பை ஒழிக்கவும் வழி காணேன்.

உன்னைக் கண்ணாரக் காணும் ஆறு காணேன்- உடலை ஒழிக்கும் வழி அறியாவிடினும் இவ்வுடலுடன் கூடியிருந்தே முன்னம் ஞானாசிரியனாக நீ எழுந்தருளிய ஞான்று கண்ட உன் திருக்கோலத்தை மீண்டும் கண்கள் நிறையக் காண்பதற்கான வழியையும் அறிந்திலேன். ***ஆர்தல்*** - நிறைதல், ***நீக்க, காணுமாறு*** - என்ற இடங்களில் ''நீக்கவும்" ''காணுமாறும்" என உம்மைகள் விரித்துக் கொள்க. இனி, "***கண்ணாரக் காணுமாறு உன்னைக் காணேன்*** - எனக் கொண்டு, ஆண்டவனே நின் அருள் நிறைந்த திருவிழிகளால் அடியேனைக் காணுமாறு யான் தரிசித்திலேன் எனலுமாம். மெய்யன்பர் காண்டற்கு இறையருள் நோக்கம் முதற்கண் நிகழ வேண்டும் என்பதும், அவ்வருள் நோக்கம் பெறுதற்கு உரிய தவத்தை உயிர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதும் கருத்து. நீ என்னைக் காணும்படி யான் உன்னைக் காணேன் என்றது, நின் அருட்பார்வைக்கு இலக்காதற்குரிய தவம் செய்திலேன் என்பது பற்றியாம். இக்கருத்துக்கு ஏற்ப அத்தொடர்க்குப் பொருள் கொள்ளுங்கால், ***கண்ணார*** என்பதற்குக் கண்ணோட்டம் பொருந்த

எனவும், **காணுமாறு** என்பதற்கு நீ என்னைக் காணும்படி எனவும் பொருள் கொள்ளல் வேண்டும் என்று நயம்பட உரைப்பது கதிர்மணி விளக்கம். ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

மறைகளு மமரர் கூட்டமும் மாட்டா
தயன்திரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர் வரியாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்
அறைகழ லரன்சீ ரறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்குமம் பலத்துள்
நிறைதரு கருணை நிலயமே! உன்னைத்
தொண்டனேன் நினையுமா நினையே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 9-1-11)

என்பது நினைக.

அடியேன் அல்லேன் கொல்லோ - உன் அருள் பெறுமைக்குக் காரணம் எனக்கு உன் அடியனாகும் தகுதி இல்லை என்பதா?

தான் எனை அட்கொண்டிலை கொல்லோ - அத்தகுதியின்மை காரணமாக நீ என்னை அடிமையாக ஏற்றுக் கொள்ள வில்லையோ? இன்னது என்று அறிந்திலேன்; என் செய்வேன் என்றவாறு.

நம் அடிகளின் இந்த மன நிலையை;

'' கனவில்வருங் காட்சியெனக் கருணை மூர்த்தி
காட்டிமறைத் தலுமன்பர் கலக்கத் தாழ்ந்து
நனவுகொல்லோ கனவுகொல்லோ வின்று நாதன்
ஞமலிக்குத் தவிசிட்ட நலம்போ லென்னை
நினைவரிய திருமேனி காட்டி யாண்டு
நீத்ததையென் றையுற்று நெஞ்சந்தேறி
இனவடியா ருடன்கூட்டா தேகி னையோ
வென்னையுமென் வினையையுமிங் கிருத்தி யெந்தாய்''

(திருவிளையாடற்புராணம் -வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் 51)

என்று பர்ஞ்சோதி முனிவர் நம் அடிகள் சரிதம் கூறும் பாங்கில் விளக்குவது காண்டு மகிழ்க.

தான் - என்பது படர்க்கைக்கு வருவது ஈண்டு முன்னிலையில் வந்துள்ளது. மரியாதை குறித்து ''உங்கள்'' என்பது ''தங்கள்'' என்று வருவது போலக் கொள்க.

இப்பதிகத்தில் வரும் பாடல்களின் யாப்பு கலிநிலைத்துறை என்று நம் முன்னேர்களால் கூறப்பட்டுள்ளது. இந்த யாப்புக்கு ஒரு பாடலின் ஒவ்வோரடியிலும் ஐந்து சீர்கள் வர வேண்டும்; பாடல் நான்கடியில் முடிதல் வேண்டும். ஆனால் இப்பாடலில் அறுசீர் உள்ள அடிகளும் ஐந்து சீர் உள்ள அடிகளும் உள்ளன. பாடல்களுக்கு இவ்விதம் சீர் வரையறை செய்தலும் ஒரு பதிகத்தில் பத்துப்பாடல்களும் ஒரே வகையான யாப்பில் அமைக்க வேண்டும் என்பதும் நம் அடிகள் காலத்துக்குப் பின்னர் யாப்பிலக்கணம் கண்ட வளர்ச்சி என்றும் புலவர் பெருமக்கள் கூறுவர். ஈண்டு; இப்பாடலைக் ''கலித்துறை'' என்ற யாப்பாகக் கொள்ளலாம்.

இத்திருப்பாடலின்கண் நம் அடிகள் ''இறைவனே உன் திருவடி எய்தத் தடையாக உள்ள இந்தச் செடி சேர் உடலை நீக்க மாட்டேன்; இவ்வுடலுடன் கூடியிருந்தே உன்னைக் கண்ணாரக் காணும் வழியையும் அறியேன்'' என்று இரங்குவதால் சதகம் நுதலிய ''**பத்தி வைராக்கிய விசித்திரம்**'' பெற்றும். ''அடியார் ஆனர் எல்லாரும் வந்து உன்தாள் சேர்ந்தார் நானும் உன் திருவடி நிழலை எய்தி என் வசம் இழந்து இன்பம் நுகர்தல் விழைகின்றேன்'' என்பது குறிப்பில்பெறப்படுவதால் பதிகம் நுதலிய ''**ஆனந்த பரவசம்**'' பெற்றும்.

88. காணு மாறு காணேனுன்னைக்
 யந்நாட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப்
 படுத்ததென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே யாரமுதே
 யத்தா செத்தே போயினேன்
ஏணு ணில்லா நாயினேன்
 என்கொண்டெழுகேன் எம்மானே அசு

(இ -ள்)

மேலான ஒளிப்பிழம்பாக உள்ளவனே; ஆணாகவும் பெண்ணாகவும் நிறைந்த அமுதமாகவும் உள்ளவனே; தந்தையே; எங்கள் தலைவனே; இப்பொழுது உன்னைக் காணும் வழி அறியாதவனாகிய யான் நின்னை அக்காலத்தில் கண்டிருந்தும், இனிமையாகப் பேசிப் பின் என்னைத் தாழ்த்தது ஏன்? ஆற்றலும் நாணமும் இல்லாத நாய் போன்றேன்; பயனின்றி இறந்தே போய் விட்ட நிலையில் உள்ளேன்; இனி எதைப்பற்றுக் கோடாகக் கொண்டு உய்வேன்.

(வி -ரை)

இத்திருப்பாடலைப் ''பரஞ்சோதி, ஆணே பெண்ணே ஆரமுதே; அத்தா: எம்மானே; காணும் ஆறு காணேன், உன்னை அந்நாட்கண்டேனும் பாணே பேசி என்தன்னைப் படுத்தது என்ன; ஏன் நான் இல்லா நாயினேன்; செத்தே போயினேன்; என் கொண்டு எழுகேன்;" என்றுஅன்னுவயப்படுத்திக் கொண்டு உரை காண்க.

பரஞ்சோதி ஆணே, பெண்ணே, ஆரமுதே அத்தா எம்மானே - இவை ஆறும் இத்திருப்பாட்டில் சிவபெருமானைப் பற்றிய விளியேற்றபெயர்கள்.

பரஞ்சோதி - மேலான ஒளிப்பிழம்பு. இஃது அவன் அவயவப் பகுப்பற்று எங்கும் நிறைந்துள்ள சொரூப நிலை குறித்தது. அவயவப்பகுப்பு இன்றெனினும் ஒளி பூதங்களில் ஒன்றாகிய நெருப்பைக் குறிக்கும். அதற்கு வடிவம் உண்டென்று சாத்திர நூல்கள் கூறுகின்றன. சொரூப நிலை அருவமாயிற்றே எனின், ஈண்டுக்கூறிய ஒளி, முச்சுடர்களுக்கும் ஒளிதருகின்ற ஞான ஒளியாகும். அதற்கு வடிவமில்லை என்க. இந்த ஒளியைப் பௌதிக நெருப்பின் ஒளியினின்று விலக்குதற்குப் "*பரம்*" என்ற அடைபுணர்ந்தார்.

இதனை வடமொழியாளர் பிரிதினியைபு நீக்கிய அடைமொழி என்பர். இனச்சுட்டுள்ள அடை என்பது தமிழ் வழக்கு

இங்கு ;

அளவா யளவத னளவா யளவத
னளவுந் தணிதரு மளவாகி
அளியா யளியத னளியா யளியத
னளியுந் தணிதரு மளியாகி

ஒளியா யொளியத னொளியா யொளியத
னொளியுந் தணிதரு மொளியாகி
வெளியாய் வெளியதன் வெளியாய் வெளியதன்
வெளியின் வெளிநட நவில்கின்றான்.

(பேரூர்ப் புராணம் - நிருத்தப்படலம் 63)

எனவரும் கச்சியப்ப முனிவர் வாக்கு நினைக.

ஆணே பெண்ணே - சொரூப நிலையிலுள்ள இறைவன் உயிர்கள் தன்னை வழிபட்டு உய்ய வேண்டும் என்ற பேரருளினால் தடத்த நிலையெய்தி ஆணாகவும் பெண்ணாகவும் வடிவம் தாங்கிக் காட்சி தருகின்றான். "**ஆணே பெண்ணே**" என்பதை இரட்டுற மொழிதலால் மாதொருபாகன் வடிவமாகவும் வெளிப்பட்டு அருளுகின்றான் என்று கொள்க. இஃது அவன் உருவ நிலையாயிற்று.

ஆரமுதே - மெய்யடியார்களுக்கு இவ்வண்ணம் காட்சி நல்கும் பொழுது அக்காட்சி அவர்களுக்கு அழியாத நிறைந்த அமுதமாயிற்று. அமுதம் உடலுறுப்புகளற்றதால் அருவத்தன்மையும், பொறிகளால் நுகரப்படும் இயல்பினால் உருவத் தன்மையும் கொண்டதால் இஃது இறைவனின் அருவுருவ நிலையாயிற்று.

அத்தா - ஞானாசிரியனாக வந்து ஆட்கொண்டதால் தந்தையாகவு முள்ளான். தம்மையும் மற்ற அடியார்களையும் அடிமைகளாக ஏற்றுக் கொண்டதால் எனக்கும் அவர்களுக்கும் தலைவன் என்பார் **எம்மானே** என்றார்.

மான் - பெருமையுள்ளவன். பெருமையாவது தனக்குவமை இன்மை.

" *தன்னை யறிவித்துத் தான்றானாச் செய்தானைப்*
பின்னை மறத்தல் பிழையலது - முன்னவனே
தானேதா னாச்செய்துந் தைவமென்றுந் தைவமே
***மானே** தொழுகை வலி.*

(சிவஞான போதம் 12-ம் சூத்திரம் அதி. 4. உ. வெ.)

என்றதில் "***மானே***" என்றதற்குச் சிற்றுரை, சிவஞான மாபாடியம் இரண்டிலும் ''பெரியோன்" என்றே பொருள் கூறப்பட்டுள்ளது காண்க.

காணும் ஆறு காணேன்- திருப்பெருந்துறையில் உன்னைப் பிரிந்த பின் மீண்டும் காண்பதற்கான வழியைக் காணேன். நீ என்னை உன் அருள் நோக்கால் காண்பதற்காக நான் மேற்கொள்ள வேண்டிய நெறியையும் அறியேன் எனலுமாம். 87-ம் திருப்பாட்டில் ''கண்ணுரக் காணுமாறு உனைக் காணேன்" என்றதன் கீழுரைத்தவை காண்க. உன்னைக் காணுவிடினும் உன்னைக் காணும் வழியையும் காணேன் என்றுரை கூறினுரும் உண்டு. **காணேன்**- வினையாலணையும் பெயர்.

உன்னை அந்நாட்கண்டேனும். அந்நாள் - திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் ஞானுசிரியனுக எழுந்தருளி இருந்து என்னை உன் அடிமையாக ஏற்றுக் கொண்ட அந்த நாள்.

கண்டேனும் - கண்டேனேனும் என்பது **கண்டேனும்** எனத் தொகுத்தலாயிற்று. உன்னை அந்நாட் கண்டேனேனும் இன்று காணும் ஆறுகாணேன் என்று தொடர்புபடுத்தி முடித்துக் கொள்க.

பாணே பேசி என்தன்னைப் படுத்தது என்ன. பாண்- இனிய சொற்கள். என்னை ஆட்கொண்ட காலத்தில் இனிய மொழிகளைப் பேசி என்னை உன் அடிமையாக்கிக் கொண்டாய். பிறகு ஏனைய அடியார்களை உன் திருவடி நிழலில் சேர்த்து வீட்டின்பம் நல்கி என்னை மட்டும் கீழ்ப்படுத்தி இவ்வுலகில் நிறுத்தக் காரணம் என்ன? என்றவாறு. இறைவன் நம் அடிகளை மேலும் சில காலம் இவ்வுலகில் நிறுத்தியது உலக நன்மையின் பொருட்டு என்பதை முன்னம் கண்டோம். **படுத்தது என்ன**- "பகுத்ததென்னே" என்பது திரு. மு. அருணுசலம் அவர்கள் கொண்ட பாட பேதம்.

பாண் - இச்சகம்; தாழ்ச்சி; இகழ்ச்சி; என்றெல்லாம் பொருள் கொண்டு, பாணே பேசியவன் இறைவன் என்றும்; அடிகள் என்றும் கூறிப்பல விதமாக உரை வகுத்தனர் முன்னுரையாளர்கள். அவை நம் அடிகளின் சரித நிகழ்ச்சிக்குப் பொருந்துமாறின்மை கண்டு ஒதுக்குக.

ஏண் நாண் இல்லா நாயினேன் - உன் திருவடி நிழலை எய்தற்குரிய தவ வலிமையோ காணுதற்கரிய உன்னைக்கண்டும் ஏனைய அடியார்கள் போல வீடுபேறு எய்தாது உன்னுல் விலக்கப்பட்டது குறித்து நாணமோ இல்லாது இழிந்தவன் என்றவாறு. **ஏண்** - வலிமை. ஈண்டுத் தவவலிமை குறித்து நின்றது. **நாண்**- வெட்கம். **நாயினேன்**- இழிந்தவன். நாய் பற்றி முன்னம் சிவபுராணம் (60-ல்) ''நாய்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

செத்தே போயினேன் - ஆசாரியனே என் உயிர். அவன் என்னைப் பிரிந்தபின், நான் உயிர் பிரிந்தபின் உள்ள உடம்பாகிய சவத்தை ஒத்தேன் என்றவாறு.

என் கொண்டு எழுகேன் - இனி எதைப் பற்றுக் கோடாகப் பிடித்துக் கொண்டு உய்தியடைவேன்.

இத்திருப்பாடலில் நம் அடிகள் இறைவனைப் "பரஞ்சோதி, ஆணே பெண்ணே ஆரமுதே, அத்தா. எம்மானே" என்றெல்லாம் விளித்து "உன்னைக் காணும் ஆறுகாணேன் என்றன்னைப் படுத்தது என்ன" என்றெல்லாம் இரங்குவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். "என் கொண்டு எழுகேன்" - என்றதால் இனி உய்ந்து வீட்டின்பத்தில் தன் வயம் இழந்து திளைத்தல் வேண்டும் என்பது குறிப்பாற் பெறப்பட்டுப் பதிகம் நுதலிய "**ஆனந்தத் தழுந்தல்**" பெற்றும்.

89. *மானேர் நோக்கி உடையாள்பங்கா*
மறையீறறியா மறையோனே
தேனே அமுதே சிந்தைக்கரியாய்
சிறியேன் பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமைபறைந்தேன்
சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும்பொய்யும்
புறமே போந்தோமே. அரு

(இ -ள்)

மான் விழி போன்ற கண்களுள்ளவளும் எங்களை அடிமையாக உடையவளுமான உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனே; வேதங்களும் உபநிடதங்களும் உணரமுடியாத மறைபொருளாக உள்ளவனே; தேனே அமுதே; மனத்தால் எட்டுதற்கும் அரியவனே; சிறுமையுடையவனாகிய என் குற்றங்களைப் பொறுத்தருளும் பெரியோனே; அடியவர்கள் எல்லாரும் பெருமை மிக்க சிவபுரம் அணுகப் போயினர், யானும் என் பொய்யும் புறம்பாகச் சென்றோம் (அதனால்) சிறிது கடுஞ்சொல் மொழிந்தேன் (அதைப் பொறுத்தருள்க) என்றவாறு.

(வி-ரை)

மூன்றும் அடியிலுள்ள ''சிறிதே கொடுமை பறைந்தேன்'' என்பதை இப்பாடலின் இறுதியிற் புணர்த்து உரை காண்க.

மான் நேர் நோக்கி உடையாள் பங்கா. மான் நேர் நோக்கி - என்றும் இளமையுடையவள் என்றவாறு. முன்னம் 59-ம் திருப்பாடலில் ''மானேர் நோக்கி உமையாள் பங்கா'' என்றதும் ஆண்டு விரித்துரைத்ததும் காண்க. ***உடையாள்*** - உலகங்கள் அனைத்தையும் தன் உடைமையாக உள்ளவள் ''உடையாளுன்றன் நடுவிடுக்கும்'' *(376)* என்பார் பின்னரும்.

மறை ஈறு அறியா மறையோனே - மறை - நான்மறைகள். ***ஈறு*** - அவற்றின் முடிவும் ஞானபாதமுமாகிய உபநிடதங்கள். உம்மைத் தொகைகளை விரித்துக் கொள்க. ***மறை***- கன்மப் பகுதியையும் ***ஈறு*** ஞானப் பகுதியையும் உணர்த்துவன. அவை இரண்டுமே இறைவனை அறியாமல் எய்த்து நின்றன. ***மறையோன்*** - மறைபொருளாக இருப்பவன்; மறைந்து நிற்பவன் எனலுமாம். மறைகளை அருளிச் செய்தவன். அந்தணன் எனலுமொக்கும். ''நூலுணர்வுணரா நுண்ணியோன்'' *(திருவண்டப் பகுதி 49)* "மறைத்திறம் நோக்கி வருந்தினர்க கொளித்தும் *(திருவண்டப் பகுதி 130).*" "வேதங்கள், ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" *(சிவபுராணம் 34, 35)* என்று நம் அடிகளே அருளிச் செய்தல் நினைக.

தேனே அமுதே சிந்தைக்கு அரியாய்- தேனும் அமுதும் உண்டார்க்கு இன்சுவை பயப்பன. அவற்றுள் தேன் பூவுலக வாசிகளுக்கு எப்பொழுதும் எளிதிற் கிட்டுவது. இது மெய்யடியார்களுக்கு இறைவன் எளிவந்த இயல்பு குறித்து நின்றது.

அமுது - தேவர்களுக்கு மிகவும் அரிதின் முயன்ற பின்பும் இறையருளால் கிட்டுவது. இஃது இறைவன் நூலுணர்வுக்கு அரியவனாயினும் திருவருள் துணையால் கிட்டும் பொழுது பேரின்பம் நல்கல் குறித்து நின்றது.

சிந்தைக்கு அரியாய் - மாற்றம் மனம் கழிய நின்ற இறைவன் இயல்பை ***மறையோனே*** என்றதால் பெறவைத்தார். சிந்தை மனத்தின் செயல். மனம், மாயேயங்களுள் ஒன்று. இறைவன் மாயையைக் கடந்து நிற்பவன். ஆதலின் அவன் மனத்தால் தேடி அடையப் பெறான். ஆயினும் திருவருட்துணையால் மனம் சிவகரணமாக மாறும் பொழுது அது

சிவபெருமான் எழுந்தருளத் தகுதி பெறும். எனவே சிந்தைக்கு எட்டாதவன் என்னுது "**சிந்தைக்கு அரியாய்**" என்றருளினர்.

> *'' அரியதில் அரிய அரியோன்''* (திருவண்டப்பகுதி 47)
> *'' மறையீறறியா மறையோனே ''(89)*
> *'' மறையி லீறுமுன் தொடரொ ணுதநீ'' (99)*

- என்று நம் அடிகளே அருளிச் செய்தல் காண்க.

சிறியேன் பிழையைப் பொறுக்கும் கோனே - சிறுமைக் குணம் குற்றம் செய்யும் இயல்பினது. அக்குணம் உடையார் சிறியார். பெருமைக் குணம் சிறியோர் செய்யும் குற்றங்களைப் பொறுத்தருளும் இயல்பினது. அக்குணம் உடையார் பெரியோர். யாவரிலும் சிறியவனுகிய நான் செய்யும் குற்றங்களை யாவரினும் பெரியோனுகிய நீ பொறுத்தருளல் வேண்டும் என்றவாறு. **கோன்**- அரசன். ஈண்டுப் பெரியோனுகிய என் தலைவன் என்ற பொருளில் நின்றது. **கோன்** ஆனிரைகளை ஓம்புவன். முல்லை நிலத்தலைவன் என்ற பொருளில் ஈண்டு ஆன்மாக்களின் தலைவன் ; பசுபதி என்றுரைக்கவும் நின்றது.

அடியார் சிவமாநகர் குறுகப் போனர் - என்று மாற்றிக் கொள்க. ***அடியார்*** - திருப்பெருந்துறையில் பொய்கை நாப்பண் தோன்றிய ஒளியில் புக்கொடுங்கியவர்களும், அச்செய்தியறிந்து ஓடிவந்து அச்சோதியில் புகப்பெருமல் பல்வேறு வகையில் உயிர் நீத்தவர்களுமாகிய சிவனடியார்கள். ***சிவமாநகர்*** - மங்கலமும் பெருமையும் பொருந்திய சிவபுரம்; வீட்டுலகு. **குறுகப்போனர்** தங்களுக்கும் வீட்டுலகுக்கும் மத்தியில் உள்ள இடைவெளி குறுகிக் கொண்டே வந்து முடிவில் இடைவெளியே இன்றி நிற்க வீட்டுலகில் சேர்ந்தவர்கள்.

யானும் பொய்யும் புறமே போந்தோமே - மெய்ப் பொருளாகிய சிவத்தின் இருப்பிடம் மெய்யாகிய சிவநகரமாகும். ஆண்டுப் பொய்க்கு இடமின்று. மெய்யடியார்கள் மெய்ப்பொருளாகிய சிவத்தின் துணையுடன் சிவமாநகர் சேர்ந்தனர். பொய்யின் துணைகொண்டு பொய்யனுகிய யான் அங்குச் செல்ல இயலாமையின் அதற்குப் புறம்பான அவமாநகர் போந்தேன். அஃதாவது இவ்வுலகில் நின்று விட்டேன் என்றவாறு. பொய் என்பது ஒரு காலத்தில் இல்லாமல் அடுத்து வரும் காலத்தில் இருந்து தொடர்ந்து வரும். பிற்காலத்தில் இல்லாதொழிவதாகும். அஃது

உடம்புக்குப் பொருந்துமாகலின், உடலை நீத்த மெய்யடியார்கள் எல்லாரும் வீட்டுலகம் எய்தினர். உடம்புடன் கூடிய நான் இவ்வுலகில் நின்று விட்டேன் என்று பொருள்பட உரைப்பர் திரு. பாரதியாரவர்கள்.

போந்தோம் - சென்றோம். ஏ - ஈற்றிசை.

பொய் - உண்மை மல போதமான "யான்" "எனது" என்றுரைப்பர் சீகாழித் தாண்டவராயர்.

திருச்சிற்றம்பலம்

" மானேர் நோக்கி உமையாள்
பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின்
தெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் திருக்குறிப்புக்
கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தானேன் உடையானே."

(திருவாசகம் 59)

"பொய்யுடை யார்க்கரன் போலக லும்மகன் றுற்புணரின்
மெய்யுடை யார்க்கவ னம்பலம் போல மிகநணுகும்
மையுடை வாட்கண் மணியுடைப் பூண்முலை வாணுதல்வான்
பையுடை வாளர வத்தல்குல் காக்கும்பைம் பூம்புனமே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் 48)

என்பன நம் அடிகளின் அமுத வாக்குக்கள்.

ஏனைய அடியார்களுக்கு முத்தி கொடுத்த ஞான்று இறைவன் நம் அடிகளை இவ்வுலகில் மேலும் சிலகாலம் நிறுத்தியது உலக உயிர்களின் நன்மைப் பொருட்டு என்பதை முன்னமே விளக்கினும்.

சிறிது கொடுமை பறைந்தேன் - சிறிது கடுஞ்சொற்கள் கூறிவிட்டேன் என்றவாறு. **கொடுமை** - கேள்வியிலும் விளைவினும் கடியவாய சொற்கள்,

இதை;

''காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

(திருக்குறள் 386)

என்ற வள்ளுவர் வாய்மொழிக்குப் பரிமேலழகர் உரையில் காண்க. ***பறைந்தேன்*** - சொன்னேன். அது 88-ம் திருப்பாட்டில் ''பாணேபேசி யென்றன்னைப் படுத்த தென்ன" என்று மொழிந்தது. ***சிறிதே*** - 'சிறிதென்" என்பது திரு. மு. அருணசலம் அவர்கள் கொண்ட பாடம்.

இத்திருப்பாடலில், நம் அடிகள் இறைவனை "மறையோனே, தேனே, அமுதே" என்றெல்லாம் விளித்து "யான் சிவமாநகர் புகாமல் பொய்யுடன் கூடிப் புறமே போந்தேன்" என இரங்குவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். அடியார் எல்லாரும் சிவமாநகர் குறுகப் போனார் என்றதால் தாமும் அப்பேறு பெற்றுத் தம்வசமிழந்து ஆனந்தம் நுகர வேண்டும் என்பது குறிப்பால் பெறப்பட்டுப் பதிகம் நுதலிய "**ஆனந்த பரவசம்**" பெற்றும்.

90. புறமே போந்தோம் பொய்யும்
யானு மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா
வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்ந்தவடியார்
மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்துசிவனே
நின்றாள் சேர்ந்தாரே. அசூ

(இ -ள்)

சிவபெருமானே, உன்னையே முழுதும் உரிமையாகச் சார்ந்த அடியவர்கள், பிறிதொன்றனையும் அறியாதவராய்ச் சிறந்த தொண்டுகளையே செய்து செந்நெறிக்கட் போந்து நின் திருவடிக்கண் இயைந்தனர்; யானும் பொய்யும் புறம்போனேம்; அவ்வளவினன்றி யானே மெய்ம்மையாகிய அன்பைப் பெறுவதற்கே ஆற்றலுடையவன் அல்லாத தன்மையை அடைந்துள்ளேன்.

(வி-ரை)

இத்திருப்பாடலை, ''சிவனே, நின்னையே அறச்சார்ந்த அடியார், மற்று ஒன்று அறியாதார், சிறவே செய்து வழி வந்து நின்தாள் சேர்ந்தார்; யானும் பொய்யும் புறமே போந்தோம்; யான் மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லா வன்மை பெற்றேன் - என்று அன்னுவயப்படுத்திக் கொள்க.

சிவனே. சிவன் - மங்கலமானவன். தன்னைச் சார்ந்த உயிர்களை மங்கலமாக்குபவன். ஈண்டு, உன் மெய்யன்பைப் பெறத் தகுதியற்றவனாகிப் பொய்யுடன் புணர்ந்து புறமே போய் விட்டவனாகிய என்னையும் உன்தாள் சேர்த்துக் கொள்ளும் ஆற்றலுடையவன் என்பது குறிப்பு. ஏகாரம் விளி, முன்னம் சிவபுராணம் 11 -ல் ''சிவன்'' என்றதன் கீழுரைத்தவை காண்க.

நின்னை அறவே சார்ந்த அடியார். நின்னை - அறவே என்பதிலுள்ள ஏகாரத்தைப் பிரித்து இங்குக் கூட்டி "***நின்னையே***" என்க. ஏகாரம் தேற்றம். பிரிநிலையாகக் கொண்டு ஏனைய தெய்வங்களையெல்லாம் விட்டு ***நின்னையே*** சார்ந்தவர்கள் எனலுமாம். ஏக நாயக வழிபாட்டை வற்புறுத்தியவாறு. ***அற*** - முழுவதும். உலகியற் சுற்றம் முதலியவற்றை ஒழித்து உன்னையே பற்றியவர்கள் எனலுமொக்கும். உடல் பொருள் ஆவி எல்லாம் உனக்கே உரிமையாக்கியவர்கள்.

மற்று ஒன்று அறியாதார் - உன்னை விடச் சிறந்த வேறு ஒரு பற்றுக்கோடு இருப்பதாக நினையாதவர்கள்.

சிறவே செய்து வழி வந்து உன் தாள் சேர்ந்தார். சிறவு - சிறப்பு. இங்கே அன்பு என்ற பொருளில் நின்றது. இறவு - இறப்பு ; பிறவு - பிறப்பு, என்பன போலச் சிறப்பு ***சிறவு*** என நின்றது. சிறப்பாவது உண்மைச் சரியை, உண்மைக்கிரியை, உண்மையோகம் என்ற தவங்களாம். இவை உண்மை ஞானத்தைப் பெறும் வழிகளாம்.

செய்து - இத்தகைய தவத்தைச் செய்து. ***வழிவந்து*** - இத்தவங்கள் வழியாக உண்மை ஞானத்தை எய்தி. ***வழிவந்து*** - "***வழுவாது***" என்பது திரு.மு.அருணாசலம் அவர்கள் கொண்ட பாடம். ***நின்தாள் சேர்ந்தார்*** - அந்த உண்மை ஞானமாகிய சாதனத்தால் உன் திருவடியை எய்தினார்கள். ***சிறவே*** - ஏகாரம் பிரிநிலை. உபாயச் சரியை முதலியவற்றை நீக்கித் திருவடி எய்துவதற்குக் காரணமான உண்மைச் சரியை முதலிய நெறிகளை வலியுறுத்தவாறு.

பொய்யும் யானும் புறமே போந்தோம். பொய்யும்யானும் - பொய்ம்மையைக் குணப் பொருளாகவும் அதனையுடைய தம்மைக் குணிப் பொருளாகவும் கொண்டார். ஆதலின் "***யானும் பொய்யும்***" என்று மாற்றிக் கொள்க. குணப் பொருளாகிய "***பொய்***" குணியாகிய தம்மினும் வலிமையுடைத்து என்பது குறிக்கப் பொய்யை முதலில் வைத்தார். ***புறம்*** சிவ உலகுக்கு வெளியில் உள்ள பூவுலகம். முன்பாட்டில் கூறியபடி ***பொய்*** என்பதற்கு ''உடம்பு" என்று பொருள் கொண்டு மெய்யடியார்கள் எல்லாரும் தங்கள் உடல்களை விட்டு வீடுபேறுற்றனர். நான் பொய்யாகிய உடம்புடன் கூடி வீட்டுலகுக்குப்புறம்பான பூவுலகிலுள்ளேன் எனலுமாம்.

யான் மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன். யான் - பொய்யுடன் அதன் குணியாகப் பிரிப்பின்றி நிற்கும் நான் பொய்யுடன் வீட்டுலகுப் புறமே போந்தது மட்டுமன்றி. "***மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லா***- சாதனமாகிய மெய்யன்பைப் பெறுவதற்கே தவ வலியை உள்ளவன் அல்லாத. சாதன சாத்தியம் இரண்டனுள் சாதனம் பிரித்துக் கூறப்பட்டமையின் ***பெறவே*** - என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை. ***வண்ணம்*** - வண்ணமும் என்பதிலுள்ள உம்மை தொக்கு நின்றது. ***வண்ணம்*** - இயல்பு. பொய்ம்மையாகிய குணமேயன்றித் தவ வன்மைக்கு உரியதல்லாத இயல்பையும் பெற்றேன் என்றவாறு. ''என் செய்கேன் காத்தருள்க" என்பன குறிப்பெச்சம்.

இத்திருப்பாடலின்கண், "யானும் பொய்யும் புறமே போந்தோம்; அஃதன்றியும் மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன்" என்று இரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். ''அடியார் மற்றென்று அறியாதார் சிறவே செய்து வழி வந்து நின்தாள் சேர்ந்தார்" என்றதால் அவர்களைப் போல் நானும் உன் திருவடி இன்பத்தில் தன்வசமிழந்து திளைத்தல் வேண்டும் என்ற குறிப்புப் பெறப்பட்டுப் பதிகம் நுதலிய "***ஆனந்த பரவசம்***" பெற்றும்.

91. தாரா யுடையா யடியேற்
குன்றா ளிணையன்பு
பேரா வுலகம் புக்காரடியார்
புறமே போந்தேன்யான்
ஊரா மிலேக்கக் குருட்டாமிலேத் தாங்
குன்றா ளிணையன்புக்
காரா யடியே னயலே
மயல்கொண் டழுகேனே. அஎ

(இ -ள்)

"இறைவனே, மெய்யடியார்கள் மீளா உலகமாகிய வீடு பேறுற்றனர்; யானோ அதற்குப் புறம்பாகிய இடத்தையே எய்தினேன்; ஊர் ஆநிரைகள் கனைக்க, அவற்றுடன் கூடியிருந்த குருட்டு ஆவும் கனைத்தது போன்று, உன் திருவடிஇணைக்கு அன்பு செலுத்தும் அனுபவம் பெறாத அடியேன், மெய்யடியார்கட்குப் புறம்பா இருந்து ஆசைப்பட்டு அழுது கொண்டுள்ளேன், (ஆதலின்) அடியவனாகிய எனக்கு நின் திருவடி இணைக்கண் மெய்யன்பைத் தந்தருள்வாயாக.

(வி -ரை)

இத்திருப்பாடலை; உடையாய், அடியார் பேரா உலகம் புக்கார்; யான்புறமே போந்தேன்; ஊர்ஆமிலேக்கக் குருட்டு ஆ மிலேத்தாங்கு; உள்தாள் இணைக்கு அன்பு ஆரா அடியேன்; அயலே மயல் கொண்டு அழுகேனே; அடியேற்கு உன் தாளிணை அன்பு தாராய் - என்று அன்னுவயப்படுத்திக் கொள்க.

உடையாய் - நீ என்னை அடிமையாக உடையவன். ஆதலின் நீ உன் உடைமை அடிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்புள்ளவன் என்றவாறு. ***அடியார் பேரா உலகம்புக்கார்*** . ***அடியார்***- அன்பு அனுபவம் மிக்க மெய்யடியார்கள். இவர்கள் திருப்பெருந்துறையில் நம் அடிகள் காண முத்தியடைந்தவர்கள். ***பேரா உலகம்*** - மீண்டும் வாராத உலகம். வீட்டுலகம். ***பேரா*** - பெயர்தலில்லாத; மீளாத. ***புக்கார்*** - சாயுச்சிய முத்தி பெற்றனர்.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி

(திருக்குறள் 356)

என்றது காண்க.

"***போரா உலகம்***" - என்பது பிழையான பாடம். யான்புறமே போந்தேன். புறம் போந்தார் ஓரோவமயம் உட்புகுதலும் உண்டு. ஆனால், யானோ உட்புக வழியற்று புறத்தே செல்லலானேன் என்பார், ***புறமே போந்தேன்*** என்றார். ஏகாரம் தேற்றம். மெய்யடியார்கள் திரும்பி வாராத நிலையில் உட்புக்கார்; யான் உட்புகா நிலையில் புறம் போந்தேன் என்றவாறு.

போந்தேனியான்- என்பதும் பாடம்.

ஊர் ஆ மிலைக்கக் குருட்டு ஆ மிலைத்தாங்கு. ஊர் ஆ - ஊர் மக்களின் ஆனிரைகள். இவற்றை "ஊர்க்காலி" என்பர். பல இல்லங்களில் உள்ள ஆக்களைத் திரட்டி ஆயன் மேய்ச்சலுக்குக் கொண்டு செல்வான். மாலையில் அவற்றை உரியவர் இல்லங்களில் உய்ப்பான். சண்டீச நாயனார், திருமூல நாயனார் புராணங்கள் பார்க்க.

"***மிலைத்தல்***" - கனைத்தல். மேய்ச்சல் புலத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் ஊர் ஆனிரைகள் மாலை நேரம் எய்தியதும் தம் வயிறார மேய்ந்த நிலையில் தம்கன்றுகளை நினையும். அந்நினைவால் பால் சுரக்கும். அதை உண்ணக் கன்றுகளை நினைந்து கனைக்கும். ஆயன் அவற்றைத் திரட்டி ஊரில் உரியவர் இல்லங்களில் உய்ப்பன். ஆங்கு அவை தம் கன்றுகளைக் கண்டு மகிழக் கன்றுகள் பாலுண்ணும். இம்மந்தையைச் சேர்ந்ததும், கன்று இல்லாததுமான குருட்டுப்பசு ஒன்று, கதிரவன் குடதிசையை நண்ணியதையோ மாலைப் பொழுதானதையோ அறியாது. ஏனைய ஆக்கள் கனைத்தலைக் கேட்டுத் தானும் கனைக்கும். ஆனிரைகளுடன் கலந்து ஊர் திரும்பி உரியவர் இல்லத்தில் உய்க்கப்பட்டும் ஆங்குத் தன் கன்றைக் காணவோ, அது தன்பால் பாலுண்ணவோ பெறாததாகும். அவ்வாறே மெய்யடியார்கள் உண்மைச்சரியை முதலிய தவ நெறிகளில் நின்று பேரா உலகம் பெற்றனர். அவர்களைக் கண்டு நானும் சரியை முதலிய தவநெறிகளில் நின்றேன். ஆனால் அவற்றை உண்மை அன்புடன் மேற்கொண்டேனல்லேன். எனவே நான் பேராவுலகுக்குப் புறமே போந்தேன் என்றவாறு.

மிலேத்தல் என்பதற்கு இவ்வாறன்றி, ''வீடு திரும்புதல்'' ''மேற்கொள்ளுதல்'' ''சூட்டுதல்'' ''மயங்குதல்'' ''காம இச்சைக்குரல் கொடுத்தல்'' என்றெல்லாம் பொருள்கொண்டு பலவாறு உரைத்தனர் முன்னுரையாளர்கள். வீடு திரும்புதல் என்று பொருள் கொண்டோர்;

''தேவுடனே கூடியசொல் செழுந்தமிழோர் தெரிந்துரைத்த
பாவுடனே கூடியவென் பருப்பொருளும் விழுப்பொருளாம்
கோவுடனே கூடிவரும் குருட்டாவு மூர்புகுதும்;
பூவுடனே கூடியநார் புனிதர்முடிக் கணியாமால்''

(சேக்கிழார் சுவாமிகள் புராணம் 11)

என்பதை மேற்கோள் காட்டுவர். இப்பாடலில் குருட்டுப்பசு ஏனைய ஆக்களுடன் கூடி ஊர் புகுந்து விட்டது. நம் அடிகள் ஈண்டுக் கூறுவது அஃதன்று. மெய்யடியார்கள் பேரா உலகம் புக்கனர், நான்புறமே போந்தேன் என்பதாம் ; எனவே இஃதுரையன்று என்று விடுக்க.

"மேற்கொள்ளுதல்" என்று பொருள் கொண்டார். ஏனைய ஆக்கள் புல்லைக் கறிப்பதை ஓசையால் அறிந்து குருட்டாவும் அங்குப்புல்லிருப்பதை அறிந்து தானும் மேய்ந்தது என்று விளக்குவர். "ஏனைய அடியார்கள் பயன் பெற்றனர்; நான் பயன் பெறுதொழிந்தேன்" என்று கூறும் நம் அடிகள் கருத்து ஈண்டும் எய்தாமை கண்டு ஒதுக்குக. "சூட்டுதல்" என்று பொருள் கொண்டவர் திருவாசகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பாளர். அவர் மொழிபெயர்ப்பு ``I 've tried to crown the village cow, and so have crowned the blind என்பதாகும். இதன் பிழை தேற்றம். ''மயங்குதல்'' என்னும் பொருள் கொண்டார். திருவாசகம் 144 -ல் ''வலேத்தலே . . . . மிலேத்தலேந்தேனே'' என்று நம் அடிகள் வாக்கையே மேற்கோள் காட்டுவார். அப்பொருளும் இப்பாடலில் சிறவாமை காண்க. ''காம இச்சைக்குரல் கொடுத்தல்'' என்று பொருள் கொண்டார். ஊர் ஆனிரைகளின் மத்தியில் ஓர் ஆனேறு நண்ணின், அதன் தோற்றப் பொலிவால் காமுற்ற பசு கனேக்கும். ஆனேறு அதனுடன் புணர்ந்து இன்பமளிக்கும்; ஆனேற்றைக் காண இயலாத குருட்டுப் பசுவும் முந்தையபசு கனேத்ததைக் கேட்டுத் தானும் கனேக்கும் ; ஆனேறு குருட்டுப் பசுவுடனும் கூடி இன்பமளிக்கும் என்று விளக்குவர். ஈண்டு கண்பார்வையுள்ள பசுவைப் போன்றே குருட்டுப் பசுவும் இன்பம் துய்ப்பதறிக. இது நம் அடிகள் கூற வந்ததன்று என விலக்குக.

மலைக்க; மலைத்திரங்கு; மிலைத்தங்குன்; மிலைத்தாங்குன் - என்பன பாடபேதங்கள்.

உன்தாள் இணைக்கு அன்பு ஆரா அடியேன் - உன் திருவடிக்கண் செலுத்தும் மெய்யன்பு பெறுதற் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய உண்மைச் சரியை முதலிய தவவொழுக்களில் நிலைக்காத யான் பெயரளவில் உன் அடியவனாக உள்ளேன் என்பார், ***உன் தாள் இணைக்கு அன்பு ஆரா அடியேன்*** என்றார். ***ஆர்தல்*** - நிறைய அனுபவித்தல். ***ஆராய் அடியேன்*** - என்று பாடம் கொண்டு ''அடியேன் யார்'' - எத்தகுதியுடையவன். ***ஆய்*** - அதை நீ ஆராய்க என்றுரைப்பாருமுளர்.

அயலே மயல்கொண்டு அழுகேனே. அயலே - உன்னைத் தொடர்ந்து வந்து உன்தாள் சேர்ந்தாருடன் நானும் தொடர்ந்து வந்து முத்தியடையாமல் வேறிடத்தில் நின்று ஆசைப்பட்டு அழுகின்றேனே.

அயல் - வேறிடம். வீட்டுலகுக்குப் புறமான இடம். பூவுலகம். ***மயல்*** - அவா. "***அழுதேனே***" "***எழுகேனே***" என்பன பிழையான பாடம்.

அடியேற்கு உன்தாள் இணை அன்புதாராய். அடியேற்கு - அடியேன் - நான் வீட்டுலகம் எய்தத் தகுதியுள்ள மெய்யன்பன் அல்லேனாயினும் திருப்பெருந்துறையில் நீ என்னை ஆட்கொண்டதால் உன் அடியேன் ஆனேன். எனவே பேரா உலகம் பெறத் தகுதியற்றவனாயினும் அத்தகுதி பெறும் சாதனமாகிய மெய்யன்பு பெறுதற்கு உன் அடியவன் என்ற முறையில் உரிமையுள்ளவன். எனவே அதைத் தந்தருள்க என்றவாறு. ***உன் தாள் இணை அன்பு*** - உன் இரு திருவடிகளின்கண் அன்பு. ***இணை*** என்பதை வினைத்தொகையாகக் கொண்டு உன் திருவடிகளில் என்னை இணைக்கும் அன்பு எனலுமாம். ***தாராய்*** - தந்தருள்க. வியங்கோள் வினைமுற்று.

இத்திருப்பாடலில் "அடியார் பேரா உலகம் புக்கார்; யான் புறமே போந்தேன்; மயல்கொண்டு அழுகேன்" என இரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். "உன் தாளிணை அன்பு தாராய்" என்றதால் திருவடி நிழலில் தன் வசமிழந்து இன்புறவேட்டல் குறிப்பால் பெறப்பட்டுப் பதிகம் நுதலிய "***ஆனந்த பரவசம்***" பெற்றும்.

92. அழுதேனின்பா லன்பா
மனமா யழல்சேர்ந்த
மெழுகே யன்ஞர் மின்ஞர்
பொன்ஞர் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா
ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண்
டுன்னைப் பணிகேனே. அஅ

(இ -ள்)

நின்னிடத்து அன்புமயமான உள்ளம் உடையாராய்; ஒளி பொருந்திய பொன்போன்ற நின் திருவடிகளைத் தரிசித்துத் தீயிடைப்பட்ட மெழுகை ஒத்தவராய்; வணங்கிய நிலையிலே நின்னைப் பற்றித் தொடர்ந்த மெய்யன்பரோடும் தொடர்ந்து வாராமல்; தனிமைப்பட்டு அழுதேன்; (ஆதலிற்) பயனின்றிப் பிறந்தவனுகிய யான்; எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு நின்னை வழிபடுவேன்.

(வி -ரை)

இத்திருப்பாடலை; - நின்பால் அன்பு ஆம் மனமாய்; மின்ஞர் பொன்ஞர் கழல்கண்டு; அழல் சேர்ந்த மெழுகே அன்ஞர்; தொழுதே உன்னைத் தொடர்ந்தா ரோடும் தொடராதே; அழுதேன்; பழுதே பிறந்தேன்; என் கொண்டு உன்னைப் பணிகேன்; - என்று அன்னுவயப்படுத்திக் கொள்க.

நின்பால் அன்பு ஆம் மனமாய். அன்பு ஆம் மனம் - அன்பு என்னும் மூலப் பொருளைக் கொண்டு செய்யப்பட்ட மனம். அத்தகைய அன்பும் மனைவி, மக்கள், இல்லம், உறவு, நாடு போன்ற உலகியற் பொருள்கள் மாட்டன்றி அழிவற்ற பொருளாகிய இறைவன்பாற்பட்டதென்பார் **நின்பால் அன்பு** என்ருர்.

மின் ஆர் பொன் ஆர் கழல்கண்டு - நிறைந்த மின்னல் போன்றதும் பொன் போன்று மிக்க மதிப்புள்ளதுமாகிய திருவடிகளைத் தரிசித்து. **மின்னல்** நிறைதலாவது; பேரொளியுடன் ஒரு மின்னல் தோன்றிக் கணப்பொழுதில் மறைந்து விடும். பின்னர் மீண்டும் தோன்றி மறையும். அவ்வாறு பல மின்னல்கள் தோன்றி மறையாமல் முதலிற் தோன்றிய மின்னலே இடைவெளியின்றி மிக நீண்ட காலம் நிலைத்து நிற்கும் பொழுது கிட்டும்

பொன் என்பது உலகில் ஏனைய பொருள்களை விலை மதிப்பிடற்கான அளவை. இறைவன் திருவடிகளோ பொன்னினும் மேலாகி, மதிப்பிட ஒண்ணுதவை. உவமை கூற உலகில் வேறு பொருளின்மையால் நிறைந்த பொன் என்பார் **பொன்ஆர்** என்றார். **ஆர்தல்** நிறைதல். இறைவன் திருவடிகளைச் சிவஞானம் என்று சைவாகமங்கள் கூறும். ஞானத்தை ஒளிமயமானது என்பது மரபு. ஆதலின் **மின்னார் கழல்** என்றார். அந்த ஞானம் அறிவை மறைக்கும் ஆணவ மலத்தை வெல்வதாகலின் வெற்றியின் சின்னமாகிய **கழலைத்** திருவடியாகக் கூறினர். **கண்டு** - தரிசித்து. ஞானதரிசனமே மனத்தை உருக்க வல்லது என்பதைப் பிறகு கூறவுள்ளார்.

அழல் சேர்ந்த மெழுகே அன்னர் - தீயிடைப் படுவதற்குமுன் மெழுகு குழையும், பின்னர்த் தீயிடைப்பட்டதும் உருகி வடியும். அவ்வாறே இறைவன் திருவடிகளைத் தியானம் செய்யும் பொழுது உள்ளம் குழையும், பின்னர்க் காட்சி கிட்டும் பொழுது உருகும். அத்தகைய உருகும் உள்ளமுடைய மெய்யன்பர்கள் என்றவாறு. அன்பர் மனம் அனல்சேர் மெழுகு என்றதால் என் மனம் கல்லும் இரும்பும் போன்றது என்பது பெற்றும். ***நின்பால் அன்பாம் மனத்தார் அழல்சேர் மெழுகே என்ன மனத்தாரும்*** என்று கூட்டியுரைப்பர் கவியரசு அவர்கள். ***அன்னர்*** என்பதிலுள்ள ''ஆர்'' விகுதி பிரித்து இங்குச் கூட்டப்பட்டது; உம்மையும் விரித்துக் கொள்ளப்பட்டது.

தொழுதே உன்னைத் தொடர்ந்தா ரோடும் தொடராதே - அங்ஙனம் உள் உருகிய மெய்யன்பர்கள் இறைவனை வணங்குவர். வணங்கிய நிலையிலேயே அவனைப் பின்பற்றி விரைந்து வீட்டுலகுக்குச் செல்வர். அவர்களைப் பின்பற்றி யானும் சென்றேனல்லேன் என்றார். இறைவன் யாண்டும் நிறைந்துள்ளவன். உயிர் அவனைத் தொடர்ந்து செல்வதும் வீட்டுலகம் எய்துதலும் எவ்வாறு எனில்; பக்குவமுள்ள உயிர் உலகியலை நீத்து அருளியலில் புக்கு அழுந்துதலையே இவ்வாறு குறித்தார். ***தொழுதே உன்னைத் தொடர்ந்தார்*** - தொழுவதும் தொடர்வதும் ஒருங்கே நிகழ்ந்தன.

மெய்யடியார்களின் அறிவு, இச்சை, செயல்கள் இறைவனைப் பற்றியே நிற்பன. "***கழல்கண்டு***" என்றதால் அறிவும், "***அன்பா மனமாய்***" என்றதால் இச்சையும் "***தொழுதே தொடர்ந்தார்***" என்றதால் செயலும் பற்றி நின்றமை காண்க.

ஈண்டு, ''அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என்ற சிவஞான போதம் 11-ம் சூத்திரப்பகுதியும், அதற்கு ''அறிவிச்சை செயல்களின் நிகழ்ச்சியாகிய அயராமையும் அன்பும் செலவும் முறையே காரண காரியங்களாய் அவ்வொரு பொருள் மேல் ஒருங்கு நிகழும் என்பார், 'அயராவன்பின் அரன்கழல் செலுமே என்ருர்' என்ற சிவஞான மாபாடியப் பகுதியும் காண்க.

அழுதேன் வருந்தினேன். பயனின்றி அழுவதையே செய்தேன். அழுதேன் என்பது தேசிகர் அவர்கள் மட்டும் கொண்ட பாடம். இது சிறப்பாகக் காணப்படுதலின் இதனையே கொண்டாம். **அழுகேன்** என்பது பாடபேதம்.

பழுதே பிறந்தேன் - வீடுபேறெய்துதற்கு உரிய தவம் புரிவதற்கு இவ்வுடலைப் பயன்படுத்தாமையால் **பழுதே பிறந்தேன்** என்ருர். **பழது** - வீண்; குற்றம். **பிறந்தேன்** - வினையாலணையும் பெயராகப் "**பணிகேனே**" என்பதற்கு வினைமுதலாயிற்று.

என்கொண்டு உன்னைப் பணிகேன் - உன்னைத் தொடர்ந்தாரோடும் தொடர்வதற்கு மெய்யன்பாகிய சாதனத்தை விட்டு, வேறு எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு நின்னை வழிபடுவேன் என்றவாறு. எவனென்னும் வினைப்பெயர் "**என்னென்ருய்**" ஈண்டின்மை குறித்து நின்றது-என்பர் பரிமேழலகர் (திருக்குறள் 2 உரை). **பணிகேன்** - பணிந்து இரக்கேன் என்னும் பொருளதாய் நின்றது. இரத்தல், வீட்டுலகத்தையாம். **என் கொண்டு** - என்ன தகுதியைக் கொண்டு. என்ன உரிமையைக் கொண்டு எனலுமாம்.

இத்திருப்பாட்லுக்கு இவ்வாறன்றித் "தேவரீர் திருவடியான பேரின்ப சுகத்தைக் கருதி அன்பால் எப்போது கிடைக்குமென்று அழேன். என் மனம் (வேறு) என் செய்யும் என்னில் அன்னம் போல நடையும், மின்போல இடையும், பொன் போல அழகுள்ள பாதமும் கண்டவுடன் அவற்றின் மீதுள்ள மோக விகாரத்தால், அழல் சேர்ந்த மெழுகுபோல் உருகுவதன்றித் திருவடியைத் தொடர்ந்து அன்பு செய்யும் அடியாருடன் சேர்ந்து அடிமைப்பணி செய்யாது. வீணுடலெடுத்து விருதாவானேனே ! சுவாமி ! எவ்வண்ணம் உன் பணி செய்யப் போகிறேன் என இரந்தருளிய தெனக் காண்க." என்று உரை வகுத்தார் சீகாழித் தாண்டவராயர் அவர்கள்.

இத்திருப்பாடலில், "பழுதே பிறந்தேன் என்கொண்டுன்னைப் பணிகேன்" என்று இரங்குவதால் சதகம் நுதலிய ''**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். "தொழுதே உன்னைத் தொடர்ந்தாரொடு நானும் தொடர்ந்து வந்திருப்பேனுகில் உன் பொன்னுர் கழல் நீழலில் இன்பத்தில் ஆழ்ந்தாழ்ந்து என் வசமிழந்து இன்பம் துய்த்திருப்பேன்" என்ற குறிப்பால் பதிகம் நுதலிய "**ஆனந்த பரவசம்**" பெற்றும்.

93. பணிவார் பிணிதீர்த் தருளிப்
பழைய வடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி
அதுவு மரிதென்றல்
திணியார் மூங்கி லனையேன்
வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லைதாராய்
பொய்தீர் மெய்யானே. அகூ

(இ-ள்)

பொய்ம்மையின் நீக்கத்துக்குக் காரணமாகவுள்ள மெய்ப் பொருளே; வழிபடும் பழைய அடியவர்களுக்குப் பிறவி நோயை ஒழித்தருளி; உன் அழகு மிக்க திருவடியைக் கொடுக்கின்றய்; எனக்கு அங்ஙனம் கொடுத்தல் அரியது ஆம் என்றலும்; திண்மை பொருந்திய மூங்கிலை ஒத்தவனுகிய எனக்குக் கன்மத்தைச் சாம்பலாக்கி; விரைவில் வந்து குளிர்ச்சி பொருந்திய உன் திருவடியைத் தந்தருள்க.

(வி-ரை)

இத்திருப்பாடலை -''பொய்தீர்மெய்யானே, பணிவார் பழைய அடியார்க்குப் பிணிதீர்தருளி, உன் அணியார் பாதம் கொடுத்தி; அதுவும் அரிது என் றல் திணியார் மூங்கில் அனையேன் வினையைப் பொடி ஆக்கி ஒல்லை வந்து தணியார் பாதம் தாராய்" - என்று அன்னுவயம் செய்து கொள்க.

பொய்தீர் மெய்யானே. பொய் - உடம்பு உட்பட மாயா காரியங்கள் அனைத்தும் ஒரு காலத்தில் இல்லாமல், பின்னர்த் தோன்றிச் சிலகாலம் இருந்து, பிறகு ஒரு காலத்தில் அழியும் மாலையன. நிலையற்ற அவற்றை

ஆய்ந்து ஆய்ந்து கழித்துக் கொண்டே செல்ல, முடிவில் நிற்கும் நிலையான பொருள் இறைவனுகிய மெய்ப்பொருளே. அவனையே ஈண்டுப் "***பொய்தீர் மெய்யானே***" என்முர்.

தீர் மெய்யான் - வினைத்தொகை. இயல்பாகவே பாசங் களினீங்கியிருக்கும் அவனே உயிர்களின் பாசங்களைத் தீர்க்கவல்லவன் என்றவாறு. பொய்யாகிய உடம்பை ஒழிப்பவன் என்பதன் பொருள் பிறவியை நீக்குபவன் என்பதாம்.

பணிவார் பழைய அடியார்க்குப் பிணிதீர்த்து அருளி - பணிவார்களாகிய பழைய அடியார்கள் என்க. பழைய அடியார் என்றதனுல் அவர் பற்பல பிறவிகளில் இறைவனை வழிபட்டு வழிபட்டுத் திருவருளால் மல பந்தம் நீங்கி உயிர் தூய்மை யெய்தியவர் என்றவாறு.

" ஆயும் பழைய வடியா ருடன் கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச் - சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்"

(கந்தர் கலிவெண்பா 121 -122) என்றது நினைக.

பிணி தீர்த்து - மீத மிருந்த வாசனு மலத்தையும் நீக்கி. இஃது ஆன்மாவை வீட்டின்பத்துக்குத் தகுதியாக்குதல். இதனைப் "***பாசநீக்கம்***" என்பர். ***அருளி*** - பாசநீக்கமாகிய அருளிப் பாட்டைச் செய்து.

உன் அணியார் பாதம் கொடுத்தி. உன் அணியார் பாதம் - உன் அழகு நிறைந்த திருவடி. ஆன்மாக்களின் அழகைக் கெடுப்பது ஆணவமலம். அதைத் கெடுத்து உயிர்களுக்கு அழகைத் தருவதும், தான் இயல்பாகவே மலத்தினீங்கியுள்ளதால் பேரழகுள்ளதுமான திருவடி. இஃதீண்டு இறைவனை அறிதற்குரிய சிவஞானம் குறித்து நின்றது. நோயுள்ள ஒருவனுக்கு மருத்துவன் முதலில் மருந்து முதலியவற்முல் நோய் நீக்கம் செய்வன். பின்னர்ச் சத்துள்ள உணவு முதலியவற்முல் உடம்பை வலிவுடையதாக்குவன். அவ்வாறே இறைவனும் உயிர்களுக்கு முதலில் பாச நீக்கம் செய்கின்முன்; அதை மேலே ***பிணி தீர்த் தருளி*** என்முர். பின்னர்த் திருவடிப்பேறு தருகிருன். அதனை ஈண்டு ***அணியார் பாதம் கொடுத்தி*** என்முர். இதற்குப் "பழஞ்செல்வமாகிய திருவருள்" என்று உரை கூறினுர் சீகாழித் தாண்டவராயர் அவர்கள்.

அதுவும் அரிது என்றல் - அதுவும் - என்பதிலுள்ள உம்மையைப் பிரித்து ***என்றல்*** என்பதன் பின் கூட்டி "***அது அரிது என்றலும்***" என்று உரைக்க. அவர்கள் பழைய அடியவர்கள் எண்ணற்ற பிறவிகளில் நம்மை வழிபட்டு வந்ததால் மலப் பிணிப்பு மிகவும் தளர்ந்திருந்தது; எனவே, எளிதிற் பாச நீக்கம் பெற்றனர். நீ அத்துணைப் பக்குவம் எய்திற்றிலை; எனவே, உனக்கு உடனே அணியார் பாதம் எய்துதலாகிய சிவப்பேறு அடையும் பக்குவம் இல்லை என்றலும்.

திணியார் மூங்கில் அனையேன். திணியார் மூங்கில் - உள்ளீடுள்ள மூங்கில். இதை ''நாத்தி மூங்கில்" என்றும் ''கல்மூங்கில்" என்றும் வழங்குவர். இது தானாக வளையாதது. மற்றொன்று ''ஓடை மூங்கில்" எனவும் "குழாய் மூங்கில்" எனவும் வழங்கும். இஃது உள்ளீடில்லாததும் தானே வளைவதும் எளிதில் வளைக்கக் கூடியதுமாகும். நம் அடிகள் தமக்கு உள்ளத்தில் குழைவும் புறத்தில் பணியும் இன்மையால் தம்மைத் ***திணியார் மூங்கில் அனையேன்*** என்றார். திண்மை ஆர் என்றது திணியார் என நின்றது. ***அனையேன்*** - அனையேனது என்று ஆறும் வேற்றுமை உருபு விரித்துக் கொள்க.

வினையைப் பொடியாக்கி - பழைய அடியார்களைப் போலத் தமக்கு உள்ளத்தில் அன்பும் அதன் மெய்ப்பாடாகப் புறத்தே தோன்றும் பணிவும் இன்மைக்குக் காரணம் தாம் ஈட்டி வைத்துள்ள வினையே என்று கொண்டார். அதன் அழிவே தம்மைச் சிவப்பேற்றுக்குத் தகுதியாக்கும் என்பார்; அவ்வினையை ஞானக்கினியால் எரித்துச் சாம்பலாக்க வேண்டுவார் "***வினையைப் பொடி ஆக்கி***" என்றார். ***பொடி*** - சாம்பல்.

ஒல்லை வந்து தணியார் பாதம் தாராய் - "நீ என் வினையைச் சுட்டு எரிக்குங்கால் அவ்வினையில் கிடக்கும் என் உயிர் உன் மறக் கருணையாகிய வெப்பத்தைத் தாங்காது, அதை மாற்றுவதற்கு உன் திருவடியைக் குளிர்ந்த நிலையில் தருக" என்பார் ***தணியார் பாதம் தாராய்*** என்றார். ***தணி*** - குளிர்ச்சி. ***ஆர்*** - நிறைந்த; குளிர்ச்சி நிறைந்த பாதம் என்றவாறு.

தணி - என்பது குளிர்ச்சி என்ற பொருளில் வருவதைத் ''தணிபுன லாடுந் தகைமிகு போர்க்கண்" எனவரும் பரிபாடல் (பாடல் 6 வரி 29) பகுதியால் அறியலாம்.

ஒல்லை - விரைவாக. காலம் தாழ்க்கின் யான் அந்த வெம்மையைத் தாங்கும் ஆற்றலின்றி நெடிது வருந்துவேன்; ஆதலின் விரைந்து வந்தருளுக

என்றார். வந்து - "நான் மலத்தால் பிணிப்புண்டுள்ளேன். ஆதலில் நின்னை நாடி அடையும் ஆற்றலற்றவன். எனவே, நீயே என்பால் வந்து அருளுக" என்றவாறு.

ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

துணியா வுருகா வருள்பெருகத்
தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து
திணியார் மூங்கில் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணியா ரடியா ருனக்குள்ள
அன்புந் தாரா யருளளியத்
தணியா தொல்லை வந்தருளித்
தளிர்பொற் பாதம் தாராயே

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 490)

என்று நம் அடிகள் பின்னர் அருளிச் செய்துள்ளதையும் ஒப்பிடுக.

இத்திருப்பாடலில் நம் அடிகள் தாம் இறைவன் மாட்டு மிகுந்த பத்தி செலுத்த விரும்பி அதற்குத் தகுதியற்றவராகத் திணியார் மூங்கிலை ஒத்துள்ளதாகக் கூறி இரங்குவதால், சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். பிறவிகள் தோறும் தொடர்ந்து சிவபெருமானை வழிபட்டு வந்த பழைய அடியார்கள் அவன் அணியார் பாதம் பெற்றது கூறப்படுவதால் தாமும் அந்நிலை எய்தித் தன்வயமிழந்து வீட்டின்பம் நுகர்தல் வேண்டும் என்னும் குறிப்புப் பெறப்படுவதால் பதிகம் நுதலிய "**ஆனந்த பரவசம்**" பெற்றும்.

94. யானே பொய்யென் னெஞ்சும்
பொய்யெ னன்பும்பொய்
யானல் வினையே னழுதா
லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின்
றெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே
னுனைவந் துறுமாறே கூ0

(இ -ள்)

தேனும் அமுதும் தெளிந்த கருப்பஞ்சாறுமாக உள்ளவனே; இன்சுவை மிக்க பெரியோனே; யான் பொய்யனே; என் உள்ளமும் வஞ்சகமுள்ளது; என் அன்பும் போலியானது; அங்ஙனமாயின்; தீவினையாளனாகிய யான்; வருந்தி அழுவதால் உன்னை அடையலாமோ; அடியேன் நின்னை வந்து எய்தும் வழியை அருள் புரிவாயாக.

(வி -ரை)

இத்திருப்பாடலை - ''தேனே அமுதே கரும்பின் தெளிவே; தித்திக்கும் மானே; யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய்; ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே; அடியேன் உனை வந்து உறும் ஆறு அருளாய் - என்று அன்னுவயப்படுத்திக் கொள்க.

தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும் மானே. தேன் - வண்டுகளால் மட்டும் மலரினின்றும் திரட்டப்படுவது; உண்டார்க்கு இனியதாய் அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பது. அவ்வாறே இறைவனும் மெய்யடியார்கள் உள்ளத் தாமரையில் ஊறி, மெய்யடியார்களால் நுகரப்பட்டுப் பேரின்பம்பயப்பன். தேன் ப;ற்றி முன்னம் நூற்சிறப்பில் உரைத்தவை காண்க.

அமுது - திருப்பாற்கடலை அமரர்களும் அவுணர்களும் மிகவும் முயன்று கடைந்த பின் கிட்டியது. இறைவனும் உண்மைச் சரியை முதலிய நெறிகளில் நின்று புரியும் கடுந்தவத்தால் கிட்டுபவன். அமுதம் போன்றே இனிமை பயப்பவன்.

கரும்பின் தெளிவு - கரும்பை வெட்டி ஆலையிலிட்டுப்பிழிந்த பின் கோது நீக்கி எய்தும் சாறு. இறைவனும் பக்குவமில்லாத மந்ததர சத்தி நிபாதர்களுக்கு உடலை நனி வருத்தி நோற்கும் தவத்தால் எய்தப்பெறுபவன்.

இவை பற்றி முன்னம் 59, 62 திருப்பாடல்களில் விளக்கியவை காண்க.

தித்திக்கும் மானே. மான் - மஹான் என்ற வடமொழிச் சொல்லின் திரிபு. பெரியோன் என்பது பொருள். முன்னம் 88-ம் பாடலில் மான் என்றதன் கீழுரைத்தவை காண்க. மனம், பொறி வழிப்புறத்தே சென்று

நுகரும் பொருள்களுள் தேன் முதலியன போல அகத்தே நினையுந்தோறும் இனிமை பயத்தல் பற்றித் "**தித்திக்கும்**" என்றார். தேன் முதலிய உலகியற் பொருள் சுவைப்போனை ஒத்தனவாகவோ அன்றித் தாழ்ந்தனவாகவோ உள்ளன. ஆனால், அவற்றின் வேறாக, இறைவன் சுவைக்கும் ஆன்மாவினும் மேம்பட்டிருத்தலின் "**மானே**" என்றார்.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"கனியி னுங்கட்டி பட்டக ரும் பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5 -14 -10)

எனும் நம் அரசுகளின் அமுதத்தமிழ் சுவைக்க.

யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய். யானே பொய் - திருப்பெருந்துறையில் ஏனைய அடியார்களுக்கெல்லாம் வீடுபேறு நல்கி இறைவன் நம் அடிகளை இவ்வுலக நலன் கருதி ஈண்டு இருக்கச் செய்தான் என்பதை முன்னம் கண்டோம். ஆனால் தம்மை இருத்திய காரணம் தமது பொய்ம்மை என்று நம் அடிகள் கருதிப் பலமுறை வருந்தி வருந்தி இரங்கினார். ஈண்டு ***யானே பொய்*** என்றது "யான் பொய்யொழுக்கம் உள்ளவனாயின் பொய்ம்மையைக் கைவிட்டு இனியேனும் உய்யலாம் ஆனால், நான் பொய்யாகவே உள்ளேன்" என்றவாறு. ஏகாரம் தேற்றம்.

என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய் - இறைவனை எய்துதற்குரிய கரணங்களில் நெஞ்சம் சிறந்தது; அன்பு இன்றியமையாதது. அவை பொய்ம்மைக் கலப்புள்ளன வாயின் தவவொழுக்கத்தால் பொய்ம்மையை நீக்கி மெய்ம்மையை ஏற்று உய்யலாம். ஆனால், பொய்ம்மையே எனக்கு நெஞ்சாகவும் அன்பாகவும் அமைந்துள்ளன என்றவாறு. மனம் மொழி மெய்களில் நெஞ்சம் பிரித்து உரைக்கப்பட்டதால் ஏனைய மொழியும் மெய்யும் ***யானே பொய்*** என்று மேலே கூறினார். போலிப் பாராட்டுரைகளும் போலி வணக்கங்களும் வஞ்சக நெஞ்சால் நிகழ்வன. ஆதலின் மற்றை இரண்டனையும் விடக் கொடிய அதனைத் தனியே

பிரித்து **யானே பொய்** என்ருர். நெஞ்சும் அன்பும் இறைவனை எய்தற்குச் சாதனமாவன. ஆனுல் என் அளவில் அவை பொய்ம்மையாலமைந்து என்னை வீடுபேறு அடையாமல் தடுத்தன என இரங்குவார் "**என் நெஞ்சம் பொய் ; என் அன்பும் பொய்**" என ஈரிடத்தும் "**என்**" என்பதனை இயைத்துக் கூறி இரங்கினுர்.

ஆனுல் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே. ஆனுல் - அங்கனமாதலின். யானும் என் நெஞ்சும் என் அன்பும் பொய்ம்மையால் செய்யப்பட்டிருத்தலினுல். **வினையேன்**- இம்முக்கரணங்களும் பொய் என்ற பொருளால் செய்யப்பட்டுள்ளதற்குக் காரணம் என் தீவினை என்றவாறு. **அழுதால் உன்னைப் பெறலாமே** - என் மூன்று கரணங்களும் பொய்ம்மையால் அமைந்து விட்டமையால் யான் உன்னை நோக்கி அழுவேனுயின் அவ்வழுகையும் பொய் அழுகையேயாம்; அதனுல் உன்னைப் பெற இயலுமா; இயலாது என்றவாறு. ஏகாரம் எதிர் மறை குறித்த வினுப் பொருளில் வந்தது.

ஈண்டு, ஏகாரத்தைத் தேற்றப் பொருளில் வந்ததாகக் கொண்டு உன்னை அடைவதற்கான முக்கரணங்களும் பொய்யாயிருப்பினும் நான் உள்ளம் உருகி அழுதால் உன்னை அடையலாம்; என்று பொருள் கொண்டு, நம் ஆளுடைய பிள்ளையார் அழுது ஞானப்பால் பெற்றுய்ந்தது; நம் அரசுகள் ''நைந்துருகிப் பாய்வது போலன்பு நீர் பொழிகண்களுடன்" தொண்டு செய்து உய்ந்தது; நம் அடிகளே ''அழுதடி பெற்ற அன்பர்" என வழுத்தப்பட்டது என்பனவற்றை ஆதாரமாகக் காட்டுவர் பலர். கவுணியப் பெருமான் அழுதது ''தம் மேலைச் சார்புணர்ந்த" காரணத்தால்; நம் அரசுகள் கண்ணீர் பெருக்கியது எப்பொழுதும் சிவ நினைவில் திளைத்து நாயகன் திருவடி தைவந்த மனம் உருகிய நிலையில் சரிந்திருந்த காரணத்தால்; இவ்விருவரும் தங்கள் முக்கரணங்களும் பொய் என்று யாண்டும் கூறினரல்லர். நம் அடிகளும் தம் கரணங்கள் எல்லாம் சிவகரணங்களாகித் திருப்பெருந்துறையில் இறைவனைப் பிரிந்ததை ஆற்ருமல் கழிபேரன்பால் உள்ளம் உருகிக் கண்ணீர் சொரிந்தே பல இடங்களில் இறைவனை வழுத்தியுள்ளார். அதனுல் பிற்காலத்தில் "அழுதடி பெற்ற அன்பர்" என்று மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்களால் வழுத்தப் பெற்ருர். ஆனுல் இந்தத் திருப்பாடலில் அவர் கூறும் நிலை வேறு. தாம் பொய்ம்மையே வடிவமாகி இருப்பதால் தம் அழுகை மட்டும் எவ்வாறு மெய்ம்மையாகும் என்பது அவர் வினு. தம் அழுகை இறைவன் திருவடிகளை

எய்த வழியாக உள்ளது என்று அவர் நம்பியிருந்தால் அந்த வழியையே பின்பற்றலே விடுத்து இறைவனை நோக்கி "**அருளாய் அடியேன் உனே வந்து உறுமாறு**" என்று வினவியிருக்க மாட்டார். ஆதலின் அவ்வுரை பொருத்தமின்மை கண்டு விலக்குக.

அடியேன் உனேவந்து உறும் ஆறு அருளாய் - நான் தீவினையேன் ஆதலின் உன்னே அடைவதற்கான முக்கரணங்களும் எனக்குப் பொய்யாலமைந்து தவத்துக்குதவாதனவாயின. அவற்றைக் கொண்டு நான் உன்னே அடைய இயலாது. மெய்யடியார்கள் போல உள்ளம் உருகி உன்னே நினைந்து அழுது அது காரணமாக உன்தாள் எய்தவும் எனக்கு வாய்ப்பு இல்லே. ஆதலின் உன்னே அடைவதற்கான ஒரு வழியை நீயே எனக்குக் காட்டியருள்க என்றவாறு.

அடியேன் - பொய்ம்மையாளனுகிலும் நான் உன் அடிமை. ஆதலின் என் பொய்ம்மை தீர்த்து எனக்கு உய்யும் வழி காட்ட வேண்டுவது உன் கடமையாயிற்று என்றவாறு.

உனேவந்து உறும் ஆறு - இப்பொழுது நான் பொய்யில் உள்ளேன். இதை விடுத்து மெய்யாகிய உன்பால் வந்து சேர்வதற்கான வழி. உயிர்கள் உணர்த்த உணர்வனவே அன்றித் தாமே உணரும் ஆற்றலும் சுதந்திரமும் அற்றவை என்னும் சைவ சிந்தாந்தக் கோட்பாடு இப்பகுதியின் உயிர் நாடியாக உள்ளடங்கி ஒளிர்வதை நுனித்தறிந்து மகிழ்க. **அருள்ஆய்- அருள்**- எனக்கு அருள் செய்வாயாக; "அவனருளாலே அவன்றுள் வணங்கி" (சிவபுராணம் 18) என்றது நினேக. **ஆய்** - அன்னே. தானே உண்ணும் பருவம் வராத சேய்க்கு அன்னே உணவை ஊட்டுவள். உன் மகவாகிய எனக்கு உன் திருவடியை எய்தும் வழியாகிய அமுதத்தை ஊட்டுவதாகிய அருளேச் செய்வாயாக. **உறுமாறே** - ஏகாரம் ஈற்றசை.

இத்திருப்பாடலில், ''மானே அருளாய் அடியேன் உனே வந்துறுமாறு" என்றதனுல் பத்தியும் ; ''யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்" என்றதனுல் வைராக்கியமும் புலனுதலின் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம் பெற்ரும்**". "தேனே யமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும் மானே" என்றதனுல் ஆனந்தத்தின் இயல்பு புலனுகி அவ்வானந்தத்தைத் தன்வயமிழந்து நுகரும் இயல்பு வேண்டி ''அருளாய் அடியேன் உனே வந்துறுமாறு" என விண்ணப்பம் செய்வதால் பரவசமும் புலனுவதால் பதிகம் நுதலிய"**ஆனந்த பரவசம்**" பெற்ரும்.

௧0. ஆனந்தாதீதம்

ஆனந்தாதீதம் என்னும் வடமொழிச் சொற்றொடர் ஆனந்தத்தின் அதீத நிலை என்னும் பொருளதாம். ஆனந்தம் என்பது மெய்யுணர்வினால் நுகரப்படும் அழிவில் இன்பம். இது 8, 9 பதிகங்களின் தலைப்புக்களில் விளக்கப்பட்டது. "***அதீதம்***" என்ற சொல்லின் பொருள் "கடந்தது" என்பதாம். எனவே "***ஆனந்தாதீதம்***" என்பது பேரின்பத்தின் முடிந்த எல்லை என்பதைக் குறிக்கும். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும். அஃது இடையறாத சிவபாவனையால் பாசத்தை விட்டுச் சிவத்தை எய்தும். பாசம் நீங்கியதும் அருள் விளக்கத்தால் ஆனந்த விளக்கம் பெறும். இறைவன் அருளால் ஆன்மா ஆனந்த ஞானத்தில் தோயும். அந்த நிலை ***ஆனந்தத் தழுந்தல்*** என்று ௮-ம் பதிகத் தலைப்பில் விளக்கப்பட்டது. அத் தோய்வில் ஆன்மா ஆழ்ந்தாழ்ந்து செல்லச் செல்லத் தன்வயமிழக்கும். அந்த நிலை "***ஆனந்த பரவசம்***" என்று ௯-ம் பதிகத் தலைப்பில் விளக்கப்பட்டது. ஆனந்த பரவச நிலையில் ஆன்மா ஒரொருகால் தன் நினைவு எய்தும். அத்தகைய நிலை எய்தும் எல்லையைக் கடந்துள்ள பரவச நிலையே "***ஆனந்தாதீதம்***" என்று இப்பதிகத்தின் தலைப்பாக அமைந்துள்ளது.

எண் சீர் ஆசிரிய விருத்தம்

95 மாறி லாதமாக் கருணை வெள்ளமே
  வந்து முந்திநின் மலர்கொ டாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
  மெய்ம்மையன்பருன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ யெளியை யாகிவந்
  தொளிசெய் மானுட மாக நோக்கியும்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
  கடைய னாயினேன் பட்ட கீழ்மையே ௯௧

(இ -ள்)

வேறுபாடில்லாத பேரின்பப் பெருக்கே; மெய்யடியார்கள் நின்னை வழிபடுங்கால் சொரிந்த மலர்களை ஏற்றுக் கொள்ளும் உன் திருவடித் துணைக்கண் இரண்டறக் கலத்தற்குரிய பக்குவமுற்ற உண்மை அடியார்கள்.

முற்பட எய்தி நின் திருவடி இன்பம் பெற்றனர்; அழிவில்லாத நீ எளிமையுடையையாக ஞாஞசிரியனுக எழுந்தருளி வந்து ஞான ஒளி பொருந்தும் மனிதனுகும்படி எனக்கு அருள்நோக்கம் அளித்தும்; பிளந்து ஒழியாத வலிய நெஞ்சம் உள்ளவனும் நாய் போன்று இழிந்தவனுமாகிய யான் எய்திய இவ்விழிவால் கடைப்பட்டவனுயினேன்.

(வி -ரை)

இத்திருப்பாடலே; மாறு இலாத மாக்கருணை வெள்ளமே; நின் மலர் கொள்தாளிணை வேறு இலாப்பதப் பரிசு பெற்ற நின் மெய்ம்மை அன்பர்; முந்தி வந்து, உன் மெய்ம்மை மேவினுர் ; ஈறு இலாத நீ, எளியை யாகி வந்து, ஒளிசெய் மானுடமாக நோக்கியும்; கீறிலாத நெஞ்சு உடைய நாயினேன். கீழ்மைப்பட்ட, கடையன் ஆயினேன் - என்று அன்னுவயம் செய்து கொள்க.

மாறு இலாத மாக்கருணை வெள்ளமே. மாறு இலாத - யாராலும் தடுத்து நிறுத்த முடியாத, பெருகுதல், சுருங்குதல், வற்றி ஒழிதல் முதலிய பௌதிகப் நீர் பெருக்கின் இயல்புகளாகிய மாறுபாடுகள் இல்லாத எனலுமாம். சமானமில்லாத என்றுரைப்பினும் ஒக்கும். **மாக்கருணை** - பேரருள். இஃது, இறைவனின் எண்குணங்களுள் ஒன்று என்பது நினைக. **வெள்ளம்** - சிவபரஞ்சுடரின் திருவருட் பெருக்கை மழையாகவும் கடலாகவும் கூறுவது போல ஈண்டு வெள்ளமாகக் கூறினுர்.

நின் மலர்கொள்தாள் இணை. மலர் - எண்ணற்ற அடியவர்கள் நாள் தோறும் செய்யும் சிவவழிபாட்டில் சொரியும் மலர்கள். **கொள்** - ஏற்றுக்கொள்கின்ற. ***தாள் இணை*** - திருவடிகள் இரண்டையும்.

இதனை;

திருச்சிற்றம்பலம்

" சகமலா தடிமை யில்லை தானலாற் றுணையு மில்லை
நகமெலாந் தேயக் கையா னுண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயி லில்லை யையனை யாற னூர்க்கே"

(திருமுறை **4-40-9**)

" நின்போ லமரர்க ணின்முடி சாய்த்து நிமிர்த்துகுத்த
பைம்போ துழக்கிப் பவளந் தழைப்பன பாங்கறியா
என்போ லிகள்பறித் திட்ட விலேயு முகையுமெல்லாம்
அம்போ தெனக்கொள்ளு மையனே யாற னடித்தலமே

(திருமுறை 4 -91- 10)

திருச்சிற்றம்பலம்

எனவரும் நம் அரசுகள் அருந்தமிழிற் காண்க.

இதற்கு இவ்வாறன்றித் ''தாமரை மலர் போன்ற நின் திருவடிகள்" என்று உவமைத் தொகையாகக் கொண்டு உரைத்தனர் முன்னுரையாளரில் சிலர். மலர் என்பதை வினைத் தொகையாகக் கொண்டு எங்கும் நிறைந்திருக்கின்ற என்றுரைத்தாரும் உண்டு. **தாள் இணையை** என இரண்டன் உருபு விரித்துக் கொள்க. **தாளிணே** என்பது பிழையான பாடம்.

வேறு இலாப்பதப் பரிசு பெற்ற நின் மெய்ம்மை அன்பர். வேறு இலாப் பதப்பரிசு - வேற்றுமை இல்லாத பக்குவத்தன்மை. இறைவனுடன் இரண்டறக் கலந்தற்குரிய தகுதி. **மெய்ம்மையன்பர்** - பாசப் பிணிப்பு ஒழிந்து மெய்யுணர்வு பெற்றுத் தூயராகி அன்பு நெறியில் ஒழுகுவோர்.

மெய்ம்மை அன்பர் - உண்மையாகிய அன்பு நெறியில் ஒழுகினோர்.

முந்தி வந்து - சிவநெறிச் செலவினராகிய உண்மை அடியார்கள் பொய்யுலக வாழ்வை விட்டு விரைவில் முற்பட்டு எய்தினர் என்றவாறு. திருப்பெருந்துறையில் என்னுடன் இருந்த அவர்கள் பக்குவம் பெற்று முன்னணியில் இருந்தவர்களாதலின் உரியகாலம் வருமுன்பே உன்னை அடைந்துவிட்டனர் எனலுமாம். என்னுடன் இருந்தவர்கள் எனக்கு முன்பாகவே வந்து **உன் மெய்ம்மை மேவினர்** எனலுமொன்று.

உன் மெய்ம்மை மேவினர். மெய்ம்மை - பண்பாகுபெயராக நிலையான இன்பத்தை உணர்த்தி நின்றது. **மேவினர்** - திருவடி நிழலையடைந்தார்கள்.

"**நின்தாள் இணை**" என்றது சாதனம்; "**நின் மெய்யன்பர்**" என்றது நெறி; "**உன்மெய்ம்மை**" என்றது பயன். இம்மூன்றிலும் சிவ சம்பந்தம் இன்றியமையாமை கூறுவார் "**நின்**" "**உன்**" என்று விடாது புணர்த்தோதினர்.

ஈறு இலாத நீ - ஈறு - முடிவு. அழிவு அழிவற்றவன்; நித்தியப் பொருள். ஈறின்மை கூறவே தோற்றமின்மையும் பெற்றும். "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி" என்பார் பின்னரும் (155)

இதனை,

திருச்சிற்றம்பலம்

" நூறு கோடி பிரமர்கள் நொந்தினுர்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவனீ ச னொருவனே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5-100-3)

என்று நம் அரசுகள் கூறுவதும் காண்க.

எளியை ஆகி வந்து - அயன் திருமால் முதலிய பெருந் தேவர்களுக்கும் நீ அரியை; அஃது உன் இயல்பு. ஆனுல், என் பொருட்டு நீ மானிடச் சட்டை தாங்கித் திருப்பெருந்துறைக்கு ஞானசிரியனுக வந்தாய். இந்த எளிமை உன் பேரருட்டிறத்தால் நேர்ந்தது என்பார், **ஆகி** என்ற ஆக்கச் சொல்லாற் புலப்படுத்தினுர்.

ஒளி செய் மானுடம் ஆக நோக்கியும் - மனிதப் பிறப்பெடுத்த என் ஆன்ம சிற்சத்தி இயல்பாகவே ஞான ஒளியுள்ளது. அஃது இருள் மலத்தால் முற்றிலும் மூடப்பட்டிருத்தலின் ஒளியற்று அஞ்ஞான இருளில் மூழ்கி இருந்தேன். ஞானசிரியனுக வந்த நீ உன் அருள் நோக்கால் நயனதீக்கை நல்கினுய்; அதனுல் என் ஆன்ம சிற்சக்தி மலஇருள் நீங்கி ஒளிவீசத் தொடங்கியது. அவ்வாறு நீ நயனதீக்கை நல்கியும் கூட (நான் உன்னைப் பிரிந்து இவ்வுலகில் இன்னும் வாழ்ந்து வருகிறேன் என்று இரங்கியவாறு).

இதற்கு இவ்வாறன்றி ''எளியை ஆகி ஒளிசெய் மானுடம் ஆக வந்து நோக்கியும்" என்று கூட்டி ''எளிமையுடையையாகி ஒளிபொருந்திய மக்கள் வடிவில் ஞானசிரியனுக எழுந்தருளி வந்து" என்றும் பொருள் காண்பர். இங்ஙனம் வலிந்து பொருள் கொள்வதால் நயனதீக்கையால் ஆன்மா மலம் கெட்டு ஞானம் பெறுகிறது என்ற சாத்திரக் கருத்து கூற இயலாது போதல் காண்க.

கீறு இலாத நெஞ்சு உடைய நாயினேன் - இத்துணைப் பேருதவி செய்த நீ பிரிந்து சென்ற பின் பிரிவாற்ருமையால் நெஞ்சம் பிளந்து நான் இறந்திருக்க வேண்டும்; அல்லது நானே என் மார்பைப் பிளந்து கொண்டு மாய்ந்திருக்க வேண்டும். அங்ஙனம் நிகழாமையால் நான் நாய் போன்ற இழிந்தவனுனேன் என்றவாறு. நம் அடிகளை இறைவன் இவ்வுலகில் இருத்திச் சென்றது உலக நன்மைக்காக என்பதை முன்னம் பார்த்தோம். ஆயின் அடிகள் தம் தகுதி இன்மையே காரணம் என்று கருதி இவ்வாறு இரங்கினுர். ***நாயினேன்*** - நாய் பற்றி முன்னம் சிவபுராணம் 60-ல் உரைத்தவை காண்க.

கீறு - என்பதற்கு அடையாளம் என்று பொருள் கொண்டு, ''நடந்த வழியில் தேய்வும், படித்த பகுதியில் தோய்வும், ஆண்ட பாத்திரத்தில் கீறும் இருக்கும்" என்பது பழமொழி; இறைவன் குருவாக எழுந்தருளி வந்து ஞானம் பெற்ற ஆன்மாவாகச் செய்யத் திருக்கண்ணுேக்கருளியும் என மனத்தில் ஒரு கீறும் விழுந்திலது" என்று உரை வகுத்தார்கள் திரு. தேசிகர் அவர்கள்.

பட்ட கீழ்மையே - பட்ட கீழ்மையால் என மூன்ரும் வேற்றுமை உருபு விரித்துக் கொள்க. ஞானுசிரியன் எனக்கு சட்சுதீட்சை அருளிய நன்றியை மறந்து அவன் பிரிந்த பின்பும் உயிருடன் இருக்கும் நான் நன்றி மறத்தலாகிய செய்கையால் அடைந்தது கீழ்மையே. நாய் நன்றி மறவாதது.; நான் அதனினும் கீழ்ப்பட்டவனுனேன்.

கடையன் ஆயினேன் - "முன்பு கீழ்மக்களுள் ஒருவனுக மட்டும் இருந்தேன். உன் பிரிவின்பின் நன்றி மறந்து இன்னும் உயிர் வாழ்வதால் அக்கீழ்மக்களுள் இறுயில் வைக்கத் தக்கவனுகிவிட்டேன்" என்றவாறு. ''இந்த கீழ்மையை நீக்கி உன் மெய்ம்மை அன்பர் பெற்ற நிலையை எனக்கும் அருளுக" என்பது குறிப்பெச்சம்.

இத்திருப்பாடலில் ''மாறிலா மாக்கருணை வெள்ளமே, ஈறிலாத நீ" என இறைவனை வழுத்துகின்றமையால் பத்தியும், ''கீறிலாத நெஞ்சுடைய நாயினேன்" என்று தம்மை வெறுத்துரைப்பதால் வைராக்கியமும் பெறப்பட்டுச் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்ரும். "வேறிலாப் பதப் பரிசு பெற்ற நின் மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினுர்." என்று அவர்கள் எய்திய அதீதமான ஆனந்தம் தாமும் பெற வேண்டும் என்ற வேட்கை குறிப்பாலுணர்த்தப்படுவதால் பதிகம் நுதலிய "***ஆனந்தாதீதம்***" பெற்ரும்.

96 மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினர்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே.

கூஉ

(இ -ள்)

அஞ்சனம் விளக்கம் பெறுவதற்கு ஏதுவாகிய அருள் விழிகளையுடைய அம்மையை ஒரு கூற்றில் கொண்டவனே; உண்மை வடிவமாக விளங்குகின்ற திருநீற்றை அணிந்த திருமேனியை உடையவனே; நீ ஞானசிரியனாக எழுந்தருளி வந்து அடியேனை ஆட்கொண்டருளிய பின்பு; சிறுமகவின் கையிலுள்ள ஒளி செய்கின்ற பொற் கிண்ணத்தை எளிமையாக எண்ணுவது போல எளிமையாக எண்ணினேன் அல்லாமல்; கிடைத்தற்கரிய பொருள் ஆவாய் என்று நின்னை நினைந்தேன் அல்லேன்; மெய்யன்பர் நின் வீட்டின்பமாகிய அழிவில் வாழ்வை எய்தினர்; (சிறியேனைப்) பொய்ம்மை வாழ்க்கையில் புகும்படி விட்டு, நீ கயிலைக்கு எழுந்தருளியது பொருந்துவதாகுமா? கூறியருள்க.

(வி-ரை)

இத்திருப்பாடலை; - மை இலங்குநற் கண்ணி பங்கனே; மெய் இலங்கு வெண்ணீற்று மேனியாய்; வந்து எனைப் பணிகொண்டபின்; மழக்கை இலங்கு பொற்கிண்ணம் என்று அலால் அரியை என்று உனைக் கருதுகின்றிலேன், மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினர்; எனைப் பொய்யில் புகுதவிட்டு; நீ அங்குப் போவதோ பொருத்தம் ஆவதே, சொலாய் - என்று அன்னுவயம் செய்து கொள்க.

மை இலக்கு நற் கண்ணி பங்கனே - முன்னம் 77-ம் திருப்பாட்டில் "மை கலந்த கண்ணிபங்க" என்று அருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க. **மை இலங்கு நற்கண்** - அஞ்சனம் அம்மையின் திருவிழிகளில் தோய்ந்து விளக்கம் பெறுவதால் **மை இலங்கு** என்றூர். **இலங்குதல்** - விளக்கம் பெறுதல். அம்பிகை பேரருளின் உருவகம். அவ்வருட்பண்பு திருவிழிகளின்

மூலம் வெளிப்பட்டு ஆன்ம கோடிகளை உய்வித்தலால் கண்களை **நற்கண்** என்றார். * **நன்மை** - அருட்குணத்தால் ஆகும் சிறப்பு. இதைப் பிறவிப் பிணிக்கு மருந்து என்றார் பரிமேலழகர். திருக்குறள் 2 உரை காண்க. **பங்கன்** - பேரருளாகிய அம்மையைத் தன் உடலின் ஒரு கூற்றிற் கொண்டவன். மெய்ம்மை அன்பர்களுக்கு வீட்டின்பம் அருளவருதலின் உமையம்மையுடன் எழுந்தருளினான். வீடுபெறத் தமக்குத் தகுதி இல்லை எனினும் பேரருளால் தம்மையும் தகுதியுடையோனாக்கி வீட்டுலகில் உய்ப்பன் என்ற குறிப்புக் காண்க. ஆண்டவன் போகியாய் இருந்து உயிர்களுக்குப் போகத்தைப் புரியும் குறிப்பும் காண்க.

முன்னம் திருவண்டப் பகுதி 64 -ல் ''குவளைக்கண்ணி கூறன்'' என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க.

மெய் இலங்கு வெண்ணீற்று மேனியாய் - இஃது, இறைவன் ஞானாசிரியனாக எழுந்தருளிய ஞான்று நம் அடிகள் கண்ட கோலம். ***மெய் இலங்கு*** - சத்திய வடிவமாக விளங்குகின்ற. திருநீறு உண்மையின் வடிவமாக விளங்குவதை ;

திருச்சிற்றம்பலம்

" முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை ***2-66-3***)

எனவரும் ஞானபோனகர் திருவாக்கிற் காண்க. இதுபற்றி முன்னம் திருவண்டப்பகுதி 33 -ல் ''நீற்றோன்'' என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க. திருநீறு ஞானயோகத்தின் சின்னமாதலின் இறைவன் யோகியாயிருந்து உயிர்களுக்கு யோகத்தைப் புரியும் குறிப்பும் நினைக. ***மேனி*** - இறைவனின் திரு உடம்பு.

★ *" விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன*
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்தும் கயவர்த மோடென்ன கூட்டினிலே

(அபிராமியந்தாதி -79)

வந்து எனைப் பணி கொண்ட பின் - இறைவன் இயல்புகளை நூல்கள் வழியாகவும் ஆன்றோர் வாயிலாகவும் ஓரளவு அறிந்திருந்தேன்; ஆனால் அவனே ஞானாசிரியனாக நேரில் வந்து என்னைப் பணிகொண்ட பின் நான்முன்பே அறிந்திருந்தது அவன் இயல்பில் மிகச்சிறிய அளவே; இப்பொழுது நேரில் காண்பது அவன் குணநலன்கள் அளவிடற்கரியன என்ற உண்மையை நான் உணர்ந்திருக்க வேண்டும். அவ்வாறன்றி மிக எளியன் என்று கருதிவிட்டேன் என்றவாறு. ***வந்து*** - ஞானாசிரியனாகத் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளி. ***பணி கொண்ட பின்*** - அடிமையாக ஏற்றுக் கொண்ட பின்.

மழ கை இலங்கு பொற் கிண்ணம் என்று அலால் - சிறு மகவு ஒன்றின் கையில் உள்ள பொற்கிண்ணம் என்று எளிமையாக நினைந்தேன் அன்றி. வலிமை மிக்க அன்னியன் ஒருவன் ஓர் இல்லத்திலுள்ள பொற்கிண்ணத்தைக் கவர்ந்தால் அவ்வில்லத்துக்குரியவர் அதை அவனிடமிருந்து மீட்டுக் கொள்ள அவசரப்படுவார்; ஆனால் அந்த இல்லத்துச் சிறு குழந்தை ஒன்று அதை எடுத்தால் அதை மீட்க அவசரப்படமாட்டார்; எங்கே போய்விடும் மெதுவாக வாங்கிக் கொள்ளலாம் என்று அசட்டையாக இருப்பார். அவ்வாறு நீ ஞானாசிரியனாக நேரில் வந்து அடிமை கொண்ட பின்பும் நான் அவசரம் காட்டாதிருந்தேன் என்றவாறு. ''பிள்ளை கைக் கிண்ணம் மெள்ளவே கொள்ளலாம்'' என்பது பழமொழி என்றார் பிறரும். ★

★ *"நற்றாய் கண்ணனை வேண்டல்"*

புள்ளுரு வாகி நள்ளிருள் வந்த
பூதனை மாள, இலங்கை
ஒள்ளெரி மண்டி யுண்ணப் பணித்த
வூக்க மதனை நினைந்தோ
கள்ளவிழ் கோதை காதலு மெங்கள்
காரிகை மாதர் கருத்தும்
பிள்ளைதன் கையிற் கிண்ணமே யொக்கப்
பசுவ தெந்தை பிரானே"

(நாலாயிர திவ்வியப்பிரபந்தம் - பெரிய திருமொழி 10-9-1)

இப்பாடலை இதற்கு வியாக்கியானத்துடன் படிக்க

பின் - என்பதற்கு இவ்வாறன்றி ''அதனுல்" என்ற காரணப் பொருளில் வந்த வினையெச்சமாகக் கொண்டு அரியவனுகிய நின்னை எளியை என்று கருதிவிட்டேன் என்றுரைக்கினுமமையும். நீ திருமால், அயன் முதலிய பெருந்தேவர்க்கும் அரியவன். எனவே மானிடனுகிய எனக்கு மிக அரியவன் என்பது கூறுமலே அமையும். இது நீ என்னை ஆட்கொள்ளுமுன் நான் கொண்டிருந்த மனநிலை. நீ என்னைத் தேடி வலிய வந்து ஆட்கொண்டு விட்டாய். இஃதுன் பேரருட்டிறத்தாலாயது. ஆனுல், நான் அவ்வாறு கருதாமல் நீ எனக்கு எளியை என்று கருதவிட்டேன். இது நீ என்னை வலிய வந்து ஆட்கொண்டதனுல் நான் கொண்ட தவறுன முடிவு என்பது கருத்து.

பின் - என்ற சொல் இவ்வாறு ''அதனுல்" என்ற பொருளில் வருவதை;

''கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக"

(திருக்குறள் 391)

என்ற வள்ளுவர் வாய்மொழியில் ''கற்றபின்" என்பதற்கு அங்ஙனங்கற்றுல் என்றும் ''கற்றதனுற் பயனும்" என்று பரிமேலழகர் உரை வகுத்துள்ளதிற் காண்க.

மழ - குழந்தை இச்சொல் இப்பொருளில் வருவதை

திருச்சிற்றம்பலம்

" ஆனந்த மாக்கட லாடுசிற் றம்பலத மன்னபொன்னின்
தேனுந்து மாமலைச் சீறூ ரிது; செய்ய லாவதில்லை
வானுந்து மாமதி வேண்டி யழுமழப் போலு மன்னே
நானுந் தளர்ந்தனன் ; நீயுந் தளர்ந்தனை நன்னெஞ்சமே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் 147)

என்று நம் அடிகளே கூறுவதாலும் மழவுங் குழவு மிளமைப் பொருள் (தொல். சொல். மரபியல் சூத் 15) என்று இலக்கணம் இயம்புவதாலு மறிக.

இப்பாடலின் இந்தப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பு ''with tender hand as feeding me from golden cup" என்றுள்ளது. நம் அடிகள் காட்டும் உவமையின் நோக்கம் இஃதன்று என்பது வெளிப்படை.

அரியை என்று உனைக் கருதுகின்றிலேன் . அரியை - பெறுதற்கு அரியவன்.

மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினர் - 95 - ம் திருப்பாட்டில் விளக்கியவை காண்க.

என்னைப் பொய்யில் புகுதவிட்டு - என்னைப் பொய்ம்மையாகிய இவ்வுலக வாழ்க்கையில் நிறுத்தி விட்டு. ***பொய்*** - நிலையற்ற வாழ்க்கை. இனி, பொய் என்பதற்கு உடல் என்று கொண்டு ***பொய்யில் புகுதவிட்டு*** - பிறவிகளில் செல்லும்படி கைவிட்டு எனலுமாம்.

நீ அங்குப் போவதோ. அங்கு - திருக்கயிலைக்கு. ***போவதோ*** - ஓகாரம் எதிர்மறை குறித்த வினாப்பொருளில் வந்தது.

பொருத்தம் ஆவதே - பொருந்துவது ஆகுமா? ஆகாது என்றவாறு. ஏகாரம் எதிர்மறை குறித்த வினாப்பொருளில் வந்தது.

சொலாய் - உன் செய்கையைப் பொறுத்தமன்று என நான் கூறுவது சிவாபராதம்; ஆதலின் நீயே அதற்கு விடை கூறியருள்க என்றவாறு. சொலாய் முன்னிலை வியங்கோள் வினைமுற்று.

இனி, ***போவதோ*** என்பதிலுள்ள ஓகாரத்தைப் பிரித்து இதன்முன் கூட்டி ஓ ***சொலாய்*** என்று உரைக்கவும் நின்றது. ஈண்டு ஓகாரம் விளிப்பொருளில் வந்தது. போவது தொழிற் பெயர். "***சொல்***" என்பதையே முன்னிலை ஏவல் வினைமுற்றாகக் கொண்டு, ***ஆய்*** என் அன்னை போன்றவனே எனவும் உரைக்க நின்றது.

பொய்யிலிங்கெனை - என்பது திரு.மு. அருணாசலம் அவர்கள் கொண்ட பாடம்.

இத்திருப்பாடலில் ''பொய்யில் எனைப்புகுதவிட்டு நீ அங்குப் போவதோ" என்று இரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். ''மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினர்" என்றதால் நானும் அந்த அதீதமான ஆனந்தம் பெற வேண்டும் என்ற குறிப்பெச்சம் பெறப்பட்டுப் பதிகம் நுதலிய "***ஆனந்தாதீதம்***" பெற்றும்.

97. பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செ யன்பரும்
நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
இருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே கூ௭

(இ - ள்)

செந்தாமரை மலர்கள் போன்ற திருவடிகளுள்ளவனே; செந்நிறமான திருமேனியினாய்; எனக்குச் சிறப்புரிமையுடைய எங்கள் தலைவனே; திருவருட் பேற்றுக்கு உரிய தகுதி இல்லாதவனும்; பொய்யொழுக்க முள்ளவனும் ஆகிய சிறியேனாகிய என்னை வருக என்று விரும்பி நோக்கம் செய்யவும்; வருவதற்கு முயற்சி இல்லாதேன்; ஏமாற்றுங்குணமுள்ளவன்; அதனால் இறந்து ஒழிந்தேனுமல்லன்; நின்னால் திருவருள் பாலிக்கப் பெற்ற மெய்யடியார்களும் நீயும் சிவலோகத்துக்கு எழுந்தருளிச் சென்று; இப்பொய்யுலக வாழ்வில் சிறியேனை இருக்கப் பணித்தாய்; இது நியாயமாகுமா; வீணனாகிய என் தீவினைகளுக்கு அழிவு கிடையாதா?

(வி -ரை)

இத்திருப்பாடலில் "கமலமலர்ப்பாதனே, அரத்த மேனியாய்" என்பவற்றை முதலில் அமைத்துப் பொருள் காண்க.

மலர்க்கமல பாதனே - கமல மலர்ப்பாதனே என்று மாற்றிக் கொள்க. செந்தாமரை மலர்கள் போன்ற இருதிருவடிகளையுடையவனே. இறைவன் நிறம் செந்நிறமாதலின் ஈண்டு வெண்டாமரை விலக்கிச் செந்தாமரை கொள்ளப்பட்டது. தாமரை மலர் இறைவன் திருவடிகளின் வண்ணத்துக்கும் வடிவுக்கும் மட்டுமே உவமை. கூற்றுவன் நெஞ்சம் இடித்ததும், திரிபுரதகனத்தில் அமரர்கள் சமைத்த பூவுலகமாகிய தேரைப் பொடியாக்கியதும், இராவணனைக் கயிலைமலையுடன் கீழ் அழுத்தியது மான மதனுடைய நோன்றாள் ஆதலின் தாமரை மலரின் மென்மை ஈண்டு உவமையன்று. திருப்பெருந்துறையில் அவன் ஞானாசிரியனாக எழுந்தருளிய

ஞான்று தரிசித்த நம் அடிகள் முதலில் அவன் திருவடிகளில் வீழ்ந்தார். ஆதலின் முதலில் ஈண்டு அத்திருவடிகளையே கூறினர். **மலர்க் கமல பாதன்**- என்றது முன்பின்னுக நின்ற உவமைத் தொகை.

அரத்த மேனியாய் - செந்நிறமான திருமேனியுடையவனே. ஞானுசிரியன் திருவடிகளில் வீழ்ந்த நம் அடிகள் எழுந்து நின்று அவன் திருமேனி முழுவதும் தரிசித்த பொழுது எல்லையில்லாப் பேரொளி விரிக்கும் அவன் திருமேனியின் அந்தி வண்ணம் அவர் உள்ளத்தைக் குளிர்வித்து ஆங்கு நிலை பெற்றதால் அடுத்து ***அரத்த மேனியாய்*** என்றுர். ***அரத்தம்*** ''ரக்தம்" என்னும் வடசொல் திரிந்து தமிழில் ***அரத்தம்*** என வழங்குவதாயிற்று. குருதி போன்ற செந்நிறம் என்றவாறு.

என் எம்பிரான்- அடியார்களாகிய எங்கள் கூட்டத்துக்குத் தலைவனுதல் மட்டுமன்றி எனக்குச் சிறப்புரிமையுடையவன் என்றவாறு.

பொருத்தம் இன்மையேன் - உண்மைச் சரியை முதலிய தவநெறிகளில் ஒழுகி என்னை வீடுபேற்றுக்குத் தகுதியுள்ளவனுக ஆக்கிக் கொள்ளாதவன். ***பொருத்தம்***- தகுதி.

பொய்ம்மை உண்மையேன்- இதுவரை மேற்கண்ட தவ நெறியில் நிற்காவிடினும் இனி முயன்றேனும் அந்நெறியில் நின்று தகுதி பெறலாம். அவ்வாறு தவநெறி மேற்கொள்ளவும் ஓர் தடையுள்ளது. அது பொய்ம்மை உள்ளவனுயிருத்தல். நான் அப்பொய்ம்மை உள்ளவனுக இருக்கின்றேன் என்றவாறு. ***பொருத்தம் இன்மையுடன்*** பொய்ம்மையும் உள்ளவன் என எச்ச உம்மை விரித்துக் கொள்க. ***பொய்ம்மை***- கேவலாதீதம் என்றுர் சீகாழித் தாண்டவராயர்.

பொய்ம்மை உண்மையேன் - என்றதன் பின் ''ஆயினும்" என்ற சொல்லெச்சம் வருவித்துக் கொள்க.

போத என்று எனைப் புரிந்து நோக்கவும்- எனைப் போத என்று புரிந்து நோக்கவும் என்று மாற்றிக் கொள்க. நீ என் உயிருக்குள் உயிராக நின்று என் தகுதியின்மையுடன் பொய்யொழுக்கத்தையும் அறிந்திருந்தும். திருப்பெருந்துறையில் நான் உன்னைக் கண்டு வணங்கியதும் ''வருக" என்று விருப்புடன் பார்த்தாய். ***போதல்*** - போதுதல்; வருதல். ***புரிந்து*** - விரும்பி இறைவன் நம் அடிகளை விருப்புடன் ஏற்று உடனிருந்த அடியார் கூட்டத்திற் சேர்த்துக் கொண்ட சரித நிகழ்ச்சிக்கு அகச் சான்று.

வருத்தம் இன்மையேன் - நீ அழைத்ததும் என் முயற்சியால் என் தகுதியின்மையை நீக்கி நான் கூடியிருந்த அடியார்களைப் போலவே வீடுபேற்றுக்குத் தகுதியாக்கிக் கொள்ளும் முயற்சி இல்லாதவன் என்றவாறு. **வருத்தம்** - முயற்சி. இச்சொல் இப்பொருளில் வருவதை;

" ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்"

(திருக்குறள் 468)

என்ற பொதுமறையிற் காண்க. இதற்கு இவ்வாறன்றி ''நீ பிரிந்ததனுல் வருத்தம் இல்லாதவன்" என்றுரைத்தனர் முன்னுரையாளரில் சிலர். திருவாசகத்தின் மிகப் பல பாடல்களில் இறைவன் பிரிவை ஆற்ருது நம் அடிகள் வருந்துவது காணலாம்; ஆதலின் அஃதுரையன்று என விலக்குக.

வஞ்சம் உண்மையேன் - நான் வீடுபேற்றிற்குத் தகுதியற்றவனுயினும் அத்தகுதியைப் பெற இனியாகினும் உண்மைச் சரியை முதலிய தவ நெறியில் நின்று அத்தகுதியைப் பெற முயன்றிருக்கலாம்; அதையும் செய்யாது நாடகத்தால் உன் அடியார் போல் நடித்தேன் ; அந்நடிப்பை என் உயிருக்குயிராக நிற்கும் நீ அறியக் கூடுமே என்று அஞ்சி உன்னிடம் பிழை பொறுக்க வேண்டியிருக்கலாம். அங்ஙனம் வேண்டாமல் அவ்வொழுக்கத்தை மறைத்ததால் உன்னை ஏமாற்ற முயன்றவனுனேன் என்றவாறு.

வஞ்சம் - என்பதைப் ''பிரபஞ்சம்" என்றதன் தலைக்குறை விகாரமாகக் கொண்டு ''உலகப்பற்று" என உரைத்தனர் முன்னுரையாளரில் சிலர். ஞானசிரியன் திருவடிகளில் வணங்கிய உடனே ''இணையார் திருவடி யென்றலை மேல் வைத்தலுமே துணையான சுற்றங்களத்தனையும் துறந்தொழிந்தேன்" (திருவாசகம் 275) என்று நம் அடிகளே பின்னர்க் கூறுவதால் அவர் உலகப் பற்றுடையாராதல் யாண்டையது என விடுக்க.

மாண்டிலேன் - இதன் முன் ''ஆதலின்" என்ற ஓர் சொல்லெச்சம் வருவிக்க. எவ்வாற்ருனும் வீடு பெறுதற்குரிய வழிகாணுமை ஏதுவாகவுள்ளது தீவினைப்பயனுகிய இவ்வூனுடலாகும். இதை ஒழித்து விட்டால் இனி எய்தும் பிறப்பிலேனும் வீடுபேறு அடையத் தகுதி பெறலாமே என்று துணிந்து இறந்தொழிந்தேனுமல்லன்.

அருள் செய் அன்பரும் நீயும் அங்கு எழுந்தருளி. அருள் செய் அன்பர் - செயப்படு பொருள் மேல் தொக்க வினைத்தொகை. நின்னுல்

அருள் செய்யப்பட்ட அன்பர்கள் என்க. **நீயும்** - அன்பர்கள் மட்டும் வீட்டுலகம் எய்த, நீ திருப்பெருந்துறையிலேயே என்னுடன் தங்கியிருப்பின் அந்நிலேயே எனக்கு வீட்டின்பம் பயக்கும். அவ்வாறன்றி நீயும் திருக்கயிலே சென்று விட்டாய். **அங்கு** - பேரின்பம் நல்கும் வீட்டுலகின் எல்லேயற்ற பெருமையைக் காட்டும் நெஞ்சறி சுட்டாக நின்றது. **எழுந்தருளி** - சென்று.

இங்கு எனே இருத்திஞய் - **இங்கு** - இவ்வுலக வாழ்வின் சிறுமை குறிக்கும் நெஞ்சறிசுட்டு. இவ்வுலகத்தில் **இருத்திஞய்** என்றதால் அச்செயல் நம் அடிகளின் விருப்பத்துக்கு மாருக அமைந்தது என்பது குறிப்பு ★

முறையோ - நீ எங்கள் அனேவருக்கும் தலேவஞயினும் எனக்குச் சிறப்புரிமை உடைய "**என் எம்பிரான்**" ஆவை. அவ்வாறு இருந்தும் அவர்களே மட்டும் வீட்டுலகிற் சேர்த்தாய்; என்னே இவ்வுலகில் தனியே விட்டு நீயும் சென்று விட்டாய், அவ்வாறு செல்லுழி "நீ இன்னும் வீட்டுலகு செல்லத் தகுதி பெறவில்லே; தவமுயன்று தகுதி பெறுக; உரிய காலத்தில் நாமே வந்து உன்னேயும் வீட்டுலகில் உய்ப்போம்" என்று கூறிச் சென்ருயுமல்லே. "இங்கு இருக்க" என்று பணித்துச் சென்ருய். இது முறையாகுமா என்றவாறு. **முறையோ** ஓகாரம் எதிர்மறை குறித்த விஞப்பொருளில் வந்தது; முறையன்று என்றவாறு.

வம்பனேன் வினேக்கு இறுதி இல்லேயே - திருவடி நிழலே அடையாமலும் ; அதற்குத் தகுதியின்றேல் அத்தகுதி பெற உண்மைச் சரியை முதலிய தவநெறியில் நின்று தகுதி பெருமலும் வீணுக வாழ்ந்திருத்தலில் **வம்பன்** என்ருர். **வம்பன்** - வீணன். கெடுதற்குரிய காலம் வருமுன்பே விரைந்து கெட்டுப் போனவன் எனலுமாம்.

வம்பு = விரைவு. வம்பு + அன் = வம்பன். ''வம்பனேன்" (447) ''வம்பஞய் (585) என்று பின்னரும் கூறுவது காண்க. **வம்பு** - நிலேயின்மை எனலுமாம். ''வம்பு நிலேயின்மை" (தொல். சொல். உரியியல். சூ. 31) என்பதிலக்கனம்.

வினே - ஈண்டுப் பிராரத்த வினே குறித்து நின்றது. என் சஞ்சிதவினே திருப்பெருந்துறையில் நீ சட்சுதீட்சை அருளி ஆட்கொண்ட ஞான்றே ஒழிந்தபோயிற்று. பிராரத்த வினே தீர்ந்திருப்பின் இவ்வுடலும்

★ They are all gone into the world of light
And I alone sit lingering here - Henry Vaughan.

வீழ்ந்திருக்கும். அஃதின்னும் நிகழ வில்லையாதலின் பிராரத்த வினையின் எச்சமுள்ளது. நீ என்னை அடிமை கொண்ட பின்பும் அது தீரவில்லை என்றால் அதற்கு முடிவே இல்லையோ என்றவாறு. **இல்லையே** - ஏகாரம் எதிர்மறை குறித்தவினுப் பொருளில் வந்தது.

வீடு பேற்றுக்குரிய தகுதியின்மை அறிந்தும் அத்தகுதி பெறத் தவமுயலாமல் வீணன உள்ள உலக வாழ்வை வெறுத்து ''மாண்டிலேன்'' என்றதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம் பெற்றும்**" "அருள் செய் அன்பரும் நீயும் அங்கெழுந்தருளி" என்றதனுல் அவர்கள் நுகரும் வீட்டின்பத்தின் அதீத நிலையே தாமும் பெற வேண்டும் என்றது குறிப்பாற்பெறப்பட்முப் பதிகம் நுதலிய **ஆனந்தாதீதம்** பெற்றும்.

98. இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப ளுக்கிளுய்
எல்லை இல்லைநின் கருணை யெம்பிரான்
ஏது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னு முன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானவனே

கூறு

(இ -ள்)

குற்றமற்ற நுண்ணிய பரவெளியில் உள்ளவனே; மயிர்ச் சாந்தணிந்த அழகிய கூந்தலையுடைய அம்மையை ஒரு கூற்றில் உடையவனே; எங்கள் பெருமானே; நின் திருவடிக்கண் மெய்யன்பு எனக்கு இன்று; வலிய கல்லை மென்கனியாக்கும் வித்தையிற் பயின்று, அடியேனை நின் திருவடிக்கு அன்புடையவனுகச் செய்தனை; நான் எதைக் கருவியாகக் கொண்டு எச்செயலலைச் செய்தாலும் நின்பேரருளுக்கு வரம்பு கிடையாது; ஆதலின் சிறியவனுகிய எனக்கு மீண்டும் நின் திருவடிக் காட்சி நல்கி; இவ்வுலக வாழ்வினின்று மீட்டுக் கொள்ளவும் ஆற்றலுடையை ஆவாய் அன்றோ?

(வி -ரை)

இத்திருப்பாடலை - மறுஇல்வானவனே; ஏலம் ஏலும் நற்குழலி

பங்கனே; எம்பிரான்; நின்கழற்கு அன்பு என்கண் இல்லை; கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டு என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினாய்; நான் ஏதுகொண்டு ஏது செய்யினும், நின் கருணை எல்லை இல்லை; எனக்கு இன்னும் உன் கழல் காட்டி மீட்கவும் வல்லையே -என்று அன்னுவயம் செய்து கொள்க.

மறு இல் வானவனே - குற்றமில்லாதவனாகிய சிவலோகன். ***மறு*** - ஆணவமலமாகிய குற்றம். இறைவன் இயல்பாகவே பாசங்களில் நீங்கியவன் என்பது ஆகம வசனம். ***மறு இன்மையை*** வானத்துக்கு அடையாக்கி குற்றமில்லாத நுண்ணிய ஞானப்பரவெளியில் உள்ளவனே எனலுமாம். ***மறுஇல்வான்*** என்றமையால் பௌதிகவான் மறு உள் வான் என்பது பெற்றாம். அதனின்றும் நுண்பொருளாகிய வானத்தைப் பிரித்துணர்த்துவதால் இது பிரிதினியைபு நீக்கிய விசேடணம். மறு இல்வான் என்பதைச் சிதாகாசம். சிதம்பரம் என்ற பெயர்களாலும் வழங்குவர். சிவலோகம் என்பதும் இஃதே. பௌதிகவான் அசுத்த மாயையின் காரியம். அசுத்த மாயை ஒன்றாயும் சடமாயும் கால இட எல்லைகளற்றதாயும் நித்தியமாகவும் உள்ளது. அஃது ஆன்மாவின் சிற்றறிவை ஓரளவு விளக்கம் செய்வது. ஆனால் ஆணவமலமும் ஒன்றாயும் சடமாயும் கால இடஎல்லைகளற்றதாயும் நித்தியமாகவும் இருப்பதால் அஃது அசுத்த மாயையுடன் கலந்திருப்பது. அந்தக் கலப்பினால் அசுத்த மாயை ஆன்மாக்களுக்கு மயக்கத்தையும் செய்கின்றது இதனை;

''நித்தமா யருவா யேக நிலையதா யுலகத் திற்கோர்
வித்துமா யசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியா புவன போகந் தனுகர ணமுமு யிர்க்காய்
∵ வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே

(சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ. 2 - அ - 3 செய் -53)

என்று ஞான சாத்திரம் நவில்வது காண்க. எனவே, ஆணவமலக் கலப்பால் அசுத்த மாயையின் காரியமான பௌதிகவான் மறு உள் வானமாயிற்று.

ஈண்டு; ***மறுவில் வானவன்*** என்றதால் இறைவனின் சொரூப நிலை கூறி வலுத்தியவாறு காண்க.

ஏலம் ஏலும் நற் குழலிபங்கனே - இஃது இறைவனின் தடத்த நிலை கூறி வழுத்திய வாறுயிற்று.

ஏலம் - மயிர்ச்சாந்து. மாலை, சந்தனம் போன்ற போகப் பொருள்களுள் ஒன்று. இளம் மானிடப் பெண்கள் தங்கள் கூந்தலின் வண்ணம் மேலும் கருநிறம் பெற்றுப் பொலியப் பூசிக்கொள்வது. அம்பிகையின் கூந்தலுக்கு மேலும் கறுப்பு நிறம் ஊட்ட வேண்டிய தேவையின்மையின் இது போகியாயிருந்து உயிர்களுக்குப் போகத்தைப் புரியும் நிலை குறித்தது. இறைவன் நம் அடிகளைத் தன் கழற்கு அடியனுக்க வரும் நிலையாதலின் பேரருளின் உருவகமான அம்பிகைபங்கனுக வழுத்தப் பெறுகின்றுன். ஏலமும் தனக்கு வாசனையையும் கரிய வண்ணத்தையும் ஏற்றுக் கொள்வதற்காகப் பொருந்துகின்ற நல்ல மணமுள்ள கூந்தலையுடைவள் எனலுமாம். உமையம்மையின் கூந்தல் இயற்கையாகவே நறுமணமுடைய தென்பதைத் திருவிளையாடற்புராணம் - தருமிக்குப் பொற்கிழி அளித்த திருவிளையாடலிலும் ''கொங்குதேர் வாழ்க்கை" என்ற குறுந்தொகைச் செய்யுளிலும் காண்க. ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

''செம்பொனுற் செய்தழகு பெய்தாற் போலுஞ்
செஞ்சடையெம் பெருமானே தெய்வ நாறும்
வம்பிஞண் மலர்க்கூந்த லுமையாள் காதன்
மணவாள னேவலங்கை மழுவா ளனே
நம்பனே நான்மறைகள் தொழநின் றுனே
நடுங்காதார் புரமூன்றும் நடுங்கச் செற்ற
அம்பனே யண்டகோ சரத்து ளானே
அவனுகி லதிகைவீ ரட்ட னுமே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-4-9)

எனவரும் தாண்டகவேந்தர் தமிழ் நினைக.

எம்பிரான் - எனக்குச் சிறப்புரிமையுள்ள வள்ளன்மையுடைய தலைவன்.

பிரான் - தலைவன்; வள்ளன்மையுடையவன்; நான் உடமை ஆதலின் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது உன் பொறுப்பு என்பது குறிப்பு.

நின் கழற்கு அன்பு அது என் கணே இல்லை - நின் கழற்கு அது அன்பே என் கண் இல்லை - என்று ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக. ஒவ்வொருவருக்கும் மனைவி, மக்கள், சுற்றம் முதலிய உலகியற் பொருள்கள் மாட்டு அன்பு நிகழும். நல்லூழால் மெய்யுணர்வுற்ற ஞான்று நிலையற்ற அப்பொருள்களை விட்டு உயிர் இறுதியாகச் சென்று நிலையான பேரின்பம் நுகரத்துணை செய்துய்க்கும் இறைவன் திருவடிகளில் அன்பு செலுத்துவர். ஈண்டு **அன்பு அது** என்றதில் **அது** பண்டறி சுட்டாய் மெய்யன்பைக் குறித்து நின்றது. ***கழற்கு அன்பு இல்லை*** என்றதால் அதற்கு மாறுகிய உலகியற்பொருள்களில் அன்பு உள்ளது என்பது பெற்றும். **அது** பகுதிப்பொருள் விகுதி என்பாருமுளர்.

கல்லை மென் கனியாக்கும் விச்சை கொண்டு. மென் கனி - என்றமையால் கனிகளில் வன்மையுள்ளனவும் உண்டு, அவற்றை நீக்கி என் உள்ளத்தை மென்கனியாக்கினுய் என்றவாறு. இதனுல் கற்களில் மென்மையான கற்களும் உள்ளன அவற்றின் வேருகிய வன்மையான கல் போன்றது என்மனம் என்றவாறு, காய் கனியாக அதற்கேற்ற உட்கூறுகள் காய்களிடமுள்ளன. காலம் செல்லச் செல்ல அவை முதிர்ந்து கனிகளாகின்றன. காய்களின் தன்மை கெட்டு மதுரமும் மென்மையும் வண்ணமும் பெற்றுக் கனிகளாகின்றன. கல்லிடம் அத்தன்மைகள் இல்லை என்பது மட்டுமன்றிப் பொருளே வேருக உள்ளது. அங்ஙனமிருந்தும் கல் தன் தன்மை கெடுவது மட்டுமன்றி இனிப்பும் மென்மையும் நிறமும் பெறச் செய்வதாயின் அது வித்தையாகும். கல்லை ஒத்த மனமுள்ள என்னை மென் கனி போன்ற உன் மெய்யடியானுக்குவதற்காக முதலில் நீ கல்லை மென்கனியாக்கும் வித்தையில் பயிற்சி பெற்றுய் என்றவாறு. இறைவன் வரம்பில் ஆற்றலுடையவன். எத்துணை அரிய செயலைச் செய்யவும் அவன் ஒன்றை முதலிற் கற்றுக் கொள்ளவும் பிறகு அதிற் பயிற்சி பெற்றுத் தேறவும் வேண்டுவதில்லை. எனினும், நம் அடிகள் தம் மனத்தின் திண்மையை விளக்க இக்கற்பனையைக் கைக் கொண்டார். இறைவன் கல்லை மென் கனியாக்கிய வரலாறு இல்லை; ஆனுல் மலையை வில்லாக வளைத்த வரலாறு உண்மையின், கல்லை மென்கனியாக்கும் வல்லமையும் உள்ளவன் என்பது குறிப்பு.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை யாண்டு கொண்ட
செவ்வரை மேனியன் சிற்றம் பலவன் செழுங்கயிலை
அவ்வரை மேலன்றி யில்லைகண் டாயுள்ள வாறருளான்
இவ்வரை மேற்சிலம் பனெளி திற்றந்த ஈர்ந்ததையே

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் -114)

எனவரும் நம் அடிகள் வாக்கும், அதற்கு ''வலியனவற்றை வயமாக்கிப் பயின்று, பின் என்னை ஆண்டு கொண்டான் என்பது போதர ''காய்சிலை யாண்டு என்னை யாண்டு கொண்ட என்றார் ; என்னைத் தனக்கு அடிமை கொள்ளுதல் காரணமாகப் பிறிதொன்றின் மேலிட்டுக் கல்லை வளைத்தான் ; என் நெஞ்சை வளைத்தல் காரணமாக அல்லது தனக்கு ஒரு பகையுண்டாய்ச் செய்ததன்று போலும் என்பது கருத்து" என்று பேராசிரியர் நல்கிய உரைக்குறிப்பும் காண்க.

" நோக்கமெலாந் தீநெறிக்கே செலுத்துமென்றன்
மனமுழையுள் நுழையும் நாளில்
தாக்கலுறும் பருக்கைகளிற் றளிரிணைதான்
பழகவன்றோ தன்னை யீன்று
காக்கலுறும் இமயமதிற் காலூன்றி
அன்னநடை கற்ற வாகும்
ஆக்கமெலா மெனக் கருளுமகிலாண்ட
வல்லியெனு மன்னை தாளே"

(அகிலாண்டவல்லியம்மை பாதாரவிந்த மாலை 46 சி.சு.கண்ணாயிரம்)

கன்னாருரித்த கனியே போற்றி (போற்றித்திருவகவல் -97) கல்லைப்பிசைந்து கனியாக்கி (திருவாசகம் -179) கன்னாருரித் தென்ன என்னையும் தன்கருணையினாற் பொன்னார் கழல் பணிவித்து ★(திருவாசகம் 243)

" கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருகவிலையே
கருணைக் கிணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க வொருகடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்குமுண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிறங்கியெனை
வாழ்விப்ப துன்பரங்காண்
பொல்லாத சேயெனிற் றுய்தள்ளல் நீதமோ
புகலிடம் பிரிதுமுண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையே னுவனந்தோ
சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா விருக்கவருளாய்
சுத்தநிர் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே

(தாயுமானசுவாமிகள் பாடல் சுகவாரி -3)

என்றதும் நினைக.

★ " அடியனிவன் பிறப்புறுவ னிவனகங்கல்
லினும்வலிய தாள வேண்டி
அடிமலரங் கணும்வைத்தே யாடவுரி
யேமென்ற வருளி னுலோ
கடியமலை மீதுமிதித் தனைப்பயிற்சி
பெற்றனைமற் றென்னே கந்தம்
முடிவின்மல ரமளிமனை விடுத்துமலைத்
தலத்தாடன் முயலு மாறே "

(ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் சிவானந்தலகரி -80. கவியரசு அவர்கள் மொழி பெயர்ப்பு)

என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினுய் - நான் நின் கழற்கு அன்பு செய்யும் ஆற்றலற்றவன்; ஆயினும் நின் ஆற்றலின் காரணமாக என்னை அன்பனுக ஆக்கிக் கொண்டாய்.

அன்பதாக்கினுய் - என்பதும் பாடம்.

நான் ஏது கொண்டு ஏது செய்யினும் - நீ என்னை உன் அன்பனுக்கி விட்டதால் என் மனமொழி மெய்கள் அனைத்தும் உன்னுல் ஆக்கப்பட்டவையே; எனவே அவை இனிச் சிவகரணங்களாம்; அவற்ருல் செய்யப்படும் தொழில்களும் இனி உன்னை அடைவதற்கான தவங்களே. எனவே அவற்றுள் நான் எதைக் கொண்டு எத்தொழிலைச் செய்தாலும் என்றவாறு.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

''அருள் பழுத்த . . . .
இயன்றதோர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திரமாக என்னையும்
இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின்
கடற்ப டாவகை காத்தல்நின் கடனே''

திருச்சிற்றம்பலம்

(திருக்கழுமல மும்மணிக் கோவை 7)

எனவரும் பட்டினத்தடிகள் திருவாக்கு நினைக.

ஏதுகொண்டு - கொண்டு - என்பது மூன்ரும் வேற்றுமை உருபுப் பொருளில் வந்தது. ஏது கொண்டு எந்தக் கரணத்திஞல் என்றவாறு.

நின் கருணை எல்லையில்லை - நான்காம் வேற்றுமை உருபு விரித்து நின் கருணைக்கு எல்லை இல்லை என்க. அந்த எல்லை இன்மை ''என்னை நின் கழற்கு அன்பனுக்கிய வாற்ருலும்; இன்னும் உன் கழல் காட்டி மீட்க வல்லையாதலாலும்'' அறியவுள்ளது என்றவாறு.

எனக்கு இன்னும் உன் கழல் காட்டி மீட்க வல்லையே - திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் எனக்கு உன் திருவடிகளைக் காட்டினுய். பிறகு கயிலை சென்று விட்டாய். எல்லையில்லாத கருணையுள்ளவன் ஆதலின் மீண்டும் எனக்கு உன் திருவடிகளைக் காட்டவும்

என்னை இவ்வுலக வாழ்வினின்று மீட்டுக் கொள்ளவும் நீ வல்லவன் என்றவாறு. **வல்லையே** - வல்லமை உடையவன் அல்லையோ? மாட்டாயோ? எனலுமாம். ஏகாரம் - தேற்றம். வல்லவன் என்னும் துணிவுடையேன் எனலுமொக்கும்.

மீட்கவும் - பிறப்பிறப்புக்களிலிருந்து மீட்கவும் வல்லை. அஃதாவது எனக்கு வீடுபேறு தரும் அருளாற்றலும் உடையை என்றவாறு. மீட்கவும் சிறப்பும்மை. ***இன்னமுன்கழல்*** - என்பதும் பாடம்.

இத்திருப்பாடலில் ''நின்கழற்கு அன்பு என்கணே இல்லை" என்று இரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். "கல்லை மென் கனியாக்கும் விச்சை கொண்டு என்னை நின் கழற்கு அன்பனுக்கினுய்" என்றதனுல் அதீதமான வீட்டின்பத்துக்கு அதிகாரியாதலும், ''எல்லையில்லை நின்கருணை" என்றதனுல் அப்பேற்றிற்குச் சிறந்த சாதனம் சிவபரஞ்சுடரின் எல்லையற்ற திருவருளே என்பதும் பெறப்படுதலின் பதிகம் நுதலிய "***ஆனந்தாதீதம்***" பெற்றும்.

" உள்ள முருகி லுடனுவ ரல்லது
தெள்ள வரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற"

(திருவுந்தியார் 7)

என்னும் ஞானசாத்திரம் நினைக.

99. *வான நாடரும் அறியொ ணாதநீ*
மறையி லீறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதா யாண்டு கொண்டவா
ஊனை நாடக மாடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே கூரு

(இ-ள்)

விண்ணுலகத்தவரும் அறிய இயலாத நீ; தொன்மையான மறைகளின் முடிவாகிய ஞான காண்டமும் தொடர்ந்து பற்ற இயலாத நீ; மற்றைய

உலகத்தவரும் தெரிய இயலாத நீ; சிறியேனை ஊனுடலைக் கொண்டு கூத்தாடும்படி செய்தவாறும்; பின் இனிமையுற ஆட்கொண்டவாறும்; யான் உள்ளம் உருகி நின் அருளமுதத்தை உண்ணும்படி செய்தவாறும்; அதனால் ஞானக் கூத்து ஆடும்படி செய்தவாறும்; இவ்வுலகின்கண் நான் கொண்டிருந்த பாச ஞானம் ஒழிதற்பொருட்டாம் அன்றே.

(வி - ரை)

இத்திருப்பாடலில் - ''என்னை இன்னிதா யாண்டு கொண்டவா" என்பதன் முன் ''ஊனை நாடக மாடு வித்தவா" என்பதை அமைத்துக் கொள்க. முதலடியிலுள்ள ''முன்" என்பதை ''மறையிலீறு" என்றதன் முன் அமைத்துக் கொள்க.

வான நாடரும் அறியொணாத நீ - ***வானநாடர்*** - தேவ உலகத்தவர் உட்பட அசுத்தமாயா புவனங்களில் உள்ள எல்லா உலகத்தவர்களும். ***நாடரும்*** என்ற உயர்வு சிறப்பும்மையால் பிரகிருதி மாயா புவனங்களில் உள்ள மண்ணுலகம் முதலிய உலகங்களில் உள்ளவர்களாலும் அறிய இயலாதவன் என்பது பெற்றும். மண்ணுலகுக்குக் கீழுள்ள நரகம் முதலியவற்றில் உள்ளோர் பொழுதின் பெரும்பகுதியைத் தங்கள் தீவினைப் பயன்களை நுகர்வதிலேயே கழித்தலின் அவர்களுக்கு இறைவனை எண்ணும் பேறின்மை அறிக. ***அறியொணாத*** - ''அறிய" என்ற வினையெச்சத்தீறு தொக்கது. ''ஒண்ணாத" என்பது இடைக்குறை விகாரமாக ***ஒணாத*** என நின்றது. அறிய ஒண்ணாத என்றவாறு. அறிய இயலாத என்பது பொருள். ***அறிதல்*** - காட்சியளவையில் காண்டல்.

முன் மறையில் ஈறும் தொடரொணாத நீ. முன் - பண்டைய படைப்புக் காலத்தில் உலகம் முதலியன தோன்றுவதற்குமுன்பே சுத்தமாயையினின்று நால்வகை வாக்குக்களும் அவற்றாலான மறைகளும் தோன்றுவதால் மறைகளில் தொன்மை அறிக. ***மறையில் ஈறும்*** - மறைகளின் முற்பகுதி கன்மகாண்டம் என்றும் பிற்பகுதி ஞான காண்டம் என்றும் பெயர் பெறும். ஈண்டு ***ஈறும்*** என்றது ஞான காண்டத்தை. இதில் இறைவன் பண்புகள் பல திறமாகப் பாராட்டி வழுத்தப்படுகின்றன. ***ஈறும்*** - என்ற உயர்வு சிறப்பும்மையால் முற்பகுதியாகிய கன்ம காண்டத்தால் இறைவன் தொடரப் பெறுமை பெற்றும். ***தொடர்தல்*** - சொல்லிச் சொல்லி மேற் செல்லுதல். அவ்வாறு செல்லுதலேயன்றி இறைவனை அங்கைக் கனிபோல் காட்ட இயலாதொழிந்தன.

ஏனை நாடரும் தெரியொணாத நீ - ஏனை நாடர் - மேற்குறித்த வான நாடர், மண்ணுலவாசிகள் தவிர ஏனைய உலகங்களில் உள்ளவர்கள். இவர்கள் சுத்தமாயா புவனவாசிகள். சுத்த வித்தை முதல் நாத தத்துவம் வரையுள்ள புவனங்களில் வசிப்பவர்கள். இவர்களும் தங்கள் கரணங்கள் சிவகரணங்களாகப் பெற்று இறைவனை அவனருளே கண்ணுகக் காணும் மலபரிபாகம் பெற்ற நிலையிலும் இறைவனை அனுபவிப்பதன்றி அவனை அறிகின்றேம் என்ற உணர்வற்றவர்களாதலின் **தெரியொணாத** நீ என்றார்.

நீ - இறைவனின் அருமை தோன்ற, நீ என்று மும்முறை கூறினார்.

ஊனை நாடகம் ஆடுவித்தவா. ஊனை - ஊன் உடம்பை ''கொண்டு'' என்னும் ஒரு சொல் வருவித்து ஊன் உடம்பைக் கொண்டு நாடகம் ஆடும்படி செய்தவனே என்க. உலக வாழ்வில் ஈடுபடச் செய்தவனே என்பது கருத்து. கேவல நிலையில் கிடந்த உயிர் அறிவு விளக்கம் பெறுதற்காகக் கன்மத்துக் கீடான உடல் முதலியவற்றை உதவி உலகியலில் ஈடுபட்டுக் கன்மானுபவத்தால் அறிவு விளக்கமும் ஆணவமலப் பிணிப்பின் தளர்வும் ஏற்படச் செய்கின்றான். இஃது அவன் உயிர்களுக்குச் செய்யும் முதல் உபகாரம். **ஆடுவித்தவா** என்பது ''ஆடுவித்தவாறு'' என்பதன் கடைக்குறை விகாரம். அதன்பின் எண்ணும்மை விரித்து **ஆடுவித்தவாறும்** என்க.

ஈண்டு;

> *"ஊன நடன மொருபா லொருபாலர்*
> *ஞானநடந் தானடுவே நாடு"*
>
> *(திருவருட்பயன் 83)*

> *"ஊன நாடக முயற்றிய திருவருள்*
> *ஞான நாடக நவிலிய மாறலும்"*
>
> *(திருத்தணிகையாற்றுப்படை 97, 98)*

என்பன நினைக.

என்னை இன்னிதா ஆண்டு கொண்டவா - ஊன நாடகத்தால் சிறிது அறிவு விளக்கம் பெற்று உண்மையை அறியத் தொடங்கிய உயிர், சரியை முதலிய தவநெறிகளில் ஈடுபட்டுத் தூய்மையெய்தும். உரிய பக்குவம் வந்த பின் இறைவன் ஞானசிரியனாக எழுந்தருளி ஆட்கொள்வன். நம் அடிகள் தம் வாழ்வில் நிகழ்ந்த திருப்பெருந்துறை நிகழ்ச்சியை ஈண்டு நினைவு கூர்கின்றார். **இன்னிது** - ''இனிது'' என்பதன் விரித்தல் விகாரம். இனிமை

ஈண்டு ஞானாசிரியனாக எழுந்தருளி எளிமையில் காட்சி தந்து ஆட்கொண்ட சரித நிகழ்ச்சி. **கொண்ட வா** - கொண்டவாறு என்பதன் கடைக்குறை விகாரம். இதன்பின் எண்ணும்மை விரிக் **"கொண்டவாறும்"** என்க.

உருகி நான் உன்னைப் பருக வைத்தவா - இறைவன் ஞானாசிரியனாகக் காட்சியளித்து ஆட்கொண்டு உபதேசம் நல்கிய நிலையில் நம் அடிகள் நெஞ்சம் உருகி இறைவனை அமுத வடிவில் பருகி இன்புற்றார். அப்பேறு இறைவன் அருளால் கிட்டியது என்பார் **"பருக வைத்தவா"** என்றார். பருகுவதற்கு உருகுதல் ஏது. **பருகுதல்** - அனுபவித்தல். "உருகிப் பெருகியுளங்குளிர முகந்து கொண்டு, பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடலை" (திருவாசகம் 249) என்பார் பின்னரும்.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" உரமென்னும் பொருளானை யுருகிலுள் ளுறைவானைச்
சிரமென்னுங் கலனானைச் செங்கண்மால் விடையானை
வரமுன்ன மருள்செய்வான் வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பரமனெங் கள்பிரானைப் பரவாதார் பரவென்னே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7- 86- 5)

என்ற நம்பிகள் தேவாரம் நினைக.

*(**உனை** - உன்னை என்பதன் இடைக்குறை விகாரம்.)*

பருக வைத்தவா - பருக வைத்தவாறு என்பதன் கடைக்குறவிகாரம். இதன்பின் எண்ணும்மை விரித்து **வைத்தவாறும்** என்க.

ஞான நாடகம் ஆடுவித்தவா - திருவருள் அமுதத்தைப் பருகியதால் களிப்பு மீதூர்ந்து தம்வயம் இழந்து, அனைத்தையும் சிவமயமாகக் கண்டதால் ஆனந்தக் கூத்தாடினார். ஆடும் படி பேருதவி செய்தவன் அரன் ஆதலில் **ஆடுவித்தவா** என்றார். ''ஆடு வித்தவாறு" என்பதன் கடைக்குறை விகாரம். இதன்பின் ''ஆடுவித்தவாறும்" என்று எண்ணும்மை விரித்துக் கொள்க. ஊனை நாடகம் ஆடுவித்தது கட்டு நிலையையும், ஆட்கொண்டு அருளைப் பருக வைத்தது சாதன நிலையையும், ஞான நாடகம் ஆடுவித்தது வீட்டு நிலையையும் குறித்து நின்றன. ''ஆடுதல்" ''ஆட்டுவித்தல்" பற்றிய விளக்கம் "நின்ற அதனால் அவனருளாலே அவன்றாள் வணங்கி" (சிவபுராணம் 17-18) என்பதன் கீழ் விளக்கினாம்.

நைய வையகத்து உடைய விச்சையே - இறைவன், இத்தகைய அளப்பரிய பேருதவிகளை எனக்குச் செய்தது இவ்வுலகின்கண் நான் கொண்டிருந்த பாச ஞானம் முற்றிலும் ஒழியும்பொருட்டேயாம். எனவே, அவன் என்னை ஈண்டு இருத்திச்சென்றது என்னையோ என்பது குறிப்பெச்சம்.

விச்சை - வித்தை. ஞானம் ஈண்டுப் பாச ஞானம் குறித்தது. விச்சையே என்பதிலுள்ள ஏகாரத்தைப் பிரித்து **நையவே** என்று கூட்டுக. ஏகாரம் தேற்றம். **நைதல்** மலினமடைந்து வந்து முற்றிலும் அழிதல் இறுதியில் ''ஆம்" என்னும் ஒரு சொல் வருவித்து முடிக்க. **விச்சையே** - என்பதை "**இச்சையே**" என்று பிரித்து உலகவாழ்க்கை சம்பந்தமான அவா என்றுரைத்தனர் முன்னுரையாளரில் பலர். அஃது அடுத்து வரும் பாடலின் தொடக்கத்துடன் அந்தாதித் தொடையாகப் பொருந்தாமை கண்டு ஒதுக்குக. ''என்னை ஊனை நாடகம் ஆடுவித்தவாறும் இன்னிதா ஆண்டு கொண்டவாறும் உருகி நான் உன்னைப் பருக வைத்தவாறும் ஞான நாடகம் ஆடுவித்தவாறும் (என்னும் இவையெல்லாம்) வையகத்து உடைய விச்சை நையவேயாம்" என்று முடித்துக் கொள்க. இத்திருப்பாடலை, இங்ஙனமன்றி; ''வான நாடரும் அறியொணாத நீ, மறையிலீறு முன்தொடரொணாத நீ ; ஏனை நாடரும் தெரியொணாத நீ ; என்னை ஊனை நாடகம் ஆடு வித்தவா; வையகத்துடைய இச்சை நைய (நைதலின்) இன்னிதா ஆண்டு கொண்டவா; ஞான நாடகம் ஆடுவித்தவா; உருகி நானுனைப் பருக வைத்தவா;" என்று அன்னுவயம் செய்து கொண்டு அதற்கேற்ப உரைத்தலுமொக்கும்.

நாடகம் ஆடுதல் - நீ புரியும் திருவைந்தொழில்களில் நான் படியும்படி செய்தல். **ஊனை நாடகம் ஆடுவித்தல்** - கன்மானுபவம். **வையகத்துடை இச்சை நைதல்** - கன்மக்கழிவு. **ஞான நாடகம் ஆடுவித்தல்** - திருவருளில் தோய்வித்தல்; சுத்த நிலை. உருகி நான் உனைப் பருக வைத்தல் - அனுபோக நிலை.

ஈண்டு;

சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற்
சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான்
பவங்கெடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்று

னவன்ருனே யறியுஞ்சித் தாதலினு லிரண்டு
மணைந்தாலு மொன்ருகா தநந்நியமா யிருக்கு
மிவன்ருனு புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி
யிதுவசித்தென் றிடிலவனுக் கிவனுமசித் தாமே

(சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ -11 அதி -2 செய்- 11)

எனவரும் ஞானசாத்திரம் நினைக.

இத்திருப்பாடலின்கண் வான நாடரும் அறியொணுதவனும், மறையிலீறு தொடரொணுதவனும் ஏனைநாட்டரும்தெரியொணுதவனுமாகிய இறைவன் தம்மை இனிமையாக ஆட்கொண்டு உருகச் செய்து தன் அருளமுதத்தைப் பருக வைத்தான் என்று வியந்து வழுத்துவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம் பெற்ரும்**" அவன், பாச ஞானம் ஒழிந்து நான் என்வசமிழந்து ஞான நாடகம் ஆடும்படிச் செய்தான்; என்றதால் பதிகம் நுதலிய "**ஆனந்தாதீதம்**" பெற்ரும்.

100. விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச ளுக்கினுய் பெரிய அன்பருக்
குரிய ளுக்கினுய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானும் அங்ஙனே யுடைய நாதனே ௯௯

(இ -ள்)

சிறியேனை அடிமையாக உடைய என்தலைவனே; விதையாகிய காரணம் இன்றியே மரம் முளைக்கச் செய்வாய்; விண்ணுலகம் நிலவுலகம் முதலிய எல்லா உலகங்களையும் படைத்துக் குறைவற நிலைபெறச் செய்து ஒடுக்குவாய்; (அத்தகைய நீ) வஞ்சகனும் மிக இழிந்தவனுமாகிய என்னை; நின் திருக்கோயில் முற்றத்திலே உள்ள பித்தனுகச் செய்தாய்; பேரன்பர்களாகிய மெய்யடியார்களுக்கு உரியவனுகவும் செய்தாய்; உலகர் தம்மால் வளர்க்கப்பட்டு முதிர்ந்தது ஒரு நச்சு மரம் ஆயினும் தாமே வெட்டி அழிக்கமாட்டார்; யானும் அப்படியே ஆவேன்.

(வி-ரை)

இத்திருப்பாடலில் ''உடையநாதனே'' என்பதைப் பாட்டின் முதலில் வைக்க, ''முழுதும் யாவையும்'' என்பதை யாவையும் முழுதும் என்று மாற்றிக் கொள்க.

உடைய நாதனே- உயிர்கள் அனைத்தையும் தன் அடிமைகளாகவும் உலகங்கள் அனைத்தையும் தன் உடைமைகளாகவும் உடைய தலைவனே. ***உடையாய் நாதனே*** என்பதும் பாடம்.

விச்சு அது இன்றி விளைவு செய்குவாய்- செடி கொடி புல்பூண்டு மரம் இவற்றில் ஒன்றை விளைவிக்க வேண்டுமாயின் அதன் விதையை நட்டே விளைவிக்க இயலும். கொடிகள், செடிகளின் கொம்புகள் இவற்றைப் பதியம் செய்து விளைவிக்கலா மாயினும் அவையும் விதைகளாகப் பயன்பட்டு விளைவனவேயாம். அவை ஒன்றுமின்றி இறைவன் விளைவிப்பான் என்கின்றார். ***விச்சு***- விதை.

உயிர்கள் பிறக்கும் பொழுது உடல் கொண்டு பிறக்கின்றன. அவ்வுடல்கள் அவ்வவ்வுயிர்களின் முன்வினைகளால் அமைவன. எனவே, வினைகள் விதைகளாகவும் அவ்வினைகளின் பயனாக நண்ணும் உடல்கள் மரங்களாகவும் உவமை கூறப்பட்டன. முன்வினைகள் முற்பிறப்புகளில் உயிர்கள் தாங்கிய உடல்கள் செய்த தொழில்களால் ஈட்டப்படுவன. எனவே, உடல்கள் வினைகளால் அமைவன. வினைகளோ உடல்களைக் கொண்டே செய்யப்படுவன. எனவே, இதற்கு விடை என்னையோ எனிற் கூறுதும்.

உயிர்கள் எண்ணற்றன. இதுவரைப் படைப்புக்கு வராதவை அனாதி கேவலத்திற் கிடப்பன. அங்கு அவற்றுக்கு முன்வினைகளோ உடல்களோ இல்லை. ஆணவமலத்தின் பிணிப்பில் கிடப்பன. மனிதன் ஒருவன் கைரேகைகள் இது வரைப் பிறந்து இறந்தவர்கள் இனிப்பிறக்க உள்ளவர்கள் ஆகிய ஒவ்வொருவர் கைரேகைளினின்றும் மாறுபடுவன. அவ்வாறே ஆன்ம சிற்சக்தியும் ஆன்மாக்கள் தோறும் மாறுபடுவன. எனவே, ஆணவ மலப்பிணிப்பின் வலிமையும் ஆன்மாக்கள் தோறும் மாறுபடுவது. ஆன்மாக்கள் முதன் முதற் படைப்புக்கு வரும் பொழுது ஒவ்வொன்றுக்குமுள்ள ஆணவமலப்பிணிப்பின் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப இறைவன் வேறு வேறு ஆற்றலுள்ள காரண உடல்களையும், கஞ்சுக உடல்களையும் குண உடல்களையும், புரியட்டக உடல்களையும் முறையே

ஒன்றன் பின் ஒன்ருகத் தருகின்ருன். இவ்வாறு வினைகளின்றியே உடல் தருவதையே ஈண்டு, "**விச்சு அது இன்றியே விளைவு செய்குவாய்**" என்ருர். புரியட்டக உடலில் அமைந்துள்ள மனம் முதலிய அந்தக் கரணங்களும் ஆன்மாக்கள் தோறும் வேறு வேருய் அமைகின்றன. அவற்றைக் கொண்டு உயிர்கள் சிந்திப்பதையே முதல் வினையாகக் கொண்டு அவற்றுக்கேற்ற பருவுடல்களைத் தருகின்ருன். இந்த வினை, முதல் வித்தாகவும் பருவுடல் அதிற்ருேன்றும் மரமாகவும் ஆகின்றன. விச்சு அது - அது பண்டறிந்ததாகிய காரணம் என்னும் பொருள் தருவதாம்.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" நரியைக் குதிரைசெய் வானும் நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும் விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் ருேட முன்பணிந் தன்பர்க ளேத்த
அரவரைச் சாத்திநின் ருனு மாரூ ரமர்ந்தவம் மானே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 4 - 2)

எனவரும் நம் அரசுகள் வாக்குக் காண்க. ஞானமிர்தம் பாயிரம் கடவுள் வாழ்த்து. முதல் அகவலில் "

"வெண்டிரை............... **அளவில் அண்டமும் முளையின்றி விளைத்து** ...." என்று கூறுவதும் காண்க.

''விச்சொன்றின்றி விளைவுமிக்காகியும்" (திருத்தணிகையாற்றுப் படை 276) என்பதும் நினைக. ★

விண்ணும் மண்ணும் யாவையும் முழுதும் வைச்சு வாங்குவாய்- பஞ்சகலைகளில் உள்ள இருநூற்று இருபத்து நான்கு புவனங்களில் உள்ள

---

* *You will see that God who by His powerful call.*
From empty nothing drew this specious all
(James Thomson)

உலகங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து அழிப்பாய். அஃதாவது;

நிவர்த்திகலையில்	108 புவனங்கள்
பிரதிட்டாகலையில்	56 புவனங்கள்
வித்தியாகலையில்	27 புவனங்கள்
சாந்திகலையில்	18 புவனங்கள்
சாந்தியதீதகலையில்	15 புவனங்கள்
மொத்தம்	224 புவனங்கள்

நிவர்த்தி கலையில் கண்ட 108 புவனங்களும் சாதாரண புடவி தத்துவத்தில் உள்ளவை. இவ்வாறே இந் நூற்றெட்டுப் புவனங்களும் பிருதிவியண்டம் ஆயிரங்கோடியிலும் வேறு வேறு உள்ளன. இங்ஙனமே மற்ற சாதாரண அப்பு தத்துவம் முதலியவற்றிலும் அதிக எண்ணில் அமைந்துள்ளன. அத்தகைய அண்டங்கள் எண்ணிறந்தன. அவற்றுள் அமைந்துள்ள புவனங்களின் மொத்த எண்ணிக்கையும் அளவிறந்தன. ஒவ்வொரு புவனத்திலும் எண்ணற்ற உலகங்கள் உள்ளன. அவற்றையே;

" அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன . . . . ."

(திருவண்டப்பகுதி 1, -4)

என்று முன்னர் அருளிச் செய்தார். இவை பற்றிச் சிவஞான மாபாடியம் 2-ம் சூத்திரம் 3-ம் அதிகரணம் ''அண்டங்களின் இயல்பு" என்ற தலைப்பிலிருந்து ''சாந்தியதீதகலை" என்ற தலைப்பு முடியவும் பார்க்க. அஷ்டப்பிரகணம் நான்காவது நூலாகிய இரத்தினத்திரையம் சுலோகம் 90 முதல் 118 முடிய பார்க்க. **யாவையும்** - இத்துணை எண்ணற்ற உலகங்களையும்.

முழுதும் வைச்சு - முழுமையாகப் படைத்து அவ்வுலகங்கள் நிலைபெற வேண்டிய காலம் முழுவதும் அவை அழிந்துபடாமல் காத்தருளி. **வைச்சு** - வைத்து என்பதன் போலி. படைத்து வைத்து; காத்தருளி. **வச்சு** என்பதும் பாடம்.

வாங்குவாய் - அவற்றுக்கு உரிய கால எல்லை முடிந்ததும் மாயையுள் ஒடுக்குவாய்.

வஞ்சகப் பெரும் புலையனேனை. வஞ்சகம் - பொய்யொழுக்கம். அது "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்தது" (திருவாசகம் 15)

பெரும்புலையன் - பிறப்பாலன்றி ஒழுகலாற்ருல் எய்திய இழிவாதலின் "***பெரும்புலையன்***" என்ருர்.

புலையன் - இழிந்தவன். ஊன் உடம்பில் பற்றுள்ளவன்.

உன்கோயில் வாயில் பிச்சன் ஆக்கினுய். உன் கோயில் - கோயில் - உயிர்களுக்கு அரசனுகிய இறைவன் உள்ள இருப்பிடம். அஃதாவது வீட்டுலகம். ***வாயில்*** - கட்டடத்தின் நுழைவாயில். ஈண்டு வீட்டுலகில் நுழைவாயிலாக அமைந்த திருப்பெருந்துறைப் பொய்கைக்கரை. "உடனிருந்த மெய்யடியார்கள் அனைவரும் அந்த நுழைவாயில் வழியாகச் சோதியில் புகுந்து வீடுபேருகிய கோயிலுட் சென்றனர். நான் அக்கோயில் வாயிலாகிய பொய்கைக்கரையில் நின்று, கோயிலாகிய வீட்டுலகின் மீது பித்துக் கொள்ளும்படிச் செய்தாய்" என்றவாறு. நம் அடிகளின் சரிதக் குறிப்புப்பற்றிய அகச்சான்று. ***கோயிலில்*** என்பதும் பாடம்.

திருச்சிற்றம்பலம்

"உத்தம னத்த னுடையா
னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ
னென்ன மனநினைவில்
ஒத்தன வொத்தன சொல்லிட
வூரூர் திரிந்தெவரும்
தத்த மனத்தன பேசவெஞ்
ஞான்றுகொல் சாவதுவே"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் -7)

"பேரரையர்க் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்.

(திருவாசகம் -169)

என்று நம் அடிகளே அருளியுள்ளவை நினைக.

பெரிய அன்பருக்கு உரியன் ஆக்கினுய். பெரிய அன்பர் - இவர்கள் திருப்பெருந்துறையில் நம் அடிகளுடன் கூடியிருந்து பின் அடிகளுக்கு முன்பே வீடு பேறுற்றவர்கள். அழிதன் மாலைத்தாகிய உலகியல்பு கண்டு நீங்கி அழிவில் பொருளாகிய சிவபரஞ்சுடரிடத்து

இறவாத இன்ப அன்பு கொண்டவராதலின் அவர்கள் பெரிய அன்பராயினர். *பெரிய* - பெருமை. பெற்ற சிவபத்தியில் பெரிய; இறைவன் அவர்கள் குழு நடுவுள் நம் அடிகளை இருத்தினன் ஆதலின் "*உரியன் ஆக்கினாய்*" என்றார். *உரியனும்* என எச்சவும்மை விரித்துக் கொள்க. ''அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே" (திருவாசகம்-426) என்று பின்னரும் அருளிச் செய்தல் காண்க. ''அன்பரொடு மரீஇ" எனவரும் சிவஞான போதம் 12-ம் சூத்திரப் பகுதி நினைக. "அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே" (பராபரக்கண்ணி -155) என்ற தாயுமான சுவாமிகள் திருவாக்கும் நினைக.

தாம் வளர்த்தது ஓர் நச்சு மாமரம் ஆயினும் கொலார் - ஈண்டு உலக வழக்கம் ஒன்றை நம் அடிகளார் உவமையாகக் காட்டுகின்றார். மக்கள் ஒரு மரத்துக் கான விதையையூன்றிப் பலகாலம் நீர் பாய்ச்சி உரமிட்டு வளர்த்து வந்து அது முளைத்துப் பெரிய முதிர்ந்த மரமானபின் அதன் கனிகள் நஞ்சுள்ளவை என்று அறிந்தால் ; அவ்வாறு அறிந்த பின்பும் அம்மரத்தைத் தாமே வெட்டி அழிக்கார் என்றவாறு. **தாம்** - உலகமக்கள் . *மா மரம்* - முதிர்ந்து பெரியதாகிய மரம். *மா* என்பதை நச்சுக்கு அடையாக்கி மிகுந்த நஞ்சுள்ள மரம் எனலுமாம். *மாநச்சுமரம்* என்றவாறு. பயன்தரும் மரமாயினும் மிகவும் முதிர்ந்து விட்டால் காய்ப்பு ஓய்ந்து விடும், பின் அதை வெட்டச்செய்வர். ஈண்டு நஞ்சுள்ள மர மாதலின் வெட்டி அழிக்கத்தகுந்தது என்றவாறு. **வளர்த்தது** - நஞ்சுதரும் மரம் என்று அறியாமல் வளர்த்து விட்டது. ஆயினும் நஞ்சுள்ள மரம் என்று அறிந்தபின்பும். ஈண்டு உன் பெரிய அன்பருக்கு உரியன் ஆக்கிய பின்னர் நான் வஞ்சகப் பெரும் புலையனானதற்கு உவமை. **கொலார்** - ''கொல்லார்" என்பதன் தொகுத்தல் விகாரம். நச்சுமாமரத்தைத் தாமே வெட்டி விழ்த்தார் என்றவாறு. ஈண்டு, வீட்டுலகுக்கு அழையாமல் இவ்வுலகில் நிறுத்தியது குறித்தது.

நானும் அங்ஙனே - இந்த நச்சுமாமர எடுத்துக் காட்டினால் ''வஞ்சகப்பெரும் புலையனாகிய நானும் உன்னால் விடத் தக்கவனல்லன்" என்றவாறு. "எனக்கும் வீடுபேறு நல்கியருள்" என்பது குறிப்பு.

இத்திருப்பாடலின்கண் "விச்சதின்றியே விளைவு செய்குவாய், விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும் வைச்சு வாங்குவாய், வஞ்சகப் பெரும் புலையனேனையும் நின்கோயில் வாயிற் பிச்சனாக்கினாய் பெரிய அன்பருக்குரியனாக்கிய்"என்றெல்லாம் இறைவனின் அருமைப்பாட்டையும்

அவன் தமக்கு எளிவந்து நல்கிய அருளின் மேன்மையையும் வழுத்துவதால் சதகம் நுதலிய "**பத்தி வைராக்கிய விசித்திரம்**" பெற்றும். "உடைய நாதனே உலகர் தாம் வளர்த்தது ஓர் நச்சு மாமரமாயினும் கொல்லார் நானும் அங்ஙனே" என்றதால் வீடுபேறு நல்கும் ஆனந்தாதீத நிலை குறிப்பால் பெறப்பட்டுப் பதிகம் நுதலிய "**ஆனந்தாதீதம்**" பெற்றும்.

101. உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னேபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினும்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே கூஎ

(இ -ள்)

முதலும் இறுதியும் ஆக விளங்கும் இறைவனே என்னைக் காத்தருள்க; மேல் உலகத்தவர்க்கு மேலான பரம்பொருளே என்னைக் காத்தருள்க; யான் எவரினும் கடைப்பட்டவன் ஆயினேன் காத்தருள்க; என்பால் பேரருளுடையவனே காத்தருள்க; சிறியேனை நினக்கு அடிமையாகச் செய்தனை காத்தருள்க; என்னை ஆளாக உடைய தலைவனே என் தந்தையே காத்தருள்க; அடியேனுக்கு ஆதரவாக உள்ளதாகிய பற்றுக்கோடு இப்பொழுது நின்னையல்லாமற் பிறிதொரு பொருளையான் உடையனே கூறியருள்வாயாக; காத்தருள்க.

(வி -ரை)

இத்திருப்பாடலை ''ஆதியும் அந்தம் ஆயினாய் போற்றி; உம்பரார் தம் பராபரா போற்றி; யாரினும் கடையன் ஆயினேன் போற்றி; என் பெருங்கருணையாளனே போற்றி; என்னை நின் அடியன் ஆக்கினாய் போற்றி ; உடைய நாதனே அப்பனே போற்றி; எனக்கு ஆவது பற்று. இனி நின் அல்லால் மற்று ஒன்று உடையனே; பணி; போற்றி; என்று அன்னு வயப்படுத்திக் கொள்க.

ஆதியும் அந்தம் ஆயினுய் போற்றி - எல்லாப் பொருள்களுக்கும் தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணன். "சங்கார காரணனுயுள்ள முதலேயே முதலாகவுடைத்து இவ்வுலகம்" என்னும் சிவஞான போதம் முதற் சூத்திரத்தின் கருத்துரை காண்க. சிவபெருமான் ஒருவனே முழு முதற் கடவுளாகிய பதிப்பொருள் என்று அறுதியிட்டு நிலேநாட்டியவாறு.

போற்றி - வணக்கம் எனலுமாம். ***போற்றி*** - எச்சரிக்கை. விழிப்பாயிரு; என்னேக் காப்பதற்காக நீ எச்சரிக்கையுடன் இரு; அதற்காக உன்னேயே நீ காப்பாற்றிக் கொள் என்றவாறுமாம். இப்பொருளில் "சின்னதாராபுரம் முனிமுக்தீசுவரர் எச்சரிக்கை" என்ற ஒரு சிறு நூலும் உள்ளது. "இப்பொருளில் அரசர் முதலியோரை முன்னிலேப்படுத்திக் கூறப்படுவது பழந்தமிழ் நூல்களிற் காணலாம்" என்பது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு. **அந்தம்** ''அந்தமும்" என எண்ணும்மை விரித்துக் கொள்க.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்,
அரைக்கா டரவா ஆதியு மந்தமு மாயினுய்
புரைக்காடு சோலேப் புக்கொளி யூரவி னுசியே
கரைக்கால் முதலேயைப் பிள்ளே தரச்சொல்லு காலனேயே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *7-92-4*)

எனவரும் நம் நம்பிகள் நற்றமிழும் நினேக.

உம்பரார் தம் பராபரா போற்றி - ஆதியும் அந்தமும் ஆயினுனை நிற்கும் முழுதற் கடவுளின் இலக்கணம் அறியாதார் அவனேத் தேவரில் ஒருவன் என்று கூறுவர். அது பொருந்தாது என்று மறுப்பார் "***உம்பரார்தம் பராபரா***" ★ என்று வலியுறுத்தினுர். ***பராபரா*** ''பராபரன்" என்னும் வடசொல் திரிந்து விளியேற்றது. மேலானவர்கள் எல்லாருக்கும் மேலானவன்; "பரமேட்டி" என்பது பொருள் "யாவர்க்கும் மேலாம் அளவிலாச்சீருடையான்" (திருவாசகம் -622) என்று நம் அடிகளே பின்னர் அருளுவதும் காண்க. 8-ம் திருப்பாட்டில் ''தேவரென்றே" என்றதன் கீழ் எடுத்தாண்ட சிவஞான சித்தியார் பாடல் நோக்குக.

யாரினும் கடையன் ஆயினேன் - நான் எல்லாரினும் கீழ்ப்பட்டவன். ''யாவர்க்கும் கீழாம் அடியேன்" (திருவாசகம்-622) என்று பின்னரும் அருளிச் செய்தல் காண்க. "நீ ஆட்கொள்ளத் தகுதியுள்ளோர் என்னினும் மேம்பட்டோராய்ப் பலர் நிற்க, நீ என்னை ஆட்கொண்டது உன் பேரருட்டிறம்" என்றவாறு. ''***கடையன் நாயினேன்***" என்று பிரித்துரைக்கவும் நின்றது.

என் பெரும் கருணையாளன் - "அருள் செய்வதற்கு உரிய தகுதி என்பால் இல்லை. எனினும் நீ அருள் செய்தனை ; ஆதலின் உன் கருணைபெருங் கருணையாம் என்றவாறு." ***என்*** - சிறப்புரிமை பாராட்டியவாறு.

என்னை நின் அடியன் ஆக்கினுய் - "உன் பெருங் கருணை காரணமாகவே நீ என்னை உன் தொண்டனுக ஆக்கிக் கொண்டாய்." ***என்னை*** - ''என்னையும்" என்று இழிவு சிறப்பும்மை விரித்துக் கொள்க. ***ஆக்கினுய்*** - "இயல்பாக நான் உன் அடியன் ஆகாமல் இருந்தேன்; நீ உன் கருணையால் என்னை உன் அடியன் ஆக்கிக் கொண்டாய்; எனவே, என் அடிமைப் பண்பு செயற்கையேயன்றி இயற்கையன்று."

உடைய நாதனே அப்பனே - "நீ என்னை அடியன் ஆக்கியமையான் என்னை அடிமையாக உடைய தலைவன் ஆவாய்; உன் பேரானந்தப் பெருஞ்செல்வமாகிய வீட்டின்ப நுகர்ச்சிக்கு மகன் என்ற முறையில் நான் உரியவன் ஆதலின் நீ எனக்கு அப்பனும் ஆயினுய்" என்றவாறு.

எனக்கு ஆவது பற்று - "எனக்கு நன்மை தருவதாகிய பற்றுக் கோடு." ***ஆவது*** - நன்மையாவது.

இனி நின் அல்லால் மற்று ஒன்று உடையனே. இனி - இப்பொழுது. "நீ என்னை ஆட்கொள்ளுமுன்பு பொய்யுலக வாழ்வில் ஈடுபட்டு, அதனையே பற்றுக்கோடாகக் கைக் கொண்டேன் ஆயினும்; உனக்கு ஆட்பட்ட பின் இப்பொழுது ***நின் அல்லால் மற்று ஒன்று உடையனே*** உன்னைத்தவிர வேறு ஆதரவுள்ளேனு; இல்லை" என்றவாறு. ஓகாரம் எதிர்மறை குறித்த வினுப்பொருளில் வந்தது. ஈண்டுச் சிவபுராணம் (48) -ல் ''பிறந்த பிறப்பு" என்றதன் கீழ் எடுத்தாண்ட நம்பிகள் தேவாரம் காண்க.

---

* Lord Thou alone Lord without Pride; because, Thou art the only Lord who hast no Lord. - (St. Augustine)

திருச்சிற்றம்பலம்

" உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே "

திருச்சிற்றம்பலம்

திருமுருகாற்றுப்படை வெண்பா -5

என்பது நினைக.

பணி - கட்டளையிட்டருள்க. ***பணிபோற்றி*** - என்று கூட்டி, "நின் திருவருட்பணிக்கு ஆக்கி இரட்சிக்க" என்றுரைத்தார் சீகாழித் தாண்டவராயர்.

இத்திருப்பாடலை மேற்குறித்தவாறு அன்னுவயம் செய்து நோக்கின், அப்பாலுக்கப்பாலாய் விளக்கும் சிவபரஞ்சுடரின் முழுமுதற்றன்மையைக் கூறி வழுத்தினர்; அதனின்றும் ஆன்ம கோடிகளுக்கு நலம்புரிதற் பொருட்டு எளிவரும் பேரருட்டிறன் தோன்ற முன்னிலைப்படுத்து விளித்து வழுத்தினர்; சங்கார காரணனாகிய முழுமுதற் பொருள் அமரர்களுக்கு மேலானவனாய் நிலவுலக மாந்தர்க்குப் பேரருளுடையனாய்த் தமக்குப் பேரின்பப் பெருஞ்செல்வம் உரிமையில் நல்கும் தந்தையாய் விளங்குவதை வழுத்தினர்; என்பன புலனாதல் கண்டு இன்புறுக.

இத்திருப்பாட்டில், இறைவன் உம்பரின் பராபரனாய் நின்றும் யாவரினும் கடையனாகிய தம்மை அடியன் ஆக்கியதும் அவனைத் தவிரத் தமக்கு வேறு பற்றுக் கோடின்மையும் கூறி இரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும். "என்னைக் காத்தருள்க" என்றதனால், "மீண்டும் பிறப்பில் செல்லாமல் காத்து வீடுபேறு தருக" என்பது குறிப்பாற் பெறப்பட்டு அந்த வீடுபேற்றில் உயிர் நுகரும் தன்வயமிழந்த இன்பம் குறிப்பதால் பதிகம் நுவலும் "**ஆனந்தாதீதம்**" பெற்றும்.

102. அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய அன்பரில்
உரிய னாயுனைப் பருக நின்றதோர்

துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே கூஅ

(இ -ள்)

எனக்குத் தந்தையே; எனக்குச் சாவா மருந்தாக உள்ளவனே; பேரின்ப மயமானவனே, உள்ளம் உருக வாயூறுதற்கு ஏதுவாக உள்ள தேன் போன்றவனே; நினக்கு உரிமையுள்ள மெய்யன்பர்களைப் போல யானும் உரிமையாளனுகி நின்னை நுகரும்படி எனக்குக் கிடைத்து நிற்பதாகிய ஒப்பற்ற உணவாக உள்ளவனே; ஒளி விளங்கும் திருமுடியையுடையவனே; அடியார்களாகிய எங்கள் அரசே; மெய்யடியார்களுக்கு உண்மைத்துணையாக உள்ளவனே; தொண்டர்களுக்குத் தளர்ந்த சமயத்தில் சேமநிதியாக உள்ளவனே; இப்பொய்யுலக வாழ்வில் அடியேனைத் துன்புறும்படி வைத்தல் முறையாகுமா; கூறியருள்க.

(வி -ரை)

''எங்கள் மன்னனே" என்பதைச் ''சுடர் முடியனே" என்றதன் பின்பு புணர்த்துக. ''நைய வையகத்து" என்பதை ''எனை வைப்பதோ" என்றதன் முன் புணர்த்துக.

எனக்கு அப்பனே. எனக்கு - என்பதை இடைநிலைத் தீவகமாகக் கொண்டு ''எனக்கு அப்பனே" ''எனக்கு அமுதனே" என ஈறிடத்தும் கூட்டியுரைக்க. "என் தந்தையாகிய நின் உடைமைக்கு உரிமையுள்ள நான் அதைப்பெருது ஒழிய ஏனைய அடியார்களை மட்டும் சிவலோகத்துக்கு அழைத்துச் சென்றனையே" என்று முறையிட்டவாறு.

அமுதனே - அமுதம் நுகர் பொருளாகும். அதை உடையவனும் உடைமையும் இறைவனே என்பது பெறப்பட்டது. அமுதம் சாவாமருந்து என்பது உபசாரம். அது பிணி மூப்பு மரணங்களை மிக நீண்ட காலம் தள்ளிப்போடும். நுகர்தற்கு இனியனும் மரணத்தை ஒழிப்பவனும் உண்மையில் இறைவனே ஆதலின் **அமுதனே** என்றார்.

ஆனந்தனே - ஆனந்தம் தருபவனும் ஆனந்தத்துக்குக் காரணமானவனும் ஆனந்தமாகவே யுள்ளவனும் சிவபெருமானே ஆவன்

என்றவாறு ''அத்தன் ஆனந்தன் அமுதன்." என்றார் பின்னரும் (157)

அகம் நெக அள் ஊறு தேன் ஒப்பனே - சிவபரம்பொருளை நினைக்கும் தோறும் உள்ளம் உருகுவதாலும், அவன் புகழைப் பேசுந்தோறும் வாயில் அமுதம் ஊறுவ தொத்து இன்பம் பெருகுவதாலும் அகம் நெக உள் ஊறு தேனுக்கு ஒப்பானவனே என்றார். வண்ணம், சுவை, பலன் இவற்றால் காட்சியளவிலேயே தேன் வாயூரச் செய்தலின் இறைவனுக்கு உவமையாக்கினர். முன்னம் நூற்சிறப்பில் "திருவாசகம் என்னும் தேன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணுதே
நினைத்தொ றுங்காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 217)

என்று நம் அடிகளே பின் அருளியுள்ளது நினைக.

''**அள்**'' என்ற சொல் செறிவு என்னும் பொருளதாகலின் "**அள்ளூறுதல்**" என்பதற்கு நெருங்கிச் சுரக்கும் தேன் என்று கூறுலுமாம். நெருங்கிச் சுரத்தலாவது இடையறாது ஒழுகுதல்.

உனக்கு உரிய அன்பரில் உரியனாய் - உன் பேரானந்தப் பெருஞ்செல்வத்தை அனுபவித்தற்கு உரிய உரிமையுடைய மெய்யடியார்களைப் போல என்னையும் உரிமையுடையவன் ஆக்கினாய்.

அன்பரில் - ''இல்" என்னும் ஐந்தாம் வேற்றுமையுருபு உவமப் பொருட்டு நின்றது. ''அன்பரைப் போல" என்றதனால் தாம் மெய்யன்பர் அல்லர் என்றவாறு. வாய் அள்ளூற இடையறாது ஒழுகும் தேனாகிய உன்னைப் பருகுவதற்கு உரியவர் உனக்கு உரிய மெய்யன்பர்களே. அத்தகுதியற்ற என்னையும் அம்மெய்யன்பர்களைப் போல உன்னைப் பருதற்குத் தகுதியுள்ளவனாக ஆக்கினாய் என்றவாறு.

உன்னைப் பருக நின்றது ஓர் துப்பனே *-அத்தகுதி கொண்டு நான் நுகர்தற்குரிய சிறந்த உணவாக நின்றனை என்றவாறு. **பருகுதல்** - குடித்தல்; நுகர்தல்; என்னும் பொருளை உணர்த்தி நின்றது. ''இச்சொல் இப்பொருளில் வருதலை ;

''வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்
பைதனோ யெல்லாங் கெட"

(திருக்குறள் 1266)

எனவரும் முதற்பாவலர் மொழியாலறிக.

துப்பனே - உணவாக உள்ளவனே. ***துப்பு*** - உணவு, இச்சொல் இப்பொருளில் வருவதை,

" துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை"

(திருக்குறள் 12)

எனவரும் பெருநாவலர் வாய்மொழிக்குப் பரிமேலழகர் உரையாலறிக.

சுடர் முடியனே- அரசுரிமையின் அடையாளங்களாகிய முடி, குடை, கோல், அரியணை என்பவற்றில் சிறந்த முடியை உடையவன் என்றவாறு. உலகில் முடிமன்னர்களைப் பேரரசர் என்பர். ஈண்டுப் புவனங்களின் தலைவர்களுக்கெல்லாம் மேலாய் நிற்கும் கடவுட் பேரரசனாதலின் "சுடர் முடி" என்ற அடைபுணர்த்தார். இதற்கு இவ்வாறன்றிச் "சுடர் வீசுகின்ற இளம் பிறைத் திங்களைத் தரித்த முடி" என்பர் திரு. பாரதியாரவர்கள். ''ஞானம் பிரகாசிப்பதான மகுடச் சடையனே" என்பது சீகாழித் தாண்டவராயர் உரை.

எங்கள் மன்னனே - ஏனைய புவனங்களில் வாழ்வோர். அவ்வப்புவன நாயகர்களின் நேர் ஆட்சியில் வாழ்பவர்கள். அவர்கள் அவ்வப்புவனங்களில் உள்ள போகங்களையே தங்கள் புவன நாயகரிடம் அவாவி நிற்பர். ஆனால் உலக நிலைக்குரிய பொருட் செல்வத்தை வேண்டாது வீட்டின்பம் நல்கும் அருட் செல்வத்தையே வேண்டும் மெய்யடியார்களாகிய எங்களுக்கு மன்னவனே என்றவாறு.

---

* Thou alone my food and drink, my love and my joy, my delight and perfect food. - (Thomas A. Kempis)

துணையாளனே - "தொழும்பாளர் என்பது இடைநிலைத் தீவகமாகத் தொழும்பாளர் துணையாளனே" "தொழும் பாளர் எய்ப்பினில் வைப்பே" என ஈரிடத்தும் கூட்டியுரைக்க நின்றது.

தொழும்பாளர் - தொண்டு செய்யும் மெய்யடியார்கள். இச்சொல்லை இப்பொருளில் "தொழும்பாய்ப்பணி செய்வோம்" *(163)* "ஏழைத்தொழும்பனேன்" *(325)* என்று நம் அடிகளே ஆள்வது காண்க.

துணையாளன் - ஆன்ம கோடிகளுக்கு உலகிற்காணும் சுற்றம், துணை எல்லாம் அப்பிறவிகளில் அவ்வுயிர் துய்யக்கவுள்ள பிராரத்த வினைக்கு ஈடாக எடுத்த உடலைப் பற்றியனவேயாம். அவ்வுடலின் ஒழிவில் அவையும் ஒழிவன. எனவே, அவை உடற்றுணையாமன்றி உயிர்த்துணை ஆகா. உயிரின் உண்மைத் துணை சிவபெருமானேயாவன். இவ்வுண்மையை உள்ளவாறு அறிந்தவர்கள் மெய்யடியார்களான தொண்டர்களே. எனவே, ''தொழும்பாளர் துணையாளன்" என்றருளினர். இவ்வுண்மையை ;

திருச்சிற்றம்பலம்

" அருந்துணையை யடியார்த மல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொருநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 1 - 5)

எனவரும் தாண்டகவேந்தர் தமிழிலும் காண்க.

தொழும்பர் எய்ப்பினில் வைப்பே - தொண்டர்களுக்குத் தளர்ந்த இடத்தில் சேம நிதி போன்றவனே. தொழில் வாணிபம் முதலியவற்றில் ஈடுபட்டோர் ஆண்டுதோறும் கிட்டும் ஊதியத்தில் ஒரு பகுதியைத் தனி நிதியாகச் சேமித்து வருவர். இதை ஆங்கிலத்தில் Reserve Fund என்பர். ஏதேனும் ஒரு சமயம் தங்கள் தொழில் அல்லது வாணிபத்தில் எதிர்பாராத

வண்ணம் பேரிழிப்பு நேரில், தங்கள் தொழில் அல்லது வாணிபம் அழிந்து போகாமல் காக்க இந்த நிதியினின்றும் தேவையான பணத்தை எடுத்துப் பயன்படுத்துவர். இந்த நிதியையே ஈண்டு **எய்ப்பினில் வைப்பு** என்றார். தளர்ச்சியுற்ற காலத்தில் உதவும் வைப்பு நிதி என்பது பொருள். இதனையே பின்னர் ''வைப்பு மாடு" என்றது காண்க (திருவாசகம் 426)

வையகத்து எனை நைய வைப்பதோ- இத்துணைப் பேரருளாளனாகிய நீ, என்னை அடிமையாக ஏற்றுக் கொண்ட பின்னரும் இவ்வுலகின்கண் நிறுத்தி யான் துன்பமுறச் செய்தல் முறையாமோ என்றவாறு. ***எனை***- என்னை என்பது தொகுத்தலாயிற்று. ***நைய*** - துன்பத்தால் நாள் தோறும் மலினமடைந்து வந்து முற்றிலும் அழிய. ***வைப்பதோ*** - ஓகாரம் எதிர்மறை குறித்த வினாப் பொருளில் வந்தது. வைப்பது என்ற சொல்லின்பின் ''முறை" என்ற ஒரு சொல் வருவித்து அதன்பின் ஓகாரம் புணர்க்க. வைப்பது முறையோ? அன்று; என்றவாறு.

சொலாய்- சொல்லாய் என்றதன் தொகுத்தலாயிற்று. "கூறியருளுக" என்றவாறு. சொல்ஆய் என்று பிரித்துக் "கூறியருள்க என் அன்னை போன்றவனே" என்றுரைக்கவும் நின்றது.

இத்திருப்பாடலில், ''வையகத்து என்னை நைய வைப்பதோ?" என்று இரங்குவதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றாம். ''உரிய அன்பரில் உரியனாய் உனைப்பருக நின்றதோர் துப்பனே" என்றதால் நான் உண்மையிலேயே மெய்யடியானாகி என் வசமிழந்து உன்னை நுகர வேண்டும் என்பது குறிப்பால் பெறப்பட்டுப் பதிகம் நுதலிய "***ஆனந்தாதீதம்***" பெற்றாம்.

103. மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாட்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னாவினாற்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. கூகூ

(இ -ள்)

என்றும் நிலை பேறுடைய எங்கள் தலைவனே; அடியேனை வருக என்று பணித்தருள்வாயாக; திருமாலும் திசைமுகன் முதலிய மற்றைத் தேவர் எவரினும் முற்பட்டவனாகிய எங்கள் தலைவனே; அடியேனை வருக என்று பணித்து அருள் வாயாக; எல்லா உலகங்களும் முற்றிலும் அழிந்த பேரூழிக் காலத்தின் பின்னரும் அழிவின்றி உள்ளவனாகிய எங்கள் தலைவனே; என்னை வருக என்று பணித்து அருள் வாயாக; பாவத்தையும் பசு புண்ணியத்தையும் ஒழிப்பவனாகிய எங்கள் தலைவனே; கழலணிந்த நின் திருவடிக்கண் மெய்யன்பு உடையனாய்ப் பலமுறை புகழ்பாராட்டவும் நின் சிறப்புக்களை இசையுடன் பாடவும் அடியேனை வருக என்று பணித்தருள்வாயாக.

(வி -ரை)

இத்திருப்பாடலை ''மன்ன எம்பிரான்; எனை வருக என்; மாலும் நான்முகத்து ஒருவன் யாரினும் முன்ன எம்பிரான்; எனை வருக என்; யாவும் முழுதும் இறுதி உற்ற நாள்; பின்ன எம்பிரான்; எனை வருக என்; பாவ நாச எம்பிரான்; பெய்கழற்கண் அன்பு ஆய் என் நாவினால் பன்ன; நின்சீர்கள் பாட; எனைவருக என் - என்று அன்னுவயம் செய்து கொள்க.

மன்ன எம்பிரான் எனைவருக என். மன்ன - சிவபெருமான் உலகத் தோற்றத்துக்கும் முன்னும் பேரூழியின் பின்னும் நிலைபெற்றுள்ளவன் என்னும் பதிப்பொருள் இயல்பை தெளிவுறுத்தவாறு. ***மன்னுதல்*** - நிலை பெற்றிருத்தல். "மன்னா வுலகத்து ***மன்னுதல்*** குறித்தோர்" (புறநானூறு 165) என்றவிடத்தும் இச்சொல் இப்பொருளில் வருதல் காண்க. ***மன்னன்*** - நிலைபெற்றிருப்பவன். அதுவிளியேற்று ***மன்ன*** என நின்றது.

மன்ன - அரசனே என்றுரைத்தாரும் உண்டு. ***எம்பிரான்*** - என்றும் நிலைபெற்றுள்ள முழுமுதற் பொருள் எங்கள் தலைவனாயுள்ளான் என்ற அவன் சார்புபற்றிய களிப்பால் ''***எம்பிரான்***'' என்றார். ***எம்*** - ஏனைய மெய்யடியார்களையும் உளப்படுத்தியவாறு. ***பிரான்*** - பிரியாதிருப்பவன். பிரியமுள்ளவன் எனலுமாம். பின் வருவனவற்றிலும் இவ்வாறே கொள்க. ***எனை***- ''என்னை'' என்பது தொகுத்தலாயிற்று. ***வருக***- சிவஉலகுக்கு வரும்படி ஆணையிடுக என்றவாறு. ***என்*** - என்பாய் என்பது விகுதியும் இடைநிலையும் புணர்ந்து கெட்டு என் என நின்றது.

மாலும் நான்முகத்து ஒருவன் யாரினும் முன்ன எம்பிரான் - காத்தல் தொழிலுள்ள திருமாலுக்கும் படைத்தல் தொழிலுள்ள அயனுக்கும் முன்னமே உள்ளவன் என்றதால் அவர்களைப் படைத்துக்காப்பவன் சிவபெருமானே என்பது பெற்ரும். அவர்களால் படைக்கப்பட்டும் காக்கப்பட்டும் நிற்கும் மனிதர் முதலியோருக்கு முன்புள்ளவன் என்பது கூறுமலேயமையும். ***நான்முகத்து ஒருவனும்*** என எண்ணும்மை விரித்துக் கொள்க. ***யாரினும்*** என்றது இந்திரன் முதலிய தேவர்களேயும் மண்ணுலகம் முதலியவற்றில் வாழ்வோரையும் குறித்து நின்றது.

யாவும் முழுதும் இறுதி உற்ற நாள் - உலகங்கள் அனைத்தும் சிறிதும் எஞ்சுதலின்றி ஒடுங்கிய பேரூழிக்காலத்து.

பின்ன எம்பிரான் - பின்னரும் நிலைபெற்றிருக்கும் எங்கள் தலைவனே. ***பின்ன*** - விளி. பேரூழியின் பின்னுக நிலைபெற்றிருப்பவனே என்றவாறு.

ஈண்டு, 33-ம் திருப்பாட்டின் கீழ் எடுத்தாண்ட திருத்தாண்டகம் காண்க, மேலும்;

திருச்சிற்றம்பலம்

" பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4, 112, 7)

என்பதும் காண்க.

விண்ணுலகம் முதலிய எல்லா உலகங்களும் சித்துப் பொருள்களும் சடப்பொருள்களுமாகிய இரு கூறுகள் கலந்தன. திருமால் நான்முகன் முதலிய சித்துப் பொருள்களைப் படைத்தலின் சித்துப் பொருள்களுக்கு முன்னவனுனன். சடப்பொருள்களை மாயையினின்று படைத்தலின் அவற்றுக்கும் முன்னவனுனன் அதையே "***யாவும்***" என்றதனுல் விளக்கினுர். பேரூழிக் காலத்தில் திருமால் முதலியவர்களை அழித்தலின் சித்துப் பொருள்களுக்கும்; உலகங்களை மாயையுள் ஒடுக்குதலின் சடப்பொருள்களுக்கும் பின்னவனுமானுன். ***யாவும்*** என்றது சடப்பொருள்களை.

பாவநாச பாவத்தைப் போலவே பசுபுண்ணியங்களும் வீடு பெறுவதற்குத் தடையாகும். ஆதலின் பாவம் பசு புண்ணியம் இரண்டையும் ஒழிப்பவனே என்னுது பாவங்களை நாசம் செய்பவனே என்றது என் எனிற் கூறுதும்;

உயிர், பருவுடலை விட்டு நீங்கியபின் இரு வினைகளை நுகர்ந்து கழிப்பதற்காகப் புரியட்டக உடலினின்றும் பூதசார உடம்பு தோன்றும். உயிர், அவ்வுடலுடன் விண்ணுலகம் சென்று பசு புண்ணியப் பயன்களை நுகர்ந்து கழிக்கும். பின்னர் யாதனு சரீரம் பெற்று நரகம் முதலிய கீழ் உலகங்களில் சென்று தீவினைப் பயன்களை நுகர்ந்து கழிக்கும். இதனுல் தேவருலகம் முதலியவற்றில் நல்வினைப் பயன்களை நுகர்தற்கு அமைந்தது பூதசார உடல் என்பதும்; நரகம் முதலியவற்றில் தீவினைப் பயன்களை நுகர்தற்கு அமைந்தது யாதனு உடம்பு என்பதும் பெற்ரும். இனிச் சிவஞான சித்தியார் பாடலைப் பார்ப்போம்.

''பூதனு சரீரம் போனுற் புரியட்ட ரூபந் தானே
யாதனு சரீர மாகி யின்பத்துன் பங்க ளெல்லா
நாதனு ராணை யுய்க்க நரகொடு சுவர்க்கந் துய்த்துத்
தீதிலா வணுவா யோனி சேர்ந்திடுஞ் சீவ னெல்லாம்''

(சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ -2 செய் - 36)

என்பது அப்பாடல். இதில் யாதனு சரீரமே சுவர்க்கத்திலும் நரகிலும் இன்பதுன்பம் துய்ப்பதாகக் கூறப்படுகின்றதன்ரே? பூத சார உடம்பை ஏன் யாதனு உடம்பு என்ருர் எனில், ''பொன்விலங்கு போறலின் துறக்க வுடம்பையும் யாதனு சரீரமென்ருர்'' என்று நம் மாதவச் சிவஞான முனிவர் அவர்கள் அமைதிப்படுத்துகின்ருர்கள். ஆதலின், ஈண்டுப் ''*பாவநாச*'' என்றது பொன்விலங்கு போன்ற பசு புண்ணியங்களையும் என்று பொருள் கொள்க.

இதற்கு, இவ்வாறன்றிப் ''புண்ணியமும் பாவமும் பாலும் நீரும் போலும் என்பதும், சிவஞானமாகிய நெருப்பிடைக் காய்ச்சப்படுங்கால், பாலோடு கலந்த நீர் முதலிற் சுவறுதல் போலப் பாவம் முதலில் தேய்ந்து ஒழியும் என்பதும், பின்னர்ப் பால் சுவறி நெய்யாகிப் பயன் விளைத்தல் போலப் புண்ணியம் உலகியலினின்றும் வேறுபட்டுச் சிவபுண்ணியமாக நின்று, சிவக் காட்சியைப் பயப்பிக்கும் என்பதும், ஆன்ருேர் அனுபவத்திற் கண்ட உண்மைகளாம்'' என்று விளக்குவது கதிர்மணி விளக்கம். அதற்கு எடுத்துக்காட்டாக ;

திருச்சிற்றம்பலம்

" பண்ணிய தழல்காய் பாலளாம் நீர்போற்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினும் நம்பநின் பெருமை
நுன்னிடை யொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனைகங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *9 - 13 - 9*)

எனவரும் கருவூர்த் தேவர் திருவிசைப்பா காட்டப்பட்டுள்ளது.

பெய் கழல்கண் அன்பு ஆய் என் நாவினுல் பன்ன. ***பெய்கழல்*** - பரல்கள் பெய்த கழல். மிக மேலான கழல் என்பர் கவியரசு அவர்கள். ***அன்பு ஆய்*** - மெய்யன்புடையவனுகி. ***ஆய்*** என்றதனுல் இப்பொழுது மெய்யன்பு இல்லாதவனுக இருக்கின்றேன் என்றவாறு. ***என் நாவினுல் பன்ன*** - மறைகளும் மாலும் புகழ்ந்து பாராட்ட முடியாத உன் கழல்களின் பெருமையை என் நாவினுல் புகழ்ந்து துதிக்க. ***பன்னுதல்*** - பலகாலும் அருச்சித்து வழிபடுதல்.

நின் சீர்கள் பாட - நின் சிறப்புக்களை இசையினுல் பாடித்துதிக்க. "***பன்னவும்***" "***பாடவும்***" என எண்ணும்மைகள் தொக்கன.

முதலில் உன் திருவடிக்கண் மெய்யன்பு வேண்டும்; அதனுல் உன் புகழ்களை நாவினுல் புகழ்ந்து துதிக்கவும், அத்தொண்டின் முதிர்ச்சியால் உன் சிறப்புக்களை இசையினுல் பாடிப் பரவவும் வேண்டும்; இவை எனக்கு வேண்டிய சாதனங்கள். இவற்றின் பயனுக உன் திருவடியின்பத்தை என்வசமிழந்து நுகர்வேன் என்பது குறிப்பெச்சம்.

இத் திருப்பாடலில், "நின் கழல் பணிந்து மெய்யன்புடையவனுகப் பலமுறை உன்னை என் நாவினுல் அருச்சித்து வழிபட வேண்டும்; நின் சிறப்புக்களை இசையினுல் பாடிப் பரவவேண்டும்" என்று விண்ணப்பம் செய்வதால் சதகம் நுதலிய "***பத்தி வைராக்கிய விசித்திரம்***" பெற்றும்.

அவ்வழிபாட்டின் பயனுக உன் திருவடி இன்பத்தில் நான் என் வசமிழந்து திளைத்தல் வேண்டும் என்பது குறிப்பாற் பெறப்படுதலின் பதிகம் நுதலிய "ஆனந்தாதீதம்" பெற்றும்.

104. பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே
க00

(இ -ள்)

நின்பால் மெய்யன்புள்ள அடியவர்களுக்கு மெய்ப் பொருளாக உள்ளவனே; என்னைக் காத்தருள்க; உன்னைப் பற்றியே நான் பாட வேண்டும்; உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகிப் பாடிக் கொண்டு என்வசமிழந்து நான் கூத்து ஆடல் வேண்டும்; என்னைக் காத்தருள்க; தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடும் நின் திருவடி மலரை இழிந்தோனுகிய நான் அடைதல் வேண்டும்; என்னைக் காத்தருள்க; அது குறித்து அடியேனைப் புழுக்களுக்கு இடனுகிய இவ்வுடலினின்றும் விடுவித்தருளல் வேண்டும்; என்னைக் காத்தருள்க; நான் இப்பொய்யுலக வாழ்க்கையைப் பற்றிய எல்லாவற்றையும் விட்டு ஒழிக்கச் செய்தல் வேண்டும்; என்னைக் காத்தருள்க; அழிவில் இன்பமாகிய வீட்டு நிலையைத் தந்து அருள்வாயாக; என்னைக் காத்தருள்க.

(வி -ரை)

இத்திருப்பாடலில் ஈற்றிலுள்ள ''மெய்யர் மெய்யனே" என்பதை முதலில் அமைத்துப் பொருள் காண்க.

நின் மெய்யர் மெய்யனே - உன்னிடம் மெய்யன்பு கொண்ட உண்மையடியார்களின் உயிரை உடம்பாகக் கொண்டு அவர் உயிருள் நின்று இயக்கி உய்விப்பவனே. *மெய்* - உண்மை ; உடம்பு. இறைவன் ஆன்மாக்களைத் தன் அட்ட மூர்த்தங்களுள் ஒன்ருகக் கொண்டுள்ளான்

என்பது நினைக. அவ்வாருயின் பொய்யர்கள் உயிருள் அவன் இலனே எனின்; ஆண்டும் உள்ளான். ஆங்குப் பொய் வடிவாக நின்று அவர்களை உலகியலில் ஈடுபடுத்திச் சோபான முறையில் முன்னேற்றுகின்முன் என்க. ''மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினுர்க்கு" (214) என்று நம் அடிகளே பின்னர் அருளிச் செய்தல் காண்க. ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" உள்ளத்து முள்ளன் புறத்துள்ள னென்பவர்க்
குள்ளத்து முள்ளன் புறத்துள்ள னெம்மிறை
உள்ளத்து மில்லை புறத்தில்லை யென்பவர்க்
குள்ளத்து மில்லை புறத்தில்லை தானே."

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 1532)

என்றது காண்க.

போற்றி - வணக்கம் எனலுமாம்.

நின்னையே நான் பாட வேண்டும் - என்று மாற்றிக் கொள்க. பிறதேவர்களையோ மனிதர்களையோ பாடாமல் நின்னையே பாட வேண்டும்; அதற்கும் நீயே உதவுதல் வேண்டும்; என்றவாறு. ஏகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம். இதுபற்றி முன்னம் சிவபுராணம் (20)-ல் ''உரைப்பன்" என்றதன் கீழுரைத்தவை காண்க. மூன்று கரணங்களில் இது மொழியினுற் செய்யும் பணியாகும்.

நெக்கு நெக்கு உருகிப்பாடி நைந்து நைந்து நான் ஆட வேண்டும் - கல்லினும் திண்மையுள்ள நெஞ்சம் இறைவனை நினைந்து நினைந்து குழைவடைந்து பின் உருக வேண்டும். அந்நிலையில்தான் இறைவனின் விளக்கம் தோன்றும். ***நைதல்*** - தன்வயம் இழத்தல். இஃது இறைவனை நோக்கி உள்ளத்தால் செய்யும் பணியாகும். ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
உம்பர்மணி முடிக்கணியை யுண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாள ரறிவு தன்னைப்
பேணியவந் தணர்க்குமறைப் பொருளைப் பின்னும்

முருகுவிரி நறுமலர்மே லயற்கும் மாற்கும்
முழுமுதலை மெய்த்தவத்தோர் துணையை வாய்த்த
திருகுகுழ லுமைநங்கை பங்கன் தன்னைச்
செங்காட்டாங் குடியதனிற் கண்டேன் நானே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 84 - 3)

என்ற நம் அரசுகள் அமுதவாக்கு நினைக.

ஆட வேண்டும் - உள்ளம் நெக்கு நெக்கு நைந்து நைந்து தன் வயம் இழந்த நிலையில் பாடிக் கொண்டே நிகழும் ஆனந்தக் கூத்து. இஃது உடலாற் செய்யும் பணி. ஆடல் இன்றி நிகழும் பாடலை முன்னம் ''நின்னையே பாடவேண்டும்" என்றதிற் குறிப்பிட்டார். இங்ஙனம் மூன்று கரணங்களாலும் நிகழும் பணியின் பயன் இறைவன் திருவடி நிழலில் கூடுவதாகும்.

அம்பலத்து ஆடு நின்கழல் போது நாயினேன் நான் கூட வேண்டும்.
அம்பலம் - தில்லையிலுள்ள சிற்றம்பலம். அம்பலவாணர் எழுந்தருளியுள்ள கருவறை. **ஆடும் நின்கழல் போது** - கூத்தாடுகின்ற உன் தாமரைமலர் போன்ற பாதம். அது தூக்கிய திருவடியாகிய இடதுபாதம். திருவைந்தொழிலில் ஒன்றான அருள்புரியும் பாதம். சாயுச்சிய நிலை பெறவேண்டும் என்பது குறிப்பு. **நாயினேன்** - உணவிட்டு ஓம்பும் தலைவன் தன்னை நையப்புடைத்தாலும் அவன் காலடியே யன்றி வேறிடம் செல்லாத நாய் போன்று நீ என்னை இவ்வுலகில் இருத்திப் பிரிந்தாலும் இன்னும் இன்னல் பல எய்தினும் உன் திருவடிகளையே கூடுவேன் என்னும் மனத்திண்மை குறித்தவாறு. **நாயினேன்** - இழிந்தவன் .இதுபற்றி முன்னம் சிவபுராணம் 60-ல் ''நாய்" என்றதன் கீழுரைத்தவை காண்க. இறைவன் நம் அடிகளை ''நாயினேனை நலமலிதில்லையுட் கோலமார்தரு பொதுவினில் வருகென" கீர்த்தித்திருவகவல் (127-128-ல்) அருளிய சரித நிகழ்ச்சி நினைக.

எனை இப்புழுக்கூடு நீக்கு - என்று மாற்றுக. அம்பலவாணன் திருவடிமலர் சிவஞான மணம் கமழ்வது; பேரின்பத்தேன் பிலிற்றுவது. உடல், முடை நாற்றத்துக்கும் புழுக்களுக்கும் இருப்பிடமாகும். ஆதலின் இறைவன் திருவடிகளில் சேரத் தகுதியற்றது. எனவே "முதலில் இந்த இழிந்த புழுக்கூடாகிய உடம்பை நீக்கியருள்க" என்றவாறு. ***எனை*** - என்னை என்பதன் தொகுத்தலாயிற்று. ***இப்புழுக்கூடு*** - இகரச்சுட்டு இழிவு குறித்து நின்றது.

நான் பொய் எலாம் விட வேண்டும். பொய் எலாம் - அழியும் மாலைத்தாகிய இவ்வுலக வாழ்விற்குரிய பொருள்கள் மேல் உண்டாகும் ஆசை முழுவதும். **எலாம்** - எல்லாம் என்றதன் தொகுத்தலாயிற்று. **விடவேண்டும்** - தொலையவேண்டும். விட என்றதன் முதல் நீண்டது எனலுமாம். இந்த ஆசையே பிறப்புக்குக் காரணமாதலின் இதை விட வேண்டும் என்றார் இதனையே;

''அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

(திருக்குறள் 361)

என்றார் திருவள்ளுவனாரும்.

வீடு தந்து அருளு - வீடு பேற்றுக்குச் சாதனமான முக்கரணங்களாலும் புரியும் தூய சிவத்தொண்டை வேண்டினார்; பின்னர் வீடடையத் தடையாக உள்ள உடற் சுமையையும் உலகியற் பொருள்களில் அவாவையும் ஒழிக்க வேண்டினார்; அதன் பின் ஆன்மா வீடு பேற்றுக்குத் தகுதியாக நிற்பதால் வீட்டின்பம் தந்தருள்க என்ற விண்ணப்பத்தை நிறைவு செய்கின்றார்.

இத்திருச்சதகத்தில் திருப்பாடல்கள் எல்லாவற்றிலும் பரந்து மிளிரும் பொருளைப் பிழிந்து இவ்விறுதித் திருப்பாட்டில் மிகச் சுருக்கமாக அமைத்து விளக்கும் அருமை எண்ணி எண்ணி இன்புறத்தக்கது. இப்பாடல் "***மெய்யர் மெய்யனே***" என்று முடிவது, முதல் திருப்பாட்டின் தொடக்கமான "***மெய்தான் அரும்பி***" என்றதனுடன் அந்தாதித் தொடையாக இயைந்து மண்டலித்து முடிதல் காண்க. "***மெய்***" என்னும் சொல் தொடர் நிலை மட்டுமன்றி முக்கரணங்களும் இறைவன் வயப்படல் வேண்டும் என்னும் இச்சதகத்தின் முதல் திருப்பாட்டின் கருத்தாகிய பொருள் நிலையும் இவ்விறுதித் திருப்பாட்டில் அமைந்து முற்றுப் பெறுவது உணர்ந்து இன்புறுக.

இத்திருப்பாட்டின்கண் ''பாட வேண்டும்" ''நைந்து நைந்துருகி ஆட வேண்டும்" என்பனவற்றால் பத்தியின் இயல்பும்; ''இப்புழுக் கூடு நீக்கு" ''பொய்யெலாம் விட வேண்டும்" என்பனவற்றால் வைராக்கியமும்

பெறப்படுவதால் சதகம் நுதலிய "*பத்தி வைராக்கிய விசித்திரம்*" பெற்றும். "அவா ஒழித்து வீடுதந்து அருளல் வேண்டும்" என்றதனுல் "அதீத இன்பநிலே பெறப்பட்டுப் பதிகம் நுதலிய "*ஆனந்தாதீதம்*" பெற்றும்.

தொகுப்புரை :-

உயிர்கள் வினேக்கு ஈடாக மாயையினின்றும் உடல் முதலியவற்றைப் பெற்றுப் பிறக்கும் என்ற உண்மையை நம் அடிகள் சென்ற பகுதிகளில் விளக்கினுர். அவ்வாறு பிறந்த உயிர் இறைவன் இயல்பையும் தன் இயல்பையும் தன்னேப் பிணித்துள்ள பாசத்தின் இயல்பையும் நூல்கள் வழியும் ஞாஞசிரியன் உபதேச வழியும் அறியும். அறிந்தபின் சிவபெருமான் திருவருள் பேற்றுக்கு ஆளாக விரும்பி அதற்குச் சாதனமாக பத்தி நெறியை மேற்கொள்ளும். அந்நெறியில் முன்னேறத் தவமுயலுங்கால் நேரும் இடையூறுகளேயும் உயிர் அவற்றைக் கடந்து மேற்செல்ல இறைவன் திருவருளே வேட்டலேயும் நம் அடிகள் இத்திருச்சதகத்தின் ஒவ்வொரு பதிகத்திலும் விளக்கிச் சென்று நிறைவு செய்கின்ருர். அவற்றை ஒவ்வொரு பதிகத் தொடக்கத்திலும் விளக்கினும். கண்டு கொள்க.

தலவிசேடம் :-

திருப்பெருந்துறை - சிவபுராண உரையின் ஈற்றில் உரைத்தாம். ஆங்குக் காண்க.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவாசகம் – திருச்சதகம் – பாட்டு முதற்குறிப்பகராதி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவாசக உரையில் இப்பகுதியில் வரும் மேற்கோள் பாடல்களின் முதற்குறிப் பகராதி

அ

ஆ

Unsolicited Compliments to Part 1 of our annotation from unexpected sources.

1. Thiruvachakam - Vilakavurai (Sivakkudil Vilakkam) Part one , was published in 2000. The author is Siva - Sri. Kannayeram, a practitioner of Tamil saivism. It is he who continues to publish the commentary on the Periya Puranam by Sivakkavimani. The world of saivism is indebted to Siva - Sri. Kannayeram for his significant service. This work coffers the first four hymns of Thiruvachakam. The commentator sat at the feet of the saintly scholors C.K. Subramaniya Mudaliyar and Natesa Kavunder and listended to their explication of the Thiruvachakam. The commentary which abunds in quotations from Tamil and Sanskrit sources is in confirmity with the tenets of Tamil saivism. It is our prayer that the commentator should live long and indite his commentary on all the other hymns also.

"Sekkizhar Adi-podi"

Dr. T.N. RAMACHANDRAN. D.LItt (Jaffna)

திருவாசக ஆங்கில் மொழிபெயர்பு

முன்னுரை பக்கம் CIV

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு

---

2. *உயர்திரு. சி.சு. கண்ணுயிரம் அவர்கள் எழுதிய திருவாசக விளக்கவுரை (சிவக்குடில் விளக்கம்) முதற்பகுதி என்கிற அருமையான புத்தகம் படிக்கும் சிவப் பேற்றை அடியேன் பெற்றேன். மிகவும் உதவியாக இருந்தது. சிவத்தின் அருளால் அடிப்படையான ஆழமான பல கேள்விகளுக்கு (என்னுள் எழுந்தவை) வேறு எங்கும் கிடைக்காத விளக்கம் பெற்றேன். மிகவும் வழிகாட்டி நூலாக அமைந்தது.*

இ. பெருமாள்

3, தாண்டவராயன் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

திருவாசகம் விளக்கவுரை (சிவக்குடில் விளக்கம்) - பகுதி 2.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	8	யைப்பொறும்	யைப்பொறுப்
12	6	அப்பதங்களே	அப்பதங்களைப்
12	28	குழ	குடி
13	23	கண்ணல்	கண்ணன்
28	20	பெருத்தவ	பெருந்தவ
34	3	எழுத	மெழுத
37	25	ஞேயமொரு	ஞேயமொடு
38	20	உருத்திரரீஞன	உருத்திரரீருன
43	29	இறைவனே	இறைவனைக்
48	19	திருட்பாட்டின்	திருப்பாட்டின்
49	2	காட்சியர்	காட்சிய
50	19	பாடலிற்	பாடலின்
51	6	முதலியவற்கும்	முதலியவற்றுக்கும்
51	26	பேருழிகள்	பேரூழிகள்
56	13	பெறுதலு	பெறுதலும்
70	21	தமமென	தாமமென
70	24	பால்ன்மடை	பான்மடை
79	6	சதுராலாலே	சதுராலே
86	கடைசிவரி	"அறிவுறுத்தல் பெற்ரும்"	"அறிவுறுத்தல்" பெற்ரும்
89	20	வைப்பான்	வைப்பன்
98	20	தொலேவினுள் லோரும்	தொலேவினுள்ளோரும்
101	1	ஆக்கமெமாரு	ஆக்கமொடு
104	கடைசிவரி	உண்மையால்	உள்ளமையால்
110	23	வீழ்ந்தாரை	வீழ்ந்தாரைப்
111	6	வறுத்துதுமாகிய	வறுத்துவதுமாகிய
136	8	நிறைப்பூசிக்	நிறையப்பூசிக்
139	26	நிகழ்வுள்ளது	நிகழவுள்ளது
143	16	லடிவில்	வடிவில்
152	28	என்றும்	என்னும்
152	கடைசிவரி	leg	beg
154	18	தென்ச்	தென்
156	23	எவ்வத்டந்திரையால்	எவ்வத்தடந்திரையால்
165	26	பெருமாள்	பெருமாள்
171	11	திருக்களித்துப்படியார்	திருக்களிற்றுப்படியார்
173	கடைசிவரி	முடிவிலாற்றலுடடைமை	முடிவிலாற்றலுடமை
176	5	இறைவன்பு	இறையன்பு

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
199	12	முற்ருகச்	முற்ருகக்
200	4	உரியவனு	உரியவனும்
202	9	இவ்வாறறன்றித்	இவ்வாறன்றித்
208	15	காம	காமம்
211	11	பண்பாவாகு	பண்பாகு
223	9	கிடைத்தன்	கிடைத்ததன்
230	27	சுடுவதாகயுள்ளது	சுடுவதாகவுள்ளது
238	27	சிவோகம்	சிவோகப்
239	18	"	"
242	6	அஃதிணையால்	அஃறிணையால்
294	25	தமிழராய்ந்த	தமிழாராய்ந்த
306	10	என்கொன்டு	ஏன்கொண்டு
328	19	பிள்ளர்	பின்னர்
329	1	றெல்லா	றல்லா
331	25	என்தெற்குத்தருக	(நீக்குக)
333	26	வாயிலாாக	வாயிலாக
334	12	"ஐயர்"	"ஐயா"
340	3	என்றும்	என்னும்
342	2	கான்க	காண்க.
344	7	எழுத்திகாரம்	எழுத்ததிகாரம்
349	3	பலத்தொருவன்	பலத்தொருத்தன்
349	4	தாள்	தோள்
350	6	பெற்ரேம்	பெற்ரும்
358	10	இருந்தேன்	கிருந்தேன்
366	9	வானேர்	வானேர்க்
371	21	ஈறகி	ஈருகி
373	5	பிறவாற்தல்	பிறவற்ருல்
381	17	கையையும்	கைகளையும்
391	3	புணத்து	புணர்த்து
392	10	சொல் லாவ	சொல்ல லாவ
393	11	சிவாக	சிவரகம
437	18	இங்குச்	இங்குக்
451	22	இறுயில்	இறுதியில்
455	8	கருத விட்டேன்	கருதிவிட்டேன்
455	20	றம்பலத	றம்பல
461	10	பெறப்பட்முப்	பெறப்பட்டுப்
461	18	வானவனே	வானனே
465	6	ஈர்ந்ததையே	ஈர்ந்தழையே
484	27	பருதற்கு	பருகுதற்கு
486	20	பொநுநீக்கி	பொதுநீக்கி